சிறுவர்களுக்கு வேதாகம ஊழியம்பற்றிய
ஒரு எளிய கையேடு

முதல் படிகள்

SAM DOHERTY

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

முதல் படிகள்

சிறுவர்களுக்கு வேதாகம ஊழியம்பற்றிய
ஒரு எளிய கையேடு

சாம் டோஹெர்ட்டி

First Steps
Tamil

SPECIAL EDITION - FOR USE IN INDIA

This book is part of a "Children's Worker's Kit". The complete kit is:

"First Steps"	"The Bible" - visualized lessons and text book
"A Wordless Book"	"The Lord Jesus Christ" - visualized lessons and text book

This book has been distributed for a donation and must not be re-distributed for a profit

Cover artwork by 'Dream Adz' – Chennai

Published by
Child Evangelism Fellowship® Inc.
Specialized Book Ministry
Assisting Children's Evangelists Worldwide
Northern Ireland, UK
© December 2002. All rights reserved.

Published in India by
India Bible Literature
67, Beracah Road, Kilpauk, Chennai - 600 010.
© December 2002. All rights reserved.

Printed by :

உள்ளடக்கம்

முன்னுரை 7

அறிமுகம் 8

பகுதி 1 - அடிப்படைக் கொள்கைகள்

அத்தியாயம் 1 - இரட்சிப்பு, பரிசுத்தமாக்கப்படுதல் மற்றும் ஊழியம் 11
நான் சிறுவருக்கான ஊழியம் செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புகிறாரா என்பதை நான் எப்படி அறிய முடியும்?

அத்தியாயம் 2 - ஆயத்தமாயிருங்கள்,
உறுதியாக இருங்கள், செல்லுங்கள் 28
நான் எங்கே துவங்க வேண்டும்?

அத்தியாயம் 3 - அவர்களைக் கூட்டிச் சேருங்கள் 32
சிறுவர்களை வரும்படி செய்வது எவ்வாறு ?

அத்தியாயம் 4 - அவர்களுக்கு உதவிசெய்யுங்கள் 39
சிறுவர்களின் தேவைகள் யாவை?

அத்தியாயம் 5 - அவர்களைப் புரிந்துகொள்ளுங்கள் 47
சிறுவர்கள் எவ்வாறு சுவிசேஷத்துக்குச் செவிசாய்க்க முடியும்?

அத்தியாயம் 6 - அவர்களை எட்டிச் சேருங்கள் 58
நான் சிறுவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டுமா?

அத்தியாயம் 7 - மீன்பிடிக்கத் துவங்குங்கள் 68
சிறுவர்களுக்கு நான் சுவிசேஷத்தை அறிவிப்பது எப்படி?

அத்தியாயம் 8 - வார்த்தையில்லாத புத்தகம் 78
வார்த்தையில்லாத புத்தகத்தைப் பயன்படுத்துவது எப்படி?

அத்தியாயம் 9 - அவர்களை போஷியுங்கள் 86
இரட்சிக்கப்பட்ட சிறுவர்கள் வளருவதற்கு உதவுவது எப்படி?

பகுதி 2 - செயல்பாட்டு நிலைகள்

அத்தியாயம் 10 - ஒவ்வொரு நிமிடமும் முக்கியமானது 102
எனது போதிக்கும் செயல்திட்டத்தைச் சிறப்பாகத் திட்டமிடுவது எப்படி?

அத்தியாயம் 11 - எல்லாவற்றுக்கும் ஆயத்தமாக இருத்தல் 111
எனது கூட்டத்தைச் சிறப்பாக ஆயத்தம் செய்வது எப்படி?

அத்தியாயம் 12 - சந்தோஷமாகக் குரலெழுப்புங்கள் 115
சிறுவர்களுக்குப் பாடல்களைச் சொல்லிக்கொடுப்பது எவ்வாறு?

அத்தியாயம் 13 - தேவனோடு பேசுதல் 121
ஜெபிக்கும்படி சிறுவர்களுக்குச் சொல்லிக்கொடுப்பது எப்படி?

அத்தியாயம் 14 - வார்த்தையைக் கற்றுக்கொள்ளுதல் 130
வேதவசனத்தை மனப்பாடம் செய்யும்படி சிறுவர்களை
ஊக்குவிப்பது எப்படி?

அத்தியாயம் 15 - மறுபடியுமாக அதற்குச் செவிகொடுத்தல் 138
நான் ஏற்கெனவே போதித்ததை மறுஆய்வு செய்யலாமா?

அத்தியாயம் 16 - வார்த்தையைப் போதித்தல் 143
எனது போதனை ஊழியத்துக்கு எது அடிப்படையாகவும்
முக்கிய கருப்பொருளாகவும் இருக்க வேண்டும்?

அத்தியாயம் 17 - ஒழுங்குரீதியாக செய்யுங்கள் 151
நான் எந்தப் போதிக்கும் திட்டத்தைப் பின்பற்ற வேண்டும்?

அத்தியாயம் 18 - ஓராண்டு போதிப்பதற்கு செயல்திட்டம் 157

அத்தியாயம் 19 - சிறுவர்களின் கவனத்தைக் கவருதல் 166
ஒரு வேதாகமக் கதையைக் கூறுவது எப்படி?

அத்தியாயம் 20 - விதிகளைப் பின்பற்றுங்கள் — 172
நான் எப்படி ஒரு சிறந்த ஆசிரியராக முடியும்?

அத்தியாயம் 21 - சத்தியத்தைப் போதிக்கக் கதையைப்
பயன்படுத்துங்கள் — 179
வேதாகமப் பாடத்தைப் போதிப்பது எப்படி?

அத்தியாயம் 22 - வார்த்தையைப் படியுங்கள் — 186
மையச் சத்தியத்தை எவ்வாறு கண்டுபிடிப்பது?

அத்தியாயம் 23 - உங்கள் இலக்கை எட்டுங்கள் — 194
மையச் சத்தியத்தைப் போதிப்பது எப்படி?

அத்தியாயம் 24 - அதன் அர்த்தத்தைக் கூறுங்கள் — 203
மையச் சத்தியத்தைப் பொருத்திக் காட்டுவது எப்படி?

அத்தியாயம் 25 - செயல்படத் துவங்குங்கள் — 216
எனது வேதபாடத்தை ஆயத்தம் செய்வதில் நான் எந்தெந்தப்
படிகளைப் பின்பற்ற வேண்டும்?

அத்தியாயம் 26 - அவர்கள் உங்களைக் கவனிக்கிறார்களா
என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் — 228
சிறுவர்கள் வேதபாடத்துக்குச் செவிகொடுக்கும்படி ஊக்குவிப்பது எப்படி?

அத்தியாயம் 27 - நீங்கள் உதவிசெய்ய ஆயத்தமாக இருக்கிறீர்கள்
என்பதை அவர்கள் அறியச் செய்யுங்கள் — 233
சிறுவர்களுக்கு "உதவி செய்யக்கூடியவராக இருப்பது" எப்படி?

அத்தியாயம் 28 - அவர்களுக்கு வழியைக் காட்டுங்கள் — 238
இரட்சிக்கப்படாத சிறுவர்களுக்கு ஆலோசனை கூறி கிறிஸ்துவிடம்
அவர்களை வழிநடத்துவது எவ்வாறு?

அத்தியாயம் 29 - அவர்களுடைய பிரச்சினைகளில் அவர்களுக்கு
உதவுங்கள் — 251
இரட்சிக்கப்பட்ட சிறுவர்களுக்கு ஆலோசனை கூறுவது எப்படி?

அத்தியாயம் 30 - உங்கள் செயல்திட்டத்தை முடுக்கிவிடுங்கள் ... 255
சீஷர்களுக்கு அருட்பணி பற்றியும் வேதாகம கோட்பாடுகள்
பற்றியும் போதிப்பது எப்படி?

அத்தியாயம் 31 - அவர்கள் அதைக் காண உதவுங்கள் ... 261
பட உபகரணங்களைப் பயன்படுத்துவது எவ்வாறு?

அத்தியாயம் 32 - கட்டுப்பாடு அவசியம் ... 270
உமது கூட்டத்தில் நல்லொழுங்கைக் காப்பது எப்படி?

அத்தியாயம் 33 - அவர்களைக் கூட்டிவாருங்கள்! ... 277
உமது கூட்டத்தில் வருகையை அதிகரிப்பது எப்படி?

முன்னுரை

எதையாவது ஒன்றைச் செய்ய நீங்கள் அதிகமாக வாஞ்சித்து, அதை எப்படிச் செய்வது என்று அறியாமல் இருந்திருக்கிறீர்களா? 1960ஐ அடுத்த ஆண்டுகளில் என்னுடைய நிலைமை அப்படித்தான் இருந்தது. கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாத பிள்ளைகளின் பெரிய தேவையைக் காணும்படி தேவன் என் கண்களைத் திறந்து, இருதயத்தை அசைத்திருந்தார். ஆனால் அவர்களுக்குச் சுவிசேஷத்தை எப்படி அறிவிப்பது, எப்படிச் சிறப்பாக அறிவிப்பது என்பதை நான் அறியாதிருந்தேன். ஏனென்றால், நான் உள்ளூர் அரசு அலுவலனாக இருந்தேன், சுவிசேஷனாக இருக்கவில்லை!

அப்போது தேவன் தமது ஞானத்தில் என்னை ஒரு பள்ளி ஆசிரியரோடு தொடர்பு கொள்ளும்படி செய்தார். அந்தப் பள்ளியாசிரியர் ஒரு கிறிஸ்தவர், அவர் சிறுவர் சிறுமியருக்குச் சுவிசேஷத்தை அறிவித்து வந்தார்! அவர் புதிர்களைப் போடும் போதும், வேத வசனங்களை மனப்பாடம்பண்ணும்படி சொல்லிக்கொடுக்கும் போதும் சுவிசேஷத்தைத் தெளிவாகவும் சிறப்பாகவும் எடுத்துக் கூறும்போதும், நான் திறந்த வாய் மூடாமல் கவனித்துக் கொண்டிருந்தேன். எங்களிடம் ஒரு காரியம் மட்டுமே பொதுவாக இருந்தது. பெரும்பாலான கோரஸ் பாடல்களை எங்களால் ராகம் மாறாமல் பாட முடிந்தது! அவரோடு கூட நான் சிறுவர் சுவி சேஷ ஊழியத்தில் என் முதல் அடிகளை எடுத்துவைத்தேன். அவரே இந்த நூலின் ஆசிரியரான சாம் டோஹெர்ட்டி!

இது வெயிலுக்கு ஒதுங்கி சாவகாசமாகப் படிக்கக் கூடிய ஒரு புத்தகம் அல்ல! இது சிறுவர் சுவிசேஷப்பணியில் நீங்கள் முதலடி எடுத்துவைக்க உதவும் ஒரு கையேடு, வரைபடம், வழிகாட்டி! 50 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் இதில் வார்த்தைகளாக வெளிப்பட்டிருக்கிறது! சிறுவர் ஊழியத்தின் அரிச்சுவடியை நீங்கள் இதன் பக்கங்களில் காணலாம். உங்களை ஆயத்தப்படுத்துவது முதல் பாடத்தை ஆயத்தப்படுத்துவது வரையிலும், ஒரு மனப்பாட வசனத்தைப் போதிப் பது முதல் ஒரு பிள்ளையைக் கிறிஸ்துவிடம் வழிநடத்துவது வரையிலும் அனைத்து அம்சங்களும் விரிவாகப் போதிக்கப்பட்டிருக்கின்றன.

நீங்கள் வாசித்து, குறித்துவைத்து (வாசிக்கும்போது கையில் ஒரு பேனாவை வைத்திருங்கள்), கற்றுக்கொண்டு, உள்ளாக ஏற்று சீரணிக்க விரும்பும் புத்தகங்களில் இதுவும் ஒன்றாகும். சிறுவர் ஊழியத்துக்கு நீங்கள் ஆயத்தமாகும் போது இது உங்களை விட்டுப் பிரியாத துணைவனாக இருக்கும்.

பல ஆண்டுகளுக்கு முன்னால் நான் சிறுவர் சுவிசேஷ ஊழியத்தில் எனது முத லடிகளை எடுத்துவைத்ததை நினைத்துப் பார்க்கும்போது, நீங்களும் தேவனு டைய உதவியோடும் பரிசுத்த ஆவியானவரின் துணையோடும், இந்த நூலின் உதவியோடும் அப்படியே செய்யும்படி நான் உங்களுக்கு அறைகூவல் விடுக்கி றேன். பல இளம் வாழ்க்கைகளை மாற்றக் கூடிய போதிக்கும் ஊழியத்தைத் தேவன்தாமே உங்களுக்கு அருளுவாராக!

கென்னெத் மார்ட்டின்
பயிற்சி மற்றும் அருட்பணித் தொடர்முயற்சி ஒருங்கிணைப்பாளர்,
அயர்லாந்து சிறுவர் சுவிசேஷ ஐக்கியம்

அறிமுகம்

சிறுவர் ஊழியத்தைத் துவக்கப் போகிறவர்களுக்கும், அப்போதுதான் ஊழியத்தில் ஈடுபடத் துவங்கியிருப்பவர்களுக்கும் உதவியாக இருப்பதே இந்தப் புத்தகத்தின் அடிப்படை நோக்கமாகும்.

இப்படிப்பட்டதொரு புத்தகத்தின் தேவையைப் பல காலமாக நான் உணர்ந்து வந்திருக்கிறேன். சிறுவருக்கு வேதாகமத்தைப் போதிக்க விரும்பி, ஆனால் அதில் அனுபவமோ பயிற்சியோ இல்லாமல், எங்கே எப்படித் துவங்குவது என்று தவிப்பவர்களுக்கு இந்த நூல் அவசியமாகத் தேவைப்படுகிறது. இந்த நோக்கத்துக்குப் பொருத்தமான எந்த நூலும் விற்பனையில் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. எனவே அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு இந்த நூல் பயன்படும் ஜெபத்தோடு நம்புகிறேன். இதைப் பயன்படுத்துபவர்களுக்கு இது அதிக உதவியாகவும், மதிப்புள்ளதாகவும் ஊக்குவிக்கக் கூடியதாகவும் இருக்கும் என்று நம்புகிறேன்.

அதே வேளையில், ஏற்கெனவே சிறுவர் ஊழியத்தில் ஈடுபட்டு, அதிகமான அனுபவத்தைப் பெற்றிருப்பவர்களுக்கும்கூட இந்த நூல் உதவியாக இருக்கும் என்று நினைக்கிறேன். தாங்கள் படிப்பதைக் கொண்டு, தங்கள் ஊழியத்தை மேம்படுத்தவும், ஆழமாக்கவும் அவர்கள் வழிவகைகளைக் கண்டறிய முடியும். நம்மில் எவருமே எல்லாவற்றையும் அறிந்தாயிற்று, இனி கற்க வேண்டியது ஒன்றுமில்லை என்ற நிலையை எட்ட முடியாது. நாம் எப்போதுமே சுய ஆய்வுசெய்து, கற்றுக் கொண்டு, தொடர்ந்து முன்னேறிக்கொண்டிருக்க வேண்டும். சில வேளைகளில் இப்படிப்பட்ட செயல்பூர்வமான ஒரு நூல் அத்தகைய முன்னேற்றத்தைத் தூண்டிவிடக் கூடியதாக இருக்கும். சிறுவர் ஊழியத்தின் அனைத்து அம்சங்களையும் பற்றிக் கூற இந்த நூலில் முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. என்றாலும் அனைத்தையும் விவரமாகக் கூறிவிட முடியாது என்பதே இந்த நூலின் இயல்பும், அதன் நோக்கமுமாகும். பல வழிகளில், இந்த நூல் ஒரு "துவக்கக் கையேடாகவே" இருக்கிறது.

என்னால் முடிந்தவரை எளிமையாகவும் செயல்பூர்வமாகவும் எடுத்துக் கூற முயன்றிருக்கிறேன். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் சிறுவருக்கான எனது ஊழியத்தைத் துவக்கிய நாட்கள் என் கருத்தை ஆட்கொண்டிருக்கின்றன. அந்த வேளையில் எதை நான் அறிய விரும்பினேனோ, எந்த உதவியைப் பெற்றால் நன்றாக இருக்கும் என்று நினைத்தேனோ அவைகளை இப்போது உங்களுக்கு பகிர்ந்தளிக்க முயன்றிருக்கிறேன்.

இந்த நூலை நான் இரண்டு பகுதிகளாகப் பிரித்திருக்கிறேன்

- இந்த ஊழியத்தைத் துவக்குவதற்கு முன்பாக, நீங்களும் நானும் ஓரளவு புரிந்துகொள்ள வேண்டிய சிறுவர் ஊழியத்தின் அடிப்படைக் கொள்கைகளைக் குறித்து முதல் பகுதி கூறுகிறது. பிறகு ஊழியத்தில் தொடரும்போது

இவைகளை இன்னுமதிகமாகப் புரிந்துகொள்வதை நமது நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். இந்த அத்தியாயங்கள் பல முக்கிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்.

➤ இரண்டாவது பகுதி சிறுவர் ஊழியத்தைக் குறித்த செயல்பூர்வமான அம்சங்களைக் குறித்துக் கூறுகிறது. நாம் என்ன **செய்ய** வேண்டும் என்பதை அது காட்டுகிறது. இதற்காகப் பல முக்கியமான கேள்விகளுக்கான பதில்கள் இந்தப் பகுதியில் கூறப்பட்டுள்ளன.

எந்தவொரு புத்தகத்தையும் வாசிப்பதுபோல, இந்தப் புத்தகத்தைப் பக்கம் பக்கமாகப் பரபரப்பாக வாசித்து முடித்துவிடக் கூடாது.

இது ஒரு **ஆய்வுநூலாகும்.** இதை நீங்கள் அத்தியாயம் அத்தியாயமாக ஒரு காலகட்டத்துக்கு ஆய்வுசெய்ய வேண்டும். ஒவ்வொரு அத்தியாயத்தையும் விவரமாக வாசித்து, அவைகளைக் கவனத்தோடு உங்கள் ஊழியத்தில் செயல்படுத்த வேண்டும். அல்லது உள்ளடக்கப் பக்கங்களைப் பார்த்து, உங்களுக்கு எவைகளைக் குறித்து அதிக உதவி தேவைப்படுகிறது என்று தெரிந்துகொள்ள வேண்டும். பிறகு அந்த அத்தியாயங்களை கவனமாக ஆய்வுசெய்ய வேண்டும். உங்கள் ஆய்வில் உங்களுக்கு உதவும்படியாக ஒவ்வொரு அத்தியாயத்தின் துவக்கத்திலும், அதன் உள்ளடக்கம் குறித்த சுருக்கக் குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. முழு அத்தியாயத்தையும் வாசிக்க முடியாவிட்டாலும் (வாசிக்க வேண்டும் என்பதே என் விருப்பமாகும்) உங்களுக்கு உதவி தேவைப்படும் தலைப்புகளைத் தெரிந்தெடுத்து அவைகளை விரிவாகப் படிக்கலாம்.

இந்தப் புத்தகத்தின் பல கருத்துக்களையும் சுருக்க உருவரைகளையும் பல ஆண்டுகளாக நான் படித்த புத்தகங்களிலிருந்தும் மற்றவர்களிடமிருந்து நான் பெற்ற போதனைகளிலிருந்தும் தொகுத்துக் கொடுத்திருக்கிறேன். ஆண்டுகள் பல கடந்து போய்விட்டபடியினால் யாரிடமிருந்து, எங்கிருந்து சில விவரங்களைப் பெற்றேன் என்பதை என்னால் குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை. மேலும் என்னுடைய பிற நூல்களிலிருந்தும் உதவியாக இருக்கும் சில பகுதிகளை எடுத்துப் பயன்படுத்தியிருக்கிறேன்.

நீங்கள் உங்கள் ஊழியத்தைத் துவக்கவும் (உங்கள் ஊழியத்தைச் சிறப்பாக்கவும்) உதவியாக இருந்து, அதன் மூலம் பிள்ளைகள் இரட்சிக்கப்பட்டு, ஆவிக்குரியரீதியாக வளர்ச்சி பெறுவார்களானால் அது எனக்கு மனநிறைவைத் தரும். உங்கள் வாழ்க்கை மற்றும் ஊழியத்தின் மூலமாகவும், பல சிறுபிள்ளைகளின் வாழ்க்கையின் மூலமாகவும் தேவன் மகிமைப்படும்படியாக, பிள்ளைகளுக்கு உதவுவதில் உங்களுக்கு உதவுவதே என்னுடைய நோக்கமாகும்.

"அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை, மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி" (2 தீமோத்தேயு 2:2)

பகுதி 1

அடிப்படைக் கொள்கைகள்

சிறுவர் ஊழியத்தின் அடிப்படைக் கொள்கைகளைப் படித்துப் புரிந்துகொள்வதே சிறுவருக்கான ஊழியத்தில் நாம் எடுத்து வைக்க வேண்டிய முதல் படியாகும். அப்படிப்பட்ட படிப்பு இந்தக் கேள்விகளுக்கு விடை காண வேண்டும்:

- நான் சிறுவருக்கான ஊழியம் செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புகிறாரா என்பதை நான் எப்படி அறிய முடியும்? (அத்தியாயம் 1)
- நான் எங்கே துவங்க வேண்டும்? (அத்தியாயம் 2)
- சிறுவர்களை வரும்படி செய்வது எவ்வாறு? (அத்தியாயம் 3)
- சிறுவர்களின் தேவைகள் யாவை? (அத்தியாயம் 4)
- சிறுவர்கள் எவ்வாறு சுவிசேஷத்துக்குச் செவிசாய்க்க முடியும்? (அத்தியாயம் 5)
- நான் சிறுவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டுமா? (அத்தியாயம் 6)
- சிறுவர்களுக்கு நான் சுவிசேஷத்தை அறிவிப்பது எப்படி? (அத்தியாயம் 7)
- வார்த்தையில்லாத புத்தகத்தைப் பயன்படுத்துவது எப்படி? (அத்தியாயம் 8)
- இரட்சிக்கப்பட்ட சிறுவர்கள் வளருவதற்கு உதவுவது எப்படி? (அத்தியாயம் 9)

முதல் பகுதியில் இந்தக் கேள்விகள் எல்லாவற்றுக்கும் பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது - குறிப்பிடப்பட்ட அத்தியாயத்தில் இதற்கான பதில்கள் உள்ளன.

இந்த அத்தியாயங்களை நீங்கள் படிக்கும்போது, சிறுவருக்கான உங்கள் ஊழியத்தின் அடிப்படைக் கொள்கைகளைப் புரிந்துகொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

அத்தியாயம் 1

இரட்சிப்பு, பரிசுத்தமாக்கப்படுதல் மற்றும் ஊழியம்

நான் சிறுவருக்கான ஊழியம் செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புகிறாரா என்பதை நான் எப்படி அறிய முடியும்?

அத்தியாயத்தின் சுருக்கம்

(ஒவ்வொரு சிறுவர் ஊழியரும் - அல்லது வருங்காலச் சிறுவர் ஊழியரும் இந்தப் படிகளைப் பின்பற்ற வேண்டும்).

- *இரட்சிப்பு* - சிறுவர் ஊழியர் ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவைத் தங்கள் ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும்.
- **பரிசுத்தமாக்கப்படுதல்** - சிறுவர் ஊழியர் ஒவ்வொருவரும் தேவனுக்குப் பிரியமான வாழ்க்கை வாழ வேண்டும்.
- ***ஊழியம்*** - தேவன் தமது ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஈடுபட வேண்டுமென்று விரும்புகிறார் - இது சிறுவர் ஊழியத்தையும் உள்ளடக்கியதாகும்.
- நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் என்பதை உங்களுக்குக் காட்டும்படி **வேண்டிக்கொள்ளுங்கள்** - இதுவே தர்க்க ரீதியான அடுத்த படியாகும்
- ***தனிப்பட்ட சாட்சி*** - நூலின் ஆசிரியரிடமிருந்து
- ***சிறுவர் ஊழியத்தின் ஆசீர்வாதங்கள்*** - சிறுவருக்கு நீங்கள் ஊழியம் செய்யும்போது தேவன் உங்களை ஆசீர்வதித்துப் பயன்படுத்துவார்.
- ஆசிரியர் மற்றும் சிறுவர் ஊழியர்களுக்கான **சரிபார்க்கும் பட்டியல்.** சிறுவர் ஊழியருக்குத் தேவையான பண்புகள் உங்களிடம் இருக்கிறதா என்பதைச் சரிபார்க்க நீங்கள் இதை நிரப்ப வேண்டும்.

தேவன் தங்களைச் சிறுவர் ஊழியத்துக்காக அழைக்கிறார் என்ற உணர்வைப் பெறுபவர்கள் தேவன் தனது வாழ்க்கைக்காக ஒரு திட்டவட்டமான திட்டத்தையும் நோக்கத்தையும் கொண்டிருக்கிறார் என்பதை உணர்ந்து அதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்தத் திட்டத்தை மூன்று வார்த்தைகளில் சுருக்கமாகத் தொகுத்துக் கூறலாம்: இரட்சிப்பு, பரிசுத்தமாக்கப்படுதல், ஊழியம். அதாவது, இந்தப் புத்தகத்தை வாசிக்கும் ஒவ்வொருவரும் *இரட்சிக்கப்பட்டு,* **பரிசுத்தமாக்கப்பட்டு,** **தமது** ***ஊழியத்தில்*** ஈடுபட வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.

இரட்சிப்பு

நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம், நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கின்றன, நாம் "கிறிஸ்துவுக்குள் புதுச் சிருஷ்டியாயிருக்கிறோம், மரணத்தின்

வேளையில் இயேசுகிறிஸ்துவோடுகூடப் பரலோகத்தில் இருப்போம்,'' என்ற நிச்சயத்தைப் பெறாத எவரும் சிறுவர் ஊழியத்தில் ஈடுபடக் கூடாது.

ஆனால் துரதிருஷ்டவசமாக, சிறுவருக்குப் போதிக்கும் பலர், ஞாயிறு பள்ளி ஆசிரியர்களும்கூட, வெளித்தோற்றத்தில் சமய நம்பிக்கையுள்ளவர்களாகவும் தூய்மையான வாழ்க்கை வாழ்கிறவர்களாகவும் காணப்பட்டாலும், அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் இயேசுவானவரின்மீது நம்பிக்கை இல்லை, அதனால் இரட்சிக்கப்பட்டிருக்கவில்லை. நானும் அப்படிப்பட்ட ஒருவனாக இருந்தபடியால் இதை நன்றாக அறிந்திருக்கிறேன். சுவிசேஷம் பிரசங்கிக்கப்படாத ஒரு சபையில் நான் வளர்ந்தேன். நான் ஞானஸ்நானமும், திடப்படுத்தலும் பெற்றிருக்கிறபடியால் ஒரு கிறிஸ்தவன் என்று நினைத்து வந்தேன். சபைக்கு நான் ஒழுங்காகச் சென்றுவந்தேன்; கூடுமானவரையில் நல்லவனாக வாழ்ந்தேன். பள்ளி ஆசிரியராக வேலைபார்த்த முதல் ஆண்டில் சிறுவர்களுக்குச் சமயப் போதனை வகுப்புகளை நடத்தினேன். ஆனால் இருபத்தியிரண்டாவது வயதில் நான் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதை முதன் முதலாக உணர்ந்தேன். நான் இயேசுகிறிஸ்துவைத் தனிப்பட்ட முறையில் என் ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ளும்படி தேவன் என்னைப் பலப்படுத்தியதற்காக அவரை ஸ்தோத்திரிக்கிறேன். இது ஒரு புதிய வாழ்க்கையின், புதிய ஊழியத்தின் துவக்கமாக இருந்தது.

இரட்சிப்பென்பது, சபைக்குச் செல்லுதல், ஞானஸ்நானம், ஜெபம், வேதாகம ஆய்வு அல்லது நற்கிரியைகளின் விளைவாக ஏற்படும் ஒன்றல்ல. இவையனைத்தும் நலமானவையே என்றாலும், அவை யாவும் இரட்சிப்பினால் வருபவைகளாக இருக்க வேண்டும்; இவைகளால் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள முடியாது.

நாம் *''கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு''* இரட்சிக்கப்பட்டோம் (எபேசியர் 2:8) என்றும், *''மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான்''* (ரோமர் 3:28) என்றும், தேவன் *''இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறார்''* (ரோமர் 3:25) என்றும் வேதாகமம் தெளிவாகக் கூறுகிறது.

இரட்சிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறவர்களுக்கு வேதாகமம் ''நல்லவனாக இரு'', ''வேதாகமத்தை வாசி,'' ''சபைக்குச் செல்'' என்றெல்லாம் கூறவில்லை. *''கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்''* (அப். 16:31) என்றே கூறப்பட்டிருக்கிறது.

தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின்மீது நம்பிக்கையும் விசுவாசமும் வைத்து, தன்னை அவருக்கு ஒப்புக்கொடுத்து, தனது பாவங்கள் மன்னிக்கப்பட்டன (அப். 13:39), தான் ஒரு புதிய நபராக இருக்கிறோம் (2 கொரிந்தியர் 5:17) என்ற உறுதிப்பாட்டைப் பெறும்போது, இரட்சிப்பு அதன் விளைவாக ஏற்படுகிறது.

அவன் பாவத்தைவிட்டுத் திரும்பி, இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் அந்தக் கணத்தில் அவன் மனமாற்றம் அடைகிறான். அவன் நித்தியத்துக்குமாக நீதிமானாக்கப்பட்டு, மறுபடியும் பிறக்க வைக்கப்படுகிறான்.

நீங்கள் தனிப்பட்ட முறையில் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டிருக்கிறீர்களா? இல்லாவிட்டால், வாசிப்பதை நிறுத்திவிட்டு, இப்போதே ஏன் அவரை விசுவாசிக்கக் கூடாது? உங்கள் இருதயத்தின் ஆழத்தில் நீங்கள் தேவனுக்கு முன்பாகத் தவறுசெய்திருக்கிறீர்கள் என்பதை உணர்ந்தால், நீங்கள் ஒரு பாவியென்பதை அறிந்தால், மன்னிப்புக்காக வாஞ்சித்தால், முற்றிலும் வேறுபட்டவராக வாழ விரும்பினால், உங்கள் முழு இருதயத்தோடும் இந்த ஜெபத்தை ஏறெடுங்கள்:

"அன்பான ஆண்டவர் இயேசுவே, நான் இரட்சிக்கப்படவில்லை என்பதை அறிவேன். என்னை இரட்சிக்கும்படி நீர் சிலுவையில் மரித்ததற்காக உமக்கு நன்றி கூறுகிறேன். இப்போதும் நான் என் பாவத்தைவிட்டு, என் பழைய வாழ்க்கையை விட்டுத் திரும்பி, உம்மை என் சொந்த ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ள விரும்புகிறேன். என்னுடைய பாவங்கள் எல்லாவற்றையும் மன்னித்து என்னை ஒரு புதிய மனிதனாக்கியருளும். நீர் இப்படிச் செய்வதாக வாக்குத்தத்தம் அருளியிருக்கிறபடியால், அப்படியே செய்வீர் என்று விசுவாசிக்கிறேன். நன்றி ஆண்டவரே, நான் நித்தியத்துக்குமாக இரட்சிக்கப்பட்டிருக்கிறேன் என்பதை அறிந்து, சந்தோஷப்படுகிறேன், ஆமென்."

பரிசுத்தமாக்கப்படுதல்

இரட்சிப்போடு முடிவடைந்து விடுவதில்லை! உங்களுக்காகவும் எனக்காகவும் உள்ள தேவனுடைய திட்டத்தில் அது முதல் படி மட்டுமே. இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் ஒருவன் மறுபடியும் பிறந்திருக்கிறான் (யோவான் 3:3; 5:7). அவன் ஒரு புதுச் சிருஷ்டியாக இருக்கிறான் (2 கொரிந்தியர் 5:17). அவன் ஆவிக்குரிய ரீதியாக வளர்ச்சிபெறத் துவங்குகிறான் (2 பேதுரு 3:18). ஜீவன் எங்கிருக்கிறதோ அங்கே வளர்ச்சியும் இருக்கிறது. இந்த வளர்ச்சி சிறியதாகவும் மெதுவாக நடைபெறுவதாகவும் இருக்கலாம். ஆனால் அது நடைபெறுகிறது. வளர்ச்சியில்லாத இடத்தில் ஜீவன் இல்லை.

நீங்களும் நானும் பரிசுத்தத்தில் வளர்ச்சிபெற வேண்டுமென்றும், இன்னுமதிகமாக இயேசுகிறிஸ்துவைப் போலாக வேண்டுமென்றும் தேவன் விரும்புகிறார். இந்த வளர்ச்சியே பரிசுத்தமாக்கப்படுதல் என்பதாகும். இதுவே இரண்டாவது படியாகும்.

"நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள். அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்" (2 பேதுரு 3:18).

"நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது" (1 தெசலோனிக்கேயர் 4:3).

பரிசுத்தமாக்கப்படுதல் தொடர்ந்து நடைபெறும் ஒன்றாகும். எவரும் அல்லது எதுவும் துரிதமாக வளருவதில்லை. நாம் தேவனுடைய வார்த்தையை வாசிக்கும் போதும், அவரோடு பேசும்போதும், அவரை ஆராதிக்கும்போதும் இந்த வளர்ச்சி படிப்படியாக ஏற்படுகிறது. பரிசுத்த வாழ்க்கைக்கு எளிய படிகள் எதுவும் கிடையாது. பல வீழ்ச்சிகளும், தவறுகளும், பின்வாங்கிப்போகுதலும் ஏற்படக் கூடும். நமக்கு எழுச்சியும் உண்டு, வீழ்ச்சியும் உண்டு; ஆனாலும் பொதுவாக நாம் எதிர் நோக்கும் பிரச்சினைகளைச் சகித்துக்கொண்டு இன்னுமதிகமாக நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவைப் போலாகி, மேல்நோக்கி வளர்ச்சி பெறுகிறோம்:

''தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவரா யிருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்'' (ரோமர் 8:29).

ஒவ்வொரு விசுவாசிக்குள்ளும் பரிசுத்த ஆவியானவர் (ஆண்டவருடைய ஆவியானவர்) வாசம் பண்ணுகிறபடியினால்தான் இந்த வளர்ச்சியும் இயேசு கிறிஸ்துவின் சாயலில் பெருகுவதும் சாத்தியமாகிறது; அவரே ஆவிக்குரிய ரீதியாக வளர்ச்சிபெறுவதற்கான வாஞ்சையையும் திறனையும் கொடுக்கிறார்.

''நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்'' (2 கொரிந்தியர் 3:18).

மேலும், ஒருநாள் நாம் மரிக்கும்போது அவரோடேகூட இருப்போம். பரிசுத்த மாக்கப்படுதலின் வழிமுறை நிறைவுபெற்றிருக்கும். நாம் நித்தியத்துக்குமாக அவரைப் போலிருப்போம்:

''பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்'' (1 யோவான் 3:2).

ஊழியம்

ஆனால் ஒவ்வொரு விசுவாசிக்குமுரிய தேவனுடைய திட்டத்தில் மூன்றாவது படி ஒன்றும் இருக்கிறது. நாம் அவரைச் சேவிக்க வேண்டுமென்றும், ஏதேனும் ஒரு வகையில் அவருடைய ஊழியத்தில் ஈடுபட வேண்டுமென்றும் தேவன் விரும்புகிறார். உண்மையில் தேவன் நம்மை இரட்சித்து, பரிசுத்தமாக்குவதை மட்டும் விரும்பியிருந்தால், நாம் இரட்சிப்புக்காக இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தவுடனேயே நம்மைப் பரலோகத்துக்கு எடுத்துக்கொண்டிருக்கலாம். அந்த

வேளையிலேயே நாம் முழுமையாகவும் பூரணமாகவும் பரிசுத்தமாக்கப்பட்டிருப்போம். ஆனால் அவர் அப்படிச்செய்யவில்லை. ஏன்? பூமியில் நமக்கென அவர் ஒரு ஊழியத்தை வைத்திருக்கிறார் என்பதே இதற்கான அடிப்படைக் காரணமாகும்; இந்த ஊழியத்தைப் பரலோகத்தில் நாம் செய்ய முடியாது. மற்றவர்களை எட்டிச் சேரவும், அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கவும், அவர்களுடைய ஆவிக்குரிய தேவைகளுக்கு ஊழியம் செய்யவும் நம்மைப் பயன்படுத்த அவர் விரும்புகிறார். இரட்சிக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, அவருடைய ஊழியத்தில் ஈடுபட்டிருக்கும் நாம், மற்றவர்கள் இரட்சிக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, அவருக்கு உண்மையுள்ள சேவகர்களாக இருப்பதற்கு உதவ வேண்டும்: *''பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்''* (மாற்கு 16:15) என்றார்.

''ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்'' (மத்தேயு 28:19-20).

''அப்பொழுது வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்து, அவர்களை நோக்கி: எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது; அன்றியும் மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள்'' (லூக்கா 24:45-48).

''இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: உங்களுக்குச் சமாதானமுண்டாவதாக; பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன் என்று சொல்லி'' (யோவான் 20:21).

''பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்'' (அப்போஸ்தலர் 1:8).

எனவே, தேவன் நாம் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறார் என்பதை நீங்களும் நானும் தெரிந்துகொள்ள வேண்டும். நம் ஒவ்வொருவருக்கும் அவர் ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார்; நாம் அதற்குப் பொருந்திவர வேண்டுமென்று விரும்புகிறார். நமது இடத்தையும் நமது ஊழியத்தின் வகையையும் நாம் தெரிந்துகொள்வதில்லை. அவரே தெரிந்துகொள்கிறார்!

அவருக்கான நமது ஊழியத்தில் நாம் இரண்டு முக்கியமான உண்மைகளை நினைவில் வைத்திருக்க வேண்டும்.

- ➤ முதலாவதாக, நமது ஊழியம் குறித்த தமது திட்டத்தை நமக்குத் தெளிவாகக் காட்டி நம்மை வழிநடத்த தேவன் சித்தமுள்ளவராகவும் ஆயத்தமாகவும் இருக்கிறார்.
  - ✓ நாம் அவருக்கு எங்கே ஊழியம் செய்வது
    நமது ஊழியம் தற்போதைய நமது உள்ளூர் சபையிலேயே இருக்கலாம்; இப்போது நாம் வசிக்கும் பகுதியிலேயே இருக்கலாம். அல்லது நாட்டின் வேறு பகுதியிலோ அல்லது உலகத்தின் வேறு பகுதியிலோ இருக்கலாம்.
  - ✓ நாம் யாருக்கு ஊழியம்செய்ய வேண்டும்
    ஒருவேளை பெரியவர்களுக்கு அல்லது இளைஞருக்கு அல்லது சிறுவருக்கு ஊழியம்செய்ய வேண்டியிருக்கும்.
  - ✓ நாம் அவர்களுக்கு எவ்வாறு ஊழியம்செய்ய வேண்டும்.
    நமது தற்போதைய முழு நேர வெளி வேலையோடுகூட தன்னார்வ அடிப்படையில்; அல்லது பகுதி நேரமாக (ஒரு பகுதிநேர வெளி வேலையையும் உடன் வைத்திருத்தல்); அல்லது முழு நேர ஊழியம் (நமக்குத் தேவையான ஆதரவுக்காகத் தேவன்மீது நம்பிக்கை வைத்திருத்தல்).
  - ✓ யாரோடுகூட நாம் ஊழியம்செய்ய வேண்டும்
    ஒருவேளை நமது உள்ளூர் சபையின் ஒரு அங்கமாக; அல்லது சபைப் பிரிவு சாராத ஒரு அமைப்பு அல்லது அருட்பணிச் சங்கத்தில்; அல்லது (பெரும்பாலும் அப்படியிராவிட்டாலும்) முற்றிலும் நாமாகவே ஊழியம் செய்தல்.

தேவன் தமக்குரிய வேளையில் இந்தக் கேள்விகள் அனைத்துக்கும் பதில் சொல்லுவார் என்று வேதாகமம் கூறுகிறது:

"உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர்" (சங்கீதம் 73:24).

"நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்" (ஏசாயா 30:21).

"சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" (யோவான் 16:13).

எனவே சங்கீதம் 25:5 வசனத்தில் காணப்படும் சங்கீதக்காரனின் ஜெபத்தை நாம் உண்மையாகவும் ஒழுங்காகவும் ஏறெடுக்க வேண்டும்: *"உம்முடைய*

சத்தியத்திலே என்னை நடத்தி, என்னைப் போதித்தருளும்; நீரே என் இரட்சிப்பின் தேவன் , உம்மை நோக்கி நாள்முழுதும் காத்திருக்கிறேன்."

எவரேனும் இந்தக் கேள்வியைக் கேட்கலாம் - நான் சிறுவருக்காக ஊழியம் செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறாரா என்பதை நான் எப்படி அறிந்துகொள்ளுவது?

தேவன் வெவ்வேறான மக்களை வேவ்வேறு வழிகளில் வழிநடத்துகிறார்:

- ✓ நீங்கள் பிள்ளைகளின் ஆவிக்குரிய தேவைகளைக் காணலாம்; அந்தத் தேவையைச் சந்திப்பதற்கான உங்கள் பொறுப்பை உணரலாம். மூழ்கிக் கொண்டிருக்கும் ஒரு குழந்தையைக் காப்பாற்ற ஒருவர் ஆற்றில் குதிப்பதுபோல, ஆவிக்குரிய அபாயத்தில் இருக்கிற குழந்தைகளைக் காப் பாற்றுவது உங்கள் பொறுப்பு என்று நீங்கள் உணரலாம்.
- ✓ அல்லது உங்கள் இருதயத்தில் விசேஷமாகப் பேசக் கூடிய ஒரு வசனத்தை நீங்கள் வாசிக்க நேரிடலாம் - மத்தேயு 18:14 போன்றதொரு வசனம்.

  "இவ்விதமாக, இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோ கத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல."

  தேவன் இந்த வசனத்தின்மூலமாக உங்களோடு பேசுகிறார்.
- ✓ நீங்கள் இதைச் செய்ய வேண்டுமென்றே தேவன் விரும்புகிறார் என்ற உள்ளான உறுதிப்பாட்டை நீங்கள் பெறலாம். அப்படிப்பட்ட உறுதிப்பாடு பரிசுத்த ஆவியானவரின் கிரியையாக இருக்கிறது.
- ✓ பர்னபாஸ் அந்தியோகியாவுக்கு வந்து ஊழியம்செய்யும்படி பவுலை அழைத் ததுபோலவும் (அப். 11:25-26), தனது சக ஊழியராக இருக்கும்படி பவுல் தீமோத்தேயுவை அழைத்ததுபோலவும் (அப்.16:1-5), யாராவது உங்களைச் சிறுவருக்கு ஊழியம்செய்யும்படி அழைக்கலாம். தேவன் அடிக்கடி இந்த வகையில் மற்றவர்களைப் பயன்படுத்துகிறார்.

அல்லது இவைகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட காரணங்களால் தேவன்தாமே உங்களை அழைக்கலாம். ஆனால், பெரும்பாலும் தேவன் தமது வேதாகமத் தையே நம்மை வழிநடத்தும்படி பயன்படுத்துகிறார்.

- ➤ இரண்டாவதாக, நாம் என்ன செய்யவேண்டுமென்று தேவன் விரும்புகிறாரோ அதைச் செய்துமுடிப்பதற்கான திறன்களையும் வரங்களையும் தேவன் நமக்கு அளிக்கிறார். ஏதேனும் ஒன்றைச் செய்யும்படி நம்மை வழிநடத்திவிட்டோ அல்லது அழைத்துவிட்டோ, நாம் நமது சொந்த ஆதாரங்களைச் சார்ந் திருக்கும்படி நம்மைத் தனியே விட்டுவிட்டுச் செல்ல மாட்டார். நமது ஊழி யம்குறித்த அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான அனைத்தையும் நமக்குக் கொடுப்பதற்கு அவர் ஒப்படைப்புக் கொண் டிருக்கிறார்.

2

"உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்" (1 தெசலோனிக்கேயர் 5:24).

தேவன் எவ்வாறு முடியாததாகத் தோன்றும் காரியங்களைச் செய்யும்படி இயலாதவர்களாகத் தோன்றும் மக்களை அழைக்கிறார் என்பதை மறுபடியும் மறுபடியுமாக நாம் வேதாகமத்தில் பார்க்கிறோம்.

- ✓ யோசுவா ஒரு சேவகனாக இருந்தான் (யாத். 24:12-13). ஒரு தலைவராக ஆவதற்கு அவன் பயப்பட்டான் (யோசுவா 1:2, 9).
- ✓ நெகேமியா பானபாத்திரக்காரனாக இருந்தான் (நெகேமியா 1:11). அவன் அதற்கு முன்னர் அரண்களைக் கட்டியதே கிடையாது (நெகேமியா 2:5)
- ✓ தாவீது ஆடுமேய்க்கும் சிறுவனாக இருந்தான் (சங்கீதம் 75:70). அவன் அரசனாவான் என்று எவருமே நினைத்துக்கூடப் பார்த்திருக்க முடியாது (1 சாமுவேல் 16:11-12).
- ✓ பேதுரு மீன்பிடிப்பவனாக இருந்தான் (மாற்கு 1:16). போதிப்பதில் அவனுக்கு எந்த அனுபவமும் கிடையாது (அப். 2:14)

சபை மற்றும் அருட்பணி வரலாற்றை நாம் பார்க்கும்போதும் இதே காரியம் நடைபெறுவதைக் காண்கிறோம்:

- ✓ இந்தியாவுக்கு முதல் அருட்பணியாளராக வந்த வில்லியம் கேரி செருப்புத் தைக்கும் தொழிலாளியாக இருந்தார்.
- ✓ ஆப்பிரிக்காவுக்குச் சென்ற புகழ்பெற்ற அருட்பணியாளரான டேவிட் லிவிங்ஸ்டன் ஒரு ஆடை நெய்யும் தொழிற்சாலையில் பணிபுரிந்தவர்.
- ✓ சீனாவில் தேவனால் அற்புதவிதமாகப் பயன்படுத்தப்பட்ட கிளாடிஸ் எயில்வார்ட் வீட்டு வேலைக்காரியாகவும், படிப்பில் மிக மந்தமானவராகவும் இருந்தார்.
- ✓ "மூடப்பட்ட நாடுகளில்" அற்புதமான ஊழியத்தைச் செய்த சகோதரன் ஆண்ட்ரூ மனமாற்றம் பெற்ற டச்சு இராணுவத் தளபதியாவார்.

என்றாலும், இவர்கள் ஒவ்வொருவருக்கும் தாம் அழைத்த ஊழியத்துக்கு ஏற்ப தேவன் திறன்களையும், தாலந்துகளையும், வரங்களையும் அளித்தார்.

நீங்கள் என்ன செய்யத் தேவன் விரும்புகிறார் என்பதைக் காட்டும்படி வேண்டிக்கொள்ளுங்கள்

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கும் உங்களுக்கும் எனக்கும் இவ்வாறு கட்டளையிட்டிருக்கிறார் என்று நாம் பார்த்தோம்:

"நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற்கு 16:15).

ஒவ்வொரு நாட்டிலுமுள்ள ஒவ்வொருவரும் சுவிசேஷத்தைக் கேட்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். நீங்களும் நானும் அவருடைய

திட்டத்தில் அங்கங்களாக இருக்கிறோம். நாமே எங்கும் சென்று அனைவருக்கும் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி வாஞ்சிக்கலாம். ஆனால் அது இயலாத காரியமாகும். எனவே எந்த நாட்டில், எந்த மக்கள் கூட்டத்தினருக்கு நாம் ஊழியம் செய்ய வேண்டுமென்று தேவன் நமக்குச் சுட்டிக்காட்டுவது அவசியமாக இருக்கிறது.

நம்மில் சிலரைச் சிறுவருக்கு ஊழியம்செய்யும்படி தேவன் அழைக்கிறார். இந்தப் புத்தகத்தை வாசிக்கும் பலர் தேவன் தங்களைச் சிறுவர் ஊழியத்துக்கு வழிநடத்திக்கொண்டிருக்கிறார் என்பதை உணர்ந்திருப்பார்கள் என்றும் இந்த ஊழியத்தின் "முதல் படிகளை" நீங்கள் எடுத்துவைத்துக்கொண்டிருக்கிறீர்கள் என்றும் நான் நம்புகிறேன். சிறுவர்கள்மீது நீங்கள் அன்பு கொள்ளும்படியும், அவர்களுடைய இரட்சிப்பில் அக்கறைகொள்ளும்படியும் செய்வதின் மூலம் தேவன் உங்களை அழைக்கிறார்.

சிறுவருக்கு ஊழியம்செய்யும்படி அனைவரும் அழைக்கப்படுவதில்லை. ஆனால் சிலர் அழைக்கப்படுகிறார்கள். அந்தச் "சிலரில்" நீங்களும் ஒருவராக இருக்க விரும்புவது எனக்குக் கிளர்ச்சியைக் கொடுக்கிறது.

உலகத்தின் மக்கள்தொகையில் மூன்றிலொரு பகுதியினர் சிறுவர்களே. சுவிசேஷ உழியத்தின் மூன்றிலொரு பகுதியும், ஊழியர்களில் மூன்றிலொரு பகுதியினரும் இவர்களைக் கவனிக்க வேண்டும் என்று தேவன் விரும்புவது இயல்பான காரியமேயாகும். இதற்கு மேலாக நாம் எதிர்பார்க்கவுமில்லை, இதற்குக் குறைவாக நம்மால் ஏற்றுக்கொள்ளவும் முடியாது. இந்தியாவிலோ மக்கள்தொகையில் கிட்டத்தட்ட பாதிப்பேர் சிறுவர்களாவர்! இந்தச் சிறுவர் சிறுமியரின் மத்தியில் ஊழியம்செய்யும்படி தேவன் உங்களை அழைத்திருப்பது உங்களுக்குக் கிடைத்துள்ள சிலாக்கியமாகும்.

சிறுவருக்கு ஊழியம்செய்யும்படி தேவன் உங்களை அழைப்பதை நீங்கள் உணர்வீர்களானால், எந்த அடிப்படையில் அவர்களுக்கு ஊழியம்செய்ய வேண்டுமென்பதை உங்களுக்குக் காட்டும்படி நீங்கள் தேவனிடம் வேண்டிக்கொள்ள வேண்டும்:

- பெற்றோராகவோ அல்லது தாத்தா பாட்டியாகவோ உங்கள் வீட்டிலுள்ள குழந்தைகளுக்கு ஊழியம் செய்தல்.
- உங்கள் சபையில் தன்னார்வ ஓய்வுநாள் பள்ளி ஆசிரியராகவோ அல்லது வாரநாள் சிறுவர் ஊழியராகவோ இருத்தல்.
- சிறுவர் வேதாகமப் பள்ளி, நற்செய்தி கிளப் ஊழியம், திறந்த வெளி ஊழியம், முகாம் ஊழியம், சிறுவருக்கான துண்டுப்பிரதிகளை விநியோகம் செய்தல் போன்ற ஏதேனும் ஊழியத்தில், சபைக்கு வெளியே ஒரு தன்னார்வ ஊழியராக இருத்தல்.

- உங்கள் சொந்தச் சபையிலோ அல்லது சபைப்பிரிவிலோ அல்லது சிறுவருக்காக ஊழியம்செய்யும் இந்திய வேதாகம இலக்கியம், சிறுவர் சுவிசேஷ ஐக்கியம் போன்ற சபைசாராத அமைப்புக்களிலோ சிறுவருக்கான பகுதிநேர ஊழியராக இருத்தல்.

நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைத் தேவன் உங்களுக்குக் காட்டுவார். அவருக்கும் அவருடைய அழைப்புக்கும் கீழ்ப்படிவதே உங்களுடைய பொறுப்பாகும்.

ஒரு தனிப்பட்ட சாட்சி

என்னுடைய வாழ்க்கையில் தேவனுடைய திட்டத்தின் இந்த மூன்று படிகளைக் - இரட்சிப்பு, பரிசுத்தமாக்கப்படுதல், ஊழியம் - குறித்த அனுபவத்தை நான் உங்களோடு பகிர்ந்துகொள்வது உங்களுக்கு உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

- எனக்கு இருபத்திரண்டு வயதாக இருந்தபோது, எனது தாய்நாடாகிய அயர்லாந்தில் முதன்முறையாகச் சுவிசேஷத்தோடு தொடர்பைப் பெற்றேன். நான் ஏற்கெனவே கூறியபடி ஒழுங்காகச் சபைக்குச் சென்றுகொண்டிருந்தேன். இடையிடையே என் வேதாகமத்தை வாசித்தேன். அவ்வப்போது ஜெபிப்பேன். கூடுமான அளவு நல்ல வாழ்க்கை வாழ முயன்று கொண்டிருந்தேன். யாராவது என்னிடம் நான் ஒரு கிறிஸ்தவனா என்று கேட்டிருந்தால், "ஆமாம்" என்றோ "அப்படித்தான் நினைக்கிறேன்" என்றோதான் பதில் சொல்லியிருப்பேன். இந்த வேளையில் அருட்பணித் தளத்துக்குச் செல்லும்படி தங்களை ஆயத்தப்படுத்திக்கொண்டிருந்த ஒரு இளம் தம்பதியரை நான் சந்தித்தேன். அவர்கள் சுவிசேஷத்தை என்னோடு பகிர்ந்துகொண்டார்கள். அதுவரை நான் கேள்விப்படாத ஒரு போதனையை நான் கேட்டேன். படிப்படியாக அவர்கள் எனக்குப் பாவத்தைக் குறித்தும் (எனக்கு இரட்சிப்பு தேவை என்பதைக் குறித்தும்), இயேசுவானவரைக் குறித்தும் (அவர் சிலுவையில் எனக்காக என்ன செய்திருக்கிறார்), எப்படி இரட்சிக்கப்படுவது என்பதைக் குறித்தும் (எனது பாவத்தைவிட்டுத் திரும்பி, இயேசுகிறிஸ்துவை என் ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ளுதல்) போதித்தார்கள். அவர்களுடைய ஊழியத்தின் மூலமாகவும் நான் வேதாகமத்தை ஒழுங்காக வாசித்ததின் மூலமாகவும் தேவன் பல மாதங்களாக என் இருதயத்தில் கிரியை செய்தார். அவர் எனது அறிவுக் கண்களைத் திறந்தார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின்மீது தனிப்பட்ட முறையிலும் உறுதியாகவும் நம்பிக்கை வைக்கும்படி தேவன் என்னைப் பலப்படுத்தினார். என்னை இரட்சிக்கும்படி நான் அவரிடம் வேண்டிக்கொண்டேன். அவர் என்னை இரட்சித்தார்!
- அந்தக் கணத்திலிருந்தே நான் வித்தியாசமானவன் என்பதை உணர்ந்தேன். தமக்குப் பிரியமான வாழ்க்கையை நான் வாழும்படி தேவன் விரும்புகிறார்

என்று அறிந்தேன். ஆனால் ஏற்கெனவே இது கடினமானது என்று நான் கண்டிருந்தேன். நானே போர்க்களமாகிவிட்டதை உணர்ந்தேன். எனக்குள்ளே ஒரு போர் நடந்துகொண்டிருந்தது!

"ஆகிலும் என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப் பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக்கொள்ளுகிறது" (ரோமர் 7:23).

"மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாத படிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது" (கலாத்தியர் 5:17).

இதே வேளையில் இன்னுமதிகமாக இயேசுவானவரைப் போலாக வேண்டு மென்ற வாஞ்சையை நான் பெற்றேன். கடந்த ஐம்பது ஆண்டுகளாக, தேவ னுடைய வார்த்தையை நான் படிக்கும்போதும், ஜெபத்தில் நேரம் செல வழிக்கும்போதும் எனது கிறிஸ்தவ வாழ்க்கையில் எனக்கு உதவும்படி தேவ னிடம் ஜெபித்து வந்திருக்கிறேன். நான் இன்னுமதிகமாக அவரைப் போலாகி யிருக்கிறேன்.

பரிசுத்தமாக்கப்படும் வழிமுறை எளிதானதல்ல என்பதை நான் கண்டிருக்கி றேன். ஆனால் தேவன் நாம் எப்படி இருக்க வேண்டுமென்று விரும்பு கிறாரோ அப்படி வாழ்வதையே நமது இலக்காக ஆக்கிக்கொள்வது மிகவும் மதிப்புள்ள காரியமாகும்.

என்னை ஆண்டவருக்குள் வழிநடத்திய பிரெட் ஓர் என்பவர் எப்போதுமே இரட்சிப்பு ஊழியத்துக்கு வழிநடத்த வேண்டும் என்று வலியுறுத்தி வந்திருக் கிறார். நான் கிறிஸ்துவின்மீது நம்பிக்கை வைப்பதற்கு முன்பாகவே, அப்படி நான் நம்பிக்கை வைப்பேனேயாகில், தேவன் எனக்கென ஒரு ஊழியத்தை வைத்திருப்பார் என்று அவர் கூறினார். எனவே, நான் கிறிஸ்துவை விசுவா சிக்கத் துவங்கியவுடனே, தேவன் நான் என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறார் என்பதை எனக்குக் காட்டும்படி ஜெபிக்கத் துவங்கினேன். இதுவே என்னுடைய முதல் கேள்வியாக இருந்தது.

நான் சில கருத்துக்களைக் கொண்டிருந்தேன். நாட்டின் முதன்மையான குழு ஒன்றுக்காக நான் கால்பந்து விளையாடினேன். என்னைப்போன்ற கால்பந்து விளையாட்டு வீரர்களுக்குச் சுவிசேஷம் அறிவிப்பதைக் கற்பனை செய்து பார்த்தேன். ஆனால் எனது கிறிஸ்தவ வாழ்க்கையின் முதல் சில மாதங் களில் சிறுவர் சிறுமியருக்கே நான் ஊழியம்செய்ய வேண்டும் என்று காட் டத் துவங்கினார். அற்புதமான அழைப்பையோ, தரிசனத்தையோ அல்லது வழிநடத்துதலையோ நான் பெறவில்லை. சிறிது சிறிதாகச் சிறுவருக்காக ஊழியம் செய்யும் பாரத்தைத் தேவன் எனக்குக் கொடுத்தார். சபையில்

நடந்த ஒரு கூட்டத்துக்கு நான் சென்றபோது யாராவது ஒருவர் சிறுவரைக் குறித்துப் பேசுவார்; செய்தித்தாளை வாசிக்கும்போது சிறுவரின் தேவையைக் (சரீரப்பிரகாரமான மற்றும் பிற தேவைகள்) குறித்த செய்திகள் என் கண் ணில் படும்; நான் வேதாகமத்தை வாசிக்கும்போது சிறுவரின் முக்கியத்து வத்தை இன்னுமதிகமாக உணர்ந்துகொள்வேன். எனவே சிறிது காலத்துக் குள்ளாக இதுவே எனது ஊழியம் என்ற உறுதியை நான் பெற்றேன்.

இதை எவ்வாறு செய்வது, **யாரோடு செய்வது** என்பது இரண்டாவது கேள்வி யாகும். நான் மனமாற்றம் பெறும்படி தேவன் பயன்படுத்திய பிரெட் ஒருக்கு இதைப்பற்றி நான் எழுதினேன்; அப்போது அவர் ஸ்காட்லாந்து வேதாகமக் கல்லூரியொன்றில் படித்துக் கொண்டு பிரேசிலில் தாம் செய்யப்போகும் ஊழி யத்துக்காகத் தம்மைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தார். தேவன் என்னை யும் என் மனைவியையும் சிறுவர் சிறுமியருக்கான ஊழியத்தில் பயன்படுத் தும்படி வழிநடத்துகிறார் என்று உணர்வதாக நான் அவருக்குத் தெரிவித் தேன். இதற்கு அர்த்தம் என்ன, நான் எப்படித் துவங்குவது என்று அவரி டம் கேட்டேன்.

அடுத்த நாள் சிறுவர் சுவிசேஷ ஐக்கியம் (Child Evangelism Fellowship) என்ற அருட்பணி அமைப்பைச் சேர்ந்த ஒருவர் அவரைப் பார்க்க வந்திருந்தார். அவர் ஒரு CEF அருட்பணியாளர். CEF இன் ஊழியத்தைப் பற்றியும், சிறுவர்களின் தேவைகளைக் குறித்தும் அவர் மாணவர்களோடு பேசினார். பிறகு மதிய உணவு வேளையில் அவர் எனது ஆவிக்குரிய பிதா வாகிய பிரெட்டுக்கு அருகில் அமர நேரிட்டது. அவர் அயர்லாந்திலிருந்து வந்தவர் என்று கேள்விப்பட்டவுடன், அந்த ஊழியர் அயர்லாந்துக்காகத் தான் பாரம் கொண்டிருப்பதாகவும், CEF ஊழியம் அங்கே துவங்கப்பட வேண்டுமென்று தான் விரும்புவதாகவும் கூறினார். இதைச் செய்ய பிரெட்டுக்கு ஆர்வமுண்டா என்று அவர் கேட்டார். பிரெட் தான் பிரேசி லுக்கு ஊழியம் செய்யச் செல்வதாகக் கூறினார். பிறகு அவர் தனது பாக்கெட்டிலிருந்து முந்தைய நாள் நான் அவருக்கு அனுப்பியிருந்த கடி தத்தை வெளியே எடுத்தார். எங்களைப் பற்றி அதாவது, ஒரு இளம்தம்பதி யர் சிறுவருக்குச் சுவிசேஷ ஊழியம் செய்ய ஆர்வம் கொண்டிருக்கிறார் கள் என்று அவரிடம் கூறினார். "நீங்கள் ஏன் அங்கே போய் அவர்களைச் சந்திக்கக் கூடாது?" என்று அவர் ஆலோசனை கூறினார். அந்த அருட் பணியாளர் வந்து எங்களைச் சந்தித்தார். அதன்மூலம் நாங்கள் CEF இன் மூலம் ஊழியம்செய்ய வேண்டும் என்ற நிச்சயத்தைப் பெற்றோம். இவ்வாறு CEF இன் ஊழியத்தை அயர்லாந்தில் அறிமுகம் செய்து, பதினான்கு ஆண்டு கள் அதன் தலைவர்களாக இருக்கும் சிலாக்கியத்தைப் பெற்றோம்.

இந்த ஊழிய அமைப்போடு **எந்த இடத்தில் நாங்கள் சிறுவர் ஊழியத் தைச் செய்யும்படி தேவன் விரும்புகிறார்** என்பது எங்கள் மூன்றாவது

கேள்வியாக இருந்தது நாங்கள் அயர்லாந்து சிறுவர்களுக்கு ஊழியம்செய்ய வேண்டுமா – அல்லது வேற்று நாட்டுச் சிறுவர்களுக்குச் சுவிசேஷம் அறிவிக்க வேண்டுமா? நாங்கள் இதைப் பற்றித் தொடர்ந்து ஜெபித்தபோது, எங்கள் சொந்த நாடாகிய அயர்லாந்திலேயே நாங்கள் ஊழியம்செய்ய வேண்டும் என்றும், அதிலும் குறிப்பாக அதுவரை எட்டப்படாத சிறுவர்களுக்காக ஊழியம்செய்ய வேண்டும் என்றும் நிச்சயத்தைப் பெற்றோம். நாங்கள் அனைத்துச் சிறுவர்களுக்காகவும் பாரம்கொண்டிருந்தோம்; எங்கே வழி நடத்தினாலும் சென்றிருப்போம். ஆனால் குறைந்தபட்சம் அந்த வேளையில் நாங்கள் அயர்லாந்திலேயே இருக்க வேண்டுமென்று தேவன் எங்களை வழி நடத்தினார்.

நாட்கள் சென்றபோது தேவன் எங்கள் ஊழியத்துக்கான தமது திட்டத்தை எங்களுக்குக் காட்டினார்; அவருக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். இதன் விளைவாக ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகச் சிறுவர் சுவிசேஷ ஐக்கியத்தின் மூலமாகச் சிறுவர்களின் ஆவிக்குரிய தேவைகளைச் சந்திக்கும் சிலாக்கியத்தை நாங்கள் பெற்றோம்; முதல் பதினான்கு ஆண்டுகள் அயர்லாந்தில் ஊழியம்செய்தபிறகு, ஐரோப்பாவில் இருபத்தொன்பது ஆண்டுகள் ஊழியம்செய்தோம்; இப்போது நான் எழுதும் நூல்களின் மூலமாக ஊழியத்தைத் தொடர்ந்துவருகிறேன்.

மற்றொரு காரியத்தையும் நான் சுட்டிக்காட்ட வேண்டும். எனது சிறுவர் ஊழியத்தின் முதல் பதினான்கு ஆண்டுகளில், நான் அயர்லாந்தில் CEFக்காக ஊழியம்செய்து வந்தபோது, தொடர்ந்து எனது பள்ளி ஆசிரியர் பணியையும் கவனித்து வரும்படி தேவன் என்னை வழிநடத்தினார். எனவே இந்த ஆண்டுகளில் நான் முழு நேர ஊழியனாக இருக்கவில்லை. நான் பள்ளி ஆசிரியர் பணியைத் தொடர்ந்ததற்கு இரண்டு முக்கியமான காரணங்கள்:

- பள்ளியில் எனது மாணவர்களுக்குச் சுவிசேஷம் அறிவிப்பதற்குப் பல வாய்ப்புகள் எனக்குக் கிடைத்தன. அவர்களில் பலர் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதைக் காணும் பாக்கியமும் எனக்குக் கிடைத்தது.
- அயர்லாந்தில் CEF தலைவனாக எனக்கு ஏற்பட்ட செலவுகள் அனைத்தையும் எனது பள்ளிச் சம்பளம் ஈடுகட்டியது. எனவே அருட்பணி அமைப்பிலிருந்தோ அல்லது வேறிடத்திலிருந்தோ எனக்கு எந்த ஆதரவும் தேவைப் படவில்லை. நான் முற்றிலும் சுயசார்புடையவனாக இருந்தேன்.

தேவன் எனக்கு நல்ல ஆரோக்கியத்தையும், புரிந்துகொள்ளும் மனைவியையும் கொடுத்திருந்தபடியால்தான், இரண்டு "முழுநேரப் பணிகளை" என்னால் கவனிக்க முடிந்தது. ஆனால் கடைசியில் இரண்டையும் ஒரு சேரக் கவனிப்பது முடியாத காரியம் என்பதை உணர்ந்து, தேவனிடம் ஜெபித்தேன். தேவன் CEF இல் முழுநேர ஊழியத்துக்கு அடியெடுத்து வைக்கும்படி

எங்களை வழிநடத்துகிறார் என்பதை உணர்ந்தோம். 1964 இல் இது நடந்தது. விரைவிலேயே CEF இன் ஐரோப்பியத் தலைவர்களாக நாங்கள் நியமிக்கப் பட்டோம். ஆனால் அது மற்றொரு கதையாகும்!

சிறுவர் ஊழியத்தின் ஆசீர்வாதங்கள்

தேவன் உங்களையும் என்னையும் சிறுவருக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி அழைக்கும்போது, அது ஊழியத்தின்மூலமாகப் பலரும் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கு ஏதுவாகும் என்று நான் நம்புகிறேன்.

நீங்கள் இன்னுமதிகமாகச் சிறுவர் சிறுமியருக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும் பணியில் ஈடுபடும்போது, தேவன் உங்களை ஆசீர்வதித்து, தமது ஊழியத்தில் உங்களைப் பயன்படுத்துவார் என்றும் நம்புகிறேன். ஆனால் பிரச்சினைகள் இருக் காது என்று கூறமுடியாது. என்றாலும் நீங்கள் பெறும் சந்தோஷமும் மனநிறை வும், பிரச்சினைகள் மற்றும் கடினங்களை ஈடுகட்டிவிடும்.

"கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள். அள்ளித்தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுதுகொண்டு போகிறான்; ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்துகொண்டு கெம்பீரத்தோடே திரும்பிவருவான்" (சங்கீதம் 126:5, 6)

- சிறுபிள்ளைகள் இரட்சிக்கப்படுவார்கள்.

  உங்கள் சொந்த இரட்சிப்பின் சந்தோஷத்துக்கு அப்பாற்பட்டு, நீங்கள் அனுபவிக்கக்கூடிய மாபெரும் சந்தோஷம், உங்கள் ஊழியத்தின் மூலமாக ஒரு சிறுபிள்ளை கிறிஸ்துவிடம் வருவதைக் காண்பதாகும். ஒரு சிறுபிள்ளை உங்களிடம் வந்து, "நான் எப்படி ஆண்டவராகிய இயேசுவை விசுவாசிப்பது?" என்று கேட்கும் வார்த்தைகளைவிட "இனிமையான இசையைப்" பூலோக மெங்கிலும் கேட்க முடியாது!

- சிறுபிள்ளைகள் தங்கள் விசுவாசத்தில் வளர்ச்சிபெறுவார்கள்.

  தாங்கள் ஆண்டவரை விசுவாசிப்பதாக அறிக்கைசெய்யும் எல்லாப் பிள்ளைகளும் ஆவிக்குரிய வளர்ச்சியைப் பெறுவதில்லை என்பதை நீங் கள் காண்பீர்கள் (ஏதேனும் ஒரு காரணத்துக்காக). ஆனால் பலர் வளர்ச்சி பெறுகிறார்கள்; உங்கள் ஊழியத்தின்மூலம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஒரு பிள்ளை தனது விசுவாசத்தில் வளர்ச்சிபெற்று முதிர்ச்சியடைந்த ஒரு விசு வாசியாக மாறுவதைக் காணும்போது தனிச்சிறப்பான மனநிறைவை நீங்கள் பெறுகிறீர்கள். ஆனாலும், இதற்குக் காலம் பிடிக்கும் என்பதை நீங்கள் உணர வேண்டும்!

- உள்ளூர் சபைக்கு இது உதவியாக இருக்கும்.

  நீங்கள் எந்தச் சபையில் இருக்கிறீர்களோ அந்த உள்ளூர் சபையின் ஊழி யத்தில் உதவுவதும், அதைக் கட்டியெழுப்புவதுமே உங்கள் கிறிஸ்தவ

ஊழியத்தில் அடிப்படைப் பொறுப்பாகும். உங்கள் உள்ளூர் சபையின் தொடர் ஊழியமாக நீங்கள் சிறுவர் ஊழியத்தில் ஈடுபடும்போது, இப்படிப்பட்ட ஊழியத்தின் பயன்களையும் ஆசீர்வாதங்களையும் உங்கள் உள்ளூர் சபை பெறும் என்பதில் ஐயமில்லை. இந்த ஆசீர்வாதங்கள் நீண்ட காலத்தவையாக இருக்கும். எனினும் கடைசியில் அனைவராலும் அவைகளைக் காண முடியும்.

- சிறுபிள்ளைகளின் இல்லங்களுக்கும் இது உதவியாக இருக்கும்.

இன்றைய உலகத்தின் சிறுவர்கள் நாம் சிறுபிள்ளையாக இருக்கும்போது அனுபவித்திராத பல சோதனைகளையும் நெருக்கங்களையும் எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. எப்பக்கத்திலுமிருந்தும் அவர்கள் போதை மருந்து, மது, பாலுறவு மற்றும் வன்முறையால் நெருக்கப்படுகிறார்கள். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் எதிர்நோக்கும் சோதனைகளைக் கண்டு கலக்கமடைகிறார்கள். அவர்களும் அபாயத்தில் சிக்கிக்கொள்வார்களோ என்று பயப்படுகிறார்கள். நீங்கள் இந்தச் சிறுவர்களுக்கு ஊழியம்செய்து, தேவனுடைய வார்த்தையின் சத்தியங்களை அவர்களுக்குப் போதித்து, இன்றைய உலகத்தின் பிரச்சினைகளை எதிர்நோக்கும்படி அவர்களுக்கு உதவும்போது, அது பெற்றோருக்கு ஆறுதலாக இருக்கிறது. நீங்கள் அவர்களுக்கும் அவர்கள் குடும்பத்துக்கும் உதவிவருவதாக அவர்கள் உணர்வார்கள்.

- நீங்களும்கூட ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.
  - ✓ நீங்கள் சிறுவர்களுக்கு ஊழியம்செய்ய வேண்டும் என்ற தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிகிறபடியால் தனிப்பட்ட முறையில் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். கீழ்ப்படிதல் எப்போதுமே ஆசீர்வாதத்தைக் கொண்டு வருகிறது.
  - ✓ மேலே கூறப்பட்டபடி உங்கள் ஊழியத்தின் பலன்களை நீங்கள் காணும்போது ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.
  - ✓ தேவனுடைய வார்த்தையை நீங்கள் போதிக்கும்போது, அதைக் குறித்த அறிவில் நீங்கள் வளர்ச்சிபெறுவதின்மூலம் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். நான் வேறெந்த வகையிலும் வேதாகமத்தைப் பற்றி அறிந்திருப்பதைவிட, சிறுவர்களுக்குப் போதித்ததின்மூலம் அதிகமாக அறிந்திருக்கிறேன்.

- உங்கள் குடும்பத்தார் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

உங்கள் சிறுவர் வேதாகமப் பள்ளி, அல்லது நற்செய்தி கிளப், அல்லது 5 நாள் முகாமில் சிறுவருக்கு ஊழியம்செய்யும்போது, உங்கள் பிள்ளைகளோ அல்லது பேரப் பிள்ளைகளோ அதில் பங்குகொள்ளும் பாக்கியத்தைப் பெறுவார்கள். தேவன் அவர்களோடு பேசி, அவர்களை இரட்சித்து, ஆசீர்வதிக்கும்படி நீங்கள் ஜெபிக்க முடியும்.

- தேவன் மகிமைப்படுத்தப்படுகிறார்

இங்கே உங்கள் ஊழியத்தில் பயிற்றும் ஆசிரியராக இருக்கும் நீங்கள் தேவனுடைய சித்தத்துக்குக் கீழ்ப்படிகிறபடியினாலும், சீஷர்களை [illegible] அவர்களுடைய வாழ்க்கை மாற்றம் பெறுவதினாலும் தேவன் மகிமைப்படுத்தப்படுகிறார்.

"ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவிசெய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்; எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்துமூலமாய் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக. அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்" I பேதுரு 4:11.

ஆசிரியர்களுக்கும் சிறுவர் ஊழியர்களுக்குமுரிய சரிபார்க்கும் பட்டியல்

சிறுவர்களுக்காக ஊழியம்செய்பவர்களும், அப்படிச் செய்யும்படி திட்டமிடுபவர்களும், தேவன் தங்கள் வாழ்க்கையிலும் ஊழியத்திலும் எத்தகைய பண்புகளை எதிர்பார்க்கிறார் என்பதைத் தெரிந்துவைத்திருப்பது நலமாகும். இந்தப் பண்புகளைப் பெறுவது நமது இலக்காக இருக்க வேண்டும். நீங்கள் சரியான திசையில் சென்றுகொண்டிருப்பீர்களானால், வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் கண்டுவருவீர்களானால், இன்னும் இவையனைத்தையும் பெறவில்லையே என்று கவலைப்படாதீர்கள்.

பண்புகள்	கேள்வி	பதில்
இரட்சிக்கப்படுதல்	நான் இயேசுகிறிஸ்துவை என் ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டிருக்கிறேனா?	ஆம் / இல்லை
ஒப்படைப்பு	நான் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்படைப்புக் கொண்டிருக்கிறேனா? நாளுக்கு நாள் அவரைப்போல ஆகிக்கொண்டிருக்கிறேனா?	ஆம் / இல்லை
அழைக்கப்படுதல்	நான் சிறுவருக்கு ஊழியம்செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்று விசுவாசிக்கிறேனா?	ஆம் / இல்லை
பாரம்கொள்ளுதல்	சிறுவருக்காகவும் அவர்களின் இரட்சிப்புக்காகவும் நான் அக்கறை கொண்டிருக்கிறேனா?	ஆம் / இல்லை
பயன்படுதன்மை	நான் இயலாதவனாக உணர்ந்தாலும், தேவன் இந்த ஊழியத்தில் என்னைப் பயன்படுத்தும்படி அனுமதிக்க நான் விருப்பமுடையவனாக இருக்கிறேனா?	ஆம் / இல்லை
போதிக்கப்படுதல்	இந்த ஊழியத்துக்காகப் பயிற்றுவிக்கப்படவும், வகுப்புகள், பாடங்கள் மூலமாகப் பயிற்சிபெறக் கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்திக் கொள்ளவும் நான் விருப்பமுடையவனாக இருக்கிறேனா?	ஆம் / இல்லை
நம்பகத்தன்மை	நேரம்தவறாமல் வரும்படியாகவும், நம்பிக்கைக்குரியவனாக இருக்கவும் என்னை நானே ஒழுங்குபடுத்திக் கொள்ள ஆயத்தமாக இருக்கிறேனா?	ஆம் / இல்லை
ஜெபசிந்தை	எனக்காகவும், குறிப்பாகச் சிறுவர்களுக்காகவும் ஜெபிக்க வேண்டியதின் தேவையையும் முக்கியத்துவத்தையும் நான் உணர்ந்திருக்கிறேனா?	ஆம் / இல்லை
கடின உழைப்பு	எனது ஊழியத்தில் மெய்யாகவே கடினமாக உழைக்கவும், ஆயத்தத்துக்காக அதிக நேரத்தைச் செலவழிக்கவும் நான் விரும்புகிறேனா?	ஆம் / இல்லை
நட்புறவோடு	சிறுவர்களின் பெற்றோரைச் சென்று சந்தித்து, அவர்களோடு நட்புறவை உண்டாக்கிக்கொள்ள நான் ஆயத்தமாக இருக்கிறேனா?	ஆம் / இல்லை
நிலைமாறாதிருத்தல்	சிறுவருக்கும் அவர்களுடைய பெற்றோருக்கும் என்னுடைய சாட்சி நிலைமாறாதிருக்கிறதா? போதிப்பதற்கு ஏற்றபடி நான் நடந்துகொள்கிறேனா?	ஆம் / இல்லை

இந்தக் கேள்விகள் எல்லாவற்றுக்கும் நீங்கள் ஆம் என்றே பதிலளிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

அத்தியாயம் 2

ஆயத்தமாயிருங்கள், உறுதியாக இருங்கள், செல்லுங்கள்

நான் எங்கே துவங்க வேண்டும்?

அத்தியாயத்தின் சுருக்கம்

(உங்கள் சிறுவர் ஊழியத்தில் நீங்கள் இந்த முதல் தீர்மானங்களை எடுக்க வேண்டும்).

- **உங்கள் உள்ளூர் சபையில் உதவி.** இதுவே துவக்குவதற்குச் சிறப்பான இடமாகும்.
- **சிறுவரை ஆதாயப்படுத்தும் ஒரு அமைப்பின் ஊழியத்தில் உதவி.**
- **நீங்களாகவே எதையேனும் செய்யுங்கள்.** இது சிறப்பான வழி அல்ல - முதல் இரண்டுக்கும் வாய்ப்பில்லாதபோதுதான் இதை நாட வேண்டும்.

நீங்கள் சிறுவருக்கு ஊழியம்செய்ய வேண்டும், அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும், தேவனுடைய வார்த்தையைப் போதிக்க வேண்டும், அவர்களுக்கும் அவர்களுடைய ஆவிக்குரிய தேவைகளுக்கும் ஊழியம்செய்ய வேண்டும் என்று தேவன் உங்களுக்குக் காட்டியிருக்கிறார் என்று நான் அனுமானிக்கிறேன்.

- நான் எங்கே துவங்க வேண்டும்?
- நான் என்ன செய்ய வேண்டும்?

இந்தக் கேள்விகளுக்கு நான் மூன்று பதில்களைக் கொடுக்கப் போகிறேன். அவை நீங்கள் துவங்குவதற்கு உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன். உங்கள் பயணத்தின் மிக முக்கியமான பகுதி (சில வேளைகளில் மிகவும் கடினமான பகுதி) முதலடியை எடுத்துவைப்பதுதான் என்பதை நினைவில் வைத்திருங்கள்! முதல் அடியை எடுத்துவைக்கும்போது, முன்னாலுள்ள பாதை கொஞ்சம் தெளிவாகத் தெரிகிறது.

உங்கள் உள்ளூர் சபையில் உதவிசெய்தல்

நீங்கள் சுவிசேஷம் உண்மையாகப் பிரசங்கிக்கப்படும் ஒரு உள்ளூர் சபையில் உறுப்பினராக இருப்பீர்கள் என்று நம்புகிறேன். அப்படியில்லாவிட்டால், உடனே நீங்கள் அதைச் செய்ய வேண்டும்.

எனவே உங்கள் முதல் படி, உங்கள் போதகருடனோ அல்லது ஞாயிறு பள்ளி மேலாளருடனோ பேசி, போதிக்கவோ அல்லது ஞாயிறு பள்ளியில் ஏதேனும் ஒரு வகையில் உதவுவதற்கோ முன்வருவதாகும். பெரும்பாலான ஞாயிறு

பள்ளிகளில் போதிப்பதற்குப் போதுமானவர்கள் இருப்பதில்லை. எனவே நீங்கள் போதிக்கும்படி முன்வருவதை அவர்கள் நன்றியோடு ஏற்றுக்கொள்வார்கள். போதுமான ஆசிரியர்கள் இருந்தாலும், உங்களைப் பதிலி ஆசிரியராக (வேறொரு ஆசிரியர் வராதபோது போதிப்பதற்கு) ஏற்றுக்கொள்வார்கள். அல்லது சிறுவர்களை ஒழுங்குபடுத்துவதற்கு நீங்கள் உதவலாம். வேறு எந்த உதவியும் தேவைப்படாவிட்டாலும், நீங்கள் மாணவர்களை வரவேற்று அவர்களுடைய இருக்கையில் அமர்த்துவதில் உதவலாம், மாணவர்கள் சென்றபிறகு பள்ளியைச் சுத்தப்படுத்த உதவலாம். சிறுவருக்காக நீங்கள் ஒப்படைப்புக் கொண்டிருக்கிறீர்கள் என்பதைக் காட்டும்போது, அவர்களுக்கு உதவும்படியான உங்கள் வாஞ்சையைத் தாழ்மையான வகையில் செயல்பூர்வமாகக் காட்டும்போது, உங்கள் ஞாயிறு பள்ளியில் மாணவர்களுக்கு நேரடியாகப் போதிக்கும் வாய்ப்பைத் தேவன் உங்களுக்கு நிச்சயம் அருளுவார்.

இதே வேளையில், ஞாயிறு பள்ளியில் உங்களுக்குப் பொறுப்பாகக் கொடுக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு இன்னும் சிறப்பாக ஊழியம்செய்யும்படி, உங்கள் திறன்களை மேம்படுத்திக்கொள்ள அனைத்து வாய்ப்புக்களையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

- உங்கள் சொந்த பக்திவிருத்திக்காகத் தேவனுடைய வார்த்தையை நாள்தோறும் ஆய்வுசெய்யுங்கள்.
- சபை ஆராதனைகளில் ஒழுங்காகக் கலந்துகொள்ளுங்கள்.
- கூடுமானால் ஒரு ஒழுங்கான பயிற்சியிலோ அல்லது செமினாரிலோ பங்குகொள்ளுங்கள். உங்கள் ஊழியத்தில் இது உதவியாக இருக்கும்.
- சிறுவருக்குச் சிறப்பாக ஊழியம்செய்வதைக் குறித்துப் போதிக்கும் இந்த நூலைப் போன்ற நூல்களை வாசித்து ஆய்வுசெய்யுங்கள்.

ஞாயிறு பள்ளியில் பதிலி ஆசிரியராக இருப்பதோடுகூட, நீங்கள் உங்கள் சபையின் வாரநாள் சிறுவர் ஊழியத்தில் பங்குகொள்ள ஆர்வமாக இருப்பதாக உங்கள் போதகருக்கோ அல்லது இந்த ஊழியத்துக்குப் பொறுப்பாக இருப்பவருக்கோ தெரிவிக்க வேண்டும். அல்லது ஞாயிற்றுக்கிழமைகளில் சிறுவருக்காகத் தனி ஆராதனை நடத்தப்படுமானால், அதில் உதவும்படி முன்வர வேண்டும். சில சபைகள் வாரநாட்களில் சிறுவருக்கான கூட்டங்களை நடத்துகின்றன அல்லது சில அமைப்புகள் சிறுவருக்குப் போதிக்கும் கூட்டங்களை நடத்துகின்றன. இக்கூட்டங்களில் எப்போதுமே கூடுதலான ஊழியர்கள் தேவைப்படுகிறார்கள். இந்த வகையில் சிறுவருக்காக நீங்கள் சிறப்பாக ஊழியம்செய்ய முடியும்.

விடுமுறை நாட்களில் நாள்தோறும் ஒன்றரை மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம் நடத்தப்படும் சிறுவர் வேதாகமப் பள்ளியில் போதிக்கவோ அல்லது வேறு உதவிகளைச் செய்யவோ நீங்கள் முன்வரலாம்.

சிறுவருக்கு ஊழியம்செய்யும் ஒரு அமைப்பில் உதவிசெய்தல்

புதிய ஏற்பாட்டு சுவிசேஷப் பணியின் மையமாக உள்ளூரிலுள்ள வேதாகமத்தை விசுவாசிக்கும் சுவிசேஷ சபையே அமைந்திருக்கிறது என்று நான் விசுவாசிக்கிறேன். என்றாலும், சிறுவருக்குச் சுவிசேஷத்தைப் போதிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு செயல்படும் சபைசாராத அமைப்புக்களுக்கும் முக்கியமான இடம் இருக்கிறது என்றும் நான் நம்புகிறேன். குறிப்பாக, உள்ளூர் சபைக்கு வராத சிறுவர்களின் மத்தியில் இவர்கள் வல்லமையாக ஊழியம்செய்ய முடியும். இத்தகைய அமைப்புகளில் சிறுவர் சுவிசேஷ ஐக்கியம் (CEF) சிறப்பானதொரு அமைப்பாகும். ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இந்த அமைப்பில் நான் ஊழியம்செய்திருக்கிறேன். உலகெங்கும் நூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில் இந்த அமைப்பு ஊழியம்செய்துவருகிறது. இதில் 2500 முழுநேர ஊழியர்களும், ஆயிரக்கணக்கான தன்னார்வ ஊழியர்களும் பணிபுரிந்து வருகின்றனர். இந்த நூலை வெளியிடும் இந்திய வேதாகம இலக்கியம் (IBL) நிறுவனமும் சிறுவர்களின் மத்தியில் வல்லமையான ஊழியத்தைச் செய்துவருகிறது. இந்த அருட்பணி அமைப்புக்களிலோ அல்லது வேறு சிறுவர் ஊழிய அமைப்புக்களிலோ நீங்கள் தன்னார்வ ஊழியராகச் சேரலாம்.

- சிறுவர் வேதாகமப் பள்ளியில் நீங்கள் போதிக்கலாம் அல்லது உதவி செய்யலாம்.
- வாரநாள் சிறுவர் கூட்டத்தையோ அல்லது நற்செய்தி கிளப்பையோ உங்கள் வீட்டில் நீங்கள் நடத்தலாம். அண்டை வீடுகளிலுள்ள சிறுவர்களுக்கு நீங்கள் தேவனுடைய வார்த்தையைப் போதிக்கலாம்.
- வேறொருவருடைய வீட்டில் நடக்கும் நற்செய்தி கிளப்பில் நீங்கள் போதிக்கலாம்.
- நீங்கள் கோடைகால அருட்பணியாளராக ஊழியம்செய்யலாம். கோடை விடுமுறையில் திறந்த வெளியில் நடத்தப்படும் 5-நாள் கிளப்புகளில் போதிக்கலாம் அல்லது உதவிசெய்யலாம்.
- சிறுவர் முகாமில் நீங்கள் உதவிசெய்யலாம் அல்லது ஆலோசகராக இருக்கலாம்.

நீங்களாகவே எதையேனும் செய்யுங்கள்

நீங்களாகவே சிறுவர்களைத் தேடிச் சென்று அவர்களுக்குப் போதிப்பது மூன்றாவது வாய்ப்பாகும். இது சிறப்பான வழி என்று கூற முடியாது. முதல் இரண்டு ஊழியங்களுக்கும் வாய்ப்புக் கிடைக்காவிட்டால் இதைச் செய்யலாம். ஒரு சபைக் குழுவின் அங்கமாகவோ அல்லது CEF, IBL போன்ற அமைப்புக்களின் சார்பாக ஊழியம்செய்வதுதான் எப்போதுமே சிறந்த காரியமாகும். இந்த இரண்டு வகைகளின் மூலம் ஒரே இலக்கைக்கொண்ட மற்றவர்களோடு ஐக்கியமாக ஊழியம் செய்யும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கிறது. உங்கள் தலைவர்களிடமிருந்தும்

உடன் ஊழியர்களிடமிருந்தும் நீங்கள் உதவியையும், ஊக்குவிப்பையும் பெறலாம். நீங்கள் யாருக்காவது பொறுப்புள்ளவராகவும் இருக்கிறீர்கள். இவையனைத்தும் உதவிகரமாக இருப்பதோடு அத்தியாவசியமானவையுமாகும்.

என்றாலும், முதல் இரண்டு காரியங்களுக்கும் உங்களுக்கு வாய்ப்பில்லாமல் போகலாம். நீங்கள் சிறுவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும், தேவனுடைய வார்த்தையை அவர்களுக்குப் போதிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்ற நிச்சயத்தை நீங்கள் பெற்றிருக்கலாம். அப்படியானால், சிறுவர்களுக்கு ஊழியம்செய்யும்படி நீங்களாகவே எதையேனும் செய்ய வேண்டும்.

நீங்கள் என்ன செய்ய முடியும்? பலவிதமான வாய்ப்புகள் இருக்கின்றன:

- சிறுவர்களுக்காகச் சிறப்பாக எழுதப்பட்டு, வெளியிடப்படும் துண்டுப் பிரதிகளை விநியோகம் செய்வது அதிகமான அனுபவமோ, திறமையோ தேவைப்படாத எளிய வாய்ப்பாகும். பல கிறிஸ்தவ நூல் வெளியீட்டகங்கள் அல்லது புத்தகக் கடைகள் அல்லது CEF, IBL போன்ற அமைப்புகளிலிருந்து நீங்கள் இந்தத் துண்டுப் பிரதிகளைப் பெறலாம்.
- ஒவ்வொரு துண்டுப் பிரதியிலும் சிறுவர்கள், ஆவிக்குரிய உதவி தேவைப்பட்டால், தங்கள் முகவரியை எழுதி, உங்களோடு தொடர்பு கொள்வதற்கான படிவம் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- கோடை விடுமுறையில் நீங்கள் சிறுவர்களைத் திறந்த வெளியில் ஒன்று திரட்டி, அவர்களுக்கு எளிய சுவிசேஷச் செய்தியைப் போதிக்கலாம் அல்லது வேதாகமக் கதைகளைக் கூறலாம். வார்த்தையில்லாத புத்தகம், பட அட்டைக் கதை, பொருள்கொண்டு விளக்கும் பாடம் இவைகளை நீங்கள் பயன்படுத்தலாம். நீங்கள் வெளியரங்கமாகவும், அனைவரும் காணக்கூடிய வகையிலும் இதைச் செய்ய வேண்டும். நீங்கள் யார், என்ன செய்கிறீர்கள் என்பதைப் பெற்றோர்கள் அறியும்படி செய்ய வேண்டும்.
- உங்கள் பகுதியிலுள்ள சிறுவர்களின் பெற்றோரை நீங்கள் சந்தித்து, வார நாளில் உங்கள் வீட்டில் நடத்தப்படும் கூட்டத்துக்கு அவர்களுடைய பிள்ளைகளை அனுப்பும்படி கேட்டுக்கொள்ளலாம். இது சபைசாராதது என்பதை நீங்கள் வலியுறுத்த வேண்டும். உங்களை அறிந்து உங்களில் நம்பிக்கை கொண்டிருப்பார்களானால், பல பெற்றோர் தங்கள் பிள்ளைகளை உங்களிடம் அனுப்பிவைப்பார்கள்.

இப்படிப்பட்ட கூட்டங்களிலோ அல்லது திறந்தவெளிக் கூட்டங்களிலோ உடன் ஊழியர் ஒருவரைப் பெற்றிருப்பது உதவியாக இருக்கும். நீங்கள் ஆசிரியராகவும் அவர் உங்களுக்கு உதவியாளராகவும் இருக்கலாம்; அல்லது நீங்கள் அவருக்கு உதவிசெய்யலாம். கூட்டத்தை நடத்துவது ஆசிரியரின் பொறுப்பாகும். உதவியாளர் சிறுவர்களை வரவேற்று, அவர்களை இருக்கையில் அமர்த்தி, அவர்கள் ஒழுங்காக நடந்துகொள்ளுமாறு செய்கிறார். வருகைப் பதிவேட்டையும் கவனித்துக்கொள்கிறார். கூட்டம் முடிந்தபிறகு

சிறுவர்களுக்கு ஆலோசனை கூறுவதிலும், ஆசிரியர் கேட்டுக்கொள்வதற்கு ஏற்ப கூட்டத்தின் நடுவிலும் அவர் உதவிசெய்யலாம்.

உங்கள் கூட்டங்களுக்கு ஜெப பங்காளராக இருக்கும்படி ஆர்வமுள்ள மற்றொரு நபரையும் நீங்கள் கேட்டுக்கொள்ளலாம். உங்களுக்காகவும் சிறுவருக்காகவும் ஒழுங்கான அடிப்படையில் ஜெபிக்கும்படி அவரிடம் கேட்டுக்கொள்ளுங்கள். கூட்டம் நடக்கும்போது இது அத்தியாவசியமான காரியமாகும்.

சில நாடுகளில், குறிப்பாக மேற்கத்திய நாடுகளில், நீங்களாகவே சிறுவர் மத்தியில் இவ்வாறு ஊழியம்செய்யும்போது, மக்கள் உங்கள் பணியைக் குறித்துச் சந்தேகம்கொள்பவர்களாக இருக்கிறார்கள். எனவேதான் நீங்கள் செய்வது அனைத்தும் திறந்த வெளியிலும் வெளியரங்கமாகவும் செய்யப் பட வேண்டும்; பிள்ளைகளின் பெற்றோரோடு நீங்கள் நல்லுறவு கொண்டி ருக்க வேண்டும். இதன் காரணமாகவே, ஒரு சபையுடனோ அல்லது நற்பெயரைப் பெற்ற ஒரு அமைப்புடனோ சேர்ந்து ஊழியம்செய்வது இதை விடச்சிறப்பானது என்று நான் கூறினேன்.

அத்தியாயம் 3
அவர்களைக் கூட்டிச் சேருங்கள்
சிறுவர்களை வரும்படி செய்வது எவ்வாறு?

அத்தியாயத்தின் சுருக்கம்

(சிறுவர்களைக் கூட்டிச் சேர்ப்பதற்கு இந்தப் படிகள் உங்களுக்கு உதவியாக இருக்கும்).

- தேவனுடைய கட்டளைகளைப் புரிந்துகொள்ளுதல் - உபாகமம் 31:12, 13 வசனங்களை நீங்கள் வாசிக்கும்போது சிறுவர்களைக் கூட்டிச் சேர்ப்பதின் முக்கியத்துவத்தை நீங்கள் கண்டுகொள்வீர்கள்.
- கவனமாகத் திட்டமிடுங்கள் - சிறுவர்களுக்குப் பொருத்தமான (பெற்றோருக்கும் கூட) நேரத்தையும் இடத்தையும் நீங்கள் பெற்றிருக் கிறீர்களா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.
- பெற்றோரைத் தொடர்புகொள்ளுங்கள் - சரியான வகையில் இதைச் செய்வது முக்கியமாகும்.
- சிறுவர்களைத் தொடர்புகொள்ளுங்கள் - இப்போது சிறுவர்களுக்குத் தனிப் பட்ட அழைப்பைக் கொடுப்பதற்கு நீங்கள் ஆயத்தமாக இருக்கிறீர்கள்.

- **ஆர்வத்தைத் தூண்டும் வகையில் கூட்டத்தை நடத்துங்கள்** - உங்கள் கூட்டம் மந்தமாகவும், பொருத்தமில்லாத வகையிலும் நடத்தப்படுமானால் பிள்ளைகள் மறுபடியுமாக வரமாட்டார்கள்.
- **சிறுவர்கள் மற்றவர்களை அழைத்துவரும்படி ஊக்குவியுங்கள்** - உங்களைவிட அவர்களால் இதைச் சிறப்பாகச் செய்ய முடியும்.
- **சிறப்பு நிகழ்ச்சிகளை ஒழுங்குபண்ணுங்கள்** - இடையிடையே இது உதவியாக இருக்கும்.
- **பொருத்திச் செயல்படுத்துங்கள்** - மேற்கண்ட படிகள் அனைத்தையும் உங்கள் சொந்தச் சூழ்நிலைக்கேற்பப் பொருத்திப் பயன்படுத்துங்கள்.
- **ஜெபிப்பது அவசியமாகும்** - இது உங்களுடைய மிக முக்கியமான பொறுப்பாகும்; சிறுவர்கள் வருவதை உறுதிப்படுத்திக்கொள்ள இதுவே முக்கியமான வழியாகும்.

தேவனுடைய கட்டளையைப் புரிந்துகொள்ளுதல்

மோசேயின் மூலமாக இஸ்ரவேல் ஜனங்களுக்குத் தேவனுடைய இந்தக் கட்டளை கொடுக்கப்பட்டது:

"புருஷர்களும் ஸ்திரீகளும் பிள்ளைகளும் உன் வாசல்களிலிருக்கும் அந்நியர்களும் கேட்டு, கற்றுக்கொண்டு, உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளின்படியெல்லாம் செய்யக் கவனமாக இருக்கும்படிக்கும், அதை அறியாத அவர்கள் பிள்ளைகளும் கேட்டு, நீங்கள் யோர்தானைக் கடந்து சுதந்தரிக்கப்போகிற தேசத்தில் உயிரோடிருக்கும் நாளெல்லாம், உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பயப்படக் கற்றுக்கொள்ளும்படிக்கும் ஜனத்தைக் கூட்டி, அதை வாசிக்க வேண்டும் என்றான்" (உபாகமம் 31:12, 13).

முதலில், இந்தக் கட்டளையில் நான்கு வகைப்பட்ட மக்கள் கூட்டத்தினர் குறிப்பிடப்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம் - புருஷர்கள், ஸ்திரீகள், அந்நியர்கள் மற்றும் **பிள்ளைகள்.**

இரண்டாவதாக, இஸ்ரவேல் மக்களுக்குத் தேவன் அளித்த இலக்குகளைப் பார்க்கிறோம்; பிள்ளைகள் உட்பட ஒவ்வொரு வகை மக்கள் கூட்டத்தையும் பொருத்தவரையில் இதே இலக்குகளைத் தேவன் நமக்கும் கொடுக்கிறார்:

- முதலில் அவர்களை ஒன்றாகக் கூட்ட வேண்டும்: *"ஜனத்தைக் கூட்டி."*
- அவர்கள் தமது வார்த்தைக்குச் செவிகொடுக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார்: *"...கேட்டு..."*
- அவர்கள் தமது வார்த்தையைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகிறார்: *"கற்றுக்கொள்ளும்படிக்கும்."*

- அவர்கள் தமக்குப் பயப்பட வேண்டுமென்று விரும்புகிறார்: *"தேவனாகிய கர்த்தருக்குப் பயப்பட..."*
- தமது வார்த்தையிலுள்ள எல்லாவற்றுக்கும் அவர்கள் கீழ்ப்படிய வேண்டுமென்று அவர் விரும்புகிறார்: *"இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளின்படியெல்லாம் செய்யக் கவனமாயிருக்கும்படிக்கும்..."*

இந்தக் குறிப்புகளை நாம் திருப்பிப் பார்ப்போமானால், தேவன் நம்மிடம் என்ன கூறுகிறார் என்பதைச் சிறப்பாகப் புரிந்துகொள்ள முடியும்:

- சிறுபிள்ளைகள் தேவனுக்குப் **பயப்படாவிட்டால்** அவருடைய வார்த்தைகள் எல்லாவற்றுக்கும் மெய்யாகவே கீழ்ப்படிய முடியாது.
- வேதாகமம் தேவனைக் குறித்து என்ன போதிக்கிறது என்பதை அவர்கள் **அறியாவிட்டால்** அவருக்குப் பயப்பட முடியாது.
- அவர்கள் தேவனுடைய வார்த்தைக்குச் **செவிகொடாவிட்டால்,** வேதாகமம் என்ன போதிக்கிறது என்பதை அறிய முடியாது.
- அவர்கள் **வராவிட்டால்** தேவனுடைய வார்த்தைக்குச் செவிகொடுக்க முடியாது.
- நாம் அவர்களைக் **"கூட்டிச் சேர்க்காவிட்டால்"** அவர்கள் வர மாட்டார்கள்.

இது நம்மை மறுபடியுமாக முக்கியமான கேள்விக்குக் கொண்டுவருகிறது.

"சிறுபிள்ளைகளை நாம் எவ்வாறு கூட்டிச் சேர்க்க முடியும்? வந்து தேவனுடைய வார்த்தைக்குச் செவிகொடுக்கும்படி நாம் எப்படி அவர்களை ஊக்குவிக்க முடியும்?"

கடந்த அத்தியாயத்தில் நாம் பார்த்தபடி, வெவ்வேறு வகைப்பட்ட சிறுவர் ஊழியங்கள் இருக்கின்றன. நாம் சிறுவருக்காக எந்த ஊழியத்தைச் செய்தாலும், அது ஏற்கெனவே நிறுவப்பட்ட ஊழியமாக இருந்தாலும் சரி, அல்லது "புதிய ஊழியமாக" இருந்தாலும் சரி, இந்த இரண்டு கேள்விகளுக்கும் நாம் பதிலை அறிந்திருக்க வேண்டும். என்றாலும், "புதிய ஊழியத்தைத்" துவக்குகிறவர்களுக்கு இந்தப் பதில்கள் (தொடர்ந்து வரும் அடிப்படைக் கொள்கைகள் குறித்த விளக்கம்) குறிப்பான வகையில் பொருத்தமாக இருக்கின்றன. இந்தக் கொள்கைகளை நீங்கள் பின்பற்றுவீர்களானால் பிள்ளைகளைக் "கூட்டிச் சேர்க்க" முடியும் என்று நான் நம்புகிறேன்.

கவனமாகத் திட்டமிடுங்கள்

நீங்கள் பிள்ளைகளைக் "கூட்டிச் சேர்ப்பது" குறித்துச் சிந்திப்பதற்கு முன்பாக, எந்த இடத்தில் கூட்டத்தை நடத்தப் போகிறீர்கள், எந்த நாளில் அது நடத்தப்படும், சிறுவர்கள் கூடிவருவதற்கு ஏற்றபடி எந்த நேரத்தில் அது நடத்தப்படும் என்பவைகளை நீங்கள் திட்டமிட்டிருக்க வேண்டும். வந்து சேருவதற்குக்

கூடிவமான இடத்தில் கூட்டம் நடத்தப்பட்டாலோ, அல்லது வேறுபல வேளை களின் காரணமாக அவர்களால் கலந்துகொள்ள முடியாத நேரத்தில் நடத்தப் பட்டாலோ, அவர்களைக் கூட்டிச் சேர்க்க முடியாது. முதலாவதாக, எந்த வகை யில் நீங்கள் சிறுவருக்கு ஊழியம்செய்யப் போகிறீர்கள் என்பதைக் குறித்து அதிகமான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். அப்போது, நீங்கள் இடம், நாள், நேரம் இவைகளைத் திட்டமிடும்போது, அவை பிள்ளைகள் கூடிவருவதற்கு அநுகூலமானவையாக இருக்கும்.

பெற்றோர்களைத் தொடர்புகொள்ளுங்கள்

சிறுவருக்கான ஊழியத்தை நீங்கள் துவக்குவதற்கு முன்பாக, எந்தச் சிறு வர்களுக்காக நீங்கள் ஊழியம்செய்யும்படி நோக்கம் கொண்டிருக்கிறீர்களோ, அவர்களின் பெற்றோரோடு தொடர்புகொள்வதை உங்கள் இலக்காகக் கொள்ள வேண்டும். சிறுவர்கள் தங்கள் பெற்றோரின் அதிகாரத்தின்கீழ் இருக்கிறார்கள் என்பதை நீங்கள் அங்கீகரிக்க வேண்டும். எனவே, பிள்ளைகள் வந்து உங்களுக்குச் செவிகொடுக்கப் பெற்றோர் அனுமதிப்பார்கள் என்று நீங்கள் நம்ப வேண்டும்.

இரண்டு இடர்கள் நேரிடக்கூடும்:

- நீங்கள் பெற்றோரைத் தொடர்புகொள்ளும்போது அவர்கள் பிள்ளைகளை அனுப்ப மறுக்கலாம்.
- ஆனால், நீங்கள் பெற்றோரோடு தொடர்புகொள்ளாமலோ அல்லது அவர்க ளுக்குத் தெரிவிக்காமலோ, பிள்ளைகளோடு "இரகசியமாகத்" தொடர்பு கொள்வீர்களானால் பெற்றோரை முழுமையாக அந்நியப்படுத்தும் இடர் நேரிடக்கூடும்.

இந்த இரண்டில் முதலாவது இடரே மேல் என்று நான் கருதுகிறேன். எனவே நீங்கள் பெற்றோருடன் முதலில் தொடர்புகொள்ள வேண்டும். என்றாலும், நீங்கள் திறந்தமனதோடும் நேர்மையோடும் அவர்களைத் தொடர்புகொள்வீர்களானால், அவர்கள் அதை மெச்சி, தங்கள் பிள்ளைகள் வந்து உங்களுக்குச் செவி கொடுக்க அனுமதிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

பெற்றோருடன் தொடர்புகொள்வதற்குச் சிறந்த வழி "நேருக்கு நேர்" அவர்க ளைச் சந்திப்பதாகும். அப்படியானால் நீங்கள் வீடுவீடாகச் செல்ல வேண்டும். உங்களை நீங்களே அறிமுகப்படுத்திக்கொண்டு, நீங்கள் செய்யத் திட்டமிட்டிருப் பதை அவர்களுக்கு விளக்கி, பிள்ளைகள் வருவதற்கு அனுமதிக்கும்படி கேட்டுக் கொள்ள வேண்டும். அதே வேளையில் நீங்கள் பிள்ளைகளுக்கு வேதாகம சத்தி யங்களைப் போதிப்பதே உங்கள் நோக்கம் என்றும், அவர்களை அவர்களுடைய தற்போதைய சபையிலிருந்து பிரிப்பது (அவர்கள் ஒரு சபைக்குச் செல்பவர்க ளாக இருந்தால்) அல்ல என்றும் உறுதிப்படுத்திக் கூற வேண்டும். பிள்ளைகளின் தனிப்பட்ட வாழ்க்கையில் அவர்களுக்கு உதவி, இன்றைய உலகின் அழுத்தங் களை அவர்கள் சிறப்பாகக் கையாளும்படி அவர்களைப் பலப்படுத்துவதே

உங்கள் நோக்கம் என்பதை வலியுறுத்த வேண்டும். உங்கள் கூட்டத்துக்குப் பெற்றோரும் வந்து கலந்துகொண்டு, என்ன போதிக்கப்படுகிறது என்பதைக் கவனிக்கலாம் என்றும் கூறுங்கள். உங்களைக் குறித்தும் கூட்டத்தைக் குறித்தும் விவரிக்கும் ஒரு கடிதப் பிரதியையும் அவர்களிடம் கொடுத்துவிட்டு வரலாம்.

பிள்ளைகளைத் தொடர்புகொள்ளுதல்

பிள்ளைகளைத் தொடர்புகொண்டு, வந்து உங்கள் போதனைக்குச் செவிகொடுக்குமாறு அவர்களை அழைப்பது அடுத்தபடியாகும்.

இரண்டு வழிகளில் இதைச் செய்யலாம்:

- தனிப்பட்ட அழைப்பின்மூலம்

  நீங்கள் தனிப்பட்ட முறையில் பிள்ளைகளோடு பேசி அவர்களுக்கு அழைப்புவிடுக்க வேண்டும். நீங்கள் யாரென்பதையும், என்ன செய்யப்போகிறீர்கள் என்பதையும் விளக்குங்கள். ஏற்கெனவே நீங்கள் அவர்களுடைய பெற்றோருடன் பேசிவிட்டீர்கள் என்பதைத் தெரிவியுங்கள். அவர்கள் வரலாமா என்று பெற்றோரிடம் கேட்கும்படி கூறுங்கள்.

- அச்சிடப்பட்ட அழைப்பின்மூலம்

  உங்கள் கூட்டத்தின் விவரங்கள் அச்சிடப்பட்ட அழைப்பு அட்டையொன்றை நீங்கள் தயாரிக்க வேண்டும். சிறுவர்கள் முக்கியமாகக் கூடிவரும் இடங்களில் இவைகளை விநியோகம் செய்யலாம். உள்ளூர் பள்ளிக்கூட வாசலுக்கு **வெளியே** இதைச் செய்யலாம். இதற்காக நீங்கள் அனுமதியைப் பெற வேண்டியிருக்கலாம். அப்படிச் செய்யவேண்டியிராவிட்டாலும் செய்வது நலம். பள்ளியோடு ஆக்கபூர்வமான தொடர்பு கொண்டிருப்பது உங்களுக்கு உதவியாக இருக்கும். உங்களுக்காக அவர்கள் பள்ளி அறிவிப்புப் பலகையில் ஒரு சுவரொட்டியைக் காட்சிக்கு வைக்கலாம். பிள்ளைகளோடு பேசுவதற்கும் இது கடைசியில் ஒரு வாய்ப்பாக அமையும்.

முதல் கூட்டங்களில் அதிகமான பேர் கலந்துகொள்ளவில்லை என்று கவலைப்படாதீர்கள். பெரிதாகத் துவங்கி, குறைவதைவிட, சிறிதாகத் துவங்கி வளர்ச்சி பெறுவதே மேலானதாகும். பெரும்பாலும் பிள்ளைகள்தாமே உங்கள் கூட்டங்களின் வளர்ச்சிக்கு உதவியாக இருப்பார்கள்.

ஆர்வத்தைத் தூண்டக்கூடிய வகையில் கூட்டத்தை நடத்துங்கள்

பெற்றோரைத் தொடர்புகொண்டு, பிள்ளைகளையும் அழைத்த பிறகு, உங்கள் கூட்டம் ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும், பொருத்தமாகவும், கவர்ச்சிகரமாகவும் இருக்குமா என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் பெரும்பாலான பிள்ளைகள் வருவதை நிறுத்திக் கொள்வார்கள். கூட்டம் ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும், பொருத்தமாகவும்,

கவர்ச்சிகரமாகவும் இருக்குமானால், பிள்ளைகள் தொடர்ந்து வருவதோடுகூட, அவர்களிடமிருந்து கேள்விப்பட்டு மேலும் பல பிள்ளைகளும் வந்து கலந்து கொள்வார்கள். எவ்வாறு இதைச் செய்வது என்பதை நாம் பின்னால் பார்ப்போம்.

மற்றவர்களை அழைத்துவருமாறு பிள்ளைகளை ஊக்குவியுங்கள்

பிள்ளைகள்தாமே மற்றவர்களை "அழைத்துவருவதில்" சிறப்பாகச் செயல்பட முடியும். எனவே மற்றப் பிள்ளைகளோடு பேசி அவர்களை அழைப்பதற்குப் பிள்ளைகளை ஊக்குவிக்க வெவ்வேறான வழிகளை நீங்கள் சிந்தித்து வைத்திருக்க வேண்டும்:

- ஒரு ஊழியமாக, மற்றப் பிள்ளைகளுக்கு உதவும்படி நீங்கள் அவர்களுக்கு அறைகூவல் விடுக்கலாம்.
- யார் அதிகமான பிள்ளைகளை அழைத்துவருகிறார்கள் என்பதற்கு ஒரு போட்டி வைக்கலாம்.
- மற்றொரு பிள்ளையைக் கூட்டிவரும் பிள்ளைக்கு நீங்கள் ஒரு "நட்சத்திரத்தைக்" கொடுக்கலாம். இவ்வாறு 5 நட்சத்திரங்களைச் சேகரிக்கும் பிள்ளைகளுக்குப் பரிசு கொடுக்கலாம்.

சிறப்பான நிகழ்ச்சிகளை ஒழுங்குபண்ணுங்கள்

ஆண்டு முழுவதும் சிறப்பான நாட்களில் சிறப்பு நிகழ்ச்சிகளை ஒழுங்குபண்ணுவதின் மூலமாக நீங்கள் அதிகமான பிள்ளைகளின் ஆர்வத்தைத் தூண்டி அவர்கள் கலந்துகொள்ளுமாறு செய்யலாம்.

இந்த நிகழ்ச்சிகள் இவைகளை உள்ளடக்கியவையாக இருக்கலாம்:

- கிறிஸ்மஸ் விருந்து. சிறப்பான கிறிஸ்மஸ் நிகழ்ச்சி, கிறிஸ்மஸ் படக்காட்சியோடு கூடிய பாடம் இவைகளை நடத்தலாம்.
- ஈஸ்டர் விருந்து, உயிர்த்தெழுந்த திருநாளை மையமாகக் கொண்ட நிகழ்ச்சி மற்றும் பாடங்களுடன்.
- அருட்பணிக் கூட்டங்கள். ஒரு அருட்பணியாளர் தனது ஊழிய அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளுதல்.

பொருத்திச் செயல்படுத்துங்கள்

இந்த அத்தியாயத்தில் ஏற்கெனவே கூறப்பட்ட அனைத்தையும் நீங்கள் உங்கள் சூழ்நிலைக்கேற்பப் பொருத்திச் செயல்பட வேண்டும்.

- ஒரு கலாச்சாரத்துக்குப் பொருத்தமாக இருப்பது எப்போதுமே மற்றொரு கலாச்சாரத்துக்குப் பொருத்தமாக இருக்கும் என்று கூற முடியாது. எனவே பிள்ளைகளைக் "கூட்டிச் சேர்ப்பது" பற்றிய வழிமுறைகளை உங்கள்

சமுதாயத்தின் கலாச்சாரப் பின்னணிக்கேற்ப மாற்றி நீங்கள் பயன்படுத்த வேண்டும்.

நீங்கள் திட்டமிடும் ஊழிய வகையைக் குறித்து நான் கொடுத்துள்ள குறிப்புகளையும்கூட நீங்கள் இவ்வாறு பொருத்திப் பயன்படுத்த வேண்டும். எடுத்துக்காட்டாக, நீங்கள் துண்டுப் பிரதிகளை விநியோகிப்பதை மட்டும் செய்யத் திட்டமிட்டிருப்பீர்களானால், பிள்ளைகளுக்கு அவைகளை விநியோகிப்பதற்கு முன்பாகப் பெற்றோரின் அனுமதியைப் பெறத் தேவையில்லை.

ஆனால் பெரும்பாலான இடங்களிலும், தேவன் உங்களுக்குக் கொடுக்கும் சிறுவர் ஊழியத்தின் வகையிலும், நான் விவரித்துள்ள அடிப்படைக் கொள்கைகள் உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன். இந்தக் கொள்கைகளை நீங்கள் செயல்படுத்துவீர்களானால், நீங்கள் சிறப்பான வகையில் "பிள்ளைகளைக் கூட்டிச் சேர்க்க" முடியும்.

நீங்கள் ஜெபிப்பது அவசியமாகும்

உங்கள் வாழ்க்கையிலும் ஊழியத்திலும் ஜெபத்தின் முக்கியத்துவத்தை நான் வலியுறுத்த வேண்டியது அவசியமில்லை என்றே நினைக்கிறேன். தேவன் ஆசீர்வதித்தால் மட்டுமே, உங்கள் ஊழியமும் நீங்களும் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். அவருடைய ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கு முதன்மையான வழி அதிகமான நேரத்தை ஜெபத்தில் செலவழிப்பதாகும். வாரம் முழுவதும், உங்கள் தனிப்பட்ட ஜெப வேளைகளிலும், கூட்டத்துக்கு முன்பாகவும் நீங்கள் ஜெபிக்க வேண்டும்.

நீங்கள் இவைகளுக்காக ஜெபிக்க வேண்டும்:

- பிள்ளைகள் வர வேண்டும்.
- பிள்ளைகள் நன்றாகச் செவிகொடுக்க வேண்டும்.
- தேவன் ஒவ்வொரு பிள்ளையின் இருதயத்திலும் பேச வேண்டும்.
    - ✓ இதனால் அவர்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பார்கள்.
    - ✓ அவர்கள் ஆவிக்குரியபிரகாரமாக வளர்ச்சிபெறுவார்கள்.

அத்தியாயம் 4
அவர்களுக்கு உதவிசெய்யுங்கள்
சிறுவர்களின் தேவைகள் யாவை ?

அத்தியாயத்தின் சுருக்கம்

(பிள்ளைகளுக்கு உதவும்படியாக நீங்கள் அவர்களுடைய தேவைகளை அறிந்திருக்க வேண்டும்).

- **பிள்ளைகள் தேவனுடைய வார்த்தையின் சத்தியங்களைப் புரிந்து கொள்வது அவசியமாகும்.** பெரும்பாலான பிள்ளைகள் இந்தச் சத்தியங்களை அறிந்திருப்பதில்லை.
- **பிள்ளைகளுக்கு இரட்சிப்பு அவசியமாகும்.** ஒவ்வொரு சிறுவர் ஊழியரும் இதைக் குறித்துத் தெளிவாக இருக்க வேண்டும்.
- **பிள்ளைகளுக்குப் பலம் தேவையாகும்.** அவர்கள் பல அழுத்தங்களைக் கொண்ட கடினமான உலகத்தில் வாழுகிறார்கள்.
- **பிள்ளைகளுக்குப் பாதுகாப்பு அவசியமாகும்.** குழப்பமும் நிச்சயமின்மையும் நிலவும் உலகத்தில் தேவன் மட்டுமே ஒரே நிச்சயமான நம்பிக்கையாக இருக்கிறார்.
- **பிள்ளைகளுக்குச் சுவிசேஷம் தேவையாகும்.** மேலேயுள்ள அனைத்து ஆசீர்வாதங்களும் பிள்ளைகளுக்குச் சுவிசேஷத்தின் மூலமாகவே கிடைக்கின்றன. அவர்களுக்குச் சுவிசேஷத்தைப் போதிப்பது நமது பொறுப்பாகும்.

உங்கள் ஊழியத்தின் துவக்கத்திலிருந்தே நீங்கள் பிள்ளைகளின் தேவைகள் என்ன, அவைகளைச் சிறப்பாகச் சந்திப்பது எப்படி என்பதை வேதாகமத்திலிருந்து அறிந்திருக்க வேண்டும். அவர்களுக்கு ஊழியம்செய்து, அவர்களுக்கு உதவுவதே உங்கள் இலக்காக இருக்கிறது. அவர்களின் தேவைகளை நீங்கள் தெளிவாக அறிந்தால் மட்டுமே இதைச் சிறப்பாகச் செய்ய முடியும். பிரச்சினைகளை அறியாவிட்டால் உங்களால் தீர்வுகளைக் கொடுக்க முடியாது. கேள்விகளை அறியாவிட்டால் உங்களால் பதில்களைக் கொடுக்க முடியாது. சிறுவர்கள் மற்றும் அவர்களுடைய தேவைகளைப் பற்றி வேதாகமம் கூறுவதை நீங்கள் சரியாகப் புரிந்துகொண்டிருப்பீர்களானால், உங்கள் இலக்குகளை நிறுவுவது உங்களுக்கு எளிதாக இருக்கும்; உங்கள் பிள்ளைகளின் வாழ்க்கையில் நீங்கள் எதைச் செய்ய விரும்புகிறீர்கள் என்பதையும் தெளிவாகக் காணமுடியும்.

பிள்ளைகள் தேவனுடைய வார்த்தையின் சத்தியங்களைப் புரிந்துகொள்வது அவசியமாகும்

தேவன் தமது வார்த்தையாகிய வேதாகமத்தில் தம்மைப் பற்றியும், ஆண்களும் பெண்களும் சிறுவர் சிறுமியரும் கேட்டுப் புரிந்துகொள்ள வேண்டிய சத்தியங்களையும் வெளிப்படுத்தியிருக்கிறார். இந்த அறிவில்லாவிட்டால் பிள்ளைகள் ஆவிக்குரிய அந்தகாரத்திலும் அறியாமையிலுமே வாழ்வார்கள்.

மூன்று முக்கிய காரணங்களுக்காக நமக்கு வேதாகமம் கொடுக்கப்பட்டிருக்கிறது:

- தேவன் எப்படியிருக்கிறார் என்பதை நமக்குக் காட்டுவதற்காக.
- நாம் எப்படியிருக்கிறோம் என்பதை நமக்குக் காட்டுவதற்காக.
- நாம் எப்படியிருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறாரோ அப்படி மாறுவது எப்படி என்பதை நமக்குக் காட்டுவதற்காக.
  - ✓ இரட்சிப்பின்மூலமாக.
  - ✓ பரிசுத்தமாக்கப்படுதலின்மூலமாக.
  - ✓ கடைசியாக மகிமைப்படுத்தப்படுவதின்மூலமாக.

ஆனால் பெரும்பாலான சிறுவர்களுக்கு தேவனுடைய வார்த்தையைப் பற்றிய போதுமான அறிவு இல்லை. தேவன் எப்படியிருக்கிறார் என்பது அவர்களுக்குத் தெரியாது; தேவனுடைய பார்வையில் தாங்கள் எப்படியிருக்கிறோம் என்பதும் தெரியாது. தேவன் விரும்புகிறபடி தாங்கள் எப்படி மாறுவது என்பதும் தெரியாது. பொதுவான சமுதாயம் பெரும்பாலும் வேதாகம சத்தியங்களைக் குறித்துக் கேள்வியெழுப்புகிறது, புறக்கணிக்கிறது அல்லது கேலிசெய்கிறது. எனவே சிறுவர்களுக்கு வேதாகம சத்தியங்களைப் போதியுங்கள். அழுத்தத்துக்கு வளைந்து கொடுக்காதீர்கள். தேவனுடைய சத்தியத்தை முழுமையான சத்தியமாகப் போதியுங்கள்.

எனவே ஒரு ஆசிரியராக உங்கள் முதல் பொறுப்பு, வேதாகம சத்தியங்களைச் சிறுவர்களுக்குப் போதித்து, அவர்கள் தங்கள் வாழ்க்கையில் இந்தச் சத்தியங்களைச் செயல்படுத்துமாறு உதவுவதாகும். உங்களால் முடிந்தவரை முழுமையாக இந்தச் சத்தியங்களை நீங்கள் அவர்களுக்குப் போதிக்க வேண்டும்.

பிள்ளைகளுக்கு இரட்சிப்பு தேவைப்படுகிறது

இயேசுகிறிஸ்துவைத் தங்கள் ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ளாத பிள்ளைகளின் ஆவிக்குரிய நிலையைக் குறித்து வேதாகமம் போதிப்பதை நீங்கள் தெளிவாகப் புரிந்துகொண்டிருக்க வேண்டும்.

- அவர்கள் ஆவிக்குரியரீதியாக மரித்துப்போனவர்களாக இருக்கிறார்கள்.

  "அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை

*உயிர்ப்பித்தார். **அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த** நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்"* (எபேசியர் 2:1, 5).

- அவர்கள் பாவ இயல்பைப் பெற்றிருக்கிறார்கள்.

  *"இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் **பாவத்தில்** கர்ப்பந்தரித்தாள்"* (சங்கீதம் 51:5).

  *"அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சைகளின் படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, **சுபாவத்தினாலே** மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்"* (எபேசியர் 2:3).

- அவர்கள் தேவனுடைய ராஜ்யத்துக்கு வெளியே இருக்கிறார்கள்.

  *"நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோக **ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள்** என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்"* (மத்தேயு 18:3).

- அவர்களுடைய நிலையைப் பொருத்தவரையில் அவர்கள் இழந்துபோனவர் களாக இருக்கிறார்கள்.

  *"மனுஷகுமாரன் **கெட்டுப்போனதை** ரட்சிக்க வந்தார். உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது? ஒரு மனுஷனுக்கு நூறு ஆடுகளிருக்க, அவைகளில் ஒன்று **சிதறிப் போனால்,** அவன் மற்றத் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் மலைகளில் விட்டுப்போய்ச் **சிதறிப்போனதைத்** தேடாமலிருப்பானோ? அவன் அதைக் கண்டுபிடித்தால், சிதறிப்போகாத தொண்ணூற்றொன்பது ஆடுகளைக் குறித்துச் சந்தோஷப்படுகிறதைப்பார்க்கிலும், அதைக் குறித்து அதிகமாய்ச் சந்தோஷப்படுவான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். இவ்விதமாக, இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் **கெட்டுப் போவது** பரலோகத் திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல"* (மத்தேயு 18:11-14).

- தாங்கள் பாவம்செய்துவிட்டோம் என்பதையும், இயேசுகிறிஸ்து தங்களுக் காக மரித்தார் என்பதையும், தேவன் கூறுவதைப் புறக்கணித்திருக்கிறோம் என்பதையும் அறியக்கூடிய பருவத்தை எட்டிவிட்ட அவர்கள், மரிக்கும்போது நித்தியமாக இழந்துபோவார்கள் என்று வேதாகமம் போதிக்கிறது.

  *"குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனா யிருக்கிறான்; **குமாரனை விசுவாசியாதவனோ** ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்"* (யோவான் 3:36).

பிள்ளைகள் இயேசுகிறிஸ்துவைத் தங்கள் ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ளும்போது, அவர்கள் இரட்சிக்கப்படுகிறார்கள் என்பதையும், மேலே கூறப்பட்டுள்ள அனைத்துப் பிரச்சினைகளும் தீர்க்கப்படுகின்றன என்பதையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

- அவர்கள் ஆவிக்குரிய ஜீவனைப் பெறுகிறார்கள்:

  "அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்" (எபேசியர் 2:5).

- அவர்கள் புதிய இயல்பைப் பெற்று, மாற்றப்படுகிறார்கள்:

  "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2 கொரிந்தியர் 5:17).

அவர்கள் தேவனுடைய ராஜ்யத்துக்குள் மறுபடியும் பிறக்கிறார்கள்:

- "இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காண மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்பட வேண்டாம்" (யோவான் 3:3, 5, 7).

அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு, "மந்தைக்குள்" இருக்கிறார்கள்:

- "கண்டுபிடித்தபின்பு, அவன் சந்தோஷத்தோடே அதைத் தன் தோள்களின் மேல் போட்டுக்கொண்டு, வீட்டுக்கு வந்து, சிநேகிதரையும் அயலகத்தாரையும் கூட வரவழைத்து: காணாமற்போன என் ஆட்டைக் கண்டுபிடித்தேன், என்னோடுகூட சந்தோஷப்படுங்கள் என்பான் அல்லவா? அதுபோல, மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக்குறித்துச் சந்தோஷம் உண்டாகிறதைப்பார்க்கிலும் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (லூக்கா 15:5-7).

- அவர்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்பிலிருந்து நித்தியமாக இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள்; நித்தியமாக ஜீவிப்பார்கள்:

  "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவான் 3:16).

பிள்ளைகளுக்குப் பலம் தேவைப்படுகிறது

நானும் நீங்களும் பிறந்த உலகத்தைவிட முற்றிலும் வேறுபட்ட உலகத்தில் பிள்ளைகள் பிறக்கிறார்கள். நாம் சிறுபிள்ளைகளாக இருந்தபோது அறிந்திராத அழுத்தங்களையும் நெருக்கங்களையும் அவர்கள் எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. நமது பிள்ளைகளை அழித்துப்போடும்படி பிசாசானவன் முழு மூச்சாக முயலுவதுபோலத் தோன்றுகிறது. அப்படிச்செய்வதின் மூலம் இயேசுகிறிஸ்துவுக்கும்

சபைக்கும் சரிசெய்ய முடியாத தீங்கை உண்டாக்கிவிடலாம் என்று அவன் நினைக்கிறான்.

மாற்கு சுவிசேஷத்தின் ஒன்பதாம் அதிகாரத்தில் ஒரு தகப்பன் இயேசுவானவரிடம் வருவதைப் பார்க்கிறோம். அவனுடைய பையன் செவிடும் ஊமையுமான ஒரு அசுத்த ஆவியினால் பிடிக்கப்பட்டிருந்தான். எவ்வளவு நாட்களாக அவனுக்கு இப்படியிருக்கிறது என்று ஆண்டவராகிய இயேசு கேட்டபோது அவன் 21, 22 வசனங்களில் இவ்வாறு பதிலளிக்கிறான்:

"சிறுவயது முதற்கொண்டே உண்டாயிருக்கிறது; இவனைக் கொல்லும்படிக்கு அநேகந்தரம் தீயிலும் தண்ணீரிலும் தள்ளிற்று."

பிசாசானவன் இந்தச் சிறுவனை அழித்துப்போட முயன்றான். இப்போதும் நமது பிள்ளைகளைக் குறித்து இதுவே அவனுடைய நோக்கமாக இருக்கிறது. ஆனால் ஆண்டவராகிய இயேசு இந்தச் சிறுவனைக் குணமாக்கியது போலவே இன்று நமது பிள்ளைகளுக்கும் உதவ முடியும். அவர் அவர்களுடைய ஆவிக்குரிய தேவைகளைச் சந்தித்து, அவர்களுக்குப் பலத்தைக் கொடுப்பார்.

பிசாசானவன் நமது பிள்ளைகளுக்கு எதிராக முழு முனைப்போடு செயல்பட்டு வருவதின் பின்விளைவாக இன்று உலகத்தில் பொருள்மயமாக்கல், தேவனைக் குறித்த சந்தேக மனப்பான்மை, மானிடப் பொதுமை இயல்பு, பாவம் இவை அச்சுறுத்தும் வகையில் அதிகரித்து வருகின்றன. பல்வேறு வகைகளிலும் வெளிப்பாடுகளிலும் இவை காணப்படுகின்றன. பிள்ளைகளால் தாங்களாகவே இத்தகைய தாக்குதல்களைச் சமாளிக்க முடியாது. உலகம், மாம்சம் மற்றும் சாத்தானின் சோதனைகளையும் அழுத்தங்களையும் அவர்களால் எதிர்த்து நிற்க முடியாது.

ஆனால், இதே வேளையில், பிள்ளைகளை இரட்சித்து, அவர்களை மாற்றி, இத்தகைய உலகில் வெற்றிகரமாக வாழ அவர்களுக்குப் பலத்தையும் வல்லமையையும் கொடுக்கக் கூடிய ஒருவர் இருக்கிறார் என்பதே அற்புதமான செய்தியாக இருக்கிறது. தம்மில் விசுவாசம் வைப்பவர்களின் பாவங்களை மன்னிப்பதற்காக மட்டுமல்ல, தேவனுடைய நியாயத்தீர்ப்பு மற்றும் ஆக்கினையிலிருந்து அவர்களை இரட்சிப்பதற்காக மட்டுமல்ல, அவர்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுப்பதற்காக மட்டுமல்ல, இந்த உலகத்தில் பாவத்திலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்காகவுமே இயேசுகிறிஸ்து உலகத்துக்கு வந்து, சிலுவையில் மரித்தார்.

"அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" (மத்தேயு 1:21).

"அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்" (தீத்து 2:14).

இயேசுகிறிஸ்து அவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்கு நாற்பது நாட்கள் கழித்து மேலே உயர்த்தப்பட்டார். தம்மை ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொள்பவர்களின் இருதயத்திலும் வாழ்க்கையிலும் ஜீவிக்கும்படி அவர் பரிசுத்தாவியாகிய தேவனை அனுப்பினார் (அப். 1:8; 2:33; 2:38). இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு அவர்கள் தேவன் விரும்புகிறபடியான வாழ்க்கை வாழ்வதற்கான பலத்தையும் வல்லமையையும் பரிசுத்த ஆவியானவர் அருளுகிறார் (கலாத்தியர் 5:22, 23).

பிள்ளைகளுக்குப் பாதுகாப்பு தேவைப்படுகிறது

இன்றைய உலகத்தில் பாதுகாப்புக் குறைவும் வேலைவாய்ப்பு, உடல் நலம், மரணம் போன்ற எதைக் குறித்தும் நிச்சயமின்மையும் காணப்படுகிறது. பெரும்பாலான மக்கள் வருங்காலத்தைப் பற்றியும் நித்தியத்தைப் பற்றியும் எந்த வித நிச்சயமும் நம்பிக்கையும் இல்லாமலிருக்கிறார்கள். பெரும்பாலான சிறுவர்கள் பிளவுபட்ட இல்லங்களில் வாழ்கிறபடியால் அவர்களும் இதே பாதுகாப்பில்லாத உணர்வைப் பெறுகிறார்கள். சிலருக்கு ஒரு பெற்றோர் மட்டுமே இருக்கிறார்கள். சிலருக்குப் பெற்றோரே இல்லை. சிலர் சரீரப்பிரகாரமாகவும், மனோரீதியாகவும், பாலியல்ரீதியாகவும் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள்.

இயேசுகிறிஸ்து இரட்சித்து, பலப்படுத்துவது மட்டுமின்றி, தம்மில் நம்பிக்கை வைப்பவர்களுக்கு உலகம் கொடுக்கமுடியாத பாதுகாப்பு உணர்வையும் கொடுக்கிறார்:

- அவர் நித்தியஜீவனை வாக்குத்தத்தம் செய்கிறார்:

  *"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் **நித்தியஜீவனை** அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்"* (யோவான் 3:16).

- அவர் கவலையையும் அழுத்தத்தையும் அகற்றுகிறார்:

  *"அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான **தேவசமாதானம்** உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்"* (பிலிப்பியர் 4:7).

- அவர் மரண பயத்தை அகற்றுகிறார்:

  *"ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் **விடுதலைபண்ணும்படிக்கும்** அப்படியானார்"* (எபிரெயர் 2:14-15).

- அவர் வருங்காலத்தைக் குறித்து நம்பிக்கையைக் கொடுக்கிறார்:

"ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்" (மத்தேயு 6:34).

- அவர் அனைத்துத் தேவைகளையும் சந்திப்பதாக வாக்குத்தத்தம் செய்கிறார்:

  "என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" (பிலிப்பியர் 4:19).

- அவர் பலவீனருக்கும், ஆதரவற்றவர்களுக்கும், தகப்பனில்லாதவர்களுக்கும் ஆறுதலையும், பாதுகாப்பையும் கொடுக்கிறார்:

  "தம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்திலிருக்கிற தேவன், திக்கற்ற பிள்ளைகளுக்குத் தகப்பனும், விதவைகளுக்கு நியாயம் விசாரிக்கிறவருமாயிருக்கிறார்" (சங்கீதம் 68:5).

  "அந்தப்படி திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்" (ரோமர் 8:15).

நமது பிள்ளைகளுக்குச் சுவிசேஷம் எவ்வளவாகத் தேவைப்படுகிறது! சுவிசேஷத்தின் மூலமாகவும், விசுவாசத்தின்மூலமாகவும் அவர்களுடையவராகும் அற்புதமான இரட்சகரும் நண்பருமானவர் அவர்களுக்கு எவ்வளவாகத் தேவைப்படுகிறார்!

பிள்ளைகளுக்குச் சுவிசேஷம் தேவைப்படுகிறது

இயேசு கிறிஸ்து சிறுவருக்கும் சிறுமியருக்கும் இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஆகும்போது, இந்த ஆசீர்வாதங்கள் அனைத்தும் அவரிடமிருந்து வருகின்றன.

- அவர்கள் அவரில் நம்பிக்கை வைக்கும்போது அவர் அவர்களுடைய ஆண்டவரும் இரட்சகருமாகிறார்.
- அவரைப் பற்றியும், அவர் தங்களுக்காக என்ன செய்திருக்கிறார் என்பதைப் பற்றியும், அவரில் விசுவாசம் வைத்தால் அவர்களுக்காக அவர் என்ன செய்வார் என்பதைப் பற்றியும் அவர்கள் கேள்விப்பட்டால்தான் அவரில் விசுவாசம் வைப்பார்கள்.
- நாம் அவர்களுக்குச் சொல்லாவிட்டால் அவர்களால் கேள்விப்பட முடியாது.

  "ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவன் எவனும் இரட்சிக்கப்படுவான். அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்வார்கள்? அவரைக்குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே. ஆனாலும்

சுவிசேஷத்துக்கு எல்லாரும் கீழ்ப்படியவில்லை. அதைக் குறித்து ஏசாயா: கர்த்தாவே, எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார் என்று சொல்லுகிறான். ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" (ரோமர் 10:13-17).

சிறுவர்களுக்குச் சரீரப்பிரகாரமான, மனோரீதியான மற்றும் சமுதாயத் தேவைகள் இருக்கின்றன. வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் இந்தத் தேவைகளை நிறைவுசெய்ய நாம் முயல வேண்டும். ஆனால் ஆவிக்குரிய தேவைகளே அவர்களுக்கு முக்கியமான தேவைகளாக இருக்கின்றன. நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் போதிப்பதின்மூலமாகவே இந்தத் தேவையை நிறைவுசெய்ய முடியும்.

எனவே நீங்கள் போதிக்கும்படி திட்டமிடும் பிள்ளைகளுக்குச் சுவிசேஷத்தை அறிவிப்பதே உங்கள் முதல் பொறுப்பாக இருக்கிறது. அதாவது, இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை (இயேசுகிறிஸ்து அவர்களுக்கு என்ன செய்திருக்கிறார், அவர்கள் என்னசெய்ய வேண்டுமென்று விரும்புகிறார், அவர்களுக்காகவும், அவர்களிலும் அவர் என்ன செய்வார்) நீங்கள் அவர்களுக்குப் போதிக்க வேண்டும். இந்தச் சுவிசேஷச் செய்திக்குச் செவிசாய்க்கும்படி அவர்களுக்கு அறைகூவல் விடுக்க வேண்டும். இவைகளைக் குறித்து ஆறாம் அத்தியாயத்தில் இன்னும் விரிவாகப் பார்ப்போம்.

அத்தியாயம் 5

அவர்களைப் புரிந்துகொள்ளுங்கள்

சிறுவர்கள் எவ்வாறு சுவிசேஷத்துக்குச் செவிசாய்க்க முடியும் ?

அத்தியாயத்தின் சுருக்கம்

(பிள்ளைகளைப் பற்றி வேதாகமம் என்ன போதிக்கிறது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்).

- **அவர்கள் இரட்சிக்கப்படுவது அவசியமாகும்.** அவர்கள் அனைவரும் ஆவிக்குரிய பிரகாரமாக மரித்துப்போனவர்களாகவும், இழந்துபோனவர்களாகவும், தேவனுடைய ராஜ்யத்துக்கு வெளியேயிருப்பவர்களாகவும் இருக்கிறார்கள்.
- **அவர்கள் இரட்சிக்கப்பட முடியும்.** ஒரு சிறு குழந்தைகூட இயேசுகிறிஸ்துவைத் தனது ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ள முடியும்.
- **அவர்கள் சுவிசேஷத்தைத் திறந்தமனதோடு ஏற்றுக்கொள்கிறார்கள்.** பெரியவர்களைவிடச் சிறுவர்கள் சுவிசேஷத்தைத் திறந்தமனதோடு ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களாக இருக்கிறார்கள்.
- **அவர்களுக்கு முன் வாழ்வதற்கு முழு வாழ்க்கையும் இருக்கிறது.** ஒரு பிள்ளை இரட்சிக்கப்படுவது ஒரு வாழ்க்கையே இரட்சிக்கப்படுகிறது என்று அர்த்தமாகும்.
- முடிவு. நாம் அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும்.

வேதாகமம் சிறுவர்களைக் குறித்தும் அவர்கள் சுவிசேஷத்துக்குச் செவிசாய்ப்பதைக் குறித்தும் நான்கு அடிப்படைச் சத்தியங்களைப் போதிக்கிறது. அவர்களுக்குப் போதிக்கும் நாம் இந்த நான்கு சத்தியங்களையும் புரிந்துகொண்டிருக்க வேண்டும். மனிதரின் கண்ணோட்டம், போதனை, கருத்துக்கள் இவைகளின் அடிப்படையில் நாம் நமது சிறுவருக்கான ஊழியத்தை நடத்தாமல், வேதாகமத்தையே அடிப்படையாகக் கொள்ள வேண்டும்.

பிள்ளைகள் இரட்சிக்கப்படுவது அவசியமாகும்

ஏற்கெனவே, கடந்த அத்தியாயத்தில், சிறுவரும் சிறுமியரும் இயேசு கிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்வது அவசியம் என்று பார்த்தோம். எனவே அவர்கள் சுவிசேஷத்துக்குச் செவிகொடுத்து, விசுவாசத்தில் அதற்குச் செவிசாய்க்க வேண்டும்.

வேதாகமப் போதனை பல உலக மக்கள் மற்றும் "நிபுணர்களின்" (experts) கண்ணோட்டத்துக்கும், சபையிலுள்ள பலருடைய பார்வைக்கும் வேறுபட்டதாக இருக்கிறது:

- அனைத்துப் பிள்ளைகளும் ஒரு பாவமும் அறியாதவர்கள் என்றும், எனவே அவர்கள் இரட்சிக்கப்படுவது அவசியமில்லை என்றும் சிலர் நினைக்கிறார்கள்.
- அனைத்துப் பிள்ளைகளும் பிறப்பிலிருந்தே தேவனுடைய ராஜ்யத்தில் இருக்கிறார்கள் என்று சிலர் நினைக்கிறார்கள்.
- ஞானஸ்நானம் பெற்ற பிள்ளைகள் மறுபடியும் பிறந்திருக்கிறார்கள் என்றும், அவர்களுடைய ஞானஸ்நானத்தின் காரணமாக அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் இருக்கிறார்கள் என்றும் சிலர் கருதுகிறார்கள்.
- சிறுபிள்ளைகள் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து, இரட்சிப்பைப் பெறுவது முடியாத காரியம் என்று சிலர் நினைக்கிறார்கள்.

இந்தக் கண்ணோட்டங்கள் வேதாகமரீதியானவை அல்ல.

சிறுவர்களைக் குறித்தும், அவர்களின் தேவையைக் குறித்தும் வேதாகமம் பல முக்கிய சத்தியங்களைப் போதிக்கிறது:

- **அனைத்துப் பிள்ளைகளும்,** அவர்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து, ஆவிக்குரிய ஜீவனைப் பெற்றுக்கொள்ளும் வரையில் **ஆவிக்குரிய பிரகாரமாக மரித்தவர்களாக இருக்கிறார்கள்.**

  "அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார்" (எபேசியர் 2:1).

  "அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்" (ரோமர் 8:15).

- அனைத்துப் பிள்ளைகளும் பாவ இயல்போடு பிறந்திருக்கிறார்கள்; அவர்கள் வளரும்போது இந்த இயல்பு பாவகரமான செயல்களில் தன்னை வெளிப்படுத்துகிறது.

  "இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" (சங்கீதம் 51:5).

- இயேசுவானவரால் மட்டுமே அவர்களுக்குப் புதிய இயல்பைக் கொடுக்க முடியும்; அது அவருக்குப் பிரியமான வாழ்க்கை வாழ அவர்களுக்கு உதவும்.

  "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2 கொரிந்தியர் 5:17).

- அனைத்துப் பிள்ளைகளும் மறுபடியும் பிறக்கும் வரையில், **தேவனுடைய ராஜ்யத்துக்கு வெளியே இருக்கிறார்கள்:**

  "இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால்

தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்" (யோவான் 3:3).

► இயேசுகிறிஸ்துவைப் புறக்கணிக்கும் அளவுக்கு வயதுவந்த சிறுவர்கள் அனைவரும் அவர்கள் கிறிஸ்துவை விசுவாசித்து, இரட்சிக்கப்படும் வரையில் தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்பின் கீழாக இருக்கிறார்கள்.

"குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" (யோவான் 3:36).

► கணக்குக்கொடுக்கக் கூடிய பருவத்தை எட்டாத சிறுவர்களும், பாவம் என்றால் என்ன, இரட்சிக்கப்படுவதற்குத் தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பவைகளைப் புரிந்துகொள்ள முடியாத பருவத்தில் இருப்பவர்களும் ஆவிக்குரியபிரகாரமாக மரித்தவர்களாக, தேவனுடைய ராஜ்யத்துக்கு வெளியே இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இதே பருவத்தில் மரித்துப் போவார்களானால், அவர்கள் வேண்டுமென்றே தேவனையும் அவருடைய வெளிப்பாட்டையும் புறக்கணிக்காதபடியால், நித்தியமாக இழந்துபோக மாட்டார்கள்.

"அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று. ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத்தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது" (யோவான் 3;18, 19).

► ஆனால் கணக்குக்கொடுக்கக் கூடிய வயது எது என்பதை நாம் அறியமாட்டோம். அது பதின்மூன்று பதினான்கு வயதுக்கு நீண்ட காலத்துக்கு முன்பே வருவதாக இருக்கலாம்; பிள்ளைக்குப் பிள்ளை அது மாறுபடலாம். ஒரு பிள்ளை அந்தப் பருவத்தை எட்டியிருக்கிறதா, இல்லையா என்பதைக் கண்டறிவது நமது வேலையல்ல. அது தேவனுடைய கரங்களில் இருக்கிறது. நம்மைப் பொருத்த வரையில் எல்லாப் பிள்ளைகளும் இழந்துபோனவர்களாக, தேவனுடைய ராஜ்யத்துக்கு வெளியே இருக்கிறார்கள்; அவர்கள் சுவிசேஷத்தைக் கேட்க வேண்டும். அவர்கள் அனைவருக்கும் சுவிசேஷத்தை அறிவிப்பது நமது பொறுப்பாகும்.

"பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற்கு 16:15).

பிள்ளைகள் இரட்சிக்கப்பட முடியும்

பிள்ளைகள் இயேசுகிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டு, இரட்சிக்கப்பட முடியும் என்று வேதாகமம் போதிக்கிறது.

இது ஆசிரியர்களாகிய நாம் புரிந்துகொண்டு, விசுவாசிக்க வேண்டிய அற்புதமான சத்தியமாகும். பிள்ளைகள் கிறிஸ்துவை விசுவாசிப்பதற்கு முன்பாகத் தாங்கள் பெரியவர்களாகவோ அல்லது இளம்வாலிபர்களாகவோ ஆகும்வரையில் காத்திருக்க வேண்டியதில்லை.

- **சிறுபிள்ளைகள் மனமாற்றம் அடைய முடியும் என்று வேத வசனங்கள் நமக்குக் காட்டுகின்றன.**

  ✓ ஒரு *சிறு* பிள்ளை இயேசுகிறிஸ்துவின்மீது நம்பிக்கை வைக்க முடியும் அல்லது அவரை விசுவாசிக்க முடியும்.

  "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் ஏந்திரக் கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்தில் அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்" (மத்தேயு 18:6).

  ✓ ஒரு சிறு பிள்ளை தேவன்மீது தனது நம்பிக்கையை வைக்க முடியும்.

  "இனிப் பிறக்கும் பிள்ளைகளாகிய பின்சந்ததியார் அதை அறிந்துகொண்டு, அவர்கள் எழும்பித் தங்கள் பிள்ளைகளுக்கு அவைகளைச் சொல்லும்படிக்கும்; தேவன்மேல் அவர்கள் தங்கள் நம்பிக்கையை வைத்து, தேவனுடைய செயல்களை மறவாமல், அவர் கற்பனைகளைக் கைக்கொள்ளும்படிக்கும்" (சங்கீதம் 78:6, 7).

  ✓ ஒரு சிறு பிள்ளையால் தேவனுக்குப் பயப்பட முடியும்.

  "அதை அறியாத அவர்கள் பிள்ளைகளும் கேட்டு, நீங்கள் யோர்தானைக் கடந்து சுதந்தரிக்கப் போகிற தேசத்தில் உயிரோடிருக்கும் நாளெல்லாம், உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பயப்படக் கற்றுக்கொள்ளும்படிக்கும் ஜனத்தைக் கூட்டி, அதை வாசிக்க வேண்டும்" (உபாகமம் 31:12).

  ✓ யோவான் 3:16 வசனத்திலுள்ள "எவனோ" என்ற சொல்லிலும், இதைப் போன்ற மற்ற வசனங்களிலும் சிறுபிள்ளைகளும் உள்ளடங்கியிருக்கிறார்கள் - ஆனால் அவர்கள் அவரைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும்.

  "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவான் 3:16).

  வேறெந்தத் தகுதியும் தேவைப்படவில்லை. ஒரு சிறுபிள்ளை

இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக ஒரு குறிப்பிட்ட வயதை எட்டியிருக்க வேண்டும் என்று வேதாகமம் கூறவில்லை.

✓ ஒரு சிறு பிள்ளையால் தேவனுடைய சத்தத்தைக் கேட்டு அதற்குச் செவி சாய்க்க முடியும்.

"அப்பொழுது கர்த்தர் வந்து நின்று, முன்போல: சாமுவேலே சாமுவேலே என்று கூப்பிட்டார்; அதற்குச் சாமுவேல்: சொல்லும்; அடியேன் கேட்கிறேன் என்றான்" (1 சாமுவேல் 3:10).

➤ **சிறுபிள்ளைகள் கிறிஸ்துவை விசுவாசிக்க முடியும் என்று அனுபவம் நமக்குக் காட்டுகிறது.**

✓ பல புகழ்பெற்ற கிறிஸ்தவர்கள் தாங்கள் சிறுபிள்ளைகளாக இருந்தபோதே கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

✓ இந்தப் புத்தகத்தை வாசிக்கும் பலரும்கூடத் தாங்கள் சிறுவயதிலேயே இரட்சிக்கப்பட்டதற்குச் சாட்சிகூற முடியும் என்று நம்புகிறேன்.

✓ என்னைப் போலவே உங்களில் பலரும் சிறுபிள்ளைகள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, ஆவிக்குரியபிரகாரமாக வளர்ச்சிபெறுவதைக் கண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

➤ **பல கிறிஸ்தவ தலைவர்கள் சிறுபிள்ளைகள் இரட்சிக்கப்பட முடியும் என்ற தங்கள் தெளிவான உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.**

இங்கிலாந்து நாட்டின் புகழ்பெற்ற போதகரும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் புகழ்பெற்ற பிரசங்கியாருமான சார்ல்ஸ் ஸ்பர்ஜன் இதை வெளிப்படுத்தியிருக்கிறார். எடுத்துக்காட்டாக:

"எங்கள் ஞாயிறுபள்ளியில் சிறுபிள்ளைகள் சிறுபிள்ளைகளாகவே இரட்சிக்கப்பட முடியும் என்று நாங்கள் விசுவாசிப்பதற்காக நான் தேவனுக்கு நன்றி கூறுகிறேன். சிறுவர் சிறுமியர் முன்னால் வந்து கிறிஸ்துவில் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிடுவதை நான் எத்தனை முறை கண்டிருக்கிறேன்! இதுவரை மனமாற்றம் பெற்றிருப்பவர்களில் சிறுபிள்ளைகளே சிறப்பானவர்களாகவும், மிகவும் தெளிவானவர்களாகவும், புத்திசாலித்தனமானவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதை என்னால் கூற முடியும்."

"சிறுபிள்ளைகள் இரட்சிக்கப்பட முடியும் என்ற கருத்தை நான் கொண்டிருக்கிறேன். தமது தெய்வீக ராஜரீகத்தில் நரைமயிர் கொண்ட ஒருவரை அவருடைய தவறான வழிகளிலிருந்து மீட்டுக்கொள்ளக்கூடிய தேவன் சிறுபிள்ளையையும் அதன் இளவயதுத் தவறுகளிலிருந்து மீட்கக் கூடியவராக இருக்கிறார்."

எந்த வயதில் ஒரு சிறுபிள்ளை கிறிஸ்துவை விசுவாசிக்க மனமாற்றம் பெற முடியும்?" என்ற கேள்வியைப் பலரும் கேட்கலாம்.

''நமக்குத் தெரியாது'' என்பதே இதற்குரிய பதிலாகும். வேதாகமம் ஒரு குறிப்பிட்ட வயதைக் குறிப்பிடவில்லை. சிறுபிள்ளைகள் ஒருவருக்கொருவர் வேறுபட்டவர்களாக இருக்கிறார்கள். சிலரால் மற்றவர்களைவிட இளம் வயதிலேயே கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள முடிகிறது. சிறுவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்கு ஒரு வயதை நிர்ணயம்செய்யும் தவறை நாம் செய்துவிடக் கூடாது. கண்டிப்பாக பதின்மூன்று அல்லது பதினான்கு வயதையொட்டி நிர்ணயம் செய்யக்கூடாது. இந்த வயதுக்கு நீண்ட காலத்துக்கு முன்பாகவே சிறுபிள்ளைகளால் ஆண்டவராகிய இயேசுவை விசுவாசிக்க முடியும் (பரிசுத்த ஆவியானவர் அப்படிச் செய்யும்படி அவர்களைப் பலப்படுத்தும்போது).

மத்தேயு 18:6 வசனத்தில் ஆண்டவராகிய இயேசு *''என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில்''* என்று குறிப்பிடுகிறார். இதைச் சொல்லும்போது அவர் கையில் ஒரு சிறு குழந்தை இருந்தது என்ற உண்மையை வைத்துப் பார்க்கும்போது, அவர் சிறுபிள்ளைகளைக் குறித்தே இதைச் சொல்லுகிறார் என்பது தெளிவாகிறது. சிறுபிள்ளைகள் இரட்சிக்கப்பட முடியும் என்பதை நாம் அறிகிறோம். சிறுபிள்ளைகளுக்குச் சுவிசேஷம் அறிவிக்கும் எனது சொந்த அனுபவத்தைக் கொண்டு, ஏழுக்கும் பதினொன்றுக்கும் இடைப்பட்ட வயதினரான பல பிள்ளைகள் கிறிஸ்துவை விசுவாசிக்க ஆயத்தமாகவும், இயலக் கூடிய வகையிலும் இருப்பதைக் கண்டிருக்கிறேன். இதற்காக ஏழு வயதுக்குக் கீழானவர்களால் விசுவாசிக்க முடியாது என்று அர்த்தமல்ல; அவர்களிலும் பலரால் விசுவாசிக்க முடிகிறது. அதேவேளையில் பதினொரு வயதுக்கு மேற்பட்டவர்கள் விசுவாசிக்க விரும்புவதில்லை என்றும் அர்த்தம் கிடையாது. அவர்களிலும் பலர் விருப்பமுடையவர்களாக இருக்கிறார்கள். ஆனாலும் ஏழுக்கும் பதினொன்றுக்கும் இடைப்பட்ட வயதினர் அதிகமான புரிந்துகொள்ளுதலையும் செவிசாய்ப்பையும் கொண்ட திறந்த மனதுடையவர்களாக இருக்கிறார்கள் என்று என்னால் கூற முடியும்.

பாவம் என்பது என்ன என்பதை அறியும் வயதை ஒரு பிள்ளை எட்டும்போது, அதைக் குறித்து உணர்த்தப்படும் வயதை எட்டும்போது, அதிலிருந்து திரும்ப விரும்பும் வயதை எட்டும்போது, இயேசுகிறிஸ்து தனக்காகச் சிலுவையில் மரித்தார் என்பதை அறிந்துகொள்ளும் வயதை எட்டும்போது, தனது எளிய சிறுபிள்ளைக்குரிய விசுவாசத்தோடு இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் வயதை எட்டும்போது, அந்தப் பிள்ளை இரட்சிக்கப்படும் வயதை எட்டிவிட்டது என்று கூறலாம். எல்லாவற்றுக்கும் மேலாக, இரட்சிப்பு பரிசுத்த ஆவியானவரின் கிரியை என்பதை மறந்துவிடாதீர்கள்.

''எந்த வயதிலிருந்து சிறுவர்கள் கிறிஸ்துவைக் குறித்த அறிவை ஏற்றுக்கொள்ள முடியும் என்பதை என்னால் கூற முடியாவிட்டாலும், பலரும் நினைப்பதைவிட இன்னும் இளவயதிலேயே அவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறார்கள். மிகச் சிறு வயதிலேயே கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவரில் விசுவாசம் வைத்துள்ளதற்கு நிரூபணங்களைக் காட்டியுள்ள பல சிறுவர்களை நாங்கள் கண்டும், கேட்டும் இருக்கிறோம்'' என்று சார்ல்ஸ் ஸ்பர்ஜன் எழுதியிருக்கிறார்.

பிள்ளைகள் திறந்த மனதோடு சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்கிறார்கள்

சிறுவர்களைக் குறித்தும் அவர்களுடைய செவிசாய்ப்பைக் குறித்தும் மற்றொரு பெரிய சத்தியத்தையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். சிறுவர்கள் திறந்த மனதோடு சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்கிறார்கள்; இது சிறுவருக்கான ஊழியத்தை அதிகக் கனிகொடுப்பதாகவும், அனுபவிக்கக் கூடியதாகவும் ஆக்குகிறது.

➤ பெரியவர்கள் தாங்கள் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாகச் சிறு பிள்ளைகளைப் போல ஆகவேண்டுமென்று வேதாகமம் போதிக்கிறது. அவர்கள் சிறுபிள்ளைகளைப் போல எளியவர்களாகவும், நம்பக்கூடியவர்களாகவும், சார்ந்திருப்பவர்களாகவும், தாழ்மையுள்ளவர்களாகவும் மாற வேண்டும்.

"நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்தேயு 18:3).

"எவனாகிலும் சிறு பிள்ளையைப் போல் தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவன் அதில் பிரவேசிப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மாற்கு 10:15).

ஆனால் சிறுபிள்ளை ஏற்கெனவே சிறுபிள்ளையாகவே இருக்கிறான். அவன் ஏற்கெனவே எளியவனாகவும், நம்பக்கூடியவனாகவும், சார்ந்திருப்பவனாகவும், தாழ்மையுடையவனாகவும் இருக்கிறான். தேவன் இந்தச் சிறுபிள்ளைக்குரிய குணாதிசயங்களை ஆசீர்வதித்து, பயன்படுத்தி, அவர்களைக் கிறிஸ்துவை நோக்கித் திருப்புகிறார்.

➤ இருதயங்கள் உண்மையில் கடினமாகவும், எதிர்த்து நிற்பவையாகவும் மாறுவதற்கு முன்பாகக் கிறிஸ்துவை விசுவாசிப்பதற்குச் சிறுபிள்ளைப் பருவமே சிறந்த பருவம் என்று வேதாகமம் போதிக்கிறது.

"இனிப் பிறக்கும் பிள்ளைகளாகிய பின்சந்ததியார் அதை அறிந்துகொண்டு, அவர்கள் எழும்பித் தங்கள் பிள்ளைகளுக்கு அவைகளைச் சொல்லும்படிக்கும்; தேவன்மேல் அவர்கள் தங்கள் நம்பிக்கையை வைத்து, தேவனுடைய செயல்களை மறவாமல், அவர் கற்பனைகளைக் கைக்கொள்ளும்படிக்கும்; இருதயத்தைச் செவ்வைப்படுத்தாமலும், தேவனை உறுதியாய்ப் பற்றிக்கொள்ளாமலும் இருந்த முரட்டாட்டமும் கலகமுமுள்ள சந்ததியாகிய தங்கள் பிதாக்களுக்கு அவர்கள் ஒப்பாகாதபடிக்கும், இவைகளைக் கட்டளையிட்டார்" (சங்கீதம் 78:6, 7,8).

"நீ உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை; தீங்கு நாட்கள் வராததற்கு முன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்கு முன்னும் ... அவரை உன் வாலிபப் பிராயத்திலே நினை" (பிரசங்கி 12:1).

- பெரும்பாலான மக்கள் தங்கள் பிள்ளைப் பருவத்திலோ அல்லது இளம் வாலிபப் பருவத்திலோ இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், வயது அதி கரிக்க அதிகரிக்க அவர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கும் வாய்ப்பு குறைந்து போகிறது என்றும் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.
- பெரியவர்களைவிடச் சிறுபிள்ளைகள் நமது போதனைகளைத் திறந்த மன தோடு கேட்டுச் செவிசாய்க்கிறார்கள் என்பதைச் சிறுவர்களோடு ஊழியம் செய்யும் அனுபவத்தின்மூலம் தெரிந்துகொள்கிறோம்; இவர்கள் இளம்வாலி பர்களைவிடவும் திறந்த மனதோடு கேட்டுச் செவிசாய்க்கிறார்கள். எனவே தான் சிறுபிள்ளைகளுக்குச் சுவிசேஷத்தை அறிவிப்பது அதிக அர்த்தமுள்ள காரியமாக இருக்கிறது. அவர்கள் ஆர்வத்தை இழந்து, இருதயக் கடினப் படும் வரையில் ஏன் சுவிசேஷத்தை அறிவிக்கக் காத்திருக்க வேண்டும்?

  மேலும் சிறுபிள்ளைகளின்மீது அதிகமான கருத்துக்கள் திணிக்கப்பட்டிராதபடி யால், அவர்கள் அதிகமான கருத்துக்களை ஏற்றுக்கொண்டிராதபடியால், அவர் கள் புதிய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களாக இருக்கிறார்கள். எனவே அவர்கள் இதற்குள்ளாகத் திட்டவட்டமான ஒரு நம்பிக்கைகளின் கட்டுக்கோப்பைப் பெற்றிருக்கவில்லை.

ஆனால் இரண்டு எச்சரிப்புகளை நான் கொடுத்தேயாக வேண்டும்:

- சிறுபிள்ளைகள் சுவிசேஷத்தைத் திறந்த மனதோடு ஏற்றுக்கொள்வது மட்டு மல்லாமல், எல்லாவற்றையும் அப்படியே ஏற்றுக்கொள்கிறார்கள். இது அவர் களுடைய இயல்பாகும். எனவேதான் அவர்களுக்குப் போதிப்பதில் நாம் முந் திக்கொள்ள வேண்டும்! காலம் தாழ்த்தாதிருங்கள்! இப்போதே அவர்களிடம் செல்லுங்கள்! நாம் அவர்களை எட்டிச் சேராவிட்டால் வேறு எவரேனும் சேர்ந்து விடுவார்கள்.
- பிள்ளைகள் நமது போதனையையும், சுவிசேஷத்தையும் திறந்த மனதோடு ஏற்றுக்கொள்கிறார்கள் மற்றும் அவர்களில் தாக்கம் விளைவிக்க முடியும் என்பது நமக்குப் பெரிய சிலாக்கியமாக இருக்கிறது. இதற்காக நாம் நன்றி யுள்ளவர்களாக இருக்க வேண்டும். அதே வேளையில் நாம் இந்த அற்புத மான பண்புகளைத் தவறாகப் பயன்படுத்திக்கொள்ளாதவாறு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சிறுபிள்ளைகள் திறந்தமனதோடு இருக்கிறபடியால், அவர் களில் தாக்கம் விளைவிப்பதும், "தீர்மானம் எடுக்கும்படி கூறுவதும்" எளி தாக இருக்கிறது; ஆனால் இது பரிசுத்த ஆவியானவரின் கிரியையின் விளைவு அல்ல, நமது அழுத்தங்களின் விளைவாகவே இருக்கிறது. எனவே கவனமாக இருங்கள்! இதைத் தவறாகப் பயன்படுத்தாதிருங்கள். நாம் எதிர் பார்க்கும் திறந்த மனம் உள்ளுக்குள் பரிசுத்த ஆவியானவர் கிரியைசெய்வ தினாலேயே ஏற்படுகிறது. நாமே இதை விளைவிக்க முயற்சிக்கக் கூடாது.

சிறுபிள்ளைகள் வாழ்வதற்கு முழு வாழ்க்கையையும் பெற்றிருக்கிறார்கள்

இரட்சிக்கப்பட்ட பிள்ளை என்பது ஒரு ஆத்துமா இரட்சிக்கப்பட்டிருப்பது மட்டுமல்ல, ஒரு வாழ்க்கையே இரட்சிக்கப்பட்டிருக்கிறது.

"தன் இளம்பிராயத்தில் நுகத்தைச் சுமக்கிறது மனுஷனுக்கு நல்லது" (புலம்பல் 3:27).

புகழ்பெற்ற அமெரிக்க நற்செய்தியாளரான டி. எல். மூடியிடம் ஒருவர் அவருடைய நற்செய்திக் கூட்டம் ஒன்றில் எத்தனை பேர் இரட்சிக்கப்பட்டார்கள் என்று கேட்டார். "இரண்டரை" என்று மூடி பதிலளித்தார். "ஓகோ, இரண்டு பெரியவர்களும் ஒரு சிறுபிள்ளையுமா?" என்று வந்தவர் கேட்டார். "இல்லை. இரண்டு சிறுபிள்ளைகளும் ஒரு பெரியவரும்" என்று மூடி பதிலளித்தார்.

மூன்று ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டிருந்தாலும், இரண்டரை வாழ்க்கைகள் மட்டுமே இரட்சிக்கப்பட்டிருக்கின்றன. பெரியவருக்குக் கிறிஸ்துவுக்காக வாழ இன்னும் பாதி வாழ்க்கையே எஞ்சியிருக்கிறது. பிள்ளைகள் அவருக்காக வாழக் கிடைத்தட்ட தங்கள் முழு வாழ்க்கையையும் பெற்றிருக்கிறார்கள்.

டச்சு அருட்பணியாளரும் நற்செய்தியாளருமான கோரி டென் பூம் தனது ஐந்தாவது வயதில் இரட்சிக்கப்பட்டார்; அவர் எண்பத்தைந்து வயதுவரை வாழ்ந்தார். அவர் இயேசுவுக்காக எண்பது வருடங்கள் வாழ்ந்திருக்கிறார்!

சிறுவருக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும் நாம் ஆத்துமாக்களில் மட்டுமே ஆர்வம்கொண்டிருக்கவில்லை. வாழ வேண்டிய வாழ்க்கையிலும் நாம் ஆர்வம் கொண்டிருக்கிறோம். ஒருவர் எவ்வளவு சிறுவயதில் கிறிஸ்துவுக்குள் வருகிறாரோ அவ்வளவாக நல்லது என்று நாம் நம்புகிறோம்.

நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? எழுபது வயதிலா, ஏழு வயதிலா, எந்த வயதில் கிறிஸ்துவை விசுவாசிப்பது நலமானது?

பவுல் தீமோத்தேயுவுக்கு இவ்வாறு எழுதியிருக்கிறார்:

"கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும்" (2 தீமோத்தேயு 3:15).

முடிவுரை

சிறுவர்களைக் குறித்தும், சுவிசேஷத்துக்கு அவர்கள் செவிசாய்ப்பது மற்றும் அதற்கான தேவை குறித்தும் நான்கு வேதாகம சத்தியங்களை நாம் அறிந்துகொண்டிருக்கிறோம்.

- சிறுபிள்ளைகள் இரட்சிக்கப்பட வேண்டும்.
- சிறுபிள்ளைகள் இரட்சிக்கப்பட முடியும்.
- சிறுபிள்ளைகள் சுவிசேஷத்தையும் இரட்சிப்பையும் திறந்த மனதோடு ஏற்றுக்கொள்கிறார்கள்.

➤ சிறுபிள்ளைகள் இரட்சிக்கப்படுவது நலமானதாகும்.

அவர்கள் சுவிசேஷம் மற்றும் தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்கப்படுவதின் மூலமாக மட்டுமே இரட்சிக்கப்படுகிறார்கள் என்பதையும் நாம் அறிந்து கொள்கிறோம்.

"கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது" (ரோமர் 1:16).

"பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற்கு 16:15).

"அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே" (ரோமர் 10:15).

எனவே, நாம் **சிறுபிள்ளைகளுக்குச் சுவிசேஷத்தை அறிவிப்போமாக!**

பின்பற்றப்பட வேண்டிய வேதாகம ஒழுங்குமுறை
சங்கீதம் 78:1-8

1. **சங்கீதக்காரனால் கொடுக்கப்பட்ட வாக்கு**

"பின்வரும் சந்ததியான பிள்ளைகளுக்கு நாங்கள் அவைகளை மறைக்காமல் கர்த்தரின் துதிகளையும் அவருடைய பலத்தையும், அவர் செய்த அவருடைய அதிசயங்களையும் விவரிப்போம்" (சங்கீதம் 78:4).

2. **சங்கீதக்காரன் கீழ்ப்படிந்த கட்டளை**

"அவர் யாக்கோபிலே சாட்சியை ஏற்படுத்தி, இஸ்ரவேலிலே வேதத்தை ஸ்தாபித்து, அவைகளைத் தங்கள் பிள்ளைகளுக்கு அறிவிக்கும்படி நம்முடைய பிதாக்களுக்குக் கட்டளையிட்டார். இனிப் பிறக்கும் பிள்ளைகளாகிய பின்சந்ததியார் அதை அறிந்துகொண்டு, அவர்கள் எழும்பித் தங்கள் பிள்ளைகளுக்கு அவைகளைச் சொல்லும்படிக்கும்" (சங்கீதம் 78:5-6).

3. **சங்கீதக்காரனால் நிறுவப்பட்ட நோக்கம்**

"தேவன்மேல் அவர்கள் தங்கள் நம்பிக்கையை வைத்து, தேவனுடைய செயல்களை மறவாமல், அவர் கற்பனைகளைக் கைக்கொள்ளும்படிக்கும்" (சங்கீதம் 78:7).

4. **சங்கீதக்காரன் கண்ட வாய்ப்பு**

"இருதயத்தைச் செவ்வைப்படுத்தாமலும், தேவனை உறுதியாய்ப் பற்றிக்கொள்ளாமலும் இருந்த முரட்டாட்டமும் கலகமுமுள்ள சந்ததியாகிய தங்கள் பிதாக்களுக்கு அவர்கள் ஒப்பாகாதபடிக்கும், இவைகளைக் கட்டளையிட்டார்" (சங்கீதம் 78:8).

அத்தியாயம் 6

அவர்களை எட்டிச் சேருங்கள்

நான் சிறுவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டுமா ?

அத்தியாயத்தின் சுருக்கம்

(சிறுவருக்குச் சுவிசேஷம் அறிவிப்பது குறித்த ஐந்து சத்தியங்களை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்).

- **இரண்டு குழுவினரான சிறுவர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு** பிள்ளையும் இரண்டு வகைகளில் ஒன்றைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும் - இரட்சிக்கப்பட்டவர்கள் மற்றும் இரட்சிக்கப்படாதவர்கள்.
- **எனவே நீங்கள் இரண்டு ஊழியங்களைப் பெற்றிருக்கிறீர்கள்.** நீங்கள் இரட்சிக்கப்படாத பிள்ளைகளுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும். இரட்சிக்கப்பட்ட பிள்ளைகள் வளர்ச்சிபெறுவதற்கு உதவ வேண்டும்.
- **சுவிசேஷத்தின் செய்தி என்ன என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.** சுவிசேஷச் செய்தியில் ஐந்து சத்தியங்களின் தொகுப்பு காணப்படுகிறது.
- **சுவிசேஷம் வல்லமையைப் பெற்றிருக்கிறது என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும்.** நற்செய்திப் பணியில் வல்லமை செய்திகொடுப்பவரில் இல்லை, செய்தியிலேயே இருக்கிறது.
- **நீங்கள் பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்திருக்க வேண்டும்.** பரிசுத்த ஆவியானவராகிய தேவனே நிலைத்திருக்கும் கிரியையைச் செய்கிறார்.

நமது கடந்த அத்தியாயங்களின் பாடங்களிலிருந்து இரண்டு வகைப்பட்ட சிறுவர்கள் இருக்கிறார்கள் என்பதைத் தெளிவாகப் புரிந்துகொண்டிருப்பீர்கள். எந்தவொரு கூட்டத்துக்கும் வரும் சிறுவர்கள் இந்த இரண்டில் ஒரு வகைப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள்.

இரண்டு குழுவினரான சிறுவர்கள் இருக்கிறார்கள்

இரண்டு குழுவினரான சிறுவர்கள் இருக்கிறார்கள் என்று வேதாகமம் போதிக்கிறது:

- முதலாவதாக, **இயேசு கிறிஸ்துவைத் தங்கள் ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ளாத சிறுவர்கள் இருக்கிறார்கள்.**

  இவர்கள் ஆவிக்குரிய பிரகாரமாக மரித்தவர்களாகவும் (எபேசியர் 2:1), ஆவிக்குரியரீதியாகப் பார்வையற்றவர்களாகவும் (2 கொரிந்தியர் 4:4),

பாவத்தின் ஆளுகை மற்றும் சக்தியின் கீழ் இருப்பவர்களாகவும் (ரோமர் 6:17) காணப்படுகிறார்கள். அவர்கள் கணக்குக்கொடுக்கக்கூடிய, பொறுப்பேற்கக் கூடிய மற்றும் புரிந்துகொள்ளும் பருவத்தை எட்டி விட்டிருந்தார்களானால், அவர்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்காவிட்டால், தேவனுக்கு முன்பாகக் குற்றமுள்ளவர்களாக இருக்கிறார்கள் (ரோமர் 3:19). இந்த நிலையிலேயே இவர்கள் மரித்துப் போவார்களானால், நித்தியமாக இழந்து போவார்கள் (யோவான் 3:36).

இந்தச் சிறுவர்கள் இயேசுகிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்வதும், அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிப்பதும் அவசியமாக இருக்கிறது (மாற்கு 16:15).

- **இரண்டாவதாக, இயேசுகிறிஸ்துவைத் தங்கள் ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டிருக்கும் சிறுவர்கள் இருக்கிறார்கள்.**

தேவன் அவர்களுக்கு ஆவிக்குரிய ஜீவனையும் (யோவான் 6:47); ஆவிக்குரிய பார்வையையும் (அப். 26:18), பாவ மன்னிப்பையும் (எபேசியர் 1:7), உள்ளே வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவரையும் (அப். 2:38), நித்திய ஜீவனையும் (யோவான் 3:16) அருளியிருக்கிறார். இதே வேளையில் தேவன் அவர்களை மாற்றியிருக்கிறார் (2 கொரிந்தியர் 5:17). அவர்களின் வாழ்க்கையில் பாவத்தின் சக்தியை முறித்துப் போட்டிருக்கிறார் (ரோமர் 6:18).

இந்தச் சிறுவர்களுக்கு ஆவிக்குரிய ஜீவன் தேவைப்படவில்லை; ஏற்கெனவே அவர்கள் அதைப் பெற்றிருக்கிறார்கள். இவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கத் தேவையில்லை. இவர்கள் ஆவிக்குரிய பிரகாரமாக வளர்ச்சியைப் பெறுவதற்கு இவர்களுக்கு ஆவிக்குரிய ஆகாரம் தேவைப்படுகிறது (1 பேதுரு 2:2; 2 பேதுரு 3:18).

உங்களுக்கு இரண்டு ஊழியங்கள் உள்ளன

எனவே, மேலே கூறப்பட்டுள்ளவைகளிலிருந்து நீங்கள் சிறுவருக்கான இரண்டு வெவ்வேறான ஆனால் தொடர்புடைய ஊழியங்களைச் செய்யவேண்டும் என்பது தெளிவாகிறது:

- உங்களுடைய முதல் ஊழியம் இரட்சிக்கப்படாத சிறுவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிப்பதாகும். மீன்பிடிப்பவராக இருக்கும்படி தேவன் உங்களை அழைத்திருக்கிறார்:

"என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார்" (மாற்கு 4:19).

உங்களுடைய அடிப்படைப் பொறுப்பு ஒரு நற்செய்தியாளராகச் செயல்படுவதாகும். இரட்சிக்கப்படாத பிள்ளைகள் இயேசுகிறிஸ்துவைத் தங்கள்

ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ளும்படி, தொடர்ந்து அவர்களுக்குப் போதித்து, உங்கள் போதனைகளைச் செயல்பூர்வமாக்கி, அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

➤ உங்களுடைய இரண்டாவது ஊழியம் இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளுக்குப் போஷாக்களிப்பதாகும். ஒரு மேய்ப்பனாக இருக்கும்படியும் தேவன் உங்களை அழைத்திருக்கிறார்.

"என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக" (யோவான் 21:15).

"மந்தையின் ஆட்டுக்குட்டிகளை" நீங்கள் புறக்கணித்துவிடக் கூடாது. நீங்கள் அவர்களுக்குப் போஷாக்களிக்காவிட்டால் அவர்களால் வளர்ச்சிபெற முடியாது.

இதன்காரணமாக, நீங்கள் அவர்கள் ஆவிக்குரிய வளர்ச்சியைப் பெற உதவும்படியாக அவர்களுக்குப் போதித்து, அந்தப் போதனைகளைச் செயல்பூர்வமாக்க வேண்டும்.

சுவிசேஷத்தைப் புரிந்துகொள்ளுங்கள்

எனவே இரட்சிக்கப்படாதவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிப்பதே உங்கள் முதல் பணியாகவும், பொறுப்பாகவும் இருக்கிறது. அடுத்து சில அதிகாரங்களில் இந்தப் பொறுப்பைக் குறித்து நாம் பார்ப்போம்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து *"சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்"* என்று தமது சீஷர்களாகிய நமக்குக் கட்டளையிட்டிருக்கிறார் (மாற்கு 16:15). இது சிறுவர்களையும் உள்ளடக்கியதாகும்.

ஆனால் சிறுவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும் என்ற கட்டளைக்குக் கீழ்ப்படிவதற்கு முன்பாக, நாம் சுவிசேஷம் என்றால் என்ன என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். நாம் அறிந்து புரிந்துகொள்ளாத ஒன்றை நம்மால் பிரசங்கிக்கவோ அல்லது போதிக்கவோ முடியாது.

சுவிசேஷத்தை அறிவிப்பது என்பது வேதாகம சத்தியத்தின் ஐந்து அம்சங்களைக் கூடுமான வரையில் அறிவிப்பதாகும்.

➤ ***இரட்சிப்பின் ஆதாரமான - தேவனைப் பற்றிப் போதியுங்கள்.***

நாம் தேவனுடைய இயல்பைக் குறித்து (அவர் யார், அவர் எப்படிப்பட்டவர்) போதிக்க வேண்டும். தேவனைத் தெளிவாக அறிந்துகொள்வதினாலேயே பாவத்தைக் குறித்தும் இரட்சிப்பின் தேவையைக் குறித்தும் நாம் உணர்ந்துகொள்கிறோம்.

நாம் இவைகளை வலியுறுத்த வேண்டும்:

✓ தேவனே சிருஷ்டிகர் (அப். 17:23-29).

எனவே பிள்ளைகள் அவரைக் குறித்துப் பொறுப்புள்ளவர்களாக இருக்கிறார்கள்.

✓ தேவன் வேதாகமத்தின்மூலமாக மனிதரோடு பேசியிருக்கிறார் (1 கொரிந்தியர் 15:3, 4).

எனவே பிள்ளைகள் தேவனுடைய வார்த்தைக்குச் செவிகொடுக்க வேண்டும்.

✓ தேவன் பரிசுத்தராகவும் நீதியுள்ளவராகவும் இருக்கிறார் (அப். 17:31).

எனவே அவர் பாவத்தை நியாயந்தீர்க்க வேண்டியிருக்கிறது.

✓ தேவன் நல்லவராகவும், கிருபையுள்ளவராகவும், அன்பானவராகவும், இரக்கமுள்ளவராகவும் இருக்கிறார் (யோவான் 3:16).

எனவே, பிள்ளைகளின் தேவைகுறித்த பதிலை அவர் அளித்திருக்கிறார்.

தேவனுடைய பரிசுத்தம் இரட்சிப்பை அத்தியாவசியமானதாக ஆக்குகிறது; தேவனுடைய அன்பு இரட்சிப்பைச் சாத்தியமாக்குகிறது. நாம் எப்போதுமே வேதாகமச் சமநிலையோடு இந்தச் சத்தியங்களைப் போதிக்க வேண்டும்.

➤ **பாவத்தையும் - இரட்சிப்பின் தேவையையும் குறித்துப் போதியுங்கள்.**

✓ மனித இருதயத்தின் பாவகரமான நிலையைக் குறித்து நாம் போதிக்க வேண்டும்.

✓ பாவம் என்றால் என்ன என்று நாம் விளக்க வேண்டும்; பரிசுத்த தேவனுக்கு முன்னால் அனைவரும் பாவிகளாக இருக்கிறார்கள்.

✓ பாவத்தின் பின்விளைவுகளைப் பற்றி நாம் போதிக்க வேண்டும்.

✓ நாம் இவைகளை வலியுறுத்த வேண்டும்:

- பாவம் தேவனுக்கு விரோதமானதாகும் (சங்கீதம் 51:4). அது அவருடைய நியாயப்பிரமாணத்தை மீறுவதாகும் (1 யோவான் 3:4).
- அனைவரும் இயல்பிலும் (எபேசியர் 2:3), செயலிலும் (ரோமர் 3:23) பாவிகளாக இருக்கிறார்கள்.
- பாவம் தண்டனைக்கும் தேவனிடமிருந்து நிரந்தரமாகப் பிரிக்கப்படுவதற்குமே தகுதியாகிறது (ரோமர் 1:18).

பாவத்தைக் குறித்து உணர்த்துவது பரிசுத்த ஆவியானவரின் கிரியையாகும். நாம் போதிக்கும் சிறுவர்களின் இருதயத்திலும் வாழ்க்கையிலும் அவர் கிரியை செய்ய வேண்டுமென்று நாம் ஜெபிக்க வேண்டும்.

- **இரட்சிப்பின் வழியாகிய இயேசுகிறிஸ்துவைக் குறித்துப் போதியுங்கள்.**
  - ✓ ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றி நாம் போதிக்க வேண்டும்; அவரே இரட்சிக்கிறவராக இருக்கிறார்.
  - ✓ அவருடைய ஆள்தத்துவத்தைப் பற்றியும் (அவர் யார்), அவருடைய கிரியைப் பற்றியும் (அவர் என்ன செய்தார்) நாம் போதிக்க வேண்டும்.
  - ✓ நாம் இவைகளை வலியுறுத்த வேண்டும்:
    - அவர் தேவனுடைய குமாரனாகவும், ஒரே இரட்சகராகவும் இருக்கிறார் (அப்போஸ்தலர் 9:20).
    - அவருடைய மரணம்: அதன் பொருள் மற்றும் முக்கியத்துவம்: பாவ நிவர்த்திக்கு அது போதுமானதாக இருக்கிறது (அப்போஸ்தலர் 2:23, 33, 38).
    - அவருடைய உயிர்த்தெழுதல்: அவர் ஜீவனுள்ள இரட்சகராக இருக்கிறார் (அப்போஸ்தலர் 2:24-32).
    - அவர் உயர்த்தப்படுதல்: அவர் சகலத்துக்கும் ஆண்டவராக இருக்கிறார் (அப்போஸ்தலர் 2:33-36).

  இரட்சிப்புக்காகக் கிறிஸ்துவின் மீது தனிப்பட்ட வகையில் விசுவாசம் வைக்க வேண்டும்.

  சுவிசேஷத்தை அறிவிக்கும்போது, அவருடைய ஆளதத்துவத்தையும், இரட்சிப்பின் கிரியையையும் ஒன்றிணைத்துப் போதிக்க வேண்டும்.

- **இரட்சிப்பை நமக்குரியதாக்கிக்கொள்ளும் - மனந்திரும்புதல் மற்றும் விசுவாசத்தைக் குறித்துப் போதியுங்கள்.**
  - ✓ கிறிஸ்துவிடம் வரும்படி அழைப்பது சுவிசேஷத்தின் அத்தியாவசியமான அம்சமாக இருக்கிறது (யோவான் 6:37; வெளிப்படுத்தல் 22:17).
  - ✓ கிறிஸ்துவில் உடனடியாக விசுவாசத்துக்காக நாம் ஜெபிக்க வேண்டும்.
  - ✓ நாம் இவைகளை வலியுறுத்த வேண்டும்:
    - தம்மிடம் வரும்படியாகக் கிறிஸ்து அழைத்தல் (மத்தேயு 11:28).
    - பாவத்தைவிட்டுத் தேவனை நோக்கித் திரும்ப வேண்டியதின் அவசியம் (அப்போஸ்தலர் 2:38; அப்போஸ்தலர் 20:21).
    - ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின்மீது நம்பிக்கை வைத்து, அவருக்குக் கீழ்ப்படிதலுடன் ஒப்புக்கொடுப்பதின் அவசியம் (அப்போஸ்தலர் 16:21; ரோமர் 10:9, 13).

மனந்திரும்புதலும், விசுவாசமும் கிறிஸ்துவின் அழைப்புக்கு மூன்று வகையில் செவிசாய்ப்பதை உள்ளடக்கியிருக்கிறது - சிந்தை, இருதயம், சித்தத்தில் செவி சாய்த்தல் (ரோமர் 6:17).

- **இரட்சிப்பின் விளைபயன்களைக் குறித்துப் போதியுங்கள்.**

பிள்ளைகள் இயேசுகிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் போது என்ன நடைபெறும் என்பதை அவர்களுக்குப் போதிக்க வேண்டும்.

- ✓ அவர்களுடைய பாவம் முழுவதும் மன்னிக்கப்படும். அவர்கள் நீதிமான்களாகக் கணிக்கப்படுவார்கள் (அப்போஸ்தலர் 13:38, 39).
- ✓ அவர்கள் மறுபடியும் பிறந்து, புதிய இயல்பைப் பெறுவார்கள் (யோவான் 3:3-8); அவர்களுடைய வாழ்க்கையில் மெய்யான மாற்றத்தைத் தேவன் எதிர்பார்ப்பார் (அப்போஸ்தலர் 26:20).
- ✓ அவர்கள் நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்வார்கள் (யோவான் 3:16).
- ✓ அவர்கள் பரிசுத்த ஆவியின் ஈவைப் பெற்றுக்கொள்வார்கள் (அப்போஸ்தலர் 2:38).

போதிக்கும் நற்செய்தியாளர் மூன்று காரியங்களை நினைவில் வைத்திருக்க வேண்டும்:

- இரட்சிக்கப்படுவதற்கு, சிறுவர்கள் மேலே கூறப்பட்டுள்ள சுவிசேஷ சத்தியங்கள் அனைத்தையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்பது அவசியமில்லை. தேவன் இறைமையுள்ளவர். சில வேளைகளில் அதிகமான சத்தியம் மற்றும் புரிந்துகொள்ளுதலின் அடிப்படையில் அவர் மறுபடியும் பிறக்க வைக்கிறார். சில வேளைகளில் கொஞ்சமான சத்தியத்தைக் கொஞ்சமாகப் புரிந்துகொண்டிருந்தாலும் மறுபடியும் பிறக்க வைக்கிறார்.
- எந்தவொரு வேதாகமப் பாடத்திலும் மேலே கூறப்பட்டுள்ள அனைத்துச் சத்தியங்களையும் உள்ளடக்குவது இயலாத காரியமாகும்; அதற்கு அவசியமுமில்லை. அப்போஸ்தலர்கள் நிச்சயமாக அப்படிச் செய்யவில்லை. குறைவாகப் போதித்தாலும் நிறைவாகப் போதிப்பதே மேலானது. என்றாலும், காலம் செல்லச் செல்ல இந்த அனைத்துச் சத்தியங்களையும் போதிக்க நாம் முயற்சியெடுக்க வேண்டும்.
- போதிக்கப்படும் பகுதிக்கு ஏற்ப எந்த வேதாகம சத்தியங்களைப் போதிக்கலாம் என்பதைத் தீர்மானிக்கலாம். ஆனால் எதை எதிர்பார்ப்பது என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும். எனவேதான் மேலே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள் முக்கியமானவையாக இருக்கின்றன.

சுவிசேஷச் செய்தியின் இந்தச் சுருக்கம் உங்களுக்கு உதவியாகவும், நினைவில் வைத்திருப்பதற்கு எளிதாகவும் இருக்கும்:

➤ நீங்கள் இரட்சிக்கப்படுவது *அவசியமாக* இருக்கிறது.
  ✓ தேவன் பரிசுத்தராக இருக்கிறபடியால், பாவத்தை அவரால் பரலோகத்துக்குள் அனுமதிக்க முடியாது.
  ✓ நீங்கள் ஒரு பாவியாக இருக்கிறபடியால்.

➤ நீங்கள் இரட்சிக்கப்பட **முடியும்.**
  ✓ இயேசுகிறிஸ்து உங்கள் பாவத்துக்குரிய தண்டனையைத் தாமே செலுத்தித்தீர்த்தபடியால்.
  ✓ இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தபடியால்.

➤ நீங்கள் இரட்சிக்கப்**படுவீர்கள்.**
  ✓ நீங்கள் உங்கள் பாவத்திலிருந்து திரும்பினால்.
  ✓ நீங்கள் இயேசுகிறிஸ்துவை உங்கள் ஆண்டவராகவும் இரட்சகராகவும் விசுவாசித்தால்.

➤ நீங்கள் இரட்சிக்கப்**படும்போது.**
  ✓ உங்கள் பாவங்கள் அனைத்தும் - கடந்தகால, நிகழ்கால மற்றும் எதிர்கால - அனைத்தும் மன்னிக்கப்படும்.
  ✓ நீங்கள் ஒரு ''புதுச் சிருஷ்டியாக'' இருப்பீர்கள். ஒரு புதிய வாழ்க்கையைத் துவங்குவீர்கள்.

சுவிசேஷத்தின் வல்லமையை உணர்ந்துகொள்ளுங்கள்

தேவன் நமக்கு ஒரு செய்தியைக் கொடுத்திருக்கிறார். நாம் அதைச் சிறுவர்களுக்குப் போதித்து, விளக்கும்போது, பரிசுத்த ஆவியானவரின் மூலமாக அது வாழ்க்கையையே மாற்றக்கூடிய வல்லமையைப் பெறுகிறது.

இந்த வல்லமை நமக்கில்லை. அது அடிப்படையில் நமது அனுபவத்தையோ, பயிற்சியையோ அல்லது திறனையோ சார்ந்திருக்கவில்லை. நாம் அறிவிக்கும் செய்தியிலேயே அந்த வல்லமை இருக்கிறது. சிறுவர்களின் இருதயத்தில் பேசி, பாவத்தைக் குறித்து அவர்களுக்கு உணர்த்தி, தங்கள் பாவங்களை விட்டு விலகும் வாஞ்சையை அவர்கள் பெறும்படி, பரிசுத்த ஆவியானவர் இந்தச் செய்தியைப் பயன்படுத்துகிறார். இந்தச் செய்தியின் அடிப்படையில் அவர்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும்போது அவர் அவர்கள் மறுபடியும் பிறக்கும்படி செய்கிறார்.

மாற்கு 16:15 வசனத்தில் ஆண்டவராகிய இயேசு தமது சீஷர்களிடம் *"நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்"* என்று கூறியபோது, தாங்கள் அதற்குப் பொருத்தமில்லாதவர்களாக அவர்கள் உணர்ந்திருக்கலாம். அவர்கள் வேதாகமப் பள்ளிக் கல்வியோ அல்லது அருட்பணிப் பயிற்சியோ பெற்றிருக்கவில்லை. அவர்களில் பலர் மீன்பிடிப்பவர்களாகவும், ஒருவர் ஆயக்காரனாகவும் இருந்தார்கள். அவர்களுக்குப் பலவகைப்பட்ட

தனிப்பட்ட சந்தேகங்களும் பிரச்சினைகளும் இருந்தன. ஆனால் அவர்கள் தங்களுக்குக் கூறப்பட்டபடியே செய்தார்கள். அவர்களுக்கு சிறப்பான வழிமுறைகள் எதுவும் தெரியாது. அவர்கள் வெறுமனே தங்கள் எசமானருக்குக் கீழ்ப்படிந்து, வாய்ப்புக் கிடைத்த இடங்களிலெல்லாம் **சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள்.**

என்ன நடந்தது? அவர்களைக் கவனித்த ஒருவர் *"உலகத்தைக் கலக்குகிறவர்கள்"* என்று குறிப்பிட்டார் (அப்போஸ்தலர் 5:28). ஆயிரக்கணக்கான மக்கள் மனமாற்றம் பெற்றார்கள்; அறியப்பட்ட உலகமெங்கும் சபைகள் துவங்கப்பட்டன. மக்களும், பட்டணங்களும், நாடுகளும்கூட மாற்றப்பட்டன. இன்றைய நிலையை எட்டும்வரை கிறிஸ்தவ நம்பிக்கை வளர்ந்து பரவி வந்துவிட்டது.

ஒருசில படிப்பறிவில்லாத, அனுபவமில்லாத, சந்தேகமும் தயக்கமும் கொண்ட மனிதர்கள் தங்களால் முடிந்த வரையில் எளிய முறையிலும் தெளிவாகவும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தபடியால், இது சாத்தியமாயிற்று. **இதிலிருந்து செய்தியைக் கொடுத்தவர்களிலல்ல, செய்தியிலேயே வல்லமை இருந்தது, இருக்கிறது என்பதை நாம் அறிகிறோம்.**

தேவன் இப்படிப்பட்ட மக்களை அற்புதமான வகையில் பயன்படுத்தினார் என்பது நமக்கு ஊக்கமளிக்கிறது அல்லவா? அப்படியானால், நாம் சிறுவர் சிறுமியருக்கு இந்தச் செய்தியைக் கொண்டுசெல்லும்போது, நாம் தயங்கினாலும் அனுபவமில்லாதவர்களாக இருந்தாலும், அவரால் உங்களையும் என்னையும்கூடப் பயன்படுத்த முடியும். தேவன் தம்முடைய மகிமைக்காகத் தமது நோக்கங்களை நிறைவேற்ற நம்மைப் போன்ற மக்களை பயன்படுத்துகிறார்.

"எப்படியெனில், சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை. ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தில் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார். மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமைபாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார்" (1 கொரிந்தியர் 1:26-29).

பவுல் கிறிஸ்துவின் சுவிசேஷம் "விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு, அது தேவபெலனாயிருக்கிறது" என்று கூறியிருக்கிறார் (ரோமர் 1:16). மறுபடியுமாக அவர் 1 கொரிந்தியர் 1:18 வசனத்தில் "சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது" என்று எழுதியிருக்கிறார்.

எனவே நீங்கள் சிறுவர்களுக்குச் சுவிசேஷத்தைப் போதிப்பது அத்தியாவசியமான காரியமாகும். நீங்கள் அதோடு எதையும் சேர்க்கக்கூடாது, எதையும்

எடுத்துப் போடக்கூடாது. அதற்குப் பதிலாக வேறெதையும் போதிக்கவும் கூடாது.

பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்திருங்கள்

தெசலோனிக்கேயில் தனது ஊழியத்தைத் திரும்பிப் பார்த்தபோது பவுல் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்:

"எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடேமாத்திரமல்ல, ***வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும்,*** *முழு நிச்சயத்தோடும் வந்தது."*

அவருடைய சுவிசேஷம் வசனத்தில் **வந்தது. அது பேசப்பட்டது.** ஆனால் அது வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும்கூட வந்தது.

நாம் அவருடைய வார்த்தையைப் போதிக்கும்போது பரிசுத்த ஆவியானவர் தமது கிரியையைச் செய்ய வேண்டும் என்று நாம் ஜெபிக்க வேண்டும். அப்படிச் செய்யும்படி அவரை நாம் சார்ந்திருக்க வேண்டும்.

அவருடைய கிரியை ஏழு அம்சங்களைக் கொண்டதாகும்:

- அவரே நமது ஊழியத்துக்கு ஆயத்தமாக **போதிக்கும் வரத்தை** நமக்குக் கொடுக்கிறார். எபேசியர் 5:11, ரோமர் 12;7, 1 கொரிந்தியர் 12:13 வசனங்களின்படி போதிப்பது பரிசுத்த ஆவியானவரின் வரங்களில் ஒன்றாகும்.
- நாம் ஆயத்தமாகும்போது, அவரே தாம் எழுதிய தேவனுடைய வார்த்தையை நாம் **புரிந்துகொள்ளும்படி** நமக்கு உதவுகிறார்.

  "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்படுகிறவைகள் யாவையுஞ் சொல்லி, வரப் போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" (யோவான் 16:13).
- அவரே, நாம் ஆயத்தமாகும்போது, பிள்ளைகளின் தேவைக்கேற்ப அவர்களுக்கு எதைப் போதிப்பது என்பதுபற்றிய ஞானத்தை நமக்குக் கொடுக்கிறார்.

  "ஆதலால் சகோதரரே, ***பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து,*** *நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழு பேரை உங்களில் தெரிந்துகொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம்"* (அப்போஸ்தலர் 6:3).
- நாம் பேசும்போது, அவரே நமக்கு வார்த்தைகளையும், பேசும் சுயாதீனத்தையும் அருளுகிறார். எதைப் பேசுவது, எதைப் பேசக்கூடாது என்று அறிவதில் அவர் நமக்கு உதவுகிறார். அதைக் கூறுவதற்கு வல்லமையையும் அதிகாரத்தையும் நமக்குக் கொடுக்கிறார்.

  "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் ***பெலனடைந்து*** *எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்"* (அப்போஸ்தலர் 1:8).

- அவரே செவிகொடுக்கும் பிள்ளைகள் புரிந்துகொள்ளுமாறு செய்து, அவர்களின் பாவத்தை அவர்களுக்கு உணர்த்துகிறார்.

"நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன். அவர் வந்து, பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். அவர்கள் என்னை விசுவாசியாதபடியினாலே பாவத்தைக் குறித்தும், நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே நீதியைக் குறித்தும், இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்பட்டதினாலே நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்துவார்" (யோவான் 16:7-11).

- அவரே மரித்துப்போன பிள்ளைகளை மனந்திரும்புதலுக்குள்ளும் விசுவாசத்துக்குள்ளும் வழிநடத்தி, அவர்கள் மறுபடியும் பிறக்கும்படி செய்கிறார்.

"இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" (யோவான் 3:5).

- அவரே இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளுக்குள் வாசம்பண்ணி, அவர்களுக்குப் புரிந்துகொள்ளுதலையும், நிச்சயத்தையும், பலத்தையும் கொடுத்து, அவர்கள் வளரும்படி உதவுகிறார்.

"நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ள மாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்" (யோவான் 14:16-17).

"நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார்" (ரோமர் 8:16).

அத்தியாயம் 7
மீன்பிடிக்கத் துவங்குங்கள்
சிறுவர்களுக்கு நான் சுவிசேஷத்தை அறிவிப்பது எப்படி ?

அத்தியாயத்தின் சுருக்கம்

(மீன்பிடிப்பதுபோலச் சுவிசேஷத்தைக் கொண்டு நீங்கள் சிறுவர்களைப் பிடிக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்).

- ***மீன் பிடிப்பது என்றால் என்ன?*** பிள்ளைகளைப் பிடிப்பது என்றால் சுவிசேஷத்தை அவர்களுக்கு அறிவித்து, எட்டிப்பிடித்து, **"சுவிசேஷத்தினால்"** அவர்களைப் பிடிப்பதாகும்.
- ***மீன்கள் என்பது யார் ?*** சிறுவரும் சிறுமியரும்.
- ***மீன்பிடிப்பவர்கள் யார்?*** நீங்களும் நானுமே சிறுபிள்ளைகளைப் பிடிக்க வேண்டும்.
- ***நாம் எங்கே மீன்பிடிக்க வேண்டும்?*** எந்த இடத்திலும் - ஆனால், குறிப்பாக எங்கே அதிகமான மீன்கள் இருக்கின்றனவோ அங்கே.
- ***நாம் எதைக் கொண்டு மீன்பிடிக்க வேண்டும்?*** இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷமே நமது உபகரணமாகும்.
- ***நாம் மீன்பிடிப்பது எப்படி?***
  - ✓ சிறுபிள்ளைகளுக்குச் சுவிசேஷத்தைப் போதிக்க வேண்டும்.
  - ✓ (எந்தவித அழுத்தமும் இல்லாமல்) அவர்கள் செவிசாய்க்கும்படி அறை கூவல் விடுக்க வேண்டும்.
  - ✓ தேவையிலிருக்கும் பிள்ளைகளுக்கு உதவ முன்வர வேண்டும்.
  - ✓ உங்களிடம் வரும் பிள்ளைகளுக்கு ஆலோசனை கொடுக்க வேண்டும்.
- **நீங்கள் செய்வதிலெல்லாம் நமது இரட்சகரைப் பின்பற்றுவதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.**

  இயேசுவானவர் *"என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிற வர்களாக்குவேன் என்றார்."*

ஆண்டவராகிய இயேசு சீமோன் பேதுருவைத் தமது ஊழியத்துக்காக அழைத்த போது, அவனிடமும் அவன் சகோதரன் அந்திரேயாவிடமும் *"என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார்"* (மத்தேயு 4:19). அடுத்துவந்த ஆண்டுகளில், குறிப்பாகப் பெந்தெகொஸ்தேக்குப் பிறகு பேதுரு மனுஷரைப் பிடிப்பதில் வல்லவரானார். அவர் மீன்களைப் பிடித்து வந்ததுக்குப் பதிலாக இப்போது ஆண்களையும், பெண்களையும், சிறுவரையும் சிறுமியரையும் பிடித்துவந்தார். பெந்தெகொஸ்தே நாளில் அவர் 3000 மீன்களைப்

"பிடித்தது" அவர் பிடித்ததிலேயே பெரிதானதாக இருக்கிறது (அப்போஸ்தலர் 2:41).

இப்போது நீங்கள் சிறுபிள்ளைகளின் தேவைகளையும் அந்தத் தேவைகளைச் சந்திக்கக்கூடிய சுவிசேஷத்தையும் அறிந்திருக்கிறீர்கள்; இந்தச் செய்தியை பிள்ளைகளின் தேவைகளைச் சந்திக்குமாறு செயல்படுத்துவது அத்தியாவசியமானதாகும். எனவே நீங்கள் அந்தச் செய்தியைப் பயன்படுத்தி அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும். அதாவது நீங்கள் "மீன்பிடிக்கத்" துவங்க வேண்டும். மீன்பிடிப்பவர் மீன்களைப் பற்றி எல்லாவற்றையும் தெரிந்து வைத்திருப்பதும், மீன்களைப் பிடிப்பதற்கான தூண்டில் போன்ற வழிமுறைகளைப் பற்றித் தெரிந்து வைத்திருப்பதும் போதாது; அவர் மீன் பிடிக்கத் துவங்க வேண்டும்! இந்த அத்தியாயத்தில் மீன் பிடிப்பவர்களுக்கு, சிறுவர்களை ஆதாயப்படுத்துவதற்குத் தேவையான வழிமுறைகள் கூறப்பட்டுள்ளன. உலகத்தில் மீன்பிடிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறவர்களோடு சிறுவர்களின் மத்தியில் தேவனுடைய ஊழியத்தைச் செய்பவர்களோடு நாம் ஒப்பிட்டுப் பார்ப்போம். **மீன்பிடித்தலைக்** குறித்த பல கேள்விகளைக் கேட்டு அதற்குப் பதிலைக் காண்போம்!

மீன்பிடித்தல் என்றால் என்ன?

மீனவரின் நோக்கம் மீன்களைப் பிடிப்பதாகும். மீன் தானாகவே படகில் குதித்துவிடுவதில்லை. அவரே அவைகளைப் பிடிக்க வேண்டும். எந்த மீனையும் பிடிக்காவிட்டால் மீனவர் திருப்தியடைவதில்லை. ஆனால் இதில் வெற்றிபெற வேண்டுமானால், மீனவர் தனது உபகரணங்களை ஆயத்தப்படுத்த வேண்டும், கடினமாக உழைக்க வேண்டும், பொறுமையாகக் காத்திருக்க வேண்டும் என்பவைகளை அவர் உணர்ந்திருக்கிறார். சில வேளைகளில் மக்கள் அவரையோ அல்லது அவர் என்ன செய்ய விரும்புகிறார் என்பதையோ புரிந்துகொண்டிராவிட்டாலும் அவர் தொடர்ந்து தன் வேலையைச் செய்ய வேண்டியிருக்கிறது.

சிறுவர் ஊழியரின் முதலாவதும் அடிப்படையானதுமான நோக்கம் பிள்ளைகளைப் "பிடிப்பதாகும்". பிள்ளைகள் தாங்களாகவே "படகில் குதித்துவிடுவதில்லை". அவர்களுக்குப் பின்னால் சென்று, அவர்களைப் "பிடிப்பதே" சிறுவர் ஊழியரின் பணியாகும்.

சிறுவருக்குச் சுவிசேஷப் பணியாற்றுகிறவர்கள் மீன்பிடிப்பவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் சிறுவர் சிறுமியரின் ஆத்துமாக்களைப் "பிடிக்கிறார்கள்." அவர்களை இயேசுகிறிஸ்துவில் இரட்சிப்புக்குள் கொண்டுவருவதே அவர்களுடைய நோக்கமாகும் - "*அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டு தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு ... அவர்களுடைய கண்களைத் திறக்கும்பொருட்டு*" (அப்போஸ்தலர் 26:18).

இந்தப் பணிக்கு இவைகளும் தேவைப்படுகின்றன:

- துவங்குவதற்கு முன்பு அதிகமான ஆயத்தம்.

- துவங்கும்போது கடின உழைப்பு.
- விளைவுகளுக்காக ஆர்வத்தோடும், பொறுமையோடும் காத்திருத்தல், காணக் கூடிய விளைவுகள் இல்லாமல் அதாவது, மீன்களையே காணாமல் ஒரு மீனவர் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியிருக்கலாம். என்றாலும், அவர் விடாமுயற்சியுடன் தொடர்ந்து செயல்படுகிறார்.
- மற்றவர்களின் விமர்சனத்தை ஏற்றுக்கொள்ளும் துணிவு.

மீன்கள் என்பது யார்?

ஒரு நல்ல மீனவன் தான் பிடிக்க விரும்பும் மீன்களைப் பற்றியும், அவற்றின் பழக்கங்கள், அவற்றின் விருப்பு வெறுப்புகள் இவைகளைப் பற்றியும் அறிந் திருக்க வேண்டும். அவைகளில் தனது பார்வையை வைத்து, கவனமாக ஆய்வு செய்து, முழு விவரங்களையும் அறிந்திருக்க வேண்டும்.

சிறுவரும் சிறுமியருமே நாம் பிடிக்க விரும்பும் மீன்களாவர். அவர்கள் எங்கும் நிறைந்திருக்கிறார்கள். நாம் அவர்களை ஆய்வுசெய்து, அவர்களின் தேவைகளை (ஆவிக்குரிய மற்றும் பிற தேவைகள்) அறிய வேண்டும். அவர்கள் எதற்குச் செவி கொடுப்பார்கள், எதற்குச் செவிகொடுக்க மாட்டார்கள் என்பதை அறிந்துவைத் திருக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக அவர்கள்மீது நமது பார்வையை ஒருமுகப்படுத்த வேண்டும். நாம் நமது இலக்குகளை விரிவாக்குவோமானால் எவரையும் பிடிக்க முடியாது.

மீன்பிடிப்பவர்கள் யார்?

இந்த உலகில் அனைவரும் மீன்பிடிப்பவர்கள் கிடையாது. ஆனால் பலர் (ஆண்களும் பெண்களும்) மீன்பிடிக்க விரும்புகிறார்கள். பலருக்கு அது பொழுது போக்காகவும், மற்றவர்களுக்கு அது தொழிலாகவும் இருக்கிறது.

அனைத்துக் கிறிஸ்தவர்களும் சிறுவர் சிறுமியரைப் பிடிக்கும்படி அழைக் கப்படவில்லை. ஆனால் உங்களையும் என்னையும் போன்ற பலர் தேவன் இந்த ஊழியத்தைச் செய்யும்படி தங்களை அழைத்திருப்பதாக உணர்கிறார்கள்.

- சிலர் தன்னார்வத்தோடு பகுதி நேர ஊழியமாக இதைச் செய்கிறார்கள். நமக்கு வருமானத்தைக் கொண்டுவரும் பொதுவான வேலையையும் நாம் பார்த்து வருகிறோம். அதற்காக நாம் அதிகமான நேரத்தைச் செலவழிக்க வேண்டி யிருக்கிறது. ஆனால் சிறுவர்களைப் பிடிப்பதற்காக வாரத்தில் பல மணி நேரங்களை நம்மால் ஒதுக்க முடியும்.
  - ✓ நாம் நமது சொந்த வீட்டில் மீன்பிடிக்கும் பெற்றோராக இருக்கலாம்.
  - ✓ நாம் ஞாயிறு பள்ளியில் மீன்பிடிக்கும் ஆசிரியராக இருக்கலாம்.
  - ✓ நாம் சிறுவர் வேதாகமப் பள்ளியில் மீன்பிடிக்கும் ஆசிரியராக இருக்கலாம்.
  - ✓ நாம் நற்செய்திக் கிளப்பில் மீன்பிடிக்கும் ஆசிரியராக இருக்கலாம்.

✓ நாம் திறந்தவெளியில் மீன்பிடிக்கும் கோடைகால அருட்பணியாளராக இருக்கலாம்.

✓ நாம் நமது சபையில் ஞாயிறு காலைப் பிரசங்கத்தில் சிறுவருக்காகப் பேசும் போதகராக இருக்கலாம்.

- நம்மில் சிலர் "தொழில்ரீதியாக" பிள்ளைகளைப் பிடிக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். நாம் இதற்காக அதிக நேரத்தை மீன்பிடிப்பதில் செலவிடுகிறோம். ஆனால் மீன்பிடிப்பது எப்படி என்று மற்றவர்களும் அறிந்துகொள்ளும்படியாக நமது அனுபவத்தைக் கொண்டு செமினார்களை நடத்துகிறோம். நூல்களை எழுதுகிறோம்.

தேவன் இந்த வழியில் செயல்படும்படி அவர்களை அழைத்தால், கற்றுக் கொள்ள அவர்கள் வாஞ்சை கொண்டிருந்தால், எவரும் சிறுவர்களைப் பிடிப்பவர் ஆகலாம்.

நாம் எங்கே மீன்பிடிப்பது?

மீன்கள் இருக்கும் நீர்நிலையில் மட்டுமே ஒரு மீனவர் மீன்களைப் பிடிப்பார். மீன்கள் இல்லாவிட்டால் மீன்பிடிக்கப் போவதில் அர்த்தமில்லை. அவர் எப்போதுமே அதிகமான மீன்கள் இருக்கும் நீர்நிலைகளுக்குக் கவர்ந்திழுக்கப்படுவார். மீன்கள் அதிகமானவையாகவும், தூண்டிலில் சிக்கும்படி பசியோடும் இருக்கிற நீர்நிலைகளை நாடியே அவர் செல்வார். மீன்பிடிப்பதற்கு நல்ல இடத்தை அவர் காணும்போது, மீன்கள் பசியோடு எளிதாகத் தூண்டிலில் சிக்குமானால், அங்கேயே இருந்து மீன்பிடித்துக் கொண்டிருப்பார்.

மீனபிடிப்பவர்களாக எங்கே நாம் பிடிக்க விரும்பும் சிறுவர் சிறுமியரைக்காண முடியும்? ஒருவகையில் பார்த்தால் அவர்கள் எங்கும் இருக்கிறார்கள். சிறுவர் சிறுமியரைக் கண்டுபிடிப்பதில் பிரச்சினையே கிடையாது.

- பெற்றோர் தங்கள் சொந்த வீட்டிலேயே மீன்பிடிக்கலாம்.
- ஞாயிறு பள்ளி ஆசிரியர்களும் போதகர்களும் சபையில் மீன் பிடிக்கலாம்.
- நற்செய்தி கிளப்பால் அண்டைப் பகுதியில் மீன்பிடிக்கலாம்.

சில இடங்களில் மீன்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. அங்கே செல்லும்படி "மீனவர்கள்" கவர்ந்திழுக்கப்படுகிறார்கள்.

- எனவே சிறுவர் நற்செய்தியாளர் மீன்கள் அதிகமாக இருக்கும் திறந்த வெளிக்குச் சென்று மீன்பிடிக்கத் துவங்குகிறார்.
- சிறுவர் வேதாகமப் பள்ளிகளும் பல மீன்களைக் கவர்ந்திழுக்கின்றன. இதுவும் மீன்களைப் பிடிப்பதற்குச் சிறந்த இடமாகும்.

சிறுவர் சிறுமியரில் பெரும்பாலானோர் அவருக்காகவும் அவருடைய வலைக்காகவும் ஆயத்தமாயிருப்பது மீன்பிடிப்பவருக்குப் பெரிய சிலாக்கியமாக

இருக்கிறது! எனவேதான் சிறுவருக்குச் சுவிசேஷப் பணி செய்வது அர்த்தமுள்ள தாக இருக்கிறது! தூண்டிலில் சிக்கக்கூடிய பல மீன்கள் நீர்நிலைகளில் காணப் படுகின்றன! இது மீனவரின் சொர்க்கமாக இருக்கிறது! இப்படிப்பட்ட இடத்தில் தரித்திருந்து, தொடர்ந்து மீன்பிடிப்பது நலமாகும்!

மீன் பிடிப்பவர் எதைப் பயன்படுத்துகிறார்?

சிலர் தனிப்பட்ட மீனைப் பிடிப்பதற்குத் தூண்டிலைப் (அவைகளை அவர் ஒவ்வொன்றாகப் பிடிக்கிறார்) பயன்படுத்துகின்றனர். சிலர் அதிகமான அளவு மீன்களைப் பிடிப்பதற்காக வலைகளைப் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் தூண் டிலைப் பயன்படுத்தும்போது மீன்களைக் கவரக்கூடிய இரை அதில் இணைக்கப் பட்டிருக்க வேண்டும். இரண்டு வகையிலும் மீனவர் தனது உபகரணத்தைக் குறித்து நன்றாக அறிந்திருக்க வேண்டும்; அது கூடுமான வரையில் மேன்மையான தரத் தைக் கொண்டதாக இருக்க வேண்டும். தூண்டிலும் வலையும் தரம்குறைந்ததாக இருக்குமானால், தோல்வியே கிடைக்கும்.

சிறுவருக்காக மீன்பிடிப்பவருக்கும் "உபகரணங்கள்" தேவைப்படுகின்றன. அவர்கள் தனிப்பட்ட சிறுவர்களைப் (இவர்கள் ஒவ்வொருவராக ஆதாயம் செய்யப்படுகிறார்கள்) பிடித்தாலும், குழுவினரை நோக்கி வலையை வீசினாலும், இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷமே அவர்களுடைய உபகரணமாகும். சுவிசேஷமே தூண்டிலாகவும் வலையாகவும் இருக்கிறது.

ஆண்டவராகிய இயேசு *"பரலோக ராஜ்யம் கடலிலே போடப்பட்டு, சகல விதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது"* என்று கூறியிருக்கிறார் (மத்தேயு 13:47).

ஒவ்வொரு சிறுவர் ஊழியரும் தான் பயன்படுத்தும் வலை சரியானதாகவும், பழுதில்லாததாகவும் இருக்கிறதா என்பதைத் தொடர்ந்து ஆராய்ந்து பார்க்க வேண்டும். எனவே மறுபடியும் மறுபடியுமாக அவர் சுவிசேஷச் செய்தியை, பிள் ளைகளைப் "பிடிக்க" முடியும் என்று தான் நம்பிக்கை வைத்திருக்கிற இரட்சிப் பின் செய்தியை நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும் (முந்தைய அத்தியாயத்தில் நாம் பார்த்த செய்தி.)

➤ தாங்கள் ***இரட்சிக்கப்படுவது*** அவசியம் என்பதைப் பிள்ளைகள் அறிய வேண்டும்.

✓ ஏனென்றால் அவர்கள் பாவிகளாக இருக்கிறார்கள்.

✓ தேவன் பரிசுத்தராக இருக்கிறார், பரலோகத்தில் பாவத்துக்கு இடமில்லை.

நல்லவர்களாக நடந்துகொள்வதின் மூலமாகவோ அல்லது வேறு வழியிலோ தாங்களாகவே தங்களை இரட்சித்துக்கொள்ள முடியாது என்பதையும் அவர் கள் உணர வேண்டும். அவர்கள் சபையாலோ அல்லது போதகராலோ அல்லது ஞானஸ்நானத்தின் மூலமாகவோ இரட்சிக்கப்பட முடியாது.

- தாங்கள் **இரட்சிக்கப்பட முடியும்** என்பதைப் பிள்ளைகள் அறிய வேண்டும்.
  - ✓ ஏனென்றால் இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்து, பாவத்துக்கான தேவனுடைய தண்டனையைத் தாமே ஏற்றுக்கொண்டார்.
  - ✓ ஏனென்றால் இயேசுகிறிஸ்து ஜீவிக்கிறார். அவர்கள் எவ்வளவு மோசமானவர்களாக இருந்தாலும் அவரால் அவர்களை இரட்சிக்க முடியும்.
- தாங்கள் **இரட்சிக்கப்படுவோம்** என்பதைப் பிள்ளைகள் அறிய வேண்டும்.
  - ✓ அவர்கள் தங்கள் பாவத்தைவிட்டுத் திரும்ப விருப்பமுள்ளவர்களாக இருந்தால்.
  - ✓ ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவில் அவர்கள் நம்பிக்கை வைப்பார்களானால்.
- தாங்கள் **இரட்சிக்கப்படும்போது** என்ன நடக்கும் என்பதைப் பிள்ளைகள் அறிய வேண்டும்.
  - ✓ அவர்களுடைய பாவங்கள் அனைத்தும் - கடந்தகால, நிகழ்கால, வருங்காலப் பாவங்கள் அனைத்தும் - மன்னிக்கப்படும்.
  - ✓ அவர்கள் "புதுச் சிருஷ்டிகளாக" ஒரு புதிய வாழ்க்கையைத் துவங்குவார்கள்.

ஒரு நல்ல மீனவர் தனது குறைபாடுகளை அறிந்திருக்கிறார். அனைத்தையும் ஒரேவேளையில் சாதித்துவிட வேண்டுமென்று அவர் முயல மாட்டார். தான் தொடர்புகொள்ளும் ஒவ்வொரு குழந்தையும் அற்புதமான சுவிசேஷச் செய்தியைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதே அவருடைய நோக்கமாகும். ஆனால் தன்னுடைய தூண்டிலும் வலையும் செயல்படக் கூடிய வகையில் இருப்பதை அவர் நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும். இது அவருடைய பொறுப்பாகும்.

மேலும் ஒரு சிறந்த மீனவர் சிறுவர்களைக் கவரக்கூடிய "இரையைப்" பயன்படுத்துவார். பிள்ளைகள் வந்து தமது செய்திக்குச் செவிகொடுக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார். எனவே கூடுமானவரையில் அது ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும் கவர்ச்சிகரமாகவும் இருப்பதற்காக அவர் முயலுகிறார்.

மீன்பிடிப்பவர் எப்படி மீனைப் பிடிக்கிறார் ?

ஒரு மீனவர் நல்ல தூண்டிலையோ அல்லது வலையையோ வைத்திருப்பது மட்டும் போதாது. தன்னிடமிருப்பதை எப்படிப் பயன்படுத்துவது என்று அவர் அறிந்திராவிட்டால் எவ்வளவு சிறப்பான உபகரணத்தை வைத்திருந்தாலும் அவரால் மீனைப் பிடிக்க முடியாது. மேலும் அவர் முன்னால் சென்று அதைப் பயன்படுத்த வேண்டும்.

சுவிசேஷச் செய்தியைக் குறித்த தெளிவான பார்வையைப் பெற்றுள்ள சிறுவர் நற்செய்தியாளர் தான் சிறுவருக்குப் போதிப்பதைப் புரிந்துகொண்டிருப்பதோடு கூட, அதை எவ்வாறு பிரசங்கிக்க வேண்டும், "மீன்களைப் பிடிக்கும்படி" தான்

என்ன செய்ய வேண்டும் என்பவைகளையும் அறிந்திருக்க வேண்டும். அவர் பின்பற்றுவதற்குப் பல எளிய வழிகள் உள்ளன. இந்தப் புத்தகத்தின் இரண்டாம் பகுதியில் நாம் இவைகளை இன்னும் விவரமாக ஆய்வுசெய்வோம்.

➤ நீங்கள் இரட்சிக்கப்படாத பிள்ளைகளுக்குச் சுவிசேஷச் செய்தியைப் போதிக்க வேண்டும்.

✓ உங்கள் வேதாகமப் பாடத்தின்போது இதைச் செய்வதே சிறப்பான வழியாகும். உங்கள் வேதாகமக் கதையோடு பிணைத்து சுவிசேஷச் செய்தியின் மையச் சத்தியத்தை எடுத்துக் கூறுங்கள். பிறகு இரட்சிக்கப்படாத பிள்ளைகளுக்கு அதைப் பொருத்திக் காட்டி, எப்படி இரட்சிக்கப்பட முடியும் என்பதை அவர்களுக்குக் காட்டுங்கள் (இதை எப்படிச் செய்வது என்பதை 172ஆம் பக்கத்திலிருந்து விவரமாகக் காணலாம்).

✓ நீங்கள் பாடும் கோரஸ் பாடல்கள் மூலமாகவும், பிள்ளைகள் கற்றுக்கொள்ளும் மனப்பாட வசனத்தின் மூலமாகவும், நீங்கள் போதிக்கும் கோட்பாட்டுப் பாடங்களின் மூலமாகவும் இரட்சிப்பின் செய்தியின் மற்ற அம்சங்களை நீங்கள் போதிக்கலாம்.

நீங்கள் சுவிசேஷச் செய்தியைப் பிள்ளைகள் புரிந்துகொள்ளும் வகையில் எளிமையாகவும் முழுமையாகவும் **போதிப்பது** முக்கியமாகும்.

➤ இதே வேளையில் நீங்கள் போதிப்பதற்குச் செவிசாய்க்குமாறு நீங்கள் பிள்ளைகளுக்கு அறைகூவல் விடுக்க வேண்டும். இயேசுகிறிஸ்துவிடம் வந்து அவரைத் தங்கள் ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ளும்படி பிள்ளைகளுக்கு அழைப்புவிடுக்க வேண்டும்.

✓ உங்கள் அறைகூவலோ அல்லது அழைப்போ தெளிவானதாகவும் நேரடியானதாகவும் இருக்க வேண்டும். இரட்சிக்கப்படத் தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பிள்ளைகள் புரிந்துகொள்ள வேண்டும். தாங்கள் அறிந்ததைக் கொண்டு இன்றே இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்படி நீங்கள் அறைகூவல் விடுக்க வேண்டும்.

✓ ஆனால் பிள்ளைகள் செவிசாய்க்கும்படி நீங்கள் ஒருபோதும் வற்புறுத்தக் கூடாது. இப்படிப்பட்ட வார்த்தைகளோடு உங்கள் பாடத்தை முடித்து வைப்பது போதுமானதாகும்:

"இப்படியாக, ஆண்டவராகிய இயேசு சகேயுவை அழைத்தபோது அவன் அவரிடம் வந்தான். அந்த நாளில் அவன் இரட்சிக்கப்பட்டான். அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டன. அவன் ஒரு புது மனிதனானான்.

ஆண்டவராகிய இயேசு தம்மிடம் வரும்படி உங்களை அழைக்கிறார். நீங்கள் சரீரப்பிரகாரமாக (உங்கள் சரீரத்தில்) அவரிடம் வர முடியாது. ஆனால் உங்கள் இருதயத்தில் அவரிடம் வர முடியும். நீங்கள் இங்கே இருக்கும்போதே உங்களை இரட்சிக்கும்படி அவரிடம் வேண்டிக் கொள்ளுங்கள்.

உங்களை ஏற்றுக்கொள்வதாகவும், உங்களைப் புறம்பே தள்ளுவதில்லை என்றும் அவர் வாக்குக்கொடுத்திருக்கிறார் (யோவான் 6:37). இன்றே அவரிடம் வருவீர்களா? நீங்கள் அவரிடம் வேண்டிக்கொண்டால் அவர் உங்களை ஏற்றுக்கொண்டு உங்களை இரட்சிப்பார். இன்றே இதை நீங்கள் செய்வீர்கள் என்று நம்புகிறேன்.

நாம் ஜெபத்தோடு கூட்டத்தை முடிப்போமாக!

எங்கள் பரம பிதாவே,

இந்தக் கூட்டத்திலுள்ள சிறுவரும் சிறுமியரும் இன்றே, இப்போதே ஆண்டவராகிய இயேசுவிடம் வர வேண்டும் என்று ஜெபிக்கிறேன், அவர்களை இரட்சிக்கும்படி வேண்டிக்கொள்கிறேன்.

ஆமென்."

✓ நீங்கள் பிள்ளைகளிடம் சரீரப்பிரகாரமாக எதையேனும் செய்யும்படி கேட்டுக்கொள்ளக் கூடாது. எடுத்துக்காட்டாக, இவ்வாறு செய்யும்படி கேட்டுக்கொள்ளக் கூடாது:

"உங்கள் கைகளை உயர்த்துங்கள்"

"எழுந்து நில்லுங்கள்"

"முன்னால் வாருங்கள்"

இப்படிச் செய்தால் அதில் பல அபாயங்கள் உள்ளன:

- மற்றவர்கள் செய்வதைக் கண்டு சில பிள்ளைகள் தாங்களும் அப்படிச் செய்வார்கள்.
- இப்படிப்பட்ட சரீரப்பிரகாரமான செயல்களே தங்களை இரட்சிப்பதாகச் சில பிள்ளைகள் நினைத்துக்கொள்வார்கள்.
- இப்படிப்பட்ட சரீரப்பிரகாரமான செயல்களைச் செய்யும்படி கூறுவது பிள்ளைகள் செவிசாய்க்கும்படி அழுத்தம்கொடுப்பதாகிவிடும். குறிப்பாக இதை நீட்டித்தாலோ அல்லது உணர்வுபூர்வமாகக் கொடுக்கப்பட்டாலோ அது நெருக்குவதாகிவிடும்.

✓ பிள்ளைகள் சுவிசேஷத்துக்குத் திறந்த மனதோடு இருப்பது இயல்பானதும் வேதாகமரீதியானதுமாகும். ஆனால் நாம் ஏற்கெனவே பார்த்தபடி இதில் அனுகூலங்களும், எதிரான நிலைகளும் காணப்படுகின்றன:

- இதில் காணப்படும் அனுகூலம்: அவர்கள் நமது செய்தியைத் திறந்த மனதோடு ஏற்றுக்கொள்கிறார்கள். பரிசுத்த ஆவியானவர் அவர்கள் இருதயத்தில் கிரியைசெய்யும்போது, அதற்குச் செவிசாய்ப்பது அவர்களுக்கு எளிதாக இருக்கிறது. (உண்மையில் இதைப் போன்று எந்தச் செய்தியையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களாக இருக்கிறார்கள்).
- எதிரான நிலை: அவர்கள் தங்கள் இருதயத்தில் பரிசுத்த

ஆவியானவரின் கிரியைக்குச் செவிசாய்க்காமல், உங்களுக்கும் உங்கள் ஆளுமைக்கும் மட்டுமே செவிசாய்க்கும் அபாயம் இருக்கிறது. இது வெறும் மானிடப் பதில்செயலாகும்; இது ஒருவரை இரட்சிக்காது. ஆனால் தாங்கள் இரட்சிக்கப்பட்டுவிட்டோம் என்ற எண்ணத்தை அவர்களுக்குள் உருவாக்கக் கூடும். அவர்களைச் சுவிசேஷத்தினால் ஆதாயப்படுத்துவது கடினமாகிவிடுகிறது.

- கிறிஸ்துவை விசுவாசிப்பது எப்படி என்று அறிவதில் தனிப்பட்ட உதவி தேவைப்படும் மற்றும் இதைக் குறித்துக் கேள்விகளைக் கேட்கும் இரட்சிக் கப்படாத பிள்ளைகளுக்கு நீங்கள் உதவ வேண்டும்.

26ஆம் அத்தியாயத்தில் நான் இதைப் பற்றி விரிவாகக் கூறியிருக்கிறேன்.

எடுத்துக்காட்டாக, நீங்கள் பிள்ளைகளிடம் இவ்வாறு கூறலாம்:

"சிறுபிள்ளைகளே, உங்களில் எவராவது இதுவரை ஆண்டவராகிய இயேசுவை விசுவாசியாமலிருந்து இப்போது விசுவாசிக்க விரும்பினால், ஆனால் எப்படி அதைச் செய்வது என்று அறியாதிருந்தால், கூட்டத்தின் முடிவில் நான் உங்களுக்கு உதவிசெய்கிறேன். மற்றப் பிள்ளைகள் கலைந்துசென்ற பிறகு என்னிடம் வாருங்கள். என்னோடு பேச விரும்புகிறீர்கள் என்பதைத் தெரி வியுங்கள். இங்கே இந்தப் படப் பலகையின் அருகில் நான் நின்று கொண் டிருப்பேன். ஆண்டவராகிய இயேசுவை விசுவாசிக்க நான் உங்களுக்கு உதவி செய்வேன்."

உதவி தேவைப்படும் பிள்ளைகள் உங்களை அணுக இது வழிவகுக் கிறது. இது அவர்களில் எந்த அழுத்தத்தையும் உண்டாக்குவதில்லை. அவர் களாகவே விரும்பினால் உங்களிடம் வரலாம். ஆனால் கூட்டம் முடிந்த பிறகு அவர்கள் சந்திக்க நீங்கள் இடம்கொடுக்க வேண்டும். அக்கறையுள்ள பிள்ளை உங்களைச் சந்திக்க வேண்டுமானால் எங்கே செல்ல வேண்டும் என்பதை அறிந்திருக்க வேண்டும்.

- ஒரு பிள்ளை உங்களிடம் வரும்போது, முழுமையாக ஆலோசனை கொடுப் பதற்கு நேரம் எடுத்துக்கொள்ளுங்கள். இதை எப்படிச் செய்வது என்பதை 27ஆம் அத்தியாயத்தில் விளக்கியிருக்கிறேன்.
- ஒரு மீன் பிடிக்கப்பட்டபிறகு – அந்தப் பிள்ளை உங்கள் கூட்டத்தில் தானாகவே இயேசுகிறிஸ்துவை விசுவாசித்திருந்தாலும் சரி, அல்லது வீட்டிலோ அல்லது வேறு எங்கோ கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருந்தாலும் சரி, அல்லது உங்கள் ஆலோசனையின்மூலம் அவனைக் கிறிஸ்துவிடம் நீங்கள் வழிநடத்தியிருந்தாலும் சரி – அந்தப் பிள்ளைக்குப் போஷாக்களித்து, கிறிஸ்தவ வாழ்க்கையில் அவன் முன்னேறும்படி உதவுவது உங்கள் பொறுப்பாகும் (இதை எப்படிச் செய்வது என்பதை அறிய 9ஆம் அத்தி யாயத்தைப் பாருங்கள்).

ஒரு மீனவர் மீன்பிடிப்பதற்கும் சிறுவர் ஊழியர் ஒருவர் ஒரு பிள்ளையைப் பிடிப்பதற்கும் இடையேயுள்ள பெரிய வேறுபாடு இதுவாகும். ஒரு மீனவன் மீனைப் பிடித்தவுடன் அதைக் கொன்று தின்றுவிடுகிறான். ஆனால் சிறுவர் ஊழியர் "மீனைப்" பிடிக்கும்போது, அதற்குப் போஷாக்களித்து அது வளருமாறு உதவுகிறார்!

வார்த்தையில்லாத புத்தகத்தைப் பயன்படுத்துங்கள்

"சிறுவர்களைப் பிடிப்பவர்கள்" தங்கள் நற்செய்திப் பணியில் பயன்படுத்தக் கூடிய ஒரு பயனுள்ள உபகரணம் வார்த்தையில்லாத புத்தகமாகும் (Wordless Book). சிறுவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு வார்த்தையில்லாத புத்தகம் கவர்ச்சிகரமானதும் உதவிகரமானதுமான வழியாக இருப்பதைச் சிறுவர் ஊழியர்கள் கண்டிருக்கிறார்கள். சிறுவர் சிறுமியருக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும் உங்கள் "மீன்பிடிக்கும் ஊழியத்தில்" இந்தச் சிறு புத்தகத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பதைக் குறித்து அடுத்த அத்தியாயத்தில் விளக்குகிறேன்.

"என் பின்னே வாருங்கள்"

மத்தேயு 4:19 வசனத்தை நாம் மறுபடியுமாகச் சிந்தித்துப் பார்க்கும்போது, அனைத்து மீனவர்களும் - தங்கள் ஊழியத்தில் ஆசீர்வாதத்தையும் உதவியையும் பெற வேண்டுமானால் - பின்பற்ற வேண்டிய ஒரு நிபந்தனை இருக்கிறது என்பதைக் காண்கிறோம்:

"என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் (அல்லது சிறுவர் சிறுமியரைப்) பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார்."

அவரைப் பின்பற்றுவதே முதலாவதும் முக்கியமானதுமான நமது கடமையும் பொறுப்பாகும்:

- அவருடைய வாழ்க்கை மற்றும் ஊழியத்தின் மாதிரியைப் பின்பற்றி நமது வாழ்க்கையையும் ஊழியத்தையும் அமைத்துக்கொள்ள வேண்டும். அவரே நமக்கு முன்மாதிரியானவராக இருக்கிறார்.
- நமது பிரசங்கம் மற்றும் போதனையின் உள்ளடக்கமும் வழிமுறையும் அவருடைய முறையைப் பின்பற்றியதாக இருக்க வேண்டும்.
- அவர் எந்தத் திசையில் நம்மை வழிநடத்தினாலும் நாம் பின்பற்ற வேண்டும்.
- நாம் அவரைப் பின்பற்றும்போது அவரோடு நெருங்கிய தொடர்பைக் கொண்டிருக்க வேண்டும்; அவருடைய உறவை அனுபவிக்க வேண்டும்.
- நமக்குத் தேவையான உதவியையும் ஞானத்தையும் அருளும்படி நமது தலைவராகிய அவரிடம் வேண்டிக்கொள்ள வேண்டும்.

பிறகு, அவரைப் பின்பற்றும் இந்தக் கடமையையும், பொறுப்பையும், நிபந்தனையையும் நிறைவேற்றுகிறவர்களுக்கு அவர் தாம் அவர்களை "மனுஷரைப் பிடிக்கிறவர்களாக" ஆக்குவதாக அவர் வாக்குத்தத்தம் அருளுகிறார். மீன்பிடிப்பதற்கான திறனையும் விளைவுகளையும் கொடுப்பவர் அவரே. அவரைப் பின்பற்றுவதே" நமது பணியாகும்.

அத்தியாயம் 8

வார்த்தையில்லாத புத்தகம்

வார்த்தையில்லாத புத்தகத்தைப் பயன்படுத்துவது எப்படி ?

அத்தியாயத்தின் சுருக்கம்

(உங்கள் நற்செய்திப் பணியில் வார்த்தையில்லாத புத்தகம் உங்களுக்கு உதவியாக இருக்கும்).

- **வார்த்தையில்லாத புத்தகம் என்றால் என்ன?** வார்த்தையே இல்லாமல் ஐந்து பக்கங்களில் வெவ்வேறு வண்ணங்களைக் கொண்ட புத்தகமாகும்.
- **இந்த வண்ணங்கள் எதைக் குறிக்கின்றன?**
  - ✓ தங்க நிறம் தேவனைக் குறித்துக் கூறுகிறது.
  - ✓ கறுப்பு நிறம் பாவத்தைக் குறித்துக் கூறுகிறது.
  - ✓ சிவப்பு நிறம் இயேசுகிறிஸ்துவின் மரணத்தைக் குறித்துக் கூறுகிறது.
  - ✓ வெள்ளை நிறம் இரட்சிப்பைக் குறித்துக் கூறுகிறது.
  - ✓ பச்சை நிறம் கிறிஸ்தவ வளர்ச்சியைக் குறித்துக் கூறுகிறது.
- **நீங்கள் என்ன சொல்ல வேண்டும்?**
  ஒவ்வொரு வண்ணத்தையும் முழுமையாக விளக்க வேண்டும்.
- **நீங்கள் எப்போது வார்த்தையில்லாத புத்தகத்தைப் பயன்படுத்த வேண்டும்?**
  - ✓ சுருக்கமாகச் சுவிசேஷத்தை அறிவிக்க.
  - ✓ உங்கள் வேதாகமப் பாடத்தில் ஒரு சுவிசேஷ சத்தியத்தை விளக்க.
  - ✓ ஒரு பிள்ளைக்கு ஆலோசனை கூறும்போது பயன்படுத்த.

சிறுவருக்கான எனது நற்செய்திப் பணியில் வார்த்தையில்லாத புத்தகம் அற்புதமான உதவியாக இருப்பதை நான் கண்டிருக்கிறேன். மற்றவர்களும் இவ்வாறே கண்டிருக்கிறார்கள். உங்களிடம் கொடுக்கப்பட்டுள்ள சிறுவர் ஊழியர் உபகரணத் தொகுப்பில் நீங்கள் பயன்படுத்துவதற்காக வார்த்தையில்லாத புத்தகமும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

வார்த்தையில்லாத புத்தகம் என்றால் என்ன?

வார்த்தையில்லாத புத்தகம் அதன் பெயருக்கேற்ப வார்த்தைகளே இல்லாத புத்தகமாகும். அதன் அட்டை பச்சை வண்ணத்தில் இருக்கிறது. உள்ளே நான்கு இரட்டைப் பக்கங்கள் இருக்கின்றன. இவை தங்கம், கறுப்பு, சிவப்பு, வெள்ளை ஆகிய வண்ணங்களில் உள்ளன. ஒரு வார்த்தையில்லாத புத்தகத்தைச் செய்வதற்கு உங்களுக்கு ஐந்து வண்ணத்தாள்கள் தேவை - பச்சை, தங்க நிறம், கறுப்பு,

சிவப்பு, வெள்ளை. ஒவ்வொரு துண்டும் 15 செ.மீ. நீளம், 6 செ.மீ. அகலத்தில் இருக்கலாம். இந்த ஐந்து துண்டுகளையும் இரண்டாக மடியுங்கள். பச்சை வண்ணத் தாள் அட்டையாகும். பச்சைத்தாளின் உள் பாதியின்மீது தங்க வண்ணத் தாளின் ஒரு பாதியை ஒட்டுங்கள். பிறகு தங்க வண்ணத் தாளின் இரண்டாம் பாதியின்மீது கறுப்புவண்ணத் தாளின் முதல் பாதியை ஒட்டுங்கள்; இவ்வாறு ஒட்டிக்கொண்டு வாருங்கள். கடைசியில் வெள்ளைத் தாளின் இரண்டாவது பாதியை பச்சை அட்டையின் உள்பாதியின் மீது ஒட்டுங்கள்.

ஒவ்வொரு வண்ணமும் சுவிசேஷ சத்தியங்களின் ஒரு தொகுப்பைக் குறிக்கின்றன. இந்தச் சத்தியங்களைக் குறித்தோ அல்லது அந்தத் தொகுப்பிலுள்ள ஏதேனும் ஒரு சத்தியத்தைப் பற்றியோ நீங்கள் போதிக்கும்போது, இதைச் சிறுவர்களுக்குக் காட்ட வேண்டும்.

சுவிசேஷச் செய்தியைப் பிரசங்கிப்பதில் இந்தச் சிறுபுத்தகம் அதிகப் பயனுள்ளதாக இருக்கிறது:

- தங்க வண்ணப் பக்கம் தேவனையும் அவருடைய பரிசுத்தத்தையும் பற்றிக் கூறுகிறது.
- கறுப்புப் பக்கம் பாவத்தையும் அதன் பின்விளைவுகளையும் பற்றிக் கூறுகிறது.
- சிவப்புப் பக்கம் இயேசுகிறிஸ்துவையும் பாவத்துக்காக அவர் மரித்ததையும் கூறுகிறது.
- வெள்ளைப் பக்கம் இரட்சிப்பைப் பற்றி, குறிப்பாக நீதிமானாக்கப்படுதலைக் குறித்துக் கூறுகிறது.
- பச்சைப் பக்கம் இரட்சிப்புக்குப் பிறகு ஆவிக்குரிய வளர்ச்சியைப் பற்றிக் கூறுகிறது.

வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் இந்தச் சிறு புத்தகத்தைப் பயன்படுத்தும்படி நீங்கள் இதை உங்கள் பையிலோ அல்லது கைப்பையிலோ எப்போதும் கொண்டு செல்லலாம். அல்லது உங்கள் வேதாகமத்தின் பின் அட்டையில் அதற்காகப் பிரத்தியேகமாக உண்டாக்கப்பட்ட உறையினுள் அதை வைத்திருக்கலாம்.

இந்த வண்ணங்கள் எதைக் குறிக்கின்றன?

- **தங்க நிறம் தேவனைக் குறித்துக் கூறுகிறது.**

"ஒருவரையொருவர் நோக்கி: சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்று கூப்பிட்டுச் சொன்னார்கள்" (ஏசாயா 6:3).

நீங்கள் இரண்டு வகைகளில் இந்த வண்ணத்தைப் பயன்படுத்தலாம்:

✓ தங்க நிறமான பக்கத்தைத் தங்கத்தோடு ஒப்பிடுவதின் மூலமாக:

- தேவன் உலகத்தைச் சிருஷ்டித்து அதற்குச் சொந்தக்காரராக இருக்கிறார் (தங்கம் செல்வத்தைக் குறிப்பிடுகிறது).
- அவர் ராஜாதிராஜாவாக இருக்கிறார் (தங்கம் சிம்மாசனத்தையும் கிரீடங்களையும் குறிப்பிடுகிறது).
- அவர் தூய்மையானவராகவும் பரிசுத்தராகவும் இருக்கிறார் (தங்கத்தின் அசுத்தங்கள் அனைத்தும் அகற்றப்பட்டிருக்கின்றன).
- அவர் பரலோகத்தில் வசிக்கிறார் (வேதாகமத்தில் பரலோகத்தின் தெரு தங்கத்தினால் செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது).

✓ தங்க வண்ணப் பக்கத்தை வெளிச்சத்துக்கு ஒப்பிடுவதின்மூலம். தங்க மயமான சூரியன் தேவனுடைய "பிரகாசத்துக்கும்", நன்மைக்கும், பரிசுத்தத்திற்கும் ஒரு சித்திரமாக இருக்கிறது. இது அடுத்துவரும் கறுப்புப் பக்கத்துக்கு முற்றிலும் வேறுபட்டதாகும்.

எந்த வழிமுறையைப் பயன்படுத்துவது என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். முதலாவது விரிவானதாகவும், இரண்டாவது எளிமையானதாகவும் இருக்கிறது.

➤ இருண்ட நிறம் பாவத்தைக் குறித்துக் கூறுகிறது:
"எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாகி" (ரோமர் 3:23).

("கறுப்பு" என்ற சொல்லைப் பயன்படுத்தாதீர்கள். வேதாகமம் பாவத்தை இருள் என்றே குறிப்பிடுகிறது (யோவான் 3:19; கொலோசெயர் 1:13; 1 பேதுரு 2:9; 1 யோவான் 1;6). "கறுப்பு" என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை. மேலும் இந்தச் சொல்லைப் பயன்படுத்தினால் இந்த நிறமுடையவர்களுக்கு அது வருத்தத்தை உண்டாக்கலாம்).

✓ தேவனுக்கும் அவருடைய கட்டளைகளுக்கும் கீழ்ப்படியாமலிருப்பது பாவமாகும்.

✓ தேவன் நீதியுள்ளவர், எனவே அவர் நமது பாவத்தை தண்டித்தேயாக வேண்டும்.

➤ **சிவப்பு நிறம் கிறிஸ்துவின் விலைமதிப்பற்ற இரத்தத்தைக் குறித்துக் கூறுகிறது:**
"நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே" (ரோமர் 5:8-9).

✓ தேவன் நம் ஒவ்வொருவரையும் அதிகமாக நேசிக்கிறபடியால், நமது இரட்சகராக இருக்கும்படி தமது ஒரேபேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை உலகத்துக்கு அனுப்பினார்.

✓ நமது பாவங்களிலிருந்து நம்மை இரட்சிக்கும்படி நமக்காக அவர் மரித்தார்.

✓ நாம் செய்த தீங்குகள் அனைத்துக்குமுள்ள தண்டனையை அவரே ஏற்றுக் கொண்டார்.

➤ **வெள்ளை நிறம் நீதிமானாக்கப்படுவது பற்றியும், கிறிஸ்துவின் நீதி நமது கணக்கில் வைக்கப்படுவதைப் பற்றியும் கூறுகிறது.**

"நாம் அவருக்குள் தேவநீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" (2 கொரிந்தியர் 5:21).

இரட்சிப்பையும் கிறிஸ்துவின் நீதியையும் குறிக்க "வெண்மை" என்ற சொல்லைப் பயன்படுத்துவது சரியானதும் வேதாகமரீதியானதுமாகும் (சங்கீதம் 51:7; ஏசாயா 1:18; தானியேல் 12:10; வெளிப்படுத்தல் 3:4; வெளிப்படுத்தல் 7:14).

✓ நாம் இயேசுகிறிஸ்துவை நமது இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்போது, தேவன் நமது பாவங்கள் அனைத்தையும் மன்னிக்கிறார்.

✓ மேலும் அவர் நம்மை இயேசுகிறிஸ்துவைப் போலத் தூய்மையானவர்களாகவும், சுத்தமானவர்களாகவும் காண்கிறார்.

➤ **பச்சை நிற அட்டை வளர்ச்சியைக் குறித்துக் கூறுகிறது.**

"நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள். அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்" (2 பேதுரு 3:18).

✓ புல், செடிகள், மரங்கள் அனைத்துமே வளர்ந்துகொண்டிருக்கிறது. எனவே கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட சிறுவர்களும் ஆவிக்குரியபிரகாரமாக வளர வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார்.

✓ பிள்ளைகள் தேவனுடைய வார்த்தையை வாசித்து, படித்து, அதற்குக் கீழ்ப் படியும்போது வளர்ச்சியைப் பெறுவார்கள்.

வார்த்தையில்லாத புத்தகத்தைப் பயன்படுத்தும்போது நீங்கள் என்ன சொல்ல வேண்டும்?

சிறுவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும்போது, வார்த்தையில்லாத புத்தகத்தைப் பயன்படுத்தும் வேளையில் நீங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளதைப் பயன்படுத்தலாம்.

தங்க நிறப் பக்கம்

தேவன் இருக்கிறார் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நிச்சயமாக விசுவாசிப்பீர்கள். உங்களைச் சுற்றிலும் இயற்கையின் அதிசயங்களையும் அழகையும் பார்க்கும்போது அவை தானாகவே வந்திருக்க முடியாது என்று தோன்றுகிறது அல்லவா? யாரோ அவைகளை உருவாக்கியிருக்க வேண்டும். அவர்தான் தேவன்!

"தேவன் எப்படியிருக்கிறார் என்று உங்களுக்குத் தெரியுமா? வேதாகமம் தேவனுடைய வார்த்தையாகும். அது தேவன் எப்படிப்பட்டவராக இருக்கிறார் என்று கூறுகிறது. தேவன் பரிசுத்தர் என்பதே தேவனைக்குறித்த மிகவும் முக்கியமான சத்தியமாகும். இதற்கு அர்த்தம் என்ன? அவர் முற்றிலும் தூய்மையானவராகவும், பாவமில்லாதவராகவும் இருக்கிறார். இந்தத் தங்க நிறப் பக்கத்தைப் பார்க்கும்போது எனக்குத் தங்கத்தின் நினைவு வருகிறது. தங்கம் விலைமதிப்பற்ற உலோகம் மட்டுமல்ல, அது தூய்மையானது. அதிலுள்ள அசுத்தங்கள் எல்லாவற்றையும் அகற்றும் வரையில் அதைச் சூடுபடுத்துகிறார்கள். எனவே, இந்தத் தங்க நிறப் பக்கம் தூய்மையானவரும், பாவமில்லாதவருமாக இருக்கும் தேவனை நமக்கு நினைவுபடுத்துகிறது அல்லவா? 'சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்' என்று வேதாகமம் கூறுகிறது (ஏசாயா 6:3). இந்தத் தங்க நிறப் பக்கம் தேவன் வாசம்பண்ணும் பரலோகத்தையும் நமக்கு நினைவுபடுத்துகிறது. அங்கே பாவமே கிடையாது. அந்தப் பரலோக பட்டணத்தின் தெருக்கள் 'தெளிந்த பளிங்குக்கு ஒப்பான சுத்தப் பொன்னாயிருக்கிறது' என்று வேதாகமம் கூறுகிறது.

"ஆனால் தேவன் நீதியுள்ளவராகவும் இருக்கிறார். அதாவது அவர் நியாயமுள்ளவர். அவர் பாவத்தைத் தண்டித்தேயாக வேண்டும். அதைப் பார்க்காமல் அவரால் தமது கண்களை மூடிக்கொள்ளவும் முடியாது. திரும்பிக்கொள்ளவும் முடியாது."

இருண்ட பக்கம்

"இந்த இரண்டாவது பக்கம் தேவனைக் குறிக்கவில்லை. இது நம்மையே குறிக்கிறது. நாம் அனைவருமே இருண்டுபோன பாவமான இருதயங்களோடு பிறந்திருக்கிறோம். எனவேதான் தவறான காரியங்களைச் செய்வது நமக்கு எளிதாக இருக்கிறது. 'எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாகி' என்று வேதாகமம் கூறுகிறது (ரோமர் 3:23). 'உன் தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவாயாக', 'களவுசெய்யாதிருப்பாயாக', 'பொய் சொல்லாதிருப்பாயாக', 'தேவனைத் தவிர வேறு எவரையும் ஆராதிக்கக் கூடாது' போன்ற பல கட்டளைகளைத் தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார். ஆனால் இந்தக் கட்டளைகளை வாசிக்கும்போதே நாம் அவைகளை அல்லது அவைகளில் சிலவற்றையாவது மீறியிருக்கிறோம் என்பதை உணர்கிறோம். அதாவது நாம் பாவம் செய்துவிட்டிருக்கிறோம். தேவன் பரிசுத்தராக இருக்கிறார். அவருடைய பிரசன்னத்தில் பாவமேயில்லை. எனவே நமது பாவங்கள் மன்னிக்கப்படாவிட்டால், நாம் மரிக்கும்போது அவரிடம் சென்று பரலோகத்தில் அவரோடு கூட இருக்க முடியாது.

"தேவன் நீதியுள்ளவராகவும் நியாயமுள்ளவராகவும் இருக்கிறார். அதாவது, வேறு எவராவது நமது இடத்தை எடுத்துக்கொண்டு, நமக்குரிய தண்டனையைத் தாமே ஏற்றுக்கொள்ளாவிட்டால், நமது பாவத்துக்காகத் தேவன் நம்மைத் தண்டித்தேயாக வேண்டும்."

சிவப்பு நிறப் பக்கம்

இந்தச் சிவப்பு நிறப் பக்கம் மெய்யாகவே நமது இடத்தை எடுத்துக் கொண்டு, தண்டனையைத் தாமே ஏற்றுக்கொண்ட ஒருவரை எனக்கு நினைவு படுத்துகிறது. அவரே ஆண்டவராகிய இயேசு. பரலோகத்திலிருந்து அவர் குமாரனாகிய தேவன். பிதாவாகிய தேவன் நம்மை அதிகமாக நேசிக்கிறபடியால், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக அவர் தமது குமாரனை உலகத்துக்கு அனுப்பினார். அவர் முப்பத்துமூன்று ஆண்டுகள் உலகத்தில் வாழ்ந்து, நமக்காகவும் நமது பாவங்களுக்காகவும் சிலுவையில் மரித்தார். எனவேதான் இந்தப் பக்கம் சிவப்பாக இருக்கிறது. அவர் பாவமே செய்யாவிட்டாலும், சிலுவையில் பிதாவாகிய தேவன் நமது பாவங்களுக்காக அவரைத் தண்டித்தார். இதனால் நமது பாவங்களுக்காக நாம் தண்டனையிலிருந்து தப்ப முடிகிறது. அவர் தமது விலைமதிப்பற்ற இரத்தத்தை நமக்காகச் சிந்தினார். 'நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்தார்' என்று வேதாகமம் கூறுகிறது (ரோமர் 5:8). பார்த்தீர்களா, அவர் எவ்வளவாக நம்மை நேசிக்கிறார்!"

ஆனால் அவர் மரித்தவராக இருந்துவிடவில்லை. மூன்று நாட்கள் கழித்து அவர் உயிரோடு எழுந்தார். நித்தியத்துக்குமாக ஜீவிக்கிறார். நாற்பது நாட்களுக்குப் பிறகு அவர் பரலோகத்துக்குத் திரும்பினார். இப்போது அவர் ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் இருக்கிறார். அவர் உங்கள் ஆண்டவராகவும் இரட்சகராகவும் இருக்க விரும்புகிறார்.

வெள்ளை நிறப் பக்கம்

இந்தப் பக்கம் பார்க்க அழகாக இருக்கிறது அல்லவா? இருண்ட பக்கத்துக்கு இது முழுவதுமாக மாறுபட்டிருக்கிறது அல்லவா?

ஆண்டவராகிய இயேசு உங்களுக்காக மரித்தார். நீங்கள் உங்கள் பாவத்திற்கான தண்டனையிலிருந்து விடுபடும்படி உங்களை இரட்சிக்க விரும்புகிறார். இதனால் நீங்கள் மாற்றமடைந்து ஒரு புதிய வாழ்க்கையைத் துவங்க முடியும். ஆனால் இரட்சிக்கப்படுவதற்கும் நீங்கள் ஒன்றைச் செய்தாக வேண்டும்.

நீங்கள் பாவம் செய்திருக்கிறீர்கள் என்பதை உங்கள் இருதயத்தில் உணர்கிறீர்களா? நீங்கள் மெய்யாகவே இரட்சிக்கப்பட விரும்புகிறீர்களா? 'கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்' என்று வேதாகமம் கூறுகிறது (ரோமர் 10:13).

இப்பொழுது நான் உங்களுக்கு ஒரு கதையைச் சொல்லப் போகிறேன். செல்வனின் வீட்டுக்கு அருகே ஒரு ஆறு ஓடியது. அதில் நீந்துவது அவனுக்குப் பிடித்தமான காரியம்! ஒருநாள் அவன் ஆற்றில் நீந்துவதற்குப் போனான். ஆனால் அவன் நீண்டதூரம் போய்விட்டான். நீர் ஆழமாகிக்கொண்டே வந்தது. அவனுடைய காலால் தரையைத் தொட முடியவில்லை. தான் மூழ்கிவிடுவோமோ என்று அவன் பயப்பட்டான்!

"அவன் என்ன செய்தான் தெரியுமா? நீங்கள் என்ன செய்திருப்பீர்கள்? அவன் கரையில் உட்கார்ந்திருந்த தன் அப்பாவை நோக்கி 'அப்பா, என்னைக் காப்பாற் றுங்கள்' என்று கத்தினான். அப்பா வேகமாக நீந்திச் சென்று தன் மகனை மூழ்க விடாமல் காப்பாற்றினார்.

"தான் ஒரு பாவி என்றும், தான் இரட்சிக்கப்பட வேண்டும் என்றும் அறிந்த ஒரு பிள்ளை ஆண்டவராகிய இயேசுவிடம் தன்னைக் காப்பாற்றும்படி வேண் டிக்கொள்ள வேண்டும் என்றும் வேதாகமம் கூறுகிறது. நீங்கள் பாவத்திலிருந்து இரட்சிக்கப்படும்படியாக அவரிடம் வேண்டிக்கொண்டால் அவர் நிச்சயம் அதைச் செய்வார். அப்போது நீங்கள் தேவனைவிட்டுப் பிரிக்கப்படமாட்டீர்கள். இப்போதே நீங்கள் உங்கள் இருதயத்தில் உங்களை இரட்சிக்கும்படி ஆண்டவராகிய இயேசு விடம் கேட்டுக்கொள்வீர்களானால் அவர் உடனே அதைச் செய்வார் என்று வேதாக மம் கூறுகிறது!

"நீங்கள் இரட்சிக்கப்பட விரும்பினாலும், எப்படி என்று உங்களுக்குத் தெரியா விட்டால், வகுப்பு முடிந்தபின்னர் நான் அதை உங்களுக்குத் தெளிவாக விளக்கிக் கூறுவேன். கூட்டம் முடிந்தபின்னரும் உங்கள் இடத்தில் அப்படியே அமர்ந்திருங் கள். நான் உங்களிடம் வருவேன்.

"நீங்கள் உண்மையாகவே இரட்சிக்கப்பட விரும்புகிறீர்களா? உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறீர்களா? நீங்கள் மாற்றம் பெற்று தேவனுக்குப் பிரியமான வாழ்க்கை வாழ விரும்புகிறீர்களா? அப்படியானால், நீங்கள் இருக்கும் இடத்திலேயே உங்கள் இருதயத்தில் ஆண்டவராகிய இயேசு விடம் வேண்டிக்கொள்வீர்களா? நீங்கள் சத்தமாக ஜெபிக்க வேண்டும் என்று அவசியமில்லை. அவரை அழைத்து உங்களை இரட்சிக்கும்படி வேண்டிக்கொள் ளுங்கள். அவர் அதைச் செய்வார். 'கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளு கிற எவனும் இரட்சிக்கப்படுவான்'. அவர் எப்போதுமே தாம் வாக்குக்கொடுத்த படியே செய்வார்."

பச்சை நிறப் பக்கம்

இரட்சிக்கப்பட்ட பிள்ளை வளர்ச்சியைப் பெறுவது எவ்வாறு என்பதையும் அவன் எவ்வாறு இன்னுமதிகமாகக் கிறிஸ்துவைப்போல ஆக முடியும் என்பதையும் காட்டப் பின்னால் இந்தப் பக்கத்தைப் பயன்படுத்தலாம் (1 பேதுரு 2:3).

"நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்" (1 பேதுரு 2:3).

- அவன் தனது வேதாகமத்தை வாசித்து, கீழ்ப்படிவதின்மூலமாக வளர்ச்சியைப் பெறுவான்.
- ஒழுங்காகத் தேவனோடு பேசுவதின்மூலமாக அவன் வளர்ச்சியைப் பெறுவான்.

- தான் ஆண்டவராகிய இயேசுவை விசுவாசிப்பதை மற்றவர்களுக்குக் கூறுவதின் மூலமாக வளர்ச்சியைப் பெறுவான்.
- தான் ஏதாவது தவறு செய்திருந்தால், தன் பாவத்தைத் தேவனிடம் அறிக்கையிடுவதின்மூலமாக அவன் வளர்ச்சியைப் பெறுவான். அவன் மறுபடியுமாக இரட்சிக்கப்பட வேண்டிய அவசியமில்லை.
- மற்ற கிறிஸ்தவர்களோடு ஒழுங்காக ஒன்று கூடுவதின் மூலமாகவும், ஒரு நல்ல சபைக்குச் செல்வதின் மூலமாகவும் அவன் வளர்ச்சியைப் பெறுவான்.

நீங்கள் எப்போது வார்த்தையில்லாத புத்தகத்தைப் பயன்படுத்த வேண்டும்?

நீங்கள் வார்த்தையில்லாத புத்தகத்தின் "செய்தியைப்" புரிந்துகொண்ட பிறகு மூன்றில் ஒரு வழியில் அதைப் பயன்படுத்த ஆயத்தமாக இருக்கிறீர்கள்:

- ஒரு சபை ஆராதனையிலோ அல்லது வேறு கூட்டத்திலோ பேசுவதற்கு உங்களுக்குக் குறுகிய நேரமே (எடுத்துக்காட்டாக, பத்து நிமிடங்கள்) இருக்குமானால், நீங்கள் சுவிசேஷத்தைக் குறித்த ஒரு குறுகிய எளிமையான விளக்கத்தைக் கொடுப்பதற்கு அதன் ஐந்து பக்கங்களையும் பயன்படுத்தலாம்.
- நீங்கள் ஒரு வேதாகமப் பாடத்தைப் போதித்துக்கொண்டிருப்பீர்களானால், நீங்கள் போதிப்பதை விளக்கும்படி இடையிடையே வார்த்தையில்லாத புத்தகத்தைப் பயன்படுத்தலாம். நீங்கள் போதிக்கும் வேறொரு காரியத்துக்குத் தெளிவான விளக்கம் கொடுப்பதற்காகவே நீங்கள் வார்த்தையில்லாத புத்தகத்தைப் பயன்படுத்துகிறீர்கள். சுவிசேஷச் செய்தியை விளக்க அதை இந்த வகையில் பயன்படுத்தும்போது அது அதிக உதவியாக இருக்கும்.
- நீங்கள் இரட்சிக்கப்படாத ஒரு பிள்ளைக்கு ஆலோசனை கூறி, அந்தப் பிள்ளையைக் கிறிஸ்துவிடம் வழிநடத்த முயலும்போது, துவக்கத்தில் சுவிசேஷத்தின் செய்தியைத் தெளிவாகவும், எளிமையாகவும், சுருக்கமாகவும் கொடுப்பதற்கும் பிள்ளை சுவிசேஷத்தைப் புரிந்துகொண்டிருக்கிறானா என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்கும் இந்தப் புத்தகத்தைப் பயன்படுத்தலாம். ஆனால் பிள்ளையைக் கிறிஸ்துவிடம் வழிநடத்தும்போது நீங்கள் வேதாகம வசனத்தையே பயன்படுத்த வேண்டும்.

அத்தியாயம் 9
அவர்களைப் போஷியுங்கள்
இரட்சிக்கப்பட்ட சிறுவர்கள் வளருவதற்கு உதவுவது எப்படி ?

அத்தியாயத்தின் சுருக்கம்

(இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளை வளர்ச்சிபெறச் செய்வது உங்கள் இரண்டாவது பொறுப்பாகும்).

- **புரிந்துகொள்ள வேண்டிய ஆறு அடிப்படைக் கொள்கைகள்.**
- **கிறிஸ்துவை விசுவாசிப்பதாக அறிக்கையிடும் பிள்ளையை ஒரு கிறிஸ்தவனாக ஏற்றுக்கொள்ளுங்கள்.**
- **அவனுடைய வாழ்க்கையில் ஆவியின் கனி காணப்பட கவனத்தோடு ஜெபியுங்கள்.**
  - ✓ அவன் இரட்சிக்கப்பட்டிருப்பானானால், ஓரளவாவது நிரூபணம் காணப்படும் - சிறிதளவு மாற்றமாவது காணப்படும்.
  - ✓ அதைக் கண்டால் களிகூருங்கள்.
  - ✓ உங்களால் பிரச்சினையைக் காண முடியாவிட்டால் அதைக் கண்டுபிடியுங்கள்.
- **இரட்சிக்கப்பட்ட பிள்ளையின் தேவைகளைப் புரிந்துகொள்ளுங்கள்.**
- **அவர்கள் என்ன செய்யவேண்டுமென்று இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளுக்குப் போதியுங்கள்:**
  - ✓ உண்பதற்கு
  - ✓ நடப்பதற்கு
  - ✓ பேசுவதற்கு
  - ✓ கீழ்ப்படிவதற்கு

கீழ்ப்படிவதற்கு

இன்னும் இயேசுகிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளாத பிள்ளைகளுக்குச் சுவிசேஷத்தை அறிவிப்பது அத்தியாவசியமானதாகும். ஆனால் அது உங்களுடைய ஊழியத்தின் ஒரு பகுதியேயாகும். உங்களுடைய பொறுப்புக்களில் ஒன்றாகும். உங்கள் வகுப்பில் கிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ள பிள்ளைகளும் இருப்பார்கள். அவர்கள் ஆவிக்குரிய பிரகாரமாக வளர்ச்சியைப் பெறும்படி, ஒவ்வொரு வகுப்பிலும் அவர்களுக்கு ஆவிக்குரிய போஷாக்கை அளிப்பது உங்களுடைய இரண்டாவது பொறுப்பாகும். *"என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக"* என்று நமது ஆண்டவர் கட்டளையிட்டிருக்கிறார் (யோவான் 21:15). கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள் வளர்ச்சி பெறுமாறு

நீங்கள் ஒரு பொறுப்பைப் பெற்றிருக்கிறீர்கள்

ஆனால் தேவன் தமது நோக்கங்களை நிறைவேற்ற மக்களைப் பயன்படுத்துகிறார். நீங்கள் அந்த மக்களில் ஒருவராக இருக்கிறீர்கள். உங்கள் வகுப்பிலுள்ள இரட்சிக்கப்பட்ட பிள்ளைகள் வளர்ச்சியைப் பெறும்படி நீங்கள் அவர்களுக்குப் போஷாக்களிக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.

இதன்காரணமாக, ஒவ்வொரு வாரமும் உங்களுக்கு நீங்களே இந்தக் கேள்வியைக் கேட்டுக்கொள்ள வேண்டும்:

இரட்சிக்கப்பட்ட பிள்ளைகள் தங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையில் உதவியைப் பெறும்படி நான் அவர்களுக்கு ஆவிக்குரிய உணவைக் கொடுத்திருக்கிறேனா?"

இந்தப் போஷாக்களிக்கும் பணியில் தேவனுடைய வார்த்தையே உங்களுக்கு முக்கிய உபகரணமாக இருக்கிறது. பிள்ளைகளால் ஒருமுகப்படுத்தப்பட்ட கவனத்தோடு அதிக நேரம் வேதாகமத்தை வாசிக்க முடியாது. ஆனால் திறமையுள்ள ஒரு ஆசிரியர் அதை விளக்கிக் கூறும்போது அவர்கள் அதற்குச் செவிகொடுக்கிறார்கள்.

உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" (யோவான் 17:17).

நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்" (1 பேதுரு 2:3).

வேதாகமப் பாடமே உங்கள் போதனைச் செயல்திட்டத்தில் இந்தப் போஷாக்கைக் கொடுப்பதற்கான முக்கியமான இடமாகும். ஆனால் கீழ்க்கண்ட ஏதேனும் வழிகளிலும்கூட நீங்கள் உங்கள் பிள்ளைகளைப் போஷிக்கலாம்:

- ஒரு சுருக்கமான, கோட்பாட்டுப் பாடத்தைத் தனியாகப் போதித்தல்.
- அருட்பணியைப் பற்றியும் சாட்சி கூறுவதைக் குறித்தும் போதித்தல்.
- வேத வசனங்களைக் கற்றுக்கொள்ளுமாறு அவர்களை ஊக்குவித்தல்.
- பொது இடங்களிலோ அல்லது தனிமையாகவோ எப்படி ஜெபிப்பது என்பதை அவர்களுக்குக் கற்றுக்கொடுத்தல்.
- தினசரி அமைதியான வேளையின் மதிப்பையும் அவசியத்தையும் குறித்துப் போதித்தல்.

அவர்கள் எதைத் தெரிந்துகொள்வது அவசியம்?

இரட்சிக்கப்பட்ட சிறுவர்கள் தெரிந்துகொள்ள வேண்டிய சத்தியங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளைப் போதிக்க வேண்டும்:

- இரட்சிப்பின் நிச்சயம்
- வேதாகமம் தேவனால் ஏவப்பட்டு எழுதப்பட்டது. அதை ஒவ்வொரு நாளும் வாசிப்பதின் முக்கியத்துவம்.
- ஜெபிக்கும் பழக்கத்தின் முக்கியத்துவம்.

- அடிப்படை வேதாகமக் கோட்பாடுகளைப் புரிந்துகொள்ளுதல்.
- அவர்கள் தங்கள் வாழ்க்கையை இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்து, அவருடைய ஆளுகைக்குக் கீழ்ப்படிவதின் அவசியம்.
- கிறிஸ்தவ நடத்தை குறித்த சுருக்கம். தேவன் அவர்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார்.
- அவர்கள் தங்கள் வாழ்க்கையில் பாவத்தை எவ்வாறு கையாண்டு, அதை மேற்கொள்ளுவது.
- மற்றவர்களுக்குச் சாட்சி கூறுவது எப்படி.
- பெற்றோருக்குக் கீழ்ப்படிவதின் முக்கியத்துவம்.
- சபைக்கும் ஞாயிறு பள்ளிக்கும் செல்வதின் முக்கியத்துவம்.

ஆறு அடிப்படைக் கொள்கைகளைப் புரிந்துகொண்ட பிறகு, நாம் நமது தொடர்பணியில் மேற்கொள்ள வேண்டிய சில படிகளைக் குறித்தும் தெரிந்து கொள்ள வேண்டும்.

கிறிஸ்துவை விசுவாசிப்பதாக அறிக்கையிடும் பிள்ளையை ஒரு கிறிஸ்தவனாக ஏற்றுக்கொள்ளுங்கள்

ஒரு பிள்ளை கிறிஸ்துவை மெய்யாகவே ஏற்றுக்கொண்டிருப்பதாகத் தோன்றினால், வேறு வகையாக நிரூபிக்கப்படாவிட்டால், அவனை மறுபடியும் பிறந்த ஒரு கிறிஸ்தவனாக ஏற்றுக்கொள்ளுங்கள். விசாரணையில் இருக்கும் ஒருவன் குற்றவாளி என்று நிரூபிக்கப்படும்வரையில் அவன் குற்றமற்றவனாகவே இருக்கிறான் என்று சட்டம் கூறுகிறது. எனவே மனமாற்றம் பெற்ற பிள்ளையைக் குறித்தும் நீங்கள் இதே அணுகுமுறையைக் கையாள வேண்டும். தான் ஒரு கிறிஸ்தவன் அல்ல என்பதை அவன் முடிவாகக் காட்டாத வரையில் அவன் ஒரு கிறிஸ்தவனாகவே கருதப்பட வேண்டும். துவக்ககாலச் சபையினர் கிறிஸ்துவில் விசுவாசத்தை அறிக்கையிட்டவர்களை மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்களாக ஏற்றுக்கொண்டார்கள் (பார்க்க, அப்போஸ்தலர் 2:41, 16:33). அல்லது அவன் தனது சோதனை காலத்தைக் கடந்துவரும் வரையில் அவனுடைய இரட்சிப்பைக் குறித்துச் சந்தேகம் கொள்ள வேண்டியிருக்கும். ஆனால் இப்படிப்பட்ட மனோபாவம் குறை கூறும்விதமாகவும், பரிவில்லாததாகவும் காணப்படுகிறது. இது பிள்ளைக்குத் தெரிய வரும்போது அவன் தனது ஊக்கத்தை இழந்துவிடுகிறான். சந்தேகச் சூழ்நிலையில் அவன் ஆவிக்குரிய வளர்ச்சியைப் பெறுவது கடினமாகும்.

ஆனால், ஒரு பிள்ளை மறுபடியும் பிறக்காதிருக்கும்போது, தான் மறுபடியும் பிறந்ததாக நம்பும்படி அவனை ஊக்குவிப்பதையும் நீங்கள் விரும்ப மாட்டீர்கள். தேவன் மட்டுமே இதை அறிவார். ஆனால் காலம் கடக்கும்போது பிள்ளை நடந்து கொள்ளும் முறையிலும், பேசும் முறையிலும் புதிய பிறப்பு நிரூபணமாகும். இதற்கிடையே, வேறு எதிர்மறையான காரியம் அவனுடைய வாழ்க்கையில்

காணப்படாவிட்டால், பிள்ளை கூறுகிறபடியே அவனை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அவனுடைய வாழ்க்கையில் ஆவியின் கனி காணப்படும்படியாக கவனத்தோடு ஜெபியுங்கள்

பிள்ளை ஏதேனும் தவறுசெய்யும்போது அவனைக் குற்றப்படுத்தும் வகையில் குற்றப் பார்வையோடு நீங்கள் அவனைக் கவனிக்கக் கூடாது. அவன் மெய்யாகவே மறுபடியும் பிறந்திருந்தால், அவனுடைய வாழ்க்கையில் மாற்றம் ஏற்படும். அது சிறியதாகவும் தாமதித்து வருவதாகவும் இருந்தாலும் மாற்றம் நிச்சயமாகக் காணப்படும்.

அவர்களுடைய *கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்*" (மத்தேயு 7:20).

இப்படியிருக்க, ஒருவன் (அல்லது ஒரு பிள்ளை) *கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்*" (2 கொரிந்தியர் 5:17).

நீங்கள் பின்பற்ற வேண்டிய மூன்று முக்கியமான வழிமுறைகள் உள்ளன:

- **கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் பிள்ளையிடமிருந்து அளவுக்கு அதிகமாக எதிர்பாராதிருங்கள்**

  பல ஆசிரியர்கள் இங்கே தவறுசெய்துவிடுகிறார்கள். இரட்சிக்கப்பட்ட பிள்ளைகள் உடனடியாக முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்களைப் போல ஆகிவிட வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். அப்படியிராவிட்டால் ஏமாற்றமடைகிறார்கள். தாங்கள் கிறிஸ்துவுக்குள் வழிநடத்திய பிள்ளைகள் தவறான செயல்களைச் செய்வதைக் காண்கிறார்கள். உடனடியாக, அவர்கள் இரட்சிக்கப்படவேயில்லை என்று நினைத்துக்கொள்கிறார்கள். ஒரு பெண் ஒருமுறை என்னிடம் "என் ஞாயிறுபள்ளியில் ஒரு சிறுமி இருக்கிறாள். அவள் தான் ஒரு கிறிஸ்தவள் என்று சொல்லிக்கொண்டாலும், அவள் கிறிஸ்தவள் இல்லை" என்று கூறினாள். அவளுக்கு எப்படித் தெரியும் என்று நான் கேட்டேன். "ஏனென்றால் அவளுக்கு அடிக்கடி கோபம் வருகிறது" என்று அவள் பதிலளித்தாள். அப்படியானால் பெரியவர்களுக்கு அது பொருத்தமில்லையா என்று நான் கேட்டேன்.

  இரட்சிக்கப்பட்ட பிள்ளையிடமிருந்து நீங்கள் அளவுக்கு அதிகமாக எதிர்பார்க்கக் கூடாது. ஒரு பெரியவரைப் போல அவன் நடந்துகொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கக்கூடாது. உங்கள் சொந்த தகுதிநிலைகளைக் கொண்டு நீங்கள் அவர்களை நிதானிக்கவும் கூடாது, அல்லது இளைய தோள்களில் முதிய தலைகளை எதிர்பார்க்கவும் கூடாது. சிறுவர் கூட்டங்களில் குறும்பு செய்யும் ஒரு சிறுவன் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டால், உடனடியாக அவன் தன் குறும்புத்தனத்தை விட்டுவிட்டு, தேவதூதரைப் போல ஆகிவிடுவான் என்று அர்த்தம் கிடையாது. அவன் தவறு செய்யும்போதோ, கோபப்படும்போதோ, பொய்கூறும்போதோ அல்லது கெட்டவார்த்தை கூறும்போதோ

நீங்கள் உடனடியாக அவன் ஒரு கிறிஸ்தவன் அல்ல என்ற முடிவுக்கு வந்து விடக் கூடாது. இவைகளின் அடிப்படையில் மட்டும் ஒரு பிள்ளையின் மன மாற்றத்தை நீங்கள் சீர்தூக்கிப் பார்க்கக் கூடாது.

இரட்சிக்கப்பட்ட சிறுவன் குறைந்தபட்சம் மூன்று வழிகளில் வயதுக்கு வந்த விசுவாசியைவிட வேறுபட்டிருக்கிறான்:

✓ ஒரு பிள்ளை தனது குடும்பம் மற்றும் நண்பர்களின் அதிகமான தாக்கத்தின் கீழாக இருக்கிறான்:

வாரத்துக்கு ஒருமுறை ஒரு சிறுவன் ஒரு மணி நேரம் ஒரு ஞாயிறு பள்ளிக்கோ அல்லது நற்செய்தி கொடுக்குமிடத்துக்கோ வருகிறான். ஆனால் அவன் அதிகமான நேரத்தை வீட்டில் செலவழிக்கிறான். கிறிஸ்து வுக்குள் வந்த ஒரு பிள்ளை கெட்ட வார்த்தையைப் பேசும்போது, அவன் ஆண்டுக்கணக்காக இத்தகைய வார்த்தைகளை வீட்டில் கேட்டு வந் திருக்கலாம் என்பதை நீங்கள் உணர வேண்டும்.

✓ ஒரு சிறுவன் தனது பெற்றோரின் அதிகாரத்தின் கீழாக இருக்கிறான்:

ஒரு பெரியவரால் எங்கே செல்வது, என்ன செய்வது என்பதைத் தாமா கவே தெரிந்துகொள்ள முடியும். ஆனால் பிள்ளையால் அப்படிச் செய்ய முடியாது. எடுத்துக்காட்டாக, நற்செய்தி கொடுக்குமிடத்தில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஒரு பிள்ளை மறுபடியும் அங்கே செல்ல அனுமதி மறுக் கப்படலாம். தனது முதல் தபால் வழி வேதாகமப் பாடத்தைப் பெறும் பிள்ளை அதை நிரப்பி அனுப்புவதற்கு அனுமதி மறுக்கப்படலாம்.

எனவே, பிள்ளையின் குடும்பத்தாரோடு நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வது நமக்கு அவசியமாக இருக்கிறது.

✓ ஒரு பிள்ளையின் உணர்வுகள் வெளியரங்கமாக இருக்கின்றன.

ஒரு பிள்ளையைப் பொருத்தவரையில் "அகத்தின் அழகு முகத்தில் தெளி வாகத் தெரிகிறது". பெரியவர்களைப் போல அவனால் தனது உணர்வு களை மறைத்துக்கொள்ள முடிவதில்லை. எடுத்துக்காட்டாக, மற்றொரு பிள்ளையை அடிக்க வேண்டுமென்று அவனுக்குத் தோன்றினால், அவன் உடனே அடித்துவிடலாம். கோபத்தை வெளிப்படுத்த வேண்டுமென்று அவன் உணர்ந்தால் உடனே அப்படிச் செய்யலாம். பெரியவர்களைப் போல அவனால் சுயகட்டுப்பாட்டைச் செயல்படுத்த முடிவதில்லை.

எனவே இரட்சிக்கப்பட்ட பிள்ளை, பெரியவர்களான விசுவாசிகள் செய்யாத செயல்களைச் செய்யலாம், கூறாத வார்த்தைகளைக் கூறலாம். பெரியவர்கள் இவ்வாறு செய்யாதிருப்பதற்குக் காரணம் அவர்கள் அதிக மான சுய கட்டுப்பாட்டைப் பெற்றிருப்பதேயாகும். பெரியவர்களால் தங்கள் உணர்வுகளை மறைத்துக்கொள்ள முடிகிறது, வார்த்தைகளையும் கோபத்தையும் அடக்கிக்கொள்ள முடிகிறது. ஆனால் பிள்ளைகளால் அது கூடாத காரியமாகும்.

- ***அவனுடைய வாழ்க்கையில் ஆவியின் கனியை நீங்கள் காண்பீர்களானால் களிகூருங்கள்.***

கலாத்தியர் 5:22 வசனம் *"ஆவியின் கனியோ, அன்பு..."* என்று கூறுகிறது. கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஒரு பிள்ளையின் வாழ்க்கையில், முதலாவதாக இந்த ஆவியின் கனியையே எதிர்பார்க்க வேண்டும்.

ஒரு பிள்ளை பல்வேறு வழிகளில் இந்தக் கனியைக் காட்டலாம்:

✓ இரட்சகர்மீதான அன்பு - கிறிஸ்துவைப் பற்றி அதிகமாக அறிந்து கொள்ளும் வாஞ்சை.

✓ தேவனுடைய வார்த்தையின்மீது அன்பு - வேதாமத்திலும் தேவனுக் கடுத்த காரியங்களிலும் ஆர்வம்.

✓ ஜெபிப்பதில் அன்பு - ஜெபித்தல் தேவனோடு பேசுவதில் வளர்ந்துவரும் வாஞ்சை.

✓ மற்ற கிறிஸ்தவர்களின்மீது அன்பு - கிறிஸ்துவை நேசிக்கும் மற்றவர்க ளோடு இருக்க வேண்டுமென்ற வாஞ்சை.

✓ மற்றவர்களின் இழந்துபோன ஆத்துமாக்களின்மீது அன்பு - மற்றவர்களும் கிறிஸ்துவிடம் வருவதைக் காணும் அக்கறை.

அல்லது அவனுடைய நடத்தையில் ஆவியின் கனியின் மற்ற எட்டின் அம்சங் களை நீங்கள் ஓரளவாவது காணலாம் *(சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்).*

மேலும் கூறப்பட்டுள்ள ஏதேனும் வகையில் அல்லது வகைகளில் பிள்ளை தனது அன்பை வெளிப்படுத்துவதை நீங்கள் காண்பீர்களானால், அல்லது அவனது நடத்தையில் ஏதாவது மாற்றத்தைக் காண்பீர்களானால் களிகூருங்கள், ஊக்கம் கொள்ளுங்கள். இப்படிப்பட்ட கனி சிறியதாகவும், முதிர்ச்சியடையாததாகவும் இருக்கலாம். என்றாலும், அது கனியாகும்; புதிய பிறப்புக்கு அது நிருபணமாக இருக்கலாம்.

ஏதேனும் ஒரு வேளையில் ஒரு பிள்ளையின் வாழ்க்கையில் ஒன்றுக்கு மேற்பட்ட இந்தக் கனிகள் வெளிப்படலாம். அது வார்த்தையின் மூலமாகவோ, பார்வை அல்லது கண்ணீர் அல்லது கூட்டத்தில் அமைதியான மனோபாவம் அல்லது உங்களோடு பேசும்போது சில வார்த்தைகளின் மூலமாகவோ வெளிப் படலாம். ஆனால் நீங்கள் கவனிப்பீர்களானால், புதிய ஜீவனின் துளிர்ப்பைக் காணலாம். முதலில் சிறிதாகத் தோன்றும் இது பின்னர் கரிசனையோடும், விடா முயற்சியுடனும், தீவிரமாகவும், தயவோடும், நல்ல ஆயத்தத்தோடும் போதித்து வரும்போது அதிகமான வளர்ச்சியைப் பெறுகிறது.

நிலக்கரியை நீங்கள் எரிக்கும்போது, முதலில் தாளை வைக்கிறீர்கள், பிறகு மரக்கட்டையையும் பிறகு நிலக்கரியையும் வைக்கிறீர்கள். தாளைக் கொளுத்தி,

நெருப்பு பிடித்துக்கொள்ளுமாறு செய்கிறீர்கள். எரியும் தாள் மரக்கட்டையை எரியச் செய்கிறது. அது நிலக்கரியை எரியச் செய்கிறது. நன்றாக எரிகிறது என்று நினைத்துக் கொண்டு வீட்டு வேலைகளைக் கவனிக்கச் செல்கிறீர்கள். ஆனால் சற்றுநேரம் கழித்துப் பார்க்கும்போது, நெருப்பு அணைந்து விட்டிருக்கிறது. நிலக் கரி கறுப்பாகவே இருக்கிறது! எரியாத மரக்கட்டையும், நிலக்கரியையும் அகற்றி விட்டு மீண்டும் எரிய வைக்கலாம் என்று செல்கிறீர்கள். அப்போது நிலக்கரியில் சிறிய நெருப்புக் கொழுந்தைக் காண்கிறீர்கள். அது சிறியதாக இருந்தாலும், அது பற்றிக்கொண்டிருக்கிறது! நீங்கள் மறுபடியும் துவங்க வேண்டிய அவசியமில்லை! பதிலாக, சிறிய நெருப்பு கொழுந்து விட்டு எரியும்படி நீங்கள் தூண்ட வேண்டும். நெருப்பு பரவும்போது நிலக்கரியின் கறுப்பு நிறம் மறைந்துவிடுகிறது. கறுப்பு நிலக்கரியை மட்டுமே நீங்கள் கவனித்துக்கொண்டிருப்பீர்களானால், ஊக்கமிழந்து போவீர்கள். நெருப்பு அதிகரிக்கும்படி அதைத் தூண்டிவிடுவதே உங்கள் வேலை யாகும். அப்போது அது நில்க்கரியை எரியச் செய்துவிடும்!

இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளும் இப்படியேதான் இருக்கிறார்கள். கிறிஸ்து வின் சாயலில் பற்றிக்கொள்ளாத அவர்கள் வாழ்க்கையின் அம்சங்களை' ("கறுப்பு நிலக்கரி") மட்டும் பார்த்து, ஊக்கமிழந்து போகாதீர்கள். "நெருப்பைத்" தூண்டி விடுவதையே நாடுங்கள். அவர்கள் வெளிக்காட்டும் ஆக்கபூர்வமான கிறிஸ்தவ நற்குணங்களில் அவர்களைத் தூண்டிவிடுங்கள். இந்த வகையில் அவர்களுடைய வாழ்க்கையின் பிற அம்சங்களும் மாற்றப்படும்.

➤ ***அவனுடைய வாழ்க்கையில் ஆவியின் கனியைக் காண முடியா விட்டால், பிரச்சினையைக் கண்டறியுங்கள்.***

சிறிது காலம் கழித்தும்கூடப் பிள்ளையின் வாழ்க்கையில் எந்த மாற்றத்தை யும் காணமுடியாவிட்டால், அவனிடம் தனிப்பட்ட முறையில் பேசி, எது தவறு என்பதைக் கண்டறியுங்கள். கிறிஸ்தவ வாழ்க்கையில் கனிகொடாமல் இருப் பதற்கும், வளர்ச்சியில்லாமல் இருப்பதற்கும் பல்வேறு காரணங்கள் இருக் கின்றன:

- ✓ இரட்சிப்பின் நிச்சயம் குறைவுபடுதல், அல்லது அதை இழத்தல்.
- ✓ தான் எடுத்துள்ள படியைக் குறித்துக் குழப்பம் அல்லது சரியாகப் புரிந்து கொள்ள முடியாமை. அவன் குழப்பமடைந்திருக்கலாம். எடுத்துக்காட் டாக, விசுவாசத்தினால் மட்டுமே இரட்சிப்பு என்பதைப் புரிந்துகொள்ளா மல், ஒருவன் நற்கிரியைகளினால் இரட்சிக்கப்படுகிறான் என்றோ அல்லது விசுவாசத்தோடுகூட நற்கிரியைகளும் சேர்வதினால் இரட்சிக்கப்படுகிறான் என்றோ நினைத்துக்கொண்டிருக்கலாம். அவனைக் கிறிஸ்துவுக்குள் வழி நடத்தியவர் இதை எளிமையாகவும் தெளிவாகவும் விளக்காமலிருக்கலாம்.
- ✓ வீடு, பள்ளி அல்லது பிற சிறுவர் சிறுமியரின் தவறான தாக்கம் அல்லது அழுத்தங்கள்.

- ✓ அவனுடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் ஏதேனும் பாவம், அதைக் குறித்து அவன் ஆண்டவரோடு இடைபடாமல் இருக்கலாம்.

இதில் ஏதேனும் ஒரு காரியம் உண்மையென்று நீங்கள் கண்டால், மறுபடியுமாக அவனுக்கு வேதாகமத்தைப் போதித்து, பொருத்தமான வேதவசனங்களைப் பயன்படுத்தி, அவனுடைய பிரச்சினைக்குரிய பதிலை எடுத்துக் கூறுங்கள்.

- ✓ கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஒரு பிள்ளை ஆவிக்குரியபிரகாரமாக வளர்ச்சியைப் பெறாவிட்டால், பெரும்பாலும் அறிக்கையிடப்படாத பாவமே அதற்குக் காரணமாக இருக்கும். அப்படியானால், 1 யோவான் 1:9 வசனத்தை நீங்கள் பிள்ளைக்கு விளக்கிக் கூற வேண்டும். அவன் ஜெபித்து, ஆண்டவரிடம் தனது பாவத்தை அறிக்கையிட்டு, மன்னிப்பைக் குறித்த அவருடைய வாக்குத்தத்தத்தை உரிமையாக்கிக்கொள்ளும்படி ஊக்குவிக்க வேண்டும்.
- ✓ நீங்கள் போதுமான வகையில் அவனுக்குப் போஷாக்களிக்கத் தவறுவது வளர்ச்சிக் குறைவுக்கு மற்றொரு காரணமாகும். அவனை நீங்கள் புறக்கணிக்கக் கூடாது. இதுவே காரணம் என்று நீங்கள் அறிந்தால், அவனிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுங்கள். பிறகு அந்தப் பிள்ளையோடு உங்கள் உறவைப் புதுப்பித்துக்கொள்வதில் தீர்மானமாக இருங்கள்.
- ✓ அவன் இரட்சிக்கப்படாமலே இருப்பது கனி அல்லது வளர்ச்சிக் குறைவுக்குக் காரணமாக இருக்கலாம்.

பிள்ளை தான் செய்ததைப் புரிந்துகொண்டிருக்கவில்லை. அவன் உண்மையில் கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கவில்லை. இதை அவனுக்குத் தெரிவியுங்கள். பிறகு மறுபடியுமாக அவன் விளங்கிக்கொள்ளக் கூடிய வகையில் இரட்சிப்பின் செய்தியை எடுத்துக் கூறுங்கள். பிறகு, அவன் இப்போது கிறிஸ்துவை விசுவாசிக்க ஆயத்தமாக இருக்கிறானா என்று கேளுங்கள். அப்படியானால், நீங்கள் அவனைக் கிறிஸ்துவிடம் வழிநடத்த வேண்டும்.

பிள்ளை தான் கிறிஸ்துவை விசுவாசிப்பதாக அறிக்கையிட்டாலும், உண்மையில் அப்படிச் செய்யாதிருப்பதற்கு வேறு காரணங்களும் இருக்கலாம். எவரேனும் அவனைக் கிறிஸ்துவிடம் வழிநடத்த முயன்றபோது, அவன் உண்மையாக நடந்துகொள்ளவில்லை. அல்லது எவரையேனும் பிரியப்படுத்த அவன் வெளியில் அறிக்கையிட்டிருக்கலாம் அல்லது ஆர்வத்தின் காரணமாக அவ்வாறு செய்திருக்கலாம். இவைகளில் எந்தக் காரணமாவது உண்மை என்று நீங்கள் கண்டுபிடித்தால், அவன் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதற்கு அவனுடைய வாழ்க்கையில் எந்த அடையாளமும் காணப்படாவிட்டால், மறுபடியுமாக நீங்கள் அவனுக்கு ஆலோசனை கூற வேண்டும். இப்போது அவன் உண்மையிலேயே கிறிஸ்துவைத் தனது

ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ள விரும்புவானேயாகில் படிப்படியாக அவனை வழிநடத்துங்கள்.

அவன் மெய்யாகவே மறுபடியும் பிறக்கவில்லை என்ற நிச்சயத்தை நீங்கள் பெற்றால் மட்டுமே, மறுபடியுமாக அவனுக்குச் சுவிசேஷத்தை அறிவித்து அவனைக் கிறிஸ்துவுக்குள் வழிநடத்த வேண்டும். இதில் கவனமாக இருங்கள். அல்லது ஒவ்வொரு முறை அவனுக்குச் சந்தேகம் வரும் போதும், அல்லது தவறுசெய்யும்போதும் மறுபடியுமாக இரட்சிக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தை அவன் பெற்றுவிடலாம்.

என்ன செய்ய வேண்டும் என்பதைக் குறித்து நீங்கள் சந்தேகப்பட்டால், அவன் கிறிஸ்துவிடம் ஜெபிக்கும்படியும், என்றைக்குமாக இந்தக் காரி யத்தைத் தெளிவுபடுத்திக்கொள்ளும்படியும் அவனை ஊக்குவியுங்கள். அவன் இரட்சிக்கப்பட்டானா என்பதைக் குறித்து உங்கள் இருவருக்குமே சந்தேகம் இருக்கிறது என்று அவனிடம் தெரிவித்து, இந்த நிச்சயமில்லா மையைக் குறித்து ஆண்டவராகிய இயேசுவிடம் ஜெபிப்பது நலம் என்று கூறுங்கள். தான் இரட்சிக்கப்படாவிட்டால், தன்னை இரட்சிக்கும்படி ஆண்டவராகிய இயேசுவிடம் அவன் வேண்டிக்கொள்ளுமாறு செய் யுங்கள்.

இரட்சிக்கப்பட்ட பிள்ளையின் தேவைகளைப் புரிந்துகொள்ளுங்கள்

தான் மெய்யாகவே மறுபடியும் பிறந்த கிறிஸ்தவன் என்பதைப் பிள்ளை நிரூபிப்பதற்குக் காத்திராமல், நீங்கள் சந்திக்க வேண்டிய தற்போதைய தேவை களை அவன் பெற்றிருக்கிறான் என்பதை நீங்கள் புரிந்துகொண்டு அதற்கேற்பச் செயல்பட வேண்டும்.

அவனுக்கு இவை தேவைப்படுகின்றன:

- அன்பு. அன்பு அனைத்துப் பிள்ளைகளும் புரிந்துகொள்ளக்கூடிய பாஷை யாகும். இரட்சிக்கப்பட்ட பிள்ளை நீங்கள் மெய்யாகவே அவனில் ஆர்வம் கொண்டிருக்கிறீர்கள், அவன் கிறிஸ்தவ வாழ்க்கையில் வளர்ச்சிபெற விரும் புகிறீர்கள் என்பதை அறிய வேண்டும்.
- பொறுமை. இரட்சிக்கப்பட்ட பிள்ளை, குறிப்பாகத் தனது கிறிஸ்தவ வாழ்க் கையின் துவக்கத்தில், பல தவறுகளைச் செய்வான். அவனோடு பொறுமை யாக இருங்கள்.
- புரிந்துகொள்ளுதல். இரட்சிக்கப்பட்ட பிள்ளை இன்னும் "கிறிஸ்துவுக்குள் குழந்தையாக" இருக்கிறான் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.
- ஆவிக்குரிய உணவு. இரட்சிக்கப்பட்ட பிள்ளைக்குத் தேவனுடைய வார்த் தையைப் போதிக்கும் பொறுப்பை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். இதுவே அவனுடைய மாபெரும் தேவையாகும். உணவில்லாத பிள்ளைகள் வளர்ச்சி

பெறுவதில்லை. இதைப் போல ஆவிக்குரிய உணவில்லாமல் அவன் தனது கிறிஸ்தவ வாழ்க்கையில் வளர்ச்சிபெற முடியாது.

இரட்சிக்கப்பட்ட பிள்ளைக்கு அவன் செய்ய வேண்டிய நான்கு காரியங்களைப் போதியுங்கள்

கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுள்ள ஒரு பிள்ளை கிறிஸ்துவுக்குள் குழந்தையாக இருக்கிறான். எந்தப் புதிதாகப் பிறந்த குழந்தையையும்போல அவன் நான்கு காரியங்களைச் செய்யக் கற்றுக்கொள்ள வேண்டும்.

- **உண்பதற்கு**

  "நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசன மாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்" (1 பேதுரு 2:3). பிள்ளை உண்ண வேண்டும் என்பது அத்தியாவசியமானதாகும். தேவ னுடைய வார்த்தையே அவனுக்கு உணவாகும். அவன் உணவருந்தாவிட்டால் பட்டினிகிடந்து துயரப்படுவான். முதலில் அவன் (ஆவிக்குரிய) பாலைக் குடிக்கக் கற்றுக்கொள்வான் (1 பேதுரு 2:3). பிறகு பலமான (ஆவிக்குரிய) ஆகாரத்தை உண்ணக் கற்றுக்கொள்வான் (எபிரெயர் 5:14).

  ✓ அவன் உங்களோடுகூட "உணவருந்த" வேண்டும். முதலில் அவன் நீங்கள் அவனுக்குப் போஷாக்களிப்பதை, வேதாகமத்திலிருந்து போதிப்பதையே அதிகமாகச் சார்ந்திருப்பான். உங்கள் நற்செய்தி கிளப்பிலோ அல்லது ஞாயிறு பள்ளியிலோ எப்போதுமே இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளுக்குப் பொருத்திக் காட்டப்பட வேண்டும்.

  ✓ அவன் தானாக "உணவருந்த" வேண்டும். அவன் தானாகவே எவ்வாறு வேதாகமத்திலிருந்து போஷாக்கைப் பெற முடியும் என்பதை அவனுக் குப் போதிக்க வேண்டும். அதாவது, ஒவ்வொரு நாளும் அமைதியான வேளையில் எவ்வாறு வேதாகமத்தைத் தானாகவே வாசிப்பது என்பதை அவனுக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டும்.

- **நடப்பதற்கு**

  "நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால், ஆவிக்கேற்றபடி நடக்கவும் செய்வோம்" (கலாத்தியர் 5:25).

  "ஆதலால், கர்த்தர்நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லு கிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திர வான்களாய் நடந்து..." (எபேசியர் 4:1).

  கிறிஸ்தவ வாழ்க்கையைப் பற்றிக் குறிப்பிடும்போது, வேதாகமம் "நடத்தல்" என்ற சொல்லைப் பயன்படுத்துகிறது. குழந்தை நடக்கக் கற்றுக்கொள்வது அவசியமாக இருப்பதுபோல, இரட்சிக்கப்பட்ட பிள்ளை நடக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

✓ **அவன் தேவனோடுகூட நடப்பது அவசியமாகும்** (கொலோசெயர் 1:10). தேவனுக்கு அவனுடைய கடமையைக் குறித்த கிறிஸ்தவ நடத்தை அவனுக்குப் போதிக்கப்பட வேண்டும். தேவனை மகிமைப்படுத்துதல், கீழ்ப்படிதல், விசுவாசித்தல், அன்புகாட்டுதல் இவைகளைப் போதிக்க வேண்டும்.

✓ **அவன் மற்றவர்களுக்கு முன்பாக நடக்க வேண்டும்** (எபேசியர் 4:1) மற்றவர்களுக்கு அவனுடைய கடமையைக் குறித்த கிறிஸ்தவ நடத்தை அவனுக்குப் போதிக்கப்பட வேண்டும். அவன் மற்றவர்களுக்குச் சாட்சியாக இருக்கும்படி தனது வாழ்க்கையில் கனிகொடுக்க வேண்டும் என்பது அடிக்கடி போதிக்கப்பட வேண்டும் (கலாத்தியர் 5:22, 23).

நடக்கக் கற்றுக்கொள்வது ஒரு குழந்தைக்கு எளிதான காரியமல்ல என்பதை நாம் பிள்ளைக்கு நினைவுபடுத்த வேண்டும்:

- அவன் தடுமாறி விழுவான்.
- அவன் தொடர்ந்து முயற்சிசெய்ய வேண்டும்.
- அவனுக்கு உதவி தேவைப்படுகிறது.
- அவன் படிப்படியாக முன்னேற்றமடைவான்.

பேசுவதற்கு

எப்படிப் பேசுவது என்பதையும், தங்கள் பேசும் வரத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பதையும் கிறிஸ்தவ பிள்ளைகள் அறிந்திருக்க வேண்டும்.

✓ **அவன் தேவனோடு பேச வேண்டும்** (மத்தேயு 7:7). தேவனோடு ஜெபத்தில் எவ்வாறு பேசுவது என்பதை அவனுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். பிள்ளையால் அதிகமாகவோ அல்லது திறமையாகவோ பேச முடியாவிட்டாலும், பெற்றோர் பிள்ளைகளின் பேச்சைக் கேட்க விரும்புவதுபோலத் தேவனும் விரும்புகிறார். பேசுவதைக் கற்றுக்கொள்வதற்குச் சிறந்த வழி பேசிப்பழகுவதுதான் என்பதைப் பிள்ளைகள் உணர வேண்டும்.

✓ **அவன் மற்றவர்களோடு பேச வேண்டும்** (அப்போஸ்தலர் 1:8). மற்றவர்களுக்குத் தேவனைப் பற்றி எவ்வாறு கூறுவது என்று அவனுக்குப் போதிக்க வேண்டும். சிறுவர்களுக்குச் சிறுவர்களே சிறந்த நற்செய்தியாளர்களாக இருக்கிறார்கள். மற்ற பிள்ளைகளைக் கிறிஸ்துவிடம் வழிநடத்துவது எவ்வாறு என்பதை அவர்களுக்குப் போதிக்க வேண்டும்.

➤ **கீழ்ப்படிவதற்கு**

கீழ்ப்படிதலின் முக்கியத்துவத்தை வேதாகமம் மறுபடியும் மறுபடியுமாக வலியுறுத்துகிறது. *"பலிகளைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும் ... உத்தமம்"* (1 சாமுவேல் 15:22).

✓ **அவன் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும்** (அப்போஸ்தலர் 5:29). தேவனுக்கு எவ்வாறு கீழ்ப்படிவது என்று அவனுக்குப் போதிக்க வேண்டும். வேதாகமத்தின் மூலமாகத் தேவன் அவனோடு பேசுகிறார் என்றும், அவன் தேவனுடைய வார்த்தைக்கு முழுமையாகக் கீழ்ப்படிய வேண்டும் என்றும் அவனுக்குப் போதியுங்கள்.

✓ **அவன் தனது பெற்றோருக்குக் கீழ்ப்படிய வேண்டும்.** எபேசியர் 6:1 மற்றும் கலாத்தியர் 3:20 வசனங்களில் கட்டளையிட்டிருக்கிறபடி அவன் தனது பெற்றோருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று அவனுக்குப் போதிக்க வேண்டும். பிள்ளைகள் பெற்றோருக்குக் கீழ்ப்படிய வேண்டியதின் முக்கியத்துவத்தைப் பவுல் வலியுறுத்துகிறார். நீங்களும் வலியுறுத்த வேண்டும்.

பிள்ளை சரீரப்பிரகாரமாகவும், ஆவிக்குரிய பிரகாரமாகவும் கற்றுக்கொள்ள அதிக காலம் பிடிக்கும் என்பதை மறந்துவிடாதீர்கள். அவன் உடனடியாக ஒரு பெரியவனாக ஆகிவிடுவது கிடையாது. அவன் சரியாகக் கற்றுக்கொள்வதற்கு முன்பாகப் பல தவறுகளைச் செய்வான்.

எனவே கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுள்ள பிள்ளைகளுக்கு இந்தச் சத்தியங்களைப் போதிக்கும்போது பொறுமையாக இருங்கள். சீக்கிரமாகவே அதிகமானதை எதிர்பாராதிருங்கள். வளர்ச்சிக்குக் காலம் பிடிக்கும்.

பகுதி 2

செயல்பாட்டு நிலைகள் (ACTION STATIONS)

சிறுவருக்கு ஊழியம்செய்வது பற்றிய அடிப்படைக் கொள்கைகளை நாம் கற்றுப் புரிந்துகொண்டிருக்கிறோம். இந்தக் கொள்கைகள் குறித்த அனைத்துப் பொருத்தமான கேள்விகளுக்கும் பதில் கண்டிருக்கிறோம். இப்போது நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பார்க்க ஆயத்தமாக இருக்கிறோம். முதலாவது புரிந்துகொள்ள வேண்டும்; ஆனால் செயல்பாடும் அதைத் தொடர்ந்து வர வேண்டும்.

அடுத்துவரும் அத்தியாயங்களில் நாம் கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் காண முயலுவோம்:

- *எனது போதிக்கும் செயல்திட்டத்தைச் சிறப்பாகத் திட்டமிடுவது எப்படி? (அத்தியாயம் 10)*
- *எனது கூட்டத்தைச் சிறப்பாக ஆயத்தம் செய்வது எப்படி? (அத்தியாயம் 11)*
- *சிறுவர்களுக்குப் பாடல்களைச் சொல்லிக்கொடுப்பது எவ்வாறு? (அத்தியாயம் 12)*
- *ஜெபிக்கும்படி சிறுவர்களுக்குச் சொல்லிக்கொடுப்பது எப்படி? (அத்தியாயம் 13)*
- *வேதவசனத்தை மனப்பாடம் செய்யும்படி சிறுவர்களை ஊக்குவிப்பது எப்படி? (அத்தியாயம் 14)*
- *நான் ஏற்கெனவே போதித்ததை மறுஆய்வு செய்யலாமா? (அத்தியாயம் 15)*
- *எனது போதனை ஊழியத்துக்கு எது அடிப்படையாகவும் முக்கிய கருப் பொருளாகவும் இருக்க வேண்டும்? (அத்தியாயம் 16)*
- *நான் எந்தப் போதிக்கும் திட்டத்தைப் பின்பற்ற வேண்டும்? (அத்தியாயம் 17)*
- *ஓராண்டு போதிப்பதற்கு செயல்திட்டம் (அத்தியாயம் 18)*
- *ஒரு வேதாகமக் கதையைக் கூறுவது எப்படி? (அத்தியாயம் 19)*
- *நான் எப்படி ஒரு சிறந்த ஆசிரியராக முடியும் ? (அத்தியாயம் 20)*
- *வேதாகமப் பாடத்தைப் போதிப்பது எப்படி? (அத்தியாயம் 21)*
- *மையச் சத்தியத்தை எவ்வாறு கண்டுபிடிப்பது? (அத்தியாயம் 22)*

- மையச் சத்தியத்தைப் போதிப்பது எப்படி? (அத்தியாயம் 23)
- மையச் சத்தியத்தைப் பொருத்திக் காட்டுவது எப்படி? (அத்தியாயம் 24)
- எனது வேதபாடத்தை ஆயத்தம் செய்வதில் நான் எந்தெந்தப் படிகளைப் பின்பற்ற வேண்டும்? (அத்தியாயம் 25)
- சிறுவர்கள் வேதபாடத்துக்குச் செவிகொடுக்கும்படி ஊக்குவிப்பது எப்படி? (அத்தியாயம் 26)
- சிறுவர்களுக்கு "உதவிசெய்யக்கூடியவராக இருப்பது" எப்படி? (அத்தியாயம் 27)
- இரட்சிக்கப்படாத சிறுவர்களுக்கு ஆலோசனை கூறி கிறிஸ்துவிடம் அவர்களை வழிநடத்துவது எவ்வாறு (அத்தியாயம் 28)
- இரட்சிக்கப்பட்ட சிறுவர்களுக்கு ஆலோசனை கூறுவது எப்படி? (அத்தியாயம் 29)
- சிறுவர்களுக்கு அருட்பணி பற்றியும் வேதாகம கோட்பாடுகள் பற்றியும் போதிப்பது எப்படி? (அத்தியாம் 30)
- பட உபகரணங்களைப் பயன்படுத்துவது எவ்வாறு? (அத்தியாயம் 31)
- எனது கூட்டத்தில் நல்லொழுங்கைக் காப்பது எப்படி? (அத்தியாயம் 32)
- எனது கூட்டத்தில் வருகையை அதிகரிப்பது எப்படி? (அத்தியாயம் 33)

அத்தியாயம் 10

ஒவ்வொரு நிமிடமும் முக்கியமானது எனது போதிக்கும் செயல்திட்டத்தைச் சிறப்பாகத் திட்டமிடுவது எப்படி?

அத்தியாயத்தின் சுருக்கம்

(உங்கள் வகுப்பில் என்ன செய்யப் போகிறீர்கள் என்பதை நீங்கள் ஜெபத்தோடும் கவனமாகவும் திட்டமிட வேண்டும்.)

- **உங்கள் செயல்திட்டத்தைக் கவர்ச்சிகரமாக ஆக்குவது எப்படி?**
- **உங்கள் செயல்திட்டத்தில் என்னென்ன இருக்க வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ளுதல்:**
  - ✓ மாறாத அம்சங்கள்
    - பாட்டு
    - ஜெபம்
    - மனப்பாட வசனம்
    - மறுஆய்வுக்கான வேளை
    - வேத பாடம்
    - ஆலோசனை கூறும் நேரம் (தேவைப்பட்டால்)
  - ✓ மாறக்கூடிய அம்சங்கள்
    - அருட்பணி நேரம்
    - கோட்பாடு
- **ஒரு மாதிரி செயல்திட்டம்**
- **உங்கள் போதிக்கும் செயல்திட்டத்தில் நீங்கள் கைவேலையையும் விளையாட்டுக்களையும் கற்றுக் கொடுக்க வேண்டுமா?**

இப்போது நாம் நமது போதிக்கும் செயல்திட்டத்தைக் குறித்தும் அதன் அம்சங்களைப் பற்றியும் அதிகத் திட்டவட்டமாகச் சிந்திக்கும் நிலையில் இருக்கிறோம். நீங்கள் அறுபது நிமிடக் கூட்டமொன்றை நடத்தப் போகிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். வரும் பிள்ளைக்கு அதிகப்படியான ஆவிக்குரிய பலனை அளிக்கும் வகையில் இந்த நேரம் முழுவதையும் செலவிடுவது எவ்வாறு என்று நீங்கள் தீர்மானிக்க வேண்டும். ஆனால் உங்கள் சூழ்நிலைக்கு ஏற்ப போதிக்கும் நேரம் மாறுபடலாம். அது கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ இருக்கலாம்.

ஒவ்வொரு வாரத்திலும் 168 மணி நேரங்கள் இருக்கின்றன என்பதை நீங்கள் மறந்துவிடாதீர்கள். அதில் ஒரு மணி நேரத்தில் மட்டுமே நீங்கள் சிறுவருக்கான

கூட்டத்தை நடத்துகிறீர்கள். எனவே பிள்ளைகளுக்கு ஆவிக்குரியரீதியான உதவியை அளிப்பதற்கு ஒவ்வொரு வாய்ப்பையும் நீங்கள் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இது விளையாட்டுக்கோ அல்லது கைவேலைக்கோ உள்ள நேரமல்ல. ஒரு முகாமிலோ அல்லது விடுமுறை வேதாகமப் பள்ளியிலோ உங்களுக்கு அதிகமான நேரம் கிடைக்கும்போது நீங்கள் இவைகளைச் சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் ஒரு மணி நேரக் கூட்டத்தில் நேரம் குறைவாகவே உள்ளது. அதில் ஒவ்வொரு கணத்தையும் நீங்கள் ஆதாயமாகப் பயன்படுத்த விரும்ப வேண்டும்.

ஒரு கவர்ச்சிகரமான செயல்திட்டத்தின் அம்சங்கள்

கவர்ச்சிகரமானதும் பயன்தரத்தக்கதுமான ஒரு போதிக்கும் செயல் திட்டத்தைக் குறிக்க பல்வேறு சொற்றொடர்களைப் பயன்படுத்தலாம்:

- அது நன்றாகத் திட்டமிடப்பட்டதாக இருக்க வேண்டும்.

  உங்கள் போதிக்கும் செயல்திட்டம் ஒரு உணவைப் போன்றதாக இருக்கிறது. அது நன்றாக ஆயத்தம்செய்யப்பட்டதாக இருக்க வேண்டும். ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும் ஆர்வமாக "உண்ணப்படக்" கூடிய வகையிலும் பல்வேறு "பொருட்களும்" "ஒன்றாகச் சேர்க்கப்பட்டிருக்க" வேண்டும். நீங்கள் முன்னதாகவே உங்கள் அறுபது நிமிடங்களைக் குறித்துத் திட்டமிட வேண்டும். உங்கள் திட்டத்தைத் தெளிவாக எழுதி வைத்திருக்க வேண்டும். கவனமாகத் திட்டமிடுதல் அதிகப்படியான பயனைப் பெற்றுத் தரும். அந்த மணி நேரம் முழுவதும் உங்கள் திட்டத்தை நீங்கள் அடிக்கடி சரிபார்த்துக் கொள்ள வேண்டும். மேலும் உங்கள் கூட்டத்தில் எவராவது உங்களுக்கு உதவிசெய்து கொண்டிருந்தால் அவருக்கும் உங்களுடைய திட்டத்தின் ஒரு பிரதியைக் கொடுக்க வேண்டும்.

- அது சுமுகமாக நடைபெறும் ஒன்றாக இருக்க வேண்டும்.

  உங்கள் செயல்திட்டம் சுமுகமாக முன்னேறிச் செல்ல வேண்டும். குறுக்கீடு இல்லாமல் ஒரு பகுதியிலிருந்து அடுத்த பகுதிக்குக் கடந்து செல்ல வேண்டும். நீண்ட ஜெபங்களையும் நீண்ட விளக்கங்களையும் நீங்கள் தவிர்க்க வேண்டும்.

- அது ஆர்வத்தைத் தூண்டுவதாகவும் பொருத்தமானதாகவும் இருக்க வேண்டும்.

  ஒரு நல்ல போதனைச் செயல்திட்டம் என்றால் அதனுடைய அனைத்து அம்சங்களிலும் பிள்ளைகள் ஆர்வம்கொள்ள வேண்டும். போதிக்கப்படுவது தங்கள் அன்றாட வாழ்க்கைக்குப் பொருத்தமாயிருந்தால் அவர்கள் அதில் குறிப்பான ஆர்வம் காட்டுவார்கள்.

- அது பல்வேறு வகைகளைக் (வித்தியாசங்கள்) கொண்டிருக்க வேண்டும்.

  உங்கள் செயல்திட்டத்தில் பல்வேறு விதமான செயல் நடவடிக்கைகளைக்

கொண்டிருப்பது நலமாகும். ஒரே செயலில் நீங்கள் அளவுக்கு அதிகமான நேரத்தைச் செலவழித்தால் மாணவர்கள் ஆர்வத்தை இழந்துவிடலாம்.

இடையிடையே உங்கள் செயல்பாட்டின் வரிசையை மாற்றியமைப்பது பயன் தரும். புதிய காரியங்களை நீங்கள் அதில் சேர்க்க வேண்டும்.

➤ அது மையச் சத்தியத்தைச் செயல்படுத்தவேண்டும்.

உங்கள் முழு போதனைச் செயல்திட்டமும் உங்கள் வேதாகமப் பாடத்தின் மையச் சத்தியத்தின்மீது ஒருமுகப்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும். அந்தச் சத்தியம் செயல்படுத்தப்படுதல் இரண்டு வகைப்பட்ட சிறுவர் களுக்கும் பொருத்தமாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, பாடப்படும் கோரஸ் பாடல்களிலும், மனப்பாட வசனத்திலும் மையச் சத்தியம் வெளிப் படையாகத் தெரியக் கூடுமானால், அது முழுச் செயல்திட்டத்துக்கும், குறிப்பாக வேத பாடத்துக்கும் அதிகமான ஐக்கியத்தையும் பயனையும் கொடுக்கும்.

➤ சரியான நேரத்தில் துவக்க வேண்டும்.

உங்கள் போதிக்கும் செயல்திட்டம் சரியான நேரத்தில் துவங்கி சரியான நேரத்தில் முடிவது முக்கியமானதாகும். அப்படியானால், கூட்டம் துவங்குவ தற்கு பதினைந்து அல்லது முப்பது நிமிடங்களுக்கு முன்பாகவே துவங்குவ தற்கு நீங்கள் அங்கே இருக்க வேண்டும். தாமதமாகவும் பரபரப்போடும் வகுப்பில் நுழைந்து பேசத் துவங்குவது தேவனுடைய விலைமதிப்பற்ற வார்த் தையைப் போதிப்பதற்குச் சரியான வழி அல்ல. நீங்கள் காலம் தவறுவது பிள்ளைகளைப் பாதிக்கும்; அவர்களும் காலம் தவறி வரும்படி செய்யும். நீங்கள் முன்னதாகவே வந்து கூட்டத்துக்குத் தேவையான அனைத்தும் ஆயத் தமாக இருக்கிறதா என்பதைச் சரிபார்த்துக்கொள்ள வேண்டும். இவ்வேளை யில் முன்னதாக வரும் சிறுவர்களோடு தனிப்பட்ட முறையில் பேசவும் உங்க ளுக்கு வாய்ப்புக் கிடைக்கும்.

✓ முன்னதாகவே வருவதின் மூலம் உங்கள் வகுப்பின் நேரத்தையும் (மதிப்பையும்) நீங்கள் அதிகரிக்கச் செய்கிறீர்கள். கூட்டம் துவங்குவதற்கு முன்னால் பிள்ளைகள் தங்கள் மனப்பாட வசனத்தை மறுபடியுமாகக் கூறும் படி செய்து அந்த நேரத்தையும் பயன்படுத்திக்கொள்ளலாம்.

✓ தாமதமாக வருவதின் மூலமாகவும், உங்கள் வகுப்பில் இராகங்களையும் பட உபகரணங்களையும் தேடுவதிலும் நேரத்தை வீணாக்குவதின் மூல மாகவும் உங்கள் வகுப்பின் நேரத்தை (மதிப்பையும்) நீங்கள் குறைத்துக் கொள்கிறீர்கள்.

மேலும் உங்கள் வகுப்பைத் தாமதமில்லாமல் துவக்க வேண்டும். குறிப்பிட்ட வேளையில் பிள்ளைகள் வீடு திரும்ப வேண்டுமென்று பெற்றோர் எதிர்பார்ப் பார்கள். எதிர்பார்த்த வேளையில் அவர்கள் திரும்பாவிட்டால் பெற்றோர் கவலைப்படுவார்கள்.

➤ அது பங்கெடுத்தலை (Participation) ஊக்குவிக்க வேண்டும்.

உங்கள் செயல்திட்டத்தில் பங்கெடுக்க பிள்ளைகள் விரும்புகிறார்கள். பல வழிகளில் இதை நீங்கள் ஊக்குவிக்கலாம்:

✓ இடையிடையே ஒரு பிள்ளை பாடல்கள் பாடப்படுவதை வழிநடத்தலாம்.

✓ மற்றவர்கள் பார்க்கும்படி ஒரு பிள்ளை எழுதப்பட்ட பாடல் அட்டையையோ அல்லது பட அட்டையையோ உயர்த்திப் பிடித்திருக்கலாம்.

✓ ஒன்றாக மனப்பாட வசனத்தை மனப்பாடம் செய்வதின் மூலம் அனைத்துப் பிள்ளைகளும் பங்கெடுக்கலாம். ஜெப வேளையில் பங்கெடுக்கலாம். மறு ஆய்வு வேளையிலும், வேதாகமப் புதிர் வேளையிலும் அவர்கள் பங்கெடுக்கலாம்.

உங்கள் போதனைச் செயல்திட்டத்தின் பின்னணி

நான் ஏற்கெனவே உங்கள் போதிக்கும் திட்டத்தை ஆயத்தப்படுத்துவதை உணவு தயாரிப்பதற்கு ஒப்பிட்டிருக்கிறேன். சமையல் செய்பவர் சரியான அளவில் பல்வேறு பொருட்களைச் சேர்ப்பது போல, உங்கள் "ஆவிக்குரிய உணவில்" நீங்கள் பல்வேறு பொருட்களையும் நடவடிக்கைகளையும் சேர்க்க வேண்டும். இவை நன்றாகச் சேர்க்கப்படுமானால், ஒரு நல்ல, கவர்ச்சிகரமான, திருப்தியளிக்கும் "உணவைக்" கொடுக்கும்.

எனவே உங்கள் செயல் திட்டத்தில் பல முற்றிலும் வேறுபட்ட பயிற்சிகள் காணப்பட வேண்டும். இந்த அத்தியாயத்தின் எஞ்சிய பகுதியில் அவைகளைப் பற்றி நான் கூறியிருக்கிறேன். ஒவ்வொரு பயிற்சிக்கும் தோராயமாகத் தேவைப் படும் கால அளவையும் குறிப்பிட்டிருக்கிறேன். நூலின் பின்பகுதியில் ஒவ்வொரு பயிற்சியைக் குறித்தும் விரிவாகப் பார்ப்போம்.

✓ இவைகளில் சில நடவடிக்கைகள் ஒருபோதும் மாறாதவை. இவை எப் **போதுமே** உங்கள் போதனைச் செயல்திட்டத்தில் காணப்பட வேண்டும் எடுத்துக்காட்டாக, உங்கள் வேதபாடம்.

✓ இவைகளில் சில நடவடிக்கைகள் மாறி வருபவை. ஒவ்வொரு போதனைச் செயல்திட்டத்திலும் அவைகளைச் சேர்க்கக் கூடாது. இடையிடையே அவை போதிக்கப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக, அருட்பணி நேரம்.

மாறாத அம்சங்கள்

பல அம்சங்கள் அல்லது நடவடிக்கைகள் ஒவ்வொரு போதனைச் செயல் திட்டத்திலும் காணப்பட வேண்டும்.

பாடல்கள் (பதினைந்து நிமிடங்கள்)

நீங்கள் பிள்ளைகளைப் பத்து நிமிடங்கள் கோரஸ் பாடல்களிலும் பாமாலைப் பாடல்களிலும் வழிநடத்த வேண்டும். இவற்றை ஒன்றாகச் சேர்க்கக் கூடாது.

செயல்திட்டத்தின் நடுவே ஆங்காங்கு இவை சேர்க்கப்பட வேண்டும். பாடுவது போதிப்பதற்கு அற்புதமான வழியாக இருக்கிறது. இது பிள்ளைகளின் ஆர்வத்தைத் தூண்டுகிறது. அவர்கள் கூட்டத்தை அனுபவிக்கும்படி செய்கிறது.

முன்னதாகவே பாடப்பட வேண்டிய கோரஸ் பாடல்களையும் பாமாலைப் பாடல் களையும் தெரிந்துகொள்ளுங்கள். கூடுமானால் பிள்ளைகள் வாசிக்கும்படி இவைகளை எழுதிவையுங்கள். ஆனால் ஒரு கூட்டத்தில் நீங்கள் ஒரு கோரஸ் பாடலுக்கு மேலாகச் சொல்லிக்கொடுக்கக்கூடாது.

உங்கள் வேதபாடத்தின் மையச் சத்தியத்தைக் கருத்தில் கொண்டு, அந்தச் சத்தி யத்துக்குப் பொருத்தமான பாடலைத் தெரிந்தெடுங்கள்.

ஜெபம் (ஐந்து நிமிடங்கள்)

உங்கள் செயல்திட்டத்தில் ஐந்து நிமிடங்கள் ஜெபத்துக்காக ஒதுக்கப்பட வேண்டும்.

- நீங்களே வகுப்பை ஜெபத்தோடு துவங்கி ஜெபத்தில் முடித்து வைக்க வேண்டும். ஆனால் இந்த ஜெபங்கள் சுருக்கமாக இருக்கவேண்டும்.
- மேலும் பிள்ளைகள் ஜெபிப்பதற்கு நீங்கள் கற்றுக்கொடுக்க வேண்டும். அவர் கள் ஜெபிக்க வாய்ப்பளிக்க வேண்டும். உங்கள் கூட்டத்தில் விசுவாசிக்கும் சிறுவர்கள் அதிகமான பேர் இருந்தால் நீங்கள் கண்டிப்பாக இதைச் செய்ய வேண்டும். முடியுமானால், பிள்ளைகள் ஒரு சிறிய ஜெபத்தை எழுதிப் பயன் படுத்த நீங்கள் அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

மனப்பாட வசனம் (ஐந்து முதல் ஏழு நிமிடங்கள்)

ஒவ்வொரு கூட்டத்துக்கும் நீங்கள் ஒரு வசனத்தைத் தெரிந்துகொண்டு, அதைப் பிள்ளைகளுக்கு விளக்கிக் கூறி, அவர்கள் அதை மனப்பாடம் செய்யும்படி ஊக்குவிக்க வேண்டும். வசனம் நீளமானதாகவோ அல்லது நினைவில் வைத்துக் கொள்ளக் கடினமானதாகவோ இருக்குமானால் இரண்டு கூட்டங்களுக்கு ஒரே மனப்பாட வசனத்தை வைத்துக்கொள்ளலாம். பிள்ளைகள் இதை மனப் பாடம் செய்வது அவசியம். எனவே வசனத்தைக் குறைந்தபட்சம் பத்து முறை யாவது திருப்பிக்கூற வேண்டும். ஆனால் இதை ஆர்வமுள்ளதாக ஆக்குங்கள். அதோடுகூடக் கற்றுக்கொள்ளும் வசனத்தை வேதபாடத்தின் மையச் சத்தியத் தோடு பொருத்திக் காட்ட வேண்டும்.

மேலும் நீங்கள் வசனத்தைச் சிறு தாள்களில் எழுதி ஒவ்வொரு பிள்ளையிடமும் கொடுக்கலாம். பிள்ளைகள் அதை வீட்டுக்கு எடுத்துச் சென்று தொடர்ந்து மனப்பாடம் செய்து பழகலாம்.

மறுஆய்வு வேளை (ஐந்து முதல் பத்து நிமிடங்கள்)

முந்தைய வாரங்களில், குறிப்பாக முந்தைய வாரக் கூட்டத்தில் நீங்கள் போதித்த வைகளை மறுஆய்வுசெய்வது அத்தியாவசியமானதாகும். இதனால் பிள்ளைகள்

போதிக்கப்பட்ட சத்தியங்களை மறுபடியுமாக நினைவில் கொண்டுவர முடிகிறது. இதைப் படமாகக் காட்டுவது அதிக உதவியாக இருக்கும். நீங்கள் மறுஆய்வு வேளையை ஆர்வமுள்ளதாக ஆக்க வேண்டும். இதற்கு வேதாகமப் புதிர் உங்களுக்கு உதவியாக இருக்கலாம். இந்தப் புதிருக்குக் குழுவாகவோ அல்லது தனிப்பட்ட முறையிலோ பதில் தேடலாம். அதற்கான கேள்விகளை நீங்கள் கவனமாகத் தெரிந்தெடுக்க வேண்டும். பிள்ளைகள் நினைவுகூரவும் கற்றுக்கொள்ளவும் இது உதவும். நீங்கள் போதிப்பதைப் பிள்ளைகள் புரிந்துகொண்டிருக்கிறார்களா என்பதை நீங்கள் கண்டறியவும் முடியும்.

வேதபாடம்: இருபது நிமிடங்கள் - அல்லது மாணவர்கள் சிறியவர்களாக இருந்தால் இன்னும் குறைவான நேரம்

இதுவே முக்கியமான பகுதியாகும். உங்கள் செயல்திட்டத்தின் இந்த மையமான அம்சம் நான்கு பகுதிகளைக் கொண்டதாகும்:

- ஒரு வேதாகமப் பகுதியின் சுருக்கம். அதை ஆர்வமூட்டும் வகையில் விவரித்தல் அல்லது ஒரு வேதாகமக் கோட்பாட்டை ஒழுங்குமுறையாகப் போதித்தல்.
- அனைத்துப் பிள்ளைகளுக்கும் வேதபகுதியின் மையச் சத்தியம் அல்லது கோட்பாட்டின் மையச் சத்தியத்தைப் போதித்தல்.
- இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு இந்த மையச் சத்தியத்தைச் செயல்பூர்வமாகப் பொருத்திக் காட்டுதல்.
- இரட்சிக்கப்படாத பிள்ளைகளுக்கு இந்த மையச் சத்தியத்தைச் செயல்பூர்வமாகப் பொருத்திக் காட்டுதல்.

ஆலோசனை நேரம்: கூட்டத்திற்குப் பிறகு குறைந்தபட்சம் இருபது நிமிடங்கள்

உங்கள் செயல் திட்டத்தில் எப்போதுமே கூட்டம் முடிந்தபிறகு குறைந்தபட்சம் இருபது நிமிடங்களை ஒதுக்க வேண்டும். இவ்வேளையில் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள விரும்பி உங்கள் உதவியை நாடும் இரட்சிக்கப்படாத பிள்ளைகளுக்கு ஆலோசனை கூற வேண்டும். அல்லது கிறிஸ்தவ சிறுவர்களின் பிரச்சினைகள் அல்லது கேள்விகளுக்குப் பதில் கூற வேண்டும். உங்கள் செயல் திட்டத்தில் நீங்கள் ஒவ்வொரு வாரமும் இதற்கான நேரத்தை ஒதுக்கி வைக்க வேண்டும். ஆனால் பிள்ளைகள் உங்கள் ஆலோசனையையும் உதவியையும் நாடி வந்தால் மட்டுமே இந்த நேரத்தைப் பயன்படுத்த முடியும்.

மாறக்கூடிய அம்சங்கள்

உங்கள் செயல்திட்டத்தில் ஒன்றிரண்டு கூடுதலான செயல் நடவடிக்கைகளையும் நீங்கள் சேர்த்துக்கொள்ள வேண்டும் - அருட்பணி நேரம் அல்லது கோட்பாட்டுப் போதனை. இதை நீங்கள் மாற்றி மாற்றிச் சேர்த்துக் கொள்ளலாம்.

ஒருவாரம் அருட்பணி நேரம் என்றால் அடுத்த வாரம் கோட்பாட்டுப் போதனை என்று வைத்துக்கொள்ளலாம். அல்லது ஐந்து வாரங்களுக்கு ஒரு குறுகிய அருட்பணிப் போதனைகள், பிறகு ஐந்து வாரங்களுக்கு ஐந்து கோட்பாட்டுப் பாடங்கள் என்று வைத்துக்கொள்ளலாம்.

அருட்பணி நேரம் (பத்து நிமிடங்கள்)

இந்த வேளையில் அருட்பணியைக் குறித்து நீங்கள் போதித்து, பிள்ளை களில் மிஷனெரி ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். அல்லது ஒரு அருட்பணிச் செயல்திட்டத்தை அறிமுகம் செய்து, பிள்ளைகள் ஜெபிக்கவும் காணிக்கை கொடுக் கவும் அறைகூவல் விடுக்கலாம்.

கோட்பாட்டுப் பாடம் (பத்து நிமிடங்கள்)

இடையிடையே ஒரு வேதாகமக் கோட்பாட்டின் அம்சங்களை நீங்கள் எளிய முறையில் விளக்க விரும்பலாம். இதை ஆர்வம் தூண்டும் வகையில் செய்ய பட விளக்க அட்டைகளைப் பயன்படுத்தலாம்.

ஒரு மாதிரிச் செயல்திட்டம் (A Typical Programme)

இதுவரை நாம் பார்த்த அனைத்துக்கும் இடம் ஒதுக்கும் வகையில் உங்கள் போதிக்கும் செயல்திட்டம் இவைகளை உள்ளடக்கியிருக்க வேண்டும்:

- பாடல்கள் (ஐந்து நிமிடங்கள்)
- வரவேற்றல், துவக்க ஜெபம் (ஒரு நிமிடம்)
- மறுஆய்வு வேளை (ஐந்து நிமிடங்கள்)
- பாடல் (ஐந்து நிமிடங்கள்)
- ஜெப வேளை (ஐந்து நிமிடங்கள்)
- அருட்பணி நேரம் அல்லது கோட்பாட்டுப் பாடம் (பத்து நிமிடங்கள்)
- மனப்பாட வசனம் (ஐந்து நிமிடங்கள்)
- பாடல் (மூன்று நிமிடங்கள்)
- வேதபாடம் (இருபது நிமிடங்கள்)
- ஜெபம் மற்றும் இறுதி அறிவிப்புகள் (ஒரு நிமிடம்)
- ஆலோசனை நேரம் (இருபது நிமிடங்கள்) (கூட்டத்துக்குப் பிறகு)

மொத்த நேரம் அறுபது நிமிடங்கள் (கூடுதலாக, தேவைப்பட்டால் ஆலோசனை நேரத்துக்காக இருபது நிமிடங்கள்)

நான் ஏற்கெனவே விளக்கியபடி, உங்களுடைய கூட்டம் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக நடத்தப்படக் கூடாது. ஒரு குறிப்பிட்ட வேளையில் பிள்ளைகள் வீட்டுக்குத் திரும்ப வேண்டுமென்று பெற்றோர் எதிர்பார்ப்பார்கள்; அந்த வேளைக்குள் அவர்கள் திரும்பாவிட்டால் பெற்றோர் கவலைப்படுவார்கள்.



நாம் ஏற்கெனவே பார்த்தபடி, உங்கள் முழுப் போதனைச் செயல்திட்டத்தையும் ஒரு கருப்பொருளை - உங்கள் வேதாகமப் பாடத்தின் மையச் சத்தியத்தை - மையமாகக் கொண்டு தயாரிப்பது நலமாகும். எடுத்துக்காட்டாக, கீழே, "தேவன் [illegible] சிறுவர் சிறுமியரை நேசிக்கிறார்" என்ற சத்தியத்தின் அடிப்படையில் ஒரு சிறுவர் கூட்டத்திற்கான செயல் திட்டத்தின் மாதிரியைக் கொடுத்திருக்கிறேன். பிள்ளைகளுக்குத் தேவையான தமிழ் கோரஸ் பாடல்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள். சிறுபிள்ளைகளுக்கு அறிமுகமில்லாத பாடல்களை அதிக அளவில் சேர்த்துக்கொள்ளக் கூடாது.

தொடக்க கோரஸ் பாடல்கள்
சுருக்கமான ஜெபம்
இந்த வாரப் பாடத்தைப் பற்றிய சுருக்கமான புதிர்

கோரஸ் பாடல்:	- பிள்ளைகளுக்குத் தெரிந்த, பொருத்தமான பாடல் பாடவும்.
தியான கோரஸ் பாடல்:	- எல்லோருக்கும் தெரிந்த, பொருத்தமான பாடல் பாடவும்.
பிள்ளைகளுக்கான ஜெப வேளை	- குறிப்பாக தேவனுடைய அன்புக்காகவும், கிறிஸ்துவின் மரணத்துக்காகவும், இரட்சிப்புக்காகவும் அவருக்கு நன்றி செலுத்துதல்
அருட்பணிக் கதை	- ஏமி கார்மைக்கேலும் இந்தியச் சிறுவர்மீது அவர் கொண்டிருந்த அன்பும்
மனப்பாட வசனம்	- யோவான் 3:16
கோரஸ் பாடல்:	- எல்லோருக்கும் தெரிந்த பொருத்தமான பாடலைப் பாடவும்
அமைதியான கோரஸ்	- எல்லோருக்கும் தெரிந்த பொருத்தமான பாடலைப் பாடவும்
வேதாகமப் பாடம்	- சகேயு - ஆண்டவராகிய இயேசுவால் நேசிக்கப்பட்ட பாவி (லூக்கா 19: 1-10)
சுருக்கமான ஜெபம்	
இறுதி கோரஸ்:	- எல்லோருக்கும் தெரிந்த பொருத்தமான பாடலைப் பாடவும்.

ஒரு கேள்வி

ஒரு ஆசிரியர் தனது போதனைச் செயல்திட்டத்தில் கைவேலை மற்றும் விளையாட்டு போன்றவைகளைச் சேர்க்கலாமா என்று பலரும் என்னிடம் கேட்டு வருகிறார்கள். கிடைக்கும் நேரத்தைப் பொருத்து அதைச் செய்யலாம் என்பதே என்னுடைய பதிலாகும்.

➤ கூட்டம் அறுபது நிமிடங்களுக்கு மட்டுமே நடத்தப்படுமானால், "வேண்டாம்" என்பதே என்னுடைய பதிலாகும். கூடுதலான அம்சங்களைச் சேர்ப்பதற்குப் போதிய நேரம் இல்லை. பிள்ளைகளோடு செலவழிக்க உங்களுக்கு ஒரு மணி நேரம் மட்டுமே இருக்குமானால், அதைக் கூடுமான வரை சிறப்பாகச் செல வழிக்கவே நீங்கள் விரும்புவீர்கள். ஏதேனும் ஒரு வகையில் தேவனுடைய வார்த்தையைப் போதிக்கவே அந்த நேரத்தைச் செலவிடுங்கள்.

சிறுவர் ஊழியத்தைப் பற்றி ஒரு கல்லூரியில் நான் விரிவுரை ஆற்றிய பிறகு இரண்டு மாணவர்கள் என்னைச் சந்திக்க வந்தார்கள். தங்களுடைய ஒரு பிரச்சினையைத் தீர்த்துவைக்கும்படி அவர்கள் வேண்டிக்கொண்டார்கள். கல்லூரியோடு தொடர்புடைய ஒரு வேதாகம கிளப்பில் அவர்கள் வாரந் தோறும் ஒரு சிறுவர் குழுவுக்குப் போதித்து வந்தார்கள். ஆனால் ஒழுங்கை ஏற்படுத்துவது அவர்களுக்கு சிரமமாக இருந்தது. பிள்ளைகளோடு செல வழிக்கும் வேளையில் அவர்கள் என்ன செய்வார்கள் என்று அவர்களிடம் கேட்டேன். அவர்கள் தாங்கள் கால்பந்து போன்ற விளையாட்டுக்காக நாற்பத் தைந்து நிமிடங்களைச் செலவழிப்பதாகவும், பிறகு பதினைந்து நிமிடங் களுக்கு ஒரு வேதாகமப் பாடத்தை நடத்துவதாகவும் கூறினார்கள். ஆனால் பிள்ளைகள் ஒழுங்காக அமர்ந்து, பாடத்துக்குச் செவிகொடுப்பதில்லை. பிரச்சினையை என்னால் தெளிவாகக் காண முடிந்தது. முதலாவதாக, அவர்கள் தங்களுக்கு கிடைத்த ஒரு மணி நேரத்தைச் சிறப்பாகப் பயன் படுத்தவில்லை. இரண்டாவதாக, நாற்பத்தைந்து நிமிடங்கள் பரபரப்போடு கால்பந்து விளையாடிய பிறகு அமர்ந்து பாடத்தைக் கவனிப்பது எந்த மாண வர்களுக்கும் சிரமமாகவே இருக்கும்.

அவர்கள் தங்களுக்கு கிடைத்துள்ள நேரத்தைச் சிறப்பாகச் செலவிட வேண்டும் என்று நான் அவர்களுக்கு ஆலோசனை கூறினேன். குறிப்பாக அந்த மாணவர்கள் வேதாகமத்தையோ அல்லது சுவிசேஷத்தையோ கேள்விப்படுவதற்கு அந்த நேரமே ஒரே வாய்ப்பாக இருந்தது. "ஆனால் விளையாட்டுகளே இல்லாமல் ஒரு மணி நேரத்தை ஆர்வமுள்ளதாக்குவது எப்படி ?" என்று அவர்கள் என்னிடம் கேட்டார்கள.

நான் இந்த அத்தியாயத்திலுள்ள காரியங்களை அவர்களுக்குச் சுருக்கமாக எடுத்துக் கூறினேன். "நான் பகிர்ந்துகொள்வதற்கு அநேக காரியங்கள் இருக் கின்றன என்பதே என்னுடைய பிரச்சினையாக இருக்கிறது. ஆர்வத்தைத் தூண்டும் அநேக காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. அனைத்தையும்

ஒரு மணி நேரத்துக்குள் செய்து முடிப்பது சிரமமாக இருக்கிறது" என்று நான் அவர்களிடம் கூறினேன்.

- ஆனால் ஒரு முகாமிலோ அல்லது சிறுவர் வேதாகமப் பள்ளியிலோ அல்லது உங்கள் சபையில் வாரம் முழுவதும் மாலையில் நடத்தப்படும் கூட்டத்திலோ உங்களுக்கு அறுபது நிமிடங்களுக்கும் அதிகமான நேரம் கிடைக்கும். இந்த வேளைகளில் நீங்கள் கைவேலை, போட்டிகள், விளையாட்டுகள் போன்ற அம்சங்களை இணைத்துக்கொள்ளலாம். அப்படி நீங்கள் செயல்பயிற்சிகளைச் சேர்த்துக்கொள்ளும்போது, அவை வெறுமனே ஆர்வத்தையும் கிளர்ச்சியையும் தூண்டுபவையாக மட்டும் இராமல், பயன்தரத்தக்கவைகளாகவும் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, கைவேலைகள் வேதாகமப் பாடத்தோடும் அன்று நீங்கள் மாணவர்களுக்குப் போதிக்கும் மையச் சத்தியத்தோடும் தொடர்புடையவையாக இருக்க வேண்டும்.

அத்தியாயம் 11

எல்லாவற்றுக்கும் ஆயத்தமாக இருத்தல்

எனது கூட்டத்தைச் சிறப்பாக ஆயத்தம் செய்வது எப்படி ?

அத்தியாயத்தின் சுருக்கம்

(ஆயத்தம் செய்வதே உங்கள் முதல் காரியமாக இருக்க வேண்டும்).

- உங்களை நீங்களே ஆயத்தம் செய்துகொள்ளுங்கள்.
  - ✓ தேவனோடு கூட நடப்பதின் மூலம்
  - ✓ தேவனிடம் ஜெபிப்பதின் மூலம்
  - ✓ தேவனுடைய வார்த்தையைப் படிப்பதின்மூலம்
- உங்கள் செயல்திட்டத்தையும் பாடத்தையும் ஆயத்தம்செய்யுங்கள்
  - ✓ அதைத் தயாரியுங்கள்
  - ✓ அதை பயிற்சி செய்து பாருங்கள்
- உங்கள் உபகரணங்களை ஆயத்தம் செய்யுங்கள்
  - ✓ உங்கள் குறிப்புகள்
  - ✓ உங்கள் போதிக்கும் உபகரணங்கள்
  - ✓ உங்கள் பட அட்டைகள்
- உங்கள் அறையை ஆயத்தம் செய்யுங்கள்
  - ✓ அது சுத்தமாக இருக்கிறதா?
  - ✓ பிள்ளைகள் சௌகரியமாக இருப்பார்களா?
- சிறந்த ஆயத்தத்தின் பயன்கள்
- இக்கட்டுகள் வரும்போது சமாளிப்பது எப்படி

(இதற்காக நீங்கள் ஆயத்தமாக இல்லை)

ஒவ்வொரு சிறுவர் ஊழியரும் எதற்கும் ஆயத்தமாக இருக்க வேண்டும். சிறுவர் ஊழியத்தில் எதுவும் நடைபெறலாம். எனவே ஆயத்தமாக இருப்பது அவசியமாகும்.

நாம் ஏற்கெனவே பார்த்தபடி, உங்கள் செயல்திட்டத்தை நீங்கள் திட்டமிட வேண்டும். ஆனால் அது மட்டும் போதாது. உங்கள் கூட்டத்தின் ஒவ்வொரு அம்சத்துக்கும் அல்லது பகுதிக்கும் ஆயத்தமாக இருப்பதே வெற்றிகரமான சிறுவர் கூட்டத்திற்கான அஸ்திபாரமாகும். ஆயத்தத்துக்காகச் செலவிடப்படும் நேரம், "உங்கள் அஸ்திபாரங்களைக் கட்டியெழுப்புவதற்காகச் செலவிடப்படும் நேரம்" பயனுள்ள வகையில் செலவழிக்கப்படும் நேரமாகும்.

உங்களை நீங்களே ஆயத்தம் செய்து கொள்ளுங்கள்

ஆயத்தப்படுவதில் முதல் காரியம் சுய ஆயத்தமாகும். இது கீழ்க்கண்டவைகளை உள்ளடக்கியதாகும்:

- நீங்கள் போதிக்கும்படி திட்டமிட்டிருப்பதற்குப் பொருத்தமான வாழ்க்கை வாழுதல், தேவனோடு நடப்பதைத் தொடர்ந்து உங்களுடைய இலக்காகக் கொள்ளுதல்.
- ஒவ்வொரு நாளும் பிள்ளைகளுக்காகவும், நீங்கள் திட்டமிட்டுள்ள கூட்டத்துக்காகவும் **ஜெபித்தல்.** தேவன் போதிப்பதில் உங்களுக்கு உதவ வேண்டுமென்றும், பிள்ளைகளின் இருதயத்தில் கிரியைசெய்ய வேண்டுமென்றும் ஜெபிக்க வேண்டும்.
- ஒவ்வொரு நாளும் ஒழுங்கான முறையில் வேதாகமத்தை ஆய்வுசெய்ய நேரம் செலவழித்தல். இதனால் நீங்கள் வேதாகமத்தையும் அதிலுள்ள கோட்பாடுகளையும் சிறப்பாகப் புரிந்துகொள்ள முடியும்.

உங்கள் செயல்திட்டத்தையும் பாடத்தையும் ஆயத்தம் செய்யுங்கள்

- ஒவ்வொரு நாளும் உங்கள் செயல்திட்டத்தின் ஒரு பகுதியை முந்தைய அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளபடி ஆயத்தம் செய்ய நீங்கள் நேரம் செலவிட வேண்டும். உங்கள் செயல்திட்டத்தின் சுருக்க வரையறையை எழுதி வையுங்கள்.
- உங்கள் வேதாகமப் பாடத்தைத் தயார் செய்ய நீங்கள் அதிகமான நேரத்தைச் செலவிட வேண்டும். உங்களால் முடிந்தவரை உங்கள் ஊழியத்தில் சிறப்பாகச் செயல்படுவதே உங்கள் நோக்கமாக இருக்க வேண்டும்.
  - ✓ உங்கள் வேதாகமத்தை வாசித்து ஜெபியுங்கள்
  - ✓ உங்கள் பாடத்தை நீங்கள் நன்றாக அறிந்துகொள்ளும் வரையில் அதைப் படியுங்கள்.
  - ✓ உங்கள் பாடத்தின் சுருக்க வரையறையை எழுதிவையுங்கள்.

உங்கள் உபகரணங்களை ஆயத்தம் செய்யுங்கள்

பாடம் கற்பிக்கும் நடைபெறுவதற்கு முந்தைய வாரத்தில் உங்கள் பாடத்துக்குத் தேவையான பட அட்டைகள் காட்சிப் பொருட்கள் அனைத்தையும் நீங்கள் தயாராக வைக்க வேண்டும். அதை ஒழுங்கான வகையில் வரிசைப்படுத்தி வைக்க வேண்டும். இப்போது சிரமமில்லாமல் அவைகளை எடுத்துப் பயன்படுத்த முடியும்.

- உங்கள் வேதபாடம் மற்றும் போதனைக் குறிப்புகள், செயல்திட்டச் சுருக்கம் மற்றும் பாடச் சுருக்கம்.
- பாடத்தைப் போதிக்கும்போது பயன்படுத்தும் காட்சிப் பொருட்கள்.
- பாடத்தோடு இணைக்கப்படும் பாடல்கள் மற்றும் மனப்பாட வசனங்கள்.
- மறுஆய்வுக்காக நீங்கள் பயன்படுத்தும் பொருட்கள்.
- உங்கள் அருட்பணி நேரம் அல்லது செயல்பாட்டுப் பாடத்துக்குத் தேவையான காட்சிப் பொருட்கள்.

உங்கள் அறையை ஆயத்தம் செய்யுங்கள்

பிள்ளைகள் கூடிவரும் இடம் கவர்ச்சிகரமாகவும் ஆர்வத்தைத் தூண்டக் கூடிய வகையிலும் இருப்பது அவசியமாகும். பிள்ளைகள் வரும்படி இதுவே அவர்களைத் தூண்டக் கூடும். அறையை ஆயத்தம்பண்ணும்படி முன்கூட்டியே நீங்கள் அங்கே செல்ல வேண்டும்.

- அறையைச் சுத்தப்படுத்தி ஒழுங்குபடுத்த வேண்டும்.
- பிள்ளைகள் சௌகரியமாக அமர்ந்திருக்க முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும். நாற்காலிகள் சரியான உயரத்தில் இருக்க வேண்டும் அல்லது தரையில் சௌகரியமாக அமரும்படி ஏற்பாடு செய்ய வேண்டும். நெருக்கமாக அமரச்செய்வதைத் தவிருங்கள்.
- பிள்ளைகள் வரும்போது உங்களையும் பட உபகரணங்களையும் காண முடியுமா என்பதைப் பார்த்துக்கொள்ளுங்கள். அல்லது இது பிரச்சினையை ஏற்படுத்திவிடும்.
- காற்று வசதியைச் சரிபாருங்கள். சுத்தமான காற்று தேவையாகும். ஆனால் அதிகமாகக் காற்றடிக்கவும் கூடாது.
- பிள்ளைகள் அதிகக் குளிரிலோ அல்லது அதிக வெப்பத்திலோ தவிக்காதபடி பார்த்துக்கொள்ளுங்கள்.
- போதுமான வெளிச்சம் இருக்கிறதா, கண் கூச வைக்காத அளவுக்கு வெளிச்சம் சரியான திசையிலிருந்து வருகிறதா என்பதைப் பாருங்கள். பிள்ளைகளின் கண்களுக்கு முன்பாக சன்னல் இருக்கக் கூடாது. நீங்கள் பிளானல் அட்டையைப் பயன்படுத்துவீர்களானால் போதுமான வெளிச்சம் அதன்மீது பட வேண்டும். அதன் பின்னாலிருந்து வெளிச்சம் வரக் கூடாது.

- சுவர்களில் அழகான படங்களையும் சார்ட்டுகளையும் தொங்க விடலாம். தட்டுகளில் மலர்களை அழகாக வைக்கலாம். அது அறையின் சூழலை இனிமையானதாகவும் கவர்ச்சிகரமானதாகவும் ஆக்கும்.
- பிள்ளைகள் தங்கள் காலணிகளைக் கழற்றிப்போட ஒரு இடத்தை நீங்கள் ஆயத்தம் செய்ய வேண்டும்.
- நீங்கள் நிற்கும் இடத்துக்கு அருகே உங்கள் வேதாகமம், பட அட்டைகள், பாட உபகரணங்கள் இவைகளை வைக்க ஒரு சிறிய மேசை அல்லது நாற்காலி போடப்பட்டிருக்க வேண்டும்.

நல்ல ஆயத்தத்தின் பயன்கள்

நன்றாக ஆயத்தம்செய்திருக்கும் ஆசிரியர் தனது போதனையின் விளைவாக அதிகமான பயன்களைக் காண முடியும்:

- அவரால் பரபரப்பில்லாமல் செயல்பட முடியும்; ஏனென்றால் தான் என்ன செய்யப்போகிறோம் என்பதை அவர் அறிந்திருக்கிறார், அனைத்தும் தனது கட்டுப்பாட்டின் கீழாக இருக்கின்றன என்பதை அவர் அறிந்திருக்கிறார்.
- பிள்ளைகளும் நன்றாகக் கவனிப்பார்கள்; கூட்டத்தை அனுபவிப்பார்கள். ஏனென்றால் அவர்களும் பரபரப்பில்லாமல் இருப்பார்கள்; எல்லாம் நன்றாக ஆயத்தப்படுத்தப்பட்டிருக்கின்றன, நன்றாக ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றன என்பதை அவர்களால் உணர முடியும்.
- ஒழுக்கக் குறைபாட்டுப் பிரச்சினைக்கு அதிக வாய்ப்பில்லை.
- கூட்டத்தில் பிள்ளைகள் சந்தோஷத்தோடு கலந்துகொள்வார்கள், மகிழ்ச்சி யோடு அதை அனுபவிப்பார்கள்.
- ஆசிரியர் அனைத்துக்கும் ஆயத்தமானவராக இருப்பார்.

சிக்கல்களை நிர்வகித்தல்

என்றாலும், உண்மையாகக் கூறுவோமானால், நாம் எவ்வளவுதான் சிறப்பாக ஆயத்தம் செய்திருந்தாலும், நமது ஊழியத்திலும் சில வேளைகளில் இக்கட்டு கள் வருவதுண்டு. கூடுமானவரையில் இவைகளைச் சிறப்பாகவும் அமைதியாக வும் நாம் கையாள வேண்டும். ஒரு குழந்தை நோய்வாய்ப்படுகிறது, ஒரு சிறுவன் அழுது கொண்டிருக்கிறான், ஒரு நாய் உறுமியபடியே குரைத்துக்கொண்டிருக் கிறது, குடிகாரன் ஒருவன் குறுக்கிடுகிறான், சில பெற்றோர் தங்கள் பிள்ளைகளை இழுத்துக்கொண்டு செல்கிறார்கள் - இப்படிப் பல்வேறு இக்கட்டுகள் வரலாம். பெரும்பாலும் இப்படி நேரிடுவதில்லை என்றாலும், எனது அனுபவத்தில் இவை யனைத்தையும் நான் கண்டிருக்கிறேன்.

இப்படிப்பட்ட இக்கட்டுகளை நீங்கள் பல்வேறு வகைகளில் கையாளலாம்:

- அமைதியாக இருங்கள், பதட்டமடையாதீர்கள்.

- அமைதியான வகையிலும் அர்த்தமுள்ள வகையிலும் பிரச்சினையோடு இடைபடுங்கள்.
- நீங்கள் தொடர்ந்து போதித்துக் கொண்டிருக்கும்போது, உங்கள் உதவியாளர் (அப்படியொருவர் இருப்பாரானால்) பிரச்சினையைக் கவனிக்கும்படி செய்யுங்கள். இப்படிப்பட்ட வேளைகளில் உதவியாளரைப் பெற்றிருப்பது நலமாகும்.
- தொடர்ந்து முயலுங்கள் - விட்டுவிடாதீர்கள்.
- எல்லாவற்றுக்கும் மேலாகச் சூழ்நிலையை ஆண்டவரின் கரங்களில் ஒப்புக் கொடுத்து, அவருடைய உதவிக்காக அமைதியாக ஜெபியுங்கள்.

அத்தியாயம் 12
சந்தோஷமாகக் குரலெழுப்புங்கள்
சிறுவர்களுக்குப் பாடல்களைச் சொல்லிக்கொடுப்பது எவ்வாறு ?

அத்தியாயத்தின் சுருக்கம்

பாடுவது உங்கள் செயல்திட்டத்தின் அத்தியாவசியமான அங்கமாக இருக்கிறது).

- **பிள்ளைகள் ஏன் பாட வேண்டும் ?**
- **பிள்ளைகள் எதைப் பாட வேண்டும் ?**
- **பிள்ளைகள் பாடுவதற்கு நீங்கள் எவ்வாறு ஊக்குவிக்க வேண்டும்?**
- **ஒரு புதிய கோரஸ் பாடலை எவ்வாறு சொல்லிக்கொடுப்பது?**

உங்கள் போதிக்கும் செயல்திட்டத்தின் ஒரு முக்கியமான அம்சமாகப் பாடல்கள் காணப்பட வேண்டும். உங்கள் ஒரு மணிநேரக் கூட்டத்தில் கிட்டத்தட்ட 15 நிமிடங்களைப் பாடல்களுக்காகச் செலவழிக்க வேண்டும். நேரத்தைப் போக்குவது இதன் நோக்கமல்ல; பிள்ளைகள் இதை விரும்புவதாலோ அல்லது அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்பதற்காகவோ இதை நாம் செய்யவில்லை. நீங்கள் ஏன் பிள்ளைகளைப் பாடும்படி ஊக்குவிக்க வேண்டும் என்பதற்குப் பல நல்ல காரணங்கள் இருக்கின்றன.

பிள்ளைகள் ஏன் பாட வேண்டும்?

கீழ்கண்ட காரணங்களுக்காகப் பாடுவது முக்கியமானதாகும்:

- பாடுவதைக் குறித்து தேவனுடைய வார்த்தையில் போதிக்கப்பட்டிருக்கிறது, அது ஊக்குவிக்கப்படுகிறது. தேவன் அவ்வாறு கட்டளையிட்டிருக்கிறார்: *"சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி"* (கொலோசெயர் 3:16).

மேலும் பார்க்க, சங்கீதம் 92:1; சங்கீதம் 100:1,2; சங்கீதம் 47:7; 1 கொரிந்தியர் 14:15; சங்கீதம் 40:3; எபேசியர் 5:18, 19.

- பாடுவது சத்தியத்தைப் போதிக்கிறது

  பிள்ளைகள் பாடும்போதே வேதாகம சத்தியங்களைக் கற்றுக்கொள்ள முடியும். அவர்களால் தங்கள் கோட்பாடுகளைப் பாட முடியும்! சுவிசேஷச் செய்தி, கோட்பாட்டுச் சத்தியங்கள், அருட்பணி இவைகளைக் குறித்து நாம் பாட முடியும். ஆனால் இதற்குப் பொருத்தமான கோரஸ் பாடல்களை நீங்கள் தெரிந்தெடுக்க வேண்டும். மேலும் பிள்ளைகள் தாங்கள் கற்றுக்கொண்ட கோரஸ் பாடல்களை வேறு இடங்களிலும் பாடுவார்கள்; அதிலுள்ள சத்தியம் கேட்பவர்களுக்கு ஆசீர்வாதமாக விளங்கும்.

- பாடுவது மனப்பாட வசனத்தை மனனம் செய்ய உதவுகிறது.

  பல வசனங்கள் பாடல்களாக்கப்பட்டிருக்கின்றன. இவைகளைப் பாடும்போது பிள்ளைகள் வசனத்தைக் கற்றுக்கொள்வார்கள்.

- பாடுவது ஆராதனையை வெளிப்படுத்துகிறது.

  பிள்ளைகள் பாடும்போது தங்கள் சந்தோஷத்தையும், விசுவாசத்தையும், தேவைகளையும் வெளிப்படுத்துகிறார்கள். அவர்கள் தேவனைத் துதித்து ஆராதிக்கிறார்கள்.

- பாடுவது பிள்ளைகள் கூட்டத்தில் பங்கெடுக்கவும், தங்களை வெளிப்படுத்திக்கொள்ளவும் அவர்களுக்கு வாய்ப்பளிக்கிறது. இப்போது அவர்கள் வெறுமனே கேட்டுக்கொண்டிருப்பவர்களாக இராமல், துடிப்போடு பங்கெடுப்பவர்களாகவும் இருக்கிறார்கள்.

- பாடுவது உங்கள் கூட்டத்துக்குத் தேவையான சரியான சூழலைக் கொண்டு வரும்.

  சந்தோஷமானதும், அமைதியானதும், பயபக்தியுமான சூழலையே ஆசிரியர்கள் விரும்புகிறார்கள். கூட்டத்தின் ஒவ்வொரு அம்சத்திலும் சூழல் மாறுபடும்.

- பாடல்களும் இசையும் பெரும்பாலான பிள்ளைகளின் வாழ்க்கையின் ஒரு அங்கமாக இருக்கிறது. பிள்ளைகள் விளையாடும்போது பாடலை மெதுவாக இசைக்கிறார்கள். உரத்த குரலில் பாடுகிறார்கள்.

அவர்கள் எதைப் பாட வேண்டும்?

கூட்டத்தில் பாடப்படும் கோரஸ் பாடல்களை நீங்கள் முன்னரே தெரிந்து கொள்ள வேண்டும். உங்கள் செயல்திட்டச் சுருக்கவரையில் நீங்கள் அதை எழுதி வைத்திருக்க வேண்டும். கூட்டம் இடையே பிளவுகள் இல்லாமல் சுமுகமாக நடைபெற இது உதவும்.

தெரிந்துகொள்வதற்குப் பல்வேறு வகைப்பட்ட பாமாலைகள் அல்லது கோரஸ் பாடல்கள் இருக்கின்றன:

- தேவனை ஆராதிக்கும், துதிக்கும், போற்றிப்பாடும், அறிக்கையிடும், விண்ணப்பம்செய்யும் பல்வேறு வகைப்பட்ட பாவனைகளும் கோரஸ் பாடல்களும் இருக்கின்றன.
- இரட்சிக்கப்படாத பிள்ளைகளுக்காகச் சுவிசேஷப் பாடல்கள். இவை சாட்சிப் பாடல்களாகவோ, எச்சரிப்பு அல்லது அழைப்பு விடுக்கும் பாடல்களாகவோ இருக்கலாம்.
- கிறிஸ்தவ சிறுவர்களுக்காக கிறிஸ்தவ வாழ்க்கை குறித்த பாடல்கள். இவை அவர்களுடைய சிலாக்கியங்களையும், தேவனுக்கு ஊழியம் செய்யும் பொறுப்பையும் சுட்டிக்காட்டலாம்.
- அனைவருக்கும் பொருத்தமான கோரஸ் பாடல்கள் - சுருக்கமாக, இனிமையான ராகம் கொண்டவை, கற்றுக்கொள்ளவும் நீண்ட காலம் நினைவில் வைத்திருக்கவும் எளிமையானவை.
- பாடலாகப் பாடப்படும் வேத வசனங்கள்.
- கிறிஸ்மஸ், ஈஸ்டர் போன்ற வேளைகளில் பாடப்படும் சிறப்புப் பாடல்கள்.

உங்கள் கூட்டத்துக்காக கோரஸ் பாடல்களைத் தெரிவுசெய்யும்போது இந்த ஆறு முக்கியமான கேள்விகளைக் கேட்டுக்கொள்ளுங்கள்:

- இந்தக் கோரஸ் பாடல் சத்தியத்தைப் போதிக்கிறதா? பிள்ளைகள் இந்தக் கோரஸ் பாடல்களின் மூலமாகச் சத்தியத்தை அறிந்துகொள்ள வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறபடியால் இது முக்கியமானதாகும்.
- இதன் வரிகள் வேதவசன சத்தியத்துக்கு உண்மையாக இருக்கின்றனவா? வரிகளைக் கவனமாக வாசித்து, தேவனுடைய வார்த்தையோடு அவைகளைச் சரிபாருங்கள்.
- பிள்ளைகளால் இதன் வரிகளைப் புரிந்துகொள்ள முடியுமா? சில வரிகளை நீங்கள் விளக்கிக் கூற வேண்டியிருக்கலாம். என்றாலும் பாடல் 90 சதவீதம் தானாகவே புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும். விளக்கம் இல்லாமல் அதிகமான குறியீட்டுச் சொற்களைப் பயன்படுத்துவதைக் குறித்து எச்சரிக்கையாக இருங்கள்.
- இராகம் கற்றுக்கொள்ளவும், பாடவும் எளிதாக இருக்கிறதா? அதிகமாக உச்சஸ்தாயியிலோ அல்லது தாழ்ந்த ஸ்தாயியிலோ இல்லாதவாறு பார்த்துக்கொள்ளுங்கள். இராகம் வார்த்தைகளுக்கும் அதன் அர்த்தத்துக்கும் பொருத்தமாக இருக்கிறதா?
- கோரஸ் பாடல் போதிக்கப்படும் வேதபாடத்தின் மையச் சத்தியத்துக்குப் பொருத்தமானதாக இருக்கிறதா? பாடுவதற்காக மட்டுமே பாடுவதில் எந்த அர்த்தமும் இல்லை. பாடத்தின் நோக்கத்துக்கு வலுவூட்டும் கோரஸ் பாடல்களைத் தெரிந்துகொள்ளுவதே சிறப்பாகும்.

- உங்கள் சிறுவர்களின் வயதுவரம்புக்கு இந்தக் கோரஸ் பாடல் பொருத்த மாக இருக்கிறதா? பெரிய பிள்ளைகள் சைகை காட்டிப் பாடும் கோரஸ் பாடல்களை அதிகமாக விரும்பமாட்டார்கள்.

பிள்ளைகளுக்குப் பாடும்படி போதிப்பது எப்படி, அவர்களை எவ்வாறு ஊக்குவிப்பது?

பிள்ளைகளுக்குப் பாடும்படி போதிப்பதற்கும், அவர்களை ஊக்குவிப்பதற்கும் பல வழிமுறைகள் உங்களுக்கு உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன்:

- பிள்ளைகளுக்கு அறிமுகமான சில கோரஸ் பாடல்களை ஒவ்வொரு வாரமும் பாடுங்கள். ஆனால் இடையிடையே புதிய கோரஸ் பாடல்களையும் அறிமுகம் செய்ய வேண்டும். எப்போதுமே ஒரே கோரஸ் பாடல்களைப் பாடிக்கொண்டிராதேயுங்கள்.
- நீங்கள் எந்தெந்தப் பாடல்களைப் போதித்திருக்கிறீர்கள் என்ற விவரத்தை எழுதிவைக்க வேண்டும்.
- கோரஸ் பாடல்கள் உணர்வுகளை வெளிப்படுத்துவதைவிட, உண்மைகளை வெளிப்படுத்துவது நலமாகும்.
- பிள்ளைகளின் அனுபவங்களுக்குப் பொருத்தமான உண்மைகளையே பாடல்கள் வெளிப்படுத்த வேண்டும்.
- அந்தக் கோரஸ் எவ்வாறு பிள்ளைகளின் வாழ்க்கைக்குப் பொருத்தமாக இருக்கிறது என்பதை அவர்களுக்கு காட்டுங்கள். இது அவர்களுக்குப் பாடலின் ஆவிக்குரிய முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டும்.
- இனிய ராகம் இருந்தாலும் அர்த்தமில்லாத கோரஸ் பாடல்களைத் தவிர்த்துவிடுங்கள்.
- சில பழைய நல்ல பாமாலைகளைக் கற்றுக்கொடுக்க மறவாதீர்கள். இந்தப் பாடல்களைச் சொல்லிக்கொடுக்கும்போது, உங்கள் சைகைகள் தெளிவாக இருக்க வேண்டும். பிள்ளைகள் பார்த்துப் பின்பற்றும்படி சரியான வேளையில் சைகைகள் செய்துகாட்டப்பட வேண்டும். இந்தச் சைகைகள் வெறும் சரீர அசைவுகளாக இராமல் அவை பாடலின் செய்தியையும் அர்த்தத்தையும் வெளிப்படுத்த வேண்டும்.
- நீங்கள் சொல்லிக் கொடுக்கும் சில பாடல்களை விளக்குவதற்கு பட அட்டைகளையோ அல்லது பிளான்னல் படங்களையோ பயன்படுத்தலாம். படம் காட்டிப் பாடலைச் சொல்லிக்கொடுப்பீர்களானால் ஒரு பிள்ளை முன்னால் வந்து படப் புத்தகத்தைப் பிடித்துக்கொள்ளும்படி செய்யுங்கள். தேவைப்படும்போது பக்கங்களைப் புரட்ட வேண்டும்.
- உங்கள் போதனைச் செயல்திட்டத்தின் சில பகுதிகளில் நீங்கள் சிறப்புப் பாடல்களைப் பயன்படுத்தலாம்:

✓ உங்கள் வேத பாடத்துக்கு முன்பு நீங்கள் ஒரு அமைதியான கோரஸ் பாடலைப் பயன்படுத்த வேண்டும்.

✓ உங்கள் அருட்பணிப் பாடத்துக்கு முன்போ அல்லது முடிவிலோ ஒரு அருட்பணிப் பாடலை பயன்படுத்தலாம்.

✓ ஜெப வேளைக்கு முன்பாக ஒரு ஜெப கோரஸ் பாடலைப் பாட வேண்டும்.

- பிள்ளைகளுக்குப் பிடித்தமான கோரஸ் பாடல் எது என்று கேட்காதீர்கள். இது இடையூறையும் குழப்பத்தையும் உண்டுபண்ணும். எந்தப் பாடலைப் பாட வேண்டும் என்று தீர்மானிக்காத ஆசிரியர்களே இப்படிச் செய்வார்கள்.
- ஆனால் குழு சிறியதாக இருக்குமானால், உங்கள் செயல்திட்டத்தை நீங்கள் கவனமாகத் திட்டமிட்டிருந்தால், இப்படி மாணவர்களின் தெரிவுக்கு விடுவது அவர்களை ஊக்குவிக்கும், அவர்களும் பங்கெடுக்கும்படி செய்யும்.
- உங்களால் பாட முடியாவிட்டாலும், இசைக் கருவிகள் எதுவும் இல்லாவிட்டாலும், வேறு ஒருவரின் உதவியோடு நீங்கள் பாடல்களைப் பதிவுசெய்து, அவைகளைப் பிள்ளைகளுக்குப் போதிக்கலாம். பிள்ளைகள் ராகத்தை அறிந்துகொண்ட பின்னர் இந்தப் பதிவுகளுக்குத் தேவையிராது. அல்லது உங்களைவிடச் சிறப்பாகப் பாடத் தெரிந்த ஒருவரைப் பாடல் வேளைகளில் உதவும்படி கூட்டிவரலாம்.

எல்லாவற்றுக்கும் மேலாக, இந்த வாசகத்தை நினைவில் வைத்திருங்கள்:

இசையானது பிள்ளைகளின் வாழ்க்கையில் அற்புதமான தாக்கத்தைக் கொடுக்கிறது. எனவே பாடல் வேளைக்கு அதற்குரிய முக்கியத்துவத்தை நீங்கள் கொடுக்க வேண்டும்".

ஒரு புதிய கோரஸ் பாடலைப் போதிப்பது எப்படி?

இவ் விதிகள் உங்களுக்கு உதவியாக இருக்கும். பிள்ளைகளுக்குப் புதிய கோரஸ் பாடல்களைக் கற்றுக்கொடுக்கும்போது இவைகளைப் பயன்படுத்த வேண்டும்.

பாடத்துக்கு முன்பாக:

- நீங்கள் அந்தப் பாடலின் வரிகளையும் இசையையும் முழுமையாகக் கற்றிருக்க வேண்டும். நீங்கள் போதிப்பதற்கு முன்பாக எந்தப் புதிய பாடலையும் நீங்கள் நன்றாகத் தெரிந்துவைத்திருப்பது அவசியமாகும். அதைப் பாடுவதில் நீங்கள் சந்தோஷப்பட வேண்டும்.
- பியானோ இசைப்பவரோ ஆர்மோனியம் இசைப்பவரோ உங்களோடு இருந்தால் முன்னதாகவே சேர்ந்து இசைத்துப் பழகுங்கள்.
- ஒரு பாடலைப் போதிக்க பட உபகரணங்களைப் பயன்படுத்துவீர்களானால் அது உங்களுக்கு நன்றாக அறிமுகமானதாக இருக்க வேண்டும்.

முன்னதாகவே அதில் பயிற்சிசெய்து பார்த்துக்கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, பாடல் வரிகளை நீங்கள் ஒரு பட அட்டையில் எழுதிக் காட்டலாம். அல்லது பிளான்னல் பலகையையோ அல்லது கரும்பலகையையோ பயன்படுத்தலாம். வார்த்தைகளைச் சித்தரிக்க பாடங்களைப் பயன்படுத்துவது நலமாகும்.

கூட்டத்தின்போது:

- ஒரு சிறிய கதையின்மூலம் அந்தக் கோரஸ் பாடலை அறிமுகம் செய்யுங்கள். அல்லது அதன் அர்த்தத்தைப் படங்களின் மூலம் விளக்குங்கள். அதைப் பாடுவதற்கான காரணத்தை எடுத்துக் கூறுங்கள்.
- பிள்ளைகள் பார்க்கக்கூடிய வகையில் பாடல் வரிகளை உயர்த்திக் காட்டுங்கள்.
- இரண்டு முறை அதன் சொற்களை வாசியுங்கள்.
- பிள்ளைகள் அதன் இராகத்தைக் கேட்கும்படி செய்யுங்கள். இசைக் கருவிகள் இல்லாவிட்டால் நீங்களே பாடிக் காட்ட வேண்டும்.
- கடினமான வார்த்தைகளைச் சுருக்கமாக விளக்குங்கள். இது போதிப்பதற்கான நேரமல்ல என்பதை மறந்துவிடாதீர்கள். ஒரே வேளையில் எல்லாவற்றையும் விளக்க முயலாதீர்கள்.
- நீங்கள் வரிகளைப் பாடும்போது, பிள்ளைகள் இராகத்தை முணுமுணுக்கும்படி செய்யுங்கள்.
- பலமுறை ஒன்றாகச் சேர்ந்து அந்தக் கோரஸ் பாடலைப் பாடுங்கள். உங்கள் கையினால் பாடல் பாடப்படுவதை நீங்கள் வழிகாட்ட வேண்டும்.
- அதிகமான விளக்கம் தேவைப்பட்டால் பாடலோடு சேர்ந்து அதையும் சொல்லிக்கொடுங்கள்.

அத்தியாயம் 13

தேவனோடு பேசுதல்

ஜெபிக்கும்படி சிறுவர்களுக்குச் சொல்லிக்கொடுப்பது எப்படி ?

அத்தியாயத்தின் சுருக்கம்

(பிள்ளைகளுக்கு எப்படி ஜெபிப்பது என்று சொல்லிக்கொடுக்க வேண்டும்)

- **ஏன் பிள்ளைகளுக்கு ஜெபிக்கச் சொல்லிக்கொடுக்க வேண்டும்?**
- **அவர்களுக்கு நாம் என்ன போதிக்க வேண்டும்?**
  - ✓ ஜெபிப்பது குறித்த கொள்கைகளைப் போதியுங்கள்: என்ன? ஏன்? எங்கே? எப்போது? எப்படி?
  - ✓ தேவன் எவ்வாறு ஜெபத்துக்குப் பதிலளிக்கிறார் என்பதைப் போதியுங்கள்.
  - ✓ தனிப்பட்ட முறையில் ஜெபிக்க பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுங்கள்.
  - ✓ வெளியிடங்களில் ஜெபிக்க பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுங்கள்.

இன்று கிறிஸ்தவர்களுக்கு ஜெபமே அதிகமாகத் தேவைப்படுகிறது. ஸ்காட்லாந்தைச் சேர்ந்த புகழ்பெற்ற போதகர் மறைதிரு. டெரிக் பிரைம் இவ்வாறு எழுதியிருக்கிறார்:

"*ஜெபம் மிக முக்கியமான நடவடிக்கை மட்டுமல்ல.* ***அதுவே மிகவும் முக்கியமானது.*** *இதைப்போல கிறிஸ்தவ வாழ்க்கையின் மற்ற அனைத்துச் செயல்களும் சார்ந்திருக்கும் வேறு நடவடிக்கை எதுவும் கிடையாது.*"

எனவே நமது பிள்ளைகளுக்கு ஜெபிக்கக் கற்றுக்கொடுப்பது நமது பொறுப்பாகும். அவர்களுடைய வளர்ச்சிபெற்று வரும் ஆளுமையில் ஜெபிக்கும் பழக்கம் [illegible]யச் செய்யப்படுமானால், இந்தத் தேவை சந்திக்கப்படும்.

ஏன் பிள்ளைகளுக்கு ஜெபிக்கக் கற்றுக்கொடுக்க வேண்டும்?

ஜெபம் எவ்வளவு முக்கியமானது என்பதை ஆசிரியர்களாகிய நீங்களும் நானும் உணர்ந்துகொள்வோமானால், நாம் நமது விசுவாசிக்கும் பிள்ளைகளுக்கு அதைக் கற்றுக்கொடுப்போம்; இதனால் அவர்கள் ஜெபம் கொண்டுவரும் ஆசீர்வாதங்களை (அவர்களுக்கும் மற்றவர்களுக்கும்) அனுபவிக்க முடியும்.

- ஜெபிக்கும்படி தேவன் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறார்:

  "*சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ண வேண்டும் என்பதைக் குறித்து அவர்களுக்கு அவர் ஒரு உவமையைச் சொன்னார்*" (லூக்கா 18:1).

  "*இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்*" (1 தெசலோனிக்கேயர் 5:17).

- தேவன் ஜெபத்துக்குப் பதிலளிக்கிறார்.
  "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்கு திறக்கப்படும்" (மத்தேயு 7:7-8).

- தேவனோடு நெருக்கமான உறவைக் காத்துக்கொள்ள ஜெபம் பிள்ளைகளுக்கு உதவுகிறது.
  "தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்" (யாக்கோபு 4:8).

- அவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு ஜெபம் அத்தியாவசியமானதாகும்.
  "அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச் செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்" (சங்கீதம் 91:15).

- ஜெபம் துன்பங்கள், கவலைகளின் மத்தியிலும் சமாதானத்தைக் கொண்டு வருகிறது.
  "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" (பிலிப்பியர் 4:6).

- பிள்ளை தனது அன்றாடப் பிரச்சினைகளை எதிர்நோக்க ஜெபம் அவனுக்கு உதவுகிறது. ஒரு ஆரோக்கியமான ஜெப வாழ்க்கை பிள்ளைக்குப் பெரிய ஆதாயமாகும். அது வேறு வகையில் கிடைக்காத பலத்தின் ஆதாரத்தை அவனுக்குக் கொடுக்கிறது.
  "இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார்" (சங்கீதம் 34;6).
  "ஆகையால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யும் கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்" (எபிரெயர் 4:16).

- அவர்களின் ஜெபங்களின் மூலமாக தேவன் மற்றவர்களை இரட்சிக்கிறார், ஆசீர்வதிக்கிறார்.
  "நீங்கள் தேவனை நோக்கிச் செய்யும் ஜெபங்களில், நான் போராடுவது போல நீங்களும் என்னோடுகூடப் போராட வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தமும், ஆவியானவருடைய அன்பினிமித்தமும், உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்" (ரோமர் 15:32).

ஆனால் நாம் பிள்ளைகளுக்கு ஜெபிக்கக் கற்றுக்கொடுக்க வேண்டும். கற்றுக் கொடுக்காவிட்டால் அவர்கள் ஜெபிக்க மாட்டார்கள், அல்லது தவறான வகையில் ஜெபிப்பார்கள். ஆண்டவராகிய இயேசு தமது சீஷர்கள் ஜெபிக்கக் கற்றுக்

கொடுத்ததுபோல (லூக்கா 11:1) நாமும் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

நாம் எதைப் போதிக்க வேண்டும்?

பிள்ளைகள், குறிப்பாக இரட்சிக்கப்பட்ட பிள்ளைகள் மூன்று காரியங்களைச் செய்ய வேண்டுமென்று நாம் விரும்புகிறோம்.

- ஜெபம் பற்றிய கொள்கைகளைக் கற்றுக்கொள்ளுதல்.
- அந்தக் கொள்கைகளைத் தங்கள் சொந்த ஜெப வாழ்க்கையில் செயல்முறைப்படுத்துதல்.
- மற்ற பிள்ளைகளோடு சேர்ந்து கூட்டு ஜெபத்தில் பங்கெடுத்தல்.

இப்போது இவை ஒவ்வொன்றையும் நாம் விவரமாகப் பார்ப்போம்.

ஜெபத்தைப்பற்றிய கொள்கைகளைப் போதித்தல்

கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பதின்மூலம் நாம் இந்தக் கொள்கைகளைக் கற்றறிய முடியும். இந்தக் கேள்விகளைக் கேட்டு, பதிலளிப்பதின்மூலம் கொஞ்சம் கொஞ்சமாகப் பிள்ளைகளுக்கு இதைப் போதிக்க வேண்டும்.

ஜெபம் என்றால் என்ன?

ஜெபம் என்பது நமது பரமபிதாவாகிய தேவனோடு பேசுவதாகும். அவர் நம்மை நேசிக்கிறார், அவர் சர்வ வல்லவராக இருக்கிறார். இது மற்றவர் கூறும்படி சொல்லும் வார்த்தைகளைச் சொல்லுவது மட்டுமல்ல, பிள்ளைகளுக்கு ஜெபங்களைப் போதிப்பதைவிட எப்படி ஜெபிப்பது என்று போதிப்பதே மேலானதாகும்.

யார் ஜெபிக்க முடியும்?

ஜெபம் என்பது இயேசுகிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டு, இப்போது தேவனைத் தங்கள் பரமபிதாவாகக் கொண்டுள்ளவர்களின் சிலாக்கியமாகும்.

"நீங்கள் ஜெபம்பண்ண வேண்டிய விதமாவது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக" (மத்தேயு 6:9).

ஆனால் தேவன் பாவிகளையும் நேசிக்கிறார். அவர்கள் இரட்சிப்புக்காகவும் மன்னிப்புக்காகவும் வேண்டும் ஜெபத்தை அவர் கேட்க விரும்புகிறார்.

"ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான்" (லூக்கா 18:13).

நாம் எங்கே ஜெபிக்க முடியும்?

எந்த இடத்திலும் நாம் ஜெபிக்கலாம்! மீனின் வயிற்றிலிருந்து யோனா ஜெபித்தான் (யோனா 2:1-9). லீதியாள் நதிக்கரையில் ஜெபித்தாள் (அப். 16:13-14). பவுலும் சீலாவும் சிறைச்சாலையில் ஜெபித்தார்கள் (அப். 16:25).

நாம் எப்போது ஜெபிக்க வேண்டும்?

நாம் எந்த வேளையிலும் ஜெபிக்கலாம்:

"எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத் தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மன உறுதி யோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்" (எபேசியர் 6:18).

"அந்திசந்தி மத்தியான வேளைகளிலும் நான் தியானம்பண்ணி முறையிடுவேன்; அவர் என் சத்தத்தைக் கேட்பார்" (சங்கீதம் 55:17).

ஆனால், பிள்ளைகள் ஜெபிக்க வேண்டுமென்று நாம் வலியுறுத்தும் குறிப்பிட்ட வேளைகளும் இருக்கின்றன:

- ஒவ்வொரு நாள் காலையிலும் அமைதியான நேரத்தில்.
- உணவுக்கு முன்பாக.
- சபையில் சிறுவர் கூட்டம் அல்லது நற்செய்தி கிளப்பில்.

நாம் எப்படி ஜெபிக்க வேண்டும்?

பிதாவாகிய தேவனிடம் (மத்தேயு 6:9; யோவான் 16:23); குமாரனாகிய தேவனாகிய, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் (யோவான் 14:13, 14). பரிசுத்தாவியாகிய தேவன் வழிநடத்துகிறபடி (ரோமர் 8:26).

ஜெபிப்பதைக் குறித்த பிற "விதிகளும்" முக்கியமானவையாகும். இவை இடையிடையே குறிப்பிடப்பட வேண்டும்:

- தேவனால் பதிலளிக்க முடியும், அவர் பதிலளிப்பார் என்ற விசுவாசத்தில் ஜெபியுங்கள் (யாக்கோபு 1:6; எபிரெயர் 11:6; 1 தீமோத்தேயு 2:8).
- தேவனுடைய சித்தத்திற்கேற்றபடியும், அவருடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடியும் ஜெபியுங்கள் (1 யோவான் 5:14, 15).
- ஸ்தோத்திரத்தோடு ஜெபியுங்கள் (கொலோசெயர் 4:2).
- தொடர்ந்து ஜெபியுங்கள் (1 சாமுவேல் 12:23; கொலோசெயர் 4:2)
- கீழ்ப்படிதலுள்ள ஆவியுடன் ஜெபியுங்கள் (சங்கீதம் 66:18; யோவான் 9:31; 1 யோவான் 3:22; ஏசாயா 59:1-2).
- உங்கள் ஜெபங்களில் தெளிவில்லாமல் ஜெபிக்காமல் குறிப்பாக ஜெபியுங்கள் (பிலிப்பியர் 4:6-7).
- பயபக்தியோடு வாழும்போது ஜெபம் அதிகப் பயன்விளைவிப்பதாக இருக்கிறது (யாக்கோபு 5:16).
- கீழ்ப்படியாமை (யோவான் 15:7), சுயநலம் (யாக்கோபு 4:3), தவறான மனோபாவம் (1 பேதுரு 3:7), வேண்டுமென்றே தொடர்ந்து பாவம் செய்தல் (சங்கீதம் 66:18) இவை ஜெபத்துக்கு இடையூறாக இருக்கின்றன.

பிள்ளை எப்படி அமர்ந்து ஜெபிக்கிறது என்பது இரண்டாம் பட்சமான காரியமாகும் - உட்கார்ந்து, நின்றபடியே அல்லது முழங்காற்படியிடுதல். கவனம் சிதறுவதைத் தடுக்க பிள்ளை கண்ணை மூடியபடியே ஜெபிக்கவேண்டும். மரியாதையைக் காட்டுவதற்காகத் தலை குனிந்து ஜெபிக்க வேண்டும்.

நான் என்ன சொல்ல வேண்டும்?

"அன்புள்ள பரம பிதாவே, ... என்னை மன்னியும் ... உமக்கு ஸ்தோத்திரம் ... தயவுசெய்து ... நான் உம்மை நேசிக்கிறேன் ... ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன், ஆமென்."

அதாவது, "இறையியலின்படி" ஜெபம் இவைகளை உள்ளடக்கியிருக்கிறது:

- அறிக்கையிடுதல் (1 யோவான் 1:9) - "என்னை மன்னியும்."
- நன்றிகூறுதல் (கொலோசெயர் 4:2) - "உமக்கு நன்றி."
- பரிந்துரை ஜெபம் (எபேசியர் 6:18; யாக்கோபு 5:16) - "தயவுசெய்து."
- ஆராதித்தல் (சங்கீதம் 95:6; வெளிப்படுத்தல் 19:5) - "நான் உம்மை நேசிக்கிறேன்."

வழக்கமாக நாம் இவ்வாறு நமது ஜெபத்தை முடிக்கிறோம்:

- "*ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில்*" - அவராலும், அவர் செய்துள்ளதினாலும் நாம் தேவனுடைய பிரசன்னத்துக்கு முன்பாக வந்து அவரோடு பேச முடிகிறது.
- "*ஆமென்*" - 'அப்படியே ஆகக்கடவது" என்பது இதற்கு அர்த்தமாகும். இது தேவனில் நமது விசுவாசத்தையும், அவர் நமது ஜெபங்களுக்குப் பதிலளிப்பார் என்ற நம்பிக்கையையும் வெளிப்படுத்துகிறது.

நாம் ஏன் ஜெபிக்க வேண்டும்?

தேவன் நாம் ஜெபிக்கும்படி விரும்புகிறார், அப்படியே அவர் கட்டளையிட்டிருக்கிறார் என்பதே முக்கியமான காரணமாகும் (லூக்கா 11:9; யாக்கோபு 4:8).

தேவன் எவ்வாறு ஜெபத்துக்குப் பதிலளிக்கிறார்?

தேவன் மூன்று வழிகளில் ஜெபத்துக்குப் பதிலளிக்கிறார்:

- சில வேளைகளில் "சரி" என்று பதிலளிக்கிறார் - அது அவருடைய சித்தமாகவும், நமக்கு நன்மையாகவும் இருக்குமானால் (யாக்கோபு 5:17-18).
- சில வேளைகளில் "இல்லை" என்று பதிலளிக்கிறார் - இதுவே நமக்குச் சிறப்பானதாக இருக்குமானால் (2 கொரிந்தியர் 12:9; யாக்கோபு 4:3).
- சில வேளைகளில் "காத்திரு" என்று கூறுகிறார் - வேளை இன்னும் வரவில்லை (யோவான் 11:6).

இந்த மூன்று வழிகளும் போக்குவரத்து சிக்னல்போல இருக்கின்றன.

- சிவப்பு - போகாதே!
- மஞ்சள் - காத்திரு!
- பச்சை - போ!

தனிப்பட்ட முறையில் ஜெபிக்கப் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுங்கள்

ஜெபத்தைக் குறித்த (தனிப்பட்ட ஜெபமும் இதில் அடங்கும்) கொள்கைகளை ஏற்கெனவே நாம் பார்த்தோம்.

ஆனால் தனிப்பட்ட ஜெப வாழ்க்கையில் நீங்கள் பிள்ளைக்கு வழிகாட்டி, அவனுக்கு உதவ வேண்டும்.

- ஒவ்வொரு நாள் காலையிலும் தேவனோடு சற்று நேரத்தைச் செலவிடுவது எவ்வளவு முக்கியமானது என்பதை அவனுக்குக் காட்டுங்கள். ஒவ்வொரு நாளிலும் தொண்ணூற்றாறு கால்மணி நேரங்கள் இருக்கின்றன. அதில் ஒன்றை அவன் தேவனுக்காக ஒப்புக்கொடுக்கக் கூடாதா? இந்த வேளையே "அமைதியான நேரம்" என்று அழைக்கப்படுகிறது.
- எப்போது இந்த வேளையை ஒதுக்குவது என்று வழிநடத்துங்கள்.
  - ✓ செயல்பூர்வமாகச் சாத்தியமாகுமானால், காலை வேளையே சிறப்பானதாகும் (கூடுமானவரை அதிகாலையில்)
  - ✓ அல்லது இரவில் படுக்கைக்குச் செல்வதற்கு முன்பாக.
  - ✓ இவையிரண்டும் இயலாது என்றால், நாளின் மத்தியில் அவன் தனியாக இருக்கும் ஒரு வேளையைத் தெரிந்துகொள்ள வேண்டும்.
- எங்கே அவன் தனது அமைதியான நேரத்தைக் கொள்ளலாம் என்பதற்கு ஆலோசனை கொடுங்கள்:
  - ✓ கூடுமானால் - வீட்டில் ஒரு அறையில்.
  - ✓ பருவகாலத்துக்கு ஏற்றபடி, வெளியே.
  - ✓ வேறு ஏதேனும் இடம் கிடைக்குமானால், அங்கே.
- அவன் தனது அமைதியான நேரத்தில் என்ன செய்ய வேண்டும் என்பதை அவனுக்குக் காட்டுங்கள்:
  - ✓ தான் உணர்ந்த ஏதேனும் பாவத்தை அறிக்கையிட வேண்டும் - "என்னை மன்னியும்."
  - ✓ தேவன் செய்துள்ளவைகளுக்காக அவருக்கு நன்றி கூற வேண்டும் - "உமக்கு நன்றி."
  - ✓ மற்றவர்களுக்காகவும் அவர்களின் தேவைகளுக்காகவும் ஜெபிக்க வேண்டும் - "தயவுசெய்து"
  - ✓ தனக்காகவும் தன்னுடைய தேவைகளுக்காகவும் ஜெபிக்க வேண்டும் - "தயவுசெய்து."

- அவனுக்கு நினைவூட்டும் வகையில் ஒரு சிறிய "ஜெப டயரியை" வைத் திருக்கும்படி ஊக்குவியுங்கள்:
  - ✓ அன்று யாருக்காக ஜெபிக்க வேண்டும்.
  - ✓ வாரம் ஒருமுறை யாருக்காக ஜெபிக்க வேண்டும்.

பொதுவான இடத்தில் ஜெபிக்கும்படி பிள்ளைக்குக் கற்றுக்கொடுங்கள்

இரட்சிக்கப்பட்ட பிள்ளைகள் சிறுவர் கூட்டத்தில் மற்றப் பிள்ளைகளோடு சேர்ந்து ஜெபத்தில் பங்கெடுப்பார்களானால் அது அவர்களுக்கு ஆவிக்குரிய ரீதியாக அதிக உதவியாக இருக்கும். அப்படிச் செய்யும்படி அவர்களுக்குப் போதித்து, உதவிசெய்து, அவர்களை ஊக்குவிப்பது உங்களுடைய பொறுப்புகளில் ஒன்றாகும். ஆனால் ஒருபோதும் அவர்களை முன்னிறுத்தி ஜெபிக்கும்படி பலவந்தம்பண்ணாதிருங்கள். அது பிள்ளைகளுக்குப் பிரச்சினைகளை ஏற்படுத்திவிடும். உங்களுக்காகப் பல வழிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன:

- முதலாவதாக, நீங்கள் தொடர்ந்து பல வாரங்கள் ஜெபத்தைக் குறித்து உப தேசங்களைக் கொடுக்க வேண்டும். முன்னர் கொடுக்கப்பட்ட கேள்வி பதில் முறையைப் பயன்படுத்தலாம்.
- ஜெபிக்கும்போது எளிய சொற்களையும், சிறிய வாக்கியங்களையும் பயன் படுத்த வேண்டும் என்று பிள்ளைகளுக்கு வலியுறுத்துவது அவசியமாகும். நாம் ஜெபிக்கும்போது இதற்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். மேலும் பிள்ளைகள் தங்கள் இயல்பான குரலில் ஜெபிக்க வேண்டும். "ஜெப குரல்" என்று வித்தியாசமான குரல் எதுவும் கிடையாது என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். ஜெப வேளையில் அமைதியையும் பயபக்தியையும் வலியுறுத்த வேண்டும்.
- ஜெப கோரஸ் பாடலோடு இந்த வேளையை நீங்கள் துவக்கலாம்.
- பிள்ளைகள் தங்கள் கண்களை மூடி, தலைகுனிந்து, கைகளை மடக்கி, பய பக்தியோடு நீங்கள் பாடும் கோரஸ் பாடலைப் பின்தொடர்ந்து பாடும்படி செய்ய வேண்டும்.

பிறகு ஒரு குறுகிய ஜெபத்தோடு நீங்கள் துவங்க வேண்டும்.

- சிறுவர் கூட்டத்தில் மிகவும் பொருத்தமான இரண்டு வகை பொதுவான ஜெபங்கள் — நன்றிகூறுதல் மற்றும் பரிந்துரை ஜெபம் (மற்றவர்களுக்காக ஜெபித்தல்).
- நன்றி கூறுவதின் அடிப்படைக் கருத்தோடு நீங்கள் துவங்கலாம்:
  - ✓ எவைகளுக்காக தேவனுக்கு நன்றி கூற வேண்டும் என்று பிள்ளைகளி டம் கேளுங்கள்.

- ✓ அல்லது எவைகளுக்காக நன்றி கூற வேண்டும் என்று பிள்ளைகளுக்கு நினைவூட்டும்படியான படங்கள் அல்லது பொருட்களைக் காட்டலாம் - உணவு, தண்ணீர், வீடு, சபை, வேதாகமம், ஆண்டவராகிய இயேசு, அவருடைய மரணம்.
- ✓ இதில் ஒன்றுக்காக யார் தேவனுக்கு நன்றி சொல்ல விரும்புகிறீர்கள் என்று பிள்ளைகளிடம் கேட்கலாம்.
- ✓ எப்படி இதைச் செய்வது என்பதற்கு எளிய வழிமுறைகளைக் கொடுங்கள்:
  - எதற்காக நன்றி கூற வேண்டும் என்பதை நினைவூட்டும் படத்தை அல்லது பொருளை அவர்களே கையில் பிடித்திருக்கும்படி செய்யுங்கள்.
  - "அன்பான பிதாவே" போன்ற எளிய சொற்களோடு துவங்கும்படி ஊக்குவியுங்கள்.
  - தங்கள் சொந்த வார்த்தைகளைப் பயன்படுத்தும்படியும், இயல்பான குரலில் பேசும்படியும் அவர்களை ஊக்குவியுங்கள்.
  - "இயேசுவின் நாமத்தில், ஆமென்" என்ற சொற்களோடு ஜெபத்தை முடித்துவைக்குமாறு போதியுங்கள்.

➤ பிறகு அடுத்த கூட்டத்தில் மற்றவர்களுக்காக ஜெபிப்பது குறித்த கருத்தை நீங்கள் அறிமுகம்செய்ய வேண்டும்:

- ✓ பிள்ளைகளிடம் ஜெப விண்ணப்பங்களைக் கேளுங்கள். குறிப்பாக, அவர்களுக்குச் சொந்தமானவர்களுடைய தேவைக்காக ஜெபிக்கலாம்.
- ✓ நீங்களும் சில விண்ணப்பங்களைச் சேர்த்துக்கொள்ளுங்கள். விண்ணப்பங்கள் சுருக்கமாக இருக்க வேண்டும். அதிக எண்ணிக்கையில் இருக்கவும் கூடாது. இந்த ஜெப விண்ணப்பங்களைச் சித்திரிக்க நீங்கள் படங்களைப் பயன்படுத்தலாம். இந்தப் படங்களை ஜெபிக்கும் கரங்கள் படத்தின் மீது ஒட்டலாம். வெவ்வேறு பிள்ளைகள் தங்கள் கையிலுள்ள படத்திலுள்ள விண்ணப்பங்களுக்கு ஏற்றவாறு ஜெபிக்கலாம்.
- ✓ அல்லது உங்கள் கையையே நீங்கள் எளிய உபகரணமாகப் பயன்படுத்தலாம். ஜெபிக்கும் பிள்ளை ஒவ்வொன்றாகத் தனது கைவிரல்களை மடக்கி ஜெபிக்கும்படி செய்யுங்கள்:
  - பெருவிரல் (அது நமது பக்கமாகச் சுட்டிக்காட்டுவதால்) - நமது குடும்பங்களுக்காக.
  - ஆள்காட்டி விரல் - நமது ஆசிரியர்களுக்காக.
  - நடுவிரல் - நம்மீது ஆளுகைசெய்பவர்களுக்காக.
  - மோதிர விரல் - நோயுற்றிருப்பவர்களுக்காக.
  - சுண்டுவிரல் - நமக்காகவும் மற்ற சிறுவர் சிறுமியருக்காகவும்.

✓ பிறகு பிள்ளைகளிடம் யார்யார் எந்த விண்ணப்பத்துக்காக ஜெபிக்க முன் வருகிறார்கள் என்று கேட்க வேண்டும்.

✓ இடையிடையே தேவன் பதிலளிக்கும் மூன்று வழிகளை நீங்கள் பிள்ளை களுக்கு நினைவுபடுத்த வேண்டும் (முந்தைய பக்கத்தில் கூறியுள்ளபடி.)

- "சரி" - தேவனுடைய சித்தம் மற்றும் வேளைக்கு ஏற்றபடி இருக்கு மானால் (1 இராஜாக்கள் 18:37, 38).
- "இல்லை" - இதுவே நமக்கு நன்மையானதாக இருக்குமானால் (2 கொரிந்தியர் 18:37, 38).
- "காத்திரு" - அது தேவனுடைய பரிபூரண வேளையாக இராதிருக்கு மானால் (யோவான் 11:1-45).

➤ இடையிடையே நீங்கள் சில செயல்பூர்வமான வழிமுறைகளை அறிமுகம் செய்து, விளக்க வேண்டும்:

✓ அவர்களுடைய கவனம் சிதறாமல் இருப்பதற்கு அவர்கள் ஜெபிக்கும் போது கண்களை மூடிக்கொள்ள வேண்டும்.

✓ மரியாதையைக் காட்டும் விதமாகத் தலைகளைத் தாழ்த்த வேண்டும்.

✓ அசையாமல், அடக்கமாக இருக்கும்படி கைகளைக் கட்டிக்கொள்ள வேண் டும்.

➤ இடையிடையே ஜெபம் கிறிஸ்தவர்களின் சிலாக்கியம் என்பதை நீங்கள் சுட்டிக்காட்ட வேண்டும். அது இயேசுகிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டிருப்பவர்களின் சிலாக்கியமாகும். இரட்சிக்கப்படாத பிள்ளை களிடமிருந்து "ஆண்டவரே என்னை இரட்சியும்" என்ற ஜெபத்தைக் கேட்கவே அவர் விருப்பப்படுகிறார்.

➤ தாங்களாகவே பொதுவாக ஜெபிக்க பிள்ளைகள் கூச்சப்பட்டாலோ அல்லது தயங்கினாலோ நீங்கள் அவர்களை ஜெபத்தில் வழிநடத்த வேண்டும். வார்த் தைக்கு வார்த்தை உங்களைப் பின்பற்றி ஜெபிக்கும்படி செய்யுங்கள். பிறகு தாங்களாகவே ஜெபிக்க அவர்கள் முன்வருவார்கள்.

அத்தியாயம் 14

வார்த்தையைக் கற்றுக்கொள்ளுதல்

வேதவசனத்தை மனப்பாடம் செய்யும்படி சிறுவர்களை ஊக்குவிப்பது எப்படி ?

அத்தியாயத்தின் சுருக்கம்

(பிள்ளைகள் வேத வசனங்களை மனப்பாடம் செய்ய வேண்டும்)

- அவர்கள் வேதவசனங்களை மனப்பாடம் செய்யும்படி நாம் ஊக்குவிக்க வேண்டும் என்பதற்கான **காரணங்கள்.**
- மனப்பாடம் செய்யவேண்டிய வசனத்தைத் **தெரிந்துகொள்ளுதல்.**
- கூட்டத்துக்கு முன்பாக **ஆயத்தம்செய்தல்.**
- வசனத்தைப் புரிந்துகொள்ள அவர்களுக்கு **உதவுதல்.**
- இந்த வாரத்துக்கான வசனத்தை மனப்பாடம் செய்யும்படி அவர்களை **ஊக்குவித்தல்.**
- ஏற்கெனவே கற்றுக்கொண்ட வசனங்களை மறுஆய்வு **செய்தல்.**

உங்கள் ஒவ்வொரு கூட்டத்திலும் ஒரு வேத வசனத்தைப் பிள்ளைகளுக்குப் போதிக்கவும், அவர்கள் அதை மனப்பாடம் செய்யவும் எட்டு முதல் பத்து நிமிடங்களைச் செலவிட வேண்டும். இது பிள்ளைகளின் வாழ்க்கைக்கு இப்போதும் வருங்காலத்திலும் அதிக பயனைக் கொண்டு வரும்.

நாம் ஏன் பிள்ளைகளை மனப்பாடம் செய்யும்படி ஊக்குவிக்க வேண்டும்?

பிள்ளைகளை வேதவசனத்தை மனப்பாடம் செய்யும்படி ஊக்குவிப்பதற்குப் பல குறிப்பான காரணங்கள் இருக்கின்றன:

- நாம் அவருடைய வார்த்தையை இருதயத்தில் வைக்க வேண்டுமென்று தேவன் கட்டளையிட்டிருக்கிறார்; நாம் அதைப் புரிந்து, கற்றுக்கொண்டு, மனப்பாடம் செய்தால் மட்டுமே அதை இருதயத்தில் வைக்க முடியும் (உபாகமம் 6:6)
- வேதாகமம் தேவனுடைய வார்த்தையாக, ஆவியின் பட்டயமாக (எபேசியர் 6:17) இருக்கிறது. குறிப்பாகச் சிறுவர்கள் அதைத் தங்கள் சிந்தையிலும் இருதயத்திலும் வைத்திருப்பார்களானால், அது ஜீவனுள்ளதாகவும், வல்லமையுள்ளதாகவும் இருக்கிறது. அது நல்ல விதையாகவும் இருக்கிறது (லூக்கா 8:11). நாம் அதைச் சிறுவர்களின் இருதயத்திலும் சிந்தையிலும் விதைக்க வேண்டும்.

- ✓ அது பாவத்தைக் குறித்த உணர்வைக் கொண்டுவருகிறது. இரட்சிக்கப்படாத பிள்ளைகள் இரட்சிப்பின் வழியைத் தெளிவாகப் புரிந்துகொள்ளுமாறு செய்கிறது (1 பேதுரு 1:23).
- ✓ அது கிறிஸ்தவ பிள்ளைகள் வளர்ச்சிபெற உதவுகிறது (1 பேதுரு 2:2).
- ✓ அது கிறிஸ்தவ பிள்ளைகள் பாவஞ்செய்யாமல் தடுக்க உதவுகிறது (சங்கீதம் 119:9, 11).

- தமது வார்த்தை தம்மிடம் வெறுமையாகத் திரும்பாது என்று தேவன் வாக்குத்தத்தம் அருளியிருக்கிறார் (ஏசாயா 55:11).
- வேதாகமம் இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளுக்குரிய ஆவிக்குரிய உணவாகும் (எரேமியா 15:16). அது பாலாகவும் (1 கொரிந்தியர் 3:2; 1 பேதுரு 2:2, 3) திடமான உணவாகவும் (1 கொரிந்தியர் 3:2; எபிரெயர் 5:12, 14) இருக்கிறது. அதைக் "கடித்து, மென்று, ஜீரணிக்கும்போது" அது கிறிஸ்தவ பிள்ளைகள் வளர்ச்சிபெறுவதற்கு உதவுகிறது. எனவே கூடுமான வரையில் அவர்கள் மனப்பாடம் செய்ய வேண்டுமென்றே நாம் விரும்புகிறோம். ஆனால் நீங்கள் அதை ஆர்வமுள்ளதாகவும், ஜீரணிக்கப்படக்கூடியதாகவும் ஆக்கி, சரியான அளவில் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.
- பரிசுத்த ஆவியானவர் மனப்பாடம் செய்யப்பட்ட வசனத்தை அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்துகிறார்:
  - ✓ சோதனையை மேற்கொள்ள (மத்தேயு 4:1-10).
  - ✓ பாவத்தை மேற்கொள்ள (சங்கீதம் 119:11).
  - ✓ பரீட்சிக்கப்படுதலின்போது பலத்தைப் பெற (எரேமியா 15:16). பரீட்சிக்கப்படும் வேளைகளில் நாம் ஆறுதலையும் ஊக்கத்தையும் பெறுகிறோம் (சங்கீதம் 119:49, 50).
  - ✓ தீர்மானங்கள் எடுக்க உதவும்படி (சங்கீதம் 119:105).

நமது சிந்தையிலும் இருதயத்திலும் உள்ளதை மட்டுமே பரிசுத்த ஆவியானவர் நமக்கு நினைவுபடுத்துவார். இரட்சிக்கப்படாத பிள்ளைகள் வசனத்தைக் கேட்டு அதை மனப்பாடம் செய்யாவிட்டால், பாவம் உணர்த்தப்படுவதற்கும் மனமாற்றத்துக்கும் அடிப்படை இல்லாமல் போய்விடும் (ரோமர் 10:17).

- பின்னாட்களில் பரிசுத்த ஆவியானவர் மனப்பாடம் செய்த வசனங்களை நமது நினைவுக்குக் கொண்டுவந்து அதன் மூலமாகப் பேச முடியும். சிறுவயதில் மனப்பாடம் செய்யப்பட்ட வசனங்கள் ஒருபோதும் மறக்கப்படுவதில்லை. ஒரு நபரின் முழு வாழ்க்கையிலும் ஆறு முதல் ஒன்பது வயதுக்குட்பட்ட பருவமே மனப்பாடம் செய்வதற்குச் சிறந்த பருவம் என்று கூறப்படுகிறது.
- "ஆசிரியர் இப்படிக் கூறுகிறார்" என்று அல்ல, பிள்ளைகள் "தேவனுடைய வார்த்தை இப்படிக் கூறுகிறது" என்றே கற்றுக்கொள்ள வேண்டும். தங்கள்

பிரச்சினைகளுக்கு எங்கே பதில் தேடுவது என்பதில் மனப்பாடம் செய்யப் பட்ட வசனங்கள் இப்போதும் பின்னரும் அவர்களுக்கு உதவும்.

மனப்பாடம் செய்யப்பட வேண்டிய வசனங்களைத் தெரிந்துகொள்ளுங்கள்

சிறுவர்கள் மனப்பாடம் செய்ய வேண்டிய வசனங்களை நீங்கள் கவனமாகவும் ஜெபத்தோடும் தெரிவுசெய்துகொள்ள வேண்டும். கீழ்க்கண்ட கொள்கைகளை நீங்கள் கருத்தில் கொண்டிருக்க வேண்டும்:

- உங்கள் வேத பாடத்தின் மையச் சத்தியத்துக்குப் பொருத்தமான ஒரு வசனத்தைத் தெரிந்துகொள்ளுங்கள்.
- பிள்ளைகளின் தற்போதைய அனுபவங்களுக்குப் பொருத்தமான, அவர் களின் பிரச்சினைகளில் அவர்களுக்கு உதவக்கூடிய ஒரு வசனத்தைத் தெரிந்து கொள்ளுங்கள். இடையிடையே, இரட்சிக்கப்படாதவர்களுக்காகச் சுவிசேஷ வசனங்களையும், இரட்சிக்கப்பட்டவர்களுக்காக வாக்குத்தத்தங்களையும், கட் டளைகளையும் சேர்த்துக்கொள்ளுங்கள்.
- நீங்கள் போதிக்கும் சிறுவர்களின் வயதுவரம்புக்குப் பொருத்தமான வசனங் களைத் தெரிந்துகொள்ளுங்கள்.
- பிள்ளைகள் புரிந்து மனப்பாடம் செய்யக்கூடிய வசனத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்.
    - ✓ சிறிய வசனத்தைத் தெரிந்தெடுங்கள்; அது பெரிய வசனமாக இருக்கு மானால் இரண்டு மூன்று வாரங்களுக்கு அதைப் பிரித்துக்கொள்ளுங்கள்.
    - ✓ பிள்ளைகள் புரிந்துகொள்ளக் கூடிய வார்த்தைகளையும் கருத்தையும் கொண்ட வசனத்தைத் தெரிந்தெடுங்கள்.

"கொஞ்சமாகப் போதித்தாலும் அதை நன்றாகப் போதியுங்கள். பிள்ளைகள் கொஞ்சமாகக் கற்றுக்கொண்டாலும் அதை நன்றாகக் கற்றுக்கொள்வார்கள்."

- நீங்கள் போதித்து, பிள்ளைகள் மனப்பாடம் செய்த வசனங்களின் பட்டிய லொன்றைத் தயாரித்து வைத்திருப்பது நலமாகும்.

கூட்டத்துக்கு முன்பாக ஆயத்தம்செய்யுங்கள்

சிறுவர்களின் கூட்டத்தில் மனப்பாட வசனத்தைப் போதித்து அவர்களை மனப் பாடம் செய்யும்படி சொல்லுவதற்கு முன்பாக நீங்கள் ஆயத்தம் செய்ய வேண்டி யவை உண்டு:

- வசனத்தையும் அதற்குரிய மேற்கோளையும் முதலில் நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். மேற்கோள் எண்ணைத் துவக்கத்திலும் முடிவிலும் மனப்பாட மாகக் கூறுவது பயன்தரும்.
- படத்தோடு வசனத்தை விளக்குவது சிறப்பாகும். பிள்ளைகள் வசனத்தை

நினைவில் வைத்திருப்பதற்கு இது உதவும். பல வழிகளில் நீங்கள் இதைச் செய்யலாம்:

✓ வசனத்தின் சொற்களை ஒரு அட்டையிலோ அல்லது கரும்பலகையிலோ எழுதிவைப்பது எளிய வழியாகும். நீங்களே அதை எழுதுவீர்களானால் அழகாகவும் தெளிவாகவும் எழுதுங்கள்.

✓ ஒரு பட அட்டையில் ஒரு பக்கத்தில் வசனத்தை எழுதி, பின்பக்கத்தில் மேற்கோள் எண்ணை எழுதி நீங்களே தயார் செய்யலாம்.

✓ பிளான்னல் (flannel) பலகைக்காக வார்த்தைகளைத் தனித்தனியே எழுதி கோர்வையாக்கிக் காட்டலாம்.

✓ பிளான்னல் பலகையிலுள்ள வார்த்தைகளைச் சித்தரிக்க நீங்கள் படங்களையோ அல்லது அடையாளக் குறியீடுகளையோ பயன்படுத்தலாம். சிறு பிள்ளைகளாக இருப்பார்களானால் இது அதிகப் பயன்தரும்; ஏனென்றால் அவர்களால் வார்த்தைகளை வாசிக்க முடியாது.

- சில வேதவசனங்கள் இசைப்பாடல்களாகப் பாடப்படுகின்றன. பிள்ளைகள் கற்றுக்கொள்ளும்படி செய்ய இது சிறந்த வழியாகும்.
- கூட்டம் முடிந்த பிறகு ஒவ்வொரு பிள்ளையும் வீட்டுக்கு எடுத்துச் செல்ல வசனத்தின் வார்த்தைகளை ஒரு துண்டுத் தாளில் எழுதி அவர்களிடம் கொடுப்பீர்களானால் அது அவர்கள் வசனத்தை நினைவில் வைத்திருக்க உதவியாக இருக்கும். இந்தத் துண்டுத்தாளின் வடிவம் வசனத்துக்குப் பொருத்தமாக இருக்கலாம். எடுத்துக்காட்டாக, *"ஜீவ அப்பம் நானே"* (யோவான் 6:35) என்ற வசனத்தை ரொட்டி வடிவத் துண்டுத்தாள்களில் எழுதி அவர்களிடம் கொடுக்கலாம்.

வசனத்தைப் புரிந்துகொள்ள அவர்களுக்கு உதவுங்கள்

மனப்பாடம் செய்வதற்கு முதல் படி **புரிந்துகொள்ளுதலாகும்:**

- பிள்ளைகள் தாங்கள் கூறுவதைப் புரிந்துகொண்டிருக்கிறார்களா என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அர்த்தத்தைத் தெரிந்து கொண்டால் அங்கே மனப்பாடம்செய்வது எளிதாகிறது. பிள்ளைகள் மறுபடியுமாக வசனத்தைச் சொல்லுவதற்கு முன்பாக வசனத்தைச் சுருக்கமாக விளக்குங்கள். அல்லது அதன் அர்த்தத்தைச் சித்தரிக்கும் ஒரு சிறு கதையை நீங்கள் கூறலாம். அதிலுள்ள பல வார்த்தைகளை நீங்கள் தனித்தனியாக விளக்க வேண்டியிருக்கலாம். அவர்கள் அதை மாறிமாறிக் கூறும்போது நீங்கள் இடையிடையே விளக்கங்களைக் கொடுக்கலாம்.
- வசனத்தின் அர்த்தத்தைப் போதிப்பது உங்கள் வேதபாடத்தின் மையச் சத்தியத்தைப் போதிப்பதற்கு ஒரு முன்னுரையாக இருக்க வேண்டும். எனவே இதற்காக நேரத்தைச் செலவிட வேண்டும்.

- உங்கள் விளக்கங்கள் பிள்ளைகளின் வாழ்க்கை மற்றும் தேவைகளுக்கு ஏற்ற தாக இருக்க வேண்டும்; அதை எவ்வாறு செயல்படுத்துவது என்பதை நீங்கள் தெளிவாகக் கூற வேண்டும்.
- பிள்ளைகள் பெரியவர்களாக இருப்பார்களானால், அவர்களாகவே வேதாக மத்திலிருந்து வசனத்தைத் தேடியெடுத்துப் படிக்கும்படி செய்யுங்கள்.

பிள்ளைகளை மனப்பாடம் செய்யும்படி ஊக்குவிக்கும்போது, நீங்கள் கண்டிப் பாக உங்கள் வேதாகமத்தைத் திறந்து அதைப் பயன்படுத்த வேண்டும். நீங்கள் தயாரித்திருக்கும் படங்களைப் பயன்படுத்துவது மட்டும் போதாது. துவக்கத்தி லிருந்தே இந்த வசனங்கள் வேதாகமத்திலிருந்து வருகின்றன என்பதை நீங்கள் உறுதிப்படுத்த வேண்டும். நீங்கள் அதை வேதாகமத்திலிருந்தே வாசிக்க வேண்டும்; அல்லது வேறு எவரையாவது வாசிக்கும்படி சொல்ல வேண்டும்.

வசனத்தை மனப்பாடம் செய்யும்படி அவர்களை ஊக்குவியுங்கள்

மனப்பாடம் செய்வதில் அடுத்த படி **மறுபடியும் மறுபடியுமாக** அதைக் கூறுவ தாகும். பிள்ளைகள் வசனத்தைக் **கேட்க** வேண்டும், முடிந்தால், அதைப் பார்க்க வேண்டும், பிறகு அதை **மறுபடியும் மறுபடியுமாக** அவர்கள் **கூற** வேண்டும். பிள்ளைகள் மீண்டும் மீண்டுமாகக் கூறும்போது அதைக் கற்றுக்கொள்கிறார்கள். எனவே கூட்டத்தில் அவர்கள் அதை பத்து அல்லது பதினைந்து முறை மறுபடி யும் மறுபடியுமாகக் கூறும்படி செய்ய வேண்டும். பிள்ளைகள் முதலில் மேற் கோளைக் கூறி, பிறகு வசனத்தைச் சொல்லி, கடைசியில் மீண்டுமாக மேற்கோ ளைக் கூற வேண்டும். வசனத்தோடுகூட அதன் மேற்கோளையும் மனப்பாடம் செய்வது அவசியமாகும். பிள்ளைகளுக்கு "மேற்கோள்" என்றால் என்ன, வச னத்தை எப்படிக் கண்டுபிடிப்பது என்பதை நீங்கள் கற்றுக்கொடுக்க வேண்டும். எடுத்துக்காட்டாக வேதாகமம் ஒரு பெரிய நாட்டைப் போல இருக்கிறது என்று நீங்கள் சொல்லலாம். புத்தகங்கள் பட்டணங்களாகவும், அதிகாரங்கள் தெருக் களாகவும் இருக்கின்றன. வசனங்கள் தெருக்களிலுள்ள வீடுகளின் எண்களாக இருக்கின்றன. அதாவது, ஒரு வசனத்தின் மேற்கோள் அதன் "விலாசமாக" இருக் கிறது.

பிள்ளைகள் வசனத்தை நன்றாக மனப்பாடம் செய்ய வேண்டுமானால் அவர்கள் திரும்பத் திரும்பக் கூறுவது ஆர்வத்தைத் தூண்டும் வகையில் இருக்க வேண் டும்: அவர்கள் அதை ஒரு அறைகூவலாக எடுத்துக்கொள்ள வேண்டும். இல்லா விட்டால் அது மனச்சோர்வளிக்கும் ஒன்றாக ஆகிவிடும்.

நீங்கள் பல வழிகளில் இந்த ஆர்வத்தைத் தூண்டலாம். உங்கள் பிள்ளைகளின் வயதுவரம்பிற்கேற்ப நீங்கள் வழிமுறைகளையும் படங்களையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

- நீங்கள் வார்த்தைகளை பிளான்னல் அட்டையிலோ அல்லது கரும்பலகை யிலோ வைத்திருப்பீர்களானால், ஒவ்வொரு முறை பிள்ளைகள் வசனத்தைக்

கூறும்போதும் ஒவ்வொரு வார்த்தையாக எடுத்துவிடுங்கள். இதனால் பிள்ளைகள் அந்த வார்த்தைகளை மனதில் வைத்துக்கொண்டு வாசிக்க வேண்டியிருக்கும். இது மனப்பாடம் செய்வதைத் துரிதமாக்கும்.

- நீங்கள் வசனங்களை ஒரு துண்டுத் தாளிலோ, அல்லது அட்டையிலோ எழுதி (கூடுமானால் அட்டை வேதாகம வடிவிலோ அல்லது ஏதேனும் அடையாளக் குறியீடாகவோ இருக்க வேண்டும்) பிறகு வார்த்தைகளைத் துண்டு துண்டாக வெட்டி மாணவர்களிடம் கொடுத்து அதை அவர்கள் வசனமாக ஒன்று சேர்க்கும்படி செய்யுங்கள்.
- நீங்கள் கரும்பலகையிலோ அல்லது பிளான்னல் பலகையிலோ வார்த்தைகளை மாற்றி மாற்றி வைத்து, பிள்ளைகள் வசனத்தைச் சரியாகக் கூறும்படி ஊக்குவிக்கலாம்.
- நீங்கள் பிளான்னல் பலகையைப் பயன்படுத்துவீர்களானால், கீழ்க்கண்டவற்றில் ஏதேனும் ஒன்றைச் செய்யலாம்:
  - ✓ வசனத்தைக் கூறும் ஒவ்வொரு பிள்ளையும் ஒவ்வொரு வார்த்தையாகச் சொல்லும்போது அந்த வார்த்தையைப் பலகையிலிருந்து அகற்றும்படி செய்யுங்கள். இவ்வாறு வசனம் கூறி முடிக்கப்படும்போது முழு வசனமும் அகற்றப்படும்.
  - ✓ துண்டாக வெட்டப்பட்ட வார்த்தைகளைப் பல சிறுவர்களிடம் கொடுங்கள். வசனம் சொல்லப்படும்போது அந்தந்த வார்த்தையைக் கையில் வைத்திருக்கும் மாணவர்கள் முன்னால் வந்து அந்தத் துண்டைப் பலகையில் வைத்து, இவ்வாறு முழு வசனத்தையும் நிறைவுசெய்ய வேண்டும்.
  - ✓ பலகையில் வார்த்தைகளை மாற்றி மாற்றி வைத்து ஒரு பிள்ளை முன்னால் வந்து அதைச் சரியாக அடுக்கும்படி செய்யலாம்.
- பிள்ளைகளை இரண்டு குழுவினராகப் பிரிக்கலாம். ஒவ்வொரு குழுவினரும் வசனத்தின் வார்த்தைகளை மாற்றி மாற்றிச் சொல்ல வேண்டும்.
- பிள்ளைகளை இரண்டு குழுவினராகப் பிரித்து, முதல் குழுவினர் வசனத்தின் முன்பகுதியையும் அடுத்த குழுவினர் வசனத்தின் பின்பகுதியையும் கூறும்படி செய்யலாம்.
- ஒரு குறிப்பிட்ட வயதைச் சேர்ந்த பிள்ளைகள் வசனத்தைத் திருப்பிக் கூறுமாறு செய்யலாம்.
- பிள்ளைகளும் ஆசிரியரும் வசனத்தை மாற்றி மாற்றிச் சொல்லலாம்.
- ஒவ்வொரு பிள்ளையும் ஒவ்வொரு வார்த்தையை வரிசையாகக் கூறும்படி செய்யலாம்.
- வசனம் ஒவ்வொரு முறை கூறப்படும்போதும் நீங்கள் வேகத்தையும் குரலின் தொனியையும் அதிகரிக்கவோ அல்லது குறைக்கவோ செய்யலாம்.

எடுத்துக்காட்டாக, அவர்கள் ஒவ்வொரு முறை வசனத்தைக் கூறும்போதும் இன்னும் மென்மையாக அதைக் கூறும்படி செய்யலாம்.

- வசனத்தைச் சித்தரிக்க சைகைகளையும் அசைவுகளையும் பயன்படுத்தலாம்.

ஏற்கெனவே கற்றுக்கொண்ட வசனங்களை மறுஆய்வு செய்யுங்கள்

மனப்பாடம் செய்தலில் மூன்றாவது படி உங்கள் கூட்டத்தில் கற்றுக்கொண்ட வசனங்களை மறுஆய்வு செய்வதாகும்.

உங்கள் போதிக்கும் செயல்திட்டத்தில் இடையிடையே நீங்கள் பிள்ளைகளுக்கு மனப்பாட வசனத்தை நினைவுபடுத்த வேண்டும்; இல்லாவிட்டால் அவர்கள் அதை மறந்துவிடக் கூடும். மறுஆய்வு செய்வது உங்கள் மனப்பாடத் திட்டம் எவ்வாறு செயல்படுகிறது என்பதைக் கண்டறியவும் உதவும்.

பல வழிகளில் நாம் இதைச் செய்யலாம்:

- நீங்கள் அந்த வசனத்தை உங்கள் செயல்திட்டத்தின் மற்ற பகுதிகளிலும், குறிப்பாக வேதபாடத்தில், கொண்டுவரலாம். பிள்ளைகள் மறுபடியுமாக வசனத்தைக் கூறும்படி செய்யுங்கள்.
- நீங்கள் போதிக்கும் செயல்திட்டத்தினிடையே உங்களுக்கு நேரம் கிடைக்கும்போதெல்லாம் பிள்ளைகள் வசனத்தை மறுபடியுமாகக் கூறும்படி செய்யுங்கள்.

முந்தைய வாரங்களில் கற்றுக்கொடுக்கப்பட்ட வசனங்களையும் நீங்கள் மறுஆய்வு செய்ய வேண்டும். பல வழிகளில் நீங்கள் இதைச் செய்யலாம்:

- கூட்டம் துவங்குவதற்கு முன்னர் பிள்ளைகள் ஒவ்வொருவராக வரும்போது, உங்களிடமோ அல்லது உங்கள் உதவியாளரிடமோ முந்தைய வாரம் கற்றுக்கொண்ட வசனத்தைக் கூறும்படி செய்ய வேண்டும். வசனங்களை வார்த்தை தவறாமல் மனப்பாடமாகக் கூறினால்தான் அவைகளைக் கற்றுக்கொண்டதாக அர்த்தம். உங்கள் தகுதிநிலையைக் குறைத்துவிடாதீர்கள்.
- சரியாக வசனத்தைக் கூறுவதற்காக நீங்கள் தனிப்பட்ட பரிசுகளைக் கொடுக்கலாம் (எடுத்துக்காட்டாக, ஒரு வசனத்தைச் சரியாகச் சொன்னால் ஒரு அட்டையில் ஒட்டும்படி நட்சத்திரப் படத்தைக் கொடுக்கலாம். இவ்வாறு பத்து நட்சத்திரங்களைச் சேர்ப்பவர்களுக்கு ஒரு சிறப்புப் பரிசைக் கொடுக்கலாம்). அல்லது ஒரு பெரிய பதிவட்டையில் பிள்ளையின் பெயருக்கு அருகே நீங்கள் ஒரு நட்சத்திரத்தை ஒட்டிவைக்கலாம். நீங்கள் சிறப்பான வகையில் பிள்ளைகளை ஊக்குவிக்க வேண்டும்; தேவனைப் பிரியப்படுத்துவதே அவர்களுடைய செயல் நோக்கமாக இருக்க வேண்டும்.
- ஒவ்வொரு கூட்டத்திலும் நீங்கள் முந்தைய வாரத்தின் மனப்பாட வசனத்தை மறு ஆய்வுசெய்து, பிள்ளைகள் அதை மறுபடியுமாகக் கூறும்படி செய்ய வேண்டும்.

✓ கடந்த வாரத்தின் பட அட்டைகளைப் பயன்படுத்த வேண்டும்.

✓ இதை ஒரு போட்டியாக, எடுத்துக்காட்டாக சிறுவருக்கும் சிறுமியருக்கும் நடுவே, நடத்த வேண்டும்.

வசனத்தை ஆய்வுசெய்வதற்கு நீங்கள் குறிபார்த்து எறிதல் போன்ற ஒரு விளையாட்டை விளையாடலாம். மூன்று வட்டங்களை ஒரு பலகையில் வரைந்து வைத்திருங்கள். இவைகளில் ஒட்டக்கூடிய வகையில் இரண்டு வண்ணங்களில் அம்புகளைத் தயாரித்து வைக்க வேண்டும். இப்போது வகுப்பை இரண்டு குழுக்களாகப் பிரியுங்கள்.

ஒரு வசனம் மேற்கோளுடன்கூடச் சரியாகச் சொல்லப்படும்போது, அந்தக் குழுவினரின் வண்ணத்துக்குரிய அம்பை முதல் வட்டத்தில் ஒட்ட வேண்டும். வசனம் கிட்டத்தட்ட சரியாக இருக்குமானால் இரண்டாவது வட்டத்தில் அம்பை ஒட்ட வேண்டும். மேற்கோள் தவறாக இருக்குமானால் அம்பை மூன்றாவது வட்டத்தில் ஒட்ட வேண்டும். ஒவ்வொரு வட்டத்திற்கும் ஏற்றபடி மதிப்பெண்களைக் கொடுங்கள். இறுதியில் அதிக மதிப்பெண்களைப் பெறும் குழு வெற்றிபெறுகிறது.

கடந்த வாரம் கற்றுக்கொண்ட வசனத்தைக் குறித்துக் கவனமாகத் தெரிந்து கொண்ட கேள்விகளை நீங்கள் கேட்கலாம். இது அதிக உதவியாக இருக்கும். எடுத்துக்காட்டாக, மாற்கு 10:14 வசனத்தை மறுஆய்வு செய்யும்போது, கீழ்க்கண்ட கேள்விகளைக் கேட்கலாம்:

✓ *"சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்" என்று கூறியது யார்?*

✓ *"இடங்கொடுங்கள்" என்ற வார்த்தைக்கு அர்த்தம் என்ன?*

✓ *ஆண்டவராகிய இயேசு ஏன் இந்தக் கட்டளையைக் கொடுக்க வேண்டியிருந்தது?*

✓ *"தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது" என்று இயேசுவானவர் கூறியதற்கு அர்த்தம் என்ன?*

✓ *சிறுபிள்ளைகள் என்ன செய்ய வேண்டுமென்று இயேசுவானவர் விரும்பினார்?*

✓ *இன்று ஒரு பிள்ளையால் இயேசுவானவரிடம் எப்படி வர முடியும்?*

ஒரு குறிப்பிட்ட பிரச்சினைக்குத் தீர்வுகாணும்படியாக, பிள்ளைகள் சமீபத்தில் கற்றுகொண்ட எந்த வசனத்தைப் பயன்படுத்த முடியும் என்று அவர்களிடம் கேளுங்கள். எடுத்துக்காட்டாக, தான் ஒருபோதும் தவறே செய்ததில்லை என்று கூறும் ஒரு பிள்ளைக்குப் பதிலளிக்கும்படி அவர்கள் எந்த வசனத்தைக் கூறுவார்கள்? ரோமர் 3:23, பிறகு எல்லா மாணவர்களும் இந்த வசனத்தை மனப்பாடமாகக் கூற வேண்டும்.

- ஒரு பாடத் தொடர் முடிவடையும்போது, பிள்ளைகளிடம் அந்தப் பாடத்தொடர் முழுவதிலும் கற்றுக்கொண்ட மனப்பாட வசனங்களைக் கூறும்படி கேட்க வேண்டும். இப்படிச் செய்கிறவர்களுக்குப் பரிசு கொடுக்க வேண்டும்.
- பிள்ளைகள் அடுத்துவரும் வாரத்தில் மனப்பாட வசனத்தை நினைவுகூர்ந்து, அதைப் பயன்படுத்தும்படி நீங்கள் ஊக்குவிக்க வேண்டும். பிறகு அடுத்த வாரம் கூட்டத்துக்கு வரும்போது, அவர்கள் அதை எப்படிப் பயன்படுத்தி னார்கள், எப்படி அந்த வசனம் அவர்களுக்கு உதவியது என்பதைக் கேட் டறிய வேண்டும்.
- ஒவ்வொரு வாரமும் பிள்ளைகள் வெவ்வேறு வசனங்களை மனப்பாடம் செய்ய வேண்டிய அவசியமில்லை என்று நான் ஏற்கெனவே கூறியிருக்கிறேன். பிள் ளைகள் அதைச் சரியாகப் புரிந்துகொண்டு, மனப்பாடம் செய்வதற்கு உதவி யாக, பெரிய வசனத்தை இரண்டு மூன்று வாரங்களுக்குத் தொடர்ந்து சொல்லிக் கொடுக்கலாம்.

வேதாகமப் பட்டயம்

வேதாகமப் பட்டயம் என்ற விளையாட்டு வேதவசனங்களை மனப்பாடம் செய்வ தற்கு உதவியாக இருக்கும். ஏனென்றால் பிள்ளைகள் வேதாகமத்தில் வசனங் களைத் தேடியெடுக்க இந்த விளையாட்டு உதவும்.

பிள்ளைகள் தங்கள் வேதாகமத்தை அருகில் வைத்தபடி நேராக நிற்க வேண்டும். "பட்டயத்தை எடுங்கள்" என்று சொல்லும்போது, வேதாகமத்தை எடுத்து அதைப் புரட்டுவதற்கு ஏற்றபடி விரித்து வைக்க வேண்டும். தலைவர் மேற்கோள் எண் ணைக் கூறிவிட்டு, "தாக்குங்கள்" என்று கட்டளையிட வேண்டும். முதலில் வசனத் தைத் தேடியெடுக்கும் பிள்ளை அதை வாசிக்க வேண்டும்.

அத்தியாயம் 15

மறுபடியுமாக அதற்குச் செவிகொடுத்தல்

நான் ஏற்கெனவே போதித்ததை மறுஆய்வு செய்யலாமா ?

அத்தியாயத்தின் சுருக்கம்

(நீங்கள் ஏற்கெனவே போதித்ததை மறுபடியும் திருப்புதல் அவசியமாகும்)

- **மறுஆய்வு/திருப்புதலுக்கான காரணங்கள்**
- **முன்னதாகவே உங்கள் மறுஆய்வை ஆயத்தம்செய்யுங்கள்**
- **மறுஆய்வு குறித்த கருத்துக்கள் மற்றும் உதவிகள்**
- **மறுஆய்வுக்கான செயல்முறை வழிகாட்டிகள்**

முந்தைய வாரம் நீங்கள் போதித்ததை அடுத்த சிறுவர் கூட்டத்தில் மறுஆய்வு செய்வது அத்தியாவசியமாகும்.

மறுஆய்வு ஏன் முக்கியமானது?

சிறுவருக்கான உங்கள் ஒழுங்கான கூட்டங்கள் எல்லாவற்றிலும் "மறுஆய்வு" இடம்பெற்றிருக்க வேண்டும் என்பதற்கு மூன்று காரணங்கள் உள்ளன. இந்த மறுஆய்வுக்காக நீங்கள் ஐந்து முதல் பத்து நிமிடங்களை ஒதுக்கினாலும் போதும்.

- மறுஆய்வு பிள்ளைகள் ஏற்கெனவே கற்றுக்கொண்டிருப்பதற்கு வலுவூட்டுகிறது. மறுஆய்வு செய்யப்படாவிட்டால் ஏற்கெனவே கற்றுக்கொண்டதைப் பிள்ளைகள் எளிதாக மறந்துவிடலாம். கிறிஸ்தவ கல்வித்துறையில் தலைவராக விளங்கும் ஒருவர் "மறுஆய்வு செய்யாமல் இருப்பது பணியைப் பாதியிலேயே முடித்துவிடுவதாகும்" என்று கூறியிருக்கிறார். தேவன் தமது வார்த்தையில் அடிக்கடி திரும்பத் திரும்பக் கூறுகிறார் என்பதை நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும். உபாகமம், நாளாகமம் மற்றும் சுவிசேஷத்தின் பகுதிகள் ஏற்கெனவே தேவனுடைய வார்த்தையில் வேறு இடங்களில் கூறப்பட்டுள்ளன.
- மறுஆய்வுசெய்வது பிள்ளைகளின் பங்கெடுப்பை ஊக்குவிக்கிறது. கூட்டத்தில் அவர்கள் பங்கெடுக்க வாய்ப்புக் கொடுக்கிறது.
- பிள்ளைகள் என்ன கற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிக்க மறுஆய்வு உங்களுக்கு உதவுகிறது. அவர்கள் எதைப் புரிந்துகொண்டிருக்கவில்லை என்பதையும் நீங்கள் கண்டறிய முடியும்.

உங்கள் மறுஆய்வை முன்கூட்டியே ஆயத்தம்செய்யுங்கள்

வேதாகமப் புதிரே மறுஆய்வு செய்வதற்கு முக்கியமான வழிமுறையாகும். உங்கள் வேதாகமப் புதிரில் கடந்தவார வேதபாடம் மற்றும் மனப்பாட வசனத்தைக் குறித்த கேள்விகள் இடம்பெற்றிருக்க வேண்டும். (ஆனால் பாடத் திட்டத்தின் பிற அம்சங்களைக் குறித்தும் கேள்விகள் கேட்கலாம்). மேலே கூறப்பட்டுள்ள மூன்று காரியங்களையும் சாதிக்கும்படி நீங்கள் இந்தக் கேள்வி பதில்களைப் பயன்படுத்த வேண்டும் — பிள்ளைகள் கற்றுக்கொண்டதற்கு மறுபடியுமாக வலுவூட்டுதல், அவர்களின் பங்கெடுப்பை ஊக்குவித்தல், அவர்கள் என்ன கற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் கண்டுகொள்ளுதல்.

இரண்டு வகைப்பட்ட கேள்விகள் இருக்கின்றன:

- அறிவுசம்பந்தமான கேள்விகள் (யார் அல்லது என்ன என்பதுகுறித்த கேள்விகள்) ஏற்கெனவே கூறப்பட்ட கதையின் உண்மைகளை உறுதிப்படுத்துகின்றன. இப்படிப்பட்ட பல கேள்விகளைக் கேட்பது நலமாகும்:

உ-ம். கோலியாத்தைக் கொன்றது யார்?

தேவன் எந்தப் பட்டணத்துக்கு யோனாவை அனுப்பினார்?

- புரிந்துகொள்ளுதல் சம்பந்தமான கேள்விகள் (ஏன் என்ற கேள்விகள்) பிள்ளைகள் முந்தைய பாடத்தின் ஆவிக்குரிய சத்தியத்தை நன்கு விளங்கிக் கொண்டிருக்கிறார்களா என்று நீங்கள் கண்டறிவதற்கு உதவும். இந்தக் கேள்விகளும் பதில்களும் அதிக மதிப்புடையவையாகும். சிந்தித்துப் பதில் கூறுவதற்கு இவை ஊக்குவிக்க வேண்டும்.

  எ-டு. தாவீது ஏன் அந்த இராட்சசனைக் கண்டு பயப்படவில்லை?

  யோனா ஏன் தேவனுக்குக் கீழ்ப்படியவில்லை?

எனவே, உங்கள் சிறுவர் கூட்டத்துக்காக ஆயத்தம்செய்யும் வேளையில், மறு ஆய்வு அல்லது வேதாகமப் புதிர் நேரத்துக்காக நீங்கள் இவைகளைச் செய்ய வேண்டும்:

- நீங்கள் கேள்விகளைத் தெரிந்துகொள்வதில் உதவும்படி தேவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள். இதற்கு ஞானம் தேவையாகும்.
- பத்து கேள்விகளைத் தயார்செய்யுங்கள் - சில அறிவுசம்பந்தமானவையாக இருக்க வேண்டும். சில போதிக்கப்பட்ட சத்தியங்களைப் புரிந்துகொண்டிருப்பதைக் குறித்ததாக இருக்க வேண்டும்.
- வேதாகமப் புதிருக்காக ஒரு பட அட்டையைத் தயார்செய்யுங்கள். இது அதிக உதவியாக இருக்குமென்பதால் இதை வலுவாகப் பரிந்துரை செய்கிறேன்.

மறுஆய்வுக்கான உதவிகள்

சிறப்பான வகையில் மறுஆய்வு செய்வதற்குப் பல படிகளை நீங்கள் பின்பற்ற வேண்டும்:

- மறுஆய்வு செய்ய நீங்கள் பயன்படுத்தும் புதிரின் வடிவமைப்பை நீங்கள் திட்டமிட வேண்டும்.

  இரண்டு வகைகளில் இதைச் செய்யலாம்:

  ✓ இரண்டு குழுவாகப் பிரித்து ஒருவருக்கொருவர் போட்டிபோடும்படி செய்யலாம்.

  ✓ தனிப்பட்ட முறையில் போட்டி நடத்தலாம்.

- விளையாட்டுக்கான விதிகளை நீங்கள் மாணவர்களுக்குத் தெளிவாக எடுத்துக் கூற வேண்டும். இந்த விதிகள் எளிமையாகவும் தெளிவாகவும் இருக்க வேண்டும்.

  ✓ *"முதலில் கையை உயர்த்துபவர் பதிலளிக்க வேண்டும்".*

  ✓ *"யாரும் சத்தம் போடக்கூடாது."*

- நீங்கள் பட அட்டைகளைப் பயன்படுத்தலாம். எடுத்துக்காட்டாக, ஒரு பலகையிலோ அல்லது பிளான்னல் அட்டையிலோ இரண்டு ரேஸ் கார்களின் படத்தைப் பொருத்தி வைக்கலாம். ஒவ்வொரு காரும் ஒவ்வொரு குழுவினரைக் குறிக்கிறது. ஒவ்வொரு முறை ஒரு குழுவிலுள்ளவர்கள்

சரியாகப் பதிலளிக்கும்போதும் அவர்களுடைய காரை முன்னால் நகர்த்தலாம். இறுதி எல்லையை எட்டும் முதல் கார் வெற்றி பெறுகிறது. அல்லது செவ் வாய் கிரகத்தை நோக்கிச் செல்லும் இரண்டு ராக்கெட்டுகளையோ அல்லது பந்தயத்தில் ஓடும் ஆமை முயலையோ நீங்கள் பயன்படுத்தலாம். அல்லது வரிசையாக இருக்கும் பூக்களை ஒரு தேனீ தாண்டிச் செல்லுவதைப் போலப் பட அட்டையைத் தயார்செய்யலாம்.

உங்கள் மறுஆய்வுக்காக ஒரு கடிகாரத்தின் படத்தையும் நீங்கள் பயன்படுத் தலாம். கடிகாரத்தின் ஒவ்வொரு மணிக்குமாக 12 கேள்விகளைத் தயார் செய்யுங்கள். வகுப்பை இரண்டு குழுக்களாகப் பிரியுங்கள். கடிகாரத்தின் முள் நகரும்போது கேள்விகளும் கடினமாக வேண்டும். 1 முதல் 6 மணி வரை எளிதான கேள்விகளும், 7 முதல் 12 வரை கடினமான கேள்விகளும் கேட்கப் படலாம். கடினமான கேள்விகளுக்கு அதிக மதிப்பெண்களைக் கொடுங்கள். அதிகமான மதிப்பெண்களைப் பெறும் குழு வெற்றி பெறுகிறது.

மறுஆய்வில் இவைகளும் இடம்பெறும்படி செய்யலாம்:

✓ வேதாகமக் கால்பந்து விளையாட்டு. பலகையில் ஆடுகளத்தின் படத்தை வரைந்து, சரியான பதில் கூறும்போது பந்தை முன்னால் நகர்த்தலாம் அல்லது கோல் போடலாம்.

✓ பனிமனிதன் போட்டி. வகுப்பை இரண்டு குழுக்களாகப் பிரியுங்கள். ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு வெள்ளை பனிமனிதனை அட்டையில் வரைந்து மாட்டுங்கள். அட்டையில் ஒட்டும்படி ஒவ்வொரு குழுவுக்கும் பனிஉருண்டைகளின் படங்களைக் கொடுங்கள். கேள்விகளைக் கேட்க வேண்டும். சரியாகப் பதில் சொல்லும் பிள்ளை தனது குழுவுக்குரிய பனி மனிதனின் அருகில் ஒரு உருண்டையை ஒட்ட வேண்டும். இறுதியில் அதிகமான உருண்டைகள் ஒட்டப்பட்டிருக்கும் குழு வெற்றி பெறுகிறது. இதில் வேறுபல படங்களையும் நாம் பயன்படுத்தலாம்; எடுத்துக்காட் டாக, கழுதைக்குக் காரெட்டுகளைக் கொடுத்தல், அணிலுக்குக் கொட்டை களைக் கொடுத்தல் அல்லது குரங்குக்கு வாழைப்பழங்களைக் கொடுத்தல் போன்றவை.

வெட்டுப் படங்களைச் சேர்த்து ஒன்றிணைத்தல். ஒரு கேள்விக்குப் பதில் கூறும்போது ஒவ்வொரு குழுவும் ஒரு துண்டைப் பலகையில் ஒட்டலாம்:

- ஒரு பனிமனிதனைச் சேர்த்தல்
- பகுதிபகுதியாக ஒரு புழுவைச் சேர்த்தல்
- பெட்டி பெட்டியாக ஒரு ரயில் வண்டியைச் சேர்த்தல்

வேறு வகைப்பட்ட மறுஆய்வுகளும் உள்ளன:

✓ வாக்கியங்களைக் கூறுங்கள். அவை சரியா அல்லது தவறா என்று பிள்ளைகள் கூற வேண்டும்.

✓ விடுபட்டிருக்கும் வார்த்தைகள். கடந்த வாரப் பாடத்தின் சுருக்கத்தைக் கொடுங்கள். அதில் விடுபட்டிருக்கும் வார்த்தைகளை மாணவர்கள் நிரப்ப வேண்டும்.

✓ நீங்களோ அல்லது வேறு ஒருவரோ பாடத்தைக் கூறும்போது, ஒரு பிள்ளை கடந்த வாரத்தில் காட்டப்பட்ட படங்களைக் காட்டும்படி செய்யுங்கள். அந்தப் பிள்ளையேகூடப் பாடத்தைச் சுருக்கமாகக் கூறலாம்.

மறுஆய்வுக்கான வழிமுறைகள்

நீங்கள் வேதாகமப் புதிரையோ அல்லது மறுஆய்வையோ நடத்தும்போது, உங்களுக்கு உதவியாக இருக்கக் கூடிய வேறு பல வழிமுறைகளும் உள்ளன:

➤ துவங்குவதற்கு முன்பாகக் கடந்த காலப் பாடத்தை நீங்கள் சுருக்கமாகப் பிள்ளைகளுக்கு நினைவுபடுத்தலாம் (ஒரு வாரம் கடந்துபோயிருக்கிறது அல்லவா?) ஆனால் அதிகமான விவரங்களைக் கூறிவிடாதீர்கள்.

➤ முதல் பிள்ளை கையை உயர்த்தியவுடனே பதில் கூறுமாறு சொல்லிவிடாதீர்கள். மற்றப் பிள்ளைகளும் சிந்தித்துப் பதில் கூற ஆயத்தமாகும் வரை காத்திருங்கள். வகுப்பில் எத்தனை பேரால் நினைவு வைத்திருக்க முடிகிறது என்று கண்டறிய உங்களுக்கு இது உதவும்.

➤ "புத்திசாலித்தனமான" பிள்ளைகளோ அல்லது பெரிய பிள்ளைகளோ அனைத்துக் கேள்விகளுக்கும் பதிலளிக்க அனுமதியாதிருங்கள். கூடுமானவரை மற்றவர்களையும் ஈடுபடுத்த முயலுங்கள்.

➤ வெறுமனே கேள்விகளைக் கேட்டுப் பதில்களைப் பெற்றுக்கொண்டிராமல், பிள்ளைகளோடு பேசி, ஆங்காங்கே விவரங்களைத் தெரிவியுங்கள்.

➤ சொல்லப்படும் பதிலை அனைவராலும் கேட்க முடிகிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். தேவைப்பட்டால் பதிலை நீங்கள் திரும்பக் கூறுங்கள்.

➤ சரியான நோக்கத்தோடு ஆனால் தவறாகக் கூறப்படும் பதிலை எப்படி எடுத்துக்கொள்கிறீர்கள் என்பதில் கவனமாக இருங்கள். எவரும் பாதிக்கப்படாதபடி, சாமர்த்தியமாகச் சரியான பதிலைக் கூறித் திருத்துங்கள்.

➤ இதற்கென ஒதுக்கப்பட்ட நேரத்தைத் தாண்டிச் செல்லாதிருங்கள். தேவைப்பட்டால் கேள்விகளின் எண்ணிக்கையைக் குறைத்துக்கொள்ளுங்கள். நேரத்தை ஓட்டுவதற்காக அதிக நேரம் புதிர்களைக் கேட்டுக்கொண்டிருப்பதைத் தவிருங்கள்.

➤ புதிர்ப்போட்டிகளை நடத்தும்போது கூச்சலும் குழப்பமும் ஏற்படக் கூடும். எனவே பிள்ளைகளைக் கட்டுப்படுத்துங்கள். எடுத்துக்காட்டாக, பிள்ளைகள் கத்தினால் கார் முன்னால் நகர்த்தப்படுவதற்கு மாறாக, பின்னால் நகர்த்தப்படும் என்று எச்சரியுங்கள். அல்லது அதிகமாகச் சத்தம்போட்டால்

ஒட்டப்பட்ட ஒரு பகிப் பத்திரத்தையோ அல்லது வரைபடப் பத்திரத்தையோ நீங்கள் எடுத்துவிடலாம்.

- வெற்றி பெற்றவர்களை மட்டுமின்றி, அனைவரையும் பாராட்டி, பதில் நேரத்தை முடித்துவையுங்கள்.
- படிப்படியாக உங்கள் பாடத் திட்டத்தின் அடுத்த பகுதிக்குச் செல்லுங்கள்.

அத்தியாயம் 16

வார்த்தையைப் போதித்தல்

எனது போதனை ஊழியத்துக்கு எது அடிப்படையாகவும் முக்கிய கருப்பொருளாகவும் இருக்க வேண்டும் ?

அத்தியாயத்தின் சுருக்கம்

தேவனுடைய வார்த்தையைப் போதிப்பதே உங்கள் மிக முக்கியமான பொறுப்பாகும்.

- வேதாகமம் தேவனுடைய வார்த்தையாகும்
- தமது வார்த்தையைப் போதிக்கும்படி தேவன் கட்டளை கொடுத்திருக்கிறார்
- தமது வார்த்தையை ஆசீர்வதிப்பதாகத் தேவன் வாக்குத்தத்தம் அருளியிருக்கிறார்
- தேவனுடைய வார்த்தை வல்லமையானது
- எனவே நீங்கள் தேவனுடைய வார்த்தையைப் போதிக்க வேண்டும்
- ஆனால் முதலில் நீங்கள் அதைப் படிக்க வேண்டும்.

இதுவரை நமது போதிக்கும் செயல்திட்டத்தின் பல அத்தியாவசியமான அம்சங்களை நாம் பார்த்துவந்திருக்கிறோம் - பாடுதல், ஜெபித்தல், மனப்பாடம் செய்தல், மறுஆய்வுசெய்தல். இப்போது "மாறாத அம்சங்களில்" இறுதியாக இருக்கும் வேத போதனையைப் பற்றிப் பார்க்கப்போகிறோம்.

சிறுவர்களுக்குப் போதிப்பவர்கள், அதிலும் இப்போதுதான் தங்கள் ஊழியத்தைத் துவக்கியிருப்பவர்கள் வேதாகமத்தைப் புரிந்துகொள்வது மிகவும் முக்கியமான அம்சமாகும். எப்போதுமே தேவனுடைய வார்த்தையே அவர்களுடைய போதனையில் மையப் பங்குவகிக்க வேண்டும். உங்கள் போதிக்கும் செயல் திட்டத்தின் ஒவ்வொரு அம்சமும் தேவனுடைய வார்த்தையையே மையமாகக் கொண்டிருந்தாலும், கூட்டத்தின் இறுதியில் வரும் இந்த இருபது நிமிடங்களே தேவனுடைய வார்த்தையைப் போதிப்பதற்கு உங்களுக்கு முக்கிய வாய்ப்பாக அமைகின்றன.

ஆனாலும், பிள்ளைகள் சிறியவர்களாகவும் அதிகமாகக் கவனிக்கக் கூடாதவர் களாகவும் இருப்பார்களானால், வேதபாடத்தை முன்னரே நடத்துவது நலமாகும். மேலும் உங்கள் வேதபாடத்தை முன்பகுதிக்குக் கொண்டுவருவதின் மூலம் இடை யிடையே உங்கள் பாடத்திட்டத்தில் மாற்றத்தைக் கொண்டுவருவதும் ஆர்வத் தைத் தூண்டும்.

இந்த வேளையில் நீங்கள் பிள்ளைகளுக்கு வேதாகமத்தையும் அதிலுள்ள சத்தி யங்களையும் போதிப்பீர்கள்.

வேதாகமம் தேவனுடைய வார்த்தையாகும்

தேவனுடைய வார்த்தையைப் போதிக்கும் நீங்கள் உங்கள் சிந்தையில் வேதாகமம் தேவனுடைய வெளிப்படுத்தலின் எழுதப்பட்ட வார்த்தை என்ற உறுதிப்பாட்டைப் பெற்றிருக்க வேண்டும். வேதாகமத்தை எழுதியவர்கள் மூலபாஷையிலுள்ள எந்த வார்த்தையிலும் எந்தவிதப் பிழையும் இல்லாதவாறு, பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்டு, எழுதினார்கள்.

"*வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவ னுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவ னாகவும் இருக்கும்படியாக*" (2 தீமோத்தேயு 3:16).

"*தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாக வில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட் டுப் பேசினார்கள்*" (2 பேதுரு 1:21).

வேதாகமம் நான்கு முக்கிய செயல்பாடுகளையும் நோக்கங்களையும் கொண் டிருக்கிறது என்பதையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்:

- தேவன் எப்படிப்பட்டவர் என்பதை அது நமக்குக் கூறுகிறது. அவருடைய குணாதிசயம், கிரியை, செயல்கள் இவைகளை அது விவரிக்கிறது.
- நாம் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறோம் என்பதை அது நமக்குக் கூறு கிறது. நமது இயல்பு, வார்த்தைகள், நமது செயல்கள் இவைகளை விவரிக் கிறது.
- நமது பாவப் பிரச்சினைக்குத் தேவனுடைய பதிலை அது எடுத்துக் கூறுகி றது. இயேசுகிறிஸ்துவில் அவர் நமக்கு என்ன செய்திருக்கிறார் என்பதையும் எடுத்துக் கூறுகிறது.
- நாம் என்ன செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் என்பதை எடுத் துக் கூறுகிறது:
  - ✓ இரட்சிக்கப்பட வேண்டும்.
  - ✓ கிறிஸ்துவில் வளர வேண்டும்.

தமது வார்த்தையைப் போதிக்கும்படி தேவன் நமக்குக் கட்டளை கொடுத்திருக்கிறார்

தேவன் தமது வார்த்தையைச் சிறுவர்களுக்குப் போதிக்கும்படி நம்மை அழைத்து, கட்டளை கொடுத்திருக்கிறார் என்பதையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

"ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், *சகல ஜாதிகளையும் சீஷராக்கி*, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, *நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி* அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்" (மத்தேயு 28:19, 20).

"நான் வருமளவும் வாசிக்கிறதிலும் *புத்திசொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும்* ஜாக்கிரதையாயிரு" (1 தீமோத்தேயு 4:13).

"சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் *ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு;* எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு" (2 தீமோத்தேயு 4:2).

"இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது. நீ அவைகளை *உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து*, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக் கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசி" (உபாகமம் 6:6,7).

"*அவைகளை உங்கள் பிள்ளைகளுக்கு உபதேசித்து*, நீங்கள் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியிலே நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசுவீர்களாக" (உபாகமம் 11:19).

"அவர் யாக்கோபிலே *சாட்சியை ஏற்படுத்தி*, இஸ்ரவேலிலே வேதத்தை ஸ்தாபித்து *அவைகளைத் தங்கள் பிள்ளைகளுக்கு அறிவிக்கும்படி நம்முடைய பிதாக்களுக்குக் கட்டளையிட்டார். இனிப் பிறக்கும் பிள்ளைகளாகிய பின்சந்ததியார் அதை அறிந்துகொண்டு*, அவர்கள் எழும்பித் தங்கள் பிள்ளைகளுக்கு அவைகளைச் சொல்லும்படிக்கும்; தேவன்மேல் அவர்கள் தங்கள் நம்பிக்கையை வைத்து, தேவனுடைய செயல்களை மறவாமல், அவர் கற்பனைகளைக் கைக்கொள்ளும்படிக்கும்" (சங்கீதம் 78:5-7).

இதனால், நீங்கள் வேதபாடத்தைப் பிள்ளைகளுக்குப் போதிக்கும்போது, அந்தப் பாடம் தேவனுடைய வார்த்தையைப் பிள்ளைகளுக்கு விளக்கி அவர்கள் அதைச் செயல்பூர்வமாக்குவது எப்படி என்று விளக்குமானால், நீங்கள் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிகிறீர்கள்.

தேவன் தமது வார்த்தையை ஆசீர்வதிப்பதாக வாக்குத்தத்தம் அருளியிருக்கிறார்

தமது வார்த்தை உண்மையாகப் போதிக்கப்பட்டு, செயல்படுத்தப்படுமானால் அதில் தமது ஆசீர்வாதம் தங்கியிருக்கும் என்று தேவன் தெளிவுபடுத்தியிருக்கிறார். எனவே உங்கள் போதனை எப்போதுமே தேவனுடைய வார்த்தையையே மையமாகக் கொண்டிருக்க வேண்டும். பிள்ளைகள் அந்த வார்த்தைக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதே உங்கள் வாஞ்சையாக இருக்க வேண்டும். நீங்கள் "செயல் தந்திரங்களையோ" "மாய வித்தைகளையோ" சார்ந்திருக்க வேண்டிய அவசியமில்லை. பிள்ளைகளைக் கேளிக்கைக்கு உள்ளாக்க வேண்டுமென்ற அவசியமுமில்லை. கேளிக்கை அல்ல, போதிப்பதே உங்கள் பணியாகும். உங்கள் ஊழியம் தேவனுடைய வார்த்தையைப் போதிக்கும் ஊழியமாகும். தமது வார்த்தை போதிக்கப்படும்போதே அதை ஆசீர்வதிப்பதாகத் தேவன் வாக்குத்தத்தம் அருளியிருக்கிறார்.

"மாரியும் உறைந்த மழையும் வானத்திலிருந்து இறங்கி, அவ்விடத்துக்குத் திரும்பாமல் பூமியை நனைத்து, அதில் முளை கிளம்பி விளையும்படிச் செய்து, விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது எப்படியோ, அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; ***அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல்,*** *அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்"* (ஏசாயா 55:10).

தேவனுடைய வார்த்தை வல்லமையானது

தேவனுடைய வார்த்தை போதிக்கப்படும்போது அதில் வல்லமையிருக்கிறது என்று வேதாகமம் மறுபடியும் மறுபடியுமாகப்போதிக்கிறது. சிறுவர்களின் இருதயங்களில் பேசும்படி தேவன் தமது வார்த்தையைப் பயன்படுத்துகிறார்.

- அவர் வார்த்தையின் மூலமாக இரட்சிக்கப்படாத பிள்ளைகளிடம் பேசுகிறார்:

  "கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது" (ரோமர் 1:16),

  "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" (ரோமர் 10:17).

  "அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே" (1 பேதுரு 1:23).

- அவர் இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளோடு தமது வார்த்தையின் மூலமாகப் பேசுகிறார்:

"உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" (யோவான் 17:17).

"தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும்" (எபேசியர் 5:26).

"உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவகுமாரனுடைய நாமத்தின் மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்" (1 யோவான் 5:13).

பல தெளிவான எடுத்துக்காட்டுகளின் மூலம் வேதாகமம் தன்னைக் குறித்தும் தனது வல்லமையைக் குறித்தும் விவரிக்கிறது:

✓ அது உருவக் குத்தி வகையறுக்கிற பட்டயமாக இருக்கிறது (எபிரெயர் 4:12).

✓ அது கனியை உருவாக்கும் விதையாக இருக்கிறது (லூக்கா 8:11).

✓ அது வெளிச்சம் காட்டும் தீபமாக இருக்கிறது (சங்கீதம் 119:105).

✓ அது பாறையை உடைக்கும் சம்மட்டியாக இருக்கிறது (எரேமியா 23:29).

✓ அது போஷாக்களிக்கும், வளரச் செய்யும் உணவாக இருக்கிறது (எரேமியா 15:16).

✓ அது புத்துணர்வூட்டும் மழையாகவும் உறைபனியாகவும் இருக்கிறது (ஏசாயா 55:10, 11).

✓ அது பாவத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக இருக்கிறது (யாக்கோபு 1:22-24).

✓ அது புசித்துத் திருப்திப்பட தேனாக இருக்கிறது (எசேக்கியேல் 3:3).

தமது வார்த்தையைக் கேட்டு, அதைப் புரிந்துகொண்டு, அதை விசுவாசிப்பவர்களின் வாழ்க்கையில் ஏழு விளைபயன்களை ஏற்படுத்தும்படி தேவன் தமது வார்த்தையைக் கொடுத்திருக்கிறார். இந்த விளைவுகள் 2 தீமோத்தேயு 3:15-17 வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ளன:

"கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும். வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினாலே அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது."

தேவனுடைய வார்த்தை இவைகளுக்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று இந்த இரண்டு வசனங்களும் போதிக்கின்றன:

✓ இரட்சிப்புக்காக

✓ உபதேசத்துக்காக

✓ கடிந்துகொள்ளுதலுக்காக - குறிப்பாக நடத்தையைக் குறித்து.

✓ சீர்திருத்தலுக்காக - குறிப்பாக கோட்பாட்டைக் குறித்து.
✓ நீதியைப் படிப்பிக்குதல்
✓ பிள்ளை தேறினவனாகவும் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படிக்கு
✓ பிள்ளை நற்கிரியைகளைச் செய்யும்படித் தகுதியுள்ளவனாக ஆகும்படிக்கு.

தேவனுடைய வார்த்தையைப் போதியுங்கள்

உங்கள் குடும்பத்திலும் வகுப்பிலுமுள்ள பிள்ளைகளுக்குத் தேவனுடைய வார்த்தையைப் போதிப்பதே உங்கள் முதல் பொறுப்பு என்பதை இப்போது நீங்கள் கண்டுகொண்டிருப்பீர்கள். நீங்கள் வேதபாடத்தைப் போதிக்கும்போது இதற்கான முதல் வாய்ப்பைப் பெறுகிறீர்கள். இது உங்கள் போதிக்கும் செயல்திட்டத்தில் கடைசி 20 நிமிடங்களில் நடக்கும் காரியமாகும். ஆனால் நான் ஏற்கெனவே கூறியபடி, உங்கள் செயல்திட்டத்தில் முன்னரே நீங்கள் வேதபாடத்தை நடத்த விரும்பும் வேளைகளும் வருவதுண்டு. இந்தப் புத்தகத்தின் எஞ்சிய பகுதியில் பெரும் பகுதி நீங்கள் வேதபாடத்தை எப்படி நடத்த வேண்டும் என்பதைக் குறித்தே கூறுகிறது. ஆனால், துவக்கத்திலிருந்தே அறிந்து கவனமாகப் பின்பற்றப்பட வேண்டிய சில எளிமையான அடிப்படை விதிகளும் கொள்கைகளும் உள்ளன:

- ***எளிமையான வகையில்*** வேதாகமத்தைப் போதியுங்கள். நீங்கள் பேசும் மொழியும் கருத்துக்களும் எளிதாகப் புரிந்துகொள்ளக் கூடியவையாக இருக்க வேண்டும்.
- ***கவரக்கூடிய வகையில்*** வேதாகமத்தைப் போதியுங்கள். கேளிக்கை காட்டுவது உங்கள் வேலையாக இராவிட்டாலும், பிள்ளைகள் கேட்கக் கூடிய வகையில் நீங்கள் போதிக்க வேண்டும். உங்களுக்கு உதவியாக நீங்கள் பட உபகரணங்களைப் பயன்படுத்தலாம். ஆனால் நீங்களே சிறந்த காட்சி உபகரணமாக இருக்கிறீர்கள். உங்கள் போதிக்கும் முறை துடிப்பானதாகவும் ஆர்வமுள்ளதாகவும், இடையிடையே எடுத்துக்காட்டுகளைக் கூறுவதாகவும் இருக்க வேண்டும்.
- ***தர்க்கரீதியாகவும் ஒழுங்குமுறையாகவும்*** வேதாகமத்தைப் போதியுங்கள். ஒவ்வொரு பாடமும் முந்தைய பாடத்தின் அடித்தளத்தின்மீது கட்டியெழுப்பப்பட வேண்டும். வேதாகமத்தின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கோ அல்லது ஒரு சத்தியம் அல்லது கருப்பொருளிலிருந்து மற்றொன்றுக்கோ தாவிச் செல்லாதிருங்கள். உங்கள் செயல்திட்டத்தைக் கவனமாகத் திட்டமிடுங்கள்.
- வேதாகமத்தைக் *குறிப்பாகப்* போதியுங்கள். அதாவது நீங்கள் அளவுக்கு அதிகமாகப் போதிக்க முயலக்கூடாது. ஒவ்வொரு பாடத்துக்கும் ஒவ்வொரு மையமான சத்தியத்தைப் பெற்றிருப்பது நலமாகும். அந்தச் சத்தியத்தின்மீது உங்கள் போதனையை ஒருமுகப்படுத்த வேண்டும்.

- *செயல்பூர்வமான* வகையில் வேதாகமத்தைப் போதியுங்கள். நீங்கள் போதிக்கும் சத்தியம் உங்கள் வகுப்பிலுள்ள ஒவ்வொரு பிள்ளையின் அன்றாட வாழ்க்கைக்கும் ஏற்றபடி பொருத்திக் காட்டப்பட வேண்டும். இந்தச் சத்தியத்தின் விளைவாக அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை அவர்களுக்குக் காட்டுங்கள்.

நாம் ஏற்கெனவே பார்த்தபடி உங்கள் வகுப்பில் இரண்டு வகைப்பட்ட பிள்ளைகள் இருப்பார்கள்:

✓ இரட்சிக்கப்பட்டுள்ள, ஆவிக்குரிய ஜீவனைப் பெற்றுள்ள பிள்ளைகள். இவர்களுக்கு ஆவிக்குரிய உணவு தேவைப்படுகிறது.

✓ இரட்சிக்கப்படாத பிள்ளைகள், ஆவிக்குரியரீதியாக மரித்தவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்குச் சுவிசேஷம் தேவைப்படுகிறது.

எனவே நீங்கள் போதிக்கும் சத்தியத்தை இந்த இரண்டு குழுவினருக்கும் ஏற்றபடி பொருத்திக் காண்பிக்க வேண்டும்.

✓ இரட்சிக்கப்பட்ட பிள்ளைகள் வளரும்படி மையமான வேதாகம சத்தியத்தை அவர்களுக்குப் பொருத்திக் காட்டுங்கள்.

✓ இரட்சிக்கப்படாத பிள்ளைகளுக்கு இரட்சிப்பின் வழியைக் காட்டும்படியாக மையமான வேதாகம சத்தியத்தைப் பொருத்திக் காட்டுங்கள்.

- ஜெபத்தோடு வேதாகமத்தைப் போதியுங்கள். பரிசுத்த ஆவியானவரின் கிரியையையே நீங்கள் சார்ந்திருக்கிறீர்கள். *"சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை நடத்தவே"* அவர் அனுப்பப்பட்டிருக்கிறார் (யோவான் 16:13).

✓ இரட்சிக்கப்படாத பிள்ளைகள் ஆவிக்குரியரீதியாகப் பார்வையற்றவர்களாக இருக்கிறார்கள் (2 கொரிந்தியர் 4:4). பரிசுத்த ஆவியானவரின் கிரியையில்லாமல் அவர்களால் தங்கள் இருதயத்தில் சத்தியத்தைப் புரிந்து கொள்ள முடியாது (1 கொரிந்தியர் 2:14).

✓ இரட்சிக்கப்பட்ட பிள்ளையும் தானாக அதிகமாகப் புரிந்துகொள்ள முடியாது: தெளிவான அறிவையும் வெளிச்சத்தையும் கொடுப்பதற்கு அந்தப் பிள்ளையும் பரிசுத்த ஆவியானவரையே சார்ந்திருக்கிறது (எபேசியர் 1:17,18).

பரிசுத்த ஆவியாகிய தேவன் தமது வார்த்தையைப் பயன்படுத்த வேண்டும் என்றும், அவர் அனைத்துப் பிள்ளைகளின் இருதயத்திலும் கிரியைசெய்ய வேண்டும் என்றும் - நீங்கள் அதிகமான நேரத்தைப் பிள்ளைகளுக்காகவும் நீங்கள் நடத்தப் போகும் வேதபாடத்துக்காகவும் ஜெபத்தில் செலவழிக்க வேண்டும்.

நீங்கள் அறிந்ததை மட்டுமே உங்களால் போதிக்க முடியும்

ஒவ்வொரு ஆசிரியரும் முதலில் கற்றுக்கொள்ள வேண்டும். ஒரு ஆசிரியர் தான் போதிப்பதற்கு முன்பாக மாணவராக இருக்க வேண்டும். போதிப்பது அறிவை அடிப்படையாகக் கொண்டது. எனவே தேவனுடைய வார்த்தையைப் போதிக்கும்

ஒவ்வொரு ஆசிரியரும் முதலில் தேவனுடைய வார்த்தையைக் கற்கும் மாணவராக இருக்க வேண்டும். நீங்கள் பல வழிகளில் உங்கள் வேதாகம அறிவை ஆழமாக விருத்திசெய்துகொள்ள முடியும்:

- ஒவ்வொரு நாளும் உங்கள் அமைதியான வேளையில் ஒரு வேதாகமப் பகுதியை நீங்கள் தியானிக்க வேண்டும். உங்கள் ஆய்வுகள் ஒழுங்குரீதியாக இருக்க வேண்டும். நீங்கள் வேதாகமம் முழுவதையும் தொடர்ந்து நீண்ட காலத்துக்குப் படித்து ஆய்வுசெய்யலாம். அல்லது வேதாகமத்தின் ஒவ்வொரு அதிகாரத்திலும் ஒவ்வொரு வசனமாக ஆய்வை மேற்கொள்ளலாம். அல்லது ஒரு கருப்பொருளையோ அல்லது ஒரு கோட்பாட்டையோ எடுத்துக்கொண்டு அதோடு தொடர்புடைய வசனங்களையும் பகுதிகளையும் ஆய்வுசெய்யலாம்.
- உங்கள் அமைதியான வேளைக்கு அப்பாற்பட்டு, வேதாகம ஆய்வுக்காகக் கூடுதலான நேரத்தைச் செலவிட வேண்டும். குறிப்பாக வேதாகமத்தின் முக்கியமான கோட்பாடுகளையும் சத்தியங்களையும் கற்க வேண்டும். இந்த ஆய்வில் உங்களுக்கு உதவ பல நல்ல புத்தகங்கள் இருக்கின்றன.
- வேதாகமத்தை விசுவாசிக்கும் ஒரு சுவிசேஷ சபைக்கு ஒழுங்காகச் செல்ல வேண்டும். உங்கள் போதகரின் போதிக்கும் ஊழியத்துக்குச் செவிகொடுக்க வேண்டும்.
- உங்கள் பகுதியில் ஆசிரியருக்குப் பயிற்சியளிக்கும் வகுப்புகள் நடத்தப்படுமானால், அவைகளில் பங்குகொள்ள வேண்டும்.
- உங்கள் வேதபாடங்களை ஆயத்தம்செய்ய வேதாகம அடிப்படையிலான போதிக்கும் உபகரணங்களைப் பயன்படுத்த வேண்டும். சிறுவர் சுவிசேஷ ஐக்கியத்தால் தயாரிக்கப்படும் உபகரணங்கள் அற்புதமானவையாக இருக்கின்றன.

அடுத்துவரும் அத்தியாயங்கள் இந்த "விதிகளை" விவரமாக விளக்குகின்றன. ஒரு வேதபாடத்தைச் சிறப்பாகப் போதிப்பது எப்படி என்பதை அவை உங்களுக்குப் படிப்படியாக விளக்கும்.

அத்தியாயம் 17

ஒழுங்குரீதியாக செய்யுங்கள்

நான் எந்தப் போதிக்கும் திட்டத்தைப் பின்பற்ற வேண்டும் ?

அத்தியாயத்தின் சுருக்கம்

ஒழுங்காகத் திட்டமிடப்பட்ட போதிக்கும் செயல்திட்டத்தை நீங்கள் கொண்டிருக்க வேண்டும்.

- காலவரிசையில் (Chronologically) போதியுங்கள் - வேதாகமத்தின் ஒரு புத்தகத்தினூடாகப் படிப்படியாகப் போதியுங்கள்.
- கருப்பொருள் (thematically) அடிப்படையில் போதியுங்கள் - ஒரு பெரிய கோட்பாட்டைப் படிப்படியாகப் போதியுங்கள்.
- நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்கள் என்பதைத் தீர்மானியுங்கள்.
- வேதாகமத்தைப் பற்றியும் அதன் பின்னணியைக் (background) குறித்தும் பிள்ளைகளுக்குப் போதியுங்கள்.
- ஒரு ஐந்தாண்டுப் போதிக்கும் செயல்திட்டம்
- நீங்கள் போதித்தவைகளைப் பதிவுசெய்ய ஒரு எளிய கோப்பு அட்டை (Simple file card).

ஒரு வேதபாடம் வழக்கமாக ஒரு வேதாகமப் பகுதியை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. எனவே, ஒரு வேதபாடத்தை நீங்கள் போதிக்கும்போது, ஒரு வேதாகமப் பகுதியைத் தெரிந்துகொண்டு, அதிலுள்ள ஒரு கதையை நீங்கள் எடுத்துக் கூறுவீர்கள். பிள்ளைகளுக்குச் சத்தியத்தைப் போதிக்கவும் நீங்கள் அந்தக் கதையைப் பயன்படுத்துவீர்கள் (பின்னர் இதுபற்றி நாம் காண்போம்). ஆனால் பிள்ளைகள் புரிந்துகொள்ள வேண்டுமென்று நீங்கள் விரும்பும் ஒரு வேதாகமக் கோட்பாட்டின் அடிப்படையிலும் நீங்கள் வேதபாடத்தைத் தயாரிக்கலாம். இந்தக் கையேட்டுடன் கொடுக்கப்பட்டுள்ள சேர்க்கைக் கோப்பில் நீங்கள் வேதபாடமாகப் போதிக்கக் கூடிய பல கோட்பாட்டுப் பாடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதுபோல வேதாகமப் பகுதி அல்லது வசனத்தின் அடிப்படையிலான பாடங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

உங்கள் வேதபாடங்களில் நீங்கள் ஒரு ஒழுங்குமுறையைப் பின்பற்ற வேண்டும். நீங்கள் ஒழுங்காகப் பிள்ளைகளுக்கு வேதாகமத்தைப் போதித்து வருவீர்களானால், ஒரு ஒட்டுமொத்த செயல்திட்டத்தைப் பின்பற்ற வேண்டும். நீண்டகாலத்துக்கு ஒழுங்குரீதியாகப் போதித்து வாருங்கள். ஒவ்வொரு பாடமும் அதன் முந்தைய பாடத்தின் ஒழுங்கான மற்றும் தர்க்கரீதியான தொடர்ச்சியாக இருக்கும்படி அவைகளைக் கட்டியெழுப்ப வேண்டும். அல்லது பிள்ளைகள் வேதாகமத்தில் ஒருசில பகுதிகளையும் கதைகளையும் மட்டுமே மறுபடியும் மறுபடியுமாகக் கேட்பார்கள். பிற காரியங்களை அவர்களால் அறிந்துகொள்ள முடியாது!

நாள்வரிசையில் போதியுங்கள்

நாள்வரிசையில் போதிப்பதே சிறந்த வழிமுறையாகும். வேதாகமத்தின் பெரும் பாலான பகுதி நாள்வரிசையிலேயே எழுதப்பட்டிருக்கிறது. அதாவது, நீங்கள் ஒரு வேதாகமப் பாத்திரத்தின் வாழ்க்கை வரலாற்றைத் தெரிந்துகொள்கிறீர்கள் அல்லது ஒரு வேதாகமப் புத்தகத்தின் நாள்வரிசை நிகழ்ச்சிகளைத் தெரிந்தெடுக்கிறீர் கள். பிறகு படிப்படியாக, பாடம்பாடமாக ஒழுங்குரீதியாக அதைப் போதிக்கி றீர்கள். வரிசைப்படி பாடம் நடத்துவது ஒரு பாடத்துக்கும் அடுத்த பாடத்துக்கு முரிய தொடர்ச்சியை உறுதிப்படுத்துகிறது.

எடுத்துக்காட்டாக, வேதாகமத்தின் துவக்கமாகிய ஆதியாகமத்தின் முதலாம் அதிகாரத்திலிருந்து துவங்கி, படிப்படியாக அந்தப் புத்தகத்தைப் போதிக்கலாம். ஆதியாகமம் அற்புதமானதொரு நூலாகும். அது துவக்கங்களைக் கூறும் புத்தக மாகும். வேதாகமத்தில் அடுத்துவரும் அனைத்துக்கும் அது மெய்யாகவே அஸ்தி பாரமாக இருக்கிறது.

ஆதியாகமத்திலுள்ள ஒவ்வொரு சிறுசிறு விவரங்களையும் போதிக்க வேண்டும் என்ற அவசியமில்லை. பின்னர் குறிப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளபடி, பதினைந்து பாடங்களில் ஆதியாகமத்தை நடத்தி முடிக்கலாம்.

ஆதியாகமத்தைத் தொடர்ந்து இந்த நாள்வரிசைப் பாடங்களையும் நீங்கள் நடத் தலாம்:

- மோசேயின் வாழ்க்கை
- யோசுவாவின் வாழ்க்கை
- தாவீதின் வாழ்க்கை
- இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கை
- அப்போஸ்தலரின் நடபடிகள்

அடுத்த அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள ஓராண்டு போதிக்கும் செயல்திட்டத்தில் ஆதியாகமத்திலிருந்து நாள்வரிசைப் பாடங்கள் கொடுக்கப்பட்டிருப்பதை நீங்கள் காணலாம். இப்படிப்பட்டதொரு திட்டத்தைப் பயன்படுத்த விரும்பும் ஆசிரியர் களுக்காக நான் அதைச் சேர்த்திருக்கிறேன்.

கருப்பொருள்ரீதியாகப் போதியுங்கள்

வேதபாடங்களை, நாள்வரிசையாகப் போதிக்காமல், நீங்கள் ஏதேனும் ஒரு குறிப் பிட்ட சத்தியத்தைத் தெரிந்துகொண்டு அதைப் போதிக்கலாம். பிறகு அந்தச் சத்தியத்தைப் போதிக்க உங்களுக்கு உதவும் வேதாகமப் பகுதிகளையும் கதை களையும் நீங்கள் தெரிந்துகொள்ளலாம். ஒவ்வொரு பாடமும் அதன் முந்தைய பாடத்தைத் தர்க்கரீதியாகவும் ஒழுங்குமுறையிலும் தொடர்ந்துவரும்.

எடுத்துக்காட்டாக, தேவனைப் பற்றி நீங்கள் ஐந்து பாடங்களைக்கொண்ட தொடரைப் போதிக்கலாம். ஒவ்வொரு பாடமும் தேவனைக் குறித்த சத்தியத்தை மையமாகக் கொண்ட ஒரு வேதாகமப் பகுதியைக் கொண்டிருக்கும்:

- தேவனே சிருஷ்டிகர் - ஆதியாகமம் 1.
- தேவன் பரிசுத்தர் - ஏசாயா 6 ஆம் அதிகாரத்தில் ஏசாயாவின் தரிசனம்.
- தேவன் சர்வவல்லவர் - சிவந்த சமுத்திரத்தைக் கடத்தல் (யாத்திராகமம் 14).
- தேவன் அன்பாகவேயிருக்கிறார் - பாவிகளுக்காக இயேசுகிறிஸ்துவின் மரணம் (மத்தேயு 27).
- தேவன் உண்மையுள்ளவராக இருக்கிறார் - தேவன் எலியாவைப் பராமரிக்கிறார் (1 இராஜாக்கள் 17).

அல்லது வேதாகமத்தைப் பற்றி நீங்கள் ஒரு தொடராக பாடத்தைப் (series of lessons) போதிக்கலாம். தர்க்கரீதியாகப் போதிக்கப்படும் கோட்பாடுகளைச் சுருக்கமாக ஒரு பட அட்டையில் எழுதி அதைப் பயன்படுத்தலாம். உங்கள் பாடத்தை ஏதேனும் ஒரு குறிப்பிட்ட வேதாகமப் பகுதியின் அடிப்படையில் அமைக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

எடுத்துக்காட்டாக, நீங்கள் கீழ்க்கண்ட ஐந்து பாடங்களையும் போதிக்கலாம்:

- வேதாகமம் தேவனுடைய வார்த்தையாகும்.
- வேதாகமம் சத்தியமாகும்.
- வேதாகமம் நித்தியமானதாகும்.
- வேதாகமம் நமக்குக் கிறிஸ்துவைக் காட்டுகிறது.
- வேதாகமம் எனக்குரியதாகும்.

இப்படிப்பட்ட வரையறைக் குறிப்புகளைப் பயன்படுத்துவது ஒரு ஒழுங்குரீதியான கருப்பொருள், கோட்பாடு அல்லது சத்தியத்தின் போதனையை உருவாக்குவதாகும். ஆனால், உங்கள் வேதவசனப் போதனை ஒரு ஒழுங்குரீதியானது அல்ல; ஏனென்றால் நீங்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாக வேதாகமப் பகுதிகளைத் தெரிந்துகொள்கிறீர்கள். ஆனால் முதலில் குறிப்பிட்ட நாள்வரிசைப் போதனை வேதாகமத்தை ஒழுங்குரீதியாகப் பின்பற்றுகிறது; ஆனால் கருப்பொருள் அல்லது கோட்பாடு ஒழுங்குரீதியானதாக இருப்பதில்லை!

அடுத்த அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஓராண்டு போதனைச் செயல்திட்டத்தில் பல கருப்பொருள்ரீதியான தொடர் பாடங்களை நீங்கள் காணலாம். இந்தக் கையேட்டுடன் கொடுக்கப்படும் தொகுதியில் இரண்டு கருப்பொருள் ரீதியான பாடத் தொடர்களை நீங்கள் காணலாம். உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் போதிக்கும்போது இவைகளை வேதபாடங்களாகப் பயன்படுத்தலாம்:

- *"வேதாகமம்"* - வேதாகமம் மற்றும் இரட்சிப்பின் வழி குறித்த பாடங்கள்.
- *"ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து"* - இயேசுகிறிஸ்துவின் ஆள்தத்துவம் மற்றும் கிரியை குறித்த பாடங்கள்.

நீங்கள் எந்தச் செயல்திட்டத்தைப் பின்பற்ற வேண்டும்?

உங்கள் போதிக்கும் செயல்திட்டத்தின் நீண்டகாலத் திட்டமிடுவதில் இந்த இரண்டு வகைகளையும் சேர்த்துக்கொள்வது நலமாகும். அடுத்துவரும் பக்கங்களில்

கொடுக்கப்பட்டுள்ள ஓராண்டு போதனைச் செயல்திட்டத்தில் இந்த இரண்டையும் எவ்வாறு இணைப்பது என்பதுபற்றிக் கூறப்பட்டிருக்கிறது. நீங்கள் எந்த வகையைப் பயன்படுத்தினாலும், நீங்கள் போதிக்கும் சத்தியங்களைக் குறித்து ஆழமாகச் சிந்திக்க வேண்டும்; இதனால் உங்கள் போதனை விரிவானதாக இருக்கும், சத்தியத்தின் எந்த அம்சமும் விடுபட்டுப் போகாது. மேலும், அடுத்துவரும் பக்கங்களில் காணப்படும் திட்டத்தின்படி நீங்கள் பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட்டையும் பயன்படுத்துவதில் சமநிலை காணப்பட வேண்டும்.

திட்டத் தாள்களைப் பயன்படுத்துவது (பக்கம் 155) உதவியாக இருக்கும்; அதில் அடுத்த ஆண்டு நீங்கள் போதிக்கும்படி திட்டமிடும் பாடங்களைக் குறித்த விவரங்களை எழுதிவைக்கிறீர்கள். அந்தப் பாடங்கள் போதிக்கப்பட்டபிறகு, இதுவரை நீங்கள் எவைகளைப் போதித்திருக்கிறீர்கள் என்பதைக் கண்டறியவும் இது உதவியாக இருக்கும். அல்லது 156ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளபடி, ஒவ்வொரு பாடத்துக்கும் தனித் தாளில் குறிப்புகளை எழுதிவைக்கலாம். உங்கள் பாடக் குறிப்புகள் எல்லாவற்றையும் நீங்கள் ஒரு கோப்பில் சேர்த்துவைக்கலாம்; மறுபடியுமாக அதைப் பயன்படுத்துவதற்கு இது உதவியாக இருக்கும்.

பின்னணியை மறந்துபோகாதிருங்கள்

வேதபாடங்களை மட்டும் போதிக்காமல், உங்கள் ஒட்டுமொத்த போதிக்கும் செயல்திட்டத்தில் பிள்ளைகளுக்கு வேதாகமம் மற்றும் அதின் பின்னணியைக் குறித்தும் போதிப்பது அத்தியாவசியமானதாகும். வேதாகமத்தைப் பற்றி அதிக அறிவில்லாத பிள்ளைகளுக்கு இது தேவைப்படுகிறது:

- வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்றும், இதை நீங்கள் எப்படி அறிவீர்கள் என்பதைக் குறித்தும் பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டும்.
- வேதாகமத்தின் வடிவமைப்பு, அதன் இரு பிரிவுகள், 66 புத்தகங்களைக் குறித்துப் பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டும்.
- வேதாகமம் எவ்வாறு எழுதப்பட்டது, அது எவ்வாறு உங்கள் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது என்பதை மாணவர்களுக்குப் போதிக்க வேண்டும். வேதாகமம் ஏன் முக்கியமானது, ஏன் அதை வாசிக்க வேண்டும், ஆய்வு செய்ய வேண்டும், அதற்குச் செவிகொடுக்க வேண்டும் - இவைகளைப் பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டும்.
- பிள்ளைகள் வேதாகமங்களைப் பெற்றிருக்க வேண்டும், அதை அவர்கள் கண்ணியமாகப் பாதுகாக்க வேண்டும்.
- பிள்ளைகளுக்கு உங்கள் வேதபாடத்தின் பின்னணியாக இவைகளை நீங்கள் இடையிடையே போதிக்க வேண்டும்.

உங்கள் தொகுப்பில் *"வேதாகமம்"* என்ற தலைப்பில் பல சித்திரிக்கப்பட்ட பாடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தப் "பின்னணிப் பாடங்களுக்கு" அவை உங்களுக்கு உதவியாக இருக்கும்.

திட்டம் மற்றும் பதிவு மாதிரித் தீட்டுகள்

தேதி	பாடம்	மையச் சத்தியம்	இரட்சிக்கப்படாத பிள்ளைக்குப் பொருத்திக் கூறுதல்	இரட்சிக்கப்பட்ட பிள்ளைக்குப் பொருத்திக் கூறுதல்

தேதி	பாடம்	மையச் சத்தியம்	இரட்சிக்கப்படாத பிள்ளைக்குப் பொருத்திக் கூறுதல்	இரட்சிக்கப்பட்ட பிள்ளைக்குப் பொருத்திக்கூறுதல்

விளக்கம்: ஒவ்வொரு பாடத்துக்கும் முதல் மூன்று பத்திகளைப் பயன்படுத்த வேண்டும். அதோடுகூட, மற்றப் பத்திகளில் ஒன்றையோ அல்லது இரண்டையுமோ பயன்படுத்தலாம். ஒவ்வொரு அட்டையையும் ஒரு பாடத்தொடரைக் குறித்துப் (ஆறு பாடங்கள்) பதிவு செய்யப் பயன்படுத்தலாம். இதற்காகப் பெரிய அட்டையில் இதைத் தயாரிக்கலாம்.

போதிக்கப்படும் ஒவ்வொரு பாடத்துக்கான மாதிரிக் கோப்பு அட்டை

தேதி	
பாடம்	
மையச் சத்தியம்	
இரட்சிக்கப்படாத பிள்ளைக்குப் பொருத்திக் கூறுதல்	
இரட்சிக்கப்பட்ட பிள்ளைக்குப் பொருத்திக் கூறுதல்	

தேதி	
பாடம்	
மையச் சத்தியம்	
இரட்சிக்கப்படாத பிள்ளைக்குப் பொருத்திக் கூறுதல்	
இரட்சிக்கப்பட்ட பிள்ளைக்குப் பொருத்திக் கூறுதல்	

தேதி	
பாடம்	
மையச் சத்தியம்	
இரட்சிக்கப்படாத பிள்ளைக்குப் பொருத்திக் கூறுதல்	
இரட்சிக்கப்பட்ட பிள்ளைக்குப் பொருத்திக் கூறுதல்	

அத்தியாயம் 18

ஓராண்டு போதிப்பதற்கு செயல்திட்டம்

ஆசிரியர்களாகிய உங்களுக்கு ஒரு நீண்ட-பருவ போதிக்கும் செயல்திட்டம் தேவைப்படுவதால், நான் இந்த அத்தியாயத்தில் ஒரு ஓராண்டு செயல்திட்டத்தைக் கொடுத்திருக்கிறேன்; தேவனுடைய வார்த்தையையும் அதிலுள்ள சத்தியத்தையும் பிள்ளைகளுக்குப் போதிப்பதில் இது உங்களுக்கு உதவியாக இருக்கும். விடுமுறை வேளைகளில் நீங்கள் வகுப்புகளை நடத்தமாட்டீர்கள் என்கிறபடியால், ஓராண்டுக்கு 42 கூட்டங்கள் என்ற அடிப்படையில் இந்தச் செயல் திட்டத்தைத் தயாரித்திருக்கிறேன். ஆனால் நீங்கள் 42க்கும் மேற்பட்ட கூட்டங்களை நடத்துவீர்களானால், ஒருசில பாடங்களை இரண்டு பகுதிகளாகப் பிரித்துக்கொள்ளலாம் அல்லது கூடுதலான பாடங்களைச் சேர்த்துக்கொள்ளலாம்.

அடுத்துவரும் போதனை உபகரணத் தொகுப்பில் நீங்கள் கூடுதலான ஓராண்டு செயல்திட்டங்களைப் பெறுவீர்கள்.

தொடர் 1

வேதாகமம்" என்ற பட அட்டைத் தொடரின் முதல் பாகத்தில் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளபடி ஐந்து பாடங்கள்

பாடம் 1	தேவன் நம்மோடு பேசுகிறார்.
பாடம் 2	வேதாகமம் தேவனுடைய வார்த்தையாகும்.
பாடம் 3	வேதாகமம் நித்தியமானது, வல்லமையானது.
பாடம் 4	வேதாகமம் தனிச்சிறப்பான ஒரு நூலாகும்.
பாடம் 5	நாம் ஏதேனும் செய்தாக வேண்டும்.

தொடர் 2

வேதாகமம்" என்ற பட அட்டைத் தொடரின் இரண்டாம் பாகத்தில் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளபடி ஐந்து பாடங்கள்

பாடம் 1	ஒரே இரட்சகர், இரட்சிப்புக்கு ஒரே வழி
பாடம் 2	இரண்டு வகைப்பட்ட சிறுவர்கள்
பாடம் 3	தேவத்துவத்தின் மூன்று உறுப்பினர்கள், நமது இரட்சிப்பில் அவர்களுடைய பங்கு
பாடம் 4	இயேசுகிறிஸ்துவின் தெய்வத்துவத்துக்கு நான்கு சாட்சிகள்
பாடம் 5	ஐவர் புத்திசாலிகளாகவும் ஐவர் புத்தியில்லாதவர்களாகவும் இருந்தார்கள்.

தொடர் 3

ஆதியாகமம் புத்தகத்தில் 15 பாடங்கள்

இந்தப் பாடத்துக்காக எந்தப் பட உபகரணமும் உங்கள் தொகுப்பில்

கொடுக்கப்படவில்லை. பாடங்கள் சுவையானவையாக இருக்கிறபடியால், படங்களை காட்டாமலே உங்களால் பிள்ளைகளின் கவனத்தை ஈர்க்க முடியும். "தேவன் யார், அவர் எப்படிப்பட்டவராக இருக்கிறார்?" என்பது முதல் ஐந்து பாடங்களுக்கும் ஒட்டுமொத்த கருப்பொருளாகும். தேவன் எப்படிப்பட்டவர் என்பது குறித்த வேதாகம சித்திரத்தைப் பிள்ளைகளின் சிந்தையில் பதிய வைப்பதே இந்த ஐந்து பாடங்களின் நோக்கமாகும். அடுத்துவரும் 10 பாடங்களின் போதனை இந்த அஸ்திபாரத்தைக் கொண்டதாக இருக்கும்; பிள்ளைகள் எப்படி தேவனைப் பிரியப்படுத்தி, அவரை மகிமைப்படுத்த முடியும் என்பதை இந்தப் பாடங்கள் காட்டும். முதலில் தேவனைப் பற்றிப் போதிப்பதும், பிறகு இந்த அடிப்படைச் சத்தியங்களின்மீது உங்கள் எஞ்சிய வேதாகமப் போதனையைக் கட்டியெழுப்புவதும் வேதாகமரீதியான வழியாகும்.

ஒவ்வொரு பாடத்தோடும்கூட, தேவனுடைய ஏதேனும் ஒரு பண்பைக் குறித்து ஒரு சுருக்கமான ஐந்து நிமிடக் கோட்பாட்டுப் பாடத்தை நடத்தும்படி நான் ஆலோசனை கூறுகிறேன். உங்கள் போதனைச் செயல்திட்டத்தின் மற்றொரு பகுதியில் இந்தப் பாடத்தை நடத்தலாம். இவையும் தேவன் எப்படிப்பட்டவராக இருக்கிறார் என்று பிள்ளைகளுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

முதல் ஐந்து பாடங்களுக்கான ஒட்டுமொத்த கருப்பொருள் - "தேவன் எப்படிப்பட்டவராக இருக்கிறார்?"

பாடம் 1

தலைப்பு	உலகம் சிருஷ்டிக்கப்படுதல் (ஆதியாகமம் 1, 2)
மையச் சத்தியம்	தேவனே சிருஷ்டிகர், அவர் சர்வ வல்லவராக இருக்கிறார்.
இரட்சிக்கப்படாத பிள்ளைக்குரிய செயல்படுத்துதல்	தேவன் உங்களைச் சிருஷ்டித்தவராக இருக்கிறபடியால் நீங்கள் அவருக்குப் பொறுப்பாக இருக்கிறீர்கள் - அவர் கூறுகிறபடி நீங்கள் செய்ய வேண்டும்.
இரட்சிக்கப்பட்ட பிள்ளைக்குரிய செயல்படுத்துதல்	சிருஷ்டிப்பில் காண்கிறபடி தேவன் சர்வ வல்லவராக இருக்கிறபடியால் அவருக்காக வாழ்வதற்குத் தேவையான பலத்தை அவர் உங்களுக்குக் கொடுப்பார்.

5 நிமிட கோட்பாட்டுப் போதனை - "தேவன் ஒருவர் இருக்கிறார்".

பாடம் 2

தலைப்பு	ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டமும் (ஆதியாகமம் 3
மையச் சத்தியம்	தேவன் பரிசுத்தராக இருக்கிறார்; அவரால் பாவத்தைத் தமது பிரசன்னத்தில் அனுமதிக்க முடியாது.
இரட்சிக்கப்படாத பிள்ளைக்குரிய செயல்படுத்துதல்	உங்கள் பாவத்தின் காரணமாகத் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டிருக்கிறீர்கள் - எப்போதும் அப்படியே இருப்பீர்கள்.

[illegible]சிக்கப்பட்ட [illegible]களைக்குரிய [illegible]செயல்படுத்துதல்	தேவன் பரிசுத்தராக இருக்கிறபடியால் ஒரு கிறிஸ்தவராக நீங்கள் பரிசுத்த வாழ்க்கை வாழ வேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

[illegible]நிமிட கோட்பாட்டுப் போதனை - "தேவன் பரிசுத்தர்".

[illegible]ம் 3

[illegible]தலைப்பு	காயீனும் ஆபேலும் (ஆதியாகமம் 4)
[illegible]மையச் சத்தியம்	தேவன் பாவிகளை நேசிக்கிறார். இரத்தம் சிந்துதலின் மூலமாக அவர்களுக்கு இரட்சிப்பின் வழியை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்.
[illegible]சிக்கப்படாத [illegible]களைக்குரிய [illegible]செயல்படுத்துதல்	நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டுமானால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாகத் தேவனிடம் வர வேண்டும்.
[illegible]சிக்கப்பட்ட [illegible]களைக்குரிய [illegible]செயல்படுத்துதல்	ஆண்டவராகிய இயேசுவை அனுப்பியபடியால் தேவனுக்கு நன்றி கூறுங்கள் - வந்து உங்களுக்காக மரித்ததற்காக ஆண்டவராகிய இயேசுவுக்கு நன்றி கூறுங்கள்.

[illegible]நிமிட கோட்பாட்டுப் போதனை - "தேவன் அன்பாக இருக்கிறார்"

[illegible]ம் 4

[illegible]தலைப்பு	ஏனோக்கு தேவனோடு நடத்தல் (ஆதியாகமம் 5:18-24; எபிரெயர் 11:5)
[illegible]மையச் சத்தியம்	தேவன் தனிப்பட்ட தேவனாக இருக்கிறார் - தம்மால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் தம்மை அறிந்து, தம்மோடு உறவு வைத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார்.
[illegible]சிக்கப்படாத [illegible]களைக்குரிய [illegible]செயல்படுத்துதல்	உலகத்தில் மாபெரும் சிலாக்கியத்தை நீங்கள் இழந்து போகிறீர்கள் - அதுவே தேவனை அறிவதாகும். (அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதின் மூலம் நீங்கள் அவரை அறியத்துவங்க முடியும்).
[illegible]சிக்கப்பட்ட [illegible]களைக்குரிய [illegible]செயல்படுத்துதல்	ஒரு கிறிஸ்தவனாக உங்களுடைய பொறுப்பு தேவனை இன்னுமதிகமாக அறிவதாகும்.

5 நிமிட கோட்பாட்டுப் போதனை - "தேவன் தனிப்பட்ட தேவனாக இருக்கிறார்".

[illegible]ம் 5

[illegible]தலைப்பு	நோவாவும் ஜலப்பிரளயமும் (ஆதியாகமம் 8, 9)

மையச் சத்தியம்	தேவன் நீதியுள்ளவராக இருக்கிறார் - அவர் பாவத்தைத் தண்டித்தேயாக வேண்டும்.
இரட்சிக்கப்படாத பிள்ளைக்குரிய செயல்படுத்துதல்	நீங்கள் இயேசுகிறிஸ்துவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளாவிட்டால், உங்கள் பாவத்துக்காக நீங்கள் தேவனால் நித்தியமாகத் தண்டிக்கப்படுவீர்கள்.
இரட்சிக்கப்பட்ட பிள்ளைக்குரிய செயல்படுத்துதல்	உங்கள் பாவத்துக்கான தண்டனையை ஏற்று ஆண்டவராகிய இயேசு சிலுவையில் பாடுபட்டிருக்கிறார் - அவருக்கு நன்றி கூறுங்கள்.

5 நிமிட கோட்பாட்டுப் போதனை - "தேவன் நீதியுள்ளவராக இருக்கிறார்."

முதல் ஐந்து பாடங்களுக்கான மறுஆய்வு:

தேவன் ... சர்வ வல்லவர்
... பரிசுத்தர்
... அன்பானவர்
... தனிப்பட்ட உறவுகொண்டவர்
... நீதியுள்ளவர்

அடுத்த 10 பாடங்களின் ஒட்டுமொத்த கருப்பொருள் - "நான் தேவனை எவ்வாறு பிரியப்படுத்த முடியும்?"

பிள்ளைகளுக்குத் தேவன் எப்படிப்பட்டவர் என்பதுபற்றிய முதல் ஐந்து பாடங்களைப் போதித்து, இந்த "உறுதியான வேதாகம அஸ்திபாரத்தை" இட்டபிறகு, அடுத்த பத்துப் பாடங்களில் பிள்ளைகள் எவ்வாறு தேவனைப் பிரியப்படுத்தி, அவரை மகிமைப்படுத்த முடியும் என்பதை அவர்களுக்குப் போதிக்க வேண்டும். தேவன் நம்மிலும் நம் மூலமாகவும் மகிமைப்படுத்தப்பட வேண்டும் என்பதே, நாம் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டதற்கும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்ததற்கும் அடிப்படை இலக்காக இருக்கிறது, என்பதை நீங்களும் பிள்ளைகளும் புரிந்துகொள்ள வேண்டும். இதற்கு என்ன அர்த்தம்? வாழ்க்கையில் நமது முக்கிய இலக்கு தேவனைப் பிரியப்படுத்துவதாகவே இருக்க வேண்டும் என்பதே இதன் அர்த்தமாகும். பிள்ளைகளால் இதை எளிதாகப் புரிந்து கொள்ள முடியும். தங்கள் அப்பாவையும், அம்மாவையும், ஆசிரியரையும் எப்படி பிரியப்படுத்துவது என்பதை அவர்கள் தெரிந்துவைத்திருக்கிறார்கள். தேவனை எவ்வாறு பிரியப்படுத்தி, இந்த வகையில் அவரை மகிமைப்படுத்த முடியும் என்பதை நாம் அவர்களுக்குப் போதிக்க வேண்டும்.

பாடம் 6

தலைப்பு	ஆபிரகாம் அழைக்கப்படுதல் (ஆதியாகமம் 12, 13)
மையச் சத்தியம்	ஆபிரகாம் செய்ததுபோல தேவன் கூறுவதை விசுவாசிப்பதின் மூலமாகவும் அவரில் உங்கள் நம்பிக்கையை வைப்பதின் மூலமாகவும் அவரைப் பிரியப்படுத்த முடியும்

இரட்சிக்கப்படாத பிள்ளைக்குரிய செயல்படுத்துதல்	இயேசுகிறிஸ்துவை உங்கள் இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்ளும்போது உங்கள் கிறிஸ்தவ வாழ்க்கை துவங்குகிறது.
இரட்சிக்கப்பட்ட பிள்ளைக்குரிய செயல்படுத்துதல்	தேவன் உங்களைப் பாதுகாத்து உங்கள் தேவைகளைச் சந்திப்பார் - அவரில் நம்பிக்கை வையுங்கள்.

5 நிமிட கோட்பாட்டுப் போதனை - "தேவன் உண்மையுள்ளவராக இருக்கிறார்."

பாடம் 7

தலைப்பு	ஈசாக்கு பலியிடப்படுதல் (ஆதியாகமம் 21, 22)
மையச் சத்தியம்	ஆபிரகாம் செய்ததுபோல தேவனுக்குக் கீழ்படிவதின் மூலம் நீங்கள் தேவனைப் பிரியப்படுத்த முடியும்.
இரட்சிக்கப்படாத பிள்ளைக்குரிய செயல்படுத்துதல்	இரட்சிப்புக்காக ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவிடம் வருவதே உங்களுடைய முதல் கீழ்ப்படிதலுள்ள செயலாகும்.
இரட்சிக்கப்பட்ட பிள்ளைக்குரிய செயல்படுத்துதல்	ஒரு கிறிஸ்தவனாக எந்தக் கிரயம்கொடுக்க நேரிட்டாலும் தேவன் கூறுவதை நீங்கள் செய்ய வேண்டும்.

5 நிமிட கோட்பாட்டுப் போதனை - "தேவன் வைராக்கியமுள்ளவராக இருக்கிறார்"

பாடம் 8

தலைப்பு	ஆபிரகாம் தனது மகனுக்காக ஒரு மணப்பெண்ணைத் தேடுகிறான் (ஆதியாகமம் 24)
மையச் சத்தியம்	ஆபிரகாமும் அவனுடைய ஊழியக்காரனும் செய்தது போல கடினமான வேளைகளில் அவருடைய உதவியைச் சார்ந்திருப்பதின்மூலம் நீங்கள் தேவனைப் பிரியப்படுத்த முடியும்.
இரட்சிக்கப்படாத பிள்ளைக்குரிய செயல்படுத்துதல்	நீங்கள் இரட்சிக்கப்படவில்லை என்பதே உங்களுடைய மிகவும் கடினமான வேளையாக இருக்கிறது - தேவனால் மட்டுமே உங்களை இரட்சிக்க முடியும்.
இரட்சிக்கப்பட்ட பிள்ளைக்குரிய செயல்படுத்துதல்	எதைச் செய்வது, எங்கே போவது என்பதை நீங்கள் அறியாதிருக்கும்போது தேவன் உங்களை வழிநடத்துகிறார்.

5 நிமிட கோட்பாட்டுப் போதனை - "தேவன் உங்களுக்கு நெருக்கமாக இருக்கிறார்".

பாடம் 9

தலைப்பு	யாக்கோபும் ஏசாவும் - பிறப்புரிமையும் ஆசீர்வாதமும் (ஆதியாகமம் 27)
மையச் சத்தியம்	பொய்களைக் கூறிய யாக்கோபைப் போலில்லாமல் நேர்மை யாக நடப்பதின் மூலம் நீங்கள் தேவனைப் பிரியப்படுத்த முடியும்.
இரட்சிக்கப்படாத பிள்ளைக்குரிய செயல்படுத்துதல்	நீங்கள் இயேசுகிறிஸ்துவிடம் வருவீர்களானால் நீங்கள் செய்த எல்லாத் தவறுகளையும் மன்னிக்க (பொய்கூறுவது உட்பட) தேவன் சித்தமாயிருக்கிறார்.
இரட்சிக்கப்பட்ட பிள்ளைக்குரிய செயல்படுத்துதல்	நீங்கள் பொய்கூறாதிருப்பதை உண்மையாகவே விரும்புவீர்களானால் - அதற்காகத் தேவனுடைய வல்லமைக்காக ஜெபியுங்கள்

5 நிமிட கோட்பாட்டுப் போதனை - "தேவன் ஒருபோதும் பொய் கூறுவதில்லை"

பாடம் 10

தலைப்பு	வீட்டைவிட்டு ஓடிய யாக்கோபு (ஆதியாகமம் 28)
மையச்சத்தியம்	யாக்கோபு செய்தது போல தேவனுடைய மன்னிப்புக்காக வும் அவருடைய சுத்திகரிப்புக்காகவும் அவரிடம் திரும்ப வருவதின்மூலமாக நீங்கள் தேவனைப் பிரியப்படுத்த முடியும்.
இரட்சிக்கப்பட்ட பிள்ளைக்குரிய செயல்படுத்துதல்	நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருந்தும் இந்த வேளையில் நீங்கள் எப்படி வாழ வேண்டுமோ அப்படி நடந்து கொள்ளா திருப்பீர்களானால், தேவனிடம் திரும்ப வழி இருக்கிறது.

இது பின்வாங்கிப்போனவர்களுக்கான பாடமாக இருக்கிறபடியால், இரட்சிக்கப் படாத பிள்ளைகளுக்குச் சுவிசேஷ சத்தியத்தை அறிவிக்க, உங்கள் போதிக்கும் செயல்திட்டத்தில் வேறு ஏதேனும் பகுதியைப் பயன்படுத்துவதை நாடுங்கள்.

5 நிமிட கோட்பாட்டுப் போதனை - "தேவன் பொறுமையுள்ளவராக இருக்கிறார்".

பாடம் 11

தலைப்பு	வீட்டில் யோசேப்பு (ஆதியாகமம் 37)
மையச் சத்தியம்	யோசேப்பு செய்ததுபோல உங்கள் வீட்டில் தேவனுக்காக வாழ்வதின்மூலம் அவரைப் பிரியப்படுத்த முடியும்.
இரட்சிக்கப்பட்ட பிள்ளைக்குரிய செயல்படுத்துதல்	கிறிஸ்தவ சாட்சியும் வாழ்க்கையும் உங்கள் சொந்த வீட்டிலும் குடும்பத்திலும் துவங்குகிறது. அங்கே நீங்கள் தேவனைப் பிரியப்படுத்துகிறீர்களா?

இரட்சிக்கப்படாத பிள்ளைக்குரிய செயல்படுத்துதல் — நீங்கள் உங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியாமல் இருக்கிறீர்களா? அது பாவமாகும். ஏனென்றால் அது தேவனுடைய கட்டளைகளை மீறுகிறது. ஆனால் இயேசு கிறிஸ்துவை நீங்கள் விசுவாசிப்பீர்களானால் உங்கள் அனைத்துப் பாவத்தையும் (இந்தப் பாவம் உட்பட) அவர் மன்னிப்பார்.

5 நிமிட கோட்பாட்டுப் போதனை - "தேவன் எங்கும் இருக்கிறார்".

பாடம் 12

தலைப்பு — எகிப்தில் யோசேப்பு (ஆதியாகமம் 39)

மையச் சத்தியம் — யோசேப்பைப்போல வீட்டைவிட்டு வெளியே இருக்கும்போதும் தேவனுக்காக வாழ்வதின்மூலம் நீங்கள் அவரைப் பிரியப்படுத்த முடியும்.

இரட்சிக்கப்படாத பிள்ளைக்குரிய செயல்படுத்துதல் — நீங்கள் தவறான செயல்களைச் செய்யும்போது, அதை ஒருவரும் பார்க்கவில்லை என்று நினைத்துக் கொள்கிறீர்கள் - ஆனால் தேவன் உங்களைப் பார்க்கிறார் என்பதை மறந்துவிடாதீர்கள். உங்களுக்கு அவருடைய மன்னிப்பு தேவைப்படுகிறது.

இரட்சிக்கப்பட்ட பிள்ளைக்குரிய செயல்படுத்துதல் — நீங்கள் அறிந்த எவரும் (அப்பா அல்லது அம்மா) உங்களைப் பார்க்காதபோதும், நீங்கள் தேவனைப் பிரியப்படுத்துவதை நாடுகிறீர்களா?

5 நிமிட கோட்பாட்டுப் போதனை - "தேவன் சகலத்தையும் அறிகிறவர்".

பாடம் 13

தலைப்பு — சிறைச்சாலையில் யோசேப்பு (ஆதியாகமம் 40; 41:1-36)

மையச் சத்தியம் — யோசேப்பு செய்ததுபோல, எல்லாம் உங்களுக்கு விரோதமாக இருப்பதுபோலத் தோன்றும்போதும் கூட நீங்கள் தேவனைப் பிரியப்படுத்த முடியும்.

இரட்சிக்கப்பட்ட பிள்ளைக்குரிய செயல்படுத்துதல் — காரியங்கள் தவறாகிப் போகும்போதும்கூட நீங்கள் தேவனுக்காக வாழ்ந்து, அவருடைய ஞானத்தில் நம்பிக்கை வைத்திருக்க வேண்டும். இவைகளின் மூலமாக நீங்கள் கற்றுக்கொள்ளும்படியாகவே அவர் இவை தவறாகிப் போகும்படி அனுமதித்திருக்கிறார் என்பதை மறந்துவிடாதீர்கள்.

பாடத்திட்டத்தின் மற்றொரு பகுதியில் இரட்சிக்கப்படாத பிள்ளைகளுக்குக் குவிசேஷ சத்தியத்தை (சத்தியங்களை) போதியுங்கள்.

5 நிமிட கோட்பாட்டுப் போதனை - "தேவன் ஞானமுள்ளவராக இருக்கிறார்".

பாடம் 14

தலைப்பு யோசேப்பு-எகிப்தின் பிரதான மந்திரி (ஆதியாகமம் 41:37-57; 42).)

மையச் சத்தியம் யோசேப்பு செய்ததுபோல, அனைத்தும் நலமாக நடக்கும் போதும் தேவனுக்காக வாழ்வதின்மூலம் நீங்கள் தேவனைப் பிரியப்படுத்த முடியும், இந்த நல்ல காரியங்கள் தேவனிட மிருந்து வருகின்றன.

இரட்சிக்கப்பட்ட பிள்ளைக்குரிய செயல்படுத்துதல் எல்லாம் நலமாக நடக்கும்போதும் தேவனையும் அவர் உங்களுக்குச் செய்துள்ள அனைத்தையும் மறந்துவிடாதீர்கள்.

பாடத்திட்டத்தின் மற்றொரு பகுதியில் இரட்சிக்கப்படாத பிள்ளைகளுக்குச் சுவிசேஷ சத்தியத்தை (சத்தியங்களை) போதியுங்கள்.

5 நிமிட கோட்பாட்டுப் போதனை - “தேவன் ராஜரீகமுள்ளவராக இருக்கிறார்”.

பாடம் 15

தலைப்பு யோசேப்பு தனது சகோதரர்களை மன்னிக்கிறான் (ஆதியாகமம் 43, 44, 45)

மையச் சத்தியம் யோசேப்பு செய்ததுபோல உங்களுக்கு விரோதமாகப் பாவம் செய்கிறவர்களை மன்னிப்பதின்மூலம் தேவனைப் பிரியப் படுத்த முடியும்.

இரட்சிக்கப்படாத பிள்ளைக்குரிய செயல்படுத்துதல் நீங்கள் உங்கள் பாவத்துக்காக மெய்யாகவே மனஸ்தாபப் பட்டு, அதிலிருந்து திரும்ப விரும்பி, இயேசுகிறிஸ்துவை உங்கள் ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொள்வீர் களானால் தேவன் உங்கள் பாவங்களை மன்னிப்பார்.

இரட்சிக்கப்பட்ட பிள்ளைக்குரிய செயல்படுத்துதல் தேவன் கிறிஸ்துவில் உங்களை மன்னித்ததுபோல, நீங்கள் மற்றவர்களை மன்னிக்கிறீர்களா?

5 நிமிட கோட்பாட்டுப் போதனை - “தேவன் இரக்கமுள்ளவராக இருக்கிறார்”.

தொடர் 4

“ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து” என்ற தொடர்பாடத்தின் முதல் பாகத்தில் குறிப் பிட்டுள்ளபடி ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைக் குறித்த ஐந்து பாடங்கள்.

பாடம் 1 அவர் தேவனாக இருக்கிறார்.
பாடம் 2 அவர் பரிபூரண மனிதராக இருக்கிறார்.
பாடம் 3 அவர் நமது தீர்க்கதரிசியாக / ஆசிரியராக இருக்கிறார்.

பாடம் 4 அவர் நமது ஆசாரியராக இருக்கிறார்.
பாடம் 5 அவர் நமது ராஜாவாக இருக்கிறார்.

தொடர் 5

"வேதாகமம்" என்ற தொடர்பாடத்தின் இரண்டாம் பகுதியில் குறிப்பிட்டுள்ளபடி வேதாகமம் பற்றிய ஐந்து பாடங்கள்.

பாடம் 1 ஒரே தேவன் மற்றும் ஒரே வேதாகமம்
பாடம் 2 வேதாகமத்தில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன
பாடம் 3 ஒவ்வொரு ஏற்பாடும் மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கிறது
பாடம் 4 நான்கு சுவிசேஷங்கள்
பாடம் 5 மோசேயின் ஐந்து புத்தகங்கள்

தொடர் 6

"ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து" என்ற தொடர்பாடத்தின் இரண்டாவது பாகத்தில் குறிப்பிட்டுள்ளபடி ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தாம் யார் என்று கூறுவது குறித்த ஐந்து பாடங்கள்.

பாடம் 1 *"நானே வாசல்"* - ஆண்டவராகிய இயேசுவும் மரிக்கும் தருவாயி லிருந்த கள்ளனும்
பாடம் 2 *"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்"* - ஆண்டவ ராகிய இயேசுவும் செல்வந்தனான இளம் அதிபதியும்
பாடம் 3 *"ஜீவ அப்பம் நானே"* - ஆண்டவராகிய இயேசுவும் சமாரியப் பெண்ணும்
பாடம் 4 *"நானே திராட்சச் செடி"* - ஆண்டவராகிய இயேசுவும் பேதுருவும்
பாடம் 5 *"நானே நல்ல மேய்ப்பன்"* - ஆண்டவராகிய இயேசுவும் சகேயுவும்
பாடம் 6 *"நானே உலகத்துக்கு ஒளியாயிருக்கிறேன்"* - ஆண்டவராகிய இயேசு வும் பார்வையற்ற மனிதனும்
பாடம் 7 *"நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்"* - ஆண்டவ ராகிய இயேசுவும் மரித்த மூவரும்

ஓராண்டு செயல்திட்டத்தின் சுருக்கம்

தொடர் 1	வேதாகமத்தைப் பற்றி 5 பாடங்கள்
தொடர் 2	இரட்சிப்பின் வழியைப் பற்றி 5 பாடங்கள்
தொடர் 3	ஆதியாகம புத்தகத்தைப் பற்றி 15 பாடங்கள்
தொடர் 4	ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றி 5 பாடங்கள்
தொடர் 5	வேதாகமத்தைப் பற்றி மேலும் 5 பாடங்கள்
தொடர் 6	இயேசுகிறிஸ்து தாம் யார் என்று கூறுவதைப் பற்றி 7 பாடங்கள்.

அத்தியாயம் 19

சிறுவர்களின் கவனத்தைக் கவருதல்
ஒரு வேதாகமக் கதையைக் கூறுவது எப்படி ?

அத்தியாயத்தின் சுருக்கம்

(முதலாவதாக, ஒரு வேதாகமக் கதையை எப்படிக் கூறுவது என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும்).

➤ **எப்படித் துவங்குவது என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்**
- ✓ நேரடியான அணுகுமுறை
- ✓ ஒரு கேள்வி
- ✓ ஒரு கதையின் துடிப்பான பகுதி
- ✓ ஒரு எடுத்துக்காட்டு

➤ **நிகழ்ச்சிகள் முன்னேறிச் செல்லுதல்**

➤ **உச்சக்கட்டம்**

➤ **முடிவு**

➤ **உங்கள் கதைத் திட்டத்தைத் தயாரியுங்கள்**

முந்தைய அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஓராண்டு போதிக்கும் செயல்திட்டத்தில் இரண்டு வகைப்பட்ட வேத பாடங்கள் இருக்கின்றன:

➤ ஒரு கோட்பாடு அல்லது கோட்பாட்டின் அம்சத்தை அடிப்படையாகக் கொண்ட பாடங்கள். இவை நேரடியான போதிக்கும் பாடங்களாகும்; பல மையமான வார்த்தைகளைக் கொண்ட படங்களின் மூலம் பிள்ளைகளின் ஆர்வம் தூண்டப்படுகிறது; போதிக்கப்படுவதைப் புரிந்துகொள்ளுமாறு எடுத்துக்காட்டுகள் கூறப்படுகின்றன. வேதாகமத்தைக் குறித்த முதல் தொடர்பாடத்தில் இப்படிப்பட்ட ஐந்து பாடங்கள் இருக்கின்றன - ஒவ்வொன்றிற்கும் உதவியாக எட்டு பட அட்டைகள் இருக்கின்றன.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றிய நான்காவது தொடர்பாடத்தில் இப்படிப்பட்ட ஐந்து பாடங்கள் இருக்கின்றன - ஒவ்வொன்றிற்கும் உதவியாக எட்டு பட அட்டைகள் இருக்கின்றன.

இரண்டாவது மற்றும் ஐந்தாவது தொடர்பாடத்தில் ஒவ்வொன்றிலும் இப்படிப்பட்ட ஐந்து பாடங்கள் இருக்கின்றன. ஆறாவது தொடர்பாடத்தில் இப்படிப்பட்ட ஏழு பாடங்கள் இருக்கின்றன. இந்தப் பாடங்கள் அனைத்துக்கும் இரண்டிரண்டு பட அட்டைகள் இருக்கின்றன. விவரமான போதனைக் குறிப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளுக்கு ஏற்ப நீங்கள் இந்த ஒவ்வொரு பாடத்தையும் போதிக்க வேண்டும்.

இந்தப் பாடங்கள் பலவற்றில் வேதாகம உண்மைக்கதைகளும் உள்ளன.

- வேதாகமக் கதையின் அடிப்படையிலான பாடங்கள்.

இந்தப் போதிக்கும் செயல்திட்டத்திலுள்ள மூன்றாவது தொடர் பாடத்தில் இத்தகைய 15 பாடங்கள் உள்ளன - இவையனைத்துமே ஆதியாகம புத்தகத்திலுள்ள ஒரு உண்மைக்கதை அல்லது பகுதியை அடிப்படையாகக் கொண்டவை. இதோடுகூடப் பல கோட்பாட்டுப் பாடங்களிலும்கூட வேதாகமக் கதைகள் சேர்க்கையாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

சிறுவருக்குப் போதிக்கும் ஊழியத்தில் இத்தகைய பாடங்களே பொதுவாகப் போதிக்கப்படுகின்றன. எனவே இந்த அத்தியாயத்திலும் அடுத்த அத்தியாயத்திலும் இதைப் பற்றி நாம் விவரமாகப் பார்ப்போம்.

இந்தக் குறிப்புகள் மேலே முதல் பிரிவில் கூறப்பட்ட கோட்பாட்டுப் பாடங்களைப் போதிப்பதிலும்கூட உதவியாக இருக்கும்.

ஒரு வேதபாடத்தை எவ்வாறு போதிப்பது என்று கற்றுக்கொள்வதற்கு முதல்படி ஒரு வேதாகமக் கதையை எவ்வாறு சொல்லுவது என்று கற்றுக்கொள்ளுவதாகும். கதைகேட்பது பிள்ளைகளுக்கு அதிக விருப்பமான ஒன்றாகும். சுவையாகக் கூறப்படும் கதை எப்போதுமே அவர்களுடைய கவனத்தை ஈர்க்கும். ஆனால் பின்னர் நாம் பார்க்கப்போகிறபடி, ஒரு வேதபாடத்துக்கும் வேதாகமக் கதைக்கும் உள்ள வேறுபாட்டை நாம் அறிந்துகொள்ள வேண்டும். வேதாகமக் கதை நிகழ்ச்சிகளையும் செயல்களையும் விவரிக்கிறது; வேதபாடமோ சத்தியத்தைப் போதிக்கிறது. ஆனால் ஒரு வேதபாடம் பொதுவாக ஒரு வேதாகமக் கதையின் அடிப்படையில் அமைந்திருக்கிறபடியால், முதலில் நாம் ஒரு வேதாகமக் கதையை எவ்வாறு கூறுவது என்று அறிந்திருக்க வேண்டும். பிறகு சத்தியத்தை அதில் உள்ளடக்கி, ஒரு வேதாகமக்கதையை எப்படி ஒரு வேதபாடமாக மாற்றுவது என்பதையும் அறிந்திருக்க வேண்டும் (இதைக் குறித்து நாம் பின்னால் பார்ப்போம்).

ஒரு வேதாகமக் கதை துவக்கம், நிகழ்ச்சிகளின் முன்னேற்றம், உச்சக்கட்டம், முடிவு இவைகளைக் கொண்ட வடிவமைப்பைப் பெற்றிருக்க வேண்டும்.

துவக்கம்

கதையைச் சிறப்பாகச் சொல்லத் துவங்குவது முக்கியமாகும். "சிறப்பாகத் துவங்கப்பட்ட வேலை பாதி செய்துமுடிக்கப்பட்டதாகும்". இந்த இடத்தில்தான் பிள்ளைகளின் ஆர்வத்தைத் தூண்டி அவர்களுடைய கவனத்தை ஈர்க்க வேண்டும். இதைச் செய்யாவிட்டால் இந்த இடத்திலேயே அவர்களுடைய கவனத்தை இழந்துவிடுவோம். பிள்ளைகளின் கவனத்தை ஈர்க்காவிட்டால் உங்களால் அவர்களுக்கு எதையும் போதிக்க முடியாது. எனவே பிள்ளைகளுக்கு அனுபவமான ஒரு

காரியத்தோடு துவங்குங்கள்; அதில் அவர்கள் தங்களை இனம்கண்டுகொள்ள வேண்டும்; இது அவர்களுடைய கவனத்தை ஈர்க்கும்.

துவக்கத்துக்கும் பின்னால் வருபவைகளுக்கும் தெளிவான பிணைப்பு காணப்பட வேண்டும். ஆர்வத்தைத் தூண்டும் அற்புதமான ஒரு முன்னுரையைக் கூறிவிட்டு சம்பந்தமில்லாத கதையைக் கூறுவதில் அர்த்தமில்லை. பிள்ளைகளின் கவனத்தை ஈர்ப்பதில் நீங்கள் முதலில் வெற்றிபெற்றாலும் உடன்தானே அதை இழந்துவிடு வீர்கள்! துவக்கம் கதையின் எஞ்சிய பகுதிக்கு ஒரு படிக்கல்லாக இருக்க வேண்டும். துவக்கம் சுருக்கமாகவும் இருக்க வேண்டும். கதையீன் முக்கிய பகுதி பின்னால்தான் வருகிறது என்பதை மறந்துவிடாதீர்கள்!

துவக்கத்திலேயே கதையின் இரகசியத்தைச் சொல்லிவிடாதபடி எச்சரிக்கையாக இருங்கள்:

"யோனா என்ற ஒருவரை ஒரு பெரிய மீன் விழுங்கிவிட்டது தெரியுமா? இன்றைக்கு நாம் அவருடைய கதையைத்தான் பார்க்கப் போகிறோம்!" பதினான்கே வார்த்தைகளில் கதை சொல்லப்பட்டுவிட்டது ! இப்படிப்பட்ட முன்னுரைகளைத் தவிருங்கள்: *"நன்றாக உட்காருங்கள், கைகளைக் கட்டிக்கொள்ளுங்கள். நான் ஒரு கதை கூறப் போகிறேன்,"* அல்லது *"ஏற்கெனவே நீங்கள் இந்தக் கதையைக் கேள்விப்பட்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன்".* அல்லது *"இன்று நாம் மனந்திரும்புதலின் அவசியத்தைப் பற்றிப் பார்க்கப்போகிறோம்."* நீங்கள் இதைத்தான் போதிக்கப் போகிறீர்கள் என்றாலும் நீங்கள் முதலில் பிள்ளைகளின் கவனத்தை ஈர்க்க வேண்டும். "யோனாவைப் பற்றிய கதையை நீங்கள் கேள்விப்பட்டீர்களா?" என்று நீங்கள் கேட்டாலும் யாராவது "ஆமாம்" என்று கூறி விட்டால் பிரச்சினையாகிவிடும்!

ஒரு கதையைத் துவக்குவதற்கு நான்கு முக்கிய வழிகள் இருக்கின்றன; ஆனால் வேறு வழிகளையும் நீங்கள் கண்டுபிடித்தால் அதைப் பயன்படுத்தத் தயங்காதிருங்கள். எடுத்துக்காட்டாக, நாபோத்தின் திராட்சத்தோட்டத்தைக் குறித்த கதையை (1 இராஜாக்கள் அதி. 21 .) நீங்கள் கீழ்க்கண்ட ஏதேனும் ஒரு வழியில் துவக்கலாம்:

நேரடியான அணுகுமுறை

கதையில் வரும் செயலோடு நீங்கள் கதையைத் துவக்கலாம். பிள்ளைகளின் கவனத்தைக் கவரக்கூடிய வகையில் பல வாக்கியங்களை நினைத்துப் பாருங்கள்.

"ராஜாவின் கோடை மாளிகைக்குப் பின்புறம் அந்தத் திராட்சத் தோட்டம் இருந்தது. அதைத்தான் அவன் பெற விரும்பினான். ராஜா யோசித்தான், யோசித்தான். ஆனால் அது பெரிய பிரச்சினையாக இருந்தது. ஏன் தெரியுமா? அந்தத் திராட்சத் தோட்டம் அவனுக்குச் சொந்தமானது அல்ல!"

நன்றாக அறியப்பட்ட கதையை நீங்கள் கூறுவீர்களானால் துவக்கத்திலேயே முக்கிய கதாபாத்திரங்களின் பெயர்களைச் சொல்லிவிடாதீர்கள். அப்படிச் செய்தால்

எனக்கு இந்தக் கதை தெரியுமே!" "பள்ளியில் அந்தக் கதையைச் சொன்னார்கள், ஆனால் நன்றாக இல்லை!" போன்ற வார்த்தைகளைக் கேட்க வேண்டியிருக்கும்!

கேள்வி

கதையின் துவக்கத்தோடு தொடர்புடைய ஒரு கேள்வியை நீங்கள் கேட்கலாம். அல்லது நீங்கள் வேதபாடத்தைப் போதிப்பீர்களானால், போதிக்கும் சத்தியத்தோடு தொடர்புடைய கேள்வியைக் கேட்கலாம்.

நீங்கள் எதையாவது வைத்திருக்கும்படி ஆசைப்படுகிறீர்களா? (பிள்ளைகளின் பதிலுக்குச் செவிகொடுங்கள்). *ஆகாப் அரசனும் கூட ஒன்றைப் பெறுவதற்கு ரொம்ப ரொம்ப ஆசைப்பட்டான்!"*

நீங்கள் ஒரு சிறிய குழுவினரான பிள்ளைகளுக்குப் போதிப்பீர்களானால், அவர்கள் ஈடுபாட்டைப் பெறுமாறு செய்வதற்கு இது சிறந்த வழியாகும். பிள்ளைகளை அப்படியே விட்டால் நீண்ட நேரம் பதிலளித்துக்கொண்டிருப்பார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள். நேரத்தை வீணாக்கிவிடாதபடி கேள்விகளையும் பதில்களையும் கட்டுப்படுத்துங்கள்.

கதையின் சுவாரசியமான ஒரு பகுதி

இந்த ஃபிளாஷ் பேக் முறையில், நீங்கள் கதையின் சுவாரசியமான ஒரு பகுதியில் துவங்கி, பிறகு அது எவ்வாறு நேரிட்டது என்பதை விளக்கும்படி துவக்கத்துக்குச் செல்கிறீர்கள்.

அவரிடம் எல்லாம் இருந்தன. பெரிய அரண்மனை, அதிகமான செல்வம், நிறைய வேலைக்காரர்கள், சுவையான உணவு ... அவரே அந்த நாட்டின் ராஜா! அவர் சந்தோஷமாக இருப்பார் என்று தானே நீங்கள் நினைக்கிறீர்கள்? ஆனால் அவரைப் பாருங்கள்! முகத்தைச் சோகமாக வைத்துக்கொண்டிருக்கிறார்! என்ன தான் நடந்தது என்று பார்ப்போமா?"

ஒரு வேதபாடத்தை நீங்கள் நடத்துவீர்களானால், நீங்கள் அந்தப் பாடத்தில் போதிக்கும் சத்தியத்தோடு தொடர்புடைய ஒரு எடுத்துக்காட்டுக் கதையை நீங்கள் கூறலாம்.

என் ஒருவருமே நியாயமாக நடந்துகொள்வதில்லை?' என்று முணுமுணுத்த செல்வம் தெருவில் கிடந்த ஒரு கல்லை எட்டி உதைத்தான். அது வெள்ளிக்கிழமை மாலை நேரம். அந்த வாரம் முழுவதும் அவன் பள்ளி முடிந்தபின்வரும்கூட வகுப்பிலேயே இருக்க வேண்டியிருந்தது. அவன் வகுப்பில் யாரோ சில பையன்கள் கார்களின் மீது கல்லெறிந்ததற்கு இவனுக்கும் தண்டனை கிடைத்துவிட்டது ! அவனும் அங்கே இருந்தாலும் அவன் கல்லெறியவில்லை. உண்மையில் கடைக்குச் சென்றிருந்த நண்பனுக்காக அவன் காத்துக்கொண்டிருந்தான்.

இந்தக் கதையையெல்லாம் என்னை நம்பச் சொல்லுகிறாயா?' என்று டீச்சர் கேட்டார்கள். அவன் எடுத்துக் கூறியபோதும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. 'ஏன் ஒருவருமே நியாயமாக நடந்துகொள்வதில்லை?' என்று செல்வம் கேட்டதில்

வியப்பில்லை அல்லவா? ஆசிரியர்களும், அப்பாவும், அம்மாவும் இப்படிப்பட்ட தவறுகளைச் செய்யலாம். ஆனால் தேவன் ஒருபோதும் இத்தகைய தவறைச் செய்வதில்லை. தேவன் நீதிபரர், நியாயமுள்ளவர் என்று வேதாகமம் கூறுகிறது."

நிகழ்ச்சிகளின் தொடர்ந்த முன்னேற்றம்

இதுவே கதையின் முக்கிய பகுதியாகும். இது தொடர்பில்லாத நிகழ்ச்சிகளின் பட்டியல் அல்ல. இது தொடராக நடைபெறும் நிகழ்ச்சிகளாகும். கதையின் மையமான நூலில் இது தொடராகக் கோர்க்கப்பட்டுள்ளது.

ஒரு நிகழ்ச்சி மற்றொரு நிகழ்ச்சிக்கு இட்டுச் செல்லுகிறது; கதை முன்னோக்கிச் செல்லுகிறது. கதைக்குப் பொருத்தமில்லாத நிகழ்ச்சிகளை உள்ளடக்கி கதையைத் திசைதிருப்பிவிடாதீர்கள். நீளமான விவரங்களையும் தவிர்த்துவிடுங்கள். ஒவ்வொரு நிகழ்ச்சியையும் சுருக்கமாகத் தெரிவிக்கும் சொற்றொடர்களைப் பயன் படுத்தி, கதையின் முன்னேற்றத்தை முதலிலேயே குறித்துவைத்துக்கொள்ள வேண்டும்.

நாபோத்தின் திராட்சத்தோட்டம் குறித்த உண்மைக்கதையில் நிகழ்ச்சிகளின் தொடர்ந்த முன்னேற்றத்தை இவ்வாறு சுருக்கமாகக் குறிக்கலாம்:

1. *ஆகாப் நாபோத்தின் திராட்சத் தோட்டத்தின்மீது ஆசைப்படுகிறான்.*
2. *ஆகாப் நாபோத்திடம் அதைக் கேட்கிறான்.*
3. *விற்கவோ அல்லது வேறு இடத்தைப் பெற்றுக்கொள்ளவோ நாபோத் மறுக் கிறான்.*
4. *ஆகாப் மனமுறிவடைகிறான்.*
5. *யேசபேல் குறுக்கிடுகிறாள்.*
6. *யேசபேல் கடிதங்களை எழுதுகிறாள்.*
7. *நாபோத் கொல்லப்படுகிறான்*
8. *ஆகாப் திராட்சத்தோட்டத்தை எடுத்துக்கொள்கிறான்.*
9. *எலியா அவனைச் சந்திக்கிறான்.*

கதைக் கருவைத் தெளிவாக எடுத்துச் சொல்ல இந்த நிகழ்ச்சிகளின் பட்டியல் உங்களுக்கு உதவும். கதையில் இவ்வாறு தெளிவான வளர்ச்சி காணப்பட வேண் டும். ஒவ்வொரு நிகழ்ச்சியும் அடுத்த நிகழ்ச்சிக்குக் கதையை எடுத்துச் சென்று உச்சக்கட்டத்தை நெருங்க வேண்டும்.

உச்சக்கட்டம்

இது கதையின் உச்சமான கட்டமாகும்; மற்ற நிகழ்ச்சிகள் இதற்கு இட்டுச் செல்லு கின்றன. இங்கேதான் கதாநாயகன் வெற்றி பெறுகிறான், பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுகிறது அல்லது புதிர் விடுபடுகிறது. பிள்ளைகளின் ஆர்வம் இப்போது உச்சக்கட்டத்தில் இருக்கிறது. கதையின் முடிச்சுகள் கட்டவிழ்க்கப்படும்போது, அவர்களின் ஆர்வத்தையும், எதிர்பார்ப்பையும் நீங்கள் திருப்திப்படுத்துகிறீர்கள். நாபோத்தின் திராட்சத்தோட்ட உண்மைக்கதையின் உச்சக்கட்டம்: எலியா

கர்த்தரிடமிருந்து எச்சரிப்பைக் கொண்டுவருதல்: *"நாபோத் மரித்த இடத்தில் நீயும் மரித்துப் போவாய்!"*

உச்சக்கட்டம் மெய்யாகவே கிளர்ச்சியைத் தூண்டும்படி செய்யுங்கள். சில கதைகளில் உச்சக்கட்டத்துக்கான சாதகமான நிலைகள் பல வரலாம். நீங்கள் போதிக்கும் சத்தியத்தை எது மிகவும் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது என்பதைக் கண்டுபிடித்து அதைத் தெரிந்துகொள்ளுங்கள். அது கதையின் செயலோட்டத்தையும் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். உச்சக்கட்டம் கதையின் முடிவுக்குச் சமீபமாக இருக்க வேண்டும், அல்லது அது எதிர்மறை உச்சக்கட்டமாகிவிடும்! சில வேளைகளில் உச்சக்கட்டத்தைக் கண்டுபிடிப்பது உங்களுக்குச் சிரமமாக இருக்கலாம். உங்களால் அதைக் கண்டுபிடிக்க முடியாவிட்டால், முக்கிய நிகழ்ச்சிகள் முன்னேறிச் செல்லுகின்றனவா என்பதைப் பார்த்துக்கொள்ளுங்கள்; முடிவுவரையிலும் கதையில் செயலோட்டம் காணப்பட வேண்டும்.

முடிவுரை

இது உச்சக்கட்டத்தைத் தொடர்ந்து உடனடியாக வர வேண்டும். சில வேளைகளில் ஆசிரியர்கள் கதையைச் சொல்லிமுடித்த பின்னரும் நிறுத்தத் தெரியாமல் தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பார்கள். இது நல்ல கதையையும் கெடுத்துவிடும். எனவே கதையை எப்படி முடிக்கப் போகிறீர்கள் என்பதைக் குறித்துக் கவனமாகச் சிந்திக்க வேண்டும். முடிவுரை சுருக்கமாக இருக்க வேண்டும். ஒரு சில வாக்கியங்களில் கதையோட்டத்தை முடித்துவையுங்கள். (ஒரு பாடத்தைப் போதிக்கும்போது, நீங்கள் போதித்த சத்தியத்தின் அடிப்படையில் தேவனை நோக்கிச் செயல்படும்படி பிள்ளைகளை வலியுறுத்துங்கள்). இந்தக் கட்டத்தில் புதிதாக எதையும் அறிமுகம் செய்யக் கூடாது. நாபோத்தின் திராட்சத்தோட்டம் குறித்த உண்மைக் கதையின் முடிவுரை இப்படியிருக்கலாம்:

"ஆகாபுக்கும் யேசபேலுக்கும் என்ன நேரிட்டது? ஆகாப் ஒரு போருக்குச் சென்றான். தான் அரசன் என்பதை எதிரி அறிந்துவிடக் கூடாது என்பதற்காக அவன் மாறுவேடம் போட்டுக்கொண்டு போனான். ஆனால் எதிர்பாராதவிதமாக ஒரு அம்பு அவன்மீது பாய்ந்துவிட்டது. அவன் கொல்லப்பட்டான். இது நடந்து சிறிது காலத்துக்குப் பிறகு யேசபேல் ஒரு உயர்ந்த சன்னலிலிருந்து அவளுடைய எதிரிகளால் கீழே தள்ளப்பட்டு, கொல்லப்பட்டாள். எனவே தேவன் கூறியபடியே அவர்களுக்கு நடந்துவிட்டது! இப்போது நாபோத்தின் தோட்டத்தினால் அவர்களுக்கு என்ன பயன்?"

I. துவக்கம்

"யாருமே நியாயமாக நடந்துகொள்வதில்லையா?" என்று செல்வம் முணுமுணுத்தான்.

II. நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியான முன்னேற்றம்.

1. ஆகாப் நாபோத்தின் திராட்சத் தோட்டத்தின்மீது ஆசைப்படுகிறான்
2. ஆகாப் நாபோத்திடம் அதைக் கேட்கிறான்.
3. விற்கவோ அல்லது வேறு இடத்தைப் பெற்றுக்கொள்ளவோ நாபோத் மறுக்கிறான்
4. ஆகாப் மனமுறிவடைகிறான்.
5. யேசபேல் குறுக்கிடுகிறாள்.
6. யேசபேல் கடிதங்களை எழுதுகிறாள்.
7. நாபோத் கொல்லப்படுகிறான்.
8. ஆகாப் திராட்சத்தோட்டத்தை எடுத்துக்கொள்கிறான்.
9. எலியா அவனைச் சந்திக்கிறான்.

III. உச்சக்கட்டம்

எலியா கர்த்தரிடமிருந்து எச்சரிப்பைக் கொண்டுவருதல்: 'நாபோத் மரித்த இடத்தில் நீயும் மரித்துப் போவாய்!'

IV. முடிவுரை

1. ஆகாபின் மரணம்
2. யேசபேலின் மரணம்

அத்தியாயம் 20

விதிகளைப் பின்பற்றுங்கள்

நான் எப்படி ஒரு சிறந்த ஆசிரியராக முடியும் ?

அத்தியாயத்தின் சுருக்கம்

(போதிப்பது குறித்த கொள்கைகளை நீங்கள் புரிந்துகொண்டு அவைகளைப் பின்பற்ற வேண்டும்)

- வெறுமனே பேசாமல், போதியுங்கள்
- எளிமையாகப் போதியுங்கள்
- அளவுக்கு அதிகமாகப் போதிக்க முயலாதீர்கள்
- எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்துங்கள்
- மறுபடியும் மறுபடியுமாகக் கூறுவது அத்தியாவசியமாகும்
- செயல்படுத்துதலை மறவாதீர்கள்.

ஒரு வேதபாடத்தை எவ்வாறு போதிப்பது என்பதை விவரமாகக் காண்பதற்கு முன்பாக போதிப்பது என்றால் என்ன என்பதை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

போதிப்பது குறித்துப் பல கொள்கைகள் இருக்கின்றன. இந்தக் கொள்கைகளைப் புரிந்துகொண்டு செயல்படுத்தும் ஆசிரியரே சிறப்பான ஆசிரியராக இருக்க முடியும்.

இந்த அத்தியாயத்தில் போதிப்பது குறித்த முக்கியமானதும் அடிப்படையானதுமான ஆறு கொள்கைகளை உங்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். இந்தக் கொள்கைகளை நீங்கள் பின்பற்றினால், உங்கள் வேதபாடத்தில் தேவனுடைய வார்த்தையைச் சிறப்பாகப் போதிக்க முடியும்.

போதியுங்கள் - வெறுமனே பேசாதீர்கள்

விளக்கிக்கூறுதல் குறித்த கொள்கை நாம் வெறுமனே பேசிக் கொண்டிராமல் போதிக்கும்படி நம்மை ஊக்குவிக்கிறது.

சிறப்பாகப் போதிக்க வேண்டுமானால், போதிக்கப்படும் சத்தியத்தை (சத்தியங்களை) கவனமாகவும் முழுமையாகவும் தெளிவுபடுத்தி விளக்க வேண்டும்.

ஒரு ஆசிரியர் கற்றுக்கொள்ள வேண்டிய கொள்கைகளில் முதன்மையானது அவர் போதிக்க வேண்டும். வெறுமனே பேசிக்கொண்டிருப்பது அல்ல, போதிப்பதே அவருடைய முதல் பொறுப்பாகும். அடிக்கடி நாம் பலவற்றைச் சிறுவர்களிடம் கூறுகிறோம்; நாம் கூறியதின் அடிப்படையில் அவர்கள் அவைகளைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். ஆனால் இது போதிப்பது அல்ல.

வழக்கமாக உங்கள் பாடம் ஒரு வேதாகமக் கதையை அடிப்படையாகக் கொண்டிருக்கும். வேதாகமத்திலிருந்து நீங்கள் அதை ஆர்வத்தைத் தூண்டும் வகையில் கதையாக எடுத்துக் கூறுவீர்கள். ஆனால் அந்தக் கதை பிள்ளைகளுக்குச் சத்தியத்தைப் போதிப்பதற்கு ஒரு கருவியாக மட்டுமே இருக்கிறது.

வெறுமனே கதையைக் கூறுவது போதுமானது அல்ல. அந்தக் கதையில் எடுத்துக் காட்டப்படும் சத்தியத்தைப் போதிப்பதே உங்கள் நோக்கமாகும்.

என்றாலும், கதையைக் கூறும்போது ஓரிரண்டு முறை சத்தியத்தை அப்படியே எடுத்துக்கூறுவதும் போதுமானது அல்ல. கதை கூறி முடிக்கப்படும் வரையில் அந்தச் சத்தியத்தைப் "போதிப்பதைத்" தள்ளிப்போடுவதும் நல்லது அல்ல.

அதற்குப் பதிலாக, கதை முழுவதிலும் ஆங்காங்கே நீங்கள் உங்கள் சத்தியத்தைப் பின்னிப் பிணைத்துக் கொடுக்க வேண்டும். சத்தியத்தை ஒவ்வொரு முறை அறிமுகம்செய்யும்போதும் அந்தச் சத்தியத்தின் மற்றொரு அம்சத்தை விளக்க அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதாவது, கதை கூறும்போதே இடையிடையே நீங்கள் சத்தியத்தை விளக்க வேண்டும். ஒவ்வொரு அறிமுகமும் இயல்பானதாகவும், கதையோடு பிணைக்கப்பட்டதாகவும் இருக்க வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு முறை சத்தியத்தை நீங்கள் அறிமுகம் செய்யும்போது அது மேலும்

ஒரு படி முன்னால் கொண்டுசெல்லப்பட வேண்டும். இவ்வாறு கதை முடிவதற்குள் சத்தியம் முழுமையாக விளக்கப்பட்டிருக்க வேண்டும்.

உங்கள் வார்த்தைகளைக் கவனியுங்கள்

எளிமை குறித்த கொள்கையின்படி நாம் கூறும் வார்த்தைகளைக் குறித்து நாம் கவனமாக இருக்க வேண்டும்

சிறப்பாகப் போதிக்க வேண்டுமானால், பயன்படுத்தப்படும் வார்த்தைகளும் போதிக்கப்படும் கருத்துப்படிவங்களும் கேட்பவர்கள் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் எளிமையாக இருக்க வேண்டும்.

பிள்ளைகளுக்கு அறிமுகமில்லாத வார்த்தைகளையும், கருத்துப்படிவங்களையும், சாயல்களையும் பயன்படுத்துவதே பெரும்பாலும் ஆசிரியர்கள் செய்யும் தவறாகும். பயன்படுத்தப்படும் வார்த்தைகளைப் பொருத்தவரையில் இது உண்மையாக இருக்கிறது. அடிக்கடி நாம் பிள்ளைகளுக்கு அறிமுகமில்லாத பெரிய வார்த்தைகளைப் பயன்படுத்துகிறோம். மேலும், நம்மால் முழுமையாகப் புரிந்துகொள்ளக் கூடிய, ஆனால் அவர்களால் புரிந்துகொள்ள முடியாத இறையியல் சொற்களையும் (கருத்துப் படிவங்களையும்) பயன்படுத்துகிறோம். (சில வேளைகளில் நாமும்கூட அவைகளை முழுமையாகப் புரிந்துகொள்வதில்லை).

போதிப்பது கருத்தைத் தெரிவிக்கும் கலையாகும். ஆசிரியர் தனது அறிவில் ஒரு சத்தியத்தையோ அல்லது கருத்துப்படிவத்தையோ கொண்டிருக்கிறார்; அதைச் சிறுவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகிறார். ஆனால் அப்படிச் செய்வதற்கு அவர் பிள்ளைகள் புரிந்துகொள்ளும் மொழியையும் கருத்துப்படிவங்களையுமே பயன்படுத்த வேண்டும்.

- இதற்காகக் "குழந்தை மொழியில்" பேச வேண்டுமென்றோ, அவர்களின் பேச்சு வழக்குக்கு இறங்கிவர வேண்டுமென்றோ அர்த்தமில்லை. அவர்களும் இதை விரும்புவதில்லை. ஆனால் எளிமையாகவும் புரிந்துகொள்ளக் கூடியவகையிலும் பேச வேண்டும்.
- ஆனால் நாம் நீளமான வார்த்தைகளையோ அல்லது இறையியல் வார்த்தைகளையோ ஒருபோதும் பயன்படுத்தக் கூடாது என்று அர்த்தமில்லை. இடையிடையே அப்படிச் செய்வது நன்மையாகும்; ஆனால் அதைச் சரியாக விளக்க வேண்டும். இதன் மூலம் நாம் பிள்ளையின் அறிவும் சொல்வளமும் விருத்தியாக்கப்பட உதவுகிறோம்.

அளவுக்கு அதிகமாகப் போதிக்க முயலாதீர்கள்

கவனம்செலுத்துதல் குறித்த கொள்கை நாம் அளவுக்கு அதிகமாகப் போதிக்கக் கூடாது என்று வலியுறுத்துகிறது.

சிறப்பாகப் போதிக்க வேண்டுமானால், குறைவாகப் போதித்து ஆனால் அதை முழுமையாகப் போதிப்பதை ஆசிரியர் தனது இலக்காகக் கொள்ள வேண்டும்.

வேதபாடத்தைப் போதிக்க உங்களுக்கு இருபது நிமிடங்களே இருக்குமானால்

அளவுக்கு அதிகமாகப் போதிக்க நீங்கள் முயலக் கூடாது. நாம் அதிகமாக அறிந்திருப்பதாலும், பிள்ளைகள் குறைவாகவே அறிந்திருப்பதாலும், இருபது நிமிடங்களுக்குள் கூடுமானவரையில் அதிகமாகத் திணிக்க நாம் முயலுகிறோம். ஆனால் இரண்டு பிரச்சினைகள் - அதாவது, இரண்டு கட்டுப்பாட்டு எல்லைகள் இருக்கின்றன:

- நாம் எவ்வளவு போதிக்க முடியும் என்பதில் கட்டுப்பாட்டு எல்லை காணப்படுகிறது. வெறுமனே நாம் ஒன்றைக் கூறுவதைவிட, ஒன்றைப் போதித்து விளக்குவதற்கு அதிகமான நேரம் தேவைப்படுகிறது. இருபது நிமிடங்களில் இவ்வாறு நாம் அதிகமான சத்தியங்களைப் போதிக்க முடியாது.
- பிள்ளைகள் புரிந்து கற்றுக்கொள்வதிலும் கட்டுப்பாட்டு எல்லை காணப்படுகிறது. அவர்கள் அதிகமாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்று நாம் விரும்பினால் குறைவாகப் போதிக்க வேண்டும்; அதை முழுமையாகச் செய்ய வேண்டும்.

நாம் அதிகமாகப் போதித்து, பிள்ளைகள் அதில் குறைவாகவே புரிந்துகொண்டாலும் அல்லது அதில் ஒன்றையுமே புரிந்துகொள்ளாவிட்டாலும் அதில் பயனேதுமில்லை. எனவே நாம் போதிப்பதைப் பிள்ளைகள் புரிந்துகொள்ளுமாறு குறைவாகப் போதிப்பதே சிறப்பானது.

பின்னர் நீங்கள் இந்தப் புத்தகத்தில் பார்க்கப் போகிறபடி, ஒரு வேதபாடத்தில் ஒரு சத்தியத்தைப் போதிப்பதே சிறப்பானதாகும். உங்கள் பாடத்தில் அந்தச் சத்தியத்தை முழுமையாக விளக்கும்போது பிள்ளைகள் அதைச் சிறப்பாகக் கற்க முடியும்.

விளக்கைப் போடுங்கள்

எடுத்துக்காட்டுகள் குறித்த கொள்கை "விளக்கைப் போடுவதின்" முக்கியத்துவத்தை நமக்குப் போதிக்கிறது.

சிறப்பாகப் போதிக்க வேண்டுமானால், வெளிச்சத்தைக் கொண்டுவரும் வகையில் எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்த வேண்டும்.

நீங்கள் பிள்ளைகளுக்குச் சத்தியத்தைப் போதிக்கிறபடியால், இருளினூடாக அவர்களை வழிநடத்திச் செல்லுகிறீர்கள். அவர்கள் ஒருபோதும் சென்றிராத இடத்துக்கு அவர்களைக் கூட்டிச் செல்கிறீர்கள். இந்தச் சத்தியம் அவர்களுக்குப் புதிதாகவும் புரிந்துகொள்வதற்குக் கடினமானதாகவும் இருக்கிறது. இருளை விரட்டுவதற்கு ஒரு வழி "விளக்கைப் போடுவதாகும்". வெளிச்சம் வரும்போது இருள் மறைந்துவிடுகிறது.

எடுத்துக்காட்டு என்பது ஒன்றைப் புரியும்படி எடுத்துக்காட்டி விளக்குவதாகும். நீங்கள் போதிக்கும்போது சத்தியத்தைக் காணக்கூடியவகையில் எடுத்துக் காட்டுவது உங்கள் பொறுப்பாகும். எனவே, ஒவ்வொரு வேதபாடத்திலும் எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்துவது அவசியமாகும். எடுத்துக்காட்டு என்பது பிள்ளைகளுக்குப் புரியக்கூடிய கதையானதும் தெளிவானதுமான ஒரு கதையாகும். இதை

அவர்கள் நன்றாகக் கவனிக்கிறார்கள். இதே வேளையில் "இப்போது எனக்குப் புரிகிறது" என்று கூறி பிள்ளை காணக் கூடிய வகையில் அது போதிக்கப்படும் சத்தியத்துக்கு வெளிச்சம் போட்டுக் காண்பிக்கிறது அல்லது விளக்குகிறது.

- உங்கள் பாடம் ஒரு வேதாகமக் கதையின் அடிப்படையில் இருக்குமானால், அதுவே போதிக்கப்படும் சத்தியத்துக்கு எடுத்துக்காட்டாகக் காணப்பட வேண்டும். இப்படிப்பட்ட வேளையில் உங்களுக்குக் கூடுதலான எடுத்துக் காட்டுக் கதைகள் தேவைப்படாது.
- என்றாலும், வேதாகமக் கதையைப் போதிக்கும்போதுகூட, சத்தியத்தைச் சிறப்பாக விளக்கவும், சத்தியத்தைச் செயல்பூர்வமாகப் பொருத்திக் காட்டவும் ஓரிரு எடுத்துக்காட்டுக் கதைகளைப் பயன்படுத்துவது சிறப்பாகும்.
- உங்கள் பாடம் ஒரு வேதாகமக் கதையை அடிப்படையாகக் கொண்டிராமல் ஒரு கோட்பாட்டையோ அல்லது வேதாகம சத்தியத்தையோ விளக்குவதாக இருக்குமானால், கண்டிப்பாக, அந்தச் சத்தியத்தை விளக்கக் கூடிய பல எடுத்துக்காட்டுக் கதைகளைப் பயன்படுத்த வேண்டும். இந்த எடுத்துக்காட்டுக் கதைகள் பிள்ளைகளின் கவனம் சிதறாதபடி காத்துக்கொள்ளும். எடுத்துக் காட்டுகள் இல்லாமல், வெறுமனே சத்தியத்தை விளக்கிக் கொண்டிருந்தால் அவர்களுடைய கவனம் சிதறிப்போகும்.

மறுபடியுமாகக் கூறுங்கள்

பிள்ளைகள் புரிந்துகொள்ள வேண்டும் என்று நீங்கள் விரும்புவதைத் திரும்பத் திரும்பக் கூற வேண்டும் என்று மறுபடியும் கூறுதல் குறித்த கொள்கை வலியுறுத்துகிறது.

சிறப்பாகப் போதிக்க வேண்டுமானால், அது போதிக்கப்படும் சத்தியத்தை மறுபடியும் மறுபடியுமாக எடுத்துக் கூறுவதைச் சார்ந்திருக்க வேண்டும்.

நாம் அனைவருமே கற்றுக்கொள்வதில் மந்தமாகவே இருக்கிறோம். இது ஆசிரியர்களாகிய நமக்கும் நாம் கற்றுக்கொடுக்கும் பிள்ளைகளுக்கும் பொருத்தமானதாகும். ஒருசிலரே முதன்முறையாக ஒன்றைக் கேட்கும்போதே அதைக் கற்றுக் கொள்கிறார்கள். மற்றவர்கள் மறுபடியும் மறுபடியுமாக அதைக் கேட்க வேண்டியிருக்கிறது.

இதன் காரணமாக, நீங்கள் போதிக்கும் சத்தியத்தை மறுபடியும் மறுபடியுமாக வலியுறுத்த வேண்டும்.

- நீங்கள் உங்கள் வேதபாடத்தில் மையச் சத்தியத்தைக் குறைந்தபட்சம் மூன்று, நான்கு, ஐந்து முறையாவது மறுபடியும் மறுபடியுமாகக் கூற வேண்டும். பல்வேறு இடங்களில் உங்கள் பாடத்தோடு சத்தியத்தைப் பிணைப்பதின் மூலம் நீங்கள் இதைச் செய்ய முடியும். ஆனால் மறுபடியும் மறுபடியுமாக ஒரே வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டிருக்கக் கூடாது. மறுபடியும் நீங்கள் சத்தியத்துக்குத் திரும்ப வேண்டும் - ஆனால் ஒவ்வொரு முறையும்

சத்தியத்தின் மற்றொரு அம்சத்தை விளக்க வேண்டும். ஒரே சத்தியத்தை வெவ்வேறு கோணத்தில் நாம் பார்க்கிறோம்.

உங்கள் வேதபாடத்தில் நீங்கள் போதிக்கும் சத்தியத்தை உங்கள் போதிக்கும் செயல்திட்டத்தின் வேறு பகுதிகளிலும் சேர்க்க வேண்டும். எடுத்துக்காட்டாக நீங்கள் பாடும் பாடல்களிலும், பிள்ளைகளின் மனப்பாட வசனத்திலும் அந்தச் சத்தியம் காணப்பட வேண்டும்.

சத்தியங்களை நீங்கள் போதிப்பதை உறுதிப்படுத்தும்வண்ணமாக, கடந்த பாடங்களில் போதிக்கப்பட்ட சத்தியங்களையும் நீங்கள் மறுபடியுமாக எடுத்துக்கூற வேண்டும். நீங்கள் ஏற்கெனவே போதித்த சத்தியத்தைப் பிரதிபலிக்கும் கோரஸ் பாடல், மனப்பாட வசனம், கோட்பாட்டுப் பாடம், வேதாகமப் புதிர் இவைகளின் மூலமாக இதைச் செய்யலாம். அல்லது ஏற்கெனவே போதிக்கப்பட்ட ஒரு சத்தியம் வேறொரு வேதபாடத்திலும் வெளிப்படலாம்.

செயல்பூர்வமாக்குங்கள்

நமது போதனையில் நாம் செயல்பூர்வமாக இருக்க வேண்டும் என்று செயல்படுத்துதல் குறித்த கொள்கை வலியுறுத்துகிறது.

சிறப்பாகப் போதிக்க வேண்டுமானால், போதிக்கப்படும் சத்தியத்தைச் சிறுவர்களின் இருதயம் மற்றும் வாழ்க்கைக்கு நேரடியாகப் பொருத்திக் காண்பிக்க வேண்டும்.

வெறுமனே சத்தியத்தையும் கோட்பாட்டையும் போதிப்பது போதுமானது அல்ல. நீங்கள் போதிக்கும் சத்தியம் செயல்பூர்வமாக்கப்பட வேண்டும். பிள்ளைகள் தாங்கள் கற்றுக்கொண்ட சத்தியத்தின் விளைவாக இப்போது என்ன செய்ய வேண்டும் என்று அவர்களுக்கு எடுத்துக்கூற வேண்டும். செயல்படுத்துதல் கற்றுக்கொள்வதைத் தொடர வேண்டும்.

ஆனால் சத்தியத்தைப் போதிக்காமல் செயல்படுத்துதலைக் கொடுக்க கூடாது என்பதிலும் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். பிள்ளைகள் என்ன செய்ய வேண்டும் என்று முதலில் சொல்லுவது உங்கள் பணி அல்ல. பிள்ளைகள் புரிந்துகொண்டு விசுவாசிக்க வேண்டியவைகளைப் போதிப்பதே உங்கள் பணியாகும். பிறகு அவர்கள் கற்றுக்கொண்டதின் அடிப்படையில் அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று அவர்களுக்குப் போதிக்க வேண்டும்.

இரண்டுவகைப்பட்ட பிள்ளைகள் இருக்கிறார்கள் என்று நாம் ஏற்கெனவே பார்த்தோம் - கிறிஸ்துவை விசுவாசித்து ஆவிக்குரியபிரகாரமாக ஜீவனோடு இருக்கும் பிள்ளைகள், கிறிஸ்துவை விசுவாசியாமல் ஆவிக்குரியபிரகாரமாக மரித்த நிலையில் இருக்கும் பிள்ளைகள். முதல் குழுவினருக்குப் போஷாக்கு அளிக்க வேண்டும்; இரண்டாவது குழுவினருக்கு நற்செய்தியை அறிவிக்க வேண்டும்.

எனவே, குழுவிலுள்ள அனைவருக்கும், வேதபாடத்தைப் பயன்படுத்தி, ஒரு மையமான சத்தியத்தைப் போதிப்பது ஆசிரியரின் பொறுப்பாகும் - பிறகு இரண்டு வழிகளில் அந்தச் சத்தியத்தைப் பொருத்திக் காட்ட வேண்டும் - இரட்சிக்கப்படாத பிள்ளைகள் இரட்சிக்கப்படுவதற்கு (அந்தச் சத்தியத்தின் அடிப்படையில்)

என்ன செய்ய வேண்டும் என்று அந்தச் சத்தியத்தைச் செயல்பூர்வமாக்கிக் காட்ட வேண்டும்.

- இரட்சிக்கப்பட்ட பிள்ளைகள் ஆவிக்குரியரீதியாக வளர்ச்சிபெறும்படி (அந்த சத்தியத்தின் அடிப்படையில்) என்ன செய்ய வேண்டும் என்று அந்தச் சத்தியத்தைச் செயல்பூர்வமாக்கிக் காட்ட வேண்டும்.
- இரட்சிக்கப்படாத பிள்ளைகள் இரட்சிக்கப்படுவதற்கு (அந்த சத்தியத்தின் அடிப்படையில்) என்ன செய்ய வேண்டும் என்று அந்தச் சத்தியத்தைச் செயல் பூர்வமாக்கிக் காட்ட வேண்டும்.

சுருக்கம்

இந்த ஆறு கொள்கைகளின் அடிப்படையில் வேதபாடத்தைப் போதிக்க வேண்டும். அடுத்துவரும் அத்தியாயங்களில் இதுகுறித்து விளக்கமாகக் கூறப்படும் :

- வெறுமனே சத்தியத்தைக் கூறாமல் அதைப் போதியுங்கள்.
- சத்தியத்தைச் சிக்கலில்லாமல் எளிமைப்படுத்திக் கூறுங்கள்.
- ஒரு சத்தியத்தின்மீது கவனத்தைச் செலுத்துங்கள். அளவுக்கு அதிகமாகப் போதிக்க முயலாதீர்கள்.
- பிள்ளைகள் "காணும்படி" எடுத்துக்காட்டுகளால் சத்தியத்தை விளக்குங்கள்.
- பிள்ளைகள் நினைவில் வைத்திருக்கும்படி சத்தியத்தை மறுபடியும் மறுபடியுமாக எடுத்துக் கூறுங்கள்.
- சத்தியத்தைக் கற்றுக்கொண்டதின் விளைவாக என்ன செய்ய வேண்டும் என்பதைப் பிள்ளைகள் அறிந்துகொள்ளும்படி அதைச் செயல்பூர்வமாக்கிக் காட்டுங்கள்.

அத்தியாயம் 21

சத்தியத்தைப் போதிக்கக் கதையைப் பயன்படுத்துங்கள்

வேதாகமப் பாடத்தைப் போதிப்பது எப்படி ?

அத்தியாயத்தின் சுருக்கம்

(இப்போது ஒரு வேதாகமப் பாடத்தை எவ்வாறு போதிப்பது என்பதைக் கற்றுக் கொள்ள நீங்கள் ஆயத்தமாக இருக்கிறீர்கள்).

- **உங்கள் வேதாகமப் பகுதியைப் படியுங்கள்**
- **உங்கள் பாடத்தின் நோக்கத்தைப் புரிந்துகொள்ளுங்கள் - சத்தியத்தைப் போதித்தல்**
- **வேதபகுதியில் உள்ள சத்தியத்தைப் போதியுங்கள்**
- **ஒரு சத்தியத்தை முழுமையாகப் போதியுங்கள்**
- **இரண்டு வகைப்பட்ட சிறுவர்களுக்கும் மையச் சத்தியத்தைப் பொருத்திக் காட்டுங்கள்**
- **ஒரு மாதிரிப் பாட உருவரை**

ஒரு வேதாகமக் கதையை எவ்வாறு கூறுவது என்று நாம் 18 ஆம் அத்தியாயத்தில் பார்த்தோம். இப்போது அதற்கு அடுத்தபடி ஒரு வேதாகமக் கதையை ஒரு வேதபாடமாக எப்படி ஆக்குவது என்று கற்றுக்கொள்வதாகும்; அதற்கு 13ஆம் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள போதிப்பது குறித்த ஆறு கொள்கைகளையும் கருத்தில் கொள்ளவேண்டும். உங்கள் போதனை இந்தக் கொள்கைகளின் அடிப்படையில் இருக்க வேண்டும். ஒரு கதை எவ்வளவாகக் கவரக்கூடிய வகையில் இருந்தாலும், வெறுமனே ஒரு கதையைக் கூறுவது உங்கள் இலக்கு அல்ல - பிள்ளைகளுக்குச் சத்தியத்தைப் போதிப்பதே உங்கள் நோக்கமாகும். கதை நீங்கள் பயன்படுத்தும் ஒரு கருவியாகவும் நீங்கள் சத்தியத்தைக் கவரக் கூடிய வகையிலும் பயன்தரத் தக்க வகையிலும் போதிப்பதற்கு அது ஒரு வழியாகவும் மட்டுமே இருக்கிறது.

உங்கள் வேதாகமப் பகுதியை வாசியுங்கள்

ஒரு வேதாகமக் கதையையோ அல்லது வேதபாடத்தையோ போதிப்பதற்கு முன்பாக, எந்த வேதாகமப் பகுதியை அது அடிப்படையாகக் கொண்டிருக்கிறதோ அந்தப் பகுதியை ஜெபத்தோடும் கவனமாகவும் வாசிக்க வேண்டும்.

- தேவன் அந்தப் பகுதியில் என்ன கூறுகிறார் என்பதைப் புரிந்துகொள்ளப் பரிசுத்த ஆவியானவர் உதவ வேண்டுமென்று ஜெபியுங்கள்.
- அந்தப் பகுதியை எட்டு அல்லது பத்து முறை முழுமையாகவும் கவனமாகவும் வாசியுங்கள். திறந்த மனதோடு அதை அணுகுங்கள். உங்கள் சொந்தக்

கருத்துக்கள் அல்ல, அந்த வேதாகமப் பகுதியே உங்கள் போதனையைத் தீர்மானிப்பதற்கு அனுமதியுங்கள்.

- அந்தப் பகுதியின் கதையோட்டத்தை உங்கள் மனதில் தெளிவாகப் பதிய வையுங்கள். அதைச் சொல்ல ஆயத்தமாக அதை உங்கள் மனதில் சித்தி ரித்துப் பார்த்துக் கொள்ளுங்கள்.
- கதையின் மூலமாக நீங்கள் போதிக்கப் போகும் சத்தியத்தைக் கண்டறியும் படி அந்தக் கதையைக் கவனமாக வாசியுங்கள்.

ஒரு வேதபாடம் சத்தியத்தைப் போதிக்கிறது

துவக்கம், நிகழ்ச்சிகளின் தொடர்ச்சி, உச்சக்கட்டம், முடிவு இவை ஒரு கதையின் வடிவமைப்பாக இருக்கின்றன. இவையே ஒரு வேதபாடத்தின் வடிவமைப்பாகவும் ஆகின்றன. சத்தியத்தைப் போதிக்குமாறு அந்தக் கதையையும் அதன் வடிவமைப்பையும் பயன்படுத்துவதே உங்கள் பணியும் இலக்குமாகும். ஆகாப் ஒரு அரசன், அவன் நாபோத்தின் திராட்சத் தோட்டத்தை விரும்பினான், எலியா அங்கே அவனைச் சந்தித்தான் என்று பிள்ளைகள் அறிவது நல்லதுதான். ஆனாலும், ஆகாப் தேவனுக்கு எதிராகக் குற்றம் செய்தான், தேவனுடைய நீதியின் அர்த்தம் என்ன, அவருக்குக் கீழ்ப்படியாமல் போவதினால் ஏற்படும் பின் விளைவுகள் யாவை என்பதைப் பிள்ளைகள் அறிந்துகொள்வது அதைவிட அத்தியாவசியமானதாகும்,

வேதாகமம் வெறும் கதைப்புத்தகம் மட்டுமல்ல, பிள்ளைகளுக்கு நீங்கள் போதிக்கும்போது அவர்கள் இதைத் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும். அதனால், நீங்கள் சத்தியத்தைப் போதிக்கவே அந்தக் கதையோட்டத்தைப் பயன்படுத்த வேண்டும். வேதாகம சத்தியங்களைப் போதிப்பதற்கு அதிகமான சிந்தனையும் முயற்சியும் தேவைப்படுகிறது. ஆனால் பிள்ளைகள் இதைத்தான் அறிய வேண்டும்.

"சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவான் 8:32)

நீங்கள் சத்தியத்தைப் போதிக்க முயற்சிக்கும்போது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இந்தக் கட்டளையை நினைவில் வைத்திருங்கள்:

"ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" (மத்தேயு 28:19-20).

கதைகளை, வேதாகமக் கதைகளையும்கூடச் சொல்லுவதின்மூலம் பிரதான கட்டளையை நிறைவேற்ற முடியாது. சத்தியத்தைப் போதிப்பதின் மூலமாகவே அதை நிறைவேற்ற முடியும். போதிப்பதைக் குறித்த இரண்டு அம்சங்கள் இந்த வசனங்களில் தெளிவாகக் காணப்படுகின்றன. துவக்கப் போதனை - *"சீஷராக்கி"*

என்பது பிள்ளைகளை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் உறவுக்குள் கொண்டு வந்து இதன்மூலம் அவர்களைச் சீஷராக்கும் நோக்கத்தோடு செய்யப்படுகிறது - இதுவே சுவிசேஷத்தைப் போதிப்பதாகும். போதிப்பதின் மற்ற அம்சம் *"நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்"* பண்ணுவதாகும் இது விசுவாசிகளுக்குக் கற்பிப்பதாகும். நீங்கள் வேத பாடங்களைப் போதிக்கும்போது, சுவிசேஷத்தை அறிவிப்பது, சிந்தைக்குக் கற்பிப்பது என்ற இந்த இரட்டைப் பொறுப்பை நினைவில் வைத்திருங்கள். கேட்டுக்கொண்டிருப்பவர்களை இரட்சிப்புக்குள் கொண்டுவருவதும், அவர்களுக்குப் படிப்பிக்குதலுமே வேதபாடத்தின் நோக்கமாகும். வேதாகம சத்தியத்தைப் போதிப்பது சுவிசேஷத்தை அறிவிப்பது, படிப்பிக்குதல் இரண்டுக்குமே அடிப்படையாக இருக்கிறது. ஒவ்வொரு வேதபாடத்திலும் சத்தியத்தைப் போதிப்பது அத்தியாவசியமானது என்பதை இது வலியுறுத்துகிறது.

ஒரு வேதபாடம் வேதாகமப் பகுதியிலுள்ள சத்தியத்தைப் போதிக்கிறது

பாடத்துக்கு அடிப்படையாக இருக்கும் வேதபகுதியை நீங்கள் வாசிக்கும்போது, அந்தப் பகுதியைப் போதிக்க எந்தக் குறிப்பிட்ட சத்தியங்களைப் பயன்படுத்துவது என்பதுகுறித்த முன் கருத்துக்களை நீங்கள் கொண்டிருக்கக் கூடாது. சத்தியங்களை அதில் "திணிக்க" முயலாதிருங்கள். பதிலாக, அந்த வேதபகுதியை வாசித்து, அந்தப் பகுதி போதிக்கும் சத்தியத்தை அல்லது சத்தியங்களைத் தேடுங்கள். அந்தப் பகுதியில் இல்லாத சத்தியங்களைப் **போதிக்காதீர்கள்.** அல்லது நீங்கள் கூறுவதை அந்தப் பகுதி கூறும்படியாக அதைத் திணிக்காதீர்கள். நீங்கள் என்ன போதிக்க வேண்டும் என்பதை வேதாகமப் பகுதியே தீர்மானிக்க வேண்டும்.

அந்தப் பகுதியையும் அது போதிக்கும் சத்தியத்தையுமே நீங்கள் தொடர்ந்து கவனிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, பாகாலின் தீர்க்கதரிசிகளை எலியா முறியடிக்கும் நிகழ்ச்சி கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்த சத்தியத்தைப் போதிக்கவில்லை. ''கர்த்தரே ஒரே மெய்யான தேவன்'' என்ற சத்தியத்தையே அது போதிக்கிறது. தாவீது அரசனாகத் தெரிந்தெடுக்கப்படும் நிகழ்ச்சி "தேவன் இருதயத்தைப் பார்க்கிறார்" என்ற சத்தியத்தைப் போதிக்கிறது. நீங்கள் வாசிக்கும்போது அந்தப் பகுதியில் வெளிப்படும் சத்தியத்தை அல்லது சத்தியங்களை நீங்கள் கண்டுகொள்வீர்கள். இதையே நீங்கள் பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டும். வேதபகுதியே துவக்க முனையாக இருக்கிறது; உங்கள் பாடத்தில் நீங்கள் எந்தச் சத்தியத்தைப் போதிக்க வேண்டும் என்பதை அதுவே தீர்மானிக்கிறது.

நமது வேதாகமக் கதைக்கு அடிப்படையாகக் கடந்த அத்தியாயத்தில் நாம் தெரிந்து கொண்டுள்ள மாதிரியில் (நாபோத்தின் திராட்சத் தோட்டம் - 1 இராஜாக்கள் 21) நீங்கள் பல சத்தியங்களைக் காண முடியும்:

- *இச்சிப்பது பாவமாகும் (வசனம் 2)*
- *பொய்கூறுவது பாவமாகும் (வசனம் 13)*
- *மனித இருதயம் திருக்குள்ளதாக இருக்கிறது (வசனங்கள் 7 - 10)*
- *கொலைசெய்வது பாவமாகும் (வசனம் 14)*
- *தேவன் அனைத்தையும் அறிகிறார் (வசனம் 18)*
- *தேவன் நீதியுள்ளவர்; அவர் பாவத்தைத் தண்டிக்கிறார் (வசனங்கள் 19, 21-24)*
- *பாவத்துக்கு எப்போதுமே பின்விளைவுகள் உண்டு (அதிகாரம் 22:37, 38; 2 இராஜாக்கள் 9:30 - 37).*

வேதபாடம் ஒரு சத்தியத்தை முழுமையாகப் போதிக்கிறது

பெரும்பாலும் நீங்கள் ஒரு வேதபகுதியை வாசிக்கும்போது அதில் பல சத்தியங்களைக் காண்பீர்கள் (நாம் ஏற்கெனவே 1 இராஜாக்கள் 21ஆம் அதிகாரத்தில் பார்த்தோம்). நீங்கள் போதிக்கும்போது இந்தச் சத்தியங்கள் எல்லாவற்றையும் குறிப்பிட்டாலோ அல்லது போதித்தாலோ பிள்ளைகளுக்குக் குழப்பம் ஏற்படும்; அவர்கள் எதையும் கற்றுக்கொள்ள மாட்டார்கள். எனவே தெரிந்தெடுத்துப் பயன்படுத்துங்கள். அந்தப் பகுதியில் முக்கியமாகத் தெரியும் சத்தியத்தை, அந்தக் கதையோட்டத்தில் பல முறை தெளிவாகத் தெரியும் சத்தியத்தைத் தெரிந்தெடுத்து அதைப் போதியுங்கள். மையச் சத்தியம் என்பது அந்த வேதாகமப் பகுதி எளிதாகவும் இயல்பாகவும் போதிக்கும் ஒரு சத்தியமாகும். அது பெரும்பாலும் கதையோட்டத்திலிருந்து வெளிப்படும் முக்கியமான சத்தியமாக இருக்கிறது.

பிறகு உங்கள் பாடத்திலுள்ள இந்த மையச் சத்தியத்தை நீங்கள் முழுமையாகப் போதிக்க வேண்டும். மற்றச் சத்தியங்கள் உங்கள் மையச் சத்தியத்திலிருந்து உங்கள் பிள்ளைகளின் கவனத்தைத் திருப்பிவிடக் கூடுமாதலால், அவைகளை நீங்கள் போதிக்கக் கூடாது. ஆனால் போதிப்பதிலும், மையச் சத்தியத்தைச் செயல்படுத்திக் கூறுவதிலும் அவை உதவியாக இருக்குமானால் அவைகளைக் குறிப்பிடலாம்.

தேவனிடமிருந்து வந்த உபதேசியாராகிய இயேசுகிறிஸ்து தாம் போதித்த உவமைக் கதைகளில், இந்தக் கொள்கையைக் குறித்த ஆற்புதமான மாதிரியை எடுத்துக் காட்டியிருக்கிறார். மற்றச் சத்தியங்களும் உள்ளடங்கியிருந்தாலும், ஒவ்வொரு உவமைக்கதையும் ஒரு மையச் சத்தியத்தைக் கொண்டிருக்கிறது. 'நல்ல சமாரியன்' கதையைப் போதித்தபோது, ஆண்டவராகிய இயேசு *"உங்கள் அயலாரை நீங்கள் நேசிக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்"* என்பதையே குறிப்பாகப் போதித்தார். 'பத்துக் கன்னிகைகள்' உவமைக் கதையில் அவர் *"மனுஷகுமாரன் மறுபடியும் வரப் போகிறார் - இன்றுகூட வரலாம்"* என்பதைப் போதித்தார்.

நாபோத்தைக் குறித்த பகுதியை நாம் பார்த்தபோது பல சத்தியங்களை அந்தப்

பகுதியில் கண்டோம். இந்தச் சத்தியங்களில் ஒன்றை நீங்கள் தெரிந்தெடுக்க வேண்டும். பாடத்தில் அதை முழுமையாகப் போதிக்க வேண்டும்.

எடுத்துக்காட்டாக, "தேவன் நீதியுள்ளவர், அவர் பாவத்தைத் தண்டித்தேயாக வேண்டும்" என்ற சத்தியத்தை நீங்கள் தெரிந்துகொள்ளலாம்.

நான் ஏற்கெனவே கூறியபடி, இந்தச் சத்தியத்தைப் போதிப்பதிலும் செயல்படுத்திக் கூறுவதிலும் உதவியாக இருக்கும் சத்தியங்களையும் நீங்கள் கூறிப்பிடலாம். ஆனால் உங்கள் போதனையை ஒரே மையச் சத்தியத்தின்மீதே ஒருமுகப் படுத்த வேண்டும்.

சாதாரணமாக, வாராந்தர ஞாயிறுபள்ளி அல்லது வாராந்தர நற்செய்தி கிளப் அல்லது வாராந்தர சிறுவர் கூட்டம், அல்லது முகாமிலோ அல்லது சிறுவர் வேதாகமப் பள்ளியிலோ தினசரிக் கூட்டம் மூலமாகப் பிள்ளைகளுக்கு ஒழுங்கான போதிக்கும் ஊழியம் நடத்தப்படுகிறது. ஒரு ஒழுங்கான அடிப்படையில் நீங்கள் பிள்ளைகளுக்குப் போதிக்கும்போது, ஒவ்வொரு பாடத்திலும் ஒரு சத்தியத்தை முழுமையாகப் போதிப்பதே உங்கள் நோக்கமாக இருக்க வேண்டும்.

ஆனால், நீங்கள் ஒரேயொரு சத்தியத்தை மட்டுமே போதிக்கிறபடியால், கதையைச் சொல்ல அதிக நேரத்தைச் செலவிட வேண்டும் என்று அர்த்தமில்லை. உங்கள் பாட வேளையின் பெரும்பகுதியை மையச் சத்தியத்தை விளக்குவதற்காகவும், அதைப் பொருத்திக் கூறுவதற்காகவுமே செலவிட வேண்டும். அதனால் உங்கள் பாடம் உள்ளடக்கத்தில் பலவீனமாக இருக்கிறது என்று அர்த்தமல்ல. உள்ளடக்கம் வலுவாக இருக்கும் வகையில் நீங்கள் மையச் சத்தியத்தை முழுமையாகப் போதிக்க வேண்டும்:

வேதபாடம் மையச் சத்தியத்தைப் பொருத்திக் கூறுகிறது

சத்தியத்தைப் போதிப்பது மட்டும் போதாது, அதைப் பொருத்திக் கூறுவது முக்கியமானதாகும். எனவே உங்கள் பாடம் முழுவதிலும் நீங்கள் மூன்று காரியங்களைச் செய்ய வேண்டும்:

- நீங்கள் மையச் சத்தியத்தை **அனைத்துப்** பிள்ளைகளுக்கும் போதிக்க வேண்டும்:
- **இரட்சிக்கப்படாத** பிள்ளைகளுக்கு அறைகூவல் விடுத்து, அவர்களைக் கிறிஸ்துவை விசுவாசிக்கும்படி அழைப்பதற்கு மையச் சத்தியத்தைப் **பொருத்திக் கூற** வேண்டும்.
- **இரட்சிக்கப்பட்ட** பிள்ளைகள் ஆவிக்குரியபிரகாரமாக வளர்ச்சி பெறுவதற்கு மையச் சத்தியத்தைப் **பொருத்திக் கூற** வேண்டும்.

நாம் 1 இராஜாக்கள் 21ஆம் அதிகாரத்தின் மையச் சத்தியமாக "தேவன் நீதியுள்ளவர், அவர் பாவத்தைத் தண்டித்தேயாக வேண்டும்" என்பதைத் தெரிந்துகொண்டிருக்கிறோம்.

- ஒவ்வொரு பிள்ளையும் இதைப் புரிந்துகொள்ளும்படியாகப் பாடம் முழுவதிலும் நீங்கள் இந்தச் சத்தியத்தைப் போதிக்க வேண்டும்.
- இரட்சிக்கப்படாத பிள்ளைகளுக்கு இந்தச் சத்தியத்தைப் பொருத்திக் கூற வேண்டும்.
- "எனவே நீங்கள் இயேசுகிறிஸ்துவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ள வேண்டும், இல்லாவிட்டால் உங்கள் பாவத்திற்காக தண்டிக்கப்படுவீர்கள்."

இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு இந்தச் சத்தியத்தைப் பொருத்திக் கூற வேண்டும் "எனவே நீங்கள் எப்போதும் நீதியாகவும் நேர்மையாகவும் இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்."

பாட உருவரை

நாம் ஏற்கெனவே 1 இராஜாக்கள் 21 ஆம் அதிகாரத்தின் கதை உருவரையைப் பார்த்திருக்கிறோம். இப்போது மறுபடியுமாக அதை அடுத்த பக்கத்தில் எழுதுவோம். இப்போது அது முழுமையான பாட உருவரையாக இருக்கிறது. போதனையையும் சத்தியத்தைப் பொருத்திக் கூறுதலையும் உள்ளடக்கியிருக்கிறது. ஒவ்வொரு முறை மையச் சத்தியத்தைக் குறிப்பிடும்போதும் மைச என்ற எழுத்துக்களை உங்கள் உருவரையில் குறித்து வையுங்கள். இரட்சிக்கப்படாத பிள்ளைகளுக்கு அதைப் பொருத்திக் கூறும்போது மைசஇ என்றும், இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு அதைப் பொருத்திக் கூறும்போது மைசஆ என்றும் குறித்து வையுங்கள்.

மையச் சத்தியம் "தேவன் நீதியுள்ளவர், அவர் பாவத்தைத் தண்டித்தேயாக வேண்டும்"

இரட்சிக்கப்படாத பிள்ளைகளுக்குப் பொருத்திக் கூறுதல்: "எனவே நீங்கள் இயேசுகிறிஸ்துவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ள வேண்டும் இல்லாவிட்டால் உங்கள் பாவத்துக்காகத் தண்டிக்கப்படுவீர்கள்."

இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளுக்குப் பொருத்திக் கூறுதல்: "எனவே நீங்கள் எப்போதும் நீதியாகவும் நேர்மையாகவும் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்."

1. துவக்கம்
"ஏன் ஒருவருமே நியாயமாக நடந்துகொள்வதில்லை?" என்று செல்வம் முணுமுணுத்தான்

மையச் சத்தியம் (தேவன் நீதியுள்ளவராக இருக்கிறார்)

2. நிகழ்ச்சிகளின் தொடர்ச்சி
அ. ஆகாப் நாபோத்தின் தோட்டத்தை இச்சிக்கிறான்
(பாவத்தைக் குறித்துப் பேசுங்கள். நாம் அனைவரும் பாவிகள்)
ஆ. ஆகாப் நாபோத்திடம் தோட்டத்தைக் கேட்கிறான்

மையச்சத்தியம் இரட்சிக்கப்பட்டவர்க்கு: *(கிறிஸ்தவ பிள்ளைகள் இச்சிக்கக் கூடாது)*

இ. நாபோத் விற்கவோ மாற்றவோ மறுக்கிறான்
ஈ. ஆகாப் முறுமுறுக்கிறான்.
உ. யேசபேல் நிருபங்களை எழுதுகிறாள்

மையச்சத்தியம் இரட்சிக்கப்பட்டவர்க்கு: *(கிறிஸ்தவப் பிள்ளைகள் நேர்மையுடன் இருக்க வேண்டும்)*

ஊ. நாபோத் கொல்லப்படுகிறான்

மையச்சத்தியம் இரட்சிக்கப்பட்டவர்க்கு: *(கிறிஸ்தவப் பிள்ளைகள் மற்றவர்களைத் தாக்கக் கூடாது)*

எ. ஆகாப் தோட்டத்தை எடுத்துக்கொள்ளச் செல்கிறான்.
ஏ. எலியாவைச் சந்திக்கிறான்

மையச்சத்தியம் இரட்சிக்கப்படாதவர்க்கு: *(தேவன் அனைத்தையும் அறிந்திருக்கிறார் என்றும், உங்களையும் உங்கள் பாவத்தையும் அறிவார் என்றும் கூறுங்கள்)*

3. **உச்சக்கட்டம்** எலியா ஆண்டவரிடமிருந்து எச்சரிப்பைக் கொண்டுவருதல்

மையச்சத்தியம் இரட்சிக்கப்படாதவர்க்கு: *(தேவன் நீதியுள்ளவர், நீங்கள் இரட்சிக்கப்படாவிட்டால் உங்கள் பாவத்தைத் தண்டிப்பதாகக் கூறுகிறார்)*
"நாபோத் மரித்த இடத்தில் நீயும் மரித்துப் போவாய்"

4. முடிவுரை
அ. ஆகாப் இறக்கிறான்
ஆ. யேசபேல் இறக்கிறாள்

மையச்சத்தியம் இரட்சிக்கப்படாதவர்க்கு: *(தேவன் அவர்களோடு நீதியாக நடந்துகொண்டு, அவர்களின் பாவத்தைத் தண்டித்தார். நீங்கள் இயேசு கிறிஸ்துவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவர் உங்களோடு நீதியாக நடந்துகொண்டு உங்கள் பாவங்களைத் தண்டிப்பார்)*

அத்தியாயம் 22

வார்த்தையைப் படியுங்கள்

மையச் சத்தியத்தை எவ்வாறு கண்டுபிடிப்பது ?

அத்தியாயத்தின் சுருக்கம்

(முதலாவதாக, உங்கள் வேதாகமப் பகுதியின் மையச் சத்தியத்தை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும்).

- **வழிநடத்துதலுக்காக ஜெபியுங்கள்**
- **அந்தப் பகுதியிலுள்ள அனைத்துச் சத்தியங்களையும் கண்டுபிடியுங்கள்**
- **மையச் சத்தியம் எதுவெனத் தெரிந்துகொள்ளுங்கள்**
  - ✓ இது அடிக்கடி தோன்றும் ஒன்றாகும்
  - ✓ இதன்மூலமாக தேவன் உங்களோடு பேசுகிறார்
  - ✓ உங்களுடைய பிள்ளைகளுக்கு அதிகமாகத் தேவைப்படும் ஒன்று
  - ✓ சமீபத்தில் நீங்கள் போதித்திருப்பதற்கு வித்தியாசமான ஒன்று
- **உங்கள் மையச் சத்தியத்தை எழுதிவையுங்கள்**
- **உங்கள் மையச் சத்தியங்கள் வெவ்வேறாக இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்**
- **உங்கள் மையச் சத்தியங்களைப் பதிவேட்டில் எழுதி வையுங்கள்**

நீங்கள் ஒரு வேதபாடத்தைப் பிள்ளைகளுக்குப் போதிக்கும்போது, இரண்டு அடிப் படை உண்மைகளை மனதில் வைத்திருக்க வேண்டும் என்று பார்த்தோம்.

- நீங்கள் போதிப்பதைப் புரிந்துகொள்ளும் பிள்ளைகளின் திறன் ஓர் அளவுக் குள்ளானது, அதாவது அது ஒரு கட்டுக்கு உட்பட்டதாகும். அவர்களால் அளவுக்கு அதிகமானதைப் புரிந்துகொள்ள முடியாது.
- ஒரு ஆசிரியராக உங்கள் திறனும் கட்டுக்கு உட்பட்டதாகும். நீங்கள் அதிக மாகப் போதிக்க முயல்வீர்களானால் சிறப்பாகப் போதிக்க முடியாது.

எனவே, நாம் ஏற்கெனவே பார்த்தபடி, வேதபாடத்தைப் போதிக்கும்போது, ஒரு சத்தியத்தைப் போதிப்பதே மேலானது; அனைத்துப் பிள்ளைகளுக்கும் அந்தச் சத்தியத்தை முழுமையாகப் போதிக்க நீங்கள் உங்கள் கதையையோ அல்லது பாடத்தையோ பயன்படுத்த வேண்டும். நீங்கள் போதிக்கும் இந்தச் சத்தியம் மையச் சத்தியம் என்று அழைக்கப்படுகிறது.

பாடத்துக்கு அடிப்படையான வேதபகுதியின் மையச் சத்தியத்தைக் கண்டு பிடிப்பதே அதிக சிரமமான காரியமாக இருப்பதாகப் பிள்ளைகளுக்குப் போதிக்கும் பல ஆசிரியர்கள் காண்கிறார்கள்.

என்றாலும் இந்தப் படிகளை நீங்கள் பின்பற்றுவீர்களானால் அது உங்களுக்குச் சிரமமாக இருக்காது

வழிநடத்துதலுக்காக ஜெபியுங்கள்

பாடத்துக்கு அடிப்படையான வேதபகுதியிலுள்ள அனைத்துச் சத்தியங்களையும் நீங்கள் புரிந்துகொண்டு கண்டுபிடிக்கப் பரிசுத்த ஆவியானவர் உதவுமாறு ஜெபியுங்கள். பின்னர் இந்தச் சத்தியங்களில் எதை அவர் பிள்ளைகளுக்கு மையச் சத்தியமாகப் போதிக்க விரும்புகிறார் என்பதை நீங்கள் கண்டுபிடிக்க உதவுவார்.

வேதாகமப் பகுதியிலுள்ள சத்தியங்களைக் கண்டுபிடியுங்கள்

சத்தியம் என்பது நீங்கள் பிள்ளைகள் கேட்டு, புரிந்துகொண்டு, கற்றுக்கொண்டு, தங்கள் வாழ்க்கையில் செயல்படுத்த விரும்பும் ஒன்றாகும். அது எளிமையான சிறு வாக்கியத்தில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

உங்கள் பாடத்துக்கு அடிப்படையான வேதபகுதியைக் கவனமாக வாசியுங்கள். பிறகு சத்தியங்களை இனம்கண்டுகொள்ள உங்களுக்கு நீங்களே பல கேள்விகளைக் கேட்டுக்கொள்ளுங்கள்:

- சிறுவர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிற, தேவனைக் குறித்த சத்தியம் ஏதேனும் இருக்கிறதா?
- இயேசுகிறிஸ்துவைப் பற்றிய சத்தியம் இருக்கிறதா?
- பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய சத்தியம் இருக்கிறதா?
- பாவத்தைக் குறித்த சத்தியம் இருக்கிறதா?
- இரட்சிப்பைக் குறித்த சத்தியம் இருக்கிறதா?
- பரிசுத்தமாக்கப்படுதல் மற்றும் பரிசுத்தத்தைப் பற்றிய சத்தியம் இருக்கிறதா?
- வேதாகமத்தைப் பற்றிய சத்தியம் இருக்கிறதா?
- வருங்காலத்தைப் பற்றிய சத்தியம் இருக்கிறதா?
- வேறு ஏதேனும் கருப்பொருளைக் குறித்த சத்தியம் இருக்கிறதா?

உங்கள் வேதபகுதியில் நீங்கள் பல சத்தியங்களைக் கண்டுபிடிக்கலாம். எடுத்துக்காட்டாக, ஆதியாகமம் 6 முதல் 8 அதிகாரங்களில் கூறப்பட்டுள்ள, நோவாவும் ஜலப்பிரளயமும் பற்றிய உண்மைக்கதையில் நீங்கள் கீழே காணும் பத்துச் சத்தியங்களைக் கண்டுபிடிக்கலாம்:

- தேவன் நீதியுள்ளவர், அவர் பாவத்தைத் தண்டித்தேயாக வேண்டும் (ஆதியாகமம் 6:6)
- இரட்சிப்புக்கு ஒரே வாசல் (வழி) தான் இருக்கிறது (ஆதியாகமம் 6:16; 7:7, 16).
- மனிதன் தனது இயல்பிலும் செயலிலும் பாவமுள்ளவனாக இருக்கிறான் (ஆதியாகமம் 6:5)
- தேவன் உண்மையுள்ளவர், அவர் எப்போதுமே தமது வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவார் (ஆதியாகமம் 6:7; 6:18; 7:21; 8:1, 18, 21, 22).
- தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களைக் கவனித்து, அவர்களைப் பராமரிக்கிறார் (ஆதியாகமம் 6:18; 8:1).

- தேவன் சர்வவல்லவர், அவரால் எதையும் செய்ய முடியும் (ஆதியாகமம் 6:13; 7:11, 12; 8:1)
- தேவன் தமது இடத்தை மற்ற காரியங்கள் எடுத்துக்கொள்ள அனுமதிப் பதில்லை (இந்தப் பகுதியை மத்தேயு 24:37 - 39 வசனங்களோடு இணைத்துக் கூறுங்கள்)
- தேவனை விசுவாசிக்கிறவன் அவரால் இரட்சிக்கப்பட்டு, ஆசீர்வதிக்கப் படுகிறான் (இந்தப் பகுதியை எபிரெயர் 11:7 வசனத்தோடு இணைத்துக் கூறுங்கள்)
- இரட்சிப்பின் வாசல் வழியாகப் பிரவேசிக்கும் அனைவரையும் பாதுகாப் பாகக் காப்பதாகத் தேவன் வாக்குத்தத்தம் அருளுகிறார் (ஆதியாகமம் 6:18; 8:18).
- நோவா கீழ்ப்படிந்ததுபோல நீங்கள் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் (ஆதியாகமம் 6:22; 7:5 போன்றவை).

உங்கள் மையச் சத்தியத்தைத் தெரிந்தெடுங்கள்

உங்கள் வேதபகுதியில் காணப்படும் அனைத்துச் சத்தியங்களையும் போதிக்க முடியாது என்பது தெளிவாகத் தெரிகிறது. நீங்கள் கவனம் செலுத்திப் போதிக்க வும், பாடம் முழுவதிலும் மறுபடியும் மறுபடியுமாகப் போதிக்கவும் ஒரு சத்தியத் தைத் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

இந்த ஐந்து கேள்விகளை உங்களுக்கு நீங்களே கேட்டுக்கொள்வதின் மூலமாக இந்த மையச் சத்தியத்தை நீங்கள் கண்டுபிடிக்கலாம்:

- **வேதபகுதியில் பலமுறை வருவதுபோலத் தோன்றும் ஒரு சத்தியம் - முக் கியமான சத்தியமாகத் தெளிவாகத் தெரியும் சத்தியம் ஏதாவது இருக் கிறதா?** அது முக்கியமானதாகவும் அடிக்கடி வேதபகுதியில் வருவதாகவும் இருக்குமானால் அதை உங்கள் பாடத்தில் சேர்த்து, பிள்ளைகளுக்கு முழு மையாகப் போதிப்பது எளிதாக இருக்கும்.
- **தேவன் ஏன் இந்தப் பகுதியை வேதாகமத்தில் சேர்த்திருக்கிறார்?** அது அங்கே இருப்பதற்கு ஒரு காரணமும் நோக்கமும் இருக்க வேண்டும். அந்த நோக்கத்தை நீங்கள் கண்டுபிடித்தால், முக்கிய போதனையையும் மையச் சத்தியத்தையும் கண்டுபிடிப்பது எளிதாக இருக்கும்.
- **இந்தப் பகுதியின் மூலமாகப் பரிசுத்த ஆவியாகிய தேவன் உங்களுக்கு முக்கியமாகப் போதிப்பது என்ன?** இதுவே அனைத்தையும்விட முக்கியமான கேள்வியாகும். நீங்கள் வேதபகுதியை வாசித்து, அதிலுள்ள எல்லாச் சத்தி யங்களையும் எழுதிவைக்கும்போது, தேவன் உங்கள் இருதயத்தின் மூலமாக வும், வாழ்க்கையின் மூலமாகவும் பேசுவார். ஒரு சத்தியம் சிறப்பாக உங்கள் இருதயத்தைப் பற்றிக்கொண்டு, உங்களில் ஒரு அங்கமாகிவிடும். இந்த வகையில் நீங்கள் கற்றுக்கொள்வதே உங்களுக்கு சிறப்பாகப் பொருத்த மானதாகும்; அதை நீங்கள் மற்றவர்களுக்குப் போதிக்க முடியும்.

உங்கள் பிள்ளைகளின் தேவைகள் என்ன?

நீங்கள் போதிக்கும் சத்தியம் உங்கள் பிள்ளைகளுக்கும் அவர்களின் தேவைகளுக்கும் பொருத்தமானதாக இருக்க வேண்டும்.

இந்தச் சத்தியங்களில் எந்தச் சத்தியம் சிறப்பான வகையில் அவர்களின் தேவைகளைச் சந்திக்கக் கூடியதாக இருக்கிறது? சிறுவர்கள் எந்தப் புதிய அறிவைப் பெற வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்கள்? அவர்களில் எத்தகைய மாற்றத்தைக் காண விரும்புகிறீர்கள்?

- ✓ அவர்கள் அதிகமாக அறிந்திராத, புதிய சிறுவர்களாக இருப்பார்களானால், மிகவும் அடிப்படையான சத்தியத்தைப் போதிக்க வேண்டும்.
- ✓ அதிகமான பிள்ளைகள் இரட்சிக்கப்படாதவர்களாக இருப்பார்களானால், சுவிசேஷத்தைக் கூறுவதற்கு அதிக உதவியாக இருக்கும் சத்தியத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும்.
- ✓ பெரும்பாலான பிள்ளைகள் இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளாக இருப்பார்களானால், அவர்கள் ஆவிக்குரியரீதியாக வளர்ச்சியைப் பெறக் குறிப்பாக உதவும் ஒரு சத்தியத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும்.
- ✓ இரண்டு குழுவினரும் கிட்டத்தட்ட ஒரே எண்ணிக்கையில் இருப்பார்களானால், இந்த இரண்டு குழுவினருக்கும் இரண்டு விதமான தெளிவான செயல்படுத்துதலைப் போதிக்கும் சத்தியத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

பயன்தரக்கூடிய வகையில் போதிக்க வேண்டுமானால், சிறுவர்களின் தேவைகளின் அடிப்படையிலான, திட்டவட்டமானதும் தெளிவாகப் புரிந்துகொள்ளக் கூடியதுமான நோக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும். பிள்ளைகளைத் தனிப்பட்ட முறையில் அறிவதின் மூலம் ஆசிரியர் பிள்ளைகளின் தேவைகளைக் கண்டுபிடிக்கலாம். எனவே இந்தப் பாடத்தைப் போதிக்கும்போது, இந்த ஒரே மையச் சத்தியத்தைப் போதிப்பதின்மூலம் அந்தத் தேவைகள் சந்திக்கப்பட வேண்டும் என்பதே உங்கள் செயல் நோக்கமாக இருக்க வேண்டும்.

எந்தச் சத்தியங்களை நீங்கள் முன்னரே போதித்திருக்கிறீர்கள்?

சிறுபிள்ளைகள் வேதாகம சத்தியங்களை முழுமையாகப் புரிந்துகொள்ளும்படி செய்ய வேண்டும் என்று நீங்கள் முயலுகிறீர்கள். ஒரு காலகட்டத்துக்குள்ளாக அவர்கள் "தேவனுடைய ஆலோசனை" முழுவதையும் அறிந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிறீர்கள். எனவே ஒரே சத்தியத்தையோ அல்லது தெரிந்தெடுக்கப்பட்ட சில சத்தியங்களை மட்டுமோ தொடர்ந்து போதித்துக் கொண்டிராதேயுங்கள். இதனால் பல சத்தியங்களை நீங்கள் விட்டுவிட நேரிடும்.

இந்த ஐந்து கேள்விகளுக்கும் நீங்கள் பதிலைக் கண்டுபிடிப்பீர்களானால், பிள்ளைகளுக்குப் போதிக்கப்போகும் பகுதியின் மையச் சத்தியத்தை உங்களால் கண்டுகொள்ள முடியும்.

எடுத்துக்காட்டாக, நீங்கள் நோவாவைக் குறித்த பாடத்தைப் போதிப்பீர்களானால் முந்தைய பக்கத்தில் குறிக்கப்பட்டுள்ள பத்துச் சத்தியங்களையும் நீங்கள் மறுபடியுமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்த ஐந்து கேள்விகளையும் பயன்படுத்தி எது மையச் சத்தியம் என்பதைக் கண்டுபிடியுங்கள்.

உங்கள் மையச் சத்தியத்தை எழுதிவையுங்கள்

உங்கள் மையச் சத்தியத்தை நீங்கள் தெரிந்துகொண்ட பிறகு, பிள்ளைகள் எளிதாகப் புரிந்துகொள்ளக்கூடிய சிறிய வாக்கியமாக அதை எழுதி வையுங்கள். அது நினைவுகூருவதற்குச் சிறிய வாக்கியமாகவும், எழுதுவதற்குத் தெளிவானதாகவும், பின்பற்றுவதற்குக் குறிப்பானதாகவும் இருக்க வேண்டும்.

உங்கள் பாடத்திட்டத்தின் மேல்பக்கத்தில் அதை எழுதிவையுங்கள். நீங்கள் அதைப் பெரிய எழுத்துக்களில் எழுதி சுவற்றில் ஒட்டிவைக்கலாம், அல்லது கரும் பலகையிலோ அல்லது பிளான்னல் அட்டையிலோ பொருத்திவைக்கலாம். அல்லது அதை ஒரு அட்டையில் எழுதிவைத்து, ஒவ்வொரு முறை அந்தச் சத்தியத்தைக் குறித்துப் பேசும்போது அதைப் பிள்ளைகளுக்குக் காட்டலாம். இதுவே சிறப்பான வழி என்று நான் நினைக்கிறேன். உங்கள் மையச் சத்தியத்தை அதற்கு அடையாளமாக இருக்கும் ஒன்றின்மீதோ அல்லது பிள்ளைகள் புரிந்துகொள்ள உதவும் ஒன்றின்மீதோ நீங்கள் எழுதிவைக்கலாம். எடுத்துக்காட்டாக, தேவனைக் குறித்த சத்தியத்தை ஒரு வட்ட வடிவ அட்டையில் எழுதிவைக்கலாம், அவர் துவக்கமும் முடிவுமில்லாத நித்தியர் என்பதற்கு இது அடையாளமாக இருக்கிறது.

➤ நீங்கள் சிக்கலான வாக்கியங்களை மையச் சத்தியமாக எழுதக் கூடாது. எடுத்துக்காட்டாக,

  “இரட்சிப்பானது நீதிமானாக்கப்படுதல், மறுபடியும் பிறத்தல், இழந்துபோன பாவிகளின் புத்திரசுவிகாரம் இவைகளை உள்ளடக்கியதாக இருக்கிறது, இரட்சிப்பின் விளைவாக இவை ஏற்படுகின்றன.”

  உங்கள் மையச் சத்தியம் எளியதாக இருக்க வேண்டும். இங்கே இதை *“தேவன் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும் எல்லாச் சிறுவர் சிறுமியரின் பாவங்களையும் மன்னிக்கிறார்”* என்று எழுதிவைத்தால் போதுமானது.

➤ நீளமான விவரங்களைக் கொண்ட வாசகங்களையும் நீங்கள் தவிர்க்க வேண்டும். இவை மையச் சத்தியத்துக்குப் பொருத்தமில்லாதவையாகும். எடுத்துக்காட்டாக,

  “நமது விழுந்துபோன இயல்பின் காரணமாக நம் அனைவருக்கும் ஒரு புதிய இருதயம் தேவைப்படுகிறது. நாம் ஆண்டவராகிய இயேசுவை விசுவாசிக்கும் போது தேவன் ஒரு புதிய இருதயத்தைக் கொடுக்கிறார். பரிசுத்த ஆவியானவர் நமக்குள் ஜீவிக்கும்படி வருகிறார்... அவர் நமக்குள் நித்தியமாக ஜீவிப்பார்.”

  இவை போதிக்கப்பட வேண்டிய சத்தியங்கள்தான். ஆனால் இந்த வாக்கியம்

பல சத்தியங்களை உள்ளடக்கிய நீளமான வாக்கியமாக இருக்கிறது. பிள்ளைகளால் புரிந்துகொள்ள முடியாத இறையியல் பதங்களைப் பயன்படுத்துகிறது. இதற்குப் பதிலாக, *"தேவன் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும் எல்லாருக்கும் ஒரு புதிய இருதயத்தையும் இயல்பையும் கொடுக்கிறார்"* என்பதே மையச் சத்தியமாக இருக்க வேண்டும்.

➤ மையச் சத்தியங்களாகத் தெளிவில்லாததும் நிறைவுபெறாததுமான வாக்கியங்களை எழுதிவைக்கக் கூடாது.

✓ எடுத்துக்காட்டாக, *"பரிசுத்த ஆவியானவர்"* என்று வெறுமனே எழுதிவைப்பது தெளிவில்லாததாக இருக்கிறது. அது ஒரு வாசகமோ அல்லது வாக்கியமோ அல்ல. இதற்குப் பதிலாக *"பரிசுத்த ஆவியானவர் பாவிகளுக்கு அவர்களுடைய பாவத்தைக் குறித்து உணர்த்துகிறார்"* என்று எழுதிவைக்கலாம்.

✓ *"இயேசுவானவர் புயலை அமர்த்துதல்"* என்பது ஒரு தலைப்பு மட்டுமே. அது உண்மையில் எதையும் போதிக்கவில்லை. மாறாக, *"புயலை அமர்த்தியதின்மூலம் தாம் தேவன் என்று இயேசுகிறிஸ்து காட்டுகிறார்"* என்று எழுதிவைக்கலாம்.

✓ இதைப்போலவே "மற்றவர்களை நேசித்தல்", *"ஒரு கிறிஸ்தவனாக இருத்தல்"* இவையும் முழுமை பெறாத வாசகங்களே, இவை மையச் சத்தியங்கள் அல்ல. பதிலாக, *"தேவன் ஒவ்வொரு கிறிஸ்தவரும் மற்றக் கிறிஸ்தவரை எப்போதும் நேசிக்க வேண்டுமென்று விரும்புகிறார்"* என்றோ, *"ஒரு கிறிஸ்தவன் என்பவன் இயேசுகிறிஸ்துவைத் தன் இரட்சகராக ஏற்றுக்கொண்டிருப்பவன்"* என்றோ எழுதிவைக்கலாம்.

✓ "இயேசுவைப் பின்பற்றுதல்" என்பது சரியானதொரு மையச் சத்தியம் அல்ல. *"ஆண்டவராகிய இயேசு தம்மைப் பின்பற்றும்படி நமக்குக் கட்டளை கொடுத்திருக்கிறார்"* என்று இது எழுதப்பட வேண்டும்.

➤ பெரும்பாலும் "நீங்கள்" "நாம்" என்ற சொற்களை மையச் சத்தியத்தில் சேர்க்காமலிருப்பது நலமாகும்; அந்த வாசகம் இரட்சிக்கப்பட்ட மற்றும் இரட்சிக்கப்படாத சிறுவர்கள் இருவருக்கும் பொருத்தமாக இருக்குமானால் அப்போது சேர்த்துக்கொள்ளலாம். *"தேவன் உங்களை (நம்மை) தமது மகிமைக்குப் படைத்தார்"* என்று எழுதலாம்; இப்போது இந்த *"உங்கள், நாம்"* என்ற சொற்கள் இரண்டு குழுவினருக்கும் பொதுவாக இருக்கின்றன. ஆனால் *"பரிசுத்த ஆவியாகிய தேவன் நமக்குள் ஜீவிக்கிறார்"* என்பதையோ அல்லது *"பரிசுத்த ஆவியாகிய தேவன் உங்களுக்குள் ஜீவிக்கிறார்"* என்பதையோ மையச் சத்தியமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. இந்தச் சத்தியம் அவரில் விசுவாசம் வைக்கிறவர்களுக்கு மட்டுமே உரித்தாகும். *"கிறிஸ்துவை விசுவாசிப்பவர்களில் பரிசுத்த ஆவியாகிய தேவன் ஜீவிக்கிறார்"* என்று அதை மாற்றி எழுதுங்கள். இப்போது "நீங்கள்" என்ற சொல்லை இருசாராருக்கும் பயன்படுத்தலாம்.

மையச் சத்தியம்: *"கிறிஸ்துவை விசுவாசிப்பவர்களில் பரிசுத்த ஆவியாகிய தேவன் ஜீவிக்கிறார்"*

✓ இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளுக்குப் பொருத்திக் காட்டுதல்: *"(எனவே) நீங்கள் எங்கே போகிறீர்கள், என்ன சொல்லுகிறீர்கள் என்பதில் கவனமாக இருங்கள்."*

✓ இரட்சிக்கப்படாத பிள்ளைகளுக்குப் பொருத்திக் காட்டுதல்: *"(எனவே) இயேசுகிறிஸ்துவை விசுவாசியுங்கள், பரிசுத்த ஆவியானவர் உங்களில் வாசம் பண்ணுவார்."*

மையச் சத்தியத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன:

- *தேவன் எங்கும் இருக்கிறார்.*
- *இயேசுகிறிஸ்துவே ஒரே இரட்சகர்.*
- *பாவம் நம்மைத் தேவனிடமிருந்து பிரிக்கிறது.*
- *தேவன் தாம் எப்போதும் தமது பிள்ளைகளோடு இருப்பதாக வாக்குத்தத்தம் அருளியிருக்கிறார்.*
- *தம்மைப் பின்பற்றும்படி இயேசுகிறிஸ்து நமக்குக் கட்டளையிடுகிறார்.*
- *பரிசுத்த ஆவியாகிய தேவன் ஒவ்வொரு விசுவாசியிலும் வாசம்பண்ணுகிறார்.*
- *நாம் பொறாமைப்படக் கூடாது என்று வேதாகமம் கூறுகிறது.*

உங்கள் மையச் சத்தியங்களை வேறுபடுத்திக் காட்டுங்கள்

தேவனுடைய ஆலோசனைகள் எல்லாவற்றையும் போதிப்பதே (அப். 20:26) நமது ஊழியமாகும். மற்றச் சத்தியங்களை விட்டுவிட்டு, சில மையமான சத்தியங்களை மட்டும் மறுபடியும் மறுபடியுமாகப் போதிப்பதிலுள்ள அபாயத்தை நீங்கள் உணர வேண்டும்.

பல பாடங்களில் நீங்கள் அதிகப்படியான சத்தியங்களை எளிதாகக் காணலாம்.

✓ "சிவந்த சமுத்திரத்தைக் கடத்தல்" நிகழ்ச்சியில் "தேவன் சர்வவல்லவர்" என்பதே மையச் சத்தியமாகும். "கிதியோனின் வெற்றி", "சிருஷ்டிப்பு", "எரிகோவின் வீழ்ச்சி", "பஞ்சத்தின்போது தேவன் எலியாவைப் பராமரித்தல்" போன்ற மேலும் பல நிகழ்ச்சிகளிலும் இதுவே மையச் சத்தியமாக இருக்கிறது.

✓ இயேசுகிறிஸ்துவின் உலக வாழ்க்கையைக் குறித்த பல பாடங்களில் நீங்கள் "இயேசுகிறிஸ்து தேவனாக இருக்கிறார்" என்ற மையச் சத்தியத்தைக் காணலாம்.

ஆனால் இந்தப் பாடங்களில் வேறு சாத்தியமான சத்தியங்களையும் காண முடியும். பிள்ளைகள் இவைகளையும் கேட்டுக் கற்றுக்கொள்ள வேண்டும். மேலும், நீங்கள் மறுபடியும் மறுபடியுமாக ஒருசில சத்தியங்களை மட்டும் போதிப்பீர்களானால் பிள்ளைகள் கவனத்தையும் ஆர்வத்தையும் இழந்துபோவார்கள்.

உங்களுடைய பாடங்களுக்கு அடிப்படையான வேதாகமப் பகுதிகளை நீங்கள் சரியாகவும் முழுமையாகவும் ஆய்வுசெய்வீர்களானால், அந்தப் பகுதிகளில் மெய்யாகவே காணப்படும் சத்தியங்களைப் போதிப்பீர்களானால், உங்கள் போதனையில் உண்மையாகவே பல்வேறு நயங்கள் காணப்படும். வேதாகமம் பரந்த சத்தியங்களின் தொகுதியைக் கொண்டிருக்கிறது; அது ஒருசில சத்தியங்களை மட்டும் மறுபடியும் மறுபடியுமாகக் கூறுவதில் முனைப்புக் கொண்டிருக்கவில்லை. கூடுமானவரையில் உங்கள் மையச் சத்தியங்களை மாற்றி மாற்றிப் பயன்படுத்துவது உங்கள் போதனைக்குத் துடிப்பையும் ஆழத்தையும் கொடுக்கும். பிள்ளைகள் ஏற்கெனவே கேள்விப்பட்டிருக்கும் பாடங்களையும் கதைகளையும்கூட நீங்கள் போதிக்கலாம்; புதிய சத்தியங்களைப் போதிப்பதற்கு நீங்கள் அவைகளைப் பயன்படுத்துகிறபடியால், கேட்பவர்களுக்கு அவை புத்துணர்வைக் கொண்டு வரும். வேதாகமக் கதை கேட்கும் வயதைத் தாங்கள் தாண்டிவிட்டதாகப் பிள்ளைகள் நினைக்க மாட்டார்கள். எவ்வளவுதான் அறிமுகமான ஒரு பகுதியை நாம் மறுபடியுமாகப் படித்தாலும், தேவன் எப்போதுமே நமக்குக் கூடுதலான போதனையைக் கொடுக்கிறார் என்பதை அவர்கள் கற்றுக்கொள்வார்கள். என்றாலும், மற்றச் சத்தியங்களைவிட இயல்பான வகையில் அடிக்கடி கூறப்படும் சில முக்கியமான வேதாகமச் சத்தியங்களும் உண்டு. நீங்கள் அதை உணர்ந்து உங்கள் போதனையில் அவைகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட சில சத்தியங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன:

- *இயேசுகிறிஸ்து பாவிகளுக்காகச் சிலுவையில் மரித்தார்*
- *தேவன் பரிசுத்தர்*
- *விசுவாசத்தினால் மட்டுமே இரட்சிப்பைப் பெற முடியும்.*

உங்கள் மையச் சத்தியங்களைப் பதிவுசெய்து வையுங்கள்

நீங்கள் ஒரு நோட்டுப் புத்தகத்தையோ அல்லது பதிவுசெய்வதற்கு வேறு ஏதேனும் வழிமுறையையோ வைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு வாரமும் நீங்கள் போதிக்கும் மையச் சத்தியத்தை அதில் பதிவுசெய்து வைக்க வேண்டும். திட்டமிடுதல் மற்றும் பதிவுக்கான ஒரு மாதிரிப் படிவம் 155ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

நீங்கள் பதிவுசெய்து வைத்திருப்பதை இடையிடையே எடுத்துப் பார்க்க வேண்டும். நீங்கள் போதிக்காத சத்தியம் ஏதேனும் இருக்கிறதா அல்லது சில சத்தியங்களை நீங்கள் அடிக்கடி போதித்திருக்கிறீர்களா என்பதைக் கண்டறிய வேண்டும்.

திட்டமிடப்பட்டிருக்கும் சத்தியங்களைப் பின்வரும் பாடங்களில், அதிலுள்ள வேத பகுதிக்கு ஏற்றபடி, சேர்த்துக்கொள்ளலாம். அல்லது பட அட்டைப் பாடத்திலோ அல்லது அதைப் போதிக்கும் வகையில் பிள்ளைகளுக்கு அறிமுகம் செய்யும் புதிய பாடலிலோ அதைச் சேர்த்துக் கொள்ளலாம்.

அத்தியாயம் 23
உங்கள் இலக்கை எட்டுங்கள்
மையச் சத்தியத்தைப் போதிப்பது எப்படி ?

அத்தியாயத்தின் சுருக்கம்

(இப்போது, மையச் சத்தியத்தை எவ்வாறு போதிப்பது என்று கற்றுக்கொள்ள நீங்கள் ஆயத்தமாக இருக்கிறீர்கள்).

- **மையச் சத்தியத்தைப் புரிந்துகொள்ளுங்கள்.** உங்களால் புரிந்துகொள்ள முடியாததை உங்களால் போதிக்க முடியாது.
- **மையச் சத்தியத்தை எளிதாக்குங்கள்.** அதை எளிமைப்படுத்துங்கள்.
- **மையச் சத்தியத்தை விளக்குங்கள்.** வெறுமனே அதைக் கூறாமல் போதியுங்கள்.
- **மற்றச் சத்தியங்களையும் சேர்த்துக்கொள்ளுங்கள்.** - அவை மையச் சத்தியத்தைப் போதிக்கவும் பொருத்திக் கூறவும் உங்களுக்கு உதவியாக இருக்குமானால்.
- **மையச் சத்தியத்தைச் சித்திரியுங்கள்.** - பிள்ளைகள் அதைக் காணும் படியாக.
- **மையச் சத்தியத்தை மறுபடியும் மறுபடியுமாகக் கூறுங்கள்.** ஒருமுறை மட்டும் கூறப்பட்டால் எளிதாக மறந்துவிடக் கூடும்.
- **மையச் சத்தியத்தைப் பொருத்திக் காட்டுங்கள்.** பலமுறை அந்தச் சத்தியத்தை உங்கள் பாடத்தோடு பிணைத்துக் காட்டுங்கள்.
- **உங்கள் மையச் சத்தியத்துக்கு ஆதாரமாக ஒரு வேதாகம வசனத்தைப் போதியுங்கள்.**

உங்கள் போதனை சிறப்பாக இருக்க வேண்டுமானால் நீங்கள் ஆறு முக்கியமான படிகளைப் பின்பற்ற வேண்டும். ஏற்கெனவே 19ஆம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள போதிப்பது குறித்த கொள்கைகளை இவை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. பிள்ளைகள் மையச் சத்தியத்தைக் கற்றுக்கொள்வதை எதிர்பார்ப்பதற்கு முன்பாக நீங்கள் அதைப் புரிந்துகொண்டு, எளிமைப்படுத்தி, விளக்கி, சித்திரித்து, மறுபடியுமாகக் கூறி அதைப் பொருத்திக்காட்ட வேண்டும். இதற்கு நேரம் ஆகும் என்கிறபடியால் ஒரு வேதபாடத்தில் பல சத்தியங்களை உள்ளடக்க முயலுவதற்கு மாறாக, ஒரு மையச் சத்தியத்தை மட்டுமே போதிக்க வேண்டும். வேதாகமத்தைக் குறித்து அதிகமான அறிவைப் பெற்றிராத இன்றைய பிள்ளைகளுக்குப் போதிக்கும்போது நீங்கள் கண்டிப்பாக இதைக் கையாள வேண்டும். பாடத்தின் மையச் சத்தியத்தை அறிந்து, புரிந்துகொண்டவர்களாகவே ஒவ்வொரு பிள்ளையும் வகுப்பைவிட்டுச் செல்ல வேண்டும் என்பதே உங்கள் இலக்காக

இருக்க வேண்டும். இதோடுகூடத் தனிப்பட்ட முறையில் அது அவர்களுக்கு எந்த அர்த்தத்தைக் கொடுக்கிறது என்பதையும் அவர்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

மையச் சத்தியத்தைப் புரிந்துகொள்ளுங்கள்

மையச் சத்தியத்தை நீங்களே புரிந்துகொள்ளாவிட்டால், அதை எளிமைப்படுத்தவோ அல்லது விளக்கிக் கூறவோ உங்களால் முடியாது. எனவே, 'நான் பிள்ளைகளுக்கு மையச் சத்தியத்தைப் போதிப்பது எப்படி?' என்ற கேள்வியைக் கேட்பதற்கு முன்பாக நீங்கள் வேறு பல கேள்விகளையும் கேட்டுக்கொள்ள வேண்டும்.

"மையச் சத்தியத்தின் அர்த்தம் என்ன?"
"அதை என் வாழ்க்கையில் எவ்வாறு செயல்படுத்த முடியும்?"
"எனது சொந்த வாழ்க்கையில் இந்தச் சத்தியத்தின் தாக்கம் என்ன?"

நீங்கள் எவ்வளவாக மையச் சத்தியத்தைப் புரிந்துகொள்கிறீர்களோ அவ்வளவாக அதை உங்கள் சொந்த வாழ்க்கையில் செயல்பூர்வமாக்க முடியும். அதை இன்னும் சிறப்பாகப் பிள்ளைகளுக்குப் போதிக்க முடியும்.

மையச் சத்தியத்தை எளிதாக்குங்கள்

நாம் ஏற்கெனவே இந்தப் புத்தகத்தில் எளிமையைக் குறித்துப் பார்த்திருக்கிறோம். மையச் சத்தியம் ஒரு எளிய, முழுமையான, சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிற வாசகமாக இருக்க வேண்டும்.

- *அதில் பயன்படுத்தப்படும் வார்த்தைகளைப் பொருத்தமட்டில் அது எளிதானதாக இருக்க வேண்டும். பிள்ளைகளால் புரிந்துகொள்ளக்கூடிய வார்த்தைகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.*
- *அதில் போதிக்கப்படும் கருத்தைப் பொருத்தவரையில் அது எளிதானதாக இருக்க வேண்டும். சரியாகவும் முழுமையாகவும் விளக்கப்படும்போது ஒரு சராசரிப் பிள்ளையினால் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் அதன் கருத்துக்கள் இருக்க வேண்டும்.*

ஆசிரியரால் அது சரியாகப் புரிந்துகொள்ளப்படுமானால் சத்தியம் எளிதாக இருக்கும். நீங்கள் எவ்வளவு சிறப்பாக அதைப் புரிந்துகொள்கிறீர்களோ அவ்வளவாக அதைப் போதிப்பது எளிதாக இருக்கும். சரியாகப் புரிந்துகொள்ளாவிட்டால் போதிப்பது கடினமாகவே இருக்கும்.

நீங்கள் பயன்படுத்தும் சொற்களைக் குறித்துக் கவனமாக இருப்பது அவசியம். சரியாக விளக்கப்படாமல் நீங்கள் சுவிசேஷப் பதங்களையோ வழக்குச் சொற்களையோ பயன்படுத்தக் கூடாது.

மையச் சத்தியத்தை விளக்குங்கள்

சத்தியத்தைக் குறித்து ஓரிரு வாக்கியங்களை மட்டும் கூறிவிட்டு, அதைப் போதித்துவிட்டதாக நினைப்பது போதுமானது அல்ல.

பிள்ளைகள் போதிக்கப்படும் சத்தியத்தைப் புரிந்துகொள்கிறார்களா என்பதைப் பாடம் நடத்தும் வேளை முழுவதிலும் உறுதிப்படுத்திக்கொள்ள நேரம் செலவிட வேண்டும். எளிய திடமான பதங்களைப் பயன்படுத்துங்கள். உங்கள் விளக்கங்கள் ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும் தெளிவாகவும் கொடுக்கப்பட வேண்டும். உங்களால் ஆவிக்குரிய அறிவைப் பகிர்ந்து கொடுக்க முடியாது என்றாலும், சத்தியத்தை முழுமையாகவும் கவனமாகவும் போதிக்கும் பொறுப்பை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள்.

வேதாகமப் பகுதி அனுமதிப்பதற்கு ஏற்றபடி, பாடத்தின் நடுவில் நான்கு அல்லது ஐந்து முறை உங்கள் மையச் சத்தியத்தைப் போதிக்க முயல வேண்டும். முதல் முறை பாடத்தில் நீங்கள் சத்தியத்தை அறிமுகம் செய்யும்போது, அதைக் குறித்த எளிய அடிப்படையான முன்னுரையைக் கொடுக்க வேண்டும், அதை விளக்க வேண்டும். பிறகு பாடத்தில் ஒவ்வொரு முறை அந்தச் சத்தியம் வரும்போதும் அதை விரிவாக்க வேண்டும். அது முதலில் கொடுக்கப்பட்ட முன்னுரையின் அடிப்படையில் படிப்படியாக முன்னேற வேண்டும்.

எடுத்துக்காட்டாக, "தேவன் நீதியுள்ளவர்" என்ற சத்தியத்தை நீங்கள் போதிப்பீர்களானால், முதலில் வாய்ப்புக்கிடைக்கும்போது "நீதியுள்ளவர்" என்பதற்கான அர்த்தத்தைக் கூற வேண்டும். பிறகு பாடத்தில் வாய்ப்புக் கிடைக்கிறபடி, தேவன் எவ்வாறு நீதியுள்ளவராக இருக்கிறார், அவர் அனைத்தையும் அறிந்திருக்கிறார், அவருடைய தீர்மானங்கள் சரியானவையாக இருக்கின்றன என்பவைகளை விளக்குங்கள். பிறகு, இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணம் எவ்வாறு தேவனுடைய நீதியைக் காட்டுகிறது என்றும், அவரால் எப்படி பாவிகளை மன்னித்தாலும் நீதியுள்ளவராக இருக்க முடியும் என்பதையும் விளக்குங்கள். மையச் சத்தியத்தின் இந்த வெவ்வேறான அம்சங்களும் விளக்கங்களும் கதையோட்டத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். ஒவ்வொன்றுக்கும் குறுகிய நேரத்தையே செலவிட வேண்டும்.

மற்றச் சத்தியங்களையும் சேர்த்துக்கொள்ளுங்கள்

அனைத்துப் பிள்ளைகளுக்கும் ஒரே சத்தியத்தைப் போதிக்க வேண்டும் என்ற இந்தக் கருத்துப் படிவத்தை அறிமுகம் செய்தபோது, பல ஆசிரியர்கள் இந்தக் கேள்வியைக் கேட்டார்கள்:

"நான் மையச் சத்தியத்தோடு என் போதனையை நிறுத்திகொள்ள வேண்டுமா, அல்லது பிற சத்தியங்களையும் சேர்த்துக்கொள்ளலாமா?"

இந்த இரண்டு கேள்விகளுக்கும் "ஆம்" என்பதே பதிலாகும்.

- *ஆம் நீங்கள் உங்கள் போதனையில் மையச் சத்தியத்தோடு நிறுத்திக் கொள்ள வேண்டும்.*
- *ஆம், நீங்கள் மற்றச் சத்தியங்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் - ஆனால் போதிப்பதற்காக அல்ல, மையச் சத்தியத்தைப் போதிப்பதற்கும் வாழ்க்கையில் செயல்படுத்துவதற்கும் உதவியாகப் பயன்படுத்த வேண்டும்.*

ஒரே மையச் சத்தியத்தை மட்டும் கூடுமான வரையில் போதிப்பதின் முக்கியத்துவத்தை நாம் மறுபடியும் மறுபடியுமாகப் பார்த்துவந்திருக்கிறோம். ஆனால் கீழ்க்கண்ட "விதிகள்" புரிந்துகொள்ளப்பட்டு, பின்பற்றப்படுமானால், மற்றச் சத்தியங்களையும் சேர்த்துக்கொள்ளலாம்.

- மற்றச் சத்தியங்கள் போதிக்கப்பட வேண்டிய சத்தியங்கள் அல்ல என்பதை நாம் புரிந்துகொள்வோமானால் அவைகளையும் நாம் சேர்த்துக்கொள்ளலாம். மையச் சத்தியமே போதிக்கப்படுகிறது. அந்தச் சத்தியத்தைப் போதிப்பதற்கு இந்த மற்றச் சத்தியங்கள் உதவியாக இருக்கின்றன.
- எனவே மையச் சத்தியத்தோடு தொடர்பு கொண்டிருந்தாலும், அவை மையச் சத்தியத்தைப் போதிக்கவும் பொருத்திக் காட்டவும் உதவியாக இருந்தாலும் மட்டுமே மற்ற சத்தியங்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

ஒரு மையச் சத்தியத்தை முற்றிலும் தனிப்பட்ட வகையில் போதிப்பது கடினமாகும், அது முடியாத காரியமுமாகும். மையச் சத்தியத்தைப் புரிந்துகொள்வதற்கு மற்றச் சத்தியங்களும் அவசியமாக இருக்கின்றன.

எடுத்துக்காட்டாக, *"இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதின் மூலமாக மட்டுமே இரட்சிப்பைப் பெற முடியும்"* என்பது மையச் சத்தியமாக இருக்குமானால் கீழ்க்கண்ட சத்தியங்களைச் சேர்த்துக்கொள்வது அந்தச் சத்தியத்தைப் போதிப்பதில் உதவியாக இருக்கும்:

- ✓ *"தேவனுடைய பரிசுத்தம் இரட்சிப்பை அத்தியாவசியமானதாக்குகிறது."*
- ✓ *"பாவத்தின் காரணமாக இரட்சிப்பு அவசியமாக இருக்கிறது."*
- ✓ *"இரட்சிப்பு கிடைக்கக்கூடிய வகையில் இயேசுகிறிஸ்து மரித்தார்."*
- ✓ *"தம்மில் விசுவாசம் வைப்பவர்களை இரட்சிக்கும்படி இயேசுகிறிஸ்து இன்றும் ஜீவிக்கிறார்."*

நீங்கள் இந்த மற்றச் சத்தியங்களைப் போதிக்கப் போவதில்லை. உங்கள் மையச் சத்தியத்தைப் போதிப்பதற்கு உதவியாக இவைகளைப் பயன்படுத்தப் போகிறீர்கள்.

- ➢ நீங்கள் குறிப்பிடும் மற்றச் சத்தியங்கள், போதிக்கப்படும் அதே வேத பகுதியில் காணப்படலாம் அல்லது கதையின் பகுதியாகக் காணப்படலாம், அப்படியானால் கதை கூறப்படும்போது, மையச் சத்தியம் போதிக்கப்படும் வேளையில் அவைகளின்மீது கவனத்தைக் கொண்டுவரலாம்.

என்றாலும், அந்தப் பகுதியிலுள்ள சத்தியங்கள் மையச் சத்தியத்தைப் போதிப்பதற்கு உதவியாக இராவிட்டால் அவைகளை விட்டுவிடலாம்.

இதே வேளையில் பொதுவாகக் காணப்படும் காரியம் என்னவென்றால், கூறப்படும் இந்த மற்றச் சத்தியங்கள் அதே வேதபகுதியில் வர வேண்டும் என்றில்லை. என்றாலும், உங்கள் மையச் சத்தியத்தைப் போதிப்பதற்கோ அல்லது அதைப் பொருத்திக் கூறுவதற்கோ அந்தச் சத்தியங்கள் உதவியாக

இருக்குமானால் அவைகளைத் தாராளமாகப் பயன்படுத்தலாம். இந்த மற்றச் சத்தியங்கள் ஏற்கெனவே பிள்ளைகளுக்குப் போதிக்கப்பட்டவையாக இருக்குமானால், அது அதிக உதவியாக இருக்கும். சிறுவர்களுக்கு நீங்கள் ஒழுங்காக ஊழியம்செய்துவரும்போது இதற்கான வாய்ப்பு உங்களுக்கு கிடைக்கும்.

மையச் சத்தியத்தைச் சித்திரியுங்கள்

பிள்ளைகள் வேதாகமத்தின் பெரிய சத்தியங்களைப் புரிந்துகொள்ள உதவியாக இருக்கும் மிகவும் முக்கியமானதும் பயனுள்ளதுமான வழி அவைகளைச் சித்திரிப்பதற்காக எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்துவதாகும்.

ஒரு சத்தியத்தைச் சித்திரிப்பது என்றால், பிள்ளைகளுக்கு அறிமுகமில்லாத ஒன்றை அவர்கள் புரிந்துகொள்ளும்படி செய்வதற்காக, அவர்களுக்கு அறிமுகமான ஒன்றை அல்லது ஒரு கதையைப் பயன்படுத்துவதாகும்.

இந்த எடுத்துக்காட்டுகள் பெரும்பாலும் அன்றாட வாழ்க்கையிலிருந்து எடுத்துக் கூறப்படும் கதைகளாகவோ அல்லது முன்மாதிரிகளாகவோ இருக்கின்றன; இவை நீங்கள் விளக்க முயலும் சத்தியத்தை இன்னும் தெளிவாக்குகின்றன. இவை வேதாகமத்தின் பிற பகுதியிலுள்ள உண்மைக்கதைகளாகவும் இருக்கலாம். இவை அறிவின் வெளிச்சத்தை உள்ளே விடும் சன்னல்களைப்போல இருக்கின்றன. நீங்கள் போதிப்பதைப் புரிந்துகொள்ளச் செய்யும்படியாக பாடத்தின்போது அவை அறிமுகம்செய்யப்படுகின்றன.

ஒரு கருப்பொருளை எவ்வளவு தூரம் தெளிவாக்க முடியுமோ அவ்வளவு தூரம் தெளிவாக்குவது நலமாகும். ஆனால் ஒரு வேதபாடத்தில் சாதாரணமாக இரண்டு அல்லது மூன்றுக்கு மேற்பட்ட எடுத்துக்காட்டுக் கதைகளை நீங்கள் பயன்படுத்தக் கூடாது.

எடுத்துக்காட்டாக, இயேசுகிறிஸ்துவின் மூலமாக மட்டுமே தேவனிடம் வர முடியும் என்று பிள்ளைகளுக்குப் போதித்துக்கொண்டிருப்பீர்களானால், நீங்கள் இந்த எடுத்துக்காட்டைப் பயன்படுத்தலாம்:

அரண்மனை வாசலருகே நின்றுகொண்டிருந்த அந்தச் சிறுவன் கலக்கமடைந்திருந்தான். 'ஏன் காவல்காரர் என்னை உள்ளே நுழைய அனுமதிக்கவில்லை? நான் அரசரைப் பார்க்க வேண்டுமே!' என்று அவன் கவலைப்பட்டான். எவ்வளவு கெஞ்சியும் காவல்காரன் அவன் உள்ளே போவதற்கு அனுமதிக்கவில்லை!

அப்போது ஒரு இளைஞன் வாசலின் அருகே வந்தான். சிறுவன் கவலையோடிருப்பதைக் கண்டு அவனருகே வந்தான். "என்ன நடந்தது?" என்று அக்கறையோடு கேட்டான்.

''எனக்கு ராஜாவைப் பார்க்க வேண்டும். இவர்கள் என்னை உள்ளே விடமாட்டேன் என்கிறார்கள்'' என்று சிறுவன் பதிலளித்தான்.

"என்னோடு வா" என்று கூறிய அந்த இளைஞன் அவனுடைய கையைப் பற்றிக் கொண்டான்.

அவர்கள் காவல்காரனின் அருகே வந்தார்கள். அவன் அந்த இளைஞனுக்கு வணக்கம் கூறி, கதவைத் திறந்துவிட்டான். அவர்கள் எளிதாக உள்ளே நுழைந்து விட்டார்கள்! நடந்து சென்று அரண்மனையின் பெரிய கதவையும் கடந்து விட்டார்கள்! இதோ அந்த இளைஞன் சிறுவனைத் தாழ்வாரத்தின் வழியாகக் கூட்டிச் சென்று அரசர் இருக்கும் இடத்துக்கே அழைத்துச் சென்றுவிட்டான்.

சிறுவனுக்கு ஒரே வியப்பு! துணிவை வரவழைத்துக்கொண்டு, "எப்படி அந்தக் காவல்காரன் உங்களை உள்ளே விட்டான்?" என்று கேட்டான்.

"எனது தகப்பனார்தான் ராஜா" என்று அந்த இளைஞன் பதிலளித்தான்.

ஒரு வேதாகமக் கதையே உங்கள் பாடத்துக்கு அடிப்படையாக இருக்குமானால், அந்தக் கதையை விவரித்துக் கூறுவதே மையச் சத்தியத்துக்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும். அப்போது வேறு எடுத்துக்காட்டுக் கதைகளுக்குத் தேவை இருக்காது.

எடுத்துக்காட்டாக, பஞ்ச காலத்தில் எலியாவின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட வேதபாடத்தை நீங்கள் போதிப்பீர்களானால், *"தேவன் தமது பிள்ளைகளைப் பராமரிக்கிறார்"* என்பதே உங்கள் மையச் சத்தியமாக இருக்கிறது. உண்மைக் கதையே இந்தச் சத்தியத்தை விளக்கப் போதுமான எடுத்துக்காட்டுகளைக் கொண்டிருக்கிறது.

ஆனால், *"தேவன் பரிசுத்தர்"* போன்ற நேரடியான கோட்பாட்டுப் பாடத்தை நீங்கள் போதிப்பீர்களானால், பல்வேறு குறிப்புகளை விளக்க உங்களுக்கு அதிகமான எடுத்துக்காட்டுக் கதைகள் தேவைப்படும். ஏனென்றால் உங்கள் பாடத்துக்கு ஒரு குறிப்பிட்ட வேதாகமக் கதை அடிப்படையாக இல்லை. கதை இல்லாதபடியால் இந்த எடுத்துக்காட்டுக் கதைகள் மாணவரின் கவனத்தைச் சிதறாமல் காத்துக் கொள்ளத் தேவைப்படுகின்றன.

எடுத்துக்காட்டுகளைப் பொருத்தவரையில் பல முக்கியமான கருத்துக்களை நினைவில் வைத்திருக்க வேண்டும்:

- பயன்படுத்தப்படும் எடுத்துக்காட்டுக் கதைகள் நீங்கள் போதிக்கும் சத்தியத்தைச் சித்திரிக்கின்றனவா, விளக்குகின்றனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் குழப்பமே ஏற்படும்.
- கண்களைக் கலங்கவைக்கும் உணர்ச்சிமயமான கதைகளைப் பயன்படுத்தாதீர்கள். இவை வெறுமனே பிள்ளைகளின் உணர்வுகளைத் தூண்டிவிட மட்டுமே செய்யும்.
- உங்கள் எடுத்துக்காட்டுகள் அதிக நீளமானவையாகவோ, வேடிக்கையானவையாகவோ அல்லது அளவுக்கு அதிகச் சித்தரிப்பைக் கொண்டவையாகவோ இருக்கக்கூடாது. இது இடையூறாகவே இருக்கும். பிள்ளைகள் இவை

போதிக்கும் சத்தியத்தை நினைவில் வைத்திராமல் இந்தக் கதைகளை மட்டும் நினைவில் வைத்திருக்கும் அபாயமும் ஏற்பட்டு விடுவதுண்டு.

- அளவுக்கு அதிகமான எடுத்துக்காட்டுக் கதைகளைப் பயன்படுத்துவதின் மூலம் கதையோட்டத்துக்குத் தடை ஏற்படுத்திவிடாதீர்கள்.

மையச் சத்தியத்தை மறுபடியும் மறுபடியுமாகக் கூறுங்கள்

பிள்ளைகள் ஒரு காரியத்தை ஒரேயொரு முறை மட்டுமே கேட்டால் அவர்களால் அதைக் கற்றுக்கொள்ள முடியாது.

எனவே மறுபடியுமாகக் கூறுவது போதிப்பதின் அத்தியாவசியமான அம்சமாக இருக்கிறது. மறுபடியுமாகக் கூறப்பட்டு, மறுஆய்வுசெய்யப்படும் சத்தியங்களைப் பிள்ளைகள் புரிந்துகொண்டு நினைவில் வைத்திருக்கிறார்கள்.

என்றாலும், உங்கள் மையச் சத்தியத்தை மறுபடியுமாகக் கூறும்போது, அது கூறப்படும் விதத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். மையச்சத்தியத்தை விளக்கும் வாசகத்தை நீங்கள் மீண்டும் மீண்டுமாகச் சொல்லிக்கொண்டிருக்கக் கூடாது. ஆசிரியர் ஒரே சத்தியத்தை மறுபடியும் மறுபடியுமாகக் கூறும்போது ஒவ்வொரு முறையும் ஆர்வத்தைத் தூண்டும் வெவ்வேறான வழிகளில் அதை அறிவிக்க வேண்டும். ஒவ்வொரு முறையும் அந்தச் சத்தியத்தைக் குறித்த விளக்கம் ஆழமாகவும் விசாலமாகவும் முன்னேறிச் செல்ல வேண்டும்.

அடுத்துவரும் வரைபடத்தில் இது விளக்கப்பட்டிருக்கிறது. உங்கள் கதையோட்டத்தை நீங்கள் கூறும்போது இடையிடையே அது நீங்கள் போதிக்கும் சத்தியத்தோடு குறுக்கிட வேண்டும். ஆனால் ஒவ்வொரு முறையும் ஒரே மட்டத்திலோ அல்லது ஒரே சொற்களைப் பயன்படுத்தியோ அதை விளக்கக் கூடாது. ஒவ்வொரு முறை மையச் சத்தியத்தை விளக்கும் வேளை (X குறி) வரும்போது அதை இன்னும் ஆழமாகப் போதிக்க வேண்டும்.

நாம் போதிக்கும் பாடத்தில் பல முறை மையச் சத்தியத்தை மறுபடியும் மறுபடியுமாகக் கூற வேண்டுமென்று நாம் பார்த்தோம். நமது போதிக்கும் செயல் திட்டத்தின் மற்ற பகுதிகளிலும்கூட நாம் இந்த மையச் சத்தியத்தை



மறுபடியுமாகக் கூற வேண்டும் - மையச் சத்தியத்தைப் போதிக்கும் அல்லது குறிப்படும் கோரஸ் பாடல்கள், பொருத்தமான மனப்பாட வசனத்தைக் கற்றுக் கொள்ளுதல், சத்தியத்தை விளக்கக்கூடிய ஒரு அருட்பணிக் கதையைக் கூறுதல். மேலும், பின்னால் வரும் கூட்டங்களிலும்கூட நாம் போதித்த சத்தியங் களை உறுதிப்படுத்தும்படி அவைகளை மறுஆய்வுசெய்ய வேண்டும்.

மையச் சத்தியத்தைப் பிணைத்துக் கொடுங்கள்

வேதபாடத்தில் மையச் சத்தியத்தை மறுபடியும் மறுபடியுமாகக் கூறுவதற்கு "பிணைத்துக் கொடுத்தல்" முறை அதிகப் பயனுள்ளதாகும்.

மையச் சத்தியத்தைப் போதிப்பதற்கும் செயல்படுத்துதலை எடுத்துக் கூறுவதற்கும் வேதபாடத்தின் இறுதி வரையில் காத்திருக்கக் கூடாது. அந்த வேளையில் பிள்ளைகளின் கவனத்தைப் பெறுவது கடினமாகும். எனவே ஒரு துணியில் நூலைக் கோர்ப்பதுபோல, கதையோட்டம் முழுவதிலும் அதைப் பின்னிப் பிணைத்துக் கொடுக்க வேண்டும். மையச் சத்தியமானது உங்கள் வேதபாடம் அல்லது வேதாகமக் கதையின் பிரிக்கமுடியாத அம்சமாக இருக்க வேண்டும். அது கதையோட்டத்தோடு சேர்த்து நெய்யப்பட்டிருக்க வேண்டும். இதனால் சத்தியமானது கதையோடு தெளிவாக இணைக்கப்படுகிறது; கதையைச் சொல்லும் போதே நீங்கள் அதையும் போதிக்க முடியும். கீழே கொடுக்கப் பட்டுள்ள வரைபடத்தில் அது எவ்வாறு செய்யப்படுகிறது என்பதை நீங்கள் காணலாம். X என்ற குறியிடப்பட்ட ஒவ்வொரு இடத்திலும் சத்தியத்தைப் போதிக்க வேண்டும். பாடத்தின் முடிவு வரையில் காத்திருக்கக் கூடாது.

இந்த வகையில் கதையோட்டமும் தொடர்ந்து செல்லும். பிள்ளைகளின் கவன மும் சிதறடிக்கப்படாமல் இருக்கும். பாடத்தின் இடையிடையே ஒரு சிறிய வாக்கியமாக மையச் சத்தியத்தைக் கூறுவது போதுமானதல்ல என்று நாம் ஏற்கெனவே பார்த்தோம். ஆனால் ஏற்கெனவே நாம் பார்த்தபடி அதை நீங்கள் விளக்கி, பொருத்திக் காட்ட வேண்டும்; ஒவ்வொரு முறையும் ஒரே வார்த்தை களைப் பயன்படுத்தக்கூடாது.



இவ்வாறு மையச் சத்தியமானது இயல்பாக வாய்ப்புக்கிடைக்கும் ஒவ்வொரு இடத்திலும் பாடத்தின் நடுவே கொண்டுவரப்படுகிறது. உங்கள் வேதாகமக் கதையிலுள்ள மையச் சத்தியத்தை நீங்கள் போதித்துகொண்டிருப்பீர்களானால், அது பல முறை வேதபகுதியின் வசனங்களில் வருவதை நீங்கள் காணலாம்.

எடுத்துக்காட்டாக, நீங்கள் அப்போஸ்தலர் 2:1 - 40 வசனங்களின் அடிப்படையில் (பெந்தெகொஸ்தே நாள்) வேதபாடத்தைப் போதித்துக்கொண்டிருப்பீர்களானால், *''பரிசுத்த ஆவியானவர் அனைத்து விசுவாசிகளிலும் ஜீவிக்கிறார்''* என்பதே உங்கள் மையச் சத்தியமாகும்.

பாடத்தில் பல இடங்களில் நீங்கள் இந்தச் சத்தியத்தைப் பிணைத்துக் கொடுக்கலாம். ஒவ்வொரு முறையும் சத்தியத்தின் வெவ்வேறு அம்சங்களை விளக்கலாம்.

- வசனம் 1-4. பரிசுத்த ஆவியானவர் அனைத்துச் சீஷர்களிலும் வாசம்பண்ணும்படி வந்தார் *(பரிசுத்த ஆவியானவர் சிறப்பான கிறிஸ்தவர்களில் மட்டும் வாசம்பண்ணுவதில்லை. அவர் அனைத்துக் கிறிஸ்தவர்களிலும் வாசம் பண்ணுகிறார்).*
- வசனம் 17. பரிசுத்த ஆவியானவரின் வரம் பழைய ஏற்பாட்டிலேயே வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது *(தேவன் எப்போதுமே தமது வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுகிறார். நீங்கள் கிறிஸ்துவை விசுவாசிப்பீர்களானால் உங்களில் வாசம்பண்ணுவதாகக் கூறும் வாக்குத்தத்தத்தையும் நிறைவேற்றுவார்).*
- வசனம் 33. இயேசுகிறிஸ்துவே பரிசுத்த ஆவியானவரைக் கொடுக்கிறார் *(நித்தியஜீவன் இயேசுகிறிஸ்துவிடமிருந்து வரும் ஈவு என்பதுபோலப் பரிசுத்த ஆவியானவரும் அவரால் அருளப்படும் ஈவாக இருக்கிறார்).*
- வசனம் 37. இப்போது சீஷர்களில் வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவர் அவர்களுடைய பேச்சைக் கேட்டுக்கொண்டிருப்பவர்களின் பாவங்களை அவர்களுக்கு உணர்த்துகிறார் *(உங்கள் சாட்சியிலும்கூட அவர் உங்களுக்கு உதவுவார்)*
- வசனம் 38. தங்கள் பாவத்திலிருந்து திரும்பி கிறிஸ்துவை விசுவாசிக்கும் எவரிலும் பரிசுத்த ஆவியானவர் வாசம்பண்ணுகிறார் *(இன்றே கிறிஸ்துவை நீங்கள் விசுவாசிப்பீர்களானால் இந்த ஈவைப் பெற்றுக்கொள்ளலாம்).*

மையச் சத்தியத்தைச் செயல்பூர்வமாகக் காட்டுங்கள்

மையச் சத்தியத்தைப் போதிப்பதில் ஆறாவது படி அதை இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளுக்கும் இரட்சிக்கப்படாத பிள்ளைகளுக்கும் செயல்பூர்வமாகப் பொருத்திக் காட்டுவதாகும். இது முக்கியமான காரியமானபடியால் 24ஆம் அத்தியாயத்தில் இதைக் குறித்து முழுமையாக விளக்கப்பட்டிருக்கிறது.

மையச் சத்தியத்துக்கு ஆதாரமாக ஒரு வேத வசனத்தைப் போதியுங்கள்

மையச் சத்தியத்தைத் தெளிவுப்படுத்தி விளக்கும் ஒரு வசனத்தைத் தெரிந்துகொள்வது முக்கியமாகும். பிறகு உங்கள் வேதபாடத்தின்போது இந்த வசனத்தை

மேற்கோளாகக் கூற வேண்டும். தேவனுடைய வார்த்தையில் வல்லமை இருக்கிறது என்பதை மறந்துவிடாதீர்கள். எனவேதான் உங்கள் பாடத்தில் வேதாகமத்திலிருந்து மேற்கோள் வசனங்களை எடுத்துக்கூற வேண்டும். அதே வேளையில் அந்த வசனத்தின் அர்த்தத்தையும், அது எவ்வாறு மையச் சத்தியத்தோடு தொடர்பு கொண்டிருக்கிறது என்பதையும் விளக்கிக் கூற வேண்டும்.

எடுத்துக்காட்டாக, "தேவன் பரிசுத்தர்" என்ற மையச் சத்தியத்தை நீங்கள் பயன்படுத்துவீர்களானால், 1 பேதுரு 1:15 வசனத்தை உங்கள் முக்கிய வேத வசனமாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

"உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்."

அல்லது நீங்கள் *"உங்களை இரட்சிக்கும்படியாக இயேசுகிறிஸ்து மரித்தார். நீங்கள் அவரிடம் வேண்டிக்கொள்வீர்களானால் அவர் உங்களை இரட்சிப்பார்"* என்ற மையச் சத்தியத்தை நீங்கள் பயன்படுத்துவீர்களானால், ரோமர் 10:13 வசனத்தை முக்கிய வசனமாக எடுத்துக்கொள்ளலாம்.

"கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்". இந்த முக்கிய வசனத்தை உங்கள் மனப்பாட வசனமாகவும் தெரிந்துகொள்வது நலமாகும். பிள்ளைகள் மையச் சத்தியத்தைப் புரிந்துகொள்ளவும் அதை நினைவில் வைத்திருக்கவும் அது உதவும்.

அத்தியாயம் 24

அதன் அர்த்தத்தைக் கூறுங்கள்

மையச் சத்தியத்தைப் பொருத்திக் காட்டுவது எப்படி ?

அத்தியாயத்தின் சுருக்கம்

(பிள்ளைகளுக்குப் போதிக்கப்படும் சத்தியம் எப்போதுமே செயல்பூர்வமாக்கப்பட வேண்டும்).

- **பொருத்திக் காட்டுதல் அவசியமானது என்பதை நீங்கள் உணர வேண்டும்.**
- **இரண்டு விதமான செயல்படுத்துதலை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும்.**
- **இரண்டுவிதமான செயல்படுத்துதலையும் எழுதி வைக்க வேண்டும்.**
- **இரண்டுவிதமான செயல்படுத்துதலையும் செய்ய வேண்டும்.**
- **உங்கள் செயல்படுத்துதலில் நீங்கள் அழைப்பையும் அறைகூவலையும் உள்ளடக்க வேண்டும்.**

இரண்டு வகைப்பட்ட பிள்ளைகள் இருக்கிறார்கள் என்று ஏற்கெனவே நாம் முந்தைய அத்தியாயங்களில் பார்த்திருக்கிறோம்.

- இயேசுகிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டிராத பிள்ளைகள்.

அவர்கள் ஆவிக்குரிய பிரகாரமாக மரித்தவர்களாக இருக்கிறார்கள்; அவர்களுக்கு **ஜீவன்** தேவைப்படுகிறது.

- இயேசுகிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ள பிள்ளைகள், இவர்கள் ஆவிக்குரியபிரகாரமாக ஜீவனோடு இருக்கிறார்கள். இவர்களுக்குப் **போஷாக்கு** தேவைப்படுகிறது.

இதன் விளைவாக, சிறுவர்களுக்குப் போதிக்கும் நமக்கு இரண்டு பொறுப்புகள் இருக்கின்றன என்பதையும் ஏற்கெனவே பார்த்தோம்.

- இரட்சிக்கப்படாத பிள்ளைகளுக்கு **நற்செய்தி அறிவித்தல்**
- இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு **போஷாக்களித்தல்.**

ஆகையால், இந்த இரண்டு நோக்கங்களையும் நிறைவேற்றும்படி உங்கள் வேத பாடத்தை நீங்கள் பயன்படுத்த வேண்டும். இந்தப் பாடத்தில் பார்க்கிறபடி, மையச் சத்தியத்தை அனைத்துப் பிள்ளைகளுக்கும் போதிக்கும் வேளையில், அதை இரண்டு வழிகளில் பொருத்திக் காட்ட வேண்டும் - இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளுக்கும், இரட்சிக்கப்படாத பிள்ளைகளுக்கும்.

பொருத்திக்காட்டுதல் அவசியமாகும்

பிள்ளைகளுக்கு மையச் சத்தியத்தைப் போதிப்பது மட்டும் போதாது. அவர்களுக்கு அதைப் பொருத்திக்காட்ட வேண்டும். அதாவது, போதிக்கப்பட்டதின் விளைவாக அவர்கள் ***என்ன செய்ய*** (பிரயோகித்துக் காட்ட) வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதை அவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். முதலில் புரிந்துகொள்ள வேண்டும்; ஆனால் அதைத் தொடர்ந்து செயல்படுதலும் காணப்பட வேண்டும். சத்தியம் என்ற வேரிலிருந்து செயல்படுத்துதல் வருகிறது. இது அதிலிருந்து வரும் கனியாகும். எனவே, ஒவ்வொரு பாடத்திலும் சத்தியமும், செயல்படுத்துதலும் காணப்பட வேண்டும்.

ஆனால் இரண்டு வகைப்பட்ட பிள்ளைகள் இருக்கிறார்கள் என்று நாம் பார்த்திருக்கிறோம். எனவே, இரட்சிக்கப்பட்ட பிள்ளைகள் எப்படிச் செயல்பட வேண்டும் என்றும், இரட்சிக்கப்படாத பிள்ளைகள் எப்படிச் செயல்பட வேண்டும் என்றும் நீங்கள் எடுத்துக்கூற வேண்டும். நீங்கள் மையச் சத்தியத்தை அனைத்துப் பிள்ளைகளுக்கும் போதிக்க வேண்டும். ஆனால் அதை ஒவ்வொரு வகைப்பட்ட சிறுவர்களுக்கும் ஏற்றபடி, இரண்டு வெவ்வேறான வழிகளில் பொருத்திக் காண்பிக்க வேண்டும்:

- இரட்சிக்கப்படாத பிள்ளைகள் தாங்கள் இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை அறியும் வகையில், மையச் சத்தியத்தைப் பொருத்திக் காட்ட வேண்டும்.
- இரட்சிக்கப்பட்ட பிள்ளைகள் எப்படி வளர்ச்சிபெற முடியும் என்பதைக் காட்டும் வகையில் மையச் சத்தியத்தை அவர்களுக்குப் பொருத்திக் காட்ட வேண்டும்.

எடுத்துக்காட்டாக, *"இயேசுகிறிஸ்து மறுபடியும் வருகிறார் - இன்றுகூட வரலாம்"* என்பது உங்கள் மையச் சத்தியமாக இருக்குமானால், இந்தச் சத்தியத்தை

மற்றொரு பகுதியில் அவர்களுக்குச் சில போதனைகளையும் ஆவிக் குரிய உணவையும் கொடுங்கள். மேலும், சத்தியத்தின் நற்செய்திப் பொருத் தத்தை மறுபடியுமாகக் கேட்பது இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளுக்கும் உதவி யாக இருக்கும். சுவிசேஷத்தைப் பொருத்தவரையில் அது அவர்களுடைய ஞாபகசக்தியைப் புதுப்பிக்கும். மற்றவர்களோடு இந்தச் செய்தியைப் பகிர்ந்து கொள்ளுமாறு அவர்களை ஊக்குவிக்கும்.

- மையச் சத்தியம் இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு மட்டுமே பொருத்திக் காட்டுவதற்கு வாய்ப்பைக் கொடுக்கிறது (மூன்றாம் படம்)

இப்படியிருக்குமானால் சுவிசேஷப் பொருத்தத்தைத் திணிக்காதீர்கள். உங் கள் போதிக்கும் செயல்திட்டத்தில் வேறொரு பகுதியில் குறிப்பாக இரட்சிக் கப்படாத பிள்ளைகளுக்கு ஏற்ற வேறு எதையேனும் நீங்கள் சேர்க்கலாம். மேலும், இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு இந்தச் சத்தியம் செயல்பூர்வமாக் கிக் கூறப்படுவதைக் கேட்பது இவர்களுக்கும் பயனளிக்கும். கிறிஸ்தவ வாழ்க் கையில் எவையெல்லாம் உள்ளடங்கியிருக்கின்றன என்பதை அவர்கள் சிறப் பாகப் புரிந்துகொள்ள இது உதவும்.

செயல்படுத்துதல்களை எழுதிவையுங்கள்

நீங்கள் ஏற்கெனவே உங்கள் செயல்திட்டத்தின் தலைப்பில் மையச் சத்தியத்தைச் சுருக்கமானதும் எளிமையானதும் சுருங்கக்கூறி விளங்கவைப்பதுமான வாக்கி யத்தில் எழுதிவைத்திருக்கிறீர்கள். இந்தச் சத்தியத்தை இரட்சிக்கப்பட்ட பிள்ளை களுக்கும் இரட்சிக்கப்படாத பிள்ளைகளுக்கும் எவ்வாறு பொருத்திக்காட்டுவது என்று ஆலோசித்து, இரண்டு பதில்களையும் கண்டுபிடித்திருக்கிறீர்கள்.
இப்போது மையச் சத்தியத்தைச் சுருக்கமாகக் கூறும் வாக்கியத்தின் கீழாக இந்த இரண்டு பதில்களையும் எழுதுங்கள்:

- செயல்படுத்துதலை விவரிக்கும் வாக்கியமும் எளிமையானதாகவும் சுருங் கக்கூறி விளங்க வைப்பதாகவும் இருக்க வேண்டும்.
- செயல்படுத்துதலை ஒரே வாக்கியத்தில் விவரிக்க வேண்டும்.
- இவைகள் ஒவ்வொன்றிலும் "நீங்கள்" என்ற சொல்லைப் பொதுவாக நீங்கள் பயன்படுத்தலாம்.

எடுத்துக்காட்டாக, கீழ்கண்ட மையச் சத்தியங்களில் பிள்ளைகளுக்குப் பொருத் தமான செயல்படுத்துதல் வாக்கியம் (வாக்கியங்கள்) யாவை? ஒவ்வொரு சத்தி யத்துக்குப் பின்னாலும் "எனவே" என்ற சொல்லை எழுதி செயல்படுத்துதலைக் கண்டுபிடித்து, வாக்கியத்தைப் பூர்த்திசெய்யுங்கள்

- *வேதாகமம் தேவனுடைய வார்த்தையாகும்.*
- *பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு விசுவாசியிலும் ஜீவிக்கிறார்.*
- *ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மறுபடியுமாக வருகிறார்.*
- *ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சர்வவல்லவர்.*

- இயேசுவை விசுவாசிப்பதின் மூலமாக மட்டுமே இரட்சிப்பைப் பெற முடியும்.

இப்போது இதை மாற்றிப் பார்ப்போம். கீழே சில செயல்படுத்துதல் வாக்கியங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்குரிய மையச் சத்தியங்கள் யாவை? மையச் சத்தியத்தை கண்டுபிடிக்க "ஏன்?" என்ற கேள்வியை ஒவ்வொரு வாக்கியத்துக்கும் பயன்படுத்துங்கள்.

- உங்கள் வேதாகமத்தை ஒவ்வொரு நாளும் வாசியுங்கள் (அனைத்துப் பிள்ளைகளுக்கும் பொருத்தமான செயல்படுத்துதல்)
- போதை மாத்திரைகளைப் பயன்படுத்தாதீர்கள். அவை உங்கள் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் (அனைத்துப் பிள்ளைகளுக்கும், ஆனால் குறிப்பாக இரட்சிக்கப்படாத பிள்ளைகளுக்குப் பொருத்தமான செயல்படுத்துதல்)
- நீங்கள் எங்கே போகிறீர்கள், எதைச் செய்கிறீர்கள் என்பதில் கவனமாக இருங்கள் (இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளுக்குப் பொருத்தமான செயல்படுத்துதல்)
- நீங்கள் எவ்வளவு மோசமானவர்களாக இருந்தாலும் ஆண்டவராகிய இயேசு உங்களை இரட்சிக்க வல்லவர் (இரட்சிக்கப்படாத பிள்ளைகளுக்குப் பொருத்தமான செயல்படுத்துதல்)
- ஆண்டவராகிய இயேசுவை விசுவாசியுங்கள். அப்போது நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள் (இரட்சிக்கப்படாத பிள்ளைகளுக்குப் பொருத்தமான செயல்படுத்துதல்)


வேதபாடம்
போதித்தல்
மையச் சத்தியம்
பொருத்திக் காட்டுதல்
பொருத்திக் காட்டுதல்
இரட்சிக்கப்படாத பிள்ளைகள்
இரட்சிக்கப்பட்ட பிள்ளைகள்


வேதபாடம்
போதித்தல்
மையச் சத்தியம்
பொருத்திக் காட்டுதல்
இரட்சிக்கப்படாத பிள்ளைகள்



இந்தச் செயல்படுத்துதல்கள் ஏற்கெனவே முன்னால் கூறப்பட்ட மையச் சத்தியங்களுக்கு உரியவை என்பதை நீங்கள் கண்டுபிடித்தீர்களா? ஒவ்வொரு சத்தியத்தையும் அதற்குரிய செயல்படுத்துதலையும் ஒன்றாக இணையுங்கள். சத்தியத்துக்கும் செயல்படுத்துதலுக்கும் இடையேயுள்ள இணைப்புச் சொல்லாக உங்களால் “எனவே” என்ற சொல்லைப் பயன்படுத்த முடியும் என்பதை கவனியுங்கள்.

மையச் சத்தியம்		செயல்படுத்துதல்
வேதாகமம் தேவனுடைய வார்த்தையாகும்...		உங்கள் வேதாகமத்தை ஒவ்வொரு நாளும் வாசியுங்கள் (இரண்டு குழுவினருக்கும்)
பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு விசுவாசியிலும் ஜீவிக்கிறார்...	எ	போதை மருந்துகளை உட்கொள்ளாதீர்கள், அது உங்கள் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் (குறிப்பாக இரட்சிக்கப் படாதவர்களுக்கு)
ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மறுபடியும் வருகிறார்...	ன	நீங்கள் எங்கே போகிறீர்கள், என்ன செய்கிறீர்கள் என்பதில் கவனமாக இருங்கள் (இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு)
ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சர்வ வல்லவர்...	வே	நீங்கள் எவ்வளவு மோசமானவர்களாக இருந்தாலும் ஆண்டவராகிய இயேசு உங்களை இரட்சிக்க வல்லவர் (இரட்சிக்கப்படாத பிள்ளைகளுக்கு)
இயேசுவானவரை விசுவாசிப்பதினால் மட்டுமே இரட்சிப்பு கிடைக்கிறது...		ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசியுங்கள் நீங்கள் இரட்சிக்கப் படுவீர்கள் (இரட்சிக்கப்படாத பிள்ளைகளுக்கு)

மேலே உள்ள பட்டியலிலிருந்து, “எனவே” என்ற சொல் எவ்வாறு மையச் சத்தியத்தையும் செயல்படுத்துதலையும் இணைக்கிறது என்பதைக் கண்டு கொண்டீர்கள் அல்லவா?

சிறுவர்களில் ஒரு வகைப்பட்டவர்களுக்கு நான் பொருத்திக் காட்டியுள்ள அனைத்துச் சத்தியங்களும் மற்ற வகைப்பட்டவர்களும்கூட ஓரளவு பொருத்திக் காட்டப்படலாம் என்பது உண்மைதான்.

நீங்கள் பிள்ளைகளுக்குச் செயல்படுத்துமாறு கூறுவது எப்போதுமே ஒன்று போலவே இருக்குமானால், ஏதோ தவறு என்றுதான் அர்த்தமாகும். மையச் சத்தியமே செயல்படுத்துதல் எப்படியிருக்கும் என்பதைத் தீர்மானிக்கிறது. மையச் சத்தியம் வேறுபடுகிறபடியால், செயல்படுத்துதலும் வேறுபட வேண்டும்.

செயல்படுத்துதலைச் செய்யுங்கள்

நீங்கள் மையச் சத்தியத்தைப் பாடம் முழுவதிலும் போதிக்கும்போது, ஏதாவது ஓரிடத்தில் அதைச் செயல்பூர்வமாக்கிக் காட்ட வேண்டும். இதற்காகப் பாடம் முடியும் வரையில் காத்திருக்காதீர்கள்.

உங்கள் பாடத்தில் மையச் சத்தியத்தை முதன்முறையாக அறிமுகம்செய்யும்போது பெரும்பாலும் அதில் செயல்படுத்துதலை உள்ளடக்கக் கூடாது. சத்தியத்தைச் செயல்படுத்துவதற்கு முன்பாகப் பிள்ளைகள் அதைப் புரிந்துகொள்ள வேண்டும். பிறகு பாடம் நடத்தப்படும்போது, இரண்டு வகைப்பட்ட பிள்ளைகளுக்கும் சத்தியத்தைச் செயல்படுத்துவது எப்படி என்று விளக்குவதற்கு வாய்ப்பெடுத்துக் கொள்ள வேண்டும். இரண்டு செயல்படுத்துதல்களும் வெவ்வேறானவையாக இருக்கிறபடியால், ஒரே வேளையில் இரண்டையும் சொல்லாமல், வெவ்வேறு வேளைகளில் இவைகளைச் சொல்ல வேண்டும்.

அதே வேளையில் நீங்கள் யாருக்குச் சத்தியத்தைப் பொருத்திக் கூறுகிறீர்கள் - கிறிஸ்தவப் பிள்ளைகளுக்கா அல்லது கிறிஸ்தவரல்லாதவர்களுக்கா - என்பது அவர்களுக்குத் தெளிவாகத் தெரிய வேண்டும்:

- *"நீங்கள் ஒருபோதும் இயேசுகிறிஸ்துவை உங்கள் இரட்சகராக ஏற்றுக் கொண்டிராவிட்டால்.."*
- *"உங்களை மன்னிக்கும்படி நீங்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து, இரட்சிக் கப்பட்டிருப்பீர்களானால்..."*

சத்தியத்தைக் கடைசியாக ஒருமுறை பொருத்திக் கூறுவதோடு நீங்கள் பாடத்தை முடிக்க வேண்டும். அதற்குச் செவிசாய்க்கும்படி அறைகூவலும் விடுக்க வேண்டும். இந்த இறுதியான வார்த்தைகளே பிள்ளைகளின் மனதில் எப்போதும் இருக்கும். எனவே, பிள்ளைகளில் பெரும்பாலானோர் இரட்சிக்கப்படாதவர்களாக இருப்பார்களானால், இறுதியாக அவர்களுக்குரிய செயல்படுத்துதலைக் கூறுவது நலமாகும். ஆனால் பெரும்பாலான பிள்ளைகள் இரட்சிக்கப்பட்டிருப்பார்களானால், இறுதியாக அவர்களுக்கு ஏற்றபடி செயல்படுத்திக் கூற வேண்டும்.

நீங்கள் செயல்படுத்துதலைக் கூறும்போது மூன்று குறிப்புகளை எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும்:

- பிள்ளைகளின் அன்றாட வாழ்க்கைக்கு ஏற்றவாறும் அவர்களுடைய தேவைகளைச் சந்திக்கும்படியாகவும் அவர்கள் எவ்வாறு சத்தியத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று அவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும்.
- வேதாகமத்தின் மற்றப் பகுதிகளிலிருந்தோ அல்லது இன்றைய வாழ்க்கையிலிருந்தோ எடுத்துக்காட்டுகளை எடுத்துப் பயன்படுத்தி, நீங்கள் கூறும் செயல்படுத்துதல்கள் புரியக்கூடிய வகையிலும் ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும் இருக்கின்றனவா என்று பார்த்துக்கொள்ள வேண்டும்.
- பிள்ளைகளுக்குத் தனிப்பட்ட வகையில் உணர்த்தும்படி "நீங்கள்" என்ற

சொல்லைப் பயன்படுத்துங்கள். இது அவர்களுக்கான தேவனுடைய செய்தி என்று ஒவ்வொருவரும் உணர வேண்டுமென்றே நீங்கள் விரும்புகிறீர்கள்.

செயல்படுத்தக் கூடியபோது அறைகூவல் விடுங்கள்

செயல்படுத்தக்கூடியதைச் சேர்த்து எப்போதுமே அறைகூவலும் விடுக்கப்பட வேண்டும். எனவே இரண்டு வகைப்பட்ட பிள்ளைகளுக்காகவும் நீங்கள் செயல்படுத்தலைக் கூறும்போது அவர்கள் அதற்குச் செவிசாய்த்து, எதையேனும் செய்யும்படி அவர்களுக்கு அறைகூவல் விடுக்க வேண்டும்.

- *இரட்சிக்கப்பட்ட பிள்ளைகள் இந்தப் பாடத்தில் தாம் தேவன் போதித்ததற்குச் செவிசாய்த்து, செயல்படுத்தலில் கூறப்பட்டுள்ளபடி செய்யுமாறு அவர்களுக்கு அறைகூவல் விடுக்க வேண்டும்.*
- *நீங்கள் ஏற்கனவே சத்தியத்தைச் சமர்ப்பித்ததற்கு ஏற்ற வகையில் பொருத்திக் கூறியதற்குச் செவிசாய்க்கும்படி இரட்சிக்கப்படாத பிள்ளைகளுக்கு அறைகூவல் விடுக்க வேண்டும். இந்த அறைகூவலையே நாம் அழைத்தல் என்று கூறுகிறோம். இயேசு கிறிஸ்துவைத் தங்கள் ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ளும்படி இரட்சிக்கப்படாத பிள்ளைகளுக்கு அறைகூவல் விடுக்கப்படுகிறது அல்லது அழைப்பு விடுக்கப்படுகிறது.*

இரண்டு வகையிலும் அவசர உணர்வோடும் உண்மையோடும், எவ்வாறு செயல்படுத்துவது என்பதைச் சொல்லிக்கொடுக்க வேண்டும். போதிக்கப்பட்டு பொருத்திக் கூறப்பட்டுள்ள சத்தியத்துக்கு ஏற்றபடி, தேவனுக்குக் கீழ்ப்படியுமாறு பிள்ளைகளை ஊக்குவிக்க வேண்டும்.

இப்படிப்பட்ட சொற்றொடர்களை நீங்கள் பயன்படுத்தலாம்:

- *... இதைச் செய்ய நீங்கள் விருப்பமாக இருக்கிறீர்களா?*
- *இன்று தேவனுக்கு "ஆம்" என்று சொல்லுவீர்களா?*
- *இனிமேலும் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் இருக்காதீர்கள்...*
- *இன்று உங்களுக்காக இந்த வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் அதை விசுவாசிப்பீர்களா?*

ஆனால் நீண்ட உணர்வுபூர்வமான வேண்டுகோளின் மூலமாகவோ அல்லது பிள்ளைகள் சரீரப்பிரகாரமாக ஏதேனும் செய்யுமாறு கூறியோ (எழுந்து நிற்றல் அல்லது கைகளை உயர்த்துதல்) அவர்களைச் செவிசாய்க்குமாறு பலவந்தப்படுத்தாதீர்கள். பிள்ளை முதலில் தனது இருதயத்திலேயே செவிசாய்க்க வேண்டும். பிறகு அது அவனுடைய வாழ்க்கையிலும் செயல்படுத்தப்பட வேண்டும். நீங்கள் அவனுக்கு போதித்து, அறைகூவல் விடுக்கும்போது பரிசுத்த ஆவியானவர் அவனில் கிரியைசெய்தால் மட்டுமே அவன் செவிசாய்ப்பான்.

இரட்சிக்கப்படாத பிள்ளைகள் கிறிஸ்துவை விசுவாசிக்கும்படி அறைகூவல் விடுத்து அழையுங்கள்

மீன்பிடித்தலைப் பற்றிக் கூறும் 7 ஆம் அத்தியாயத்தில் இதைப் பற்றி நாம் பார்த்தோம். நீங்கள் ஒரு வேதபாடத்தைப் போதிக்கும்போது (அந்தப் பாடத்தின் மையச் சத்தியத்தைச் செயல்பூர்வமாக்கிக் காட்டும்போது) பிள்ளைகளுக்கு நற்செய்தி அறிவிக்கும்போது, இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும்படி அவர்களுக்குத் தெளிவாக அறைகூவல் விடுத்து அழைப்பது அத்தியாவசியமானதாகும். அழைப்பு விடுப்பது என்பது பிள்ளைகளைக் கையை உயர்த்தும்படி கூறுவதோ அல்லது முன்னால் வரும்படி சொல்லுவதோ அல்ல. இந்த அழைப்பு இயேசு கிறிஸ்துவினிடமிருந்தே வருகிறது - சிறுவரும் சிறுமியரும் மன்னிப்புக்காகவும் இரட்சிப்புக்காகவும் **தம்மிடம் வரும்படி** அவர் அழைக்கிறார். நீங்கள் செய்தி கொடுப்பவராக மட்டுமே இருக்கிறீர்கள் - இந்த அழைப்பை நீங்கள் பிள்ளைகளுக்குத் தெரிவிக்கிறீர்கள். ஆனால் இந்த அழைப்பு சுவிசேஷச் செய்தியின் ஒரு முக்கியமான அம்சமாக இருக்கிறபடியால் நீங்கள் கண்டிப்பாக அழைப்பு விடுக்க வேண்டும்.

- இரட்சிக்கப்படுவதற்கு அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று இந்த அழைப்பு பிள்ளைகளுக்குக் கூறுகிறது:
  - ✓ அவர்கள் தங்கள் பாவங்களிலிருந்து திரும்ப விருப்பமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.
  - ✓ இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும்.
- பிறகு தேவன் என்ன செய்வார் என்பதை இந்த அழைப்பு பிள்ளைகளுக்கு எடுத்துக் கூறுகிறது:
  - ✓ அவர்களுடைய பாவங்கள் எல்லாவற்றையும் மன்னிப்பார்.
  - ✓ அவர்களை மாற்றுவார்.
- இந்த இரண்டு அம்சங்களையும் (அவர்கள் என்ன செய்ய வேண்டும், செய்தால் தேவன் என்ன செய்வதாக வாக்குத்தத்தம் அருளியிருக்கிறார்) தெளிவாக விளக்கிக்கூறும் ஒரு வசனத்தை இந்த அழைப்பில் பயன்படுத்த வேண்டும். கீழே கொடுக்கப்பட்டுள்ளவை போன்ற வசனங்களில் ஒன்றைப் பயன்படுத்தலாம்:

  "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" (அப். 16:31)

  "கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும்... உங்கள் பாவங்கள் நிவிர்த்திசெய்யப்படும்பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள்" (அப். 3:19 -20).

  "கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்" (ரோமர் 10:13).

  "என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" (யோவான் 6:37).

"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்" (யோவான் 1:12).

நீங்கள் கொடுக்கும் அழைப்பு இப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்:

"இயேசுகிறிஸ்துவை விசுவாசியுங்கள், அப்பொழுது நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள். தேவன் இதைத்தான் தமது வார்த்தையில் கூறுகிறார். அப்போஸ்தலர் 16 ஆம் அதிகாரத்தில் நாம் பார்த்த சிறைச்சாலைக்காரனைப் போல நீங்கள் தமது குமாரனாகிய இயேசுவில் விசுவாசம் வைக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். நீங்கள் இதைச் செய்தவுடனே அவர் உங்கள் பாவங்களை மன்னித்து உங்களுக்கு ஒரு புதிய இயல்பைக் கொடுப்பார். நீங்கள் மாற வேண்டுமென்று விரும்புகிறீர்களா? உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டுமா? அப்படியானால், நீங்கள் இயேசுகிறிஸ்துவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ள விரும்புகிறீர்கள் என்று அவரிடம் கூறி, அவரில் விசுவாசம் வையுங்கள். இப்போதே நீங்கள் இருக்கும் இடத்திலேயோ அல்லது பிறகு வேறு நேரத்திலோ நீங்கள் இதைச் செய்ய முடியும். ஆனால் காலம் கடத்தாதீர்கள். இன்றே இரட்சணிய நாளாகும்.

இப்போது நாம் ஜெபிப்போம்.

"அன்பான பரம பிதாவே, இன்று இங்கேயிருக்கும் பிள்ளைகள் உம்மைத் தங்கள் இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்ள உதவும்படி உம்மிடம் வேண்டிக் கொள்கிறேன். ஆமென்."

இப்போது நீங்கள் அழைப்பைக் கொடுத்துவிட்டீர்கள். இதற்கான பயன் தேவனுடைய கரங்களில் இருக்கிறது.

இரட்சிக்கப்பட்ட பிள்ளைகள் செவிசாய்க்குமாறு அறைகூவல் விடுங்கள்

இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு வெறுமனே சத்தியத்தைப் போதிக்காதீர்கள். வெறுமனே மேலோட்டமாகச் செயல்படுத்துதலை எடுத்துக் கூறாதிருங்கள். செவிசாய்க்கும்படி அவர்களுக்கு அறைகூவல் விடுங்கள். நீங்கள் போதித்த சத்தியத்தின் விளைவாக அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை அவர்களுக்குத் தெளிவாகக் காட்டுங்கள். பிறகு அதைச் செய்யும்படி அவர்களை ஊக்குவியுங்கள். அதே வேளையில் அவர்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் இதற்கு அர்த்தம் என்ன, விளைவுகள் யாவை என்பதற்கு நீங்கள் தெளிவான எடுத்துக்காட்டையும் அர்த்தத்தையும் கொடுக்க வேண்டும்.

எடுத்துக்காட்டாக, *"இயேசுகிறிஸ்து தேவனாக இருக்கிறார். அவர் எதையும் செய்ய வல்லவர்"* என்ற மையச் சத்தியத்தை நீங்கள் போதிப்பீர்களானால் இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு அதை இவ்வாறு பொருத்திக் காட்டலாம்: *"எனவே நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருப்பீர்களானால், உங்கள் வாழ்க்கையில் எந்தப் பிரச்சினையையும் மேற்கொள்ள அவரால் உங்களுக்கு உதவ முடியும்."*

ஆனால் நீங்கள் மேலும் சென்று, தாங்கள் கேட்டதற்குச் செவிசாய்க்கும்படி இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு அறைகூவல் விடுக்க வேண்டும்:

"ஒருவேளை நீங்கள் அடிக்கடி கோபப்படலாம். கெட்ட வார்த்தைகளைப் பேசி விடலாம். உங்களை நீங்களே கட்டுப்படுத்த முயன்று தோற்றுப் போயிருக்கிறீர்கள். உங்களுக்கு உதவிசெய்ய இயேசுகிறிஸ்து வல்லவராக இருக்கிறார். ஆனால் நீங்கள் அவரிடம் அதற்காக வேண்டிக்கொள்ள வேண்டும். இன்றே இப்போதே நீங்கள் ஏன் அவரை வேண்டிக்கொள்ளக் கூடாது? 'அன்பான ஆண்டவர் இயேசுவே, எனக்கு நீர் தேவைப்படுகிறீர். என்னையும் என் வார்த்தைகளையும் கட்டுப்படுத்துவது எனக்குக் கடினமாக இருக்கிறது. எனக்கு உதவும். இதற்காக எனக்கு பலத்தைக் கொடுத்தருளும்' என்று ஜெபியுங்கள். அவர் உங்களுக்கு நிச்சயமாக உதவுவார்."

அத்தியாயம் 25

செயல்படத் துவங்குங்கள்

எனது வேதபாடத்தை ஆயத்தம் செய்வதில் நான் எந்தெந்தப் படிகளைப் பின்பற்ற வேண்டும் ?

அத்தியாயத்தின் சுருக்கம்

(உங்கள் வேதபாடத்தை ஆயத்தம் செய்வதில் இந்த ஒழுங்குரீதியான திட்டத்தை நீங்கள் பின்பற்ற வேண்டும்).

- ➤ பாடத்தைக் குறித்து ஜெபியுங்கள்
- ➤ வேதாகமப் பகுதியை வாசியுங்கள்
- ➤ நிகழ்ச்சிகளின் முன்னேற்றத்தைப் பட்டியலிடுங்கள்
- ➤ வேதபகுதியிலுள்ள அனைத்துச் சத்தியங்களையும் பட்டியலிடுங்கள்
- ➤ வேதபகுதியின் மையச் சத்தியத்தைத் தெரிந்தெடுங்கள்
- ➤ மையச் சத்தியத்துக்கு இரண்டு செயல்படுத்துதல்களை எழுதிவையுங்கள்
- ➤ மையச் சத்தியத்தைப் போதிக்கவும் பொருத்திக் கூறவும் பயன்படுத்தக் கூடிய வேறு சத்தியங்களைக் குறித்துவையுங்கள்
- ➤ மற்றவர்கள் எழுதியுள்ளவைகளை வாசியுங்கள்
- ➤ ஒரு வேத வசனத்தைத் தெரிந்துகொள்ளுங்கள்
- ➤ உங்கள் பட உபகரணங்களைத் தயார்செய்யுங்கள்
- ➤ உங்கள் பாட வரையறையைக் குறிப்பாக எழுதிவையுங்கள்:
  - ✓ துவக்கம்
  - ✓ நிகழ்ச்சிகளின் முன்னேற்றம்
  - ✓ உச்சக்கட்டம்
  - ✓ முடிவு
- ➤ உங்கள் திட்டத்தில் எங்கெல்லாம் நீங்கள் மையச் சத்தியத்தைப் போதித்து, பொருத்திக் கூறுவீர்கள், எங்கே மற்றச் சத்தியங்களைக் கூறுவீர்கள் என்பதைச் சேருங்கள்.
- ➤ பயிற்சி செய்யுங்கள், பயிற்சி செய்யுங்கள், பயிற்சி செய்யுங்கள்.

இப்போது ஒரு வேதபாடத்தை ஆயத்தம்செய்ய நீங்கள் தயாராக இருக்கிறீர்கள். அதை நடத்துவதற்கான ஆயத்தங்களை நீங்கள் செய்ய வேண்டும்.

வேதாகமக் கதைக்கும் நாம் போதிக்கும் பாடத்துக்கும் அடிப்படையாக அப்போஸ்தலர் 16:9-34 வேத பகுதியைப் பயன்படுத்துவோம். இந்தக் குறிப்பிட்ட பாடத்தைத் தயார்செய்வதின் ஒவ்வொரு படிகளையும் இப்போது பார்ப்போம்.

படி ஒன்று - பாடத்தைக் குறித்து ஜெபியுங்கள்

இந்தப் பாடத்திலிருந்து உங்களுக்குப் போதிக்கும்படி ஆண்டவரிடம் வேண்டிக் கொள்ளுங்கள். ஏனென்றால் இதைக்கொண்டு பிள்ளைகளுக்குப் போதிக்க அது உதவியாக இருக்கும். பரிசுத்த ஆவியானவரே வேத வசனங்களை எழுதி அவைகளுக்கு அர்த்தம்கூறுபவராக இருக்கிறார். நீங்களும் உங்களுடைய பிள்ளைகளும் அவருடைய தெய்வீக வெளிப்படுத்தலைச் சார்ந்திருக்கிறீர்கள். ஆண்டவ ராகிய இயேசு *"சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்"* என்று கூறியிருக்கிறார் (யோவான் 16:13). எனவே தேவனையும் ஜெபத்தையும் சார்ந்தே எல்லா ஆயத்தமும் துவங்கப்பட வேண்டும், தொடர்ந்து நடத்தப்பட்டு முடிக்கப்பட வேண்டும்.

படி இரண்டு - வேதபகுதியை வாசியுங்கள்

உங்கள் பாடப் புத்தகத்தையோ அல்லது மற்றவர்கள் எழுதியிருக்கும் குறிப்புகளையோ முதலில் பார்க்காமல், வேதபகுதியை வாசித்து உங்கள் ஆயத்தத்தைத் தொடங்க வேண்டும். ஒரு ஆசிரியராக தேவனுடைய வார்த்தையைப் போதிக்கும்படிக்கே நீங்கள் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். தேவன் தமது வார்த்தையின் மூலமாக உங்களுக்குக் கூறுவதையே நீங்கள் போதிக்க வேண்டும்.

நீங்கள் குறைந்தபட்சமாக எட்டு அல்லது பத்து முறை வேதபகுதியை (இந்த இடத்தில் அப்போஸ்தலர் 16:9-34) வாசிக்க வேண்டும். நீங்கள் பாடம் நடத்துவதற்கு ஆறு அல்லது ஏழு நாட்களுக்கு முன்னால் முதல் முறை அதை வாசிக்க வேண்டும். பிறகு நீங்கள் வேலைக்குப் போகப் பயணம்செய்யும் வேளைகளிலும் வீட்டு வேலைகளைச் செய்யும் வேளையிலும் அதன் உள்ளடக்கத்தை மறுபடியும் மறுபடியுமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பிறகு அடுத்த நாள் அதை இரண்டு மூன்று முறை வாசிக்க வேண்டும். இவ்வாறு அடுத்துவரும் நாட்களிலும் செய்துவரவேண்டும். இரவில் படுக்கச் செல்வதற்கு முன்பாக அந்தப் பகுதியைப் பார்ப்பதும் உதவியாக இருக்கும்.

அந்தப் பகுதியின் பின்னணியையும் (அதற்கு முன்னாலும் பின்னாலும் உள்ள வசனங்கள்) படிக்க மறவாதீர்கள். வேதாகமத்தின் பிற புத்தகங்களில் இதற்கு இணையான பகுதிகள் இருக்குமானால் அவைகளையும் வாசியுங்கள்.

வேதபகுதியை வாசிக்கும்போது கதையோட்டத்தையும் கதையையும் உணர்ந்து கொள்ள முயலுங்கள்:

- கதாபாத்திரங்கள் யார்யார்?
- அவர்கள் என்ன செய்கிறார்கள்?
- பின்னணியைக் காட்சியாகக் கொண்டுவந்து, கதாபாத்திரங்கள் என்னென்ன பேசியிருப்பார்கள் என்பதைக் கற்பனைசெய்து பாருங்கள்.
- அந்தப் பகுதி மற்றும் கதையின் சூழலிலும் பின்னணியிலும் ஊன்றிப் போகும்படி அதைப் படிக்க வேண்டும்.
- இப்போது கதையை நினைத்துப் பார்த்து, அதை எவ்வாறு கூறலாம் என்று தீர்மானிக்கலாம்.
- நீங்களாகவே கதையைச் சொல்லிப் பயிற்சிசெய்துகொள்ள விரும்பலாம்!

படி மூன்று - நிகழ்ச்சிகளின் முன்னேற்றத்தைப் பட்டியலிடுங்கள்

அடுத்த படி கதையின் நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்தி ஏற்கெனவே 172ஆம் பக்கத்தில் காட்டியுள்ளபடி, ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுவதாகும். உங்கள் கதையைக் கூறும்போதும் பாடத்தைப் போதிக்கும்போதும் இந்த நிகழ்ச்சிகளின் வரிசையை நீங்கள் பயன்படுத்துவீர்கள். இந்தக் கதை / பாடத்துக்கான நிகழ்ச்சிகளின் வரிசை இப்படியிருக்கும்:

1. பவுலும் குழுவினரும் மக்கெதோனியாவுக்குப் புறப்படுகிறார்கள்.
2. பிலிப்பி பட்டணத்துக்கு வந்துசேருதல்.
3. ஆற்றினருகே போதித்தல்
4. லீதியாளின் மனமாற்றம்
5. லீதியாளின் ஞானஸ்நானம், அவள் அவர்களை உபசரித்தல்.
6. ஒரு பெண் பவுலையும் சீலாவையும் பார்த்துக் கத்துதல்.
7. பவுல் அசுத்த ஆவிக்குக் கட்டளையிடுதல்.
8. அந்தப் பெண் குணமடைதல்
9. பவுலும் சீலாவும் குற்றம்சாட்டப்படுதல்.
10. பவுலும் சீலாவும் அடிக்கப்பட்டு சிறைச்சாலையில் போடப்படுதல்.
11. பவுலும் சீலாவும் பாடி ஜெபித்தல்.
12. பூமியதிர்ச்சி.
13. சிறைச்சாலைக்காரன் தற்கொலைசெய்ய முயலுதல்
14. சிறைச்சாலைக்காரனின் கேள்வி.
15. பவுலின் பதில் - "கிறிஸ்துவை விசுவாசி".
16. சிறைச்சாலைக்காரன் இரட்சிக்கப்படுதல்.

படி நான்கு - வேதபகுதியிலுள்ள அனைத்துச் சத்தியங்களையும் பட்டியலிடுங்கள்

கதையோட்டத்தையும் கதையிலுள்ள முக்கிய பாத்திரங்களையும் நன்றாகப் புரிந்துகொண்டு உணர்ந்த பிறகு, நிகழ்ச்சிகளின் வரிசையை எழுதி வைத்த பிறகு, இப்போது நீங்கள் போதிக்க வேண்டிய மையச் சத்தியத்தைத் தேட வேண்டும்.

எனவே, அந்த வேதபகுதி முழுவதையும் வாசித்து அதில் வரும் ஒவ்வொரு சத்தியத்தையும் எழுதிவைப்பது அடுத்த படியாகும். அப்போஸ்தலர் 16ஆம் அதிகாரத்திலுள்ள இந்தப் பகுதி நன்கு அறியப்பட்ட பகுதியாகும். அதில் பல சத்தியங்கள் பொதிந்திருக்கின்றன. நான் இதைத் தெரிந்துகொண்டதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

இந்த வசனங்களில் இந்தச் சத்தியங்களை என்னால் கண்டுபிடிக்க முடிகிறது

- வசனம் 6 - தமது ஊழியர்கள் என்ன செய்ய வேண்டுமென்று தேவன் அவர்களுக்குக் காட்டுகிறார்.
- வசனம் 10 - தேவன் நம்மோடு பேசும்போது நாம் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும்.
- வசனம் 13 - நாம் இயேசுகிறிஸ்துவுக்குச் சாட்சிகூற வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.
- வசனம் 14 - தேவன் விசுவாசிக்கிறவர்களின் இருதயங்களைத் திறக்கிறார்.
- வசனம் 15 - கிறிஸ்தவர்கள் நண்பர்களாகவும் உதவிசெய்கிறவர்களாகவும் இருக்க வேண்டும்.
- வசனம் 16 - தமது பிள்ளைகள் ஜெபிக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.
- வசனம் 17 - இயேசுகிறிஸ்து அனைத்துத் தீமைகளுக்கும் மேலாக வல்லமை பெற்றிருக்கிறார்.
- வசனம் 22 - சாட்சி கூறும் கிறிஸ்தவன் பாடுகளைச் சகிக்க வேண்டியிருக்கும்.
- வசனம் 25 - மிகவும் கடினமான சூழ்நிலைகளின் மத்தியிலும் கிறிஸ்தவர்கள் சந்தோஷமாக இருக்க முடியும்.
- வசனம் 26 - தேவன் சர்வவல்லவர், அவரால் எதையும் செய்ய முடியும்.
- வசனம் 31 - ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதின்மூலம் இரட்சிப்பு வருகிறது.
- வசனம் 33, 34 - இயேசுகிறிஸ்து மக்களை மாற்றுகிறார்.
- வசனம் 34 - இரட்சிப்பின் விளைவாக வாழ்க்கை மாற்றப்படுகிறது.

இவ்வாறு இந்தப் பகுதியில் கிட்டத்தட்ட பதின்மூன்று சத்தியங்கள் இருக்கின்றன. இவை அனைத்தையும் உங்களால் போதிக்க முடியாது. குறிப்பிடுவதுகூட முடியாது. எனவே இதில் ஒரு சத்தியத்தைத் தெரிந்துகொண்டு அதை மையச் சத்தியமாக்குவது அவசியமாகும்.

படி ஐந்து - அந்தப் பகுதியின் மையச் சத்தியத்தைத் தெரிந்துகொள்ளுங்கள்

மையச் சத்தியத்தைக் கண்டுகொள்ள நீங்கள் ஐந்து கேள்விகளைக் கேட்டுக் கொள்ள வேண்டுமென்று ஏற்கெனவே பார்த்தோம்.

- **இந்தப் பகுதியில் பல முறை வரும் சத்தியம் ஏதாவது இருக்கிறதா? அது இந்தப் பகுதியின் முக்கியமான சத்தியமாக இருக்கிறதா?**

இந்தக் கேள்விக்கு வெவ்வேறு மக்கள் வெவ்வேறு விதமாகப் பதிலளிக்கலாம். "இயேசுகிறிஸ்து மக்களை மாற்றுகிறார்" என்பதே இந்தப் பகுதியின் முக்கிய சத்தியம் என்று தனிப்பட்ட முறையில் நான் உணர்கிறேன். இவைகளில் இது நிரூபணமாகிறது;

✓ லீதியாளின் மனமாற்றம், அவளுடைய ஞானஸ்நானம், அருட்பணியாளர்களை அவள் உபசரித்தல் (வசனம் 14, 15).

✓ அசுத்த ஆவியினால் பிடிக்கப்பட்டிருந்த பெண் விடுவிக்கப்படுதல் (வசனம் 18).

✓ சிறைச்சாலைக்காரனின் மனமாற்றம், ஞானஸ்நானம், அவனுடைய தயவுள்ள செயல் (வசனம் 32-34).

- **தேவன் இந்தப் பகுதியை ஏன் வேதாகமத்தில் சேர்த்திருக்கிறார்?**

இந்தப் பகுதியை இங்கு இணைத்திருப்பதற்கு ஒரு காரணம் இயேசு வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துகிறார் என்பதே.

- **இந்தச் சத்தியங்களில் எதைப் பரிசுத்த ஆவியானவர் உங்கள் சொந்த இருதயத்திலும் வாழ்க்கையிலும் பேசுவதற்குப் பயன்படுத்துகிறார்?**

அவர் குறிப்பாக ஒரு சத்தியத்தை உங்கள் இருதயத்தில் உணர்த்தும்போது, அதைத் தெரிந்துகொண்டு பிள்ளைகளுக்குப் போதிப்பது எளிதாக இருக்கும். இயேசுவானவர் மக்களை மாற்றுகிறார் என்பதை அவர் இந்தப் பகுதியிலிருந்து உங்களுக்குக் காட்டியிருக்கிறாரா?

- **இந்தச் சத்தியங்களில் எந்தச் சத்தியம் உங்கள் பிள்ளைகளுக்கு அதிகமாகத் தேவைப்படுகிறது?**

நான் குறிப்பிட்டுள்ள சத்தியம் உங்கள் பிள்ளைகளுக்கு உதவியாக இருக்குமா? உங்களுடைய பிள்ளைகளில் பலர் இரட்சிக்கப்படாத பிள்ளைகளாக இருக்கிறார்களா? அவர்களை இரட்சித்து, மாற்றுவதற்கு இயேசுகிறிஸ்து விருப்பமுள்ளவராகவும் வல்லவராகவும் இருக்கிறார் என்பதை அவர்கள் அறிவது அவசியமாக இருக்கிறதா? இல்லாவிட்டால், வேறு ஒரு சத்தியத்தைத் தெரிந்துகொள்ளுங்கள். அது அவர்களுக்கு உதவியாக இருக்குமானால் நீங்கள் தெரிந்துகொள்வதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். மேலும், இரட்சிக்கப்படாத மக்கள் அவர்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தைக் காண வேண்டுமென்பதைக் கிறிஸ்தவ பிள்ளைகளுக்கு நினைவூட்டுவது அவசியமாகும்.

- **எந்தச் சத்தியங்களை நீங்கள் ஏற்கெனவே போதித்திருக்கிறீர்கள்?**

மேலே கூறப்பட்டுள்ள சத்தியத்தை நீங்கள் சமீபத்தில் போதித்திருக்கிறீர்களா?

இப்போது இந்த மையச் சத்தியத்தை ஒரு எளிய, தெளிவான வாக்கியமாக எழுதி வையுங்கள். எடுத்துக்காட்டாக, "இயேசுகிறிஸ்து மக்களை மாற்று கிறார்." உங்கள் போதிக்கும் செயல்திட்டத்தின் மேல் பக்கத்தில் இதை எழுதிவைக்க வேண்டும். நீங்கள் இந்தச் சத்தியத்தைப் போதிக்கும்போது பிள்ளைகள் அதைப் பார்க்கும்படியாகக் கரும்பலகையிலோ அல்லது பிளான்னல் அட்டையிலோ எழுதி வைக்கலாம். ஒரு பட அட்டையில் வார்த்தைகளை எழுதி அவர்களுக்குக் காட்டலாம். கூடுமான வரையில் இந்தச் சத்தியத்தை நினைவுபடுத்தும் ஒரு அடையாளப் படத்தின்மீது இந்த வாக்கியத்தை எழுதி வைக்கலாம்.

படி ஆறு - மையச் சத்தியத்துக்குரிய இரண்டு செயல்படுத்துதல்களை எழுதிவையுங்கள்

இரண்டு வகைப்பட்ட சிறுவர்கள் இருக்கிறார்கள் என்று நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறோம்:

- இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும் பிள்ளைகள். இவர்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்குப் போஷாக்கு அளிக்க வேண்டும்.
- இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்காத பிள்ளைகள். இவர்கள் இரட்சிக்கப்படவில்லை. இவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும்.

எனவே, நீங்கள் தெரிந்துகொண்டுள்ள மையச் சத்தியம் இருவகைப்பட்டவர்களுக்கும் பொருத்திக்கூறுவதற்கு ஏற்றதாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். (தொண்ணூறு சதவீதத்துக்கும் அதிகமான சத்தியங்களை இருசாராருக்கும் பொருத்திக் கூற முடியும் என்பதை நான் கண்டிருக்கிறேன்).

நான் ஏற்கெனவே பலமுறை கூறியிருக்கிறபடி, மையச் சத்திய வாசகத்துக்குப் பிறகு இரண்டு வகைப்பட்ட செயல்படுத்துதலுக்கும் முன்பாக, "எனவே" என்ற சொல்லைப் பொருத்திப் பார்ப்பது உதவியாக இருக்கும். இது மையச் சத்தியத்துக்கும் செயல்படுத்துதலுக்கும் இடையேயுள்ள பிணைப்பை நீங்கள் கண்டுகொள்வதற்கு உதவியாக இருக்கும்.

"இயேசுகிறிஸ்து மக்களை மாற்றுகிறார்" என்ற மையச் சத்தியத்துக்குக் கீழ்க்கண்ட செயல்படுத்துதல்களைக் கொடுக்கலாம் என்று நான் ஆலோசனை கூறுகிறேன்:

- (எனவே) *நீங்கள் அவரை விசுவாசிப்பீர்களானால் அவர் உங்களை மாற்றுவார்* (இரட்சிக்கப்படாத பிள்ளைகளுக்கான செயல்படுத்துதல்)
- (எனவே) *உங்கள் மாற்றப்பட்ட வாழ்க்கையின் மூலமாக நீங்கள் மற்றவர்களுக்குச் சாட்சியாக இருக்கமுடியும்* (இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளுக்கான செயல்படுத்துதல்).

படி ஏழு - மையச் சத்தியத்தைப் போதிப்பதிலும் அதைப் பொருத்திக் கூறுவதிலும் உதவியாக இருக்கக்கூடிய மற்றச் சத்தியங்களை எழுதிவையுங்கள்

இந்தச் சத்தியங்கள் அதே வேத பகுதியில் இருக்குமானால் - நல்லது! ஆனால் அப்படித்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. உங்கள் மையச் சத்தியத்தையும், செயல்படுத்துதல்களையும் உறுதிப்படுத்தவும், விளக்கவும், தெளிவுபடுத்தவும் நீங்கள் இந்தச் சத்தியங்களைச் சுருக்கமாக அறிமுகம் செய்யலாம். ஆனால் இந்தச் சத்தியங்களைப் போதிக்கக் கூடாது. மையச் சத்தியத்தைப் போதிப்பதிலும் பொருத்திக் காட்டுவதிலும் உங்களுக்கு உதவியாக இருப்பதற்காக மட்டுமே இவைகளை நீங்கள் பயன்படுத்துகிறீர்கள். சிறுவருக்கான உங்கள் ஒழுங்கான வாராந்தர ஊழியத்தில் இந்தச் சத்தியங்கள் ஏற்கெனவே முந்தைய வேதபாடங்களில் உங்களால் போதிக்கப்பட்டவைகளாக இருக்கலாம் (அப்படியிருக்குமானால் உதவியாக இருக்கும்).

"இயேசு கிறிஸ்து மக்களை மாற்றுகிறார்" என்ற மையச் சத்தியத்தை நீங்கள் போதிப்பதற்கு கீழ்க்கண்ட சத்தியங்கள் உங்களுக்கு உதவியாக இருக்கும் என்கிறபடியால் அவைகளை நீங்கள் சேர்த்துக்கொள்ளலாம்:

- **நீங்கள் மாற்றம்பெற வேண்டும்** (இந்தப் பாடத்திலுள்ள மூன்று பாவிகளைப் போலவே நீங்களும் இருக்கிறீர்கள்). இந்தச் சத்தியம் இதே வேதபகுதியில் **இருக்கிறது.**
- **இயேசுகிறிஸ்து உங்கள் பாவத்துக்காக மரித்தார்.** (எனவேதான் அவரால் உங்களை மாற்ற முடியும்). இந்தச் சத்தியம் இதே வேதபகுதியில் இல்லை.
- **இயேசுகிறிஸ்து இன்றும் ஜீவிக்கிறார்** (அவர் இங்கே உங்களை மாற்ற ஆயத்தமாக இருக்கிறார்). இந்தச் சத்தியம் இதே வேதபகுதியில் இல்லை.
- **கிறிஸ்துவை நீங்கள் விசுவாசிப்பீர்களானால் மாற்றம் பெறுவீர்கள்** இந்தச் சத்தியம் இதே வேதபகுதியில் **இருக்கிறது.** குறிப்பாக 31ஆம் வசனத்தில் வலியுறுத்தப்படுகிறது.

படி எட்டு - மற்றவர்கள் எழுதியிருப்பதை வாசியுங்கள்

இந்த வேளையில் உங்கள் பாடக் கையேட்டை வாசித்து, மற்றவர்கள் இந்தப் பாடத்தை எவ்வாறு கையாண்டிருக்கிறார்கள் என்று தெரிந்துகொள்வது நலமாகும். உங்களுக்கு உதவியாக நீங்கள் சில புதிய கருத்துக்களையும், சிந்தனைகளையும், உள்ளறிவையும் பெறலாம். நீங்கள் ஏற்கெனவே திட்டமிட்டிருப்பதில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டியிருக்கலாம்.

என்றாலும், முடிந்தவரை உங்கள் முடிவுப்படியே செயல்படுவது நலமாகும். தேவன் இவைகளை உங்கள் இருதயத்தில் உணர்த்தியிருக்கிறார். அவை உங்கள்

சொந்த முடிவுகளாக இருக்கிறபடியால் பிள்ளைகளுக்கு அவைகளைப் போதிப்பது உங்களுக்கு எளிதாக இருக்கும்.

ஆனால் பாடக் கையேடு, வேதாகம விளக்கவுரைகள், வேத அறிவுக் களஞ்சியங்கள் இவை உங்களுக்குப் பின்னணித் தகவல்களைக் கொடுக்கும். உங்கள் பாடத்தை இன்னுமதிகமாக ஆர்வத்தைத் தூண்டும்படி மாற்ற இவை உங்களுக்கு உதவியாக இருக்கும். மேலும் அந்தப் பாடத்தை நீங்கள் ஆழமாக புரிந்துகொள்ளவும் இவை உதவும். ஒரு ஆசிரியர் தான் போதிப்பதையும் அல்லது போதிக்கத் திட்டமிட்டிருப்பதையும்விட அதிகமாகத் தெரிந்துவைத்திருக்க வேண்டும்.

படி ஒன்பது - ஒரு வேதவசனத்தைத் தெரிந்தெடுங்கள்

இப்போது நீங்கள் போதிக்கும் மையச் சத்தியத்தோடு நெருங்கிய தொடர்புடைய ஒரு வசனத்தைத் தெரிந்தெடுக்க வேண்டும். இடையிடையே நீங்கள் இந்த வசனத்தைக் குறிப்பிடலாம். பிள்ளைகள் இந்த வசனத்தை மனப்பாடம் செய்யும்படி அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

> இந்தப் பாடத்துக்கு அப்போஸ்தலர் 16:31 வசனத்தைத் தெரிந்துகொள்ளலாம் என்பது என்னுடைய ஆலோசனையாகும்:
> **"அதற்கு அவர்கள்: கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்."**

படி பத்து - உங்கள் பாட உபகரணங்களைத் தயார்செய்யுங்கள்

இப்போது இந்தத் துவக்கக் கட்டத்தில் எந்தெந்த உபகரணங்கள் கிடைக்கக் கூடும் என்பதை அறியும்வண்ணமாக அவைகளை நீங்கள் ஆயத்தம்செய்ய வேண்டும்.

- நீங்கள் பட அட்டைகளைப் பயன்படுத்துவீர்களானால், அவை ஆயத்தமாக இருக்கின்றனவா என்பதைப் பார்த்துக்கொள்ள வேண்டும். அவற்றை எவ்வாறு பயன்படுத்துவது என்பதையும் அறிந்திருக்க வேண்டும். அவைகளுக்கு வண்ணம் தீட்ட வேண்டியிருக்கலாம், அல்லது ஒரு அட்டையில் ஒட்டிவைக்க வேண்டியிருக்கலாம். அல்லது எழுத்துக்களை எழுதிவைக்க வேண்டியிருக்கலாம்.
- நீங்கள் பிளான்னல் பலகையைப் பயன்படுத்துவீர்களானால் உருவங்களை வெட்டி ஆயத்தப்படுத்துங்கள். அவைகளை ஒழுங்குப்படி அட்டையில் ஒட்டிப் பார்த்து பயிற்சிசெய்து கொள்ளுங்கள்.
- உங்கள் மையச் சத்தியத்தோடு தொடர்புடைய ஒரு வசனத்துக்கோ அல்லது பாடலுக்கோ படத்தைக் காட்டி விளக்க நீங்கள் திட்டமிட்டால் அந்தப் படத்தைத் தயார்செய்து ஆயத்தமாக வைத்திருங்கள்.

படி பதினொன்று - உங்கள் உருவரையைத் (outline) தயாரித்து எழுதிவையுங்கள்

இப்போது பாடத்தை நீங்கள் போதிக்கும்போது உங்களுக்கு உதவியாக இருக்கக்கூடிய உருவரையைத் தயாரிக்க ஆயத்தமாக இருக்கிறீர்கள்.

உங்கள் திட்டத்தின் மேல்பகுதியில் மையச் சத்தியத்தையும் இரண்டு செயல் படுத்துதல்களையும் எழுதிவைக்க வேண்டும்.

பிறகு 18ஆம் அத்தியாயத்தில் கூறியபடி உங்கள் பாடத்தின் நான்கு பகுதிகளை எழுதுங்கள்.

- **துவக்கம்**
  பாடத்தை எவ்வாறு துவங்குவீர்கள் என்பதைத் தீர்மானியுங்கள். எதைக் கூற வேண்டுமென்பதைச் சரியாகத் தெரிந்துவைத்திருக்கும்படியாக உங்கள் துவக்க வாக்கியங்களை எழுதிவையுங்கள்.
- **நிகழ்ச்சிகளின் முன்னேற்றம்**
  நீங்கள் ஏற்கெனவே எடுத்திருக்கும் குறிப்புகளைக்கொண்டு, வேதாகமக் கதையின் நிகழ்ச்சிகளின் வரிசையை ஒரு ஒழுங்குரீதியான பட்டியலாகத் தயாரியுங்கள்.
- **உச்சக்கட்டம்**
  உங்கள் பாடத்தின் உச்சக்கட்டத்தைக் கண்டுபிடியுங்கள். 30ஆம் வசனத்தில் சிறைச்சாலைக்காரனின் கேள்வியே உச்சக்கட்டம் என்று நான் நினைக்கிறேன். நீங்கள் பயன்படுத்தும்படி திட்டமிடும் வார்த்தைகளை அப்படியே எழுதி வைக்க வேண்டும். உங்கள் மனதில் அதைத் தெளிவாக நினைவில் வைக்க இது உதவும்.
- **முடிவு**
  உச்சக்கட்டத்துக்கு அடுத்தபடியாக, பாடத்தை நீங்கள் எவ்வாறு முடிப்பீர்கள் என்பதை எழுதிவையுங்கள். நீங்கள் உங்கள் செயல்படுத்துதலில் (செயல் படுத்துதல்களில்) பிள்ளைகளுக்கு எவ்வாறு அறைகூவல் விடுப்பீர்கள் என்பதையும் எழுதிவையுங்கள். நீங்கள் பயன்படுத்தப் போகும் வார்த்தை களை அப்படியே எழுதிவைத்து பயிற்சிசெய்து பார்ப்பது நலமாகும்.

எல்லாவற்றையும் எழுதி முடித்தபிறகு, உங்கள் ஆரம்ப கதைத் திட்டம் இந்த உருவரைக்கு ஒத்ததாக இருக்கும் :

> மையச் சத்தியம் - இயேசுகிறிஸ்து மக்களை மாற்றுகிறார்.
>
> இரட்சிக்கப்படாதவர்களுக்கான செயல்படுத்துதல் - (எனவே) நீங்கள் அவரை விசுவாசிப்பீர்களானால் அவர் உங்களை மாற்றுவார்.
>
> இரட்சிக்கப்பட்டவர்களுக்கான செயல்படுத்துதல் - (எனவே) உங்கள் மாற்றப்பட்ட வாழ்க்கையின் மூலமாக நீங்கள் மற்றவர்களுக்குச் சாட்சியாக இருக்க முடியும்.
>
> துவக்கம் - குமாரின் பிரச்சினை - நான் வித்தியாசமானவனாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!
>
> நிகழ்ச்சிகளின் வரிசை -
>
> 1. பவுலும் குழுவினரும் மக்கெதோனியாவுக்குப் புறப்படுகிறார்கள்.
> 2. பிலிப்பி பட்டணத்துக்கு வந்துசேருதல்.
> 3. ஆற்றினருகே போதித்தல்.

4. லீதியாளின் மனமாற்றம்
5. லீதியாளின் ஞானஸ்நானம், அவள் அவர்களை உபசரித்தல்.
6. ஒரு பெண் பவுலையும் சீலாவையும் பார்த்துக் கத்துதல்.
7. பவுல் அசுத்த ஆவிக்குக் கட்டளையிடுதல்.
8. அந்தப் பெண் குணமடைதல்.
9. பவுலும் சீலாவும் குற்றம்சாட்டப்படுதல்.
10. பவுலும் சீலாவும் அடிக்கப்பட்டு சிறைச்சாலையில் போடப்படுதல்.
11. பவுலும் சீலாவும் பாடி ஜெபித்தல்.
12. பூமியதிர்ச்சி.
13. சிறைச்சாலைக்காரன் தற்கொலைசெய்ய முயலுதல்.

உச்சக்கட்டம் - சிறைச்சாலைக்காரனின் கேள்வி.
அ. பவுலின் பதில் - "கிறிஸ்துவை விசுவாசி."
ஆ. சிறைச்சாலைக்காரன் இரட்சிக்கப்படுதல்.
முடிவு - சிறைச்சாலைக்காரனின் ஞானஸ்நானம், அவன் அவர்களை உபசரித்தல், அவனது குடும்பத்தாரும் இரட்சிக்கப்படுதல்.

இப்படிப்பட்ட ஒரு உருவரையில் நீங்கள் உங்கள் துவக்க மற்றும் இறுதி வாக்கியங்களை விவரமாக எழுதிவைப்பது உதவியாக இருக்கும். முந்தைய பக்கத்தில் கூறியபடி, உச்சக்கட்டத்தில் பயன்படுத்தப் போகும் வாக்கியங்களையும்கூட எழுதி வைக்கலாம்.

படி பன்னிரெண்டு - உங்கள் செயல்திட்டத்தில், மையச் சத்தியம், செயல்படுத்துதல், பிற சத்தியங்களையும் சேருங்கள்

இப்போது மறுபடியுமாகக் கதைச் செயல்திட்டத்துக்குச் சென்று, எங்கெல்லாம் நீங்கள் மையச் சத்தியத்தை அறிமுகம்செய்து போதிப்பீர்களோ அங்கெல்லாம் மைச என்ற எழுத்துக்களைச் சேருங்கள். நீங்கள் இரட்சிக்கப்படாத பிள்ளைகளுக்கு மையச் சத்தியத்தைப் போதித்து பொருத்திக் கூறும் இடங்களில் மைசஇ என்றும் இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு மையச் சத்தியத்தைப் போதித்து, பொருத்திக் கூறும் இடங்களில் மைசஆ என்றும் குறித்து வையுங்கள். இந்த மையச் சத்தியத்தைப் போதித்துப் பொருத்திக் கூற இந்தப் பாடத்தில் அதிகமான வாய்ப்புகள் வருவதை நீங்கள் காண்பீர்கள்.

இதோடுகூட, நீங்கள் கூடுதலான ஏதாவது சத்தியத்தைக் குறிப்பிட வேண்டுமென்று விரும்புவீர்களானால், பொருத்தமான இடத்தில் அதைச் சுருக்க வடிவில் குறித்து வையுங்கள். இப்போது இறுதியான போதிக்கும் செயல்திட்டம் அடுத்த பக்கத்திலுள்ள வடிவில் இருக்கும். இந்தப் பாடத் திட்டத்திலும் 21ஆம் அத்தியாயத்திலுள்ள பாட உருவரையிலும் எங்கெல்லாம் மையச் சத்தியத்தைப் போதிக்க வாய்ப்பிருக்கிறதோ அந்த இடங்களையும், எந்த இடங்களில் அவைகளை இரட்சிக்கப்பட்ட மற்றும் இரட்சிக்கப்படாத பிள்ளைகளுக்குப் பொருத்திக்கூற வாய்ப்பிருக்கிறதோ அவைகளையும் நான் குறிப்பிட்டிருக்கிறேன். கூடுமான வரையில் உங்களுக்கு உதவ நான் விரும்புகிறேன். ஆனால் இவையனைத்தையும் நீங்கள் பயன்படுத்த விரும்பினால் பயன்படுத்தலாம்.

	மையச் சத்தியம் (மைச) - இயேசுகிறிஸ்து மக்களை மாற்றுகிறார். **இரட்சிக்கப்படாதவர்களுக்குப் பொருத்திக் கூறுதல்** - மைசஇ நீங்கள் அவரை விசுவாசிப்பீர்களானால் அவர் உங்களை மாற்றுவார் **இரட்சிக்கப்பட்டவர்களுக்குப் பொருத்திக் கூறுதல்** - மைசஆ உங்கள் மாற்றப்பட்ட வாழ்க்கையின்மூலம் நீங்கள் மற்றவர்களுக்குச் சாட்சியாக இருக்க முடியும்.	மற்றச் சத்தியங்கள் குறிப்பிடப் படுதல்
	துவக்கம் - குமாரின் பிரச்சினை - நான் வித்தியாசமானவனாக இருக்க வேண்டும்	
	நிகழ்ச்சிகளின் வரிசை-	
மைச	1. பவுலும் குழுவினரும் மக்கெதோனியாவுக்குப் புறப்படுகிறார்கள்.	கிறிஸ்துவின் மரணமும்
	2. பிலிப்பி பட்டணத்துக்கு வந்துசேருதல்.	உயிர்த்
மைச	3. ஆற்றினருகே போதித்தல்.	தெழுதலும் 0
மைச	4. லீதியாளின் மனமாற்றம்	
மைசஇ	5. லீதியாளின் ஞானஸ்நானம், அவள் அவர்களை உபசரித்தல்.	பாவமும்
	6. ஒரு பெண் பவுலையும் சீலாவையும் பார்த்துக் கத்துதல்.	அதன்
	7. பவுல் அசுத்த ஆவிக்குக் கட்டளையிடுதல்.	விளைவு
மைசஇ	8. அந்தப் பெண் குணமடைதல்	களும் ✓
	9. பவுலும் சீலாவும் குற்றம்சாட்டப்படுதல்.	
	10. பவுலும் சீலாவும் அடிக்கப்பட்டு சிறைச்சாலையில் போடப்படுதல்.	
மைசஆ	11. பவுலும் சீலாவும் பாடி ஜெபித்தல்.	
	12. பூமியதிர்ச்சி	
	13. சிறைச்சாலைக்காரன் தற்கொலைசெய்ய முயலுதல்.	
மைசஇ	14. சிறைச்சாலைக்காரனின் கேள்வி	
	உச்சக்கட்டம் -	கிறிஸ்துவின்
	அ. பவுலின் பதில் - "கிறிஸ்துவை விசுவாசி."	மரணமும்
மைசஇ	ஆ. சிறைச்சாலைக்காரன் இரட்சிக்கப்படுதல்.	உயிர்த்
	முடிவு -	தெழுதலும் 0
மைசஇ	சிறைச்சாலைக்காரனின் ஞானஸ்நானம்	விசுவாசத்தினால்
	அவன் அவர்களை உபசரித்தல்,	இரட்சிப்பு ✓
	அவனது குடும்பத்தாரும் இரட்சிக்கப்படுதல்.	
	குமார் மாற்றம் பெறுதல்	

நான்கு மற்றச் சத்தியங்களும் குறிப்பிடப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். அவைகளில் இரண்டு அதே வேதபகுதியில் உள்ளன (✓என்று குறிக்கப்பட்டுள்ளன. மற்ற இரண்டு சத்தியங்களும் அந்த வேதபகுதியில் இல்லை 0 என்று குறிக்கப்பட்டுள்ளன). இந்த நான்குமே மையச் சத்தியத்தைப் போதித்துப் பொருத்திக் கூற உதவுகின்றன.

மேலேயுள்ள திட்டத்தில் இவைகளையும் உள்ளடக்குவது உதவியாக இருக்கும்:

- உங்கள் அறிமுக வாக்கியங்கள்.
- உச்சக்கட்டத்தில் பயன்படுத்தப்படும் வாக்கியங்கள்.
- உங்கள் இறுதியான அறைகூவலிலும் அழைப்பிலும் பயன்படுத்தப்படும் வாக்கியங்கள்.

படி பதின்மூன்று - உங்கள் பாடத்தைப் போதித்துப் பயிலுங்கள்

இப்போது நீங்கள் மறுபடியும் மறுபடியுமாகப் பயிற்சிசெய்ய வேண்டும். உங்கள் பட உபகரணங்களைப் பயன்படுத்தி, தேவைப்பட்டால் இந்தப் பாட உருவரையை எடுத்துப் பார்த்து, பல முறை பாடத்தை நடத்திப் பயிலுங்கள். இந்த உருவரையை நீங்கள் ஒரு சிறிய காகிதத்திலோ அல்லது அட்டையிலோ எழுதி உங்கள் வேதாகமத்துக்குள் வைத்துக்கொள்ளலாம்.

அத்தியாயம் 26

அவர்கள் உங்களைக் கவனிக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்

சிறுவர்கள் வேதபாடத்துக்குச் செவிகொடுக்கும்படி ஊக்குவிப்பது எப்படி ?

அத்தியாயத்தின் சுருக்கம்

(பிள்ளைகள் உங்களுக்குச் செவிகொடுக்கிறார்களா என்பதை நீங்கள் உறுதிப் படுத்திக்கொள்ள வேண்டும்).

- உங்களை அவர்களுக்குப் பிடித்திருந்தால் அவர்கள் செவிகொடுப்பார்கள்
- பாடத்தின் உள்ளடக்கம் ஆர்வமுள்ளதாக இருக்குமானால் அவர்கள் செவி கொடுப்பார்கள்
- உங்கள் போதிக்கும் முறை ஆர்வமுள்ளதாக இருக்குமானால் அவர்கள் செவிகொடுப்பார்கள்
- சில அடிப்படை விதிகளை நீங்கள் கைக்கொண்டால் அவர்கள் செவி கொடுப்பார்கள்
- போதிப்பதை நீங்கள் அனுபவித்துச் செய்வீர்களானால் அவர்கள் செவி கொடுப்பார்கள்
- அவர்கள் செவிகொடுக்க வேண்டுமென்று நீங்கள் முன்பே ஜெபிப்பீர்களானால் அவர்கள் செவிகொடுப்பார்கள்

வேதபாடத்தை அளிப்பது குறித்த இந்த இறுதிப் பாடத்தில், நீங்கள் பிள்ளைகளுக்குப் போதிப்பதிலும், அவர்களை உங்களுக்குச் செவிகொடுக்குமாறு ஊக்குவிப்பதிலும் உங்களுக்கு உதவியாக இருக்கும் சில கருத்துக்களையும் கொள்கைகளையும் எடுத்துக்கூறுகிறேன். இதை ஒரு சரிபார்க்கும் பட்டியலைப் போலப் பயன்படுத்தி, உங்களிலும் உங்கள் ஊழியத்திலும் இவை வெளிப்படுகின்றனவா என்பதைச் சரிபார்த்துக்கொள்ளுங்கள்.

உங்களைப் பிள்ளைகளுக்குப் பிடித்திருந்தால் அவர்கள் நன்றாகச் செவிகொடுப்பார்கள்

சிறுவருக்குச் செய்யும் உங்கள் ஊழியத்தில் நீங்கள் வெற்றிபெற வேண்டுமானால், நீங்கள் அவர்களைக் கவரக்கூடிய வகையில் இருக்க வேண்டும். பிள்ளைகள் தங்கள் ஆசிரியரிடம் கவர்ந்திழுக்கப்படாவிட்டால், இயேசுகிறிஸ்துவிடம் அவர்கள் கவர்ந்திழுக்கப்படுவது கடினமாகும்!

ஆசிரியர் பிள்ளைகளைக் கவரக் கூடிய வகையில் இருப்பது எப்படி?

- நீங்கள் உறுதியாக இருக்க வேண்டும். அன்போடும் சரியான வழியிலும் திட மாக இருப்போமானால் பிள்ளைகள் அதை மதிக்கிறார்கள், அதனால் கவ ரப்படுகிறார்கள். நாம் சொல்வதையே செய்வோம் என்பதைப் பிள்ளைகள் அறிந்திருக்க வேண்டும். நாமே கட்டுப்படுத்துகிறவர்களாக இருக்கிறோம் என்பதையும், அவர்கள் ஒழுங்காக நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் பிள்ளைகள் உணர வேண்டும்.
- நீங்கள் சந்தோஷமாக இருக்க வேண்டும். தீவிரமாகவும் சந்தோஷமாகவும் ஒருசேர இருக்க முடியும், அப்படி இருப்பது அவசியமாகும். சிடுசிடுப்போடு இருக்கிறவர்களைவிட, சந்தோஷமாகவும், நகைச்சுவை உணர்வோடும், புன்னகையோடும், தேவைப்பட்டால் சிரிக்கக் கூடியவர்களாகவும் இருப் பவர்களே பிள்ளைகளைக் கவர்ந்திழுக்கிறார்கள். நீங்கள் உற்சாகத்தோடு இனிமையாகப் பழகாவிட்டால், பிள்ளைகளின் நம்பிக்கையையும் அன்பை யும் பெறுவது கடினமாகும்.
- நீங்கள் ஆர்வத்தோடு உற்சாகமாக இருக்க வேண்டும். நீங்கள் வகுப்புக்கு வரும்போது எதிர்பார்ப்போடு வர வேண்டும் (அப்படித்தான் இருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன்). அது உலகத்திலேயே மோசமான வேலை என்ற எண்ணத்தோடு வரக் கூடாது. உங்களுடைய ஆர்வம் (அல்லது ஆர்வக் குறைவு) பிள்ளைகளையும் தொற்றிக்கொள்ளும். நீங்கள் ஆர்வத்தோடு உற்சாகமாக இராவிட்டால், பிள்ளைகள் அவ்வாறு இருப்பதை எதிர்பார்க்க முடியாது.
- தனிப்பட்ட முறையிலும் நீங்கள் பிள்ளைகளிடம் ஆர்வம் காட்ட வேண்டும். அவர்களுடைய இரட்சிப்பில் மட்டுமல்ல, அவர்களுடைய அன்றாட வாழ்க் கையிலும் ஆர்வம் கொண்டிருக்க வேண்டும்.

நீங்கள் ஆர்வமுள்ள வகையில் போதிப்பீர்களானால் பிள்ளைகள் உங்களுக்குச் செவிகொடுப்பார்கள்

உங்கள் போதனையை ஆர்வமுள்ளதாக்கப் பல வழிமுறைகள் உள்ளன:

- தேவனுடைய வார்த்தையைப் பிள்ளைகளுக்குப் போதியுங்கள். தேவன் தமது வார்த்தை பிரசங்கிக்கப்படுவதை ஆசீர்வதிப்பதாக வாக்குத்தத்தம் அருளி யிருக்கிறார். நீங்கள் அந்த வாக்குத்தத்தத்தைச் சார்ந்திருக்க முடியும் . அவ ருடைய வார்த்தைக்கு மாற்றாக வேறு எதுவும் கிடையாது. வேதாகமம் பல அற்புதமான உண்மைக் கதைகளைக் கொண்டிருக்கிறது - ஒற்றர் கதைகள், போர்க் கதைகள், துணிகரச் செயல்களைக் கொண்ட கதைகள் போன்றவை. இவைகளின் மூலமாகப் பல அற்புதமான, பொருத்தமான சத்தியங்களைப் போதிக்க முடியும். சரியாக ஆயத்தம் செய்து, ஆர்வமுள்ள வகையில் போதித் தால், பிள்ளைகள் அதற்குச் செவிகொடுப்பார்கள். மேலும் பிள்ளைகள் வேதாகமத்தில் பல பகுதிகளை அறிந்திருக்கவில்லை; அவைகளை அவர்கள்

அறிந்துகொள்ள வேண்டும். அந்தப் பகுதிகளை நீங்கள் அவர்களுக்கு அறிமுகம் செய்ய வேண்டும்.

➤ உங்கள் போதனை பிள்ளைகளுக்குப் பொருத்தமானதாக இருக்க வேண்டும். எங்கோ "காற்றில் போதிக்க" நீங்கள் விரும்பவில்லை அல்லவா? நீங்கள் போதிப்பது காலம்கடந்த கருத்து என்ற எண்ணம் ஏற்பட இடம்கொடுக்காதீர்கள். காலத்துக்கு ஏற்றபடி அதைப் போதியுங்கள். உங்கள் வகுப்பிலுள்ள பிள்ளைகளின் தேவைகளை நீங்கள் அறிந்து, அவைகளைச் சந்திக்கும் வகையில் நீங்கள் போதிக்க வேண்டும். உங்கள் போதனைகள் தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவும், கேள்விகளுக்குப் பதில் காணவும் உதவுமென்று பிள்ளைகள் உணர்வார்களானால், அவர்கள் ஆர்வமாகச் செவிகொடுப்பார்கள்.

➤ பிள்ளைகள் புரிந்துகொள்ளக் கூடிய வார்த்தைகளையும் கருத்துப் படிவங்களையும் பயன்படுத்துங்கள். நீங்கள் ஒட்டகச் சிவிங்கிகளை அல்ல, ஆட்டுக் குட்டிகளையே மேய்த்துக் கொண்டிருக்கிறீர்கள் (யோவான் 21:15) என்பதை மறந்துவிடாதீர்கள்!

➤ உங்கள் போதிக்கும் செயல்திட்டத்தில், ஒவ்வொரு வாரத்திலும், பல்வேறு வகைகள் காணப்படுமானால் அது உங்கள் போதனைக்குக் கண்டிப்பாக உதவியாக இருக்கும். எனவே உங்கள் கூட்டத்தை இடையிடையே மாற்றுங்கள். உங்கள் செயல்திட்டத்தை மாற்றுங்கள், புதிதாக எதையாவது அறிமுகம் செய்யுங்கள். ஒரே சத்தியங்களையோ அல்லது பாடங்களையோ மாற்றி மாற்றிப் போதித்துக்கொண்டிருக்காமல், வேறுபட்ட அம்சங்கள் காணப்படும்படி பார்த்துக்கொள்ளுங்கள். வாராவாரம் ஏதேனும் மாற்றத்தைக் கொண்டுவாருங்கள்.

➤ உங்கள் பாடத்தை மனப்பாடம் செய்யாமல், இயல்பாகப் போதியுங்கள். உங்கள் பாடத்தின் அனைத்து விவரங்களையும் அறிந்துவைத்திருப்பது போதுமானது. மேலும் உங்கள் வேதாகமத்தின் நடுவே விவரமான உருவரையை ஒரு சிறு தாளில் எழுதிவைத்து, இடையிடையே அதைப் பார்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் போதிக்கும் முறை ஆர்வமுள்ளதாக இருக்குமானால் பிள்ளைகள் செவிகொடுப்பார்கள்

பெரியவர்களிடம் பேசும் அதே முறையில் நீங்கள் பிள்ளைகளிடம் பேசக் கூடாது. பெரியவர்களுக்காகப் போதிக்கப்படும் ஒரு ஐந்து அம்சச் செய்தியைத் துண்டு துண்டாக்கிப் பிள்ளைகளுக்குப் போதிக்க முடியாது. பிள்ளைகள் வித்தியாசமானவர்களாக இருக்கிறபடியால், அவர்களுக்கெனச் சிறப்பான முறையில் போதிக்க வேண்டும்:

➤ உங்கள் போதனையை உயிர்த்துடிப்புள்ளதாக ஆக்குங்கள். அதில் உயிரோட்டத்தைச் சேருங்கள். பேசும்போது ஆர்வத்தோடும் துடிப்போடும் பேசுங்கள்.

உங்கள் ஆர்வம் அவர்களையும் பற்றிக்கொள்ள வேண்டும். நீங்கள் ஆர்வத்தோடிராவிட்டால், பிள்ளைகளும் அப்படித்தான் இருப்பார்கள்.

➤ நீங்கள் நீங்களாகவே செயல்படுங்கள். ஒரு தாக்கத்தை ஏற்படுத்த முயலாதீர்கள். உங்கள் ஆளுமையின் மூலமாகக் கிரியைசெய்யவே தேவன் விரும்புகிறார். நாம் பெரியவர்களோடு பேசும்போது பெரும்பாலும் ஒரு போலித்தன்மையை உருவாக்கிக்கொள்கிறோம்; தன்னுணர்வினாலோ அல்லது தன்னம்பிக்கைக் குறைவினாலோ இவ்வாறு செய்கிறோம். ஆனால் பிள்ளைகளோ போலியான முகமூடி இல்லாமல் இயல்பானவர்களாக இருக்கிறார்கள்; நாமும் அவர்களிடம் அப்படியே நடந்துகொள்ள வேண்டும். உங்களிலும் *("இயேசுகிறிஸ்துவுக்கு நல்ல ஊழியக்காரனாயிருப்பாய்")* உங்கள் செய்தியிலும் *("என் வசனம்...வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாது")* உங்கள் அருட்பணியிலும் *("பிதா என்னை அனுப்பினதுபோல நான் உங்களை அனுப்புகிறேன்")* உங்கள் எசமானரிலும் *("சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்")* நீங்கள் நம்பிக்கை வைக்க வேண்டும்.

➤ பட அட்டைகள், பிளான்னல் அட்டைகள் இவைகளை முழுமையாக பயன்படுத்திக்கொள்ளுங்கள் (பார்க்க, அத்தியாயம் 30). சரியாகப் பயன்படுத்தும்போது இவை உங்கள் பாடங்களை உயிர்த்துடிப்புள்ளவைகளாக்குகின்றன. நீங்கள் கொடுக்கும் செய்தி ஆர்வமுள்ளதாகவும் கவர்ந்திழுக்கக்கூடியதாகவும் இருக்கும்படி செய்கின்றன. எடுத்துக்காட்டுக் கதைகளும் உதவியாக இருக்கும்.

➤ எல்லாவற்றுக்கும் மேலாக, உங்கள் இயல்பான பாட உபகரணங்களை மெய்யாகவே ஆர்வமுள்ள வகையிலும், கவர்ச்சிகரமாகவும் இருக்கும்படி பயன்படுத்துங்கள்:

✓ உங்கள் குரலை ஏற்ற இறக்கத்துடன் பயன்படுத்துங்கள்.

✓ உங்கள் முகத்தில் அதிகமான அளவு வெளிப்பாடுகளைக் காட்டுங்கள்.

✓ உங்கள் கைகளைப் பயன்படுத்தி, கதையிலும் பாடத்திலும் செயல்பாடுகளைக் காட்டுங்கள்.

➤ உங்கள் பாடத்துக்கு ஜீவனூட்டி, அதில் அதிகமான செயல்களைச் சேருங்கள். நீங்கள் ஆர்வத்தோடு செய்யாவிட்டால், பிள்ளைகள் ஆர்வத்தோடு கவனிக்க மாட்டார்கள் என்பதை நினைவில் வைத்திருங்கள்.

நீங்கள் "விதிகளைப் பின்பற்றுவீர்களானால்" பிள்ளைகள் நன்றாகச் செவிகொடுப்பார்கள்

நீங்கள் போதிக்கவும், பிள்ளைகள் செவிகொடுக்கவும் உதவியாக இருக்கும் பல விதிகளை நீங்கள் இடையிடையே நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும். இந்த நூலின் பல பகுதிகளில் அவை ஏற்கெனவே எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. அவைகளில் சில குறிப்புகளை மறுபடியுமாக நினைவுபடுத்த விரும்புகிறேன்.

- உங்கள் பாடத்தை முழுமையாக ஆயத்தம்செய்து, அதில் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். உங்கள் பட உபகரணங்கள் பயன்படுத்துவதற்கு ஆயத்தமாக இருக்க முடியும். முன்கூட்டியே முழுமையாக ஆயத்தம்செய்வது முக்கியமாகும்.
- போதிக்கும்போது அன்பானதும், கிருபையானதும், உண்மையானதுமான மனோபாவத்தைக் கொண்டிருங்கள்.
- உங்கள் போதனையும் செயல்படுத்துதலும் தெளிவானதாகவும் பிள்ளைகளுக்குப் புரியக்கூடியதாகவும் இருக்க வேண்டும். அது அவர்களுடைய சூழ்நிலைகளுக்கும் தேவைகளுக்கும் பொருத்தமானதாக இருக்க வேண்டும்.
- உங்கள் போதிக்கும் செயல்திட்டத்தில் ஒன்றுபோலிருப்பதையும், சலிப்பூட்டும் வகையில் கூறப்படுவதையும் தவிருங்கள். பல்வேறு வகைப்பட்ட முறைகள் கையாளப்படுவது ஆர்வத்தைத்தூண்டும்.
- நீங்கள் போதிக்கும்போது எல்லாப் பிள்ளைகளோடும் கண் தொடர்பு கொண்டிருங்கள். சுவற்றையோ, பிளான்னல் அட்டையையோ அல்லது ஒரு பிள்ளையையோ மாத்திரம் பார்த்துக்கொண்டிராதேயுங்கள்.
- உங்கள் தனிப்பட்ட தோற்றத்தைக் குறித்துக் கவனமாக இருங்கள். பொருத்தமாகவும் சுத்தமாகவும் ஆடையணியுங்கள். பிள்ளைகளின் கவனத்தைச் சிதறடிக்கக்கூடிய எதையும் தவிருங்கள்.

நீங்கள் அனுபவித்துப் போதிப்பீர்களானால் பிள்ளைகள் நன்றாகக் கவனிப்பார்கள்

ஒரு வேதபாடத்தைப் போதிப்பது கடினமான காரியமாக இல்லாமல், சந்தோஷமான அனுபவமாக இருக்க வேண்டும். நீங்கள் எவ்வளவாக ஆயத்தச் செயல்களைச் செய்கிறீர்களோ அவ்வளவாக உங்களை நீங்களே நன்றாக ஒழுங்குபடுத்திக் கொள்வீர்கள், போதிப்பதையும் அனுபவித்துப் போதிப்பீர்கள். நீங்கள் எவ்வளவாக அதை அனுபவிக்கிறீர்களோ அவ்வளவாகப் பிள்ளைகளும் சந்தோஷமாக அதை அனுபவிப்பார்கள். நீங்கள் போதிப்பதில் காணப்பட வேண்டிய சந்தோஷத்தையும் செயலார்வத்தையும் இழந்துபோகக் கூடியவகையில் அதிகமான அளவு செயல்முறைகளுக்கும் திட்டங்களுக்கும் கட்டுப்பட்டுவிடக் கூடாது.

நீங்கள் ஜெபிப்பீர்களானால் பிள்ளைகள் நன்றாகக் கவனிப்பார்கள்

ஜெபியுங்கள்! ஜெபியுங்கள்! ஜெபியுங்கள்! "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" என்ற ஆண்டவராகிய இயேசுவின் வார்த்தைகளை (யோவான் 15:5) மறந்துவிடாதீர்கள். நீங்கள் ஜெபத்திலும், ஆயத்தத்திலும், போதிப்பதிலும் அனைத்தையும் செய்துமுடித்துவிட்ட பிறகு, விளைவுகளைப் பாதுகாப்பாகத் தேவனுடைய கரங்களில் விட்டுவிடுங்கள்.

அத்தியாயம் 27

நீங்கள் உதவிசெய்ய ஆயத்தமாக இருக்கிறீர்கள் என்பதை அவர்கள் அறியச் செய்யுங்கள்

சிறுவர்களுக்கு "உதவி செய்யக்கூடியவராக இருப்பது" எப்படி ?

அத்தியாயத்தின் சுருக்கம்

(அக்கறையுள்ள பிள்ளைகளுக்கு உதவிசெய்யவும் ஆலோசனை கூறவும் ஆயத்தமாக இருங்கள்)

- கிறிஸ்துவை விசுவாசிக்க விரும்பும் பிள்ளைகளுக்கு நீங்கள் உதவிசெய்யக் கூடியவராக இருக்க வேண்டும்.
- நீங்கள் ஏன் உதவிசெய்யக் கூடியவராக இருக்க வேண்டும்?
- நீங்கள் எவ்வாறு உதவிசெய்யக் கூடியவராக இருக்க வேண்டும்?
- நீங்கள் எப்போது உதவிசெய்யக் கூடியவராக இருக்க வேண்டும்?
- மேலும் இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளுக்கும் உதவிசெய்யும் நிலையில் இருங்கள்.

ஒரு ஆசிரியராக நீங்கள் ஒருபோதும் உங்கள் பிள்ளைகளிடமிருந்து தொலைவில் விலகியிருக்கக் கூடாது. தாங்கள் எந்த வேளையிலும் உங்களிடம் வந்து உங்களோடு பேச முடியும் என்பதைப் பிள்ளைகள் அறிய வேண்டும். அவர்களால் அணுகப்படக்கூடியவராகவும் உதவிசெய்யும் நிலையிலும் இருக்கவே நீங்கள் விரும்புகிறீர்கள். பிள்ளைகளிடம் நீங்கள் வெளிப்படுத்தும் மனோபாவத்தில் இது தெளிவாக வெளிப்பட வேண்டும். நீங்கள் கூறுவதிலும் அதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

இரட்சிக்கப்படாத பிள்ளைகளுக்கு உதவிசெய்யும் நிலையில் நீங்கள் இருக்க வேண்டும்

நீங்கள் போதிக்கும்போது, இரட்சிக்கப்படாத பிள்ளைகளுக்கு சுவிசேஷத்தை நன்கு எடுத்துக் கூறுவதே உங்கள் முதல் பொறுப்பாகும். அப்படிச் செய்யும் போது பரிசுத்த ஆவியானவர் இரட்சிக்கப்படாத பிள்ளைகளின் இருதயத்தில் பேசி, இரட்சிப்பின் தேவையை அவர்களுக்குக் காட்ட வேண்டும் என்றும், இயேசுகிறிஸ்து அவர்களுக்காக என்ன செய்தார் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றும், இயேசுகிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும் நம்பிக்கையோடு ஜெபிக்க வேண்டும். ஆனால் அவர்களில் சிலருக்குத் தனிப்பட்ட உதவியும் ஆலோசனையும் தேவைப்படும். அந்தத் தனிப்பட்ட உதவியையும் ஆலோசனையையும் கொடுக்க நீங்கள் ஆயத்தமாக

இருக்கிறீர்கள் என்பதை அவர்களுக்குத் தெரிவிப்பதும் உங்கள் பொறுப்பின் ஒரு பகுதியாகும்.

நீங்கள் ஏன் உதவிசெய்யக்கூடியவராக இருக்க வேண்டும்?

பல சிறுவர்கள் தாங்களாகவே "இரட்சிப்புக்குள் வந்துவிடுகிறார்கள்." சுவிசேஷத்தைக் கேட்டு, அவர்கள் கூட்டத்திலோ, வீட்டிலோ, அல்லது வீட்டுக்குச் செல்லும் வழியிலோ இயேசுகிறிஸ்துவின்மீது நம்பிக்கை வைக்கிறார்கள். ஆனாலும் சில காரணங்களுக்காகத் தங்களால் இவ்வாறு செய்ய முடியாது என்று நினைக்கும் பிள்ளைகளும் இருக்கிறார்கள்.

- சிலர் இன்னும் இரட்சிக்கப்படுவது எப்படி என்பதைப் புரிந்துகொள்ளவில்லை.
- சிலர் தாங்கள் கேட்டதைக் குறித்துக் குழப்பமடைந்திருக்கிறார்கள்.
- சிலர் மனதில் கேள்விகள் இருக்கின்றன, அவைகளுக்குப் பதில் தேவைப்படுகிறது.

இதனால் இந்தப் பிள்ளைகளுக்கு உங்கள் உதவி தேவைப்படுகிறது. இந்த உதவியை நீங்கள் செய்ய வேண்டும். அவர்களுக்கு இந்த உதவி தேவைப்பட்டால், அவர்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதில் உதவிசெய்ய வேண்டும். ஆனால் உங்களுடைய உதவியில்லாமல்கூட பிள்ளைகளால் இயேசுகிறிஸ்துவின்மீது விசுவாசம் வைக்க முடியும். இரட்சிக்கப்படுவதற்காக அவர்கள் உங்களோடு பேச வேண்டியதில்லை. ஆனால், மேலேயுள்ள மூன்று சூழல்களிலும் இருக்கும் பிள்ளைகளோடு நீங்கள் பேசுவது அவர்களுக்கு உதவியாக இருக்கும்.

நீங்கள் வகுப்பில் சுவிசேஷத்தை எடுத்துக் கூறியதைக் கேட்ட ஒரு பிள்ளை இரட்சிக்கப்பட விரும்பலாம், ஆனால் எப்படி இரட்சிக்கப்படுவது என்பதைக் குறித்து நிச்சயமில்லாமல் இருக்கலாம், அந்தப் பிள்ளைகளுக்கு உங்கள் தனிப்பட்ட உதவியும் ஆலோசனையும் தேவைப்படுகிறது. மேலும், உதவிக்காக உங்களையோ அல்லது வேறு எவரையோ அணுக அந்தப் பிள்ளை கூச்சப்படலாம். தனிப்பட்ட முறையில் அந்தப் பிள்ளையோடு நேருக்கு நேர் பேசி, அவனுடைய கேள்விகளுக்குப் பதிலளிப்பீர்களானால் கிறிஸ்துவிடம் எப்படி வந்து அவரை விசுவாசிப்பது என்பதை அவன் அறிந்துகொள்வான்.

நீங்கள் எவ்வாறு உதவிசெய்யக் கூடியவராக இருக்க வேண்டும்?

எனவே இப்படிப்பட்ட பிள்ளைகளுக்கு நீங்கள் உதவிசெய்ய ஆயத்தமாக இருக்கிறீர்கள் என்பதை அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் அவர்களுக்கு நான்கு காரியங்களைத் தெளிவுப்படுத்த வேண்டும்:

- அவர்களுக்கு நீங்கள் உதவிசெய்ய ஆயத்தமாக இருப்பதை
- எங்கே உங்களைக் கண்டு பேசலாம் என்பதை
- எப்போது உங்களிடம் வரலாம் என்பதை
- அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை

எனவே உங்கள் பாடத்திலிடையே நீங்கள் இப்படிப்பட்ட வார்த்தைகளைக் கூற வேண்டும்:

"இங்கே இரட்சிக்கப்படாத எந்தப் பிள்ளையாவது இரட்சிக்கப்பட விரும்பி, எப்படி அதைப் பெறுவது என்று அறியாதிருந்தால், உங்களோடு பேசுவதில் நான் சந்தோஷப்படுவேன். நீங்கள் கிறிஸ்துவை அறிய நான் உங்களுக்கு உதவுவேன். எனவே கூட்டம் முடிந்தபிறகு அப்படிப்பட்ட பிள்ளைகள் முன்னால் வந்து இங்கே போடப்பட்டிருக்கிற நாற்காலிகளில் உட்கார வேண்டும். அப்போது உங்களுக்கு என்னுடைய உதவி தேவைப்படுகிறது என்பதை நான் அறிந்துகொள்வேன்."

இப்படி மேலே கூறப்பட்ட நான்கு காரியங்களையும் குறித்துப் பிள்ளைகளுக்குத் தெளிவுபடுத்திவிட்டீர்கள்.

- நீங்கள் உதவிசெய்ய ஆயத்தமாக இருக்கிறீர்கள் என்பதை அவன் தெரிந்துகொள்கிறான்.
- தான் சரியாக எங்கே செல்ல வேண்டும் என்பதை அவன் அறிந்துகொள்கிறான்.
- எப்போது உங்களைப் பார்க்க முடியும் என்பதை அவன் அறிந்துகொள்கிறான்.
- உங்கள் உதவியும் ஆலோசனையும் தேவைப்பட்டால், தான் என்ன செய்ய வேண்டும் என்பதை அவன் அறிந்துகொள்கிறான்.

இப்போது தீர்மானம் எடுப்பது அவனுடைய கைகளில் இருக்கிறது. அழுத்தமோ நெருக்கமோ கொடுக்கப்படவில்லை. நீங்கள் விவரங்களை அவனுக்குத் தெரிவித்துவிட்டீர்கள். அடுத்த படியை அவனிடம் விட்டுவிடுகிறீர்கள்.

நான் ஒருநாளும் பிள்ளைகளிடம், அவர்கள் இரட்சிப்பைப் பெற விரும்பினாலோ அல்லது நான் அவர்களுடன் தனியே பேசும்படி விரும்பினாலோ, கைகளை உயர்த்துங்கள் என்றோ, எழுந்து நில்லுங்கள் என்றோ அல்லது முன்னால் வரும்படியோ கூற மாட்டேன். இப்படிப்பட்ட உடனடியான சரீரப்பிரகாரமான செயல்கள் பொய்யான ஆபத்தையே விளைவிக்கும் என்று நான் உணர்கிறேன்.

- ஆசிரியர் வற்புறுத்தினாலோ, அல்லது உணர்ச்சியோடு கூறினாலோ அல்லது அவர் வலுவான ஆளுமையைப் பெற்றிருந்தாலோ, பிள்ளைகள் சரியாகச் சிந்திக்காமல், உடனடியாகச் செயல்படும் வாய்ப்பு இருக்கிறது.
- பிள்ளைகள் "தலைவரைப் பின்பற்றும்படியான" உந்துதலைப் பெறும் வாய்ப்பும் இருக்கிறது. மற்றப் பிள்ளைகள் அதே காரியத்தைச் செய்வதால், இவர்கள் சரீரப்பிரகாரமாகவும் உடனடியாகவும் தாங்களும் அதை போன்று செய்ய முன்வரலாம்.
- கைகளை உயர்த்துவது, எழுந்து நிற்பது போன்ற சரீரப்பிரகாரமான செயல்களால் உடனடியாக இரட்சிப்பு கிடைத்துவிடும் என்று பிள்ளைகள் தவறாகவும் நினைத்துவிடலாம்.

தனிப்பட்ட உதவியும் ஆலோசனையும் தேவைப்படும் பிள்ளைகள் கூட்டம் முடிந்த பிறகு உங்களிடம் வந்து பேசுவதே நலம் என்று நான் நினைக்கிறேன். உங்களைச் சந்திக்க முடியும் என்பதையும் எங்கே எப்போது சந்திக்க முடியும் என்பதையும் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். ஆனால் நீங்கள் உதவி செய்யத்தயாராய் இருப்பதும், நீங்கள் குறிப்பட்ட இடத்தில் இருப்பதும், ஆலோசனை கூறவும் நேரம் கொடுப்பதும் முக்கியமானது.

நீங்கள் எப்போது உதவிசெய்ய கூடியவராக இருக்க வேண்டும்?

உங்களைச் சந்திக்க முடியும் என்பதைப் பிள்ளைகள் எப்போதுமே அறிந்திருக்க வேண்டும். நீங்கள் திறந்த வெளிக்கூட்டங்களை நடத்தினாலோ, அல்லது ஒவ்வொரு நாளும் வெவ்வேறு பிள்ளைகள் கலந்துகொள்ளும் சிறுவர் கூட்டங்களை நடத்தினாலோ, நீங்கள் ஒவ்வொரு முறை சுவிசேஷத்தை அறிவிக்கும்போதும் இரட்சிக்கப்படாத பிள்ளைகளுக்கு அவர்கள் உங்களைச் சந்திக்கக் கூடிய வாய்ப்பை அளிக்க வேண்டும். ஏனென்றால் அவர்களில் சிலர் திரும்பி வராமல் போகலாம். ஆனால் ஒவ்வொரு நாளோ அல்லது ஒவ்வொரு வாரமோ குறிப்பிட்ட பிள்ளைகளுக்கு நீங்கள் பாடங்களை நடத்திக்கொண்டிருப்பீர்களானால், உங்களைச் சந்திக்க முடியும் என்பதை இடையிடையே அவர்களுக்கு நினைவுபடுத்திக்கொண்டிருக்க வேண்டும். ஆனால் ஒவ்வொரு கூட்டத்திலும் இதைக் கூற வேண்டிய அவசியமில்லை. ஆனால் உங்களைச் சந்திக்க முடியும் என்பதையும், தங்களுக்கு உதவியோ அல்லது ஆலோசனையோ தேவைப்பட்டால் என்ன செய்ய வேண்டும் என்பதையும் பிள்ளைகள் எப்போதும் அறிந்திருக்க வேண்டும்.

இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளுக்கும் உதவிசெய்யும் நிலையில் இருங்கள்

இரண்டு வகைப்பட்ட பிள்ளைகள் இருக்கிறார்கள் என்று பார்த்தோம். இயேசு கிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டிருக்கும் பிள்ளைகள், ஏற்றுக் கொள்ளாத பிள்ளைகள். எனவே, உங்கள் ஊழியத்தில் இரட்சிக்கப்படாத பிள்ளைகளுக்குச் சுவிசேஷத்தை அறிவிப்பதோடுகூட, இரட்சிக்கப்பட்ட பிள்ளைகள் வளர்ச்சிபெறவும் உதவ வேண்டும்.

முந்தைய அத்தியாயங்களில் நாம் பார்த்ததுபோல, இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளுக்குத் தேவனுடைய வார்த்தையைப் போதித்து செயல்படுத்துவது உங்கள் இலக்காக இருக்க வேண்டும். அவர்களுக்கு தேவனுடைய வார்த்தை ஆவிக்குரிய பாலாகவும் (1 பேதுரு 2:2), திட உணவாகவும் (எபிரெயர் 5:14) இருக்கிறது; அவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு இது தேவையாகும். நீங்கள் போதிக்கும்போது, குறிப்பாக வேதபாடங்களின் மூலமாக இந்த இரட்சிக்கப்பட்ட பிள்ளைகள் தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும்படி அவர்களுக்குத் தீர்வுகளைப் போதிக்க வேண்டும்.

ஆனால், அதே வேளையில், நீங்கள் உங்கள் கூட்டத்தில் போதிப்பதோடுகூட அதிகப்படியான உதவியும், ஆலோசனையும் சில இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளுக்கும் தேவைப்படுகிறது. அவர்களுக்குச் சில கேள்விகளுக்குப் பதில் தெரியாமல் இருக்கலாம், சில சந்தேகங்கள் இருக்கலாம். அவற்றிற்குப் பதில்களும் ஆலோசனைகளும் தனிப்பட்ட முறையில் மட்டுமே கொடுக்கப்பட முடியும்.

எனவே இந்த இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளுக்கும் நீங்கள் உதவிசெய்ய முன்வர வேண்டும். நீங்கள் உதவிசெய்ய ஆயத்தமாக இருக்கிறீர்கள் என்பதைத் தெரிவித்தாலொழிய கிறிஸ்தவ சிறுவர்கள் உங்களிடம் வர மாட்டார்கள்.

எனவே, அவர்களும் குறைந்த பட்சம் இந்த நான்கு காரியங்களை அறியும்படி செய்ய வேண்டும்:

- நீங்கள் உதவிசெய்யவும், ஜெபிக்கவும், அவர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கவும் ஆயத்தமாக இருக்கிறீர்கள் என்பதை.
- எந்த இடத்தில் அவர்களுக்கு உதவிசெய்ய ஆயத்தமாக இருக்கிறீர்கள் என்பதை
- இந்தச் சந்திப்பு எப்போது என்பதை
- இந்த உதவியைப் பெற வேண்டுமானால் அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை

எடுத்துக்காட்டாக, நீங்கள் இவ்வாறு கூறலாம்:

"இங்கே இயேசுகிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டிருக்கிற எந்தச் சிறுவனுக்காவது சிறுமிக்காவது ஏதேனும் பிரச்சினையோ அல்லது கேள்வியோ இருக்குமானால், உங்களுக்கு உதவ நான் விரும்புகிறேன். கூட்டம் முடிந்த பிறகு உங்களோடு பேசவும் உங்களோடு சேர்ந்து ஜெபிக்கவும் நான் ஆயத்தமாக இருக்கிறேன். அப்படி நான் செய்யும்படி நீங்கள் விரும்புகிறீர்களா? அப்படியானால் மற்றவர்கள் கலைந்துசென்ற பிறகு முன்னால் வந்து இந்த நாற்காலிகளில் அமருங்கள். அப்படி நீங்கள் அமர்ந்திருப்பதை நான் காணும்போது என்னுடைய உதவி உங்களுக்குத் தேவைப்படுகிறது என்பதை அறிந்துகொள்வேன். சந்தோஷத்தோடு நான் உங்கள் உதவிக்கு வருவேன்."

ஒவ்வொரு வாரமும் நீங்கள் இவ்வாறு கிறிஸ்தவ பிள்ளைகளைத் தனியே சந்திக்க வேண்டுமென்று அவசியமில்லை. அவ்வப்போது, பாடம் நடத்தும்சமயங்களில் இடைவெளியின்போது இதைச் செய்யலாம். உங்கள் உதவிகிடைக்கும் என்பதையும், உங்களை அணுக முடியும் என்பதையும் கிறிஸ்தவ பிள்ளைகளும் அறிந்திருப்பதே முக்கியமான காரியமாகும். இந்த வகையில் உதவிசெய்ய பெரும்பாலான பிள்ளைகளுக்கு யாரும் கிடையாது. எனவே அப்படிச் செய்வது உங்களுக்குப் பெரிய சிலாக்கியமாகவும், வாய்ப்பாகவும் இருக்கிறது.

நீங்கள் இரட்சிக்கப்படாத பிள்ளைகளைச் சந்திக்கும் அதே வேளையில் கிறிஸ்தவ பிள்ளைகளைச் சந்திக்காதிருப்பது நலமாகும். இருவருக்கும் தனித்தனியே நேரத்தை அறிவிப்பது குழப்பத்தைத் தவிர்க்கும்.

அத்தியாயம் 28

அவர்களுக்கு வழியைக் காட்டுங்கள்

இரட்சிக்கப்படாத சிறுவர்களுக்கு ஆலோசனை கூறி கிறிஸ்துவிடம் அவர்களை வழிநடத்துவது எவ்வாறு ?

அத்தியாயத்தின் சுருக்கம்

(ஒரு பிள்ளையைக் கிறிஸ்துவிடம் வழிநடத்த 10 படிகளைப் பின்பற்ற வேண்டும்).

- **பிள்ளை இயல்பாக இருக்கும்படி செய்யுங்கள்**
- **பிள்ளையின் பிரச்சினையைக் கண்டுபிடியுங்கள்**
- **பிள்ளை சுவிசேஷத்தைப் புரிந்துகொண்டிருக்கிறானா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்**
- **இரட்சிப்பின் வழியைப் பகிர்ந்துகொள்ள வேத வசனத்தைப் பயன்படுத்துங்கள்**
- **அவன் கிறிஸ்துவை விசுவாசிக்க விரும்புகிறானா என்று கேளுங்கள்.**
- **அவன் தன்னை இரட்சிக்கும்படி ஆண்டவராகிய இயேசுவை வேண்டிக் கொள்ளுமாறு கூறுங்கள்**
- **இரட்சிப்பின் நிச்சயத்தைக் குறித்துக் கூறுங்கள்**
- **நன்றிகூறும் ஜெபத்தை ஏறெடுக்குமாறு கூறுங்கள்**
- **தொடர் போதனையைத் துவங்குங்கள்**
- **அவனுக்கு ஒரு வேதாகம வாக்குத்தத்தத்தை எடுத்துக் கூறுங்கள்**

நீங்கள் பிள்ளைகளுக்குச் சுவிசேஷச் செய்தியைப் பிரசங்கித்து, இயேசு கிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராக விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும்படி அறைகூவல் விடுத்திருக்கிறீர்கள். தனிப்பட்ட உதவி தேவைப்படுகிறவர்களுக்கு நீங்கள் உதவும்படியும் முன்வந்திருக்கிறீர்கள் (முந்தைய அத்தியாயத்தைப் பார்க்கவும்). இப்போது கூட்டம் முடிந்துவிட்டது. ஒரு பிள்ளை முன்னால் வந்து அமர்ந்திருக்கிறான். அவன் இரட்சிக்கப்பட விரும்புகிறான், உங்களோடு பேச விரும்புகிறான்.

எனவே, இந்தக் குழந்தைக்கு ஆலோசனை கூறுவதில் பின்பற்றப்பட வேண்டிய பத்துப் படிகளைக் குறித்து இந்த அத்தியாயத்தில் நாம் பார்ப்போம்.

படி 1 - பிள்ளை இயல்பாக இருக்கும்படி செய்யுங்கள்

சிறுவன் மிகவும் சிறுவயதினனாக இருந்தால், படபடப்போடும் என்ன நடக்கப் போகிறதோ என்ற திகைப்போடும் அமர்ந்திருப்பான்.

புன்னகை செய்து அவன் இயல்பாக இருக்கும்படி செய்யுங்கள். அவன் உங்களுடன் பேச வந்திருப்பதினால் நீங்கள் எவ்வளவு மகிழ்ச்சியடைகிறீர்கள் என்று அவனுக்குக் கூறுங்கள்.

அவனுடைய பெயரையும் வயதையும் கேளுங்கள் (ஏற்கெனவே இந்த விவரங்கள் உங்களுக்குத் தெரியாதிருக்குமானால்). பிறகு அவனுடைய பெயரைச் சொல்லி தொடர்ந்து அவனோடு பேசுங்கள்.

அவனுக்காக யாராவது காத்திருக்கிறார்களா அல்லது ஒரு குறிப்பிட்ட நேரத்துக்குள் அவன் வீடு திரும்ப வேண்டுமா என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். தேவைப்பட்ட ஒழுங்குகளைச் செய்துகொள்ளுங்கள்.

மேலும், அவனுக்குப் பள்ளிக்கூடம் பிடித்திருக்கிறதா, அவனுக்குப் பிடித்தமான பாடங்கள் என்ன என்று அவனிடம் கேட்கலாம். இப்படிப்பட்ட உரையாடல்கள் பிள்ளை நெருக்கத்தைவிட்டு இயல்பாகவே இருக்கும்படி செய்கின்றன. அவன் உங்களோடு மனம்திறந்து பேச ஆயத்தமாக இருப்பான்.

படி 2 - பிள்ளையின் பிரச்சினையைக் கண்டுபிடியுங்கள்

ஒரு மருத்துவரைப் போல, பிள்ளைகளுக்கு உதவுவதற்கு முன்பாக நீங்கள் அவனுடைய ஆவிக்குரிய பிரச்சினையைக் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது.

பிள்ளைகளில் நான்கு முக்கிய குழுவினர்

ஒரு கூட்டத்துக்குப் பின்னர் ஆலோசனைக்கு வரும் பிள்ளைகள் பொதுவாக நான்குவிதமான பிரிவில் ஒன்றைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். ஒவ்வொரு குழுவினரோடும் வெவ்வேறு விதமாக இடைபட வேண்டும்.

குழு 1 - உண்மையில்லாத அல்லது ஆயத்தமாக இல்லாத இரட்சிக்கப்படாத பிள்ளைகள்

குழு 2 - தான் இரட்சிக்கப்பட வேண்டும் என்ற தேவையைப் புரிந்துகொள்ளாத இரட்சிக்கப்படாத பிள்ளைகள்

குழு 3 - இரட்சிக்கப்பட்ட பிள்ளைகள்; எனினும் நிச்சயமில்லாதோர் - பிரச்சினையுள்ளோர்

குழு 4 - இரட்சிக்கப்படாத பிள்ளைகள்; உண்மையானவர்கள் - இரட்சிக்கப்படாதவர்கள் - ஆனால் மெய்யாகவே இரட்சிக்கப்பட விரும்புகிறார்கள்.

கேட்க வேண்டிய மூன்று முக்கிய கேள்விகள்

மேலும் தொடர்வதற்கு முன்பாக, உங்களிடம் ஆலோசனைக்கு வந்திருக்கும் பிள்ளை மேலேயுள்ள எந்தக் குழுவைச் சேர்ந்தவன் என்பதைக் கண்டுபிடிப்பதற்காக மூன்று தொடர் கேள்விகளைக் கேட்க வேண்டும்.

கேள்வி 1 - நீ ஏன் என்னோடு பேச விரும்புகிறாய்?

பிள்ளை உண்மையோடு வந்திருக்கிறானா அல்லது அவன் முதல் குழுவைச் சேர்ந்தவனா என்பதை இந்தக் கேள்விக்கான பதில் காட்டிவிடும்.

அவனுடைய பதில் அவன் மெய்யாகவே கிறிஸ்துவை விசுவாசிக்க விரும்புகிறான் என்பதைக் காட்டுமானால், இரண்டாம் மற்றும் மூன்றாம் கேள்விகளுக்குச் செல்லுங்கள்.

ஆனால் அவன் முதல் குழுவைச் சேர்ந்தவனாக, உண்மையில்லாமலோ அல்லது மேலும் தொடர ஆயத்தமில்லாதவனாகவோ இருப்பானானால், கிறிஸ்துவை விசுவாசிப்பதே அவன் எடுக்க வேண்டிய மிக முக்கியமான படி என்பதை அவனுக்கு வலியுறுத்துங்கள். இதைக் குறித்து அவன் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும் என்றும், அவன் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் கிறிஸ்துவை விசுவாசிக்க முடியும் என்றும் கூறுங்கள். அவன் திரும்புமுன்பாக, அவன் விரும்பும் எந்த நேரத்திலும் உங்களைச் சந்தித்துப் பேச முடியும் என்பதை அவனுக்குத் தெரிவியுங்கள்.

இப்போதைக்கு இதற்கு மேலாக உங்களால் அவனை வழிநடத்த முடியாது.

கேள்வி 2 - நீ எப்போதாவது பாவம்செய்திருக்கிறாயா அல்லது ஏதாவது தவறு செய்திருக்கிறாயா?

இப்படிப்பட்ட கேள்வி நீங்களும் பிள்ளையும் பாவத்தைக் குறித்துப் பேச உங்களுக்கு வாய்ப்பளிக்கும்.

பாவத்தைக் குறித்த இந்தக் கேள்விக்கு அவன் பதிலளிக்கும் விதம் அவன் இரட்சிப்பைப் பற்றிப் புரிந்துகொண்டிருக்கிறானா என்று நீங்கள் அறிந்துகொள்ள உதவும். அவன் புரிந்துகொண்டிராவிட்டால் இரண்டாவது குழுவைச் சேர்ந்தவனாக இருக்கிறான். அதற்கு மேல் முன்னேற அவன் ஆயத்தமாக இல்லை.

என்றாலும், தான் பாவம் செய்திருக்கிறோம் என்பதைப் பிள்ளை அறிவதும், மேலேயுள்ள கேள்விக்கு "ஆமாம்" என்று பதில் கூறுவதும் போதுமானது அல்ல. அவன் பாவத்தைக் குறித்து உணர வேண்டும், அதை விட்டுத் திரும்ப விரும்ப வேண்டும். வித்தியாசமானவனாக இருக்க வாஞ்சிக்க வேண்டும்.

எனவே மேலும் தொடர்ந்து இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்கலாம்:

- *"நீ இப்படியே இருக்க விரும்புகிறாயா?"* அல்லது
- *"நீ செய்துள்ள தவறுகளுக்காக நீ என்ன செய்யவேண்டுமென்று தேவன் விரும்புகிறார் என்பது தெரியுமா?* அல்லது
- *"தேவனுடைய உதவியோடு மாற்றமடைய நீ விரும்புகிறாயா?"* அல்லது
- *"நீ மாற்றமடைந்தவனாக இருக்க விரும்புகிறாயா?"*

அந்த பிள்ளை பாவத்தைக் குறித்துப் புரிந்துகொண்டிராவிட்டாலோ அல்லது பாவத்தைக் குறித்து உணர்த்தப்பட்டிருப்பதுபோலத் தோன்றாவிட்டாலோ, அவன் இரண்டாவது குழுவைச் சேர்ந்தவனாக இருக்கிறான். இப்போது உங்களால் அவனைக் கிறிஸ்துவிடம் வழிநடத்த முடியாது. அவன் இயேசுகிறிஸ்துவைத் தன் இரட்சகராக ஏற்றுக்கொள்வதற்கு முன்பாகத் தனது சொந்த பாவ நிலையைக் கண்டுகொள்ள வேண்டும் என்று அவனுக்கு கூறுங்கள். அப்படி அவன் உணரும்போது, தன்னை இரட்சிக்கும்படி ஆண்டவராகிய இயேசுவிடம் வேண்டிக்கொள்ள முடியும். அவன் திரும்புமுன்பாக, அவனுக்கு உதவி தேவைப்படும் எந்த நேரத்திலும் உங்களைச் சந்தித்துப் பேச முடியும் என்பதை அவனுக்குத் தெரிவியுங்கள். அவன் திரும்புவதற்கு முன்பாக அவனோடு ஜெபியுங்கள்.

ஆனால், அவன் புரிந்துகொண்டிருப்பதுபோலத் தோன்றினால், பாவத்தைக் குறித்த உணர்வை ஓரளவாவது பெற்றிருப்பானானால் மூன்றாவது கேள்விக்குச் செல்லுங்கள்.

கேள்வி 3 - உன்னுடைய பாவத்தை மன்னிக்கும்படியும், உன் இருதயத்திலும் வாழ்க்கையிலும் வரும்படியும் நீ ஏற்கெனவே ஆண்டவராகிய இயேசுவிடம் வேண்டிக் கொண்டிருக்கிறாயா? அல்லது

"இதைப் போன்ற எதையாவது செய்திருக்கிறாயா?"

பிள்ளை "ஆமாம்" என்று கூறுவானானால், அவன் ஏற்கெனவே இரட்சிக்கப்பட்டிருப்பதை இது காட்டலாம்; அப்படியானால் அவன் மூன்றாவது குழுவைச் சேர்ந்தவனாகிறான். ஆனால் அதைப் பற்றிக் கூறும்படி நீங்கள் அவனிடம் கேட்க வேண்டும். அவனுடைய பதிலுக்குக் கவனமாகச் செவிகொடுங்கள், தேவைப்பட்டால் தொடர்ந்து கேள்வி கேளுங்கள். அவன் ஏற்கெனவே இரட்சிக்கப்பட்டிருக்கிறான் என்று உங்களால் கண்டறிய முடியுமானால், அவன் மூன்றாவது குழுவைச் சேர்ந்தவனாக இருக்கிறான். அவனைத் தனது நிச்சயத்தை இழந்துபோன மறுபடியும் பிறந்த பிள்ளையாக அல்லது பிரச்சினையோடு இருக்கும் ஒருவனாகக் கருதி அவனோடு இடைபட வேண்டும்; அவனுடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் அவனுக்கு உதவி தேவைப்படுகிறது.

இப்போது, அவனுடைய நிச்சயக் குறைவுக்கான (அல்லது பிரச்சினைக்கான) காரணத்தைக் கண்டறிய நீங்கள் முயல வேண்டும். தேவனுடைய வார்த்தையிலிருந்து அதற்கான தீர்வை அவனுக்கு எடுத்துக் கூற வேண்டும்.

அவன் உங்கள் கேள்விக்கு "இல்லை" என்று பதிலளித்தாலோ அல்லது அவன் இரட்சிக்கப்பட்டிருக்கிறானா அல்லது இல்லையா என்பதைக் குறித்து உங்களுக்குச் சந்தேகம் வந்தாலோ, அவனை இரட்சிக்கப்படாத, ஆனால் இரட்சிப்பைப் புரிந்துகொள்ளும் பிள்ளையாகக் கருத வேண்டும். அதாவது, அவன் நான்காவது குழுவில் இருக்கிறான்.

பிள்ளை உண்மையுள்ளவனாகக் காணப்பட்டால் (பார்க்க, கேள்வி 1), தனது இரட்சிப்பின் தேவையைப் புரிந்துகொண்டவனாகக் காணப்பட்டால் (பார்க்க, கேள்வி 2), முன்பே அவன் இரட்சிக்கப்பட்டிராவிட்டால் (பார்க்க கேள்வி 3) அவனை நீங்கள் இரட்சிக்கப்படாத பிள்ளையாகக் கருதி, அடுத்துவரும் எட்டுப் படிகளின்படி அவனுக்கு ஆலோசனை கூற வேண்டும்.

படி 3 - பிள்ளை சுவிசேஷத்தைப் புரிந்துகொண்டிருக்கிறானா என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளுங்கள்

உங்களுடைய வார்த்தையில்லாத புத்தகத்தைப் பயன்படுத்துவதற்கு இது சிறப்பான வாய்ப்பாகும். ஆனால் நீங்களே பேசிக் கொண்டிருக்கக் கூடாது. பிரசங்கிப்பது அல்ல, பிள்ளை எவ்வளவாகச் சுவிசேஷத்தைப் புரிந்துகொண்டிருக்கிறான்

என்பதைக் கண்டறிவதே உங்கள் நோக்கமாகும். எனவே, தேவன், பாவம், இயே சுகிறிஸ்து, இரட்சிப்பின் வழி இவைகளைக் குறித்து அவன் எவ்வளவு புரிந்து கொண்டிருக்கிறான் என்பதைக் கண்டறியும்படி கேள்விகளைக் கேட்க வேண் டும். கேள்விகளைக் கேட்கும்போது அவைகளின் பதிலைப் பிள்ளை நன்றாகப் புரிந்துகொள்ள அவனுக்கு உதவிசெய்ய வேண்டும்.

- **தேவன் (வார்த்தையில்லாத புத்தகத்தின் தங்க வண்ணப் பக்கத்தைக் காட்டுங்கள்)**

  யாரைக்குறித்து இந்தப் பக்கம் உனக்கு நினைவுபடுத்துகிறது? தங்க வண் ணம் உனக்கு யாரை நினைவுப்படுத்துகிறது? ஆமாம், இது நமக்குத் தேவனை நினைவுப்படுத்துகிறது.

  தேவன் எப்படிப்பட்டவர்?

  - ✓ *அவர் செல்வந்தர், சிருஷ்டிகர், அனைத்துக்கும் சொந்தமானவர்*
  - ✓ *அவர் ராஜாதிராஜா*
  - ✓ *அவர் பரிசுத்தமானவர்*
  - ✓ *அவர் பரலோகத்தில் ஜீவிக்கிறார், உன்னை நேசிக்கிறார்*

- **பாவம் (வார்த்தையில்லாத புத்தகத்தின் இருண்ட பக்கத்தைக் காட்டுங் கள்)**

  - ✓ *பாவம் என்றால் என்ன? எனக்குச் சில எடுத்துக்காட்டுகளைக் கூறு பார்ப் போம்.*
  - ✓ *தேவன் பாவத்தைக் குறித்து என்ன நினைக்கிறார்?*
  - ✓ *நீ பாவம் செய்திருக்கிறாயா?*
  - ✓ *உன்னுடைய பாவத்தை விட்டுத் திரும்பி, மாறுபட்டவனாக இருக்க விரும்புகிறாயா?*

- **இரட்சிப்பின் வழி (வார்த்தையில்லாத புத்தகத்தின் வெள்ளைப் பக்கத்தைக் காட்டுங்கள்)**

  - ✓ *நீ இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும்?*
  - ✓ *நீ அதைச் செய்தால் தேவன் என்ன செய்வார்?*

பிள்ளை இரட்சிப்பின் செய்தியைப் போதுமான அளவு புரிந்துகொண்டிருப்ப தாகத் தோன்றினால் அடுத்த படிக்குச் செல்லுங்கள். என்றாலும் அதிகமான தகுதி நிலையை எதிர்பாராதிருங்கள். அதிகமான புரிந்துகொள்ளும் திறனையும், புரிந்து கொண்டதை வெளிப்படுத்தும் திறனையும் கொண்டிராத சிறு பிள்ளையோடு பேசிக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை மறந்துவிடாதீர்கள். மையமான சத்தியங் களின் அடிப்படை அறிவை அவன் பெற்றிருக்கிறானா என்றுதான் நீங்கள் அவனைச் சோதிக்கிறீர்கள்.

என்றாலும், நீங்கள் கேள்விகேட்கும்போது, பிள்ளை சத்தியங்களைச் சரியாகப் புரிந்துகொண்டிருக்கவில்லை என்று காணலாம் அல்லது அவன் உண்மையான ஆர்வம் கொண்டிருக்கவில்லை என்று கண்டுபிடிக்கலாம் அல்லது அவன் அதிக மாக அமைதியிழந்து போவதைக் காணலாம். அப்படியானால், சுவிசேஷச் செய் தியைச் சுருக்கமாக அவனுக்கு எடுத்துக் கூற வேண்டும். அவனாகவே முன் வந்து கிறிஸ்துவை விசுவாசிக்கும்படி ஊக்குவிக்க வேண்டும்.

படி 4 - இரட்சிப்பின் வழியைக் காட்ட வேதவசனத்தைப் பயன்படுத்துங்கள்

இதுவே மிக முக்கியமான படியாகும். இதற்கு அதிகமான நேரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்.

இங்கே பல கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும்:

- பிள்ளை எப்படி இரட்சிக்கப்பட வேண்டும் என்பதைக் காட்ட **வேதாகமத் தைப் பயன்படுத்துங்கள்.**
- **ஒரேயொரு வசனத்தைத் தெரிந்துகொள்ளுங்கள்.** அதில் கவனம் செலுத்தி, அதை முழுமையாக விளக்குங்கள்.
- **உங்கள் வேதபாடத்திலும் சுவிசேஷத்தை அறிவிப்பதிலும் நீங்கள் ஏற் கெனவே போதித்திருப்பதற்குப் பொருத்தமான வசனத்தைக் கூடுமானால் பயன்படுத்துங்கள்.** எடுத்துக்காட்டாக, நீங்கள் அழைக்கப்பட்டபோது இயேசு விடம் வந்த சகேயுவின் உண்மைக்கதையைப் போதித்திருப்பீர்களானால் (லூக்கா 19:1-10), யோவான் 6:37 வசனத்தைப் பயன்படுத்துங்கள்: *"என்னி டத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை."*
- கிடைத்திருக்கும் குறுகிய நேரத்தில் **பிள்ளை புரிந்துகொள்ளக் கூடிய வச னத்தைப் பயன்படுத்துங்கள்.** மேலும் விளக்குவதற்கு அதிகமான நேரம் தேவைப்படாத வார்த்தைகளையும் கருத்துப் படிவங்களையும் (Concepts) கொண்ட வசனத்தைப் பயன்படுத்துங்கள். எடுத்துக்காட்டாக, "கிறிஸ்துவை விசுவாசித்தல்" என்ற கருத்துப் படிவத்தைக் கொண்ட யோவான் 3:16 வச னத்தை எடுத்துக்கொள்வதற்குப் பதிலாக, "கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுதல்" என்ற கருத்துப் படிவத்தைக் கொண்ட யோவான் 1:12 வசனத்தையோ அல்லது "இயேசு கிறிஸ்துவின் நாமத்தைத் தொழுதுகொள்ளுதல்" என்ற கருத் துப் படிவத்தைக் கொண்ட ரோமர் 10:13 வசனத்தையோ பயன்படுத்துங்கள். அதிகமான வேதாகமப் பின்னணியில்லாத பிள்ளைக்கும்கூட இவைகளை விளக்குவது எளிதாக இருக்கும்.
- ***சிறுபிள்ளைகளுக்கு மிகவும் எளிமையாக நீங்கள் போதிக்க வேண்டும்.*** எடுத்துக்காட்டாக, வெளிப்படுத்தல் 3:20 வசனத்தைச் சிறு பிள்ளையும் புரிந்து கொள்ள முடியும்.

➤ **பிள்ளைகளுக்கு இரண்டு காரியங்களைக் காட்டும் வசனத்தைப் பயன் படுத்துங்கள்:**

✓ அவன் என்ன செய்யவேண்டுமென்று தேவன் விரும்புகிறார்

✓ அவன் அதைச் செய்தால் தேவன் என்ன செய்வார்.

பல வசனங்கள் இரட்சிப்பின் வழி குறித்த இந்த இரண்டு அம்சங்களை யும் காட்டுகின்றன. யோவான் 1:12; 3:16; 6:37; அப்போஸ்தலர் 3:19; 16:31; ரோமர் 10:13; வெளிப்படுத்தல் 3:20.

➤ பிள்ளையே வசனத்தை வாசிக்கும்படி செய்யுங்கள், பிள்ளையால் வாசிக்க முடியாவிட்டால் நீங்கள் வாசித்துக் காட்டுங்கள்.

➤ பிள்ளைக்கு அந்த வசனத்தைக் கவனமாகவும் எளிமையாகவும் விளக்கிக் கூறுங்கள்.

எடுத்துக்காட்டாக, நீங்கள் ரோமர் 10:13 வசனத்தைத் தெரிந்துகொள்வீர்க ளானால் இவ்வாறு கூறலாம்:

"நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதை இந்த வசனம் கூறுகிறது. நீங்கள் ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தைத் தொழுது கொள்ள வேண்டுமென்று அவர் விரும்புகிறார். நீங்கள் அவரை அழைக்க வேண்டுமென்று விரும்புகிறார். அவர் என்ன செய்ய வேண்டுமென்று நீங்கள் வேண்டிக்கொள்ள வேண்டும்? உங்கள் பாவங்களிலிருந்து உங்களை இரட்சிக் கும்படி நீங்கள் வேண்டிக்கொள்ள வேண்டும். ஏனென்றால் அவரால் மட்டுமே அவைகளிலிருந்து உங்களை இரட்சிக்க முடியும்.

ஒரு பையன் ஆழமான ஒரு கிணற்றில் விழுந்துவிட்டான். அவன் வெளியேற வழியேயில்லை! அவன் முயற்சிசெய்து பார்க்கிறான். சுவர்கள் செங்குத்தாக இருக் கின்றன. வழுக்கி விழுந்துவிடுகிறான். அவனால் வெளியேற முடியவில்லை. அப் போது கிணற்றுக்கு வெளியே நம்பிக்கைக்குரியவரும் அவன் அறிந்தவருமான ஒருவர் நிற்பதைக் காண்கிறான். அவர் வலுவானவர். "என்னைக் காப்பாற்றுங் கள்" என்று அவன் அவரிடம் கெஞ்சுகிறான். அன்பான அவர் ஒரு கயிற்றைக் கட்டி அதைப் பிடித்துக்கொண்டு கிணற்றுக்குள் இறங்குகிறார், அவனைத் தன் தோள்மீது சுமந்து, அவனைக் காப்பாற்றுகிறார்.

நீயும் உன் பாவத்திலிருந்து காப்பாற்றப்படுவது அவசியம் அல்லவா? இயேசு கிறிஸ்துவிடம் உன்னை இரட்சிக்கும்படி வேண்டிக்கொள். அவர் அதைச் செய் வார். இந்த வசனம் அனைவருக்கும் இதையேதான் வாக்குத்தத்தமாகக் கூறுகிறது. உன்னை இரட்சிக்கும்படி நீ அவரிடம் வேண்டிக்கொண்டால் என்ன நடக்கும் என்று இந்த வசனம் கூறுகிறது? நீ இரட்சிக்கப்படுவாய்!"

பிள்ளை புரிந்துகொண்டுவிட்டான் என்பதை நீங்கள் உணரும்போது, தேவன் மெய்யாகவே அவனுடைய இருதயத்தில் கிரியைசெய்கிறார் என்பதுபோலத் தோன்றும்போது அடுத்த படிக்குச் செல்லுங்கள்.

படி 5 – அவன் கிறிஸ்துவை விசுவாசிக்க விரும்புகிறானா – அல்லது வீட்டுக்குப் போய் அதைப் பற்றி இன்னுமதிகமாகச் சிந்திக்க விரும்புகிறானா என்று கேளுங்கள்

இப்போது அந்தப் பிள்ளை கிறிஸ்துவை விசுவாசிக்க மெய்யாகவே விரும்புகிறானா என்று கேட்கும் நிலையில் நீங்கள் இருக்கிறீர்கள்.

வெறுமனே "ஆம்" என்று பதில் கூறக்கூடிய நிலையில் இல்லாமல், பிள்ளை அதற்கு மாற்றாக எதையேனும் கூறக் கூடிய வகையில் உங்கள் கேள்வி இருக்க வேண்டும். "அல்லது நீ இப்படியிருக்க விரும்புகிறாயா?" என்ற சொற்களைச் சேர்த்து நீங்கள் கேட்பீர்களானால், பிள்ளை கூச்சமில்லாமல் நேர்மையான பதிலைக் கூறுவது அவனுக்கு எளிதாக இருக்கும். அக்கறையோடு ஆலோசனை கூறும் ஒருவரிடம் "இல்லை" என்று பதிலளிப்பது பிள்ளைக்குக் கடினமான காரியமாகும். எனவே நீங்கள் கேட்கிறீர்கள் என்பதற்காக அவன் "ஆம்" என்று பதிலளித்து விட நேரிடும்.

இந்தத் தீர்மானம் அவனுக்கு எவ்வளவு முக்கியமானது என்பதை நீங்கள் வலியுறுத்திக் கூற வேண்டும். இந்தத் தீர்மானத்தின் முக்கியத்துவத்தை நீங்கள் அவனுக்கு எடுத்துக் கூறும்போது, மூன்று காரியங்களை அவனுக்குச் சுருக்கமாகக் கூற வேண்டும்.

1. **அவனுடைய வாழ்க்கையைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க ஆண்டவராகிய இயேசு விரும்புவார்**

   அவனை இரட்சித்து, அவனுடைய பாவத்தை மன்னிப்பதற்காக மட்டும் ஆண்டவராகிய இயேசு அவனுடைய வாழ்க்கைக்குள் வர மாட்டார். அவனை மாற்றவும், அவனுடைய வாழ்க்கையில் ஆண்டவராகவும் எஜமானராகவும் இருக்கவும் அவர் வருவார். "முதலாளியாக" இருக்க விரும்புவார்.

2. **ஆண்டவராகிய இயேசு அவனுடைய வாழ்க்கையில் மாற்றத்தைக் காண்பதை எதிர்பார்ப்பார்.**

   கிறிஸ்தவனாக மாறுவது என்றால், தவறான காரியங்களிலிருந்து திரும்பி, தேவனுக்குப் பிரியமானதைச் செய்ய நாடுவதாகும். தன்னுடைய வாழ்க்கை மாற்றப்படும் என்பதை அவன் அறிந்துகொள்ள வேண்டும்.

3. **ஒரு கிறிஸ்தவனாக இருப்பது எப்போதும் எளிதாக இருக்கும் என்று கூற முடியாது**

   அவன் செய்திருப்பதை அறிந்தால் மற்றச் சிறுவர் சிறுமியர் அவனைக் கேலி செய்யலாம் என்பதை அவன் அறிய வேண்டும். இதை அவன் அறியும்படி செய்வது ஒரு எச்சரிப்பாகவும் ஆயத்தமாகவும் இருக்கிறது.

எனவே, கிறிஸ்துவை விசுவாசிப்பதில் எதெல்லாம் உள்ளடங்கியிருக்கிறது என்பதைப் பிள்ளை கண்டுகொண்ட பிறகு, இப்போது உண்மையில் அவன் என்ன செய்ய விரும்புகிறான் என்பதை அவனிடம் கேட்க வேண்டும்.

"இப்போதே இயேசுகிறிஸ்துவை உன் இரட்சகராக ஏற்றுக்கொள்ள நீ விரும்புகிறாயா? உன் முழு இருதயத்தோடு நீ இதில் விருப்பமாக இருக்கிறாயா? அல்லது அதைப் பற்றிச் சிந்திக்க உனக்கு இன்னும் அவகாசம் வேண்டுமா? நாம் சிறிது நேரம் அமைதியாக இருப்போம். நீ ஒரு தீர்மானத்துக்கு வந்தபிறகு, என்ன செய்ய விரும்புகிறாய் என்பதை என்னிடம் சொல்லு."

அவன் பதிலளிப்பதற்குச் சிறிது நேர அவகாசம் கொடுங்கள். இப்போது தான் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை என்றும், வீட்டுக்குச் சென்று யோசிக்க வேண்டுமென்றும் அவன் கூறுவானானால், அவனை விட்டுவிடுங்கள். அவன் தனது மனதை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று நெருக்காதீர்கள். என்றாலும், அவன் விரும்பினால், வீட்டிலோ அல்லது வேறு எந்த இடத்திலோ கிறிஸ்துவை விசுவாசிக்க முடியும் என்று அவனிடம் கூறுங்கள். அவன் எப்படி அவ்வாறு செய்வது என்பதை மறுபடியுமாக அவனுக்கு விளக்குங்கள். மேலும், அவன் விரும்பினால் அவன் மறுபடியும் வந்து உங்களைச் சந்திக்க முடியும் என்பதையும் அவனுக்குத் தெரிவியுங்கள்.

பிள்ளை இந்தக் கேள்விக்கு "ஆமாம்" என்று பதிலளிப்பானானால், கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்படி அவன் பரிசுத்த ஆவியானவரால் ஆயத்தப்படுத்தப் பட்டிருப்பதாகத் தோன்றினால், அவன் இப்போது அடுத்த படிக்கு ஆயத்தமாக இருக்கிறான்.

படி 6 - அவன் தன்னை இரட்சிக்கும்படி ஆண்டவராகிய இயேசுவை வேண்டிக்கொள்ளுமாறு கூறுங்கள்

இப்போது நீங்கள் விளக்கிக் கூறிய வேதவசனத்தின் அடிப்படையில், அந்த வசனத்திலுள்ள கருத்துப்படிவத்தைப் பயன்படுத்தி, பிள்ளை இயேசுவானவரிடம் ஜெபித்து தன்னை இரட்சிக்குமாறு வேண்டிக்கொள்ள அவனை ஊக்குவியுங்கள்.

- பிள்ளை தானாகவே வாய்விட்டு ஜெபிக்கும்படி ஊக்குவிப்பதே சிறந்த வழியாகும்.

  ஜெபத்தில் அவன் வேத வசனத்துக்குப் பொருத்தமான வகையில் எவைகளைச் சேர்க்கலாம் என்று நீங்கள் முன்னதாகவே அவனுக்கு ஆலோசனை கூற வேண்டும்.

  "நீ மெய்யாகவே இரட்சிக்கப்பட விரும்பினால், ஆண்டவராகிய இயேசுவைத் தொழுதுகொண்டு, உன்னை இரட்சிக்கும்படி அவரிடம் வேண்டிக்கொள். இந்த வசனம் (ரோமர் 10:13) அவர் உன்னை இரட்சிப்பார் என்று வாக்குத்தத்தமாகக் கூறுகிறது."

  அல்லது, *"ஆண்டவராகிய இயேசு உன் வாழ்க்கையில் வர வேண்டும் என்று நீ உண்மையாகவே விரும்பினால், உனது பாவத்துக்காக வருத்தப்படுவதாக அவரிடம் கூறு. உனது வாழ்க்கைக்குள் வரும்படி அவரிடம் வேண்டிக்கொள்.*

வேதாகமத்திலுள்ள இந்த வசனம் (வெளிப்படுத்தல் 3:20) அவர் அப்படிச் செய்வார் என்று வாக்குத்தத்தமாகக் கூறுகிறது."

பிள்ளையின் ஜெபம் மிகவும் குறுகியதாகவும் எளிமையானதாகவும் இருக்கலாம்.

பிள்ளை மிகவும் சிறியவனாக இருந்தால், அல்லது கூச்சப்பட்டால், அவனை நீங்களே ஜெபத்தில் வழிநடத்த வேண்டும். அவன் என்ன சொல்ல வேண்டும் என்பதில் நீங்கள் உதவுவதாக அவனிடம் கூறுங்கள். அவன் மெய்யாகவே விரும்பினால், நீங்கள் கூறுவதைத் திரும்பக் கூற வேண்டுமென்று சொல்லுங்கள்.

"அன்பான ஆண்டவர் இயேசுவே... நான் ஒரு பாவி... நான் மாற விரும்புகிறேன்... எனது பாவங்கள் மன்னிக்கப்பட விரும்புகிறேன்... எனவே உம்மை அழைக்கிறேன்... என்னை இரட்சிக்கும்படி... உம்மை வேண்டிக்கொள்கிறேன்... நீர் அதைச் செய்வீர் என்று நான் அறிவேன்.... அப்படிச் செய்வதாக நீர் ... வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறீர்... ஆமென்."

படி 7- இரட்சிப்பின் நிச்சயத்தைக் குறித்துக் கூறுங்கள்

தான் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை எப்படி அறிய முடியும் என்பதைப் பிள்ளை தெரிந்துகொள்ள வேண்டும்.

எனவே, இந்த வேளையில், அவன் தான் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை எப்படி அறிந்துகொள்ள முடியும் என்பதை அவனுக்குப் போதிக்க வேண்டும். உங்களால் பிள்ளைக்கு இரட்சிப்பின் நிச்சயத்தைக் கொடுக்க முடியாது. எனவே அவன் இரட்சிக்கப்பட்டான் என்ற நிச்சயம் உங்களுக்கு இருக்கிறது என்று கூறாதீர்கள். நீங்கள் கூறுவதையே அவனுடைய இரட்சிப்பின் நிச்சயம் சார்ந்திருக்கிறது என்று அவன் தவறாக நினைத்துவிடக் கூடாது. அவனுக்குரிய நிச்சயம் தேவனிடமிருந்து வருகிறது. அது உங்கள் வார்த்தையை அல்ல, அவருடைய வார்த்தையையே சார்ந்திருக்கிறது.

➤ ***தேவனுடைய வார்த்தை என்ன கூறுகிறது என்பதை அவனுக்குக் காட்டுங்கள்***

நீங்கள் கூறுவதாலோ, அல்லது அவன் அப்படி உணர்வதாலோ தான் இரட்சிக்கப்பட்டிருப்பதை அறிய முடியாது என்று அவனுக்குக் கூறுங்கள். "தேவன் தமது வார்த்தையில் என்ன கூறுகிறார்?" என்பதே முக்கியமான கேள்வியாகும்.

நான்காவது படியில் நீங்கள் பயன்படுத்திய வசனத்தை மறுபடியுமாக ஒன்றாகச் சேர்ந்து வாசியுங்கள். பிறகு அவனிடம் சில கேள்விகளைக் கேளுங்கள்.

✓ *நீ என்ன செய்யவேண்டுமென்று தேவன் இந்த வசனத்தில் கூறுகிறார்?*

✓ *அதை நீ செய்தாயா?*

- ✓ *தாம் என்ன செய்வதாகத் தேவன் இந்த வசனத்தில் கூறுகிறார்?*
- ✓ *அவர் அதைச் செய்திருக்கிறாரா?*
- ✓ *அவர் அதைச் செய்திருக்கிறார் என்று உனக்கு எப்படித் தெரியும்?*
- ✓ *அவர் அப்படிச் செய்வதாக வாக்குத்தத்தம்பண்ணியிருக்கிறார்.*

➤ ***மாற்றப்படும் வாழ்க்கையைக் குறித்து அவனுடன் பேசுங்கள்***

அவன் ஆண்டவராகிய இயேசுவை விசுவாசித்திருந்தால், அவனுடைய வாழ்க்கையில் மாற்றம் காணப்படும் என்று அவனிடம் கூறுங்கள். அவன் இரட்சிக்கப்பட்டிருப்பதை அறிந்துகொள்ள இதுவும் உதவும். அந்த மாற்றம் சிறியதாக இருந்தாலும், அது காணப்படும் என்று அவனிடம் கூறுங்கள். 2 கொரிந்தியர் 5:17 வசனத்தை நீங்கள் எடுத்துக் கூறலாம்: *"ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்."*

படி 8 - நன்றிகூறும் ஜெபத்தை ஏறெடுக்க ஆலோசனை கூறுங்கள்

பிள்ளை இப்போது ஆண்டவராகிய இயேசுவை ஏற்றுக்கொண்டு, இரட்சிப்பின் அற்புதமான ஈவைப் பெற்றிருக்கிறபடியால், அவன் தேவன் செய்துள்ள அனைத்துக்காகவும் அவருக்கு நன்றிகூறும்படி நீங்கள் அவனுக்கு ஆலோசனை கூற வேண்டும்.

இப்போதே அவன் ஜெபித்து ஆண்டவராகிய இயேசுவுக்கு நன்றி கூற வாய்ப்புக் கொடுங்கள்.

படி 9 - தொடர்போதனையைத் துவங்குங்கள்

நேரம் குறுகியதாக இருக்குமானால், குறிப்பாக அந்தப் பிள்ளையை மறுபடியும் பார்க்கும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்குமானால், அல்லது வரும் நாட்களில் அவனை நீங்கள் ஒழுங்காகச் சந்திக்க முடியுமானால், ஏற்கெனவே கூறப்பட்ட எட்டுப்படிகளைப் பின்பற்றுவதில் மட்டும் முழுக்கவனத்தையும் செலுத்துங்கள். தேவைப்பட்டால் எட்டாவது படியோடு நீங்கள் ஆலோசனை கூறுவதை முடித்துக்கொள்ளலாம்.

ஆனால் உங்களுக்குப் போதிய நேரம் இருக்குமானால், அல்லது அந்தப் பிள்ளையை ஒருவேளை மறுபடியும் சந்திக்க முடியாது என்றிருக்குமானால், அடுத்த இரண்டு படிகளையும் சுருக்கமாகப் பின்பற்ற வேண்டும். அல்லது, நேரம் குறுகியதாக இருக்குமானால், அந்த வாரத்தில் பின்பொருமுறை அந்தப் பிள்ளையைச் சந்திக்க ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். அப்போது அடுத்த இரண்டு படிகளில் கூறப்பட்டுள்ளபடி கிறிஸ்தவ வாழ்க்கைக்கான ஆலோசனைகளைக் கொடுக்கலாம்.

இப்போது, இந்த வேளையில் நீங்கள் மறுபடியுமாக உங்கள் வார்த்தையில்லாத புத்தகத்தை எடுத்து, பச்சை வண்ணப் பக்கத்தைக் காட்ட வேண்டும். பச்சை

வளர்ச்சிக்கு அடையாளமாக இருக்கிறது என்று விளக்குங்கள். புல், செடிகள், மரங்கள் எல்லாம் பச்சையாக இருக்கின்றன; அவை வளர்ந்துகொண்டிருக்கின்றன. இப்போது பிள்ளை இயேசுகிறிஸ்துவைத் தன் ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டிருக்கிறபடியால், அவன் வளர்ச்சிபெற வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் - அடுத்த ஐந்து படிகளையும் பின்பற்றினால் பிள்ளை வளர்ச்சியைப் பெற முடியும் என்று அவனுக்கு எடுத்துக் கூறுங்கள்.

உங்கள் இடது கையின் விரல்களை ஒவ்வொன்றாக விரித்து, அவன் தனது இடது கையில் அதே விரலைத் தொட்டுக்கொண்டிருக்குமாறு செய்வதின் மூலம் இந்தப் படிகளை அவன் நினைவில் வைத்திருக்குமாறு நீங்கள் அவனை ஊக்குவிக்க முடியும்.

ஒவ்வொரு நாளும் வேதாகமத்தை வாசித்து அதற்குக் கீழ்ப்படி.

உங்கள் வலுவான விரலான கட்டைவிரலைச் சுட்டிக்காட்டுங்கள். "நீ வேதாகமத்தை வாசித்து, அதற்குக் கீழ்ப்படிந்தால் வலுவாக இருப்பாய்."

மாற்கு சுவிசேஷத்தில் ஒவ்வொரு நாளும் சில வசனங்களை வாசிப்பதின் மூலம் துவங்கும்படி நீங்கள் ஊக்குவிக்க வேண்டும். வேதாகமத்தை வாசிப்பது மட்டும் போதாது. வேதாகமம் கூறுவதற்கு அவன் கீழ்ப்படிய வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் என்பதை அவனுக்கு எடுத்து கூறுங்கள், அப்படிச் செய்ய அவரே அவனுக்குப் பலத்தைக் கொடுப்பார்.

உன் பரம பிதாவாகிய தேவனோடு பேசு

மேல் நோக்கிச் சுட்டிக்காட்டும் உங்கள் ஆள்காட்டி விரலைக் காட்டி, தேவனோடு பேச வேண்டும் என்பதைப் பிள்ளைக்கு நினைவுபடுத்துங்கள்.

எந்த இடத்திலும், எந்த நேரத்திலும், எதைக் குறித்தும் தேவனோடு பேச அல்லது ஜெபிக்க முடியும் என்று அவனிடம் கூறுங்கள். ஆனால் தேவனோடு பேசுவதற்காக அவன் ஒவ்வொரு நாளும் ஒழுங்கான அமைதியான வேளையைக் கொண்டிருக்க வேண்டும்.

நீ செய்திருப்பதை மற்றவர்களிடம் சொல்லு.

நேராகவும் உயரமாகவும் நிற்கும் உங்கள் நடுவிரலைச் சுட்டிக்காட்டி, நாம் ஆண்டவராகிய இயேசுவுக்காக உறுதியாக நிற்பதில் வெட்கப்படக் கூடாது என்று அவனிடம் கூறுங்கள்.

சிலர் அவனைக் கேலிசெய்தாலும்கூட, சாட்சி கூறும்படி அவனை ஊக்குவியுங்கள். தான் கூறுவதின் மூலமாகவும் வாழும் முறையின் மூலமாகவும் சாட்சி கூறுவதின் முக்கியத்துவத்தை அவனுக்கு வலியுறுத்துங்கள்.

நீ பாவம்செய்யும்போது மன்னிக்கும்படி தேவனிடம் வேண்டிக்கொள்.

மற்ற விரல்கள் வளைக்கப்பட்டிருக்கும்போது தான் நேராக நிற்காமலிருக்கும் உங்கள் நான்காவது விரலைக் காட்டுங்கள். மற்ற விரல்கள் உறுதியாக மடக்கப்பட்டிருக்கும்போது இந்த விரலை மட்டும் நிமிர்த்த முடிகிறதா என்று செய்து பார்க்கச் சொல்லுங்கள்.

''*சில வேளைகளில் நாமும் இப்படித்தான் இருக்கிறோம். நாம் பாவம் செய்து விடுகிறோம். நீ ஏதாவது தவறுசெய்துவிட்டால், மறுபடியுமாக இரட்சிக்கப்பட வேண்டும் என்ற அவசியம் இல்லை. நீ மோசமான காரியங்களைச் செய்வதைத் தேவன் விரும்புவதில்லை. ஆனாலும் கிறிஸ்தவ வாழ்க்கையில் சில வேளை களில் நாம் தவறான காரியங்களைச் செய்துவிடுகிறோம். நீ பாவம் செய்யும்போது உடனடியாக நீ செய்த தவறைத் தேவனிடம் அறிக்கையிட வேண்டும். நீ வருத் தப்படுவதாகக் கூறி, மறுபடியும் அதே தவறைச் செய்யாதிருக்க பலத்தை அருளுமாறு வேண்டிக்கொள்.''*

1 யோவான் 1:19 வசனத்தைப் பிள்ளைக்குச் சுருக்கமாக விளக்குங்கள்.

மற்ற கிறிஸ்தவர்களோடு ஒன்றாகக் கூடிவர வேண்டும்.

உங்கள் சுண்டு விரலைச் சுட்டிக்காட்டி, பிறகு எல்லா விரல்களையும் ஒன்றாகச் சேர்த்து ஐக்கியத்தைக் காட்டுங்கள். சுண்டுவிரல் தானாகப் பலவீனமானதாக இருந் தாலும், மற்ற விரல்களோடு சேரும்போது அதால் அதிகமாகச் செய்ய முடியும். தேவனைப் பற்றி இன்னுமதிகமாகக் கற்றுக்கொள்ளவும், ஆண்டவரை நேசிக் கும் மற்றவர்களோடு ஒன்றாக இருக்கவும் ஆலயத்துக்கும், ஓய்வுநாள் பள்ளிக் கும், நற்செய்தி கிளப்புக்கும் செல்வது எவ்வளவு நல்லது என்பதை அவனுக்கு எடுத்துக் கூறுங்கள். அது அவனுடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் உதவியாக இருக் கும் என்று விளக்குங்கள்.

படி 10 - ஒரு வேதாகம வாக்குத்தத்தத்தை அவனுக்கு எடுத்துக் கூறுங்கள்

இப்போது நீங்கள் உங்கள் ஐந்து விரல்களையும் பயன்படுத்தி இறுதியான பாடத் தைப் போதிக்க வேண்டும். தேவனிடமிருந்து அவனுக்குக் கொடுக்கப்படும் ஒரு வாக்குத்தத்தத்தைக் கூறும் வசனத்தை வாசிக்க வேண்டும்.

உங்கள் வேதாகமத்தைத் திறந்து ஆண்டவர் கூறுவதை அவனுக்குக் காட்டுங்கள்: ''நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை'' (எபி ரெயர் 13:5). பிறகு உங்கள் வலதுகை விரலை ஒவ்வொன்றாகத் தொட்டுக்காட்டி இந்த வசனத்தை வாசியுங்கள், அவனும் அவ்வாறே செய்யும்படி ஊக்குவியுங் கள். பிறகு மறுபடியுமாக இந்த வசனத்தை வாசியுங்கள்; இப்போது வேறொரு வார்த்தைக்கும் விரலுக்கும் அழுத்தம் கொடுங்கள்.

என்ன நேரிட்டாலும் தாம் அவனோடு இருப்பதாகக் கூறும் தேவனுடைய வாக் குத்தத்தத்தைப் பிள்ளை எப்போதுமே நினைவில் வைத்திருக்க வேண்டும்.

அத்தியாயம் 29

அவர்களுடைய பிரச்சினைகளில் அவர்களுக்கு உதவுங்கள் இரட்சிக்கப்பட்ட சிறுவர்களுக்கு ஆலோசனை கூறுவது எப்படி ?

அத்தியாயத்தின் சுருக்கம்

(ஒரு இரட்சிக்கப்பட்ட பிள்ளைக்குத் தனிப்பட்ட உதவியளிக்கும்போது பின் பற்ற வேண்டிய படிகள்).

- **பிள்ளையை இயல்பாக இருக்கச் செய்யுங்கள்**
- **அவனுடைய பிரச்சினையைக் கண்டறியுங்கள்**
- **இரண்டு கேள்விகளைக் கேளுங்கள்**
- **அவனுடைய பிரச்சினையோடு இடைபடும் ஒரு வேதவசனத்தைக் காட்டுங்கள்**
- **அவன் என்ன செய்ய விரும்புகிறான் என்று கேளுங்கள்**
- **தொடர்ந்து அவனைக் கவனியுங்கள்**

இரட்சிக்கப்பட்ட பிள்ளைக்கு நமது பொறுப்பைக் குறித்து முந்தைய அத்தியா யங்களில் பார்த்திருக்கிறோம்.

- நாம் அவர்களுக்குத் தேவனுடைய வார்த்தையை (குறிப்பாக ஒவ்வொரு பாடத்தின் மையச் சத்தியத்தையும்) போதிக்க வேண்டும்.
- அவர்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் அவர்களுக்கு உதவும்படி நாம் மையச் சத்தியத்தைப் பொருத்திக் காண்பிக்க வேண்டும்.
- மையச் சத்தியத்தின் அடிப்படையில் செயல்படும்படி நாம் அவர்களுக்கு அறைகூவல் விடுக்க வேண்டும்.
- பிரச்சினைகள் அல்லது கேள்விகளைக் கொண்டிருக்கும் கிறிஸ்தவ பிள்ளை களுக்கு உதவிசெய்ய நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

நீங்கள் இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு உதவ முன்வருவதாகக் கூறிய பிறகு, தனிப்பட்ட முறையில் அவர்களுடைய பிரச்சினைகளுக்கும் கேள்விகளுக்கும் பதில்காண உதவுவதாகக் கூறிய பிறகு, ஒருசில பிள்ளைகள் ஆலோசனைக்காக உங்களிடம் வருவார்கள். ஒரு பிள்ளைக்கு ஆலோசனை கூறும்போது ஒரு ஆலோ சனைச் செயல்திட்டத்தைப் பின்பற்றுவது அதிக உதவியாக இருக்கும். ஆனால் உங்கள் திட்டத்தின் ஒரு அம்சத்திலும் நீங்கள் மாறக்கூடாது என்று இதற்கு அர்த்த மல்ல. சூழ்நிலைகள் மாறலாம், கேள்விகள் கேட்கப்படலாம், புதிய கருத்துக் கள் உங்கள் சிந்தையில் வரலாம், இதனால் நீங்கள் உங்கள் திட்டத்தை விட்டு விலகிச்செல்ல நேரிடலாம். என்றாலும், ஒரு பிள்ளைக்கு ஆலோசனை கூறும் போது, நீங்கள் என்ன செய்ய வேண்டும், எந்தப் படிகளைப் பின்பற்ற வேண்டும்

என்பதைக் குறித்து அடிப்படைக் கருத்தைக் கொண்டிருப்பது நலமாகும். இரட்சிக்கப்பட்ட பிள்ளைக்கு ஆலோசனை கூறும்போது ஆறு படிகளைப் பின் பற்ற வேண்டும்.

படி 1 - பிள்ளையை இயல்பாக இருக்கச் செய்யுங்கள்

பிள்ளை படபடப்போடும் கூச்சத்தோடும் இருக்கலாம். அவன் சொல்லுவதற்கு நீங்கள் என்ன பதில் கூறுவீர்களோ என்ற உணர்வோடும், பயத்தோடும்கூட அவன் இருக்கலாம். என்ன நடக்கப்போகிறதோ என்ற நிச்சயமில்லாமல் அவன் இருக்கலாம்.

- புன்சிரிப்போடு, அவன் உங்களிடம் பேச வந்ததற்காக நீங்கள் சந்தோஷப் படுவதாகக் கூறுங்கள்.
- எளிதாகப் பதில் சொல்லக் கூடிய சில அறிமுகக் கேள்விகளைக் கேட்டு, அவன் சௌகரியமான உணர்வைப் பெறும்படி செய்யுங்கள்:
  - ✓ பள்ளிக்கூடம் எப்படியிருக்கிறது?
  - ✓ நீ இன்னும் கிரிக்கெட் டீமில் இருக்கிறாயா?
  - ✓ நற்செய்தி கிளப் அல்லது ஓய்வுநாள் பள்ளி அல்லது விடுமுறை வேதாகமப் பள்ளி உனக்குப் பிடித்திருக்கிறதா?
- நீங்கள் ஆலோசனை கூறத் துவங்கும் வேளையிலிருந்தே அவனை ஏற்றுக் கொள்வதைக் காட்டுங்கள். உங்கள் வார்த்தைகள் மற்றும் முக பாவத்தின் மூலமாக அவனையும் அவனுடைய பிரச்சினையையும் புரிந்துகொள்ள நீங்கள் ஆர்வமாக இருப்பதைக் காட்டுங்கள்.
- நீங்கள் அவனைவிட மேலானவர் என்ற எண்ணத்தையோ அல்லது நியாயந் தீர்க்கிறவர் என்ற எண்ணத்தையோ அவன் பெறுவதற்கு இடம்கொடுக்காதீர்கள். உங்கள் மனோபாவம் மிகவும் முக்கியமானதாகும்.

படி 2 - அவனுடைய பிரச்சினையைக் கண்டுகொள்ளுங்கள்

அவன் ஏன் வந்திருக்கிறான், ஏன் உங்களோடு பேச விரும்புகிறான் என்று அவனிடம் கேட்பதே அவனுடைய பிரச்சினையைக் கண்டுகொள்வதற்கான எளிய வழியாகும்.

ஆனால் அவனுடைய பதிலுக்குக் கவனமாகச் செவிகொடுங்கள். அவசரப் படுத்தாதீர்கள். அவனோடு பேசுவதற்கு அதிக நேரமில்லை என்ற எண்ணத்தை உருவாக்காதீர்கள். இந்த வகையில் நடந்துகொள்ளும் எவரிடமும் ஒருவர் தனது பிரச்சினையைப் பகிர்ந்துகொள்ள விரும்புவதில்லை.

பொறுமையாக இருப்பது அத்தியாவசியமானதாகும். பிள்ளை கொடுக்கும் முதல் பதில் மெய்யான பிரச்சினையைக் கண்டுகொள்ளப் போதுமானதாக இராமலிருக்கலாம். தொடர்ந்து பேசி, செவிகொடுத்துக்கொண்டிருங்கள். இறுதியாக உண்மையான பிரச்சினை வெளிக்கொண்டுவரப்படும். இல்லாவிட்டால், பிள்ளை

கொடுக்க முதல் பதிலே பிரச்சினையை வெளிப்படுத்துவதாக நீங்கள் கண்டால், அடுத்த படிக்குச் செல்லுங்கள்.

படி 3 – இரண்டு கேள்விகளைக் கேளுங்கள்

நீங்கள் ஆலோசனையைத் தொடங்குவதற்கு முன்பாக இரண்டு காரியங்கள் தெளிவாக்கப்பட வேண்டும். இரண்டு கேள்விகளைக் கேட்பது இதற்கு உதவியாக இருக்கும். இந்த இரண்டு கேள்விகளுக்கும் பிள்ளை அளிக்கும் பதில் அவனுடைய நிலைமையும் பிரச்சினையையும் சிறப்பாகப் புரிந்துகொள்ள உங்களுக்கு உதவும். எப்படித் தொடருவது என்ற வழிநடத்துதலையும் உங்களுக்கு அளிக்கும். எனவே பிள்ளை கொண்டுவந்த பிரச்சினை அல்லது கேள்விக்குப் பதில் கண்டுபிடிக்கும் முன்பாக இந்த இரண்டு காரியங்களையும் தெளிவுபடுத்திக் கொள்வது நல்லது.

- பிள்ளை மெய்யாகவே இரட்சிக்கப்பட்டிருக்கிறானா என்பதை நீங்கள் அறிந்துகொள்வது அவசியமாகும்.

  பிள்ளையின் பிரச்சினைக்கு அடிப்படைக் காரணம் அவன் இரட்சிக்கப்படாதவனாகவும் இருக்கலாம். முதலில் இதைத் தெரிந்துகொள்ள வேண்டும். பிள்ளை கிறிஸ்துவை விசுவாசிக்கிறான் என்று நீங்களாகவே எடுத்துக் கொள்ளாதீர்கள். அவன் விசுவாசிக்கிறானா என்று கேளுங்கள். எப்போது அவன் இதைச் செய்தான் என்று கேளுங்கள். அதன் விளைவுகள் என்ன என்று கேளுங்கள். அவனுடைய பதில்களுக்குக் கவனமாகச் செவிகொடுங்கள்.

- பிள்ளை இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெற்றிருக்கிறானா என்று நீங்கள் அறிந்துகொள்வது அவசியமாகும்.

  ஒரு இரட்சிக்கப்பட்ட பிள்ளையின் வாழ்க்கையில் வரும் பல பிரச்சினைகளுக்கு இரட்சிப்பின் நிச்சயத்தில் குறைவுபடுவதே காரணமாக இருக்கலாம். மேலும் தொடர்வதற்கு முன்பாக இதைத் தெளிவுபடுத்திக்கொள்வது நலமாகும். தான் இரட்சிக்கப்பட்டிருப்பதை அவன் அறிவானா என்று கேளுங்கள். இல்லையென்றால், எப்படி நிச்சயத்தைப் பெற முடியும் என்று அவனுக்குக் காட்டுங்கள். "ஆமாம்" என்று அவன் பதிலளித்தால் எப்படி என்று கேளுங்கள்.

நீங்கள் திருப்தியடையும் அளவுக்கு இந்த இரண்டு காரியங்களுக்கும் தீர்வு கண்ட பிறகு, அடுத்த படிக்குச் செல்ல நீங்கள் ஆயத்தமாக இருக்கிறீர்கள்.

படி 4 – ஒரு வேதவசனத்தைக் காட்டுங்கள்

இப்போது பிள்ளை கூறிய திட்டவட்டமான பிரச்சினையோடு இடைபட நீங்கள் ஆயத்தமாக இருக்கிறீர்கள். வேதாகமத்தைப் பயன்படுத்தியே அவனுடைய பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும். கேள்விக்குப் பதிலளிக்க வேண்டும். பதிலைக் கொடுக்கும் ஒரு வேத வசனத்தைக் குறிப்பிட்டு, பிள்ளை அதை வாசிக்கும்படி

செய்ய வேண்டும். பிறகு அந்த வசனத்தின் அடிப்படையில் பிரச்சினையைக் குறித்துப் பிள்ளையோடு விவாதித்து, அந்த வசனத்தின் போதனையை அவனுக்கு விளக்க வேண்டும். தேவனுடைய வார்த்தையிலிருந்து நீங்கள் பயன்படுத்தும் வசனத்தைக் கொண்டு அவனுடைய பிரச்சினைக்குத் தீர்வுகாண அவனுக்கு உதவுங்கள். தேவைப்பட்டால் மேலும் சில வசனங்களைப் பயன்படுத்தலாம். ஆனால் கூடுமானவரை எளிதாகக் கையாளுங்கள்.

பொருத்தமாகவும் உதவியாகவும் இருக்குமென்றால் உங்கள் சொந்த அனுபவத்தையும் நீங்கள் பகிர்ந்துகொள்ளலாம்.

படி 5 - அவன் என்ன செய்ய விரும்புகிறான் என்று அவனிடம் கேளுங்கள்

நீங்கள் பயன்படுத்திய வேத வசனத்திலிருந்து தனது பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்று பிள்ளை அறிந்துகொள்வது மட்டும் போதாது. அவனே ஏதேனும் ஒரு வகையில் செயல் நடவடிக்கை எடுத்தாக வேண்டும். தேவனுடைய வார்த்தையில் தான் கண்டதற்கு அவன் செவிசாய்க்க வேண்டும்.

- தேவன் தமது வார்த்தையில் கூறியதை விசுவாசிக்கும்படி பிள்ளையை ஊக்குவியுங்கள்.
- அவன் தனது கடினத்தை மேற்கொண்டு, பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமானால், அவன் எதையாவது செய்தாக வேண்டும் என்பதைக் கண்டுகொள்ள அவனுக்கு உதவுங்கள்.
- அவன் செய்யக்கூடிய காரியத்தைக் குறித்து விவாதியுங்கள். அவனே வசனத்தை வாசித்து, அவனே தான் என்ன செய்ய வேண்டும் என்று கூறும்படி செய்யுங்கள்.
- பிள்ளை தானே தனது பிரச்சினையைக் குறித்தும் தான் தீர்மானித்துள்ள நடவடிக்கை பற்றியும் ஆண்டவரிடம் ஜெபிக்குமாறு செய்யுங்கள். தேவையான பதில் நடவடிக்கையைச் செய்ய அவன் விருப்பமில்லாதிருந்தால், அவனோடு சேர்ந்து ஜெபியுங்கள். நீங்கள் எப்போதும் அவனுக்கு உதவிசெய்ய ஆயத்தமாக இருப்பதாகக் கூறி அவனை விட்டுவிடுங்கள்.
- அவனோடும், அவனுக்காகவும் ஜெபியுங்கள். அவன் அந்தப் பிரச்சினையை மேற்கொள்ள உதவுமாறு தேவனிடம் வேண்டிக்கொள்ளுங்கள்
- அவன் இந்தப் பிரச்சினை குறித்து எதிர்காலத்தில் என்ன செய்யப் போகிறான் என்று பிள்ளையோடு விவாதியுங்கள்.

படி 6 - தொடர்ந்து அவனைக் கவனியுங்கள்

வேதாகமம் கூறுவதற்குப் பிள்ளை செவிசாய்க்கும்போது, தனது பிரச்சினையைக் குறித்தும் பதில் நடவடிக்கை குறித்தும் அவன் தேவனோடு ஜெபித்த பிறகு, அவனுக்குத் தொடர்ந்து உதவிசெய்யும்படியாக நீங்கள் பல படிகளைப் பின்பற்ற வேண்டும்:

- நீங்கள் உங்கள் ஆலோசனையிலும் விவாதத்திலும் பயன்படுத்திய வசனத்தை அந்தப் பிள்ளையின் வேதாகமத்தில் அடிக்கோடிட்டுக் காட்டுங்கள். அவன் அதை மனப்பாடம் செய்யும்படி கூறுங்கள்.
- நீங்கள் தொடர்ந்து அவனுக்காக ஜெபிப்பதாகவும், அவனில் ஆர்வம் கொண்டிருப்பதாகவும் கூறுங்கள்.
- இந்தப் பிரச்சினையைக் குறித்தோ அல்லது வேறு பிரச்சினைகளைக் குறித்தோ அவன் எந்த வேளையிலும் உங்களுடைய உதவியை நாடி வரலாம் என்று அவனிடம் கூறுங்கள்.
- நீங்கள் விவாதித்த காரியத்தைக் குறித்து - ஆனால், அவனுடைய பெயரைக் குறிப்பிடாமல் - வகுப்பில் அதிகப்படியான போதனையைக் கொடுங்கள்.
- பிள்ளை நம்பிக்கையோடு உங்களிடம் கூறியதை ஒருபோதும் எவரிடமும் கூறாதிருங்கள். என்றாலும், தீவிரமான பாதிப்பைக் குறித்துப் பிள்ளை உங்களிடம் கூறியிருக்குமானால், அதைக் குறித்து நடவடிக்கை எடுக்கக் கூடிய ஒருவரிடம் நீங்கள் அதைத் தெரிவிப்பது நல்லது என்று பிள்ளையிடம் கூறுங்கள்.

அத்தியாயம் 30
உங்கள் செயல்திட்டத்தை முடித்துவையுங்கள்
சிறுவர்களுக்கு அருட்பணி பற்றியும் வேதாகம கோட்பாடுகள் பற்றியும் போதிப்பது எப்படி?

அத்தியாயத்தின் சுருக்கம்

(நீங்கள் ஒழுங்காகப் போதிக்க வேண்டிய இரண்டு கருப்பொருள்கள் இருக்கின்றன).

- **அருட்பணி பற்றிப் போதியுங்கள்**
- **கோட்பாட்டுப் பாடங்களைப் போதியுங்கள்**

ஒவ்வொரு சிறுவர் கூட்டத்தின் ஐந்து அத்தியாவசியமான அம்சங்களைக் குறித்து நாம் ஏற்கெனவே பார்த்து ஆய்வுசெய்திருக்கிறோம். ஒவ்வொரு போதிக்கும் செயல்திட்டத்திலும் இந்த ஐந்து நடவடிக்கைகளும் இடம்பெற வேண்டும்:

- பாடுதல்
- ஜெப வேளை
- வேதவசனத்தை மனப்பாடம் செய்தல்

- மறுஆய்வு (வேதாகமப் பகுதி)
- வேதபாடம்

இந்த அத்தியாயத்தில் உங்கள் செயல்திட்டத்தில் கூடுதலாகச் சேர்க்க கூடிய இரண்டு பகுதிகளைக் குறித்துப் பார்ப்போம். ஒவ்வொரு வாரமும் இவைகளை நீங்கள் சேர்க்காவிட்டாலும், ஒரு ஒழுங்குமுறையாக இவைகளைச் சேர்க்க வேண்டும்.

அருட்பணி பற்றிப் போதிப்புகள்

ஒரு ஆசிரியராக நீங்கள் மற்றவர்களின் தேவைகளைக் குறித்த உலகளாவிய தரிசனத்தைப் பெற்றிருக்க வேண்டும். பிறகு இந்த தரிசனத்தைப் பிள்ளைகளுக்குத் தெரிவிக்க வேண்டும்.

உங்கள் நோக்கங்கள்:

அருட்பணி பற்றிப் போதிப்பதின் மூலமாகப் பல இலக்குகளை எட்ட அல்லது நோக்கங்களை நிறைவேற்ற நீங்கள் விரும்புகிறீர்கள்:

- அருட்பணியைக் குறித்து வேதாகமம் போதிப்பதை நீங்கள் பிள்ளைகளோடு பகிர்ந்துகொள்ள வேண்டும்
- உலக மக்களின் (குறிப்பாக உலகச் சிறுவர்களின்) ஆவிக்குரிய தேவை குறித்த தரிசனத்தைப் பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டும் - அவர்கள் இழந்து போனவர்களாக இருக்கிறார்கள், அவர்களுக்குச் சுவிசேஷம் தேவைப் படுகிறது
- இந்தத் தேவைகளைச் சந்திக்க பிள்ளைகள் என்ன செய்ய முடியும் என்பதை அவர்களுக்குக் காட்ட வேண்டும்:
  - ✓ ஜெபத்தின் மூலமாக
  - ✓ கொடுப்பதின் மூலமாக (பிள்ளைகள் ஏழைகளாகவும் அதிகப் பணத்தைக் கொண்டிராமலும் இருந்தாலும்)
  - ✓ இப்போதே, அவர்கள் சிறியவர்களாக இருக்கும்போதே, மற்றவர்களுக்குத் தனிப்பட்ட சாட்சிகூறுவதின் மூலமாக.
  - ✓ வருங்காலத்தில் தங்கள் சொந்த நாட்டிலோ அல்லது மற்ற நாடுகளிலோ அருட்பணியாளர்களாக ஊழியம்செய்ய முன்வருவதின் மூலமாக.
- நாட்டிலும் வெளிநாடுகளிலும் நடைபெறும் அருட்பணி நடவடிக்கைகளைக் குறித்த சித்திரத்தை நீங்கள் பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டும்.

நீங்கள் போதிப்பது

கீழ்க்கண்ட வகைகளில் நீங்கள் அருட்பணியைக் குறித்துப் போதித்து, பிள்ளைகளுக்கு அறைகூவல் விடுக்கலாம்:

- மற்றவர்களுக்குத் தேவனைக்குறித்துக் கூற தேவனால் பயன்படுத்தப்பட்ட மக்களைக் காட்டும் வேதபாடங்களை நீங்கள் போதிக்கலாம். எ-டு. யோனா, நாகமானின் வேலைக்காரச் சிறுமி, பிலிப்பும் எத்தியோப்பியனும்.

- மாற்கு 16:15, யோவான் 4:35 போன்ற வேதவசனங்களைப் போதித்து, அவைகளை மனப்பாடம்செய்ய வைக்க வேண்டும்.

இவையிரண்டும் பிள்ளைகள் அருட்பணி குறித்த வேதாகம அடிப்படையைக் கண்டுகொள்ள உதவும்.

- அருட்பணியில் ஈடுபட்டிருப்பவர்களின் செயல்பூர்வமான அனுபவங்களை விவரிக்கும் அருட்பணிக் கதைகளைக் கூறுவதின் மூலமாக. அருட்பணி வாழ்க்கை வரலாறுகள் உதவியாக இருக்கும். எ-டு. ஹட்சன் டேய்லர், ஏமி கார்மைக்கேல், வில்லியம் கேரி. என்றாலும் வெறும் கதையை மட்டும் கூறாதிருங்கள். இந்தக் கதைகளின் மூலமாகக் கிறிஸ்தவ ஊழியம் மற்றும் சாட்சி குறித்த முக்கியமான கொள்கைகளையும் எடுத்துக்கூற முயலுங்கள்.
- அருட்பணி கோரஸ் பாடல்களைப் பாடுவதின் மூலமாக. இவை பிள்ளைகளுக்கு அருட்பணி குறித்துப் போதிக்க அதிகப் பயனுள்ள வழியாக இருக்கின்றன.
- செய்தி விவரங்களைக் கொடுப்பதின் மூலமாக:
  - ✓ உலகத் தேவைகளைக் குறித்த பொதுவான விவரங்கள்
  - ✓ பிள்ளைகள் அதிகமான ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் கொண்டிருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பும் ஒரு நாடு அல்லது பகுதியைக் குறித்து திட்டவட்டமான விவரங்கள். உங்களிடம் இருக்குமானால் தேச வரைபடம், புகைப்படங்கள் போன்ற பட உபகரணங்களைப் பயன்படுத்துங்கள்.
- அயல்நாட்டிலோ அல்லது நாட்டின் வேறு பகுதியிலோ அருட்பணி ஊழியம் செய்யும் ஒரு ஊழியரைத் "தத்தெடுத்துக்கொள்வதின்" மூலமாக. அவரைக் குறித்தும் அவருடைய ஊழியத்தைக் குறித்தும் பிள்ளைகளுக்கு விவரங்களைக் கொடுக்கலாம். இந்த விவரங்கள் இவைகளை உள்ளடக்கியிருக்க வேண்டும்: அவர் எங்கிருந்து வருகிறார், அவர் எவ்வாறு இரட்சிக்கப்பட்டார், தேவன் அவரை எவ்வாறு அழைத்தார், அவர் தனது ஊழியத்துக்காக எவ்வாறு ஆயத்தம் செய்தார், இப்போது அவர் எங்கே இருக்கிறார், அவர் பணிபுரியும் நாடு அல்லது பகுதி எப்படிப்பட்டது, அவர் என்ன செய்கிறார், அந்த நாடு அல்லது பகுதியின் தேவைகள் மற்றும் கஷ்டங்கள், அவருடைய ஊழியத்தின் விளைவுகள். கூடுமான வரையில், வரைபடங்கள், படங்கள், ஜெப அட்டைகள், புகைப்படங்கள் இவைகளைப் பயன்படுத்தி, கவரக்கூடிய வகையில் செய்திகளைக் கொடுங்கள்.
- இந்த அருட்பணியாளரிடமிருந்து வரும் கடிதங்கள் மூலமாக. கூடுமானால் அவர் நேரில் வருகைதரலாம். உங்கள் அருட்பணியாளருக்கு நீங்கள் கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டை, பிறந்தநாள் வாழ்த்து அட்டை இவைகளை அனுப்பலாம்.

உங்கள் பிள்ளைகளுக்கு அருட்பணி குறித்து நீங்கள் போதிக்கும்போது எப்போதும் மூன்று காரியங்களைக் கருத்தில் வைத்திருக்க வேண்டும்:

- ஒரே வேளையில் உங்களால் மேலே கூறப்பட்ட அனைத்தையும் செய்ய முடியாது. ஒவ்வொன்றாகச் செய்யுங்கள். ஒரு குறிப்பிட்ட காலகட்டத்துக்குள்ளாக மேலே கூறப்பட்ட பல அம்சங்களைச் செய்யும்படி இலக்கை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.
- ஒவ்வொரு வாரமும் நீங்கள் அருட்பணி வேளையைக் கொண்டிருக்க முடியாது. ஒரு வாரம் மாற்றி ஒரு வாரம் நீங்கள் அருட்பணிப் போதனையயும் கோட்பாட்டுப் பாடத்தையும் கொடுக்கலாம். அல்லது நான்கு அல்லது ஐந்து வாரங்களுக்குத் தொடர்ந்து தொடர் அருட்பணிப் போதனைகளைக் கொடுக்கலாம். பிறகு அடுத்த சில வாரங்களுக்குச் சிறுசிறு கோட்பாட்டுப் போதனைகளைக் கொடுக்கலாம்.
- பிள்ளைகள் ஏழைகள் என்பதாலும் அவர்களால் கொடுக்க முடியாது என்பதாலும், அவர்களால் புரிந்துகொள்ள முடியாது அல்லது ஈடுபட மாட்டார்கள் என்று நீங்கள் நினைப்பதாலும், அருட்பணிப் போதனைகளை நீங்கள் கொடுக்காமல் நிறுத்தக் கூடாது. அவை அவர்களுக்குப் பின்னர் **உதவியாக** இருக்கும், மற்றவர்களுக்கும் **உதவிசெய்யும்.**

பிள்ளைகளின் பங்கெடுப்பு

பிள்ளைகள் அருட்பணியில் ஈடுபாடு கொள்ள வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்கள். இந்த ஈடுபாடு அவர்கள் யாருக்காக ஜெபிக்கிறார்களோ, யாருக்காகக் கொடுக்கிறார்களோ அவர்கள் உதவியாக இருப்பது மட்டுமின்றி, பிள்ளைகளுக்கும் ஆவிக்குரியரீதியாகப் பயனளிக்கும். பல வழிகளில் அவர்கள் ஈடுபாடு கொள்ள முடியும்.

- குறிப்பாக அருட்பணியாளர்களுக்காகவும், பிற நாடுகளிலும் தங்கள் சொந்த நாட்டின் பிற பகுதிகளிலும் இருக்கும் சிறுவர்களுக்காகவும் ஜெபிப்பதின் மூலமாக. அருட்பணியாளர்களின் ஜெப வேண்டுகோள்களைச் சுருக்கமாக வாசிப்பது பயன் தரும்
- ஒரு அருட்பணியாளருக்கோ அல்லது அருட்பணிச்செயல்திட்டத்துக்கோ பண உதவி செய்வதின் மூலமாக. பல வழிமுறைகளை நீங்கள் பின்பற்ற வேண்டும்:
  - ✓ மற்றவர்களுக்கு உதவிசெய்யும்படி கொடுப்பது பற்றிய வேதாகமக் கொள்கைகளைப் பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டும்.
  - ✓ பிள்ளைகள் கொடுக்கும் பணம் எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது என்பதை அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.
  - ✓ கொடுக்கப்படும் இந்தப் பணம் முழுவதும் மற்றொரு நாட்டிலோ அல்லது நாட்டின் பிற பகுதியிலோ அருட்பணி செய்யும் ஒரு

அருட்பணியாளருக்கு அனுப்பப்படுகிறது என்பதையும், கொடுக்கும் பழக்கம் பிள்ளைகளுக்கு உதவியாக இருக்கும் என்பதையும் பெற்றோருக்குத் தெரிவிக்க வேண்டும். இதைக் குறித்துப் பெற்றோருக்கு எழுதும் கடிதம் உதவியாக இருக்கும்.

- ✓ பெற்றோரிடமோ மற்றவர்களிடமோ கேட்காமல் தங்கள் சொந்தப் பணத்தைக் கொடுக்கும்படி பிள்ளைகளை ஊக்குவியுங்கள்.
- ✓ கொடுக்கப்படும் பணத்தின் மதிப்பு முக்கியமானது அல்ல என்பதை வலியுறுத்துங்கள் (மாற்கு 12:42-44). கொடுக்கும் எண்ணமே முக்கியமானதாகும்.
- ✓ பிள்ளைகள் கண்டிப்பாகக் கொடுத்தேயாக வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தாதீர்கள். "யார் அதிகப் பணம் கொண்டுவருவார்கள் பார்ப்போம்!" என்று கூறாதிருங்கள்.
- ✓ கொடுக்கப்படும் பணம் எவ்வாறு அதிகரித்துவருகிறது என்பதைக் காட்ட நீங்கள் காணிக்கை வரைபடம் ஒன்றைத் தயாரிக்கலாம். ஒரு கிராப் வரைபடத்தில் கீழ்வரிசையில் வாரங்களைக் குறிப்பிட்டு, பக்க வரிசையில் கொடுக்கப்பட்ட பணத்தைக் குறிக்கலாம். பிறகு வாரந்தோறும் கொடுக்கப்படும் பணத்தை ஒரு கோட்டால் இணைத்து, அது மேல் நோக்கிச் செல்கிறதா அல்லது கீழ்நோக்கிச் செல்கிறதா என்பதைக் காட்டலாம்.
- ✓ இப்போதே மற்றவர்களுக்குச் சாட்சி கூறுவதின் மூலமாகப் பிள்ளைகள் அருட்பணியாளராகும்படி ஊக்குவிக்கலாம். ஆனால் எப்படி இதைச் செய்ய வேண்டும் என்று நீங்கள் அவர்களுக்குக் காட்ட வேண்டும். எ-டு. வார்த்தையில்லாத புத்தகத்தைப் பயன்படுத்துதல், மற்றப் பிள்ளைகளைச் சிறுவர் கூட்டத்துக்குக் கூட்டிவருதல், சிறுவர் கைப்பிரதிகளைக் கொடுத்தல்.
- ✓ வருங்காலத்தில் தேவன் அழைக்கிறபடி தங்கள் வாழ்க்கையை அவருக்கு ஒப்புக்கொடுக்கும்படி பிள்ளைகளுக்கு அறைகூவல் விடுக்கலாம்.
- ✓ பல்வேறு வகைப்பட்ட அருட்பணி ஊழியங்களைக் குறித்தும், அருட்பணியாளராவதற்கு பின்பற்ற வேண்டிய படிகளைக் குறித்தும் போதிப்பதின் மூலமாக. தேவன் அவர்களுடைய வாழ்க்கைக்கான தமது பரிபூரண சித்தத்தில் அவர்களை வழிநடத்த வேண்டுமென்றும் அவர்களில் சிலரையாவது முழு நேர ஊழியத்துக்கு அழைக்க வேண்டுமென்றும் ஜெபியுங்கள்.

கோட்பாட்டுப் (doctrinal) பாடங்களைப் போதியுங்கள்

வேதாகமத்தின் முக்கியமான சத்தியங்களையும் கோட்பாடுகளையும் குறித்து இன்றைய சிறுவர்கள் அதிகமாகப் புரிந்துகொள்ளவில்லை, இதுவே அவர்களுடைய மாபெரும் தேவையாக இருக்கிறது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்குச்

சிறந்த வழி ஒவ்வொரு வாரமும் வேதபாடத்தின் மூலமாகக் கோட்பாட்டுப் போதனை கொடுப்பதாகும். ஒரு கோட்பாடு அல்லது கோட்பாட்டின் ஒரு அம்சத்தின் அடிப்படையில் வேதபாடத்தைப் போதிக்கலாம் அல்லது ஒரு கோட்பாட்டைப் போதிக்க உங்கள் வேதபாடத்தைப் பயன்படுத்தலாம்.

ஆனால் பிள்ளைகளுக்குக் கோட்பாட்டைப் போதிப்பதற்கு மற்றொரு வழியும் இருக்கிறது. உங்கள் வேத பாடத்தோடுகூட (குறிப்பாக அது ஒரு வேதாகமக் கதையின் அடிப்படையில் இருக்குமானால்) உங்கள் போதிக்கும் செயல்திட்டத்தில் ஐந்து முதல் பத்து நிமிடங்களை ஒரு கோட்பாட்டையோ அல்லது கோட்பாட்டின் ஒரு அம்சத்தையோ போதிப்பதற்கு ஒதுக்கலாம். ஒவ்வொரு வாரமும் நீங்கள் இதைச் செய்ய அவசியமில்லை. ஒரு வாரம் நீங்கள் அருட்பணிப் போதனையைக் கொடுக்கலாம், அடுத்த வாரம் கோட்பாட்டுப் போதனை என்று இவ்வாறு மாற்றி மாற்றிப் போதிக்கலாம். அல்லது தொடர்ந்து ஐந்து வாரங்களுக்குத் தொடரான கோட்பாட்டுப் போதனையையும், பிறகு அடுத்த ஐந்து வாரங்களுக்குத் தொடரான அருட்பணிப் போதனையையும் கொடுக்கலாம்.

உங்கள் சுருக்கமான கோட்பாட்டுப் போதனைக்கு நீங்கள் பட உபகரணங்களைப் பயன்படுத்தினால் நலமாக இருக்கும்.

வேதாகமத்தைப் பற்றியும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றியும் இரண்டு பட அட்டைத் தொகுப்புகள் உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு தொகுப்புப் புத்தகங்களிலும் கோட்பாட்டுப் பாடங்களின் பல தொடர்கள் உள்ளன.

இரண்டு வழிகளில் இந்தப் பாடங்களைப் பயன்படுத்தலாம்:

- உங்கள் சிறுவர் ஊழியத்தில் கதைவடிவிலான வேதபாடத்துக்கு மாற்றாக இதைப் பயன்படுத்தலாம், ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ள ஓராண்டு செயல் திட்டத்தில் 1,2,4,5,6 தொடர்களில் நான் இவைகளைப் பரிந்துரை செய்திருக்கிறேன். ஒவ்வொரு பாடத்தையும் நீங்கள் பதினைந்து முதல் இருபது நிமிடங்கள் வரை போதிக்கலாம்.
- சில சிறப்பான சூழ்நிலைகளில் நீங்கள் ஒரு குறிப்பிட்ட பாடத்தைத் தொடர்ந்து நான்கு அல்லது ஐந்து வாரங்களுக்கு நடத்தலாம்; ஒரு வேளையில் ஐந்து முதல் எட்டு நிமிடங்களுக்கு அதன் ஒரு பகுதியைப் போதிக்கலாம். இது கதை வடிவிலான வேதாகமப் பாடத்தோடு கூடுதலான போதனையாக இருக்கும். உங்கள் போதிக்கும் செயல்திட்டத்தில் கோட்பாட்டுப் பகுதியில் இதைப் போதிக்கலாம்.

நீங்கள் விரும்பினால் நீங்களாகவே ஒரு சிறிய கோட்பாட்டுப் பாடத்தைத் தயாரித்து அளிக்கலாம்.

அத்தியாயம் 31

அவர்கள் அதைக் காண உதவுங்கள்

பட உபகரணங்களைப் பயன்படுத்துவது எவ்வாறு ?

அத்தியாயத்தின் கருக்கள்

(உங்கள் ஊழியத்தில் பட உபகரணங்கள் உங்களுக்கு உதவியாக இருக்கும்)

- பட உபகரணங்களின் நோக்கம்
- பட உபகரணங்களின் பயன்
- பட உபகரணங்களைத் தயாரித்தல்
- பட உபகரணங்களின் வகைகள்
  - ✓ பட அட்டைகள்
  - ✓ பிளான்னல் அட்டை
  - ✓ பொருள்காட்டி விளக்குதல்
  - ✓ மற்றவைகள்
- அனைத்தையும்விட நீங்களே சிறப்பான பட உபகரணமாக இருக்கிறீர்கள்
- பட உபகரணங்களை ஆயத்தம்செய்தல்

பிள்ளை கேட்பதின் மூலம் கற்றுக்கொள்வதைவிட, கேட்பதின் மூலமும் பார்ப்பதின் மூலமும் அதிகமாகக் கற்றுக்கொள்கிறது என்று அனுபவத்தின் மூலம் அறிகிறோம். எனவே உங்கள் பாடத்தில் பிள்ளை தனது கண்களின் மூலமாகக் கற்றுக் கொள்வதற்கும் அதிகமான வாய்ப்பைக் கொடுக்க வேண்டும்.

பட உபகரணங்களின் நோக்கம்

பட உபகரணங்கள் தங்களில் தானே முழுமை பெறுவதில்லை. நீங்கள் சத்தியத்தைப் போதிக்க அவைகளைப் பயன்படுத்துகிறீர்கள். உங்கள் போதனைக்கு அவை துணையாகக் காணப்படுகின்றன. உங்கள் போதனைக்கு அவை துணை உபகரணங்களேயொழிய வேறல்ல.

பட உபகரணங்கள் ஐந்து வழிகளில் ஆசிரியருக்கு உதவுகின்றன:

- அவை கவனத்தை ஈர்க்கின்றன

  பிள்ளைகளால் பார்க்கக் கூடிய ஒன்றைவிட அவர்களுடைய கவனத்தை அதிகமாக ஈர்ப்பது வேறொன்றுமில்லை. பட உபகரணம் பிள்ளைகளின் கண்களை ஓரிடத்திலும், சிந்தையை ஒரு கருத்தின்மீதும் ஒருமுகப்படுத்துகிறது. பட உபகரணத்தைப் பயன்படுத்துவதின் மூலம் ஆசிரியர் பிள்ளைகளின் காதுகளுக்கு மட்டுமின்றி கண்களுக்கும் வேலை கொடுக்கிறார். இது மனம் அலைபாய்வதைத் தடுக்கிறது.

- அவை கிரகித்துக்கொள்வதற்கு உதவுகின்றன

  நீங்கள் கூறுவதைப் பிள்ளை புரிந்துகொள்ள பட உபகரணம் உதவுகிறது.

- மறுபடியுமாக நினைவுகூருவதை அவை ஊக்குவிக்கின்றன.
  கண்ணில் காணும் ஒன்றை நீண்ட காலத்துக்கு நினைவில் வைத்திருக்க முடியும். பட உபகரணம் பிள்ளையின் மனதில் சத்தியத்தைப் புத்துணர்வோடு நீண்ட காலம் வைத்திருக்க உதவுகிறது.
- அவை ஒழுங்கின்மையைக் குறைக்கின்றன
  பட உபகரணங்கள் பாடத்தை அதிக ஆர்வமூட்டுவதாகவும் கவர்ச்சிகரமானதாகவும் மாற்றுவதால் ஒழுங்கின்மை குறைகிறது.
- தவறான கருத்துக்கள் உருவாகுவதைத் தடுக்கிறது.
  கேட்கும் ஒன்றைத் தவறாகப் புரிந்துகொள்ளலாம். ஆனால் காணக்கூடிய ஒன்றைக் குறித்து அந்தப் பிரச்சினை இல்லை.

ஆண்டவராகிய இயேசு தான் போதிப்பதை எடுத்துக்காட்டி விளக்குவதற்காக எவ்வாறு உபகரணங்களைப் பயன்படுத்தினார் என்பதை மறுபடியும் மறுபடியுமாக நாம் வேதாகமத்தில் பார்க்கிறோம். போதிப்பதில் உபகரணங்கள் எவ்வளவாகப் பயனுள்ளவையாகவும் மதிப்புள்ளவையாகவும் இருக்கின்றன என்பதை அவர் உணர்ந்து செயல்படுத்திக் காட்டினார்.

பட உபகரணங்களின் பயன்

உங்கள் போதிக்கும் செயல்திட்டத்தின் பல பகுதிகளில் நீங்கள் பட உபகரணங்களைப் பயன்படுத்தலாம்:

- பிள்ளைகள் பாடும் பாடல்களுக்கு நீங்கள் படங்களைக் காட்டலாம்.
- பிள்ளைகள் கற்றுக்கொள்ளும் மனப்பாட வசனங்களை நீங்கள் சித்தரித்துக் காட்டலாம்.
- வேதாகமப் புதிர்ப் போட்டிகளிலும், மறு ஆய்விலும் நீங்கள் பட உபகரணங்களைப் பயன்படுத்தலாம்.
- அருட்பணியைப் பற்றிப் பிள்ளைகளுக்குத் தெரிவிக்க நீங்கள் பட உபகரணங்களைப் பயன்படுத்தலாம் (எ-டு. உலக வரைபடம், அல்லது குறிப்பிட்ட நாட்டின் தேச வரைபடம், அல்லது அந்த நாட்டின் கரென்சி நோட்டுகள்).
- எல்லாவற்றுக்கும் மேலாக, உங்கள் வேதபாடத்தையும் வேதாகமக் கோட்பாட்டையும் போதிக்க நீங்கள் பட உபகரணங்களைப் பயன்படுத்தலாம்.

பட உபகரணங்களைத் தயாரித்தல்

அடிப்படையில் இரண்டு வகைப்பட்ட பட உபகரணங்களை நீங்கள் பயன்படுத்தலாம்:

- ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட உபகரணங்கள். எங்கள் அமைப்பைப் போன்ற அமைப்புகளின் மூலமாக நீங்கள் அவைகளைப் பெறலாம்.
  இவை மிகவும் சிறப்பாகவும் கவர்ச்சிகரமாகவும் தயாரிக்கப்பட்ட உபகரணங்களாகும். இவற்றை ஆயத்தம் செய்ய அதிக நேரம் தேவைப்படுவதில்லை.

ஆனால் பெரும்பாலும் இவைகளுக்காகப் பணம் செலவழிக்க வேண்டியிருக்கும்.

➤ நீங்களாகவே தயாரிக்கும் உபகரணங்கள்.

இவை முதல் வகையைப் போன்று "தொழில்ரீதியானதாக" இராது; இவைகளுக்காக நீங்கள் அதிக நேரம் செலவிட வேண்டியிருக்கும். ஆனால் இவைகளுக்கான செலவு குறைவு. இவற்றையும் சிறப்பாகப் பயன்படுத்த முடியும். சில வேளைகளில் பணச்செலவின் காரணமாக ஆசிரியர்கள் பட உபகரணங்களைப் பயன்படுத்தத் தயங்குகிறார்கள். ஆனால் சிந்தித்துக் கடினமாக உழைக்கும்போது பயனுள்ளதும் அதிக விலையில்லாததுமான உபகரணங்களை நீங்களே தயாரிக்க முடியும் அல்லது கண்டுபிடிக்க முடியும்.

ஆண்டவராகிய இயேசுவின் ஊழியத்தைக் குறித்துச் சிந்தித்துப் பாருங்கள். அவர் தொடர்ந்து உபகரணங்களைப் பயன்படுத்திவந்தார் - ஒரு பிள்ளை, ஒரு நாணயம், ஒரு பறவை, ஒரு மீன் அல்லது ஒரு மலர். அவர் அதிக விலையில்லாததும் இலவசமாகக் கிடைக்கக்கூடியதுமான இயற்கையில் சாதாரணமாகக் காணப்படும் பொருட்களைப் பயன்படுத்தினார். இப்படிப்பட்ட உபகரணங்களை நீங்களும் பயன்படுத்தலாம், இன்னும் பல வாய்ப்புகளும் உங்களுக்கு உள்ளன.

பட உபகரணங்களின் வகைகள்

உங்கள் போதனையில் உங்களுக்கு உதவ பல்வேறு வகைப்பட்ட பட உபகரணங்கள் இருக்கின்றன

பட அட்டைகள்

பட அட்டைகள் என்பது ஒரு காகிதம் அல்லது மெலிதான துண்டு அட்டையாகும். அதில் ஒரு படமும் படத்தை விளக்க ஒரு வாசகமும் இருக்கிறது. ஒரு பட அட்டையை மட்டும்கூட நீங்கள் பயன்படுத்தலாம் - எடுத்துக்காட்டாக, ஒரு வேதவசனத்தைப் போதிக்க நீங்கள் அந்த அட்டையைப் பயன்படுத்தலாம். அல்லது ஒரு பாடத்தைப் போதிக்க ஒன்றன்பின் ஒன்றாகப் பல பட அட்டைகளைப் பயன்படுத்தலாம். இந்தப் பட அட்டைகள் *"வேதாகமம்" "ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து"* பட அட்டைத் தொகுப்புகளைப் போல ஒன்றாகச் சேர்த்து பைண்ட் பண்ணப்பட்டிருக்கலாம், அல்லது ஸ்பைரல் முறையில் பைண்ட் செய்யப்பட்டிருக்கலாம். அல்லது அவற்றைத் தனித்தனியாகவும் வைத்திருக்கலாம்; இரண்டு பக்கங்களிலும் படம் வரையப்பட்டிருக்கலாம்.

ஏற்கெனவே கூறப்பட்டுள்ள ஓராண்டு செயல்திட்டத்தில பரிந்துரை செய்யப்பட்டுள்ளபடி உங்கள் வேதபாடத்தைத் தெளிவாகவும் தர்க்கரீதியாகவும் போதிக்க இந்தப் பட அட்டைத் தொகுப்புகளை நீங்கள் பயன்படுத்தலாம். ஒரு பாடலையோ, அல்லது ஒரு வேதவசனத்தையோ அல்லது ஒரு அருட்பணிக் கதையையோ போதிக்கவும் நீங்கள் பட அட்டையைப் பயன்படுத்தலாம்.

நீங்கள் உங்கள் கையில் பட அட்டையை வைத்துக்கொண்டு போதிக்கும்போது அவைகளைச் சுட்டிக்காட்ட வேண்டும். திறந்தவெளிக் கூட்டத்தில் இவை அதிகப் பயனுள்ளவையாக இருக்கின்றன (பிளான்னல் படங்களைப் போல இவை காற்றில் பறந்துபோய்விடுவதில்லை). இவைகளை பிளான்னல் அட்டையைவிட எளிதாகக் கையாளலாம், எளிதாக எடுத்துச் சொல்லலாம்.

ஏற்கெனவே தயாரிக்கப்பட்டுள்ள பட அட்டைகளையும் நீங்கள் வாங்கிப் பயன்படுத்தலாம். என்றாலும், நீங்களே சொந்தமாக அவைகளைத் தயாரிக்கவும் முடியும். மெல்லிய அட்டையில் எட்டு துண்டுகள் உங்களுக்குத் தேவைப்படும். ஒவ்வொன்றிலும் ஒரு வாக்கியத்தை எழுதி, அதைச் சித்தரிக்கும்படி பொருத்தமான ஒரு படத்தை ஒட்ட வேண்டும். இந்த வாக்கியங்கள் கோட்பாட்டைத் தர்க்க ரீதியாகவும் ஒழுங்கான வகையிலும் போதிக்கின்றன.

பிளான்னல் அட்டை (flannelgraph)

இதுவும் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது, அதிகமாகப் பயனும் தருகிறது. ஒரு படத்தின் பின்னால் பிளான்னல் அல்லது பிசிறான துணி ஒட்டப்படுகிறது. பிறகு இதே வகைத் துணி ஒட்டப்பட்ட அட்டையின்மீது இந்தப் படத்தை வைக்கும்போது அந்த அட்டையில் இந்தப் படம் ஒட்டிக்கொள்கிறது. எனவே தடித்த அட்டை அல்லது மெல்லிய மரப் பலகையினாலான 90 செ.மீ. X 70 செ.மீ அளவிலான ஒரு பலகையை தயார்செய்ய வேண்டும். பிறகு அதன்மீது இந்த வகைப் பட்ட துணியை ஒட்ட வேண்டும், துணி சிவப்பு அல்லது கறுப்பு போன்ற இருண்ட வண்ணத்தில் இருப்பது நலமாகும். பிறகு நீங்கள் பயன்படுத்த விரும்பும் படங்களை அல்லது வார்த்தைகளைத் துண்டாக வெட்டி அதன் பின்புறத்தில் அந்தத் துணியை ஒட்ட வேண்டும். பின்புறம் முழுவதும் நீங்கள் துணியை ஒட்டினால் இது நீண்ட காலம் நிலைத்திருக்கும். இப்போது இந்தப் படங்கள் பிளான்னல் அட்டையில் ஒட்டிக்கொள்ளும். நீங்கள் போதிக்கும்போது இந்தப் படங்களைப் பயன்படுத்தலாம்.

இப்போது, போதிக்கும்போது படங்களையோ அல்லது வார்த்தைகள் எழுதப்பட்ட துண்டுகளையோ பயன்படுத்தி, பிளான்னல் அட்டையின் மூலம் நீங்கள் போதிப்பதைச் சித்தரிக்க முடியும்.

பல வழிகளில் பிளான்னல் அட்டையைப் பயன்படுத்த முடியும்:

- ஒரு வேதபாடத்தைப் போதிக்கும்போது அதில் வரும் நபர்கள், மிருகங்கள் அல்லது பொருட்களின் படங்களை நீங்கள் இவ்வாறு காட்டலாம்.
- கற்றுக்கொள்ள வேண்டிய வேத வசனங்களைச் சித்தரிக்கவும், பாடல்களைச் சித்தரிக்கவும் அவைகளின் வரிகளைத் துண்டு துண்டாகத் தயாரித்து பிளான்னல் அட்டையில் ஒட்டிக் காட்டலாம்.
- வார்த்தைகள் இல்லாமல் படங்கள் அல்லது வேத வசனங்களைச் சித்தரிக்கும் உருவங்கள் இவைகளைப் பயன்படுத்தியும் வேதவசனங்களையும் பாடல்களையும் போதிக்கலாம்.

- நீங்கள் போதிக்கும் எதையாவது விளக்கும்படி ஒரு வரைபடத்தையோ அல்லது பெரிய படத்தையோ பிளான்னல் அட்டையில் ஒட்டவைத்துப் பயன் படுத்தலாம்.

நீங்கள் பிளான்னல் அட்டையைப் பயன்படுத்துவதில் சில பயனுள்ள குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

- உங்கள் அட்டையை 45 டிகிரி பின்னால் சாய்த்துவைத்திருப்பீர்களானால் படங் கள் கீழே விழாமல் ஒட்டிக்கொள்ளும்.
- பிள்ளைகளின் கண் மட்டத்துக்கு மேலாக உங்கள் அட்டையை வையுங்கள். எல்லாராலும் பார்க்க முடிகிறதா என்று உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- உங்கள் படங்கள் அவை பயன்படுத்தப்படும் வரிசையில் ஆயத்தமாக இருக்க வேண்டும். அவை அருகில் ஒரு நாற்காலியில் வரிசையாக வைக்கப்பட் டிருக்க வேண்டும்.
- படங்கள் அட்டையில் "அசைவாடும்படி" பார்த்துக்கொள்ளுங்கள். ஒவ்வொரு படமாக அட்டையில் வையுங்கள். படங்களை நகர்த்துங்கள். புதிய படங்களைச் சேருங்கள். இவ்வாறு பிளான்னல் அட்டையில் காணப்படும் சித்திரம் பிள்ளையின் கவனத்தை ஒன்றுபட வைக்கிறது. சரியான வேளையில் படத்தை வைப்பது மிக முக்கியமானதாகும்.
- சரியான பார்வைக்கோணத்துக்கு ஏற்றபடி பெரிய படங்கள் முன்னணியிலும் (பிளான்னல் அட்டையின் கீழ்ப்பக்கத்தில்) சிறிய படங்கள் பின்னாலும் வைக் கப்பட வேண்டும். எல்லாப் படங்களும் நேராக இருக்கின்றனவா என்று பார்த் துக்கொள்ளுங்கள்.
- படங்களை அட்டையில் வைப்பதற்காகக் கதையை நிறுத்திவிடாதீர்கள். வைக்கும்போதும் பேசிக்கொண்டிருங்கள்.
- அட்டையில் படத்தை வைக்கும்போது வகுப்புக்கு உங்கள் முதுகைக் காட்டாதீர்கள். அட்டையின் ஒரு பக்கத்தில் நின்றபடி இதைச் செய்யுங்கள். இதன் மூலம் உங்கள் குரலும் தொனியில் குறையாது. பிள்ளைகளோடும் நீங்கள் கண்தொடர்பைப் பெற முடியும்.
- உங்கள் படங்கள் சுத்தமாகவும் நல்ல நிலைமையிலும் இருக்க வேண்டும்.

ஒரு வேதபாடத்தைப் போதிப்பதில் பிளான்னல் அட்டையிலுள்ள சாதகமான காரியம் என்னவென்றால் கதை முன்னேற முன்னேற, நீங்கள் உருவங்களைச் சேர்க்கும்போதும் மாற்றும்போதும், அட்டையிலுள்ள ஒட்டுமொத்த சித்திரம் மாறிக்கொண்டேயிருக்கும். இது பிள்ளைகளின் ஆர்வத்தைத் தூண்டும்.

ஆனால் பிளான்னல் அட்டையைப் பயன்படுத்துவதில் சில பாதகமான காரியங் களும் இருக்கின்றன. உங்களுக்குப் போக்குவரத்து வசதியில்லாவிட்டால், பிளான் னல் அட்டையையும் அதன் ஸ்டாண்டையும் தூக்கி செல்வது கடினமாக இருக் கும். சில இடங்களில், குறிப்பாகத் திறந்த வெளியில் பிளான்னல் அட்டையைப் பயன்படுத்த முடியாது. படங்கள் காற்றில் பறக்கடிக்கப்பட்டுவிடும்! மேலும், சில

பிளான்னல் கிராப் படங்களை வாங்குவதற்கு அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கிறது.

பொருள்காட்டிப் பாடம் சொல்லுதல்

பொருள் காட்டிப் பாடம் சொல்லுவது என்பது நீங்கள் ஒரு பொருளை எடுத்துக்காட்டாகப் பயன்படுத்தி உங்கள் பாடத்தை நடத்துவதாகும். அந்தப் பொருள் எப்போதுமே பிள்ளைகளின் கண்பார்வையில் இருக்கும். இடையிடையே நீங்கள் அதைச் சுட்டிக்காட்டி, அதைக் கொண்டு பாடத்தைப் போதிக்கிறீர்கள். ஆண்டவராகிய இயேசு தமது ஊழியத்தில் இந்த வழிமுறையையே அடிக்கடி பயன்படுத்தினார்.

இந்த வகைப்பட்ட உபகரணமே மலிவானதாகவோ அல்லது இலவசமாகப் பெறக் கூடியதாகவோ இருக்கிறது.

இந்த வகைப்பட்ட உபகரணங்களை நாம் கற்பனைக் கண்ணோடு கண்டுபிடித்துப் பயன்படுத்த வேண்டும்.

நீங்கள் பயன்படுத்தக் கூடிய பல வகையான பொருள்காட்டிப் பாடம் சொல்லுதலுக்கான எடுத்துக்காட்டுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

- நீங்கள் வேதாகமத்தைக் குறித்தும், தேவன் அந்த அற்புதமான புத்தகத்தை ஏன் கொடுத்தார் என்பதைக் குறித்தும் போதிப்பீர்களானால் ஒரு கண்ணாடியைப் பயன்படுத்தலாம்.

  வேதாகமம் ஒரு கண்ணாடியைப் போல நாம் எப்படியிருக்கிறோம் என்பதைக் காட்டுகிறது (யாக்கோபு 1:22 24).

  நாம் எவ்வளவு அசுத்தமாக இருக்கிறோம் என்பதையும் நாம் சுத்திகரிக்கப்படுவது அவசியம் என்பதையும் இது காட்டுகிறது.

- கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வது எப்படி என்று நீங்கள் போதிப்பீர்களானால் இரண்டு கையுறைகளைப் பயன்படுத்தலாம்:

  ✓ முதல் கையுறைக்குள் உங்கள் கையை நுழைத்து, இப்போது கையுறை துடிப்புடனும் பயனுள்ள வகையிலும் இருப்பதைக் காட்டலாம்.

  ✓ ஆனால் இரண்டாவது கையுறைக்குள் கை இல்லாதபடியால், அது தொய்ந்துபோய் மடிந்திருக்கிறது.

  இயேசுகிறிஸ்து பரிசுத்த ஆவியானவரின் மூலமாக நமக்குள் ஜீவிக்கும்போது மட்டுமே நாம் கிறிஸ்தவர்களாக கிறிஸ்தவ வாழ்க்கை வாழ முடியும்.

- நம்மைக் குறித்துச் சித்தரிக்க நீங்கள் ஒரு துண்டு நிலக்கரியைப் பயன்படுத்தலாம்:

  ✓ நிலக்கரி கறுப்பு வண்ணத்திலும் இருக்கிறது. நமது இருதயமும் வாழ்க்கையும் பாவத்தினால் இருண்டுபோயிருக்கிறது.

  ✓ நிலக்கரி விலைமதிப்புள்ளது. நாமும் தேவனுக்கு விலைமதிப்புள்ளவர்களாக இருக்கிறோம்.

✓ மேலிருந்து ஆழமாக நிலக்கரியைத் தேடுகிறோம். *இயேசுகிறிஸ்து மேலிருந்து நம்மைத் தேடி இரட்சிக்கும்படி வந்தார்.*

✓ நிலக்கரி பயன்படுத்தப்படுவதற்கு முன்பாக அது கழுவப்படுகிறது. *தேவன் நம்மைப் பயன்படுத்துவதற்கு முன்பாக நாம் சுத்திகரிக்கப்பட வேண்டும்.*

✓ நிலக்கரி பயனுள்ளது - அது வெளிச்சத்தையும், சக்தியையும், இனிமையையும் (சாக்ரீன்) கொடுக்கிறது. *நாம் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும் போது அவரால் பயன்படுத்தப்படுவோம்.*

- *ஒளிவீசும்படி*
- *ஜீவிக்கும்படி*
- *இனிமையாக இருக்கும்படி*

➤ கிறிஸ்தவர்களாக இருக்கும் சிறுவர் சிறுமியரைக் குறிக்க, நீங்கள் ஒரு பென்சிலை பயன்படுத்தலாம்.

✓ பென்சில்கள் செய்யப்படுகின்றன, அவை தானாக வளருவதில்லை. *நீங்கள் ஒரு பென்சில் மரத்தைப் பார்த்திருக்கிறீர்களா? தேவனால் மட்டுமே நம்மை இரட்சித்து நம்மை உருவாக்க முடியும்.*

✓ பென்சில்களில் புதிய கிராபைட் வைக்கப்படுகிறது. *இப்படியேதான் தேவன் நம்மை இரட்சிக்கிறார். அவர் நமக்குள் புதிய இருதயத்தை வைக்கிறார்.*

✓ பென்சில்கள் ஒரு நோக்கத்துக்காகத் தயாரிக்கப்படுகின்றன - எழுத. *தேவன் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு பணியை வைத்திருக்கிறார்.*

✓ பென்சிலால் தானாக எதுவும் செய்யமுடியாது. *நம்மாலும் செய்ய முடியாது.*

✓ வெளிப்புறத்தில் இருக்கும் வண்ணத்தில் ஒன்றுமில்லை. *உள்ளேயிருக்கும் இருதயமே முக்கியமானது.*

✓ பென்சிலைப் பயன்படுத்த வேண்டுமானால், அதைக் கூர்மையாக்கி, ஆயத்தப்படுத்த வேண்டும். *நாம் வேதவாசிப்பு மற்றும் ஜெபத்தின் மூலமாக ஆயத்தப்படுத்தப்பட வேண்டும்.*

பாடத்தை விளக்கப் பொருட்களைப் பயன்படுத்தும்போதும், மற்ற பட உபகரணங்களைப் பயன்படுத்தும்போதும், அவை வெறும் உபகரணங்களே என்பதை மறந்துவிடக்கூடாது. அவை உங்கள் போதனைக்கு மையமாகவோ அல்லது போதனையை மீறுவதாகவோ ஆகிவிடக்கூடாது. பிள்ளைகள் பட உபகரணங்களில் அதிகமான ஆர்வம்கொண்டு, அவை எதைச் சித்தரிக்கின்றன என்பதை மறந்துவிடும் அபாயம் உண்டு. இதை நாம் தவிர்க்க வேண்டும்.

மற்ற பாட உபகரணங்கள்

நீங்கள் போதிப்பதற்கு உதவியாக வேறு பட உபகரணங்களையும்கூடப் பயன் படுத்தலாம்:

- வேதவசனங்களைப் போதிக்கும்போது கரும்பலகையோ அல்லது வெண்பல கையோ உதவியாக இருக்கும்.
- சில நாடுகளில், சில சூழல்களில் வீடியோக்கள் அல்லது திரைப்படங்கள் அல்லது சிலைடுகளைக் காட்டலாம்.
- போஸ்டர்களும் உருமாதிரிகளும்கூட சில வேளைகளில் உதவியாக இருக்கும்.

அனைத்தையும் விடச் சிறப்பான பட உபகரணம்

மிகச் சிறந்த பட உபகரணம் எது என்று உங்களுக்குத் தெரியுமா? நீங்களே! பிள்ளைகளுக்கு நீங்கள் பட உபகரணமாக இருக்கிறீர்கள். எல்லாவற்றையும் விட நீங்களே சிறந்த பட உபகரணமாக இருக்கிறீர்கள்.

- உங்கள் தோற்றத்தில். நீங்கள் எப்படி உடையணிகிறீர்கள் என்பதில் கவன மாக இருக்க வேண்டும். சுத்தமாக இருப்பது அவசியம்.
- உங்கள் போதனையில். நீங்கள் துடிப்போடும் ஈடுபாட்டோடும் மந்த நிலை ஏற்பட்டுவிடாமல் போதிக்க வேண்டும்.
- உங்கள் வாழ்க்கையில். எந்த வேளையிலும் நீங்கள் பிள்ளைகளுக்குச் சிறந்த சாட்சியாக இருக்க வேண்டும்.
- உங்கள் மனோபாவத்தில்:
  - ✓ எப்போதும் சரியான நேரத்தில் வர வேண்டும்.
  - ✓ எப்போதும் ஆர்வத்தோடிருக்க வேண்டும்.
  - ✓ எப்போதும் அணுகக்கூடிய வகையில் இருக்க வேண்டும்.
  - ✓ எப்போதும் தன்வயப்படுத்தக்கூடியவராக, கரிசனைகொண்டவராக, கவ ரக்கூடியவராக இருக்க வேண்டும்.

பல பிள்ளைகளுக்கு நீங்களே அவர்கள் கண்டு வாசிக்கும் ஒரே வேதாகமமாக இருக்கிறீர்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்!

பட உபகரணங்களை ஆயத்தம்செய்தல்

நீங்கள் விலைக்கு வாங்கும் பட உபகரணங்களுக்காக அதிகமாக ஆயத்தம் செய்ய வேண்டியிருக்காது. விரைவிலேயே அவைகளை ஆயத்தம்செய்துவிட லாம். பிளான்னல் படங்களை வெட்டியெடுக்க வேண்டும். "வேதாகமம்" மற்றும் "ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து" என்ற பாடத் தொடர்களிலுள்ள படங்கள் பயன் படுத்துவதற்கு ஆயத்தமாக இருக்கின்றன. நீங்கள் உங்கள் பாடத்தைத் தயா ரித்து அவைகளை எவ்வாறு பயன்படுத்துவது என்று பயிற்சி செய்தால் போதும். நீங்களாகவே சொந்தமாகப் பட உபகரணங்களைத் தயாரிப்பீர்களானால், வேத வசனத்தையோ அல்லது பாடலையோ சித்தரிப்பதற்கு வார்த்தைகளை எழுதி

வைப்பீர்களானால், சில வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

- உங்கள் குழுவிலுள்ள அனைத்துப் பிள்ளைகளும் வாசிக்கக் கூடிய வகையில் எழுத்துக்கள் பெரிதாக இருக்க வேண்டும்.
- தொழில்ரீதியாக அதிக ரம்மியமாக எழுதப்பட வேண்டுமென்பதில்லை. தெளிவாக எழுதினால் போதும்.
- அதிகமான வார்த்தைகளைப் பயன்படுத்தாதீர்கள். வார்த்தைகளை நெருக்கமாக எழுதாதீர்கள்.
- நீங்கள் பயன்படுத்தும் பட உபகரணங்களைச் சரியான வரிசையில் அடுக்கி வைத்திருங்கள். அவை வளைந்துபோகாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

ஆனாலும், நீங்கள் வாங்குகிற அல்லது பெறுகிற பட உபகரணங்களையும் எப்படிப் பயன்படுத்துவது என்பதில் நீங்கள் பயிற்சி பெற வேண்டும்:

- பட அட்டைகளை எப்படிப் பயன்படுத்துவது என்பதில் பயிற்சி பெற வேண்டும்
  - ✓ பிள்ளைகள் பார்க்கும்படி அவைகளை உயர்த்திப் பிடிக்க வேண்டும்.
  - ✓ மிக எளிதாக ஒன்றைவிட்டு மற்றொன்றுக்கு மாறுவது எப்படி என்பதில் பயிற்சி பெறுங்கள்.
  - ✓ ஒரே பட அட்டையை அதிகமான நேரத்துக்குக் காட்டிக்கொண்டிராதேயுங்கள்.
  - ✓ அதே வேளையில் அவசர அவசரமாகப் பட அட்டைகளை மாற்றிக் கொண்டும் இராதேயுங்கள்.
- உங்கள் பிளான்னல் உருவங்களை அட்டையில் பொருத்துவதிலும் பயிற்சி பெற வேண்டும் (264, 265 ஆம் பக்கங்களிலுள்ள ஆலோசனைகளைப் பாருங்கள்).

இறுதிப் பரீட்சை

பட உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கு முன்பாக உங்களுக்கு நீங்களே இந்தக் கேள்விகளைக் கேட்டுக்கொள்ளுங்கள்:

- இது பிள்ளைகள் சத்தியத்தை இன்னும் நன்றாகப் புரிந்துகொள்ள உதவுமா அல்லது அவர்களைக் குழப்பிவிடுமா?
- இது மாணவர்களின் வயதுவரம்புக்குப் பொருத்தமாக இருக்கிறதா?
- இது (தொழில்ரீதியாகத் தயாரிக்கப்பட்டதாக இராவிட்டாலும்) சுத்தமாகவும் கவர்ச்சிகரமாகவும் இருக்கிறதா?
- எழுத்துப் பிழைகள் ஏதேனும் இருக்கின்றனவா?
- தெளிவாகக் காணக்கூடிய வகையில் இருக்கிறதா?
- எளிமையானதாக, அதிக விவரங்களைக் கொண்டிராமல் இருக்கிறதா?

அத்தியாயம் 32
கட்டுப்பாடு அவசியம்
எனது கூட்டத்தில் நல்லொழுங்கைக் காப்பது எப்படி ?

அத்தியாயத்தின் சுருக்கம்

(உங்கள் கூட்டத்தில் நல்லொழுங்கைக் காத்துக்கொள்ள வேண்டும்)

- **ஒழுக்கத்தின் முக்கியத்துவம்**
- **ஒழுக்கமின்மைக்கான முக்கிய காரணங்கள்**
- **ஒழுக்கத்துக்கான வழிமுறைகள்**
- **ஒழுக்கக் குறைவுப் பிரச்சினைகளுக்கு முக்கிய தீர்வுகள்**
- **சில எச்சரிப்புகள்**
- **பிரச்சினை ஏற்படும்போது மறுபடியும் ஒழுங்கைக் கொண்டுவருவது எப்படி**
- **பிரச்சினை ஏற்படுத்தும் பிள்ளையோடு இடைபடுவது எப்படி**

பல சிறுவர் ஊழியர்கள் எதிர்நோக்கும் பெரிய பிரச்சினைகளில் ஒன்று ஒழுக்க மின்மையாகும். சிலருக்கு அது மிகப் பெரிய பிரச்சினையாகவும், சிறுவர் ஊழி யத்தில் மிகப் பெரிய இடையூறாகவும் காணப்படுகிறது. எனவே இந்தப் பிரச்சி னையைக் குறித்து நாம் விவரமாகப் பார்க்க வேண்டும். அதற்குத் தீர்வுகாண முயல வேண்டும். உங்கள் வகுப்பு வேளையில் ஒழுக்கத்தைக் காத்துக்கொள்வது எப்படி?

ஒழுக்கத்தின் முக்கியத்துவம்

பல காரணங்களுக்காகப் போதிக்கும் சூழலில் நல்லொழுக்கம் அத்தியாவசிய மானதாகும்.

- அது பிள்ளைகளுக்குப் போதிக்கவும், அனைத்துப் பிள்ளைகளும் செவி கொடுக்கவும் உதவுகிறது. பிரச்சினை கொடுக்கும் ஒரு பிள்ளை கவனம் செலுத் தும் 29 பிள்ளைகளுக்கு இடையூறாகிவிடுகிறது. பிள்ளைகளுக்குப் பாடத்தை அறிவுறுத்த நீங்கள் விரும்பினால் ஒழுக்கம் அவசியமாகும். சில பிள்ளை கள் ஒழுக்கமில்லாமல் நடந்துகொண்டாலும் உங்கள் போதனை பாதிக்கப் படும். ஒழுக்கமின்மையால் சிறுவர் கூட்டங்களுக்கு அதிகமான பாதிப்பு ஏற்பட்டுவிடும்.
- அது பிள்ளைகளுக்குப் பயிற்சியளித்து, வாழ்க்கை ஒழுங்குக்காக - கிறிஸ் தவ வாழ்க்கைக்காக அவர்களை ஆயத்தப்படுத்துகிறது.
- சிறுவர்கள் தங்கள் இருதயங்களில் நல்லொழுக்கத்தை விரும்பிப் போற்று கிறார்கள்.
- கெட்ட நடத்தை ஆண்டவரை அவமதிக்கிறது.

ஒழுக்கமின்மைக்கு முக்கிய காரணங்கள்

சில பிள்ளைகள் கவனிக்க முடியாதவர்களாகவும், அமைதியில்லாமலும், ஒழுக்க மில்லாமலும் இருப்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன:

- ஆசிரியரின் பிரச்சினைகளே பெரும்பாலும் ஒழுக்கமின்மைக்கு முக்கிய காரணமாக இருக்கலாம். எடுத்துக்காட்டாக:
  - ✓ மோசமான ஆயத்தம்
  - ✓ முன்னரே ஜெபிப்பதில் குறைவுபடுதல்
  - ✓ போதிப்பதில் ஆர்வமும் கற்பனைத்திறனும் குறைவுபடுதல்
  - ✓ கவரக்கூடியவகையிலும் ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும் போதிக் காமலிருத்தல்.
- செயல்பூர்வமான பிரச்சினைகளும் ஒழுக்கமின்மையைத் தூண்டக்கூடும்.

  இதில் அறையைச் சரியாக ஒழுங்குபடுத்தாமல் இருத்தல், இருக்கைகள் சரி யில்லாமலிருத்தல், போதுமான காற்று வசதி இல்லாமலிருத்தல், வெப்ப நிலை அசௌகரியத்தைக் கொடுத்தல் இவைகளைக், குறிப்பிடலாம்.
- பில்ளைகளின் பிரச்சினைகளும் ஒழுக்கமின்மைக்கு முக்கிய காரணமாக இருக் கிறது.

  பிள்ளைகளின் தேவைகளை நீங்கள் புரிந்துகொள்ள முயல வேண்டும். அவர் களின் மோசமான நடத்தைக்கு இவைகளே காரணமாக இருக்கும் என்பதை நீங்கள் உணர வேண்டும்:
  - ✓ மோசமான குடும்பப் பின்னணி அல்லது குடும்பத்தில் நெருக்கங்கள்.
  - ✓ ஆளுமை அல்லது மனோரீதியான பிரச்சினைகள். எ-டு. இவர்கள் படிக் கும் திறனில் குறைவுபட்டிருக்கலாம், அல்லது சரியாக வாசிக்க முடியாத வர்களாக இருக்கலாம், அல்லது உணர்வுரீதியாகப் பாதிக்கப்பட்டிருக்க லாம்.
  - ✓ சரீரப்பிரகாரமான பிரச்சினைகள். எ-டு. பாவத்தைக் குறித்து உணர்த்தப் படுதல் அல்லது சாத்தானின் தாக்கம்.
  - ✓ வகுப்பிலுள்ள மாணவர்களின் வயது வரம்பில் அதிகமான வித்தியாசம் காணப்படுதல். வயதுவரம்பில் அதிக வேறுபாடு காணப்படுமானால் போதிப்பது கடினமாகும். நீங்கள் ஒரு குழுவினரை கருத்தில் கொண்டு போதிக்கும் போது மற்ற வயதினரின் கவனத்தை இழந்துவிட நேரிடும்.

முன்னெப்போதையும்விட இப்போது ஒழுக்கமின்மை பெரிய பிரச்சினையாக இருக்கிறது. கடந்த தலைமுறையினரைப் போலல்லாமல் இன்றைய சிறுவர்களில் பலர் வீட்டிலும், பள்ளியிலும், சமுதாயத்திலும் ஒழுக்கத்தில் வழிநடத்தப்படுவ தில்லை.

ஒழுக்கப் பிரச்சினைகளுக்கு முக்கியமான தீர்வு

நாம் பார்த்தபடி நல்லொழுக்கம் முக்கியமாக ஆசிரியரையே சார்ந்திருக்கிறது. அவர் எப்படிப் போதிக்கிறார், எவ்வாறு தனது அதிகாரத்தைச் செயல்படுத்துகிறார் என்பதை அது சார்ந்திருக்கிறது.

கீழ்க்கண்ட காரியங்களைப் புரிந்துகொண்டு செயல்படுத்தினால், பெரும்பாலான ஒழுக்கப் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம்:

- நீங்கள் அதிக நேரத்தை ஜெபத்தில் கழிக்க வேண்டும். இந்தப் பிரச்சினைகள் நம்மை முழங்காலில் வீழ்த்த வேண்டும்.
- நீங்கள் அதிக நேரத்தை ஆயத்தத்தில் செலவழிக்க வேண்டும். இது முற்றிலும் அத்தியாவசியமானதாகும். நீங்கள் சரியாகவும் முழுமையாகவும் ஆயத்தம் செய்யாவிட்டால், நீங்கள் பாடம் நடத்துவது பாதிக்கப்படும். அமைதியின்மையும் கவனக்குறைவும் ஏற்படும்.
- நீங்கள் போதிக்கும் முறை பிள்ளைகளைக் கவர்ந்து அவர்களுடைய ஆர்வத்தைத் தூண்ட வேண்டும்.
  - ✓ நீங்கள் துடிப்பும் உற்சாகமுள்ளதுமான அணுகுமுறையை விருத்திசெய்துகொள்ள வேண்டும்.
  - ✓ உங்கள் செயல்திட்டம் ஆர்வத்தைத் தூண்டுவதாகவும் பல்வேறு வகைப்பட்டதாகவும் இருக்க வேண்டும்.
  - ✓ நீங்கள் கவனமாகத் திட்டமிட்டு, இடையில் மந்தநிலை ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.
  - ✓ ஒவ்வொரு பிள்ளையின்மீதும் நீங்கள் தனிப்பட்ட ஆர்வம் காட்ட வேண்டும்.

நீங்கள் சுவையாகவும் பொருத்தமாகவும் போதிப்பீர்களானால் பெரும்பாலான பிள்ளைகள் கவனிப்பார்கள், கூடுமானவரையில் நன்றாக நடந்துகொள்வார்கள். ஒழுக்கக் குறைவு ஏற்படும்போது பிள்ளைகள் கூச்சலிடுகிறார்கள், அமைதியிழக்கிறார்கள். அவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்குச் சுவாரசியமான எதுவும் இல்லாததே இதற்குக் காரணமாகும். கைகள் அசைகின்றன, கால்கள் அசைகின்றன, கண்கள் அசைகின்றன, நாவுகளும் அசைகின்றன! ஆனால் இந்த உறுப்புகள் அனைத்தும் தலையினால் கட்டுப்படுத்தப்படுகின்றன. தலைக்கு வேலைகொடுத்து அது அமைதியாக இருக்குமானால், மற்ற உறுப்புகளும் அமைதியாக இருக்கின்றன. எனவே பிள்ளைகள் பேசவோ அல்லது தவறாக நடக்கவோ முனையாதபடி அவர்களின் சிந்தை ஆர்வத்தோடு கவனிக்கும்படி செய்வோமானால் பல ஒழுக்கமின்மைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும்.

வருமுன் காப்பதே சிறந்ததாகும்! பிரச்சினைகள் வருவதற்கு முன்பே அவை வராமல் தடுக்க வேண்டும். பிரச்சினைகள் வரும்போது அவைகளைத் தீர்க்க முயலுவதைவிட, ஒழுக்கப் பிரச்சினைகள் வராதபடி உங்கள் கூட்டத்தையும் பாடத்தையும் ஆர்வமுள்ள வகையில் நடத்துவதே சிறப்பாகும்.

உங்கள் வகுப்பில் ஒழுக்கக் குறைவு காணப்படுமானால், உங்களுடைய போதனையில் ஏதாவது பலவீனமோ அல்லது பிரச்சினையோ இருக்கிறதா என்பதை கண்டுபிடிக்கும் வரையில், உங்களை நீங்களே ஆழமாக ஆராய்ந்து பாருங்கள். அல்லது இந்தப் பிரச்சினையைக் குறித்து உடன் ஊழியர் ஒருவரோடு விவாதியுங்கள். இந்தப் பலவீனங்களை வெளிப்படுத்தும்படி ஆண்டவரிடம் வேண்டிக் கொள்ளுங்கள். பிறகு அவைகளை மேற்கொள்ள அவருடைய உதவியை நாடுங்கள். விட்டுவிடாதீர்கள். அனைத்தும் சரியாகும் வரையில் தொடர்ந்து முயலுங்கள்.

நல்லொழுக்கத்துக்கான வழிமுறைகள்

உங்கள் சிறுவர் கூட்டங்களில் ஒழுக்கமின்மையைத் தவிர்த்து, ஒழுக்கத்தைக் காத்துக்கொள்ள பல வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்:

- நீங்கள் முன்கூட்டியே அங்கே இருக்க வேண்டும். நீங்கள் தாமதித்தால் துவக்கத்திலிருந்தே எல்லாம் தவறாகிவிடும்.
- ஒவ்வொரு பிள்ளை வரும்போதும் அவனை அன்போடு வரவேற்க வேண்டும்.
- பிள்ளைகள் சௌகரியமாக அமர்ந்திருக்கிறார்களா என்பதையும், காற்றோட்டம் சரியாக இருக்கிறதா என்பதையும் சரிபார்த்துக்கொள்ளுங்கள்.
- நீங்கள் விரும்பும் வகையில் கூட்டத்தைத் துவங்குங்கள். ஒவ்வொரு கூட்டத்தின் துவக்கத்திலேயே பிள்ளைகள் என்ன செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்கள் என்பதை அவர்களுக்குத் தெரிவியுங்கள்.
  - ✓ ஒழுங்கு விதிகளை ஏற்படுத்துங்கள். அதை மீறினால் என்ன நடக்கும் என்பதைப் பிள்ளைகள் அறிந்திருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக:
    - *"அனுமதியில்லாமல் பேசக் கூடாது".*
    - *"ஒவ்வொருவரும் அவரவருடைய இடத்தில் அமர்ந்திருக்க வேண்டும்."*
    - *"ஒவ்வொருவரும் கைகளையும் கால்களையும் வீணாக அசைக்கக்கூடாது."*

    ஒழுக்கம் என்பது ஒரு வித்தையல்ல. உங்கள் விதிகளைக் கூறி அவைகளைக் கண்டிப்பாகச் செயல்படுத்துங்கள். ஆயத்தமாக இருங்கள். பிள்ளைகள் சந்தோஷத்தோடு செவிகொடுக்க ஆயத்தமாக இருப்பார்கள்.
  - ✓ ஒழுக்கத்தை நிலைநிறுத்துவதில் மாறாமலும் நியாயமாகவும் நடந்துகொள்ளுங்கள். எவராவது விதியை மீறினால் என்ன செய்வீர்கள் என்று முன்னரே எச்சரிப்புக்கொடுங்கள்.
  - ✓ உறுதியான குரலில் பேசுங்கள். உங்கள் போதனையிலும் அறிவுறுத்தலிலும் திட்டவட்டமாக இருங்கள்.
- எப்போதுமே பிரச்சினையை எதிர்பார்க்கிறவராகவும், பிள்ளைகளிடம் கோபப்படுகிறவராகவும் இராதேயுங்கள். அதே வேளையில் அளவுக்கு மீறியும் இடம்

கொடுத்துவிடாதீர்கள். பிள்ளைகள் உங்கள்மீதான மரியாதையை இழந்து விடக்கூடும். இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையே சரியானதாகும் - உறுதியாக ஆனால் தயவோடும் அன்போடும் இருங்கள். கண்டிப்பாக ஆனால் நட்புறவோடு இருங்கள். அனுதாபத்தோடு ஆனால் புத்திசாலித்தன மாக நடந்துகொள்ளுங்கள்.

- பிள்ளைகள் நன்றாக நடந்துகொள்வார்கள் என்று எதிர்பாருங்கள். அவர் களைக் குறித்த உங்கள் மனோபாவத்தை அவர்களால் உணர முடியும். நீங்கள் எவ்வளவு தூரம் அவர்களை விருப்பப்படி நடக்க அனுமதிப்பீர்கள் என்பதை அவர்கள் சோதித்துப் பார்ப்பார்கள். அதிக தூரம் செல்ல விட்டுவிடாதீர்கள்!
- உங்கள் கண்களால் அவர்களைக் கட்டுப்படுத்துங்கள். குறிப்பாக, பிரச்சினை கொடுக்கும் பிள்ளைகளைக் கண்காணித்துக் கொண்டிருங்கள்.
- சத்தம்போட்டு அமைதியை ஏற்படுத்த முயலாதீர்கள். பிள்ளைகளும் உங்க ளோடு போட்டி போட்டுக்கொண்டு கத்துவார்கள். ஆர்வத்தைத் தூண்டுங் கள்! பிள்ளைகளுடைய ஆர்வத்தை நீங்கள் தூண்டினாலொழிய அவர்கள் அதிக நேரம் அமைதியாக அமர்ந்திருக்க மாட்டார்கள். அவர்கள் எதிலா வது ஈடுபடும்படி செய்யுங்கள்.
- மதிப்பெண் கொடுக்கும் வழக்கம் இருந்தால், நன்னடத்தைக்கும் மதிப்பெண் கொடுங்கள்.
- "அமைதியான இருக்கை" முறையைக் கையாளுங்கள். ஒவ்வொரு கூட்டத் திலும் வெவ்வேறான இருக்கையை அமைதியான இருக்கையாகத் தெரிந்து கொள்ள வேண்டும். கூட்டம் முடியும் வரையில் பிள்ளைகளுக்கு அது தெரி யக்கூடாது. அந்தக் குறிப்பிட்ட இருக்கையில் அமரும் மாணவன் கூட்டத்தில் அமைதியாக இருப்பானானால், அவனுக்குப் பரிசு கொடுக்கலாம்.
- அச்சுறுத்தலைக் குறித்துக் கவனமாக இருங்கள். எதையாவது செய்யப் போவ தாக அச்சுறுத்தினால் எப்போதும் அதைக் கண்டிப்பாகச் செய்யுங்கள். எனவே எதற்காக அச்சுறுத்துகிறீர்கள் என்பதில் கவனமாக இருங்கள்.
- ஒருபோதும் எவரையும் நாவினாலோ அல்லது கைகளினாலோ தாக்காதிருங் கள். வசை பேசுவதும் கூடாது.
- ஒவ்வொரு பிள்ளையையும் தனிப்பட்ட தேவைகளையும் அறிந்துகொள்ள முயலுங்கள். அவர்களின் குடும்பப் பின்னணியைக் குறித்து அறிந்திருப் பதும் உதவியாக இருக்கும்.
- குழு பெரியதாக இருக்குமானால் ஒழுக்கமின்மைக்கு வாய்ப்புகள் அதிக மாகின்றன. நீங்கள் கொடுக்கும் போதனையும் அறிவுறுத்தலும் அனைவரு டைய காதிலும் விழ வேண்டும். உங்கள் கையசைவுகளை அனைவரும் பார்க்க வேண்டும். எடுத்துக்காட்டாக, பாடல்களைக் கற்றுக்கொடுக்கும்போது உங்கள் அசைவுகள் மிகைப்படுத்தப்பட்டிருப்பது நலமாகும்.

- கூட்டத்தில் உதவிசெய்யும் பெரியவர்கள் ஆசிரியரோடு சேர்ந்து ஒழுக்கத்தைக் காத்துக்கொள்ளும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். மோசமாக நடக்கும் பிள்ளையின் அருகில் அவர்கள் அமர்ந்துகொள்ளலாம். அல்லது குறும்புசெய்யும் இரண்டு பிள்ளைகளுக்கு நடுவே அமர்ந்துகொள்ளலாம்.
- சின்னஞ் சிறு பிள்ளைகள் அதிகமான அளவில் இருப்பார்களானால், சிறிய பல்சுவை கொண்ட கூட்டத்தை நடத்துங்கள். அவர்களும் கலந்துகொள்ள அதிக வாய்ப்புகளைக் கொடுங்கள். அவர்கள் குறுகிய காலமே ஒன்றில் கவனம் செலுத்த முடியும் என்கிறபடியால், பல சிறுசிறு அம்சங்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.
- உங்கள் கூட்டத்தில் இப்படிப்பட்ட சில சிறு பிள்ளைகள் இருப்பார்களானால், அவர்களால் அதிக நேரம் கவனம் செலுத்த முடியாது என்கிறபடியாலும் அவர்கள் மிக விரைவிலேயே அமைதியிழந்துபோவார்கள் என்கிறபடியாலும் அவர்களுக்காகத் தனிக் கூட்டத்தை நடத்துவதே சிறப்பானது. உங்கள் முக்கிய கூட்டத்துக்கு முன்னால் இந்தக் கூட்டத்தை நடத்தலாம். அல்லது, போதுமான ஊழியர்கள் இருப்பார்களானால், முக்கிய கூட்டம் நடத்தப்படும் அதே வேளையில் வேறொரு அறையில் இவர்களுக்காகக் கூட்டம் நடத்தப்படலாம். இல்லாவிட்டால், இந்த அமைதியிழந்துபோகும் சிறுவர்களைக் கவனிக்க ஊழியர்களை அமர்த்துங்கள். போதுமான தாள், பென்சில் இவைகளைக் கொடுத்து அவர்கள் ஈடுபாடு கொள்ளுமாறு செய்யுங்கள்.

சில எச்சரிப்புகள்

- கூட்டம் தொடர்ந்து எப்படி நடக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்களோ அதே வழியில் கூட்டத்தைத் துவங்குங்கள். துவக்கத்தில் சாதாரணமாக இருந்துவிட்டு, பிறகு பிள்ளைகளைக் கட்டுப்படுத்துவது கடினமாகும்.
- உங்கள் போதிக்கும் திட்டத்தின் நடுவே அதிகமான இடைவெளி காணப்படாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.
- கேள்வி வடிவில் கட்டளைகளைக் கொடுக்காதீர்கள். "இப்போது நாம் ஜெபிப்போமா?" என்று கேட்கும்போது , "சரி" என்ற பதில் வராமல் "வேண்டாம்" என்று பதில் வந்துவிட்டால் அது பிரச்சினையாகிவிடும்.
- சில பிள்ளைகள் மட்டுமே அதிகமாகப் பங்கெடுக்காமல் பார்த்துக்கொள்ளுங்கள். இது மற்றவர்களை ஆர்வமிழந்துபோகச் செய்துவிடும்.
- நீண்ட நேரம் ஜெபம் செய்யாதீர்கள். நீண்ட நேரம் உங்கள் கண்களை மூடிக்கொண்டிராதீர்கள்!
- உங்கள் புதிர் வேளையைக் (Quiz Time) குறித்து எச்சரிக்கையாயிருங்கள். ஏதேனும் ஒரு குழு வெற்றி பெற்றிருந்தால், புதிர் முடியும்போது கிளர்ச்சி அதிகமாக இருக்கும். உடனடியாக அடுத்த அம்சத்துக்குச் சென்றுவிடுங்கள்.

பிரச்சினை ஏற்படும்போது மறுபடியுமாக ஒழுங்கைக்கொண்டுவருவது எப்படி?

- தேவனுடைய ஞானத்துக்காக உடனடி ஜெபத்தை ஏறெடுங்கள்.
- நீங்கள் அமைதியாக இருங்கள். எரிச்சல் படாதீர்கள்.
- தீவிரத்தை வெளிப்படுத்த உங்கள் குரலின் தொனியைப் பயன்படுத்துங்கள். சில வேளையில் கிசுகிசுப்பான வகையில் உங்கள் குரலைத் தாழ்த்துவதும் பயன்தரும்.
- மற்ற பிள்ளைகளின் கவனத்தைத் திருப்பாமல் தவறு செய்யும் பிள்ளையைக் கண்காணித்துக் கொண்டிருங்கள். உங்கள் நாவைவிட சில வேளைகளில் உறுதியான பார்வை அதிகப் பயனைத் தரும்.
- தேவைப்படும்போது எச்சரிப்புகளையோ அல்லது அறிவுறுத்தல்களையோ கொடுங்கள்.
- கவனத்தைத் திருப்புவதற்காக உங்கள் செயல்திட்டத்தின் அடுத்த அம்சத்தைப் பயன்படுத்துங்கள். அல்லது பிள்ளைகளை அமைதிப்படுத்தும்படி ஒரு அமைதியான கோரஸ் பாடலைப் பாடும்படி செய்யுங்கள்.
- தொந்தரவு செய்யும் பிள்ளையை உடன் ஊழியர் வெளியே அழைத்துச் சென்று தனிப்பட்ட முறையில் பிள்ளையோடு பேசும்படி செய்யுங்கள்.

பிரச்சினைக்கொடுக்கும் பிள்ளையோடு இடைபடுதல்

மோசமாக நடந்துகொள்ளும் பிள்ளையைக் கூட்டத்தை விட்டு வெளியே அனுப்பி விட வேண்டுமா? அவன் ஒழுங்காக நடந்துகொள்ளும் வரையில் கூட்டத்துக்கு வரக்கூடாது என்று சொல்லிவிட வேண்டுமா? என்று கேள்விகள் அடிக்கடி என்னிடம் கேட்கப்படுகின்றன.

ஆசிரியர் சுவாரசியமாகப் போதிக்கும்போது பெரும்பாலான பிள்ளைகள் செவி கொடுப்பார்கள். ஒழுங்காக நடந்துகொள்வார்கள். ஆனால் சில பிள்ளைகளால் அமைதியாகச் செவிகொடுக்கவோ அல்லது அமைதியாக அமர்ந்திருக்கவோ முடியாது. இவர்கள் தொடர்ந்து பிரச்சினை கொடுத்துக் கொண்டிருப்பார்கள். உங்கள் கூட்டத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்திவிடுவார்கள். இப்படிப்பட்டவர்கள் ஒரு சிலரே இருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். ஏற்கெனவே நாம் பார்த்தபடி, குடும்பப் பிரச்சினைகளோ, குடும்பப் பின்னணியோ அல்லது மனோரீதியான பிரச்சினைகளோ அல்லது மற்றவர்களின் கவனத்தைக் கவர வேண்டுமென்ற ஆசையோ அவர்களின் இந்த நடத்தைக்குக் காரணமாக இருக்கலாம்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் முதலில் நீங்கள் பல படிகளைப் பின்பற்ற வேண்டும்:

- அந்தப் பிள்ளைக்காகத் தனிப்பட்ட முறையில் அடிக்கடி ஜெபியுங்கள். மற்றவர்களையும் ஜெபிக்கும்படி கேட்டுக்கொள்ளுங்கள்.
- கூட்டத்தின்போது ஒரு பெரியவர் அவனுக்கு அருகில் அமர்ந்திருக்குமாறு செய்யுங்கள்.

- தனிப்பட்ட முறையில் அவனோடு பேசி, அவன் செய்வது எவ்வளவு தவறு என்பதை அவனுக்கு உணர்த்துங்கள். பிள்ளை மற்றவர்களின் கவனத்தின் மையமாக இராதபோது உங்கள் பேச்சுக்கும் வழிநடத்துதலுக்கும் கட்டுப் படலாம்.
- உங்களுக்கு உதவிசெய்யும்படி அவனுக்குப் பொறுப்பைக் கொடுங்கள்! அவன் வருகைப் பதிவேட்டில் மாணவர்களின் வருகையைக் குறிப்பிடலாம். பிள்ளை களை அவரவர் இருக்கையில் அமரும்படி செய்யலாம். அல்லது ஒழுங்காக நடந்துகொள்ளாத பிள்ளைகளைக் கவனிக்கும்படி செய்யலாம்!
- அவனுடைய பெற்றோருடன் பேசி நடப்பவைகளை அவர்களிடம் தெரிவி யுங்கள். அவர்களால் உதவிசெய்யக் கூடும்.

அனைத்தையும் முயற்சிசெய்து பார்த்தும், நிலைமையைச் சரிசெய்ய முடியா விட்டால், இறுதியாக அவனைக் கூப்பிட்டு, அன்போடு ஆனால் உறுதியோடு, அவன் இனிமேல் வகுப்புக்கு வர வேண்டாம் என்று கூறிவிடுங்கள். ஆனால் அவன் ஒழுங்காக நடந்துகொள்வானானால் வகுப்புக்கு வரலாம் என்றும் கூறுங் கள். அவனுடைய மோசமான நடத்தையினால் வகுப்பிலுள்ள மற்றப் பிள்ளைகள் பெறக் கூடிய போதனை பாதிக்கப்படுகிறது என்பதை அவனுக்கு உணர்த்துங் கள். ஆனால் அவன் திரும்பி வந்து ஒழுக்கத்தோடு நடக்க வேண்டும் என்றே எதிர்பார்க்கிறீர்கள் என்பதை அவனிடமும் அவனுடைய பெற்றோரோடு பேச வாய்ப்புக் கிடைத்தால் அவர்களிடமும் சொல்ல மறக்காதீர்கள்.

அத்தியாயம் 33

அவர்களைக் கூட்டிவாருங்கள்!

எனது கூட்டத்தில் வருகையை அதிகரிப்பது எப்படி?

அத்தியாயத்தின் சுருக்கம்

(உங்கள் கூட்டத்துக்கு வரும் பிள்ளைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்வதே உங்கள் நோக்கமாகும்.)

- இப்போதுள்ள சிறுவர்கள் தொடர்ந்து வரும்படி ஊக்குவியுங்கள்
- இப்போதுள்ள சிறுவர்கள் ஒழுங்காக வரும்படி ஊக்குவியுங்கள்
- புதிய சிறுவர்களை உங்கள் கூட்டத்தில் ஈடுபடுத்துங்கள்
- ஒரு பிள்ளையும்கூட முக்கியமானவனாவான்

இப்போது நமது கூட்டத்துக்கு வந்துகொண்டிருக்கும் பிள்ளைகளைத் தொடர்ந்து வரும்படி செய்வது எப்படி என்பதையும், அவர்களை ஒழுங்காக வரும்படி செய் வது எப்படி என்பதையும் முதலில் இந்த அத்தியாயத்தில் பார்க்கப் போகிறோம்.

இரண்டாவதாக, இன்னுமதிகமான பிள்ளைகள் நமது கூட்டத்துக்கு ஒழுங்காக வரும்படி வருகையை அதிகரிப்பது எப்படி என்று பார்க்கப் போகிறோம்.

பிள்ளைகள் வரும்படி ஊக்குவியுங்கள்

முதலாவதாக, ஏன் சில பிள்ளைகள் நமது கூட்டத்துக்கு வருவதை நிறுத்திக் கொள்கிறார்கள் என்பதைக் கண்டறிந்து, அந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும்.

- கூட்டம் சுவாரசியமில்லாமல் இருப்பதினாலோ அல்லது போதனை பிள்ளையின் அன்றாட வாழ்க்கைக்குப் பொருத்தமில்லாமல் இருப்பதினாலோ பிள்ளைகள் வராமல் நிறுத்திவிடுகிறார்கள்.

  கூட்டத்தைக் கவர்ச்சிகரமாகவும், ஆர்வமுள்ளதாகவும் மாற்றுவதே இதற்குரிய தீர்வாகும். ஒவ்வொரு பிள்ளையின் வாழ்க்கை மற்றும் பிரச்சினைகளுக்கு ஏற்றவாறு போதனை இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

- ஆசிரியரின் தகுதிக்குறைவினாலும், தோல்விகளாலும் சிலர் வருவதை நிறுத்திக்கொள்கிறார்கள்.
  - ✓ அவருடைய ஆயத்தமின்மை தெளிவாகத் தெரிகிறது
  - ✓ அவர் திறமையில் குறைவுபடுதல், போதுமான நல்ல போதிக்கும் உபகரணங்கள் இல்லாமலிருத்தல்
  - ✓ வகுப்பைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்தத் தவறுதல் (இது குழப்பத்துக்கு வழிநடத்தும்)
  - ✓ அவர் அன்பிலும் ஆர்வத்திலும் குறைவுபடுதல். வகுப்பில் அன்பையும் பாராட்டுதலையும் காட்டத் தவறுதல். (தன்னுடைய ஆசிரியருக்கு நகைச்சுவை உணர்வே இல்லாதபடியால் தான் வகுப்புக்குப் போவதை நிறுத்தி விட்டதாக ஒரு பையன் என்னிடம் கூறினான்!)

ஆசிரியராகிய நீங்கள் பிரச்சினை உங்களிடமிருக்கிறதா என்பதைக் கண்டறியும்படி உங்களையும் உங்கள் போதனையையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். வெற்றிக்கு முதல் படி தோல்வியை ஒப்புக்கொள்வதாகும்! எனவே ஒரு பலவீனத்தை நீங்கள் காணும்போது அதை மேற்கொள்ள வேண்டும். (இந்தப் புத்தகம் இதில் உங்களுக்கு உதவும் என்று நான் நம்புகிறேன்)

பிள்ளைகளை உங்கள் கூட்டத்துக்குத் தொடர்ந்து வரும்படி செய்வதற்கான சிறப்பான வழி, கூட்டத்தை ஆர்வமுள்ளதாகவும், கவரக்கூடியதாகவும், பொருத்தமானதாகவும் ஆக்குவதாகும். அப்போது பிள்ளைகள் கூட்டத்துக்கு வரத் தவறக்கூடாது என்று நினைப்பார்கள். இதற்காக நீங்கள் கேளிக்கைக்கு அதிக இடம் கொடுக்க வேண்டும் என்றும், கூட்டத்தை சர்க்கஸ் போல ஆக்க வேண்டும் என்றும் அர்த்தமல்ல! இவைகளை நீங்கள் செய்ய வேண்டும்:

- ✓ *நன்றாக ஆயத்தம் செய்ய வேண்டும்*
- ✓ *கூட்டத்தை ஆர்வமுள்ளதாக்க வேண்டும்*

- ✓ பட உபகரணங்களைப் பயன்படுத்த வேண்டும்
- ✓ எப்போதும் பிள்ளைகளின் தேவைகளைச் சந்திக்க முயல வேண்டும்
- ✓ நீங்கள் அன்போடும், ஆர்வத்தோடும், போதிப்பதில் மெய்யாகவே கவர்ச்சிகரமாகவும் இருக்க வேண்டும்.
- ✓ நீங்கள் கடுமையாக நடந்துகொள்ளாமல் உறுதியாக இருந்து, கூட்டத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்.

➤ தங்கள் பெற்றோரின் அழுத்தத்தின் காரணமாகவும், அவர்கள் தடுப்பதின் காரணமாகவும் சிலர் கூட்டத்துக்கு வருவதை நிறுத்திக்கொள்கிறார்கள். இது நேரடியாக கட்டளையாகவும் இருக்கலாம் ("கூட்டத்துக்குப் போகாதே") அல்லது கூட்டம் நடைபெறும் நேரத்தில் பிள்ளை அங்கே போக முடியாதபடி பெற்றோர் வேறு காரியங்களைச் செய்யும்படி செய்யலாம்.

இந்தப் பிரச்சினைக்கான தீர்வு பெற்றோருடன் நல்ல தொடர்பை வளர்த்துக் கொள்வதாகும். ஒழுங்காக அவர்களைச் சந்தியுங்கள். இந்தக் கடினமான நாட்களில் பிள்ளை போதை மருந்து, வன்முறை போன்ற பல பிரச்சினைகளை எதிர்நோக்கும்போது நீங்கள் அவர்களுக்கு உதவும்படியாகப் போதனைகள் கொடுக்கிறீர்கள் என்பதை அவர்கள் அறியும்படி செய்யுங்கள். பிள்ளைகள் வகுப்புக்கு வர அனுமதிக்குமாறும் வகுப்பு நடைபெறும் நேரம் தவிர மற்ற நேரத்தில் பிற வேலைகளை வைத்துக்கொள்ளும்படியும் அவர்களை ஊக்குவியுங்கள்.

நீங்கள் கூட்டத்தை நடத்தும் நாளும் நேரமும் பிள்ளைகளுக்கு (பெற்றோருக்கும்கூட) வசதியான நேரமா என்பதை நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும்.

பெற்றோருடன் ஒழுங்காக நல்ல தொடர்பு வைத்திருப்பது எப்போதுமே முக்கியமானதாகும். பெற்றோர் கூட்டத்துக்கு வந்து, கூட்டம் எப்படி நடக்கிறது என்பதைக் காணும்படி செய்வது உங்களுக்கும் பிள்ளைகளுக்கும் உதவியாக இருக்கும். பெற்றோர் எல்லாரையும் குறிப்பாக அழைக்கக்கூடிய வகையில் கிறிஸ்மஸ், ஈஸ்டர் போன்ற வேளைகளில் சிறப்புக் கூட்டங்களையும் நடத்தலாம்.

ஒரு பிள்ளை கூட்டத்துக்கு வருவதை நிறுத்திவிடும்போது, அந்தப் பிள்ளையின் வீட்டுக்குச் சென்று, பிள்ளையையும் பெற்றோரையும் சந்தித்து, காரணத்தைக் கண்டறிவது முக்கியமான காரியமாகும்.

பிள்ளைகள் ஒழுங்காக வரும்படி ஊக்குவியுங்கள்

நீங்கள் பிள்ளைகள் உங்கள் கூட்டத்துக்கு வர வேண்டும் என்று மட்டுமல்ல, அவர்கள் வாராவாரம் ஒழுங்காக வர வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறீர்கள். ஒழுங்காக வருவது மூன்று வழிகளில் பிள்ளைக்குப் பயனை அளிக்கும்:

- அது ஆவிக்குரிய காரியங்களில் ஆர்வம்கொண்ட பிள்ளைகளோடு வாரா வாரம் ஐக்கியம் கொள்ளும்படி செய்கிறது.
- அது பிள்ளை கிறிஸ்துவிடம் வரவும், ஆவிக்குரியரீதியான வளர்ச்சியைப் பெறவும் ஒழுங்குரீதியான போதனையைக் கொடுக்கிறது. அவ்வப்போது கொடுக்கும் போதனையைவிட ஒழுங்கான ஒழுங்குரீதியான போதனை அதிகப் பயனைத் தரக்கூடியதாகும்.
- அது பிள்ளையின் வாழ்க்கையில் நற்பழக்கங்களை உருவாக்குகிறது.

மூன்று வழிகளில் பிள்ளைகள் ஒழுங்காக வரும்படி நீங்கள் உக்குவிக்க முடியும்:

- பிள்ளைகள் கூட்டத்துக்கு வரத் தவறக்கூடாது என்று எண்ணும்படியாக அதை ஆர்வத்துடனும் பொருத்தமாகவும் நடத்துதல்.
- மேலே கூறப்பட்டுள்ளபடி ஒழுங்காக வருவதின் மூலம் கிடைக்கும்பயன் களைப் பிள்ளைகளுக்கு எடுத்துக் கூறுதல்.
- ஊக்குவிக்கும் செயல்திட்டம் ஒன்றைப் பின்பற்றலாம். எடுத்துக்காட்டாக பிள் ளையின் வருகை அட்டையில் ஒரு நட்சத்திரத்தை ஒட்டும்படி செய்யலாம். ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நட்சத்திரங்களை அவன் பெற்றுவிட் டால் ஏதேனும் பரிசு கொடுக்கலாம்.

புதிய பிள்ளைகளை ஈடுபடுத்துங்கள்

உங்கள் கூட்டத்துக்கு வருபவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நீங்கள் எப் போதுமே முயல வேண்டும். பல வழிகளில் நீங்கள் அதைச் செய்யலாம்:

- பக்கத்திலுள்ள வீடுகளுக்குச் சென்று, பெற்றோருடன் பேசி, பிள்ளைகளை அனுப்பும்படியும், பிள்ளைகள் கூட்டத்துக்கு வர அனுமதிக்கும்படியும் அவர் களை ஊக்குவிக்கலாம்.
- அதிகமான பிள்ளைகள் வரும்படி அழைப்பு விடுப்பதின் மூலமாக. பல வழி களில் இதைச் செய்யலாம்:
  - ✓ அழைப்பு அட்டைகளை அச்சிட்டு, அடுத்த கூட்டம் நடப்பதற்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பாக அதைப் பிள்ளைகளுக்கு விநியோகம் செய் யலாம். அருகிலுள்ள பள்ளி முடிந்து பிள்ளைகள் வெளியேறும்போது அவர்களிடம் இதைக் கொடுக்கலாம். இப்படிச் செய்வதற்கு நீங்கள் அனு மதி பெற வேண்டியிருக்கலாம்.
  - ✓ உங்கள் கூட்டம் பற்றிய சுவரொட்டியைக் கூட்டம் நடக்கும் கட்டிடத் தின் வாசலில் ஒட்டி வைக்கலாம். அல்லது அனுமதி பெற்று உள்ளூர் பள்ளிகளிலும், பிள்ளைகள் அதிகமாகக் கூடிவரும் கடைகளிலும் இவை களை ஒட்டி வைக்கலாம்.
- ஏற்கெனவே வருகைதரும் பிள்ளைகள் புதிய பிள்ளைகளைக் கூட்டிவரும் படி அவர்களை ஊக்குவிக்க வேண்டும். அவர்கள் இதைச் செய்வதற்கு மூன்று வழிகளில் நீங்கள் உதவலாம்.

- ✓ இந்த வகையில் அவர்கள் ஆண்டவராகிய இயேசுவைச் சேவித்து, அருட்பணியாளர்களாக ஊழியம்செய்யலாம் என்று அவர்களுக்குக் காட்டுதல்.
- ✓ ஒவ்வொரு புதிய பிள்ளையை அவர்கள் கூட்டிவரும்போதும் ஒரு நட்சத்திரத்தை ஊக்கப் பரிசாகக் கொடுத்தல்.
- ✓ கூட்டத்துக்கு வரும் பிள்ளைகள் தங்கள் நண்பர்களையும் அழைத்து வரும்படி கூட்டத்தை உற்சாகமாகவும், கவரக்கூடிய வகையிலும், உதவிகரமாகவும் நடத்துதல்.

கடைசியாக ஒன்று

எண்ணிக்கையைக் குறித்தும் புள்ளிவிவரங்களைக் குறித்தும் அதிகமாகக் கவலைப்படாதீர்கள். பிள்ளைகள் வருகைதரும்படியும், ஒழுங்காக வருகைதரும்படியும் மற்றப் பிள்ளைகளை அழைத்துவரும்படியும் ஊக்குவிப்பதற்கு உங்களால் முடிந்ததைச் சிறப்பாகச் செய்ய வேண்டும்.

ஆனால் நீங்கள் விரும்புகிறபடி பிள்ளைகள் வராவிட்டாலும், வந்திருக்கும் பிள்ளைகளுக்குச் சிறப்பாக ஊழியம்செய்யுங்கள். சிறிய எண்ணிக்கையினால் ஊக்கமிழந்து போகாதீர்கள்! நீங்கள் உண்மையுள்ளவர்களாக இருக்கிறீர்களா என்பதைச் சோதிப்பதற்குத் தேவன் இதை அனுமதித்திருக்கலாம். அடிக்கடி தேவன் பலருடைய இருதயங்களில் கிரியைசெய்வதைவிடச் சிலருடைய இருதயங்களில் வல்லமையாகக் கிரியைசெய்கிறார். விட்டுவிடாமல் தொடர்ந்து செல்லுங்கள்.

ஆண்டவராகிய இயேசு பிள்ளைகளைக் குறித்துக் கூறியபோதெல்லாம், ஒரு பிள்ளையின் மதிப்பையும் முக்கியத்துவத்தையும் மறுபடியும் மறுபடியுமாக வலியுறுத்தினார் என்பதை மறவாதிருங்கள்.

- ➤ அவர் ஒரு பிள்ளையைத் தம்மிடம் அழைத்தார். தமது ஊழியத்தில் தமது சீஷர்களுக்குப் போதிப்பதற்கு அந்தப் பிள்ளையை ஒரு பொருள்காட்டி விளக்கும் பாடமாகப் பயன்படுத்தினார்:

  "இயேசு ஒரு பிள்ளையைத் தம்மிடத்தில் அழைத்து, அதை அவர்கள் நடுவே நிறுத்தி" (மத்தேயு 18:2)

- ➤ தாழ்மையின் தேவையைக் குறித்துச் சீஷர்களுக்குப் போதிப்பதற்காக அவர் ஒரு பிள்ளையைப் பயன்படுத்தினார்:

  "ஆகையால், இந்தப் பிள்ளையைப் போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ அவனே பரலோகராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான்" (மத்தேயு 18:4).

- ➤ தமது நாமத்தில் அவர்கள் ஒரு பிள்ளையை ஏற்றுக்கொண்டாலும் தம்மை ஏற்றுக்கொண்டதாகும் என்று அவர் கூறினார்:

  "இப்படிப்பட்ட ஒரு பிள்ளையை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக்கொள்கிறவன் என்னை ஏற்றுக்கொள்கிறான்" (மத்தேயு 18:5).

- ➤ விசுவாசிக்கும் ஒரு பிள்ளையையும்கூட இடறலடையச் செய்யக்கூடாது என்று அவர் எச்சரித்தார்:

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்" (மத்தேயு 18:6)

- ஒரு சிறுபிள்ளையையும்கூட அற்பமாக எண்ணக்கூடாது என்று அவர் காட்டினார்.

  "இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்தேயு 18:10).

- ஒரு பிள்ளையைக் கண்டுபிடித்து இரட்சிக்கும் தமது வாஞ்சையை அவர் வெளிப்படுத்தினார்.

  "மனுஷகுமாரன் கெட்டுப்போனதை ரட்சிக்க வந்தார். உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது? ஒரு மனுஷனுக்கு நூறு ஆடுகளிருக்க, அவைகளில் ஒன்று சிதறிப் போனால், அவன் மற்றத் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் மலைகளில் விட்டுப்போய்ச் சிதறிப்போனதைத் தேடாமலிருப்பானோ? அவன் அதைக் கண்டுபிடித்தால், சிதறிப்போகாத தொண்ணூற்றொன்பது ஆடுகளைக் குறித்து சந்தோஷப்படுகிறதைப் பார்க்கிலும், அதைக் குறித்து அதிகமாய்ச் சந்தோஷப்படுவான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன்" (மத்தேயு 18: 11-13).

- ஒரு பிள்ளைகூட அழிவதைத் தமது பிதாவானவர் விரும்பவில்லை என்பதை அவர் தெளிவுபடுத்தினார்.

  "இவ்விதமாக, இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல" (மத்தேயு 18:14). சிறுவருக்கு ஊழியம் செய்யும்படி தேவன் உங்களையும் என்னையும் அழைத்திருக்கிறார். நாம் அந்த அழைப்புக்கு உண்மையுள்ளவர்களாக, அநேகராக இருந்தாலும் சரி, கொஞ்சமானவர்களாக இருந்தாலும் சரி, அந்தப் பிள்ளைகளை எட்டிச் சேர்ந்து, அவர்களுக்குப் போதித்து உதவிசெய்வோமாக!

குறிப்புகள்:

For further information on the ministries of
Child Evangelism Fellowship in India contact:

Child Evangelism Fellowship (National Office)
997 Church Lane, Ex-Servicemen Colony
Dodda Banaswadi, BANGALORE - 560 043, India.

"I know that children need the Lord". "I am burdened to reach them ... would like to do something to reach the children but don't know i... start". These may be thoughts which have come to your mind a... have been challenged to do something to reach the children with ... Gospel.

In this book, Sam Doherty, with over 50 years' experience in children's work, carefully and clearly explains the steps involved in a Bible ministry to children.

Those who are just beginning such a ministry will be helped by a study of the two sections :

- They will understand the principles on which their ministry should be based.
- They will receive practical help for their ministry.

Those who have been involved for some time in a ministry to children will benefit and be helped by examining their ministry in the light of what this book teaches.

The need is great among the boys and girls of our present generation. It is our prayer that this book will help and encourage those who read it in their outreach to children and that many of them will come to know the Lord Jesus.

To the praise of His glory
50
Golden Jubilee 1950-2000

Published by
Child Evangelism Fellowship® Specialized Book Ministry
in association with India Bible Literature

First - Tam